
# உட் துறைமுகம்



கௌரிபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்துறைமுகம்

வி. கௌரிபாலன்

விடியல் பதிப்பகம்

கோவை-641 015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு டிசம்பர் 2022 தி.ஆ. 2053

**விடியல் பதிப்பகம்,**

23/5, ஏ.கே.ஜி. நகர், 3வது தெரு
உப்பிலிபாளையம் அஞ்சல், கோயம்புத்தூர் 641 015.
தொலைபேசி: 0422 - 2576772, 9443468758

**உட்துறைமுகம்**

**© வி. கௌரிபாலன்**

அட்டை வடிவமைப்பு: செந்தில் செல்வன்
அட்டைப் படம்: G. முத்துசங்கர்

அச்சாக்கம்: ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை.
பக்கங்கள் : 328
விலை : 300/-

First Edition December 2022 Thiruvalluvar Era 2053

**VIDIYAL PATHIPPAGAM,**

23/5, AKG Nagar, 3rd Street,Uppilipalayam Post, Coimbatore 641 015.
0422 - 2576772, 9443468758, vidiyal@vidiyalpathippagam.org
www.vidiyalpathippagam.org

**Ut Thuraimugam**

**© V. Gowripalan**

**Edited by Kannan. M & Muthu Ve. Prakash**

**ISBN 978-81-89867-898**

Cover design: Senthil Selvan
Cover image: G. Muthushankar

Tricomalee, World Imagery - Source: Esri, Maxar, GeoEye, Earthstar Geographics, CNES/Airbus DS, USDA, USGS, AeroGRID, IGN, and the GIS User Community (Image Date 02 May 2022)

Printed at Jothy Enterprises, Chennai.
Pages : 328
Price : 300/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

'ஒரு இருண்ட நதியின்
கரையில்
காற்றடைத்த ஒரு படகைப் போல
திறக்கும் காலம்...'*

**வி**டியலின் ஈழ நூல் வரிசையில் கௌரிபாலனின் முதல் நாவல் (சிறுகதைத் தொகுப்பு: காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல், கோவை: விடியல், 2016). அகமும் புறமும் இழந்து, தன்னை மறந்து நிற்கும் தற்கால ஈழச் சமூகத்தில் மறக்கப்பட்டு வரும் ஒரு போராட்டத்தில், பன்முகம் கொண்ட ஒரு சிறு நகரத்தில், தனியொருவனுக்கு நேர்ந்த அவலத்தை எதிர்கொண்டு தமிழ்க் கரையில் அமைந்திருக்கிறது உட்துறைமுகம்.

* Coral Bracho, 2022, It Must be a misunderstanding, translated by Forrest Gander, New York: New Directions, p. 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்துறைமுகம்

## 1

### 1.1

கெரியரில் கட்டியிருந்த சுனைச்சாக்கின்மீது அமர்ந்திருந்த பெத்தவன் தவித்துக்கொண்டிருந்தான். மங்கிக்கொண்டிருக்கும் மாலைப்பொழுது கருக்கலாக மாறிவிட்டால், தான் போகப் போகும் பாதையில் எதிர்ப்படப்போகும் புதிய இடங்களைக் காணமுடியாதுபோய்விடும் என்று பெத்தவன் கவலைப்பட்டான். திட்டுத்திட்டாகக் காய்ந்துகிடந்த நாய்க்களித்தரைவீதியில் சைக்கிள் உருண்டோடும்போது ஏற்படும் உதறல் போல தன் உடல் இப்பொழுதே குலுங்கவேண்டும் என பெத்தவன் விரும்பினான். தன் தலைக்கு மேலே கீச்சிட்டுக் கத்திப்பறந்த கிளிக்கூட்டத்தைக் காண்பதற்காகக் கண்களையும் தலையையும் ஒரே நேரத்தில் இலக்கில்லாது சுற்றி, பார்வைக்குள் வெள்ளொளி அடைக்க, தலைச்சுற்றால் அவதிப்பட்டான். பவானியர் தென்னந்தோப்புக்குள் விழுந்து மறைந்துபோன கிளிக்கூட்டத்தைப் பச்சை ஓலைகளுக்குள் கூர்ந்து தேடினான். சைக்கிளைத் தன்னுடன் சாத்திப் பிடித்திருந்த கள்ளுத்தவறணை அம்மாச்சியின் முழங்கை தன் முகத்துக்கு நெருக்கமாக இருப்பதால் உதட்டில் எறும்பு ஊர்வதுபோன்று பயம் தனக்குள் ஊர்வதுபோல உணர்ந்தான். பகல் முழுவதும் வேலை செய்திருந்த கள்ளுத்தவறணை அம்மாச்சியின் வியர்வை நெடியும் நடுங்கள் அப்புச்சி வீட்டுச் செத்தை வேலிப்பக்கத்திலிருந்து வரும் வெயிலில் காய்ந்த கொப்பறத் தேங்காயின் நெடியும் கலந்த நாற்றத்தால் தனக்கு ஓங்காளம் வருவதுபோல பெத்தவன் அருவருப்படைந்தபோது, தொண்டைக்குழிவரை வந்த ஓங்காளம், நெஞ்சுக்குள் அடைத்து, நெஞ்சை நோகவைத்துவிட்டு வயிற்றுக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கிப்போவதை பெத்தவன் உணர்ந்தான். தொண்டைக்குள் வந்துபோன புளிப்பான தண்ணீருக்குள் சோத்துப்பருக்கைகள் இருந்ததையும், நாசிக்குள் கருவாட்டு மணம் ஊர்ந்ததையும் பெத்தவன் ஒரே நேரத்தில் உணர்ந்துகொண்டான். நடுங்கள் அப்புச்சி வீட்டுச் செத்தை வேலிக்குப் பின்னிருந்து, வழுக்கைத் தலையின் ஓரங்களில் சுருள்முடி காற்றில் பறக்க நடுங்கள் அப்புச்சியின் தலை எழுந்து, கழுத்து மட்டத்தில் நடுங்கிக்கொண்டு நிற்பதுபோல பெத்தவன் கண்டான். நடுங்கள் அப்புச்சியின் தலையுடன் மஞ்சள் நிற சாரைப் பாம்பொன்று கம்பி வேலியில் தொங்கித்தொங்கி ஊர்ந்துவருவது போல இருந்ததால், பெத்தவன் தன் கண்களை மூடித் தலையைச் சிலுப்பினான். சைக்கிள் சீற்றைப் பிடித்திருந்த கள்ளுத்தவறணை அம்மாச்சியின் கை சைக்கிள் கெண்டிலைப் பற்றி சைக்கிளை சமநிலைக்குக் கொண்டுவந்தபோது பெத்தவன் பெருமூச்சு விட்டுக் கொண்டான். உள்ளே இருண்டுகிடந்த கூர்முகட்டுச்செத்தைக்கூரை குடிசைக்கு வெளியே தாயின் பறட்டைத் தலையோ தமக்கையின் எண்ணை வைத்துப் படிய வாரிய தலைக்கறுப்பையோ காணாததால் பெத்தவனுக்கு அழுகை வருவதுபோல் இருந்தது. தாயின் வறண்ட இருமலோ தமக்கையின் மூக்குறிஞ்சும் சத்தமோ கேட்கவில்லையென பெத்தவன் கவலைப்பட்டான்.

கண்ணகையம்மன் கோயில் புழுதி மணலில் அம்மணமாக விளையாடிக்கொண்டிருக்கும்போதுதான், அம்மா வந்து தன் முதுகில் இரண்டு மொத்து மொத்திக் கிணற்றடிக்கு இழுத்துப்போனதை, தாயின் இழுத்துமுடியாத எண்ணெய் காணாத பரட்டைத்தலையுடன் பெத்தவன் நினைத்துப்பார்த்தான். தன் புண்ணாக்கியில் எறும்பு கடித்து வீங்கியிருந்ததை அம்மா அடித்ததாலும் தோட்டவேலைக்குப் போய் வந்த அம்மா மதிய வெயில் சாய்ந்தபின்தான் தனக்கு மதியச் சாப்பாடு தந்ததாலும் தான் வீம்பாகச் சொல்லாமலிருந்தது பெத்தவனுக்கு ஞாபகம் வந்தது. எறும்பு கடித்ததால் வீங்கி ஒரு பக்கமாகக் கெழிந்து கிடந்த புண்ணாக்கி, வெள்ளையில் சிவப்புப் பொட்டுப் போட்ட யங்கிக்குள் ஒரு பக்கமாக நசிந்து கிடப்பதை பெத்தவனால் உணரமுடிந்தது. சுனைச் சாக்குடன் புண்ணாக்கி அண்டுப்படுவதால் திரும்பவும் அங்கே அரிப்பது போல பெத்தவனுக்கு இருந்தது. புண்ணாக்கியைக் கைகளால் யங்கிக்கு மேலால் நீவிவிட்டபோது சுரீர் என்ற நோவை பெத்தவன் உணர்ந்தான். தண்ணீரைக் குடித்துக்குடித்து மூத்திரத்தை முட்ட வைத்துப் பின் தொட்டாச்சுருங்கி இலைகள் மீது பெய்யும்போது சுகமாக இருப்பதைச் சுருங்கிப்போகும் கறுநீலநிற இலைகளுடன் நினைத்துப்பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது மூத்திரத்தை அப்படி முட்டவைத்துப் பெய்தால் எரிச்சலும் நோவும் அதிகமாக இருக்கும் என பெத்தவன் நினைத்துக்கொண்டான்.

சைக்கிள் பின்கெரியரின் இரண்டு பக்கங்களிலும் கொளுவியிருந்த உரைப்பையைக் கோணல்மாணலாக அடைத்திருந்த வீட்டுக் குசினிச் சாமான்கள்மீது கால் வைத்திருப்பது பெத்தவனுக்கு சங்கடமாக இருந்தது. தன் கண்களை உருட்டிக்கொண்டு கண்ணகையம்மன் சிலைக்கு முன்னே நின்று வதனி அக்காச்சி மிரட்டிக்கொண்டிருப்பது போல இருந்தது பெத்தவனுக்கு. சாப்பிடுற கோப்ப சாமான காலால அளஞ்சா சாப்பாடு இல்லாம செத்துத்தான் போவம், வதனி அக்கா நெற்றிக்கு மேலே இமை மயிர்களுக்கு இடையே நின்றுகொண்டு பெத்தவனை மிரட்டினாள். புதினம்பார்ப்பதுபோல பெத்தவன் தன் பார்வையை அங்குமிங்கும் அலையவிட்டான். பெரிய பள்ளம்போல இருண்டுகிடந்தது பவானியார் தென்னந்தோப்பு. தென்னைமர இடுக்குகளுக்குள்ளால் தூரத்தே வெள்ளொளிபோல உப்புக்கரைச்சி வெட்டை மினுமினுப்புக் காட்டுவதை பெத்தவன் கண்டான்.

தோட்டங்களுக்குள் விழுந்த கிளிக்கூட்டத்தையோ குரங்குக் கூட்டத்தையோ கலைப்பதற்குத் தகரத்தில் அடித்து இரைந்து கத்துவதுபோன்று தூரத்தே கேட்டுக்கொண்டிருந்த இரைச்சல், நெருங்கி வரவர சேமக்கலம் அடிக்கும் ஒலியாகவும் சங்கூதும் ஒலியாகவும் தேவார உச்சாடனமுமாகத் துல்லியமாகக் கேட்கத் தொடங்கியதும் பெத்தவன் திடுக்கிட்டான். சைக்கிளைத் தன்னுடன் சாத்திப்பிடித்திருந்த கள்ளுத்தவறணை அம்மாச்சியின் கறுத்துத் துருத்திக்கொண்டிருக்கும் முழங்கைக்குள்ளால் தலையைக் குனிந்து, தன் கண்களை இடுக்கிக்கொண்டு பார்த்தான். எதிரே வெள்ளைப் பட்டத்தாள் கொடிகளும் தென்னங்குருத்தில் இழைத்த தோரணங்களும் கட்டிய பாடையைச் சுமந்தபடி வீதியில் முன்னும்பின்னுமாக வேட்டித்தலைப்பு காற்றில் பறக்கவும் காலில் இடறவும் சனம் நடந்துவருவதைக் கண்டான். ஒருவேளை நடுங்கள் அப்புச்சியோ ஏவறைப் பெத்தாவோ இறந்துபோனால்கூட தன் பயணம் தடைப் பட்டுவிடும் என பெத்தவன் பயந்தான். ஏவறைப் பெத்தாவின் வத்தலான உடலும் ஒடுங்கிய நீண்ட முகமும் பெத்தவனின் நினைவுகளில் வந்துபோயின. ஏவறைப் பெத்தாவின் நீண்ட ஏவறையும் அதனால் சிலவேளைகளில் தாடை கழன்று தொங்க, வாயை மூடமுடியாமல் ஏவறைப் பெத்தா படும் அவஸ்தையின் அணுக்கமும் காற்றில் கரைந்து வருவதுபோல பெத்தவன் உணர்ந்தான். ஏவறைப் பெத்தாவின் கீழ்த்தாடை கழன்று பற்களைக் கிட்டமுடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணறும்போது அம்மா போய்த் தாடையை நகர்த்தி, பற்கள் கிட்டுமாறு அமத்திவிடும்போது, தான் தள்ளி நின்று பயத்துடன் உடல் நடுங்க அழுதது பெத்தவனுக்கு ஞாபகம் வந்தது. ஏவறைப் பெத்தா புசுபுசு என்று மூச்சுவிட்டுக்கொண்டே கண்ணிமைகளைப் படபட என அடித்துக்கொண்டு தன் காய்ந்துபோன வாயில் எச்சிலை ஊறவிட்டுக்கொண்டு உதடுகளைப் பொச்சடிப்பதை பெத்தவன், அவளின் சுருக்கம் விழுந்த முகத்தசைகளுடன் நினைத்துப்பார்த்தான். இழைக்காத தென்னோலைகளைத் தலைகீழாகக் குத்தி வேலி அடைக்கப்பட்டிருந்த செத்தைக்குப் பின்னே ஏவறைப்பெத்தாவின் அசுமாத்தம் இல்லை என்பதை பெத்தவன் உறுதிப்படுத்திக் கொண்டான். திரும்பவும் கண்களை இடுக்கிக்கொண்டு சவ ஊர்வலத்தை பெத்தவன் பயத்துடன் பார்த்தான். கண்ணகையம்மன் கோயிலைத் தவிர்த்த சவ ஊர்வலம், பள்ளி வீதியில் குறுக்காகத் திரும்பும்போது பாடையின் நீளவாட்டுத் தோற்றத்தை பெத்தவன் கண்டான். தன் உடலில் நடுக்கம் குறைவதை பெத்தவன் உணர்ந்தான்.

நெற்றியின் நடுவில் தோல் இறுக்கமாகப் பற்றிப் பிடிப்பதை பெத்தவன் உணர்ந்தான். அம்மாவின் ஆள்காட்டிவிரல் பொட்டுச் சிரட்டைக்குள் தண்ணீர்விட்டு உரசித் தன் கண்முன்னே உள்ளங்கையுடன் வந்து திரும்பிப்போனது இப்போது பெத்தவனுக்கு ஞாபகம் வந்தது. கறுத்த பொட்டின் வாசனையும் முகத்தில் அம்மாவின் காய்ந்து உரமேறிப்போன உள்ளங்கைகள் முகத்தில் கீற, உரசிப்பூசிய மல்லிகைப்பூ டின் பவுடரின் மணமும் கலந்து வீசுவதை பெத்தவன் உணர்ந்தான்.

நெருக்கமாகக் கேட்ட வறண்ட இருமலால் திடுக்கிட்ட பெத்தவன், நெஞ்சுடன் அணைத்துப்பிடித்த துணிமூட்டையுடன், வெளிறிப்போன கத்தரிப்பூக்கலர் சாரியுடன் தாயும் பின்னே வெள்ளைப்பூப்போட்ட நீலநிறச் சீத்தைச் சட்டையுடன் வதனி அக்காவும் நெருக்கமாக நிற்பதைக் கண்டான். செத்தைக் குடிசைக் கதவு இறுக்கமாக மூடி, கிடுகுகள் இற்றுப்போன அடைப்பின் பொத்தலுகளுக்குள்ளால் கயிறுபோட்டு வாசல் தட்டி பூ முடிச்சுப் போட்டுக் கட்டப்பட்டிருப்பதையும் பெத்தவன் கண்டான்.

சைக்கிள் கெழிந்து, நிமிர்ந்து, உலாஞ்சி நேராக உருளத் தொடங்கியபோது குடிசை பின்னே தங்கிவிட, கண்ணகையம்மன் கோவில் புழுதி வெண்மணல் முற்றத்துக்கு மேலே காற்றில் ஆலம் விழுதுகள் அசைந்தபடி நெருங்கிவருவதை பெத்தவன் கண்டான். கவலையில் தன் கண்கள் நிறைய நீர் முட்டிக்கொண்டு நிற்பதை பெத்தவன் உணர்ந்தான். கோயிலுக்குப் பக்கமாக இருந்த தனக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தாமணிக்கும் பிறகுதான், தூரத்திலிருந்து வரும் குலத்துக்கும் சோமிக்கும் சோதிக்கும் ஆலம்விழுதுகளில் தொங்குவதற்கு உரிமை என சிந்தாமணி சட்டம் வைத்திருந்தது ஞாபகம் வந்தது. சிந்தாமணியின் சிலமனைக் காணோம் என பெத்தவன் தன் பார்வையை மெல்லிய பச்சைநிறத்தண்டுகள் நீளமாக வளரும் பால்கள்ளிச் செடியை நெருக்கமாக நட்டு வேலிபோல் அடைத்திருந்த வளவுக்குள்ளிருந்த குடிசைப்பக்கம் அலையவிட்டுத் தேடினான். தான் தூரமாகப் போவதால், இனி இந்த ஆலம் விழுதுகளில் தொங்க முடியாது என நினைத்துக்கொண்டபோது உடலில் அசதியும் சோர்வும் கூடி தனக்குத் தூக்கம் வருவதுபோல பெத்தவன் உணர்ந்தான். சைக்கிள் பாரிலிருக்கும் தாயின் மடியில் அமர்ந்து, தாயுடன் சாய்ந்தபடி தன் நெஞ்சுடன் துணிமூட்டையை அணைத்தபடி சொகுசாக இருந்து சலசல எனக் கதைத்துக்கொண்டுவரும் வதனி அக்கா மீது பெத்தவனுக்கு எரிச்சல் வந்தது. கிராமக்கோடு தாண்டி சைக்கிள்; மெத்தை வீட்டு ஒழுங்கையிலிருந்து தார்றோட்டுக்கு ஏறியபோது உள்வீதியைவிட பிரதான தார்வீதி அதிகம் குண்டும் குழியுமாக, சைக்கிளை உதறப்பண்ணுவதை பெத்தவன் உணர்ந்தான்.

தாயின் கைவிரலைப் பற்றிக்கொண்டு கூப்பன் கடைக்காக பிரதான வீதிக்கு வந்த போது, பெரிய தட்டிவேன் அடித்த போம் போம் என்ற கோர்ன் சத்தத்தில் வெருண்டு, வீதியோர முட்கம்பிவேலிக்குப் பக்கமாக ஒதுங்கி மூச்சடக்கிக் கத்தியது பெத்தவனுக்கு ஞாபகம் வந்தது. தான் நினைத்ததுபோல உள்வீதியிலிருந்த சைக்கிள் பயணத்தின் சௌகரியம் பிரதான வீதியில் பயணப்படும்போது இல்லை என பெத்தவன் நினைத்துக்கொண்டான். எதிர்ப்பட்ட இரட்டைக்கரத்தை மாட்டுவண்டியொன்று தார்வீதியில் மாட்டின் குளம்பொலியுடனும் கடகடப்புச் சத்தத்துடனும் தம்மைக் கடந்து செல்வதை பெத்தவன் கண்டான். வாழையிலைபோல விரிந்துகிடந்த போயிலைக்கண்டுகளின் இலைகள் மீதும் நிலத்தின் மீதும் படர்ந்து கிடந்த மாலை வெயிலில் வேலி அடைப்புக்குள் இடுப்பில் கச்சைத்துண்டும் தலையில் தலைப்பாவும் தோளில் மண்வெட்டியுமாக நடக்கும் மனிதரை பெத்தவன் பார்த்தான். தட்டிவேனின் கோர்ன் சத்தம் எதுவும் இல்லாது வீதியும் அந்த இடமும் மாலைப்பொழுதின் சோர்வுடன் நகர்ந்து போவதை பெத்தவன் பார்த்தபடியிருந்தான்.

சைக்கிள் பெடலைக் கடுமையாக மிதித்துக்கொண்டிருக்கும் கள்ளுத்தவறணை அம்மாச்சியின் வியர்வை நெடி அதிகமாகத் தன் நாசிக்குள் ஊர்வதாக பெத்தவன் உணர்ந்த போது, அவரது மூச்சிறைப்புச் சத்தம் கோர்வையாய் எழுவதைக் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிள் மெதுவாக ஊர்ந்து மேட்டில் ஏறுவதையும் ஏதோ ஒரு பெரிய நிழலுருவம் தன்னை வேகமாக நெருங்கிவருவது போலவும் பெத்தவன் உணர்ந்தபோது, திடுக்கிட்டுத் தன் பார்வையை எதிர்ப்புறம் திருப்பினான். இவ்வளவு காலமாகத் தூரத்திலிருந்து தன்னை மிரட்டிக்கொண்டிருந்த அடம்போடைமலை தனக்கு மிக நெருக்கமாகக் கழுத்தை அண்ணாந்து பார்த்தும் எட்டாத உயரத்துடன் ஊர்ந்து நெருங்கிவருவதைக் கண்டான். தடித்த வெண்மையான மரவேர்களின் பிடிப்பில் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் பெரிய பாறை உருண்டு வந்து தன்னை நசுக்கிவிடுமோ என்ற நினைப்பில் தன் உடல் வெடவெடத்து நடுங்குவதை பெத்தவன் உணர்ந்தான்.

''புள்ள குளத்து நண்டு நல்ல ருசி... அமாவாசை வேற, சதையும் ஓடும் நிறைஞ்சு இருக்கும்...'' மூச்சிறைப்புடன் கள்ளுத்தவறணை அம்மாச்சி நலிந்த பெண் குரலில் சொல்வது பெத்தவனுக்குக் கேட்டது. உவர்கரச்சியின் சுரிமணம் காற்றுவாக்கில் பெத்தவனுக்கு அதிகமாக அடித்தது. மஞ்சள் காவிபோல் உவர்கரச்சிச் சுரிகள் மீதும் கண்ணா மரங்களின் வேர்கள் மீதும் ஏதோவொன்று படிந்துகிடப்பதை பெத்தவன் கண்டான். மாலை மம்மல்பொழுதாக மாறிக்கொண்டிருந்தது. சைக்கிள் பாலத்தின்மீது போகும்போது குளிர்க்காற்று வீசியது. கண்ணா மரங்களுக்கிடையே இடுப்பில் பனையோலைப்பறி கட்டிய உடம்பில் துணியில்லாத மனிதர்கள் தோன்றி மறைவதுபோல இருந்தது. சில சமயங்களில் கண்ணா மரங்கள் காற்றில் அசைவது, தோன்றி மறைவதுபோலும் இருக்கும் என பெத்தவன் நினைத்த போது சைக்கிள் பாலத்திலிருந்து இறங்கி வேகமாக நகர்ந்தது.

''போம்... போம்...'' என்ற கோர்ன் சத்தத்தில் திடுக்கிட்டு விழித்த பெத்தவன் தன்னைச் சூழவும் தார்வீதியில் காரிருள் மண்டிக்கிடப்பதைக் கண்டு வெலவெலத்துப்போனான். பேச்சுக் குரலின் இரைச்சலையும் வாகனங்களின் இரைச்சலையும் கேட்டு பெத்தவன் தடுமாறினான். அங்குமிங்குமாகத் தோன்றும் லைட் ஒளிகளின் மினுக்கம் கண்களைக் கூசவைத்தது. பின்னிருந்து வந்து தன்மீதும் கள்ளுத்தவறணை அம்மாச்சிமீதும் படிந்த வெளிச்சம், தொடர்ந்து வந்த இயந்திர ஓசையுடன் கடந்துசென்றபோது மீண்டும் இருள்கவிய, வெளிச்சம் முன்னே நகர, இயந்திர ஓசை தேய்ந்து கொண்டேபோனதை பெத்தவன் கேட்டான். பெத்தவனுக்கு எதையும் ஊகிக்க முடியாது நித்திரையாக இருந்தது. தூக்கக்கலக்கத்தில் தான் உலாஞ்சிக்கொண்டிருந்தது ஞாபகம் வந்தது. கள்ளுத்தவறணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாச்சியில் சாய்ந்திருந்ததில் தன் கன்னங்களில் ஈரலிப்பும் நாசியில் வியர்வை நெடியும் படிந்துகிடப்பதை உணர்ந்தான். தடதடப்பாக இடைவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது சத்தம். பெற்றோல்மெக்ஸ் வெளிச்சத்துக்குக்கீழே, உடல் முழுவதும் வியர்த்திருந்த மனிதர் நெருப்பு எரிந்துகொண்டிருக்கும் தட்டுக்கு மேலே எதையோ போட்டு இரண்டு தகரத்துண்டுகளில் இடைவிடாது கொத்திக்கொண்டிருப்பதைக் கண்டான். வியர்வை நெடியையும் தாண்டி நாசியில் ஊர்ந்த சுவை மணம் தன் நாக்கில் எச்சில் ஊறவைப்பதையும் பெத்தவன் உணர்ந்தான். மூன்று வீதிகள் சந்திக்குமிடத்தின் மையத்தில் கண்ணாடிக்கூண்டுக்குள் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. இருளை ஊடறுத்து ஊர்ந்த சைக்கிள் தார்வீதியிலிருந்து திரும்பவும் கிறவல் வீதியொன்றுக்குள் ஊர்வதை பெத்தவன் உணர்ந்துகொண்டான். எரிவும் கொதிப்புமாகத் தன் குண்டிப்பகுதி அண்டுப்படும் இடங்களிலிருந்து எழுந்துகொள்வதை பெத்தவன் உணர்ந்தான். சைக்கிள் டயர்களுக்குள் கிறவல் குறுணிக்கற்கள் நெரிபடும் ஓசையைத் துலக்கமாகக் கேட்டான். அங்கு இருந்ததுபோல் தூரமான வீடுகளாக இல்லாது நெருக்கமாகத் தொடர்ந்து வீடுகள் நகர்ந்தன. உள்ளே சின்னச்சின்னதாய் மின்குமிழ் வெளிச்சங்கள். வீடுகளுக்குள் கதைக்கும் அரவம் வீதியில் கேட்டது. பெரியபெரிய ஓட்டு வீடுகள் என பெத்தவன் நினைத்துக்கொண்டான். தாங்களும் அப்படி ஒரு பெரிய வீட்டுக்குள்தான் தங்கப்போவதாக பெத்தவன் நினைத்துக்கொண்டான்.

''அத்தான்... ஆர் ஆக்கள்... ராமசாமி அண்ணனா...''

''அம்மாளக்கிடந்தவன்ற... துணிச்சலப் பாற்றா...''

''படார்...'' என்ற சத்தத்தில் பெத்தவன் திரும்பிப்பார்த்தான். தாங்கள் தாண்டி வரும்போது தங்களைப் பார்த்தபடி கதைத்துக் கொண்டிருந்த ஒருவர் மற்றவரைப் பிடித்திருப்பதையும் மற்றவர் சாரத்தைத் தூக்கிப்பிடித்தபடி எதிரே கிடந்த தகரக்கதவில் உதைப்பதையும் கண்டான். பெத்தவன் பதற்றப்பட்டுத் திணறியபோது சைக்கிள் செத்தை அடைப்புவேலியோரமாக நின்றது. பக்கத்தில் கதவு ஏதும் இல்லாத இடைவெளிக்குள் சைக்கிள் நகர்ந்தது. ஒரு குடிசைக்கு முன்னே சைக்கிள் நின்றது. தாம் முன்னேயிருந்த குடிசையைவிட பெரிதாக இருந்த அந்தக் குடிசையின் கீழ்ப்பகுதி, தங்களதுபோல சாணி போட்டு மெழுகாது சீமெந்து போட்டிருப்பதை பெத்தவன் கண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.2

கண்ணைக் கூசவைக்கும் ஒளி தன்மீது படிந்து பின் இருள் கவிவதையும் தட்டி இடுக்குக்கும் செத்தை ஒட்டைகளுக்குப் பின்னேயும் வெள்ளொளி தங்கிவிட்டதையும் அவள் கண்டாள். தனக்கு மிகநெருக்கமாக யாரோ வந்து படுப்பதான உணர்வு தட்டியது. அதனை மீறிய உடல் சோர்வும் போரணையைப்போல தன்னைச் சூழ அடைத்து, மூச்சுவிடமுடியாது திணறடிக்கும் வெப்பமும் தன்னைச் சுயநினைவு கொள்ளவிடாது தூக்கக்கிறக்கமாக வைத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். பதிவான கூர்முகட்டுக் குடிசையின் சீமெந்து தரையில் கிடக்கின்றபோதும் களிமண்ணால் கட்டி, சுண்ணாம்புக்காரைவைத்து, சித்தோடு வேய்ந்த வீட்டின் தரையில் அலமலந்துகிடக்கும்போதும் கலைந்த சாரியை பதற்றத்துடன் சரி செய்வதான உணர்வுடன் கிடப்பதாகவே அவளுக்கு பிரமைதட்டியது. புளிச்ச அப்பத்தின் நெடிபோல அவன் உடல் மணம் தன் நாசியில் ஊர்ந்து கிறங்கடிக்க, வெட்கத்துடன் நிர்வாணமாய்க் கிடக்கும் தன் உடலை மறைக்கும் எத்தனம் ஏதுமற்றுக்கிடந்தாள். அடர்த்தியான கருகருவென்ற சுருள் தலைமுடியும் மீசையும் கறுத்து ஒளிரும் அடர் இமைமுடிகளுக்குள் அகப்பட்ட கண்களுமாக அவன் முகம் நெருக்கமாக வருகிறது. அவன் மூச்சுக்காற்றின் வெப்பம் தன் வெப்பமான மூச்சுக்காற்றையும் மீறித் தன் முகத்தில் படர்வதையும் அவள் உணர்ந்தாள். அவன் கண்கள் சிரிப்பதையும் அவள் உணர்ந்தாள். ''வலிக்குதா...'' ''பாரமா இருக்கேனா...''. கட்டற்ற தன் உடலில் பொங்கும் பெருமூச்சினையும் தொண்டைக்குள் எழும் ஒலிகளையும் கட்டுப்படுத்த முடியாது, கமறலாக வெளிப்படுத்தினாள். இறுக்கமான உடலின் தசைப்பிடிப்புக்கள் தளர்ந்து, தன் மார்புகள் இறுக்கம் குறைந்து, அவன் கைகளுக்குள் குலைவதை அவள் உணர்ந்த போது, அவனிடமிருந்து புறப்பட்டு வந்த மூச்சு திக்கித்திணறி வேகமெடுத்து புசுபுசுவென இடம் வலம் மாறி அடிக்கிறது. அவனை இழுத்து அணைத்து அவள் முத்தமிடுகிறாள். தன் அடிவயிற்றில் வலியை உணர்கிறாள் அவள். தன் வயித்துச்சுமையைத் தரையில் சாய்த்து ஒருக்களித்துப் படுத்துக்கிடக்கிறாள். மாமி இளஞ்சூடான தண்ணீரில் பழந்துணியை நனைத்து நனைத்து ஒத்தடம் கொடுத்தபடி இருந்தாள். மாமியின் வெள்ளந்தியான முகமும் கத்தரி நாவல் கைத்தறிச்சாரீயும் வெள்ளை பிளவுசுமான உருவம் அவளுக்குள் வந்து படிந்தது. குங்குமக்கலர் சாரி உடுத்திய மருத்துவிச்சிக் கிழவியின் வெத்திலை பாக்குப்போட்ட உருவத்தையும் தன் அடிவயிற்றிலிருந்து மேல் வயிறு, இடம் வலம் என இறுக்கும் அவளது மூர்க்கமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரட்டுக்கைகளையும் உணர்ந்தாள். தன் வாழ்நாளில் முன்பொருபோதும் உணர்ந்திராத வலியையும் வேதனையையும் உபாதையையும் அவள் உடல் தாங்கமுடியாது தவித்தது. முள்ளந்தண்டு சிலிர்த்துக் குளிர்ந்து கொண்டுபோனது. உடல் விறைத்தது. மூச்சுத் திணற கண்கள் இருண்டுபோயின. தன் வாழ்நாள் முடிந்துவிட்டதாக உணர்ந்தாள். இடுப்பிலிருந்த வதனி பெருங்குரலெடுத்துக் கத்தினாள். வெளியே ஒரே இரைச்சல். வதனியைக் காவியபடி வெளியே பயத்துடன் ஓடினாள். அடுக்களை தாண்டி, விறாந்தை தாண்டி முற்றத்துக்கு ஓடினாள். அது உப்புவெளி முற்றமும் இல்லை, நிலாவெளி முற்றமும் இல்லை. பெரிய முதுரைமரம் நிற்கும் கோபாலபுரம் சித்தோட்டு வீட்டின் வெளிமுற்றம் என உணர்ந்தாள். இடிகட்டையில் கட்டிய கயிற்றை அறுத்துவிடும் முனைப்புடன் வெள்ளை நாகு, கயிற்றை நாண்போல் இழுத்துத் தன் கால்களை வலுவாக நிலத்திலூன்றி, கழுத்திலிருக்கும் கயிற்றின் இழுவையில், கண்களிரண்டும் பிதுங்க, தெறித்துவிடுவதுபோல் நின்றிருந்தது. தாழ்வாரத்தில் சுருண்டு ஒடுங்கியபடி கறுவல் நாய் முனகி அழுதுகொண்டிருந்தது. ஆடுகள் கனைத்தபடியும் கோழிகள் கொக்கரித்தபடியும் சிதறிப்போய் நின்றிருந்தன. ஒடுங்கிப்போன மாட்டுக்குப்பின்னே அவன் வேறுபக்கம் பார்த்தபடி நிற்பதையும் மடித்துப் பிடித்த தேடாக் கயிற்றுடன் மெம்பர் மாமா கழுத்தில் சால்வையும் வெள்ளை உடுப்புமாக நின்றிருப்பதையும் கண்டாள். கயிற்றுத் தலைப்பால் ஆருக்கு அடி விழுந்தது என ஊகிக்க முடியாது நின்றாள். வதனி திரும்பவும் கத்தத்தொடங்கினாள்.

''என்னதாண்டா செய்யப்போறாய்... நீ...?''

ஆத்திரத்துடன் கத்திக்கொண்டே மெம்பர் மாமா கயிற்றுத் தலைப்பைக் காற்றில் விசுக்விசுக்கென உதறி நட்டுக்கொண்டுநிற்கும் நாகுவின் முதுகில் அடிப்பதைக் கண்டாள். மிறண்ட நாகு மற்றப்பக்கம் ஓடி தளர்வாய்க் கண்ணைக் கூசி நின்றிருப்பதைக் கண்டாள்.

''காட்டு வேலையும் வெள்ளாமையும் செஞ்சு, ஆடு மாட்ட பாத்திற்று... என்ற பிழைப்ப நான் பார்த்துக் கொள்ளுவன்...'' மாட்டுக்குப் பின்னே அவன் முனகலாகச் சொல்வது அவளுக்குக் கேட்டது.

''ஆக காட்டுப்பயலாவே காலத்த ஓட்டப்போறன் என்றாய்...'' வீசி மெம்பர் என்ற காலம் போச்சு... இந்த நாயையாச்சும் அரசியல்ல இறக்கி ஏதாச்சும் பண்ணலாம் என்டா, வெறுவாய்க்கிலம் கெட்டது காட்டுவாசியாகவே திரியுது... பெத்ததையாச்சும் ஆம்பளபுள்ளயா பெத்தானா...? பள்ளிக்கூடம் கட்டுறதென்டாலும் சரி... உள்ரோட்டுக்கு கிறவல், களி போடுறதென்டாலும் சரி... சேமனுக்கும்... அவன்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருப்புகளுக்கும்தான். நாங்க என்ன விரல் சூப்பவா வீசிக்க இருக்கம்... இந்த நாய்ப்பயலுக்கு கொஞ்சமாச்சும் விவஸ்த இருக்கா... பெண்டாட்டிய குளிப்பாட்டிட்டுத் திரியுது நாய்...''

கயிற்றுத்தலைப்பின் விசுக்கு ஒளி கண்ணில் அலைவது அவளுக்குத் தெரிந்தது. இறப்பில் அணிலோ எலியோ பூட்டுத்தடிகளைத் தாண்டித் தாண்டி ஓடுவது அவளுக்குத் தெரிந்தது.

''அவனுக்கு பக்குவம் பத்தாது... சாணக்கியமும் இல்ல... கூலக் கும்பிடு போடவும் தெரியாது... அவன அவன் பாட்டுக்கு விடுங்க, பிழைச்சுக்கிடக்கட்டும்...''

''ஏன்டி நீ இவன எனக்குத்தான் பெத்தியா... இல்ல... ஆராவது காட்டுப்பயலுக்கு பெத்தியா...''

தன்மீது மெம்பர் மாமாவின் பார்வை கோபத்துடன் திரும்புவதைக் கண்டாள். பயம் தன்னுடலை நடுக்கப்பண்ணியபோது கோபமாய்த் திரும்பிய மெம்பர் மாமா மாமியை நோக்கிக் கயிற்றை விசிறியபடி வருவதைக் கண்டாள்.

''நாயே ஆரயடி சொல்றாய்... கூலக்கும்பிடு போடுறவன் என்டு...''

காற்றில் விசுக்விசுக்கென்று அலைந்த கயிற்றுத்தலைப்பு மாமியின் மீது விழுவதைக் கண்டாள். துடித்துப் பதைபதைத்த மாமி, அதைத் தாங்கமுடியாது முதுகைப் பின்புறமாக நிமிர்த்தி.. முனகி ஓடுவதும் பின்னால் அடிவாங்கியபடி ஓடும் அவளுடைய அவன்... துரத்தும் மெம்பர் மாமா... கீசிக் கத்தும் வதனி... அரவப்படும் கோழி, நாய், ஆடு, மாடு... வயல் வரம்பில் இறங்கி ஓடும் மாமி, அவளுடைய அவன்... துரத்தும் மெம்பர் மாமா.

கோபமாய்த் திரும்பி மூச்சிரைக்க தன்னை நோக்கிவரும் மெம்பர் மாமாவின் கோபப்பார்வை அவளை நிலைகுலையவைத்தது. தன் கால்கள் தன்னையும் அறியாது பின்வாங்குவதை உணர்ந்தாள். காற்றில் பிடிப்பற்றுக் கால்கள் நழுவ அறைக்குள் அவள் முடங்கினாள். கூட வதனி அழுதபடியே. தன் அறைக்கதவின் நீர்வேலிப்பூட்டின் நாக்கு இரண்டுதரம் இறங்கி கதவு பூட்டுப்படுவதை உணர்ந்தாள்.

''அந்த தேவடியா முண்டைக்கோ... நாரல் பயலுக்கோ ஏதாவது குடுத்தியண்டாலோ, இல்ல உள்ள விட்டியெண்டாலோ... உன்னையும் உண்ட புள்ளையையும் நஞ்சு வைச்சு கொன்டுபோடுவன். அந்தக் காட்டுப்பயல் திருந்தி வந்தா வரட்டும்... இல்ல காட்டிலேயே அலைஞ்சு சாகட்டும்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெம்பர் மாமாவின் கோபமான வார்த்தைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து தேய்ந்து தூரமாகப் போவதைப் பூட்டிய அறைக்குள் அவள் உணர்ந்தாள். வெளியே வீதியில் ஐஸ் பழக்காரனின் கோர்ன் சத்தம், அவளுக்குத் தெளிவாகத் தான் உப்புவெளிக் குடிசைக்குள்தான் இருக்கிறேன் என்ற நினைப்பைக் கொண்டுவருகிறது.

காதுகளை மூடிக் கழுத்தில் துவளும் பரட்டைத்தலையும் அடர்த்தியான நீள வளர்ந்த தாடியும் உட்குழிந்த கண்களுமாக முற்றத்தில் அவன் நிற்கிறான். அந்தக் கண்கள் கோபத்துடன் தன்னைப் பார்ப்பதையும் அவள் கண்டாள். இடுப்பில் கந்தலான சரத்துண்டும் ஒட்டி எக்கிக் கறுத்த வயிறும் எலும்புகள் துருத்திய அவனது உருவம் பிச்சை எடுப்பது போல கை வைத்துக்கொண்டு தன்னை யாசிப்பதைக் காண்கிறாள். அவன் உடல் முழுவதும் காட்டின் நிழல்படிந்த வெயிலில் மினுங்குகிறது. பின்னிருள் கவிந்து நிலவொளி படர்ந்து பின்னிரவின் இருள்படிய அப்படியே அவன் நிற்பதைக் கண்டாள். அதிகாலையின் பனிக்குளிருடன் விளாம்பழத்தின் மணமும் கலந்து பரவுவதை உணர்ந்தாள். இருளில் பசித்த அவன் ஒரு மிருகத்தைப் போல கைகளை அளைந்து தேடினான். கையில் கிடைத்ததையெல்லாம் வாயில் சப்பித்துப்புகிறான். கையில் கிட்டிய முழு விளாம்பழங்கள்கூட உள்ளே ஒன்றுமில்லாது உறிஞ்சப்பட்டுக் கிடக்கின்றன. அவற்றை வீசிவிட்டு ஊர்ந்து ஊர்ந்து சேதமில்லாது கிடக்கும் விளாம்பழங்களை அவன் தேடுவதை அவள் கண்டாள். இருளுக்குள் ஒரு கொறுக்காப்புளியின் தோற்றத்துடன் அவன் ஊர்ந்து போகிறான். எதிர்கொண்டு ஒரு பிரமாண்டமான கரிய உருவம் நெருங்குவதை அவள் கண்டாள். கைகளைத் துழாவித் தடுத்துவிட முனைகிறாள். செவிப்பறையை உறையவைக்கும் ஒரு பிளிறலைக் கேட்டாள். தன் வழியில் குறுக்காக எதிர்ப்பட்ட மரக்கட்டை ஒன்றை எத்துவதுபோல், யானை ஒன்று அவனைத் தன் முன்னங்கால்களால் எத்துவதை இருள் உருவங்களாகக் கண்டாள். மீண்டும் ஒரு மூர்க்கமான பிளிறலைக் கேட்டாள். சக் என்ற சத்தத்துடன் எங்கோ மோதி முனகி அவன் உடல் வீழ்வதைக் கண்டாள். விளாம்பழ ஓடுகளை நொருக்கியபடி அந்தக் கரிய உருவம் இருளில் அசைந்து மறைவதைக் காண்கிறாள். பனைவடலிக் கருக்குகளிலும் பச்சை ஓலைகளிலும் இரத்தநிறப் படிவுகளை அவள் கண்டாள். எலும்புகள் நொறுங்கிப் பெயர்ந்து கருக்குகள் வெட்டி இரத்த விளாரான அவன் உடல் முட்புதர்களை அமத்திக்கொண்டு கிடப்பதைக் கண்டாள். நெஞ்சு பரிதவித்தது. ஜொலியக்கா சாத்திரியார் வளவுப் பெண்களுடன் மெட்னி சோவுக்குப் புறப்பட்டுவிட்டது அவளுக்குப் புரிந்தது. சனத்தின் சலசலப்பு உக்கிரமாகக் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை மங்கிக்கொண்டிருக்கும்பொழுதில் சிதைந்து அழுகிய அவன் உடல்மீது கட்டைகளையும் காவோலைகளையும் போட்டுத் தீமூட்டுகிறார்கள். நெருப்புச் சுவாலைகளுக்கு மேலெழும் கானல் நீரில் உருமறைந்த சனம் கடமையை முடித்து விலகிப்போகிறார்கள். கதவைத் திறந்துகொண்டு அழுகிய வாழைத்தண்டின் நசநசப்பான நாற்றம் உள்ளே வருகிறது. மெம்பர் மாமாவின் கெப்புக்கால் உள்ளே படமெடுத்து வருவதைக் கண்டாள். நிர்வாணமான உடல்மீது அழுகிய வாழைத்தண்டின் நசநசப்பான அருவருப்பான ஈரம் வடிந்து ஓங்காளம் வருகிறது. நழுவிய வேட்டிக்கு மேலே மலவாசலின் வெட்டுத்தெரியும் அழுகிய குண்டியை அசைத்து மெம்பர் மாமா வெளியேறிப்போவதைக் கண்டாள். உடல்மீது நிற்கும் அந்த நசநசப்பான வழுவழுப்பான அழுக்கு ஈரம், தன் உடல் மீது முழுவதுமாகத் தங்கிவிட்டதுபோல இருந்தபோது, குமட்டல் தாங்கமுடியாது வாந்தி எடுத்தாள். அடிவயிறு திகட்டி அருவருக்கவைக்கிறது. உப்பிக்கொண்டிருக்கும் தன் வயிற்றை நிர்வாணமான உடலுடன் சேர்த்துக்கண்டாள். இன்னும் சாத்திரியார் வளவுப் பொம்பிளைகள் சினிமாவுக்குப் போகவில்லை போலும். சலசலப்பாகக் கதைக்கும் ஓசை.

கிணற்றுக்குள் மூழ்கியும்மூழ்காததுமாகக் குப்புறக் கிடந்தது மாமியின் பிணம். அதே வெள்ளை பிளவுசும் கத்திரி நாவல் கைத்தறிச்சாரியுமாக மிதக்கும் உடலையும் கிணற்றைச் சூழநின்று, தண்ணீருக்குள் தம் பிம்பம் விழுவதையும் பார்த்தபடி நிற்கும் சனத்தை அவள் கண்டாள். கிணற்றுக்குள்ளிருந்து எழும் மனிதத்தலைகள் ''திரியாய் பக்கம் அவட சனங்கள் பிணத்தக் கொண்டுபோறாங்க'' என்று சொல்வது அவளுக்குக் கேட்டது. செமிக்காத கழிவொன்றை வயிற்றிலிருந்து கழித்துவிடும் முனைப்புடன் அவள் முக்குகிறாள். வடிந்தும் அடிவயிறு வீங்கியபடியே இருந்தது. வெளியே திரும்பவும் கதைக்கும் சலசலப்பு அவளுக்குக் கேட்டது. இது அதிகம் ஆண்களுடையது என உணர்ந்தாள். கடற்கரைப்பக்கமிருக்கும் வாடிக்கு மீன்பிடிப்பவர்கள் போகிறார்கள் எனத் தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டாள். எழும்பி வெளியே வந்தாள். தெளிந்த வானத்தில் பௌர்ணமி நிலவு. முற்றத்து மணலில் நிலவொளியும் மரநிழலும். வதனி உள்ளே சிணுங்கும் சத்தம் அவளுக்குக் கேட்டது. சலசலப்பாகக் கதைத்தபடி சில ஆண்கள் இரு தடிகளில் பாடை கட்டி இறந்த மாட்டைச் சுமப்பதுபோல எதையோ சுமந்துவருவது அவளுக்குத் தெரிந்தது. படலைப்படலையைத் திறந்து உள்ளே வந்தவர்கள் முற்றத்தில் தங்கள் சுமையை இறக்கிவிட்டு மூச்சுவிடுகிறார்கள். அழுகிய வாழைத்தண்டின் வெக்கையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய மணத்துடன் இரத்தவாடையும் கலந்து வீசுவதை அவள் உணர்ந்தாள். முற்றத்திலிருக்கும் பிணத்தைக் கூர்ந்து பார்த்தாள். நிலவில் வெளிர்நிறத்தில் மினுங்கும் சேட்டுக்கு மேல் இரத்தக்கறை. வாய் பிளந்து மல்லாந்துகிடக்கிறது பிணம். கழுத்தில் மாலை அணிந்தது போல அளந்து இடம்விட்டுக் கூரான ஏதோவொன்றால் குத்திய இரத்தக்குழிகள். வாய் பிளந்து மல்லாந்துகிடக்கும் மெம்பர் மாமாக்கிழத்தின் பிணத்தைக் கண்ட அவள், தன் வயிற்றுக்குள் கிடப்பதை வாயால் கக்கி வெளியேற்றும் முனைப்புடன் ஓங்காளம் ஓங்காளமாய் வாந்தி எடுத்தாள். மெம்பர் மாமா கிழவனுக்கு பின்னே ஒடுங்கிக்கிடந்த கரப்பான்பூச்சிகளும் புள்ளப்பூச்சிகளும் கொடுக்கு முளைத்து, வீட்டின் இருண்ட மூலைமுடுக்குகளுக்குள்ளிருந்தெல்லாம் புறப்பட்டு வந்து அவளைத் தாக்கத்தொடங்கின. காலைக் கதிர்கள் நெற்றிக்கு மேலே சுட்டெரிக்க, இடுப்பிலும் வயிற்றிலுமிருக்கும் சுமையைவிட குறைவான சுமையான பன் பையை, இடக்கையில் சுமந்தபடி நாய்க்களி பரவிய வீதியில் நடந்தாள். தேத்தா மரத்தின் காய்ந்த பெரிய சருகுகளும் நாவல் நிற சிறிய கத்தாக்காய்களும் விழுந்துகிடக்கும் தார் வீதியில் நடந்தாள். பிரப்பம் பத்தை வீதி ஓரங்களில் அடர்ந்து வளர்ந்து கிடக்கிறது. சுட்டெரிக்கும் வெயிலில் அந்த வீதியில் நடந்தாள். மாலை மங்க புழுதி கிளம்பிவரும் மாட்டுப்பட்டியை ஊடறுத்து நடக்கிறாள். சின்ன விளக்கொளி தந்த துணிவில் அந்தக் கோயில் கப்பில் தலைசாய்த்துச் சுமையை இறக்கி ஆசுவாசப்படுகிறாள்.

''இது பத்தினி அம்மன், இங்க எல்லாம் இரவில தங்கப்படா...''

காலையில் வெளிர் இருளில் பெரியய்யா பக்கத்துக் குடிசையை விரல் நீட்டிக் காட்டுவதை அவள் பார்த்தாள். வறண்ட உதடுகளில் உப்புக் கரிப்பதை உணர்ந்தாள். முகில்களற்ற நீல வெளிர்வானில் சூரியன். கத்தரித் தோட்டத்துக்குள் இடுப்பளவுக்கு மேல் சூரியன் சுட்டெரிக்கின்றபோதும் தன் உடல் அந்தச் சூட்டை உணராமல் இருப்பதையும் தன் உடல் புழுக்கமாக இருப்பதையும் உணர்ந்தாள். காய்ந்து வதங்கிப்போன கத்திரிப் பிஞ்சு மாமியின் நினைவுகள். மப்புப்போடாது எரிக்கும் மதிய வெயிலில் நிமிர்ந்து வான் பார்க்கமுடியாது கூசும் அவள் கண்கள். சட்டையின் கைப்பகுதிகளுக்குக் கீழே கைகளில் படும் கத்தரி இலைகளின் சுனையால் தடித்த தோல்களில் மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்க தடித்து வெளிர்ந்த தோலில் மயிர்க்கண்கள் துலக்கமாகத் தெரிவதைக் கண்டாள். காலையில் கத்தரி பாத்திகளுக்குள் இறைத்துக்கட்டிய தண்ணீரால் நிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலுக்குக்கீழ் குளிர்ந்துபோய்க்கிடப்பதை உணர்ந்தாள். கத்தரி இலைகளுக்கு மேலே தன் மேற்பாதி உடல் வெயிலிலும் பருத்து இடையறாது குத்தி வலிக்கும் அடிவயிறு கத்தரி இலை நிழல்களுக்குள்ளும் இருப்பதை உணர்ந்தாள். வயிற்றின் சுமையைத் தாங்கியபடி ஆய்ந்த கத்தரிக் காய்கள் நிறைந்த உரைப்பையை இழுத்தபடி, சுனைக்கும் உடலுடன் நகர்ந்தாள். சிவப்புக் கொச்சிப்பழங்களும் காய்ந்து வதங்கிய கொச்சிக்காய்களும் தொங்கும் கொச்சித்தோட்ட மரங்கள் தன் உப்பிப் பெருத்த அடிவயிறை உரசியபடி இருக்க, கொளுத்தும் வெயிலில் இடுப்பு மடிப்புக்குள் கொச்சிக்காய்களைக் கொய்தாள். தன் விரல்களைப் போலவே தன் உடலும் நெருப்பில் பட்டதுபோல காந்தி எரிவதை உணர்ந்தபடி கொச்சிப்பழங்களைக் கொய்தபடி இருந்தாள். கைவிடப்பட்ட தோட்டத்தின் காய்ந்த நிலத்தில் அவள் கால்களுக்குள் அண்டுப்படும் மண்கட்டிகள் நொறுங்குவதை உணர்ந்தாள். சுரீர் வலி, தாங்கொணா வலியில் அலறியபடி, கொச்சித் தோட்டத்துக்குள் மல்லாந்து, வெளிர்நிறவானத்தைப் பார்த்தபடி வாய்விட்டு அலறினாள். ஆட்கள் ஓடிவரும் காலடிகளில் நில அதிர்வை உணர்ந்தாள். தாறுமாறாய்த் தொங்கும் தென்னோலைகளின் நிழலில் அவளைக் கிடத்துவதை உணர்ந்தாள். கொச்சிப்பழம் ஆய்ந்த எரிவுடன் கூடிய பக்குவம் இல்லாத கைகள் தன் வயிற்றில் பலங்கொண்டு தாறுமாறாய் இயங்குவதை உணர்ந்தாள். ''முக்கு முக்கு...''. தன் உடலின் சக்தி முழுவதையும் திரட்டி நீண்ட நாட்களாகத் தன் வயிற்றில் தங்கித் தன்னைப் பாடாய்ப்படுத்திக்கொண்டிருந்த கழிவொன்றை முக்கிப் பேண்டுவிட்டு நினைவிழந்தாள். கையில் உள்ளமுதும் சக்கரைப்பொங்கலும் ஏந்தியபடி ஆலமர விழுதுகளுக்குக் கீழே நின்றபடி, வழுக்கைத்தலையும் மழித்த பொக்குவாய்ச் சிரிப்புமாகப் பெரியய்யா ''பெத்தவா...'' ''பெத்தவா...'' எனக் கூப்பிடுவதை ஆலம் விழுதுகளுடன் கண்டாள். கரடு முரடான முகத்துடன் கள்ளுத்தவறணை அம்மாச்சி, கையில் விரால் மீன் கோர்வையுடனோ பன்றி ஒன்றின் சந்துப்பகுதியோடோ அவள் வீட்டு முற்றத்தில் நிற்பதை அவரது செத்தையில் சாத்திய கெரியர் பூட்டிய றலி சைக்கிளுடன் பார்க்கிறாள். நீண்ட நேரமாக மல்லாந்துகிடந்ததால் நிலத்தில் அண்டிக்கிடக்கும் தன் முதுகுப்பகுதி புண்ணாக வலிப்பதை உணர்ந்தாள்.

தன் உடல் மீது மென்மையான கையை உணர்ந்தாள். அவனுடையதாக இருக்கும் என்ற ஏக்கத்துடன் தடவிக் கொண்டேயிருந்தாள். தன் நெஞ்சின் மீது இருக்கும் கை வரவர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனதியான சுமையாக மாறுவதை உணர்ந்தாள். கையிலிருக்கும் விரல்களை வருடிப்பார்த்தாள். அது சொரசொரப்பாக இருந்தது. அழுகிப்போன வாழைத்தண்டின் நெடி. தன் மூச்சு முட்டும் சுமையின் கனதியை விலக்கி வெடுக்கெனத் திணறி உதறித்தள்ளி எழுந்தாள்.

நெஞ்சின் மீது உரமாக விழுந்த கைகள் பலங்கொண்டு தன்னை உதறித்தள்ள விழித்த பெத்தவன், அலமலந்து சருவப்பானையுடன் சேர்ந்து தடதடவென உருண்டான்.

''ஏனம்மா தம்பியை திட்டி அடிக்குறாய்...''

முழங்காலில் எரிவும் தோள்பட்டையில் வலியுமாக எழுந்த பெத்தவன், இருள் அடைத்த குடிலுக்குள் வெளிச்சத்தைக் கசியவிட்டுக்கொண்டிருந்த குடில் கதவு நோக்கித் தாயையும் தமக்கையையும் பார்த்தபடி நகர்ந்தான். கதவு இடுக்குகளுக்குள்ளால் கடல்காற்று சில்லென குடிலுக்குள் வருவதை உடலில் உள்வாங்கியபடி தட்டிக்கதவைத் திறந்து வெளியே வந்தான். எதிரே நின்றிருந்த முருங்கை மரத்தின் செத்தல்களும் இலைகளும் போக்கு வெயிலின் உக்கிரத்தை மறைக்காமல் தன்மீது வெயிலை முழுமையாகப் படியவிட்டதால் பெத்தவன் நகர்ந்து தென்னைமர நிழலை அண்டி நின்றான். தனக்கு முன்னே, கறுத்துத் தடித்த பெரிய உருவம்கொண்ட அமுக்கர் ஐயாவைப் போலவே அவரது மெத்தை வீடும் பெரிய உருவமாகத் தென்னைவட்டுக்கு மேலே எழுந்துநிற்பதைக் கண்டான். கொக்கி வளைவுகளும் தாமரைப்பூக்களும் ஓட்டை ஓட்டையான செங்கற்களும் பெரிய தூண்களும் விதவிதமான வர்ணங்களும் கொண்டிருந்த மெத்தை வீடு, போக்கு வெயிலில் ஒளிர்ந்துகொண்டு கிடப்பதை பெத்தவன் பார்த்தபடியிருந்தான். சுற்றுமதிலும் பெரிய இரும்புக்கதவும் கொண்ட வீட்டின் உள்பகுதியைக் காணமுடியாத பெத்தவன் வீட்டின் உள்ளே இருட்டாகத் தெரிவதாக உணர்ந்தான். அந்த ஒழுங்கையின் பிரதான வீதியை அண்டியிருக்கின்ற வீடுகளெல்லாம் ஓட்டு வீடுகள், சின்ன வீடுகள். இந்த வீட்டைப் போல் பிரமாண்டமாக இல்லாவிட்டாலும் பெரியவீடுகள்தான். சாத்திரியார் அம்மாள் வளவுக்குள்ளிருக்கும் எல்லா வீடுகளும் ஓலை வேய்ந்து, சீமெந்து தரை இழுத்த வீடுகள் என நினைத்துக்கொண்டான். சாத்திரியார் அம்மாளின் வீடுகூட குடிசைதான். ஆனால் சாத்திரியார் அம்மாளின் காளி கோயில் கூரைகைமரங்கள் தகரங்கள் அடிக்கப்பட்டவை. அப்படித்தான் காப்பெண்டர் வேலை செய்யும் பூவாவின் மரப்பட்டறையும் பெரிய கம்புகள் நட்டுத் தகரம் அடித்தது. ஆனால் அவரின் வீடும் கொஞ்சம் பெரிய குடிசை மட்டும்தான் என பெத்தவன் நினைத்துக் கொண்டான். கடற்கரை ஓரத்தை அண்டிக்கிடக்கும் சாத்திரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவைச் சுற்றிவர வேலியிருந்தாலும், உள்ளே கிடக்கும் குடிசைகளுக்குத் தனித்தனியாக வேலியில்லை என பெத்தவன் நினைத்துக்கொண்டான். ஒழுங்கையின் முன்புறமிருக்கும் பெரிய வீடுகளெல்லாம் தனித்தனியாக அறுக்கை செய்யப்பட்டிருப்பதை பெத்தவன் நினைத்துப்பார்த்தான். அரைவாசி கம்பி அடித்து மேல்பகுதி தகரத்தால் அறுக்கை செய்யப்பட்ட வேலிக்குள்ளிருக்கும் சீற் போட்ட வீடுதான் கள்ளுத்தவறணை அம்மாச்சியின் வீடு என்பதை பெத்தவன் நினைத்துப்பார்த்தான். மெத்தை வீட்டுக்குள்ளிருந்து அமுக்கர் ஐயாவின் குரல் பெத்தவனுக்குத் தெளிவாகக் கேட்கிறது.

''அம்மா... இது இந்தியாவில இருக்கிற பெரிய நடிகை வையந்திமாலாட வீட்டப்பாத்திற்று வந்து... அமுக்கர் ஐயா கட்டின வீடாமம்மா இது...''

வதனி அக்கா அம்மாவிடம் சொன்னதை பெத்தவன் நினைத்துக்கொண்டான். சோர்வாக இருந்ததால், ஜொலி அக்கா வீட்டுப் பின்புறமிருக்கும் விழும்புளி மரத்தில் காய்கள் இருக்கலாம் என நினைத்துக்கொண்டு திரும்பிய பெத்தவன் திடுக்கிட்டான். இடுப்பில் சாரத்தை சண்டிக்கட்டு கட்டி, வெறும் மேலுடன் இடுப்பில் கைவைத்தபடி தன்னைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருப்பவனைக் கண்டதும் சட்டென்று பெத்தவன் நின்றான். இடுப்பில் சண்டிக்கட்டுடன் நின்றவன் கள்ளுத்தவறணையில் டேஸ்ட் பொரியல் விக்கும் சுக்குறு நாயரின் குடிசையைத் தாண்டி சாத்திரியார் அம்மாளின் காளி கோவில் பக்கம் போவதை பெத்தவன் கண்டான். அவனை இந்த வளவுக்குள் அடிக்கடி காண்கின்றபோதும், இங்குள்ளவர்கள் யாரும் அவனைப் பெயர்சொல்லிக் கூப்பிடுவதையோ அல்லது அவன் யாரையும் அப்பா, அம்மா என்று கூப்பிடுவதையோ கண்டதில்லை என பெத்தவன் நினைத்துக்கொண்டான். கடல்பக்கமிருந்து எழுந்த நீண்ட ஊதல் சத்தத்தைக் கேட்ட பெத்தவன், சாத்திரியார் வளவு செத்தைவேலிக்கடப்பைத் தாண்டி ஒழுங்கைக்கு வந்தான். இரவு முழுவதும் கடலில் வெளிச்சம் போட்டுக்கிடந்த கப்பலின் புகைக்குழாயிலிருந்து புகை கிளம்புவதை பெத்தவன் கண்டான்.

''தேதிக்கு முந்தி வந்தா இப்படித்தான் காபருக்கு வெளியில போட்டுட்டுக் கிடப்பாங்கள். பின் சாமான் இறக்க காபருக்குள்ள கப்பல் போகும்...''

கள்ளுத்தவறணை அம்மாச்சி அம்மாவுக்குச் சொன்னதை பெத்தவன் நினைத்துப்பார்த்தான். போக்கு வெயில் முதுகைச் சுட்டெரிக்க கடற்கரையை நோக்கி ஒழுங்கையில் நடக்கத்தொடங்கினான் பெத்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவாவின் காப்பென்டர் பட்டறையைத் தாண்டும்போது பூவாவின் மூச்சிறைப்புடன்கூடிய பலகையில் சீவுளி சீவும் சத்தமோ பொலி அடிக்கும் சத்தமோ கேட்கவில்லை என பெத்தவன் நினைத்துக் கொண்டபோது, பூவாவின் பட்டறைக்குப் போகும் கடப்புக்குள்ளிருந்து சட்டென்று வெளியே வந்த, இடுப்பில் சாரத்தைச் சண்டிக்கட்டுக் கட்டியவன், தனக்கு முன்னே நெருக்கமாக நிற்பதைக் கண்ட பெத்தவன் தன் உடல் வெடவெடப்பதை உணர்ந்தான். தனக்கு முன்னே தன்னைவிட பெரியவனாக நிற்கும் அவனுடைய கீழிறங்கிய தோள்களையும் புடைத்து வீங்கிய நெஞ்சையும் திரண்ட கைத்தசைகளையும் வெள்ளை உடலையும் பார்த்து பயந்த பெத்தவன், உடல் வேர்க்க பின்வாங்கி நடந்தான். திரும்பிப்பார்க்காதபோதும் அவன் தன் இடுப்பில் கை ஊன்றியபடி, இடுப்புவரை ஒழுங்கையின் மணல்பரப்பும் இடுப்புக்கு மேலே கடலில் நிற்கும் கப்பலும் பின்னால் தெரிய நிற்பதை பெத்தவன் நினைத்துக்கொண்டான். பின்னால் ஓடிவரும் தடதடப்புச் சத்தம் கேட்டதால் பெத்தவன் குப்பைகள் போட்டு எரிக்கும் திடல் ஓரமாக ஒதுங்கிநின்றான். வேகமாக ஓடி வந்தவன் தன்மீது இடிக்க நிலைகுலைந்து வலுவிழந்து முழங்கால் கூச சாம்பல் மேட்டில் பெத்தவன் விழுந்தான். வேகமாகத் தன்மீது பாய்ந்து ஏறி அமர்ந்த அவன், தன் நெஞ்சிலும் முகத்திலும் ஓங்கிக் குத்தத் தொடங்கியபோது கத்தவோ திமிறவோ ஏலாது தான் வெலவெலத்து பயத்தில் உறைந்துபோய்க் கிடப்பதை பெத்தவன் உணர்ந்தான்.

''டேய், ஆர்ரா அங்க... அவன விடுடா பரதேசி நாயே...''

செத்தைக்கு பின்னே இருந்து சாத்திரியார் அம்மாளின் குரலைப் பெத்தவன் கேட்டான். செத்தைக்குப் பின்னே அகப்பட்ட பொச்சுமட்டையையோ சிரட்டையையோ சாத்திரியார் அம்மாள் அவன் மீது வீசி அடிப்பதைக் கண்டான். தன்னை விட்டுவிட்டு அவன் எழுந்து ஓடுவதை பெத்தவன் பார்த்தபடி எழுந்துநின்றான்.

''போடி முண்டச்சி...''

''இருடா வாரன் களுசர நாயே...''

திட்டிக்கொண்டே ஒழுங்கையில் வேகமாக ஓடிய அவன், பெரிய வீடுகளிருக்கும் அகல தகரப்படலை ஒன்றைத் திறந்துகொண்டு மறைந்துபோக, சாத்திரியார் அம்மாள் செத்தை வளவின் படலைக்குள்ளால் தன் பருத்த உடலை அசைத்தபடி தன்னை நோக்கி வருவதை பார்த்தபடி பயத்தில் இன்னமும் நடுங்கிக்கொண்டிருக்கும் தன் உடலைக் கட்டுப்படுத்த முடியாது தவித்து நின்றிருந்தான் பெத்தவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீ என்ன புள்ளப்பூச்சியாடா... அவன் அடிச்சா திருப்பி அடிக்கவேணும்... இல்ல சத்தமாச்சும் போடவேணும்...''

சாத்திரியார் அம்மாள் கடப்புத் தாண்டித் தன்னைக் கொர இழுவையாய்க் கிணற்றடிக்கு கொண்டுபோகும்போதும் தன் குடிசையின் வாசல் கதவு பூட்டிக்கிடப்பதை பெத்தவன் கவனித்தபடி நகர்ந்து போனான். தன் தலையை அசைத்தபடி பொதுக்கிணற்றில் கறல் பிடித்த ஓட்டை வாளியிலிருந்து தண்ணீர் திரும்பத்திரும்ப கிணற்றுக்குள் சொட்டும் சத்தத்தடன் சாத்திரியார் அம்மாள் தன் தலையில் தண்ணீர் வார்ப்பதையும் தன் முதுகு காந்துவதையும் தான் ஈரமாக இருப்பதையும் பெத்தவன் உணர்ந்தான். முதுகில் எதுவோ கிழித்திருக்கவேண்டும் என பெத்தவன் நினைத்துக்கொண்டான்.

## 1.3

எரிந்துகொண்டிருக்கும் கயிற்றுத் திரியில் கடல்காற்றுப்பட, இருளை விலக்கிக்கொண்டு மெல்லிய கம்பித்துண்டுகள்போல தணல்தூள் சூழ்லாம்பிலிருந்து பறந்து சாம்பலாகி மறைவதை, சூழ்லாம்பு தொங்கும் கொய்யா மரத்தின் பின்னணியில் பார்த்துக் கொண்டிருந்தான் பெத்தவன். ஒழுங்கையின் தொடக்கத்திலிருக்கும் கல் வீடுகளிலும் வீதியோரக் கம்பங்களிலும் குண்டுபல்ப்புகள் எரிகின்றன சாத்திரியார் வளவுக்குள் குண்டுபல்ப்பு கொண்ட வீடுகள் எதுவுமில்லை என பெத்தவன் நினைத்துக்கொண்டான். சாக்குக்கட்டிலில் அடிப்பக்கத்தைக் குத்தி, தென்னைமரத்தில் சாத்தியிருக்கும் இரட்டைக்குழல் துப்பாக்கியின் இரும்புக்குழாயிலும் மரப்பிடியிலும் மினுமினுக்கும் சூழ்லாம்பின் வெளிச்சம். கள்ளுத்தவறணை அம்மாச்சி மம்மலான இருட்டில் கமக்கட்டுக்குள் மடித்துப்பிடித்த நீளமான சாக்குக்கட்டிலும் மறுகையில் இரட்டைக்குழல் துப்பாக்கியுமாக வந்தபின்புதான், தங்கள் குடிசைமீது இரவில் கல்லெறிவதும் ஒழுங்கைக்குள் வைத்து அக்காவையோ தன்னையோ ஆராவது மிரட்டுவதும் நின்றுபோனது என பெத்தவன் நினைத்துக்கொண்டான்.

''பெத்தவா சாப்பிட்டியா...''

உதடுகள் மேலும்கீழும் விரிந்து கோணியிருக்க சூழ்லாம்பின் வெளிச்சத்தில் மினுக்கும் ஒற்றைத் தங்கப்பல் தெரிய பற்களுக்கிடையில் கவ்விய இறைச்சித்துண்டை எலும்பிலிருந்து பிய்த்து எடுத்துவிடமுனையும் கள்ளுத்தவறணை அம்மாச்சியின் கையிலிருக்கும் சோத்துக் கோப்பையையும் மொழுமொழு என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மினுமினுக்கும் முகத்தையும் நோக்கி பெத்தவன் தன் பார்வையைத் திருப்பினான். சாப்பிட்டுமுடித்தபிறகும் கள்ளுத்தவறணை அம்மாச்சி சாப்பிட்டபின் மிஞ்சும் இறைச்சித்துண்டுகளுக்காகத் தான் தூங்காது காத்துக்கொண்டிருப்பதைப் பற்றி அம்மா ஏதாவது சொல்வாள் என பெத்தவன் எதிர்பார்த்தான். குடிசை வாசலின் ஒற்றைச் செங்கல் படியில் குந்தியிருக்கும் அம்மா ஏதோ சொல்வதற்கு முனைவதைக் கண்ட பெத்தவன் கூர்ந்து கேட்கத் தயாரானான்.

''பயமாக்கிடக்குது அம்மாச்சி... உங்கட ரெண்டாவது வெள்ளையா ஒல்லியா உயரமான புள்ள வதனிட காதத்திருகி, தலையில குட்டி, என்ன கொம்மையும்... நீயும்... அப்புச்சிட சொத்துல பங்குபோடவா வந்திருக்கீங்க என்று மிரட்டி இருக்கார்... இவன சாம்பல் மேட்டில போட்டு ஒரு பொடியன் அடிச்சிருக்கான்... சாத்திரியார் அம்மாதான் கண்டு அவனத்திரத்திப் போட்டு இவன கூட்டி வந்திருக்கா... முதுகில் கம்பியோ தகரமோ வீதுருவோ கிழிச்சிருக்கு... மனிசிதான் புனுகுத் தைலமும் போட்டு மரமஞ்சளும் அவிச்சுக் குடுத்திருக்கா... புள்ளயலுக்கு ஏதும் செஞ்சுபோடுவாங்களோ என்டு பயமாக்கிடக்கு... அங்கயே திரும்பி போறம் அம்மாச்சி...''

''ஒருத்தனும் ஒண்டும் புடுங்க ஏலாது... சும்மா கூய் எண்டு கத்தத்தான் தெரியும் வேற ஒண்டும் புடுங்க ஏலாதவங்கள்தான்... இவன அடிச்சது கன்னியாவில இருக்கிற ரெண்டாவது அண்ணர்ர களுசர... அங்க ஊர்வம்பெல்லாம் வாங்கிக்கொண்டு வருதெண்டு இங்க மூத்தண்ண வீட்ட இருந்து படிக்கவிட்ட. அது படிக்கிறதவிட... ஊர்ல இருக்கிற மற்ற களுசர வேலை எல்லாம் பாக்குது...''

''அண்ணாச்சிட பேர் என்னம்மாச்சி...''

''உதயன்கூட சகவாசம் வைச்சுக்கொள்ளாத... கூட்டிக்கொண்டே கடலுக்க தாட்டாலும் தாட்டுப்போடுவான்...''

''அம்மாச்சி வீட்டில இருக்கிற பொம்புளப்புள்ளையள் சமைக்காத அம்மாச்சி...''

''தாய் இல்லாப் பிள்ளைகள் என்டு செல்லம் குடுத்து வளர்த்தது பிளச்சுப்போச்சு, நல்லா சோக்குப் பண்ணுவாளவ... தியட்டருக்கும் போய் ஒரு புதுப்படமும் விடாம பாப்பாளவ... மகராசி நாக்குக்கு ருசியா எனக்குச் சமைச்சுப்போட்டு தான் தின்னாமச் செத்துப் போயிட்டாள்... திண்ட நாக்கு கேக்குதில்ல...''

''அம்மாக்கு... என்ன வருத்தம் அம்மாச்சி...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இருட்டுக்கையும்... கதவு மூலைக்கையும்... வீட்டுக்குப் பின்னேயும் போய் குந்தி இருந்து... ஒரு பிடி சோத்த முண்டி முண்டி திண்டாள்... நானும் தொழில் தொழிலெண்டு அலைஞ்சதுதான்... துரும்பா இளைச்சு மூச்சுவிட கஸ்டப்பட்டாள்... பிறகு சியாமளா கொஸ்பிட்டலுக்கு கொண்டுபோனது, தொண்டைல கட்டி எண்டாங்கள்... புத்து எண்டாங்கள்... எல்லாம் ஒரு இரவில முடிஞ்சுபோச்சு...''

சூழ்லாம்பின் வெளிச்சத்தில் கொய்யா மரத்தடியில் கள்ளுத்தவறணை அம்மாச்சி கையலம்பும் தண்ணீர் வர்ணமயமாய்ச் சிதறிக்கொண்டிருக்கும்போது, பெத்தவன் அடிச்சட்டிக் குழம்புக்குள் தெரியும் இறைச்சித்துண்டுகள் பற்றி நினைக்கத்தொடங்கினான்.

## 1.4

தண்ணீர் ஊற்றி அணைத்தபிறகும் எரிந்த குடிசையின் நட்டுக்கொண்டு நிற்கும் கறுத்த கப்புக்களிலிருந்து புகை ஒரு நீளமான நூலைப் போல திரும்பி நேராகக் கிளம்புவதை பெத்தவன் பார்த்துக்கொண்டிருந்தான். இரவு முழுவதும் அழுது கறுத்த தாயின் முகம் இன்னமும் இருள் கலையாத காலைப்பொழுதில் தனக்கு பயத்தைக் கொடுப்பதாக பெத்தவன் நினைத்தான். கறுத்துக்கிடந்த குடிசையின் சீமெந்து தளத்தில் குசினிச் சாமான்களோடு சாம்பலும் தண்ணீரும். தான் நிலாவெளியிலிருந்து சைக்கிளில் வரும்போது போட்டுவந்த வெள்ளை நிறத்தில் சிகப்புப் பொட்டுப் போட்ட ஜங்கி பாதி எரிந்து வேறாரு நிறத்தில் கப்புடன் ஒதுங்கி நீரில் ஊறிக்கிடப்பதை பெத்தவன் கண்டான். தாங்கள் திரும்பிப்போகும்போது எரிந்த கறுத்த சட்டிப்பானையைத் தவிர வேறொரு சுமையும் இருக்காது என பெத்தவன் நினைத்துக்கொண்டான். நீண்ட நேரமாகத் தன் முழங்காலின் மேல் அமத்திவைத்திருந்த வலக்கையின் விரல்கள் விறைத்து முள் குத்துவதுபோல இருப்பதையும் முழங்காலில் மடித்துக் குத்தியிருந்த கைவிரல்களுக்குள் அதிகாலை பனிக்குளிர் ஈரமாகக் கசிவதையும் தன் காது மடல்கள் சில்லிட்டுக்கிடப்பதையும் பெத்தவன் உணர்ந்தான். குடிலுக்குள்ளும் தன் முதுகுப்புறத்திலும் இருளடைந்துகிடக்க, தன் குடில் வாசலில் கால் நீட்டி, இரவு போட்ட மேக்கப் கலைந்தும் கலையாததுமாக இருக்கும் வெளிறி வெள்ளையான ஜொலியக்கா... முட்கம்பி இழுத்து அடித்து பனைமட்டை வரிந்த வேலிக்கு மேலால் தலைமட்டும் தெரிய எட்டிப்பார்த்தபடி நிற்கும் டேவிட்டர் ஐயா... பக்கத்தில் அவங்கட அம்மா... முழங்காலுக்கு மேலே தூக்கிப்பிடித்த சாரியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்த தன் உடலைத் தாங்கமுடியாத கால்களை மாறிமாறி வைத்து நின்றபடி, கையில் இரட்டைக்குழல் துப்பாக்கியை வைத்திருக்கும் கள்ளுத்தவறணை அம்மாச்சியுடன் கதைத்துக்கொண்டிருக்கும் சாத்திரியார் அம்மாள்... சிறிமாபுரத்துக்குள்ளிருந்து கம்பிவேலிக்குள்ளால் புகுந்துவந்து நிற்கும் பொக்குளுக்குக்கீழ் காற்சட்டை போட்டு அதிகாலை இருளில் இன்னமும் கருப்பாய்த் தெரியும் சில்வா... வெள்ளை பிளவுசும் இடுப்பில் சாரத்துண்டும் கட்டிய சில்வாவின் அம்மா... இன்னும் சில சிங்களப் பொம்பிளைகளும் ஆம்பிளைகளும், பச்சை ஈர்க்கினைக் கிழித்துக் கையில் முழம் அளந்து முறித்துத் தன் கையில் பிடித்தபடி, தன் தொந்தி கீழே சரிந்து தொங்க, காக்கிக் காற்சட்டையை மேலே இழுத்தபடி வெற்றுடம்புடன் நிற்கும் குள்ளமான பறங்கிக் காப்பென்டர் பூவா... கடலில் மீனுக்கு டைனமட் வெடிக்கும்போது மணிக்கட்டுடன் இரண்டு கைகளும் ஒரு கண்ணும் போனதால் கூலமான கைகளில் பீடியை அண்டிப்பிடித்து, அதிகாலை இருளிலும் மினுங்கும்படி பீடி குடித்துக்கொண்டு எப்போதுமே தலைகவிழ்த்து இடுப்பில் சரமும் வெற்றுடம்புமாக நிற்கும் மணிகண்டனண்ணன், கள்ளுத்தவறணையில் டேஸ்ட் பொரியல் விக்கும் சுக்குறுநாயரின் இடுப்பில் தொங்கும் அழுக்கும் காவியும் படிந்த வேட்டித்துண்டைப் பற்றியபடி, வதனி அக்காவுக்குப் பக்கத்தில் நிற்கும் கௌரிப்பெட்டை என... வலயம் போல் ஆக்கள் நிற்பதால், உதயனோ... கள்ளுத்தவறணை அம்மாச்சியின் பிள்ளைகளோ திடீரென வந்து தாக்கமுடியாது என பெத்தவன் நினைத்துக்கொண்டான். அதிகாலையில் தடபுடலாக உருட்டப்படும் அடுக்களைச் சாமான்களின் சத்தமோ அடுப்பில் கருகும் அல்லது அவியும் பண்டங்களின் மணமோ சலசலப்பாகப் பொதுக்கிணற்றில் நீரிறைக்கும் குளிக்கும் அரவமோ அற்று, சாத்திரியார் வளவுக்குள்ளிருக்கும் ஒவ்வொருவரும் வேலைக்குப் புறப்படும் அவசரமோ ஆரவாரமோ அற்றுத் தங்களைச் சூழ்ந்து நிற்பதால் தாம் பாதுகாப்பாக இங்கிருந்து கிளம்பி திரும்பவும் கண்ணகையம்மன் கோவில் குடிசைக்குத் திரும்பிவிடலாம் என்று பெத்தவன் நினைத்துக்கொண்டான்.

''படார்ர்ர்ர்... ஒத்த வெடிச்சத்தம்... நான் அப்பத்தான் வெளியேபோய் வந்து தரையில தூங்க சாஞ்ச... எழும்பி வெளியில வந்து பார்த்தா நெருப்பு எரியுது... குடிசைக்கு அத்துள போய் கையில்பட்ட சமான்கள வெளியில எறிஞ்ச, சூடு தாங்கமுடியல கடைசியா வெளியில பாஞ்ச...''

தட்டையான முகத்தில் சப்பை மூக்கும் சின்ன கீற்றுப்போல கண்களும் வெளிறிய மஞ்சள் தோல் நிறமும் முழங்கால்வரை நீண்ட கைகளும் அகன்ற தோளுமாகக் கிணற்று வாளியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து, வாளியில் கட்டியிருந்த தங்கூசி நூலை வலயமாய்ப் பிடித்தபடி, தலையை உருட்டி உருட்டி, உடம்பு ஆடாது டேஸ்ட் கடை சுக்குறுநாயரோடு யக்கடையான் பேசிக் கொண்டிருந்தபோது பெத்தவனுக்கு வதனி அக்காமீது கோபம்கோபமாய் வந்தது. சிங்களத்தில் யக்கடை எண்டா இரும்பு, பெரியபெரிய இரும்புச் சாமான்களையெல்லாம் களவெடுத்து விக்கிறதாலதான் அவருக்கு யக்கடையான் எண்ட பெயராம். அந்தாள் சீனக்கார ஆளாம், புள்ளயள புடிச்சி சாக்கில கட்டித் தூரமா இருக்கிற கொழும்பில கொண்டேட வித்துப் போடுவானாம்... காலிப் பக்கமிருந்து சிங்கள பொம்பிளய கடத்திக்கொண்டுவந்துதான் இங்க குடும்பம் நடத்துறானாம். கண்களை உருட்டிக்கொண்டு வதனி அக்கா எரிந்த பழைய குடிசையின் பின்புறம் செத்தைக்குப் பக்கத்தில் வைத்துத் தன்னை மிரட்டியது பெத்தவனுக்கு ஞாபகம் வந்தது. தூக்கக்கலக்கத்தில் பெத்தவனுக்கு அந்த ஒத்த வெடிச்சத்தம் கேட்டது போலத்தான் இப்போதும் இருக்கிறது. ஆனால் படபடப்புடன் எரியும் செத்தையின் சடசடப்புச் சத்தமும்... பகல்போல் வெளிச்சமும்... தன் உடலில் படர்ந்த நெருப்பு வெக்கையின் தகிப்பும் நன்றாக ஞாபகம் வந்தது பெத்தவனுக்கு. அப்போதுதான் தங்கள் குடிசையின் தட்டிக்கதவு பிடுங்கப்பட்டதையும்... எரியும் வெளிச்சத்தில் மஞ்சள் தகதகப்புடன் யக்கடையான் வாசலில் நின்றதையும் தாங்கள் வெளியே போக, உள்ளே புகுந்த யக்கடையான் கையில் அகப்பட்டதை வேகமாக வெளியில் இழுத்து எறிந்துவிட்டு வெளியே பாய்ந்து கிணற்றடியை நோக்கி ஓடியதையும், விழித்துக்கொண்ட மற்றவர்களும் சேர்ந்து தண்ணீர் ஊற்றி எரியும் குடிசையை அணைக்க முயன்றதையும் பெத்தவன் படபடப்புச் சத்தத்துடன் எரியும் குடிசையுடனும் கண்ணைப் பறிக்கும் வெளிச்சத்தில், வெப்பக்காற்றில் கருகித் தாறுமாறாகப் பறக்கும் பச்சைத் தென்னோலைகளுடனும் நினைத்துப்பார்த்தான். பெத்தவனுக்கு யக்கடையானுக்குப் பக்கத்தில் மிகநெருக்கமாகப்போய் நிற்கவேண்டும்போல் இருந்தது.

அதிகாலையின் இருள் கலைந்து காலை புலரத்தொடங்க, கொஞ்சமாய் மெல்லிய மஞ்சள் கீற்றுக்கள் சாத்திரியார் வளவுக்குள் விழத்தொடங்கியபோது, பூவாவின் மகள் றோஸ்மேரி அக்கா கையில் கேத்தலும் விரல்களுக்குள் கைபிடி கொழுவிய தகர ஜொக்குமாகத் தம்மை நோக்கி வருவதை பெத்தவன் கண்டான். கனநேரத்துக்கு முந்தியே தன் தொண்டை வறண்டு காந்தத் தொடங்கிவிட்டிருந்ததை பெத்தவன் உணர்ந்துதானிருந்தான். தகர ஜொக்கின் இதமான சூட்டில், விரல்களும் தொண்டையும் குளிரிலும் விறைப்பிலும் வறட்சியிலுமிருந்தும் விடுபடுவதை பெத்தவன் உணர்ந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இது ஒண்டும் நாசப்படுத்தின வேல மாதிரி இல்ல... சிலநேரம் எலிகூட... தேங்கா எண்ணெய் மணத்துக்கு... ஒரு வேளை விளக்குத்திரிய எங்காச்சும் இழுத்துக்கொண்டு வந்து செத்தைக்க போட்டிருக்கும்...''

டேஸ்ட் கடை சுக்குறுநாயர் முக்கிமுனகிச் சொன்னபோதும் யாரும் காதுகொடுத்துக் கேட்காது இருப்பதுபோல்தான் பெத்தவனுக்கு இருந்தது. இரண்டு உள்ளங்கைகளுக்குள்ளும் சாரியைப் பொத்திப்பிடித்து முழங்காலுக்குமேல் உயர்த்திப்பிடித்தபடி, தன் பருத்த உடலைத் தாங்கமுடியாத மெல்லிய கால்களை அகலப்பரப்பி, இடமும்வலமும் சாய்த்து சாய்ந்து தம்மை நோக்கி நடந்துவரும் சாத்திரியார் அம்மாளைக் கண்ட பெத்தவன், கையிலிருந்த தேத்தண்ணி ஜொக்கைக் கீழேவைத்துவிட்டு பயத்துடன் எழும்பி நின்றான். மண்ணில் சக்கப்பணிய கிடக்கும் தாயைப் பெத்தவன் பார்த்தான்.

''புள்ள நீ ஒண்டும் யோசிக்கவோ, பயப்பிடவோவேணாம், மனச தேத்திப்போட்டு பத்துச் சதக்காச மஞ்சள் துணியில சுத்தி காளிட சூலத்தில கட்டிவிடு, மிச்சத்த அவள் பார்த்துக் கொள்வாள்... அப்புச்சிட்டயும் கதைச்சிற்றன்... பூவாட்டையும் சொல்லிட்டன்... இப்ப காலையில சாம்பல்தீவில இருந்து கிடுகு மட்டை ஏற்றிக்கொண்டு வண்டில்கள் வரும், மறிக்கச் சொல்லியிருக்கன்... சுத்திவளைச்சு காலடித்தடம் பார்த்தன்... எனக்கு மனசில ஏதோ படுது, நீ ஒண்டுக்கும் பயப்பிடவேண்டாம்... நான் காளியோட பேசிக் கொள்றன்...''

பெத்தவனுக்கு ஒருகணம் உதறிப்போட்டது... நேற்றிரவு நன்றாக இருண்டபிறகும் உதயன் வளவுக்குள் மறுகிமறுகித் திரிந்தது ஞாபகம் வந்தது.

## 1.5

தன் கண்களைத் திறக்கமுடியாது சாத்திரியார் அம்மாள் அவதிப்பட்டார். பொழுது செம்பியன்மலைக்குக் கீழே இறங்கிவிட்ட போதும் தான் கண்ணைத் திறக்க முற்படும்போது, காளியின் திரைச்சீலையிலிருந்து புறப்பட்டுவரும் ஒளிக்கற்றைகள், கண்ணுக்குள் பாய்ந்து காய்ந்த காவோலை நொறுங்குவதுபோல நொறுங்கிக் குத்துவதையும் தன் கண்களுக்குள் யாரோ மண்ணை அள்ளி வீசிவிட்டதுபோல உருட்டுவதையும் சாத்திரியார் அம்மாள் உணர்ந்தாள். கண்களை இறுகமூடித் தன் பருத்த உடலைக் காளிகோவில் குடிசையின் ஊசிக்காலில் சாத்தித் தன்னை ஆசுவாசப்படுத்த முனைந்தாள். தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் முழுவதும் புழுக்கமும் வெம்மையும் படர்ந்துகிடப்பதை சாத்திரியார் அம்மாள் உணர்ந்தாள். தனக்கு போதை இன்று கூடிவிட்டதோ எனக் கவலைப்பட்டாள். தலையில் முண்டாசும் இடுப்பில் காய்ந்து மொறுமொறு என்று இருக்கும் சாரத்துண்டும் நெஞ்சுக்கும் தள்ளுவண்டியின் கைப்பிடிக்கும் இடையில் கையை வைத்தபடி நிற்கும் கறுத்து மெலிந்த நெட்டையான தள்ளுவண்டிக்கார மாமி அவள் நினைவுக்குள் வந்து வெட்கப்பட்டு உடல் கோணி நின்றான். கறார் பேர்வழி குறைச்சுத் தந்தாலும் தருவானே ஒழிய அதிகமாக தந்திருக்கமாட்டான் என தனக்குள் சமாதானம் சொல்லிக்கொண்டாள் சாத்திரியார் அம்மாள். பகல் முழுக்க அலைந்து திரிந்ததும் கண்டதையும் அசைபோட்டு மனதைக்குழப்பிக் கொண்டதும் சோர்வும்தான் தன்னை அவதிப்படுத்துகிறது என நினைத்துக்கொண்டாள். அந்தக் குடும்பத்தைத் திரும்பிப்போகவிடாது வீறாப்பாய்ப் புதிய குடில் போடவைத்தது வினையாகிவிடுமோ என மெல்லியதாக, நீண்ட நாட்களுக்குப் பிறகு, பயம் தனக்குள் ஊடுருவிவிட்டதை சாத்திரியார் அம்மாள் உணர்ந்தாள். கள்ளுத்தவறணை ராமசாமி அந்தக் குடும்பத்தைக் காப்பிரிக் குடும்பம் இருந்து எழும்பிப் போன குடிசையில் குடிவைக்க இரவுப் பொழுதொன்றில், மடப்பள்ளி முன்னே வைத்துக் கேட்டபோது தன் ஆழ்மனதில் புதைந்துகிடந்த ஏதோ ஒன்று கறுவிக்கொண்டு எழும்பி வந்ததால், தான் கல்வீடுகளில் ஏகபோகமாக வாழும் சத்துருக்களுடன் முரண்படவேண்டிவரும் எனத் தெரிந்திருந்தும் தான் சட்டென்று சம்மதம் தெரிவித்ததை நினைத்துக்கொண்டாள் சாத்திரியார் அம்மாள். வெள்ளையான முழங்காலுக்கு மேலே மடித்துக்கட்டிய வெள்ளை வேட்டியை இடுப்பிலிருந்த கறுத்த தோல்பட்டி கவ்வியிருக்க பட்டன் பூட்டாது திறந்தபடி நெஞ்சு தெரிய மேலால் கொழுவியிருந்த சோமன் சேட்டும் தோளில் சாய்த்து உயர்த்திப் பிடித்த ஒற்றைக்குழல் துப்பாக்கியும் பின்னே எடுபிடிகள் சிலரும் கூடவர, கன்னியாபிலியடி வீதியில் மிதப்பாக நடந்துவரும் கள்ளுத்தவறணை ராமசாமியின் அண்ணன் வட்டவிதானை கதிர்காமத்தம்பி சாத்திரியார் அம்மாளின் நினைவுக்குள் வந்துநின்றார். தன் மூடிய கண்களுக்குள் காய்ந்த வறண்ட பற்றைக்காடுகளும் அடர் பசிய மரங்களும் பனங்கூடல் தாண்டிய மலைத்தொடர்களுமெனக் காலமும் இடமும் விரிந்து செல்வதுபோல சாத்திரியார் அம்மாள் உணர்ந்தாள். தனக்கு முன்னே முற்றத்தில் குழந்தைத்தனமான கண்களுடனும் செல்லத்தனமான உடலசைவுகளுடனும் உலாவும் தன் கணவன் குமரப்பன், காட்டு நிலத்தில் கால் பதித்ததும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்மையடையும் விழிகளும், இறுகிப்போன உடலுமாக மாறிப் போவதைப் பற்றைகள் மீது ஒளிரும் சூரிய வெளிச்சத்துடன் நினைத்துப்பார்த்தாள். கையில் நீளப்பிடி கொண்ட காட்டுக்கத்தியுடன் அவன் கால்கள் அங்குலம்அங்குலமாக நகர, தகரப் பற்றைகளும் புதர்களும் அவன் கால்களுக்குள் ஒடுங்க, தனக்குப் பின்னே விரியும் புதுச்சேனையின் மணத்தை உணர்ந்தபடி முன்னேறும் குமரப்பனை அந்திமங்கும் வேளையில், வெட்டிய பற்றைகளில் சடசடத்து எரிந்து சாம்பலாகும் வெயிலில் வதங்கிய புதர்களுடன் நினைத்துப் பார்த்தாள். வட்டவிதானையின் விரல்கள் சுட்டிய அந்த நிலத்தில் வெயிலில் கருகிய உடலும் வியர்வையில் ஊறி நசநசத்துப்போன கோவணத்துண்டுமாகக் காலை புலருமுன் வந்து இருள் அப்பிய பின்னும் வீடு திரும்ப மனமற்றுப் புதர்களுடன் மாய்ந்துகொண்டிருக்கும் குமரப்பனை புசுபுசுப்பான மூச்சுவாங்கும் ஒலியுடன் நினைத்துப்பார்த்தாள் சாத்திரியார் அம்மாள். வட்டவிதானை விரல் சுட்டிய நிலத்தின் புதருக்குள், பொறி வைத்துப்பிடித்த முயலாக இருந்தாலும் சரி, புற்றைவெட்டிப் பெயர்த்துப் பிடித்த உடும்பாக இருந்தாலும் சரி, வட்டவிதானையின் அடிபெருத்த விலாட்டு மாமரத்தின் நிழலில் கிடக்கும் சாக்குக்கட்டிலுக்குக் கீழே வைத்துவிட்டு வரும் குமரப்பனைக் காய்ந்து வற்றிப்போன உடலுடன் நினைத்துப்பார்த்தாள் சாத்திரியார் அம்மாள். அந்தி கருகும் நேரத்தில் வழிதப்பிய முயலொன்று அவனை நெருங்கிப் பின் விலகும் கணத்தில் அவன் கையிலிருந்த காட்டுக்கத்தி காற்றில் விசிறிப் பறந்தது. கத்தியும் அடிபட்ட முயலும் செம்பாட்டு மண்ணைச் சிதறித் தெத்தி விழுவதைக் கண்டாள். உயிர் மூச்சுக்காக இன்னமும் உப்பித்தாழும் முயலின் அடிவயிற்றையும் உடல் உழைப்பின் பசியுடன் முயலை ஏக்கத்துடன் பார்த்துநிற்கும் குமரப்பனையும் நினைவுகளில் பார்க்க முனைந்தாள் சாத்திரியார் அம்மாள். பச்சைவடலிப் பனை ஓலையில் கவனமாக உரித்த முயலைச் சுற்றிச் சுள்ளிகளையும் காவோலையையும் போட்டு எரிக்கும் குமரப்பனின் கண்களுக்குள் நெருப்பையும் ஆசையையும் கண்டாள். காற்றில் மிதக்கும் சுட்ட இறைச்சி மணம் பீலியடி தாண்டி மாமர முற்றத்துக்குப் போவதற்குள் தின்று தீர்க்கும் வெறியுடன் அவன் பற்களுக்கு இடையில் எலும்பிலிருந்த இறைச்சித்துண்டுகளைக் கார்வதை அவன் நாலாப்புறமும் விட்டெறியும் எலும்புத்துண்டுகளுடன் கண்டாள் சாத்திரியார் அம்மாள்.

''குமரப்பா...''

''ஐயா...''

''என்னப்பா சாப்பிடுறாய்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயா... அது... அது... வந்து... மரநாய் குட்டி ஒண்டு... அதான்... கொண்டுவர வேண்டாமே எண்டு போட்டு...''

''வண்டன் சுண்டன்

நவக்கிரியான்

சுட்டான் முயல

திண்டான் மரநாய்

தின்னிச்சாதி...''

நக்கலும் ஏளனமும் கெக்கட்டம்விட்ட சிரிப்புமாகத் தோளில் சாத்திய ஒற்றைக்குழல் துப்பாக்கியுமாக நிற்கும் வட்டவிதானைக்குமுன், ஒடுங்கிக் கறுத்து நிற்கும் அந்திக் கருக்கலில் கண்ணில்படாத குமரப்பனின் கறுத்த தேகமும் செக்கல்பட்ட இருளிலும் மினுமினுப்பும் வெள்ளொளிர்வுமாகத் தெரியும் வட்டவிதானையின் உடலும் தன் நினைவுகளுக்குள் தெரிவதாக சாத்திரியார் அம்மாள் நம்பினாள். எக்காளமான சிரிப்பும் எடுபிடிகளும் பின்தொடர, வட்டவிதானை புதர்களுக்கு மேலாக மேவி நடந்து, வடலிகளின் மீது ஏறி நகர்ந்து, பெரிய பனைகளின் இடைவெளிக்குள்ளால் தலையெங்கும் பனையோலை முட்ட மேவி நடந்து, பீலியடியில் இறங்கி, நிலத்தில் கால் பதித்து, கடப்புத்தாண்டி மாஞ்சோலைக்குள் மறைந்துகிடந்த வீட்டுக்குள் போகிற காட்சிகள் தன் நினைவுக்குள் நகர்வதை சாத்திரியார் அம்மாள் கண்டாள். தன் சேனை வேலையை மறந்து, பொழுது புலரும் முன்பே ஒரு வேட்டை நாயின் மோப்ப உணர்வுடன் காட்டுக்குள் புதர்களையும் மரப்பொந்துகளையும் புற்றுக்களையும் மோப்பம் பிடித்தபடி அங்குமிங்குமாக நிலைகொள்ளாது காட்டுக்குள் அலையும் குமரப்பனின் இமைக்காத விழிகளை அவள் நினைத்துப்பார்த்தபடி இருந்தாள். கருக்கல் செம்பியன்மலையை இருள வைத்த பொழுதில் கையில் இரண்டு றாத்தலுக்கும் குறைவான உடும்புக்குட்டியை அதன் கால்நகங்களை அதன் கழுத்தில் கொழுவி, வாலைக் கழுத்தில் கட்டி, வலயமாக வயிற்றில் பிடித்தபடி பீலியடி தாண்டி ஓடும் குமரப்பனை, வட்டவிதானையின் மாமரங்கள் குகையாக மூடிக்கிடக்கும் வீட்டுடன் நினைத்துப் பார்த்தாள் சாத்திரியார் அம்மாள். வட்டவிதானை வீட்டில் இல்லாததால் வீட்டு வேலைகள் செய்து ஓடாய்த்தேய்ந்து கூனுண்டுபோன அவர் மனைவி சித்தி விரல் நீட்டிக் காட்டிய கோழி அடைக்கும் பிரம்புக்கூடைக்குள் அதை மூடிவைத்துவிட்டு வட்டவிதானையின் முகத்தைக் காணாத ஏக்கத்துடன் திரும்பித்திரும்பிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தபடி நகரும் குமரப்பனைத் தான் காலையில் கட்டிக்கொடுத்த சோற்றுப்பொட்டலத்துடன் நினைத்துப்பார்த்தாள் சாத்திரியார் அம்மாள். இருண்டு கலவரப்பட்ட முகமும் உடல் முழுதும் வியர்த்து, அணிந்திருந்த சோமன் சேட்டு உடலுடன் ஒட்டிக்கிடக்க, கொளுத்தியெடுக்கும் வெயிலில், காடு வெட்டி நிலம் செம்பாடு தெரிய கொத்திய நிலத்தில் தன் எடுபிடிகள் சூழ வட்டவிதானை வருவதை அறியாது தான் தரித்துப்போட்ட காட்டுக் கம்பிக்கட்டைகளுக்குக் கூர் சீவியபடியிருக்கும் குமரப்பனும் வெயிலில் மினுங்கும் அவன் வெட்டுக்கத்தியும் கைகளும் அவள் ஞாபகத்துக்கு வந்தபடியிருந்தன.

''குமரப்பா...''

''ஐயா...''

''குமரப்பா உனக்கு ஒரு சந்தோசமான செய்தி... டிஆர்ஓ, நீ நல்ல உழைப்பாளி என்டு நான் சொன்னதக்கேட்டு... உனக்கு ஆண்டாங்குளம் வடகரைக்கு கீழ தண்ணி பாய்ச்சல் உள்ள இரண்டேக்கர் பள்ளக்காணி குடுக்கச் சொல்லி இருக்கார்... நீ நாளைக்கு வெள்ளனத்தோட வீட்ட வந்து என்னைச் சந்தி...''

'' ஐயா... மாசக் கணக்கில வெட்டின நிலம்... இது எனக்குப் போதும் ஐயா... இதத்தான் நான் மலபோல நம்பி இருக்கிறன்...''

''குமரப்பா சொன்னாக் கேளு... இதவிட அது நல்ல குளத்துவாய்க்காலோட அண்டின பள்ளக்கை... இது மேட்டு நிலம் உனக்கு வேணாம்...''

''எனக்கு வேற எங்கயும் வேணாம் ஐயா, இது எனக்கு போதும்...''

''குமரப்பா நேரடியாகவே விசயத்துக்கு வாரன்... டிஆர்ஓக்கு இந்த நிலத்துண்டப் பிடிச்சுப்போச்சு... இதக் குடுத்திடு... உனக்கு நல்ல நிலம் காத்துக்கிடக்கு... டிஆர்ஓவ மீற ஏலாது... மீறினா ஒருத்தருக்கும் பேமிட் இல்லாமல் போயிரும்... இந்தத் துண்ட விட்டுக்குடுத்திடு...''

''ஐயா... இத நான் ஆருக்கும் விட்டுக்குடுக்கிறதா இல்ல...''

பளிச்சிடும் வெம்பு வெயிலின் தகிப்பில், அந்த நிலத்தைச் சூழக்கிடந்த காட்டுப்பரப்பின் மீதும் பனைமரங்கள், வடலிகள் மீதும் கானல்நீர் அலைஅலையாக நகர்வதையும், வேட்டியும் சேட்டுமாக நிற்கும் வட்டவிதானையையும், எடுபிடிகள் ஒருபக்கமாக நிற்க, தனித்துக் கறுத்து வறண்ட உடம்பில் கோவணத்துண்டுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று வாதாடும் குமரப்பனின் உடல், கானல் நீரில் கோணிக்கோணித் துண்டுதுண்டாகச் சலனப்படுவதையும் தன் குத்தி வலிக்கும் கண்களுக்குள் சாத்திரியார் அம்மாள் கண்டாள். தான் ஏமாற்றப் பட்டுவிட்டதை உணர்ந்து கோபத்திலும் அவமானத்திலும் குமரப்பனின் உடலும் காற்றில் மிதக்கும் கோவணத்துண்டும் நடுங்குவதை சாத்திரியார் அம்மாள் தன் கண்களுக்குள் உணர்ந்தாள். இயலாமையில் ஆவேசமும் மூர்க்கமும் கொண்ட குமரப்பன் காட்டுக்கத்தியைக் கண்டபடி காற்றில் வீசுவதையும் உழைத்து முறுக்கேறிய அவன் உடல் வலிமைக்குப் பயந்து ஒதுங்கிநிற்கும் வட்டவிதானையையும் அவரது எடுபிடிகளையும் வெயில்பட்டு ஒளிரும் குமரப்பனின் காட்டுக்கத்தியின் கூர்விளிம்புடன் நினைத்துப்பார்த்தாள் சாத்திரியார் அம்மாள். கொதிப்பேறிய வெயிலில் குறுக்குவாக்காகக் கத்தியைக் காற்றில் அங்குமிங்கும் வீசியபடி தம்மை நோக்கிவரும் குமரப்பனைத் தடுக்க வழியின்றி வட்டவிதானையின் எடுபிடிகள் நழுவி விலக, சட்டென்று குனிந்த வட்டவிதானை, குமரப்பன் வெட்டிப்போட்டிருந்த வாகைக்கதியாலை உருவி காற்றில் வேகமாக விசிறுவதையும் ''ஷக்'' என்ற முனகலுடன் குமரப்பன் கெட்டியான செம்பாட்டு நிலத்தில் முகம் குத்தி விழுவதையும், சாத்திரியார் அம்மாள் பதற்றத்துடன் வட்டவிதானையின் கையிலிருக்கும் வாகைக்கதியாலின் மொக்குகளுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். குப்புற விழுந்த குமரப்பன் வாயாலும் மூக்காலும் விட்ட மூச்சுக்காற்றில் மணலும் தூசியும் விலகி கெட்டியான செம்பாட்டுத்தரை தெரிவதையும் அவன் மூச்சுக்காற்றில் எழுந்த புழுதியும் சிறுதுகள் கஞ்சல்களும் அவன் திறந்த விழிகளுக்குள்ளும் முகத்திலும் படிந்துகிடக்க, வியர்வையில் நனைந்து பேச்சு மூச்சற்றுக்கிடக்கும் குமரப்பனின் உடலைப் பார்த்துக்கொண்டிருந்தாள் சாத்திரியார் அம்மாள். தூரமாக விலகிக்கிடந்தது காட்டுக்கத்தி.

''டேய் மலுவா தள்ளி நிண்டு பிறட்டிப்பார்...''

''அம்மாச்சி... செத்துப் போயிட்டான்...''

''மரத்தில தொங்கிற பொட்டலத்துக்க என்ன கிடக்கெண்டு பார்...''

''பொங்கல் இருக்கு அம்மாச்சி...''

''கொண்டாந்து அவன்ட வாய்க்க தீத்தி... விரலால தொண்டைக்குள்ள தள்ளி... வாய்க்க தண்ணிய ஊத்திப்போட்டு வா...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகை போல் மூடிய மாமரங்கள் கொண்ட வட்டவிதானையின் முற்றத்தில் பெரிய தாச்சியில் கொதிக்கும் ஆட்டிறைச்சியும் அண்டாவில் அவியும் சோத்து மணமும் ஊர் நாய்கள் முழுவதையும் அங்கு கொண்டுவந்துவிட்டிருந்தன. அதிக இரைச்சலும் புகையும் கக்கி வீதியில் திரியும் அரச பச்சை நிற ஜீப்புகளும் பிலியடி வீதியில் நின்றிருக்க உள்நாட்டு வெளிநாட்டுச் சாராயப் போத்தல்களின் சத்தமும் கேட்டுக்கொண்டிருக்க, விருந்தும் அமர்க்களமுமாக இருக்கும் அந்த முற்றத்தையும் முற்றத்தில் அங்குமிங்கும் நடந்துசெல்லும் வட்டவிதானை அம்மாச்சியின் மனிசி சித்தியையும் எடுபிடிகளின் மனைவிமார்களையும் பார்த்தபடி இருந்தாள் சாத்திரியார் அம்மாள்.

''வட்டவிதானை, குமரப்பன் எப்பிடிச் செத்தான்...''

''பொங்கல் விக்கிச் செத்தான் ஐயா...''

''ம்...''

அந்த வட்டவிதானையின் பிள்ளை ரூபத்தில் திரும்பவும் தனக்குத் தொல்லை வந்துவிட்டதோ என சாத்திரியார் அம்மாள் பயந்தாள். குமரப்பனை இழந்தபின் சாத்திரியார் அம்மாள் இந்த நிலத்திற்குத் திரும்பவும் தந்தையுடன், கையில் சாரியில் அள்ளி முடித்த துணிமூட்டையுடன் துவரங்காட்டு மலை ஏறிக் காட்டு வழிப்பாதை ஊடாக கன்னியாவிலிருந்து வந்துசேர்ந்ததை நினைத்துப்பார்த்தாள். தந்தையின் சாத்திரத் தொழிலும் வைத்தியத் தொழிலும் தனக்கும் தந்தைக்கும் ஆதாரமாக இருந்ததைத் துருத்தித்தெரியும் வறண்ட விலா எலும்புகளும் புடைத்துத் தெரியும் கழுத்து எலும்புகளும் உருத்திராட்ச மாலையும் இடுப்பில் நரைத்துப் போன வெள்ளைத்துண்டு வேட்டியுமாகக் குப்பை மேடுகளில் மூலிகையும் காடுகளுக்குள் மரப்பட்டையும் தேடி அலையும் தந்தையின் முகத்தில் பட்டையாக இருக்கும் திருநீற்றுப் பூச்சுடன் நினைத்துப்பார்த்தாள். தந்தையையும் இழந்தபின் தனிமையில் பயத்துடன் தூக்கமின்றித் தவித்துக் கழிந்த இரவுகளை ஆந்தை அலறும் ஓசையுடன் நினைத்துப்பார்த்தாள் சாத்திரியார் அம்மாள். தந்தையை இழந்து தவித்துக்கிடந்த பகல் பொழுதொன்றில்தான், முதல்முதலாக ஒரு காப்பிலிக் குடும்பம் அந்த வளவுக்குள் குடிசைபோட்டுத் தங்க இடம் கேட்டுவந்ததையும் கையில் உதடுகள் தடித்த கறுத்த குழந்தையுடன், கறுத்த தடித்த உடலும் பெரிய பூப்போட்ட கவுணும் அணிந்திருந்த ஒரு பெண்ணும் ஆணும் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டபோது, தன் பயத்தையும் தனிமையையும் போக்கும் என்றுதான் சம்மதம் தெரிவித்ததையும் பின் அது தனக்கு வருமானமாக ஆகிப்போனதையும் சாத்திரியார் அம்மாள் நினைத்துப்பார்த்தாள். பின் எத்தனையோ குடும்பங்களும் முகங்களும் இந்த வளவுக்குள் வந்து உறவாடிச் சென்றுவிட்டன. சில முகங்கள் நினைவிலிருந்து மறைந்தும் போய்விட்டன. சில முகங்கள் இங்கிருந்து சுடலைக்கும் போயின. ஆனாலும் அந்த வளவுக்குள் புதுப்புது முகங்கள் தோன்றியபடிதான் இருந்தன என்று சாத்திரியார் அம்மாள் நினைத்துக்கொண்டாள். அந்த வளவுக்குள் அவ்வப்பொழுது பிரச்சனைகள் தோன்றும்போது, தன் அதிகாரத்தையும் காளியின் பயத்தையும் காட்டி அனைத்தையும் தன் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்திருக்கின்றாள். இப்படி குடிசையை எரிக்கும் அளவுக்கு அந்த வளவுக்குள் பிரச்சினை வளர்ந்துநின்றதில்லை. அந்தக் குடும்பத்துக்கு இடம்கொடுத்துத் தனக்கும் அந்த வளவுக்குள் இருப்பவர்களுக்கும் பிரச்சினையைக் கொண்டுவந்துவிட்டேனே என மனம்குழம்பித் தவித்தபடி இருந்தாள் சாத்திரியார் அம்மாள்.

''காளி ஆச்சி...''

''என்ன...''

கப்பில் சாய்ந்து கண்கள் மூடியபடியிருந்த சாத்திரியார் அம்மாளின் கண்கள் திறந்தபோது நெருப்புத்துண்டங்கள்போல சிவந்திருந்த கண்களைக் கண்டு பெத்தவன் பதறி பின்வாங்கிநின்றான். தள்ளுவண்டிக்கார மாமி கிட்டவரும்போது வீசும் கஞ்சா மணம் சாத்திரியார் அம்மாளிலும் வீசுவதை பெத்தவன் உணர்ந்தான்.

''அம்மா நேந்து கட்ட பத்துச்சதம் தந்தவ...''

''மேடையில வைச்சிற்று... கதவுக்கு பின்னால இடியப்பச் சட்டியும் தட்டும் இருக்கு, எடுத்துக் கொண்டே கொம்மாட்டக் குடு...''

புது வெள்ளிச்சட்டியின் மினுக்கம் கண்களுக்குள் ஒளிர பெத்தவன் கதவு இடுக்கு நோக்கிப் பரபரப்பாகப் போனான். கறுத்துப் பிடியில்லாத பழைய சட்டியும் புதுப் பனைமட்டை நாரில் இழைத்த இடியப்பத் தட்டுகளும் இருப்பதைக்கண்டு பெத்தவன் தயங்கிநின்றான். திரும்பி சாத்திரியார் அம்மாளைப் பார்த்தான்.

''அதைத்தான் எடுத்திற்றுப் போ...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.6

''கீழ வையண்டா...''

''இல்ல... நீ ஊத்து...''

முழங்கைகள் கடுக்க, சருவப் பானையின் விளிம்புகள் விரல்நுனிகளைத் துண்டாக அறுத்துவிடுவதுபோல அழுத்திக் கொண்டிருக்க, தமக்கை சருவப்பானையிலிருந்து தண்ணீரை ஜொக்கில் அள்ளிப் புதுக்கூரையின் மீது எத்துவதற்கு ஏதுவாக பெத்தவன் கூனுன்டபடி அடிமேலடிவைத்து சருவப்பானையைச் சுமந்தபடி நகர்ந்துகொண்டிருந்தான். தன்னைச் சூழ, விட்டுவிட்டுத் தொடர்ச்சியாக இரைந்துகொண்டிருக்கும் சில்வண்டின் சத்தத்தில் எரிச்சல்பட்டாலும் தமக்கை கூரை மீது எத்தும் தண்ணீரில் சிதறும் முன்னிரவின் நிலவொளியையும் சம்மாட்டியாரின் மெத்தை வீட்டின் மீது முழுதாகப் படிந்த நிலவொளியில் மினுக்கம் காட்டும் வீட்டையும் பார்த்தபடி பெத்தவன் நகர்ந்துபோனான். சருவப்பானைக்குள் தமக்கையின் ஜொக் உராயும் ஓசையையும் தன் கைகளில் சிந்தும் நீரையும் கணித்தபடி பெத்தவன் நகர்ந்தான். சம்மாட்டியார் வீட்டின் உள்ளறைகள் இருண்டு கிடப்பதை பெத்தவன் கண்டான். கடும் சிவப்பு நிறத்தில் சம்மாட்டியாரின் மெத்தை வீட்டு முகப்பு வளைவுகளும் அதற்குக் கீழே ரோஸ் பெயின்ட் அடித்த தாமரைப்பூக்களும் பெத்தவன் திரும்பியதும் மறைந்துவிடும். பாதிரி மரத்தின் இருள்படிந்த பெரிய இலைகளின்மீது இருக்கும் வெள்ளைப்பூக்களும்கூட அவன் கண்ணில் படாதபடி இருள் போர்த்திக்கிடந்தன. கள்ளுத்தவறணையில் டேஸ்ட் பொரியல் விற்கும் சுக்குறுநாயர் கக்கத்தில் இடுக்கிய வெள்ளைநிற பெயின்ட் உதிர்ந்து கறல்தகரம் தெரியும் பேசினுடன் தன் கயர் படிந்த இருளடைந்த வேட்டியில், சாத்திரியார் வளவுக் கடப்புக்குள்ளால் வந்துவிட்டால் பெரும்பாலும் அந்த வளவுக்குள்ளிருக்கிற எல்லோரும் வந்துவிட்டதாக அர்த்தம் எனப் பெத்தவன் புரிந்து வைத்திருந்தான். அப்படி அந்த சாத்திரியார் வளவு மனிதர்கள் திரும்பிவந்துவிட்டால் தாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக பெத்தவன் நம்பினான். யக்கடையான் வீட்டு வாத்துக்கள் சுரி எழுப்பும் கிணற்றடியில், மங்குஸ்தான் மரத்துக்குக் கீழ் வைத்து சாத்திரியார் அம்மாள் கள்ளுத்தவறணை அம்மாச்சியிடமும் கள்ளுத்தவறணை அம்மாச்சியிடம் சாத்திரியார் அம்மாளும் மாறி மாறி சத்தியம் செய்தபின் கள்ளுத்தவறணை அம்மாச்சி சொட் கன்னை கையிலும் சாக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிலைக் கக்கத்திலும் இடுக்கிக்கொண்டு போனபின், கள்ளுத்தவறணை அம்மாச்சி சாப்பிடுவதற்கு வந்தாலும் இரவில் சொட் கன்னுடன் அங்கு தங்குவதில்லை என்ற நினைப்பு பெத்தவனை பயத்தில் கொடுகவைத்தது. இப்போதெல்லாம் படுக்கப்போகும்போது அம்மா ஈரச்சாக்கை நனைத்துக் கூரையில்போட, தானும் தமக்கையும் கூரைமீது தண்ணீர் ஊற்றுவது ஒரு வேலையாகிப் போய்விட்டது பெத்தவனுக்கு எரிச்சலூட்டியது. முழங்கைகள் கடுக்க இருளில் பின்புறமாகத் தண்ணீர்ச்சருவத்துடன் நகரும்போது தன் கால்கள் ஈரத்தை உணர்ந்தால் குடிலின் அந்தம் வந்துவிடும் என்ற நினைப்புடன் பெத்தவன் நகர்ந்தான். குடிலின் அந்தம் நெருங்கும்முன் குடிலை நோக்கிச் சரிந்துகிடக்கும் சவண்ட முருங்கைக்கெந்து வரும் என பெத்தவன் ஊகித்த கணம் தன் பிடரியில் முருங்கைக்கெந்தின் மொக்கு அண்டுவதை பெத்தவன் உணர்ந்தான். பின்புறம் திரும்பாமலே பெத்தவன் குனிந்து ஊர்ந்துவந்து நிமிர்ந்தபோது தமக்கை முருங்கைக்கெந்தில் ஒரு கையை வைத்தபடி தலையைச் சாய்த்து நகர்ந்துவருவதைக் கண்டான். தன் குதி சகதியில் அமிழ்வதுபோல இருந்தபோது பெத்தவன் நிமிர்ந்தான். மீண்டும் நிலவொளியில் சம்மாட்டியாரின் மெத்தை வீட்டு முகப்பு ஒளிர கிறவல் தெருவும் சாத்திரியார் வளவுக்கடப்பும் பெத்தவனுக்குத் தெரிந்தது.

''இப்பவும் இதுட்ட போறவங்கள் இருக்காங்களாடா...''

''இருக்கும்... ஆருக்குத் தெரியும்...''

வீதியில் வாடியை நோக்கிக் கதைத்துக்கொண்டுபோகும் அரவம் பெத்தவனுக்குக் கேட்டது. தலையில் பனையோலைத் தொப்பியும் கையில் துடுப்பும் பெரிய கேனும் சுமந்து இருவர் கடற்கரை நோக்கிப்போவது கடப்பின் இடைவெளிக்குள் தெரிந்தது. அவர்கள் கடப்பில் மறையவும் இழுத்துப்போர்த்திய நைலக்ஸ் சாரியும் உதட்டில் மினுக்கமுமாக ஜொலியக்கா கடப்பின் நடுவில் கடற்கரைப்பக்கமிருந்து வந்துநிற்பதை பெத்தவன் கண்டான். தன் சாரியை நகர்த்தவும் ஏற்றவும் வசதியாக இரண்டு கையையும் இடுப்பின் பின்புறம் வைத்து முன்னுக்குத் தள்ளிநிற்கும் ஜொலியக்காவின் இடுப்புமடிப்பு வெள்ளொளி மினுக்கமாகத் தெரிவதாக பெத்தவன் நினைத்துக்கொண்டான். சருவப்பானைக்குள் ஜொக்கின் சரசரப்புச் சத்தம் கேட்கவில்லையென பெத்தவன் நினைத்தபோது தலையில் சுரீரென்று வலித்து நங்க் என்ற சத்தத்தையும் பெத்தவன் கேட்டான். தலைக்கு மேலே உயர்த்திய கையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும் தமக்கையின் கருத்த முகத்தில் கடூரத்தை உணர்ந்த பெத்தவன் பின்வாங்கிநின்று சருவப்பானையுடன் உயர்த்திய கையில் தலையைச் சாய்த்து வலியைத் தடவினான்.

''வாய் பிளந்தது காணும், போய் சருவத்த கிணற்றடியில் வைச்சிற்று வா...''

கடப்படியில் நின்று தன் சாரியைச் சரிசெய்துகொண்ட ஜோலியக்கா, பிரதான வீதி நோக்கிப் பெரிய கல் வீடுகளிருக்கும் பக்கமாக நகர்ந்து, கடப்பின் செத்தை விளிம்பில் மறைந்துபோவதைத் திரும்பிப்பார்த்தபடி குடிலோரம் அகோரமாய்த் தன்னை அச்சுறுத்தும் தமக்கையின் உருவத்தைக் கவனித்தபடி இருளில் நகர்ந்து கிணற்றடி நோக்கி பெத்தவன் போனான்.

யக்கடையானின் குடிசையைத் தாண்டும்போது அவியும் வெடுக்கு மணத்தை நுகர்ந்ததால் யக்கடையானின் குடிசைப்பக்கம் பார்வையைப் போகவிட்டான். இடது பக்கக் குடில் மூலைக்குள் நெருப்பு எரிகின்ற வெளிச்சம் கிடுகு இடைவெளிக்குள்ளால் சிவப்பும் மஞ்சளுமாக விட்டுவிட்டு நிறம் மங்கிமங்கி ஒளிர்வதையும் அவியும் வெடுக்கு நாத்தம் விட்டுவிட்டு வீரியமாகவும் மாறி மாறி வந்து தன் நாசியை உறுத்துவதையும் பெத்தவன் உணர்ந்தான்.

''இந்த சீனக்கார யக்கடையான்... இது வழிய பீ தின்ற பெட்டி ஆமைக் குஞ்சுகளையும் விட்டுவைக்கிறான் இல்ல, அவிச்சு திண்டு போடுறான் ஆச்சி...''

மகிழ மர நிழலின் கீழ் பகல் பொழுதொன்றில் டேஸ்ட் கடை சுக்குறுநாயர் சாத்திரியார் அம்மாளிடம் கோள்மூட்டி வைத்தது பெத்தவனுக்கு ஞாபகம் வந்தது. தன் பின்பக்கமாய் யாரோ ஓடிவரும் காலடிச்சத்தமும் படீர்படீரென்ற துணியின் இடறல் சத்தமும் கேட்டு பெத்தவன் திரும்பிப்பார்த்தான். குதிவரை நீண்ட சோட்டி போன்ற தோப்பரா நீளச்சட்டை அணிந்து, அது இடற இடற, கள்ளுத்தவறணையில் டேஸ்ட் பொரியல் விற்கிற சுக்குறுநாயரின் மகள் கௌரி தன்னை நோக்கி ஓடிவருவதைக் கண்டான். தன் மீது நெருக்கமாக உரசி நின்ற கௌரியின் சட்டையிலிருந்து எண்ணை பிசுக்கு மணம் அடிப்பதை பெத்தவனின் நாசி உணர்ந்தது. தன் இடது உள்ளங்கையை விரித்து ஏதோ இரண்டு கரித்துண்டுகளைக் கைக்குள் வைத்துப் பொத்திவிட்டுத் தன் தமக்கை நின்ற பக்கமாக கௌரி ஓடுவதை பெத்தவன் பார்த்தபடியிருந்தான். கௌரி கைக்குள் பொத்திவிட்டுப் போனது பொரித்த இரண்டு பிலாக்கொட்டை பாதிகள் என்பதை பெத்தவன் உணர்ந்தான். சுக்குறுநாயர் விற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிச்சப் பொரியல் என நினைத்த பெத்தவன் வாய்க்குள்போட்டு சப்பப் பயந்தான். சில வேளை மாப்பசையாக இருக்கக்கூடும், சில வேளை புளிப்பும் குமட்டலுமாக சூம்பின கொட்டையாகக்கூட இருக்கும் என நினைத்தபடி கிணற்றடி நோக்கிப்போனான் பெத்தவன்.

கிணற்றடியில் சுரியின் வெடுக்கு மணம் அடிப்பதை பெத்தவன் உணர்ந்தான். பகலில் சலசலப்பான இரைச்சலுடன் தட்டையான மஞ்சள்நிற உதடுகளிலிருந்து கரியநிற சுரி வழிய நாக்கிளியாம்புழு தேடும் யக்கடையானின் வாத்துக்கள் பெத்தவன் நினைவுக்கு வந்தன. யக்கடையான் குடிசை தாழ்வாரத்தில் பிரப்பம் கூடைக்குள் வாத்துக்கள் புறுபுறுப்பது தனக்குக் கேட்பதுபோல் இருக்கிறது என பெத்தவன் நினைத்துக்கொண்டான். கறுத்த சகதி போல் தேங்கிக் கிடந்த தண்ணீரில் நிலவுத்துண்டு வெண்மையாகக் கண்ணைக் கூசும்படி பிரகாசித்துக் கிடப்பதைக் கண்டான். நிலவுத்துண்டத்தைச் சிதைக்க விரும்பாத பெத்தவன் கிணற்றுத் தொட்டிக்கட்டில் அமர்ந்து உள்ளதுக்குள் சூம்பலாக, தன் நகத்தை பதித்து அழுத்தும் போது நசிந்த ஒரு பிலாக்கொட்டையை வாய்க்குள்போட்டுக் கடித்தான். தான் நினைத்ததுபோல் இல்லாமல் பிலாக்கொட்டை மாப்பசையுடன் தன் கொடுப்புக்குள் கரைவதை ரசித்துக்கொண்டிருந்தான். கல்லால் அடிபட்ட நாய் ஒன்று ஊளையிட்டு அடங்கிய சத்தத்தைக் கேட்டபடி, இரண்டாவது பிலாக்கொட்டையும் மாப்பசையுடன் தன் கொடுப்புக்குள் கரைவதை ரசித்தபடியிருந்தான்.

கல்லால் அடிவாங்கிய குறட்டை நாய் ஒன்று அணுக்கமாக வீல் என்று அலறுவது போன்ற சத்தத்தைத் தூரத்தே கேட்ட பெத்தவன், உடல் சிலிர்க்க கிணற்றுக்கட்டிலிருந்து வேகமாக எழுந்து நின்றான். தண்ணீரில் ஊறி மண்ணும் தும்பும் கையில் சொரசொரப்பாகக் குத்தும் தேடாக் கயிற்றைப் பிடித்து, வாய் கிழிந்து சுருண்டுகிடந்த தகரவாளியைக் கிணற்றுக்கட்டுடன் உரசியபடி கிணற்றுக்குள் இறக்கினான். வாளி தண்ணீரில் முட்டியபோது மீண்டும் இரைச்சலாக அந்தச் சத்தம் எழும்பியது. தொடர்ந்து நாய்களின் குரைப்பொலியையும் மனிதக் குரல்களின் அலறல்களையும் பெத்தவன் கேட்டான். உடல் குளிரில் சிலிர்த்து நடுங்க, பயத்தில் நெஞ்சுக்கூடு வேகமாகப் படபடப்பதை பெத்தவன் உணர்ந்தான். வேகமாகக் கிணற்றுக்குள்ளிருந்து வாளியை வெளியே இழுக்க முனைந்தான். வெளியே இன்னும் சலசலப்பான கூச்சல்களும் கத்தும் கூவல்களும் கேட்டபடியிருந்தன. பெத்தவன் தன்னுணர்வின்றி பயத்தில் தன் கால்கள் வெடவெடத்து நடுங்கித் தன் உடல் பலமிழந்து போவதை உணர்ந்தான். கிணற்றுக்கட்டுடன் உராய்ந்தபடி வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளியிலிருந்த நீரைப் பானைக்குள் வேகமாக ஊற்றிய பெத்தவன், சருவப்பானையைத் தூக்கியபடி தன் குடில் நோக்கி ஓடினான். சருவப் பானையிலிருந்த தண்ணீர் தன்னைத் திரும்பத்திரும்ப நனைத்து குளிரப்பண்ணுவதையும் யக்கடையான் குடிலிலிருந்து வரும் அவிந்த வெடுக்கு மணம் தன்னை வீரியமாகத் தாக்குவதையும் உணர்ந்தபடி உடல் கொடுகிச் சிலிர்க்க தன் குடிசையை நோக்கி ஓடினான். குடிலை நெருங்கும்போது ஊத்தை வேட்டித்துண்டு காற்றில் பறக்க, டேஸ்ட் கடை சுக்குறுநாயர் சாத்திரியார் வளவுக்குள்ளிருந்து கடப்புத் தாண்டி வீதிக்கு ஓடுவதையும் பின்னே கௌரி நீண்ட தோப்ரா சட்டை இடற ஓடுவதையும் பெத்தவன் கண்டான். அலறல் ஒலி ஒழுங்கையின் முன்பகுதியில் பிரதான வீதியை ஒட்டியிருக்கும் கல்வீட்டுப் பக்கத்திலிருந்து வருகிறது என்பதை உணர்ந்த பெத்தவன், சருவப்பானையைக் குடிலோரம் வைத்துவிட்டு ஒழுங்கையை நோக்கி ஓடினான்.

தூரத்தே விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்த அலறல் ஒப்பாரியாக மாறிவிட்டிருப்பதை பெத்தவன் உணர்ந்தான். ஒழுங்கையில் நிலவொளியும் இருளும் கலந்து கிடப்பதுபோல் குசுகுசுப்பும் கதைக்கும் ஓசையும் கலந்து பயமுறுத்துவதை பெத்தவன் உணர்ந்தான். சாத்திரியார் வளவுக் கடப்புக்கு நட்ட இரண்டு உருண்டையான காட்டு மரங்களுக்கு நடுவில் பெத்தவன் வந்து நின்றபோது, சாத்திரியார் வளவுச் சனம் ஒழுங்கையில் சிதறி நிற்பதைக் கண்டான். டேஸ்ட் கடை சுக்குறுநாயர் கள்ளுத்தவறணை அம்மாச்சி வீட்டு வாசல் வரை போய் பின் முன் நகர்ந்து, முன் நகர்வது போல பாசாங்கு காட்டியபடி நிற்பதை பெத்தவன் கண்டான்.

மூத்தம்மாச்சி வீட்டு வளவுக்குள்ளிருந்துதான் ஒப்பாரியும் கூச்சலும் வருவதை பெத்தவன் உணர்ந்தபோது வீதியில் டெக்சி ஒன்றின் உறுமல் ஒலியை பெத்தவன் கேட்டான்.

''ராசைய்யா அண்ணன்ட டெக்சி வந்திற்று... கெதியா தூக்கிற்று வாங்கடா...''

டேஸ்ட் கடை சுக்குறுநாயர் வேகமாகத் தம்மை நோக்கி மூச்சுவாங்க திரும்பி வருவதை பெத்தவன் கண்டான்.

''ராசநாதன் TDT பவுடரை உருட்டி விழுங்கீற்றானாம்...''

மூத்தம்மாச்சி வீட்டில் தங்கி பூவாட காப்பென்டர் மாலுக்கு காப்பென்டர் வேலை பழகவரும் சுருள் முடியும் கறுத்த உருவமும் சிரித்த முகமும் கொண்ட ராசநாதனை பெத்தவன் தன் நினைவுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவர முனைந்தான். பூவாவின் காப்பென்டர் மாலுக்குள் பலகையைச் சீவும் சீவுளியின் இரைச்சலா, ராசநாதன் தன் வாயால்விடும் மூச்சுச்சத்தமா என ஊகிக்க முடியாதிருப்பதைக் கேட்டபடி நின்றது பெத்தவனுக்கு ஞாபகம் வந்தது. குட்டையான சட்டை அணிந்து பூனைக் கண்களும் நல்ல சிவப்பு நிறமுமாக இருக்கும் பூவாவின் மகள் றோஸ்மேரியுடன் ராசநாதன் கதைத்துக் கொண்டு நிற்பதை பெத்தவன் தான் பல தடவை கண்டிருப்பதை ஞாபகப்படுத்திப்பார்த்தான்.

''அவன் வெறும் மொக்கன்... டெக்சிக்க உள்ள இருந்து கொண்டு கால் வெளியில இருக்கிறது தெரியாம டெக்சி கதவ மூடின வெறும் மொக்கன்... இந்த பெட்டைக்கு விசர்...''

தன் பெருத்த சரீரத்தை உத்தி உத்தி அசைத்து நிலவில் சாத்திரியார் அம்மாள் பூவாவின் காப்பென்டர் மால் பக்கம் போவதை பெத்தவன் பார்த்தபடி நின்றான். பூவாவின் காப்பென்டர் மால் பக்கமிருந்து றோஸ்மேரி அக்காவின் சத்தமான விசும்பலும் பூவாவின் அதட்டும் குரலும் பெத்தவனுக்குக் கேட்டன.

## 1.7

ஜொலியக்கா உதயனைத் துரத்தியபடி ஓடிக்கொண்டிருந்தாள். தனது தேசிய அடையாள அட்டையில் ஒன்பது இலக்கங்களுக்குப் பக்கத்தில் வாக்குரிமைக்கான V என்ற எழுத்து இல்லாது X என இருப்பது பற்றி ஜொலியக்கா கவலைப்படவில்லை. வகிடெடுத்துப் பின்னிப் பின்னி வெண்மொட்டையாகிப்போன தன் பின்மண்டையைப் பற்றியும் ஜொலியக்கா கவலைப்படவில்லை. வெம்மை தணிந்த போக்குவெயிலின் மஞ்சள் ஒளியை ரசித்தபடி உதயனைக் கடற்கரை நோக்கித் துரத்திக்கொண்டிருந்தாள் ஜொலியக்கா. தனது பிறப்பத்தாட்சிப் பத்திரத்தில் தந்தையின் பெயர், பாட்டனின் பெயர் என்ற இடங்களில் தெரியாது என இருப்பதால், தான் கள்ளத்தோணியாக இருப்பது பற்றியும் ஜொலியக்கா கவலைப்படவில்லை. தரையில் கால் புதைத்து மணல் தெறிக்க இடுப்பில் கட்டிய சாரத்தின் கீழ்ப்பகுதியைத் தன் பற்களுக்கிடையில் கவ்வியபடி ஓடிக்கொண்டிருக்கும் உதயனின் அகன்ற தோளையும் கெண்டைக்கால்களையும் ரசித்தபடி உதயனைத் துரத்திக் கொண்டிருந்தாள் ஜொலியக்கா.

''நேற்றுப் பெஞ்சமழைக்கு இண்டைக்கு முளைச்ச தகரப்பத்த... முளைச்சு மூனு இலவிடயில்ல... செத்தையயாடா கிளப்பிப் பார்க்கிறாய்... வடுவா...''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளை முடிக்கமுடியாத அளவுக்கு மூச்சுவாங்கி, எச்சில் கடைவாயில் வழிய, துரத்திக்கொண்டு ஓடவேண்டும் என்பதற்காகத் துரத்திக்கொண்டிருந்தாள் ஜொலியக்கா. சகட்டுமேனிக்கு வாயில் வந்ததை உளறியபடி உதயனைத் துரத்தி ஓடும் அவள் புத்தியோ உடம்போ அவள் கட்டுப்பாட்டில் இல்லாது தன்னிச்சையாக அங்குமிங்கும் உலாஞ்சின. தான் கட்டியிருக்கும் வெளிர் நீலநிற சாரிக்கு சேர்த்தியாகத் தான் அணிந்திருக்கும் குங்குமக்கலர் ரவுக்கை இல்லாதிருப்பது பற்றியும் ஜொலியக்கா கவலைப்படவில்லை. தன் உதட்டிலும் மார்பிலும் கன்னங்களிலும் தொடைகளிலும் நகங்கள் கீறியும் பற்கள் கடித்ததாலும் ஏற்பட்ட தழும்புகள் தன் வெள்ளை உடம்பெங்கும் கறுத்துப்போய்க்கிடப்பதைப் பார்க்கும் போது ஏற்புவலிவந்து இறந்திருந்தால் புதைத்த இடத்தில் புல்லும் முளைத்திருக்கும் என சாத்திரியார் அம்மாள் அடிக்கடி சொல்வது பற்றியும் ஜொலியக்கா கவலைப்படுவதில்லை. உதயன் அலைவாய்க் கரைக்குள் இறங்கி வடிகான் கடலுடன் கலக்கும் மதகைக்கடந்து ஓடத்தொடங்கியதும் ஜொலியக்கா நின்றாள். உயர எழுந்த கடலலைகள் மூர்க்கமாக இரைச்சலுடன் கரையில் மோதி, காற்றில் நீர்த்திவலைகள் விசிறியடிப்பதைப் பார்த்தபடி நின்றாள் ஜொலியக்கா. கண்ணுக்குத் தெரியும் தூரம்வரை அலைவாய்க்கரை முழுவதும் வெண்புகார் போல காற்றின் வேகத்தில் கடல் தண்ணீர் படர்ந்திருந்தது. தன் உதட்டில் கரிக்கும் உப்பை ஜொலியக்கா சுவைக்கத் தொடங்கினாள்.

''ம்ம்ம்ம்... ம்ம்ம்...''

அடங்கலான நீண்ட சங்கோசை கேட்க ஜொலியக்கா கடல் காற்றிலிருந்த உப்பைச் சுவைப்பதை விட்டுவிட்டுக் கடலை நோக்கினாள். காற்றின் வேகத்தில் கடல் தண்ணீர் படர்ந்திருந்த வெண்புகாருக்குள் அமிழ்ந்திருந்த கப்பலொன்று புகை கக்கியபடி கோணேசர்மலை நோக்கி ஊர்வதைக் கண்டாள். சில தினங்களாக இரவில் மின்குமிழ்கள் ஒளிர நின்றிருந்த கப்பல் உட்துறைமுகத்துக்குள் சரக்குகளை இறக்குவதற்காக நகரத் தொடங்கியிருந்தது.

பிரமாண்டமான மதில்களுக்குள் அடங்கிய பளிங்குமாளிகை, வெளிமுற்றம், தோட்டம் எங்கும் பனிப்பொழிவின் வெண்மை. கையுறையணிந்து தன் கைகளைப் பற்றியபடி வெள்ளைக்காரத் துரையான தன் தந்தை, கோட்சூட் அணிந்து சுங்கான் பிடித்தபடி கூடநடந்துவர, ஜொலியக்கா மிதப்பாக தூர தேசமொன்றில் நடந்துபோகிறாள். அங்கு இருக்கக்கூடிய தான் அனுபவித்திராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிரை, தன்னால் உணரமுடியவில்லை எனக் கவலைகொண்டாள் ஜொலியக்கா. ஜொலியக்காவின் நினைவுதெரிந்த சிறுபிராயத்தில் அவளது வீட்டில் நடந்த முதல் சாவு, அவளது மாமா சக்கு என்கிற சக்குணனுடையதாகவே இருந்தது. அப்போது அவளது குடும்பம் உட்துறைமுகத்தை அண்டிய பெரியகடைப்பகுதியில்தான் வசித்துவந்தது. அவர்களிருந்த பழங்கால வீட்டின் ஒருபக்க சுண்ணாம்புச் சுவர் இடிந்து விழுந்ததால் சக்குமாமா இறந்துபோனான். இடிபாடுகளுக்குள்ளிருந்து சக்குவை அயலவர்கள் இழுத்துப்போட்டபோது, சாரத்துடன் சலமும் மலமும் கழிந்து, வெண்ணிறத் தூசு படிந்த முகத்தில் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் வெண்ணிறத் தூசியையும் மீறிக்கொண்டு இரத்தம் கொப்பளித்துக்கொண்டிருந்தது இன்றும் ஜொலியக்காவின் நினைவில் இருந்துகொண்டேயிருக்கிறது. பின்னாட்களில் தாய், இருட்டுக்குள் களவெடுக்க ஒரு வீட்டினுள் புகுந்தபோது, வீட்டுக்காரர்கள் மூர்க்கமாகத் தாக்கியதால் சித்தம் பேதலித்துப்போன தாய், படுத்தபடுக்கையாகி வாய்புலம்பியபடியே இறந்துபோனபோதும், தூரதேசம் ஒன்றில் வெண்கையுறை அணிந்து, நீலவெண்ணிற உடுப்பு அணிந்து, பளிங்குமாளிகை ஒன்றில் நடப்பதான கனவே ஜொலியக்காவை உயிர்ப்புடன் வைத்திருந்தது. இருட்டுக்குள் கோரைப்பற்கள் தெரிய நாக்கைத் தொங்கப்போட்டபடி குந்தியிருந்த அல்சேசன் நாயைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு இடிந்த சுங்கக்கட்டிடம் ஒன்றினுள் வைத்து, நேவிக்காரன் ஒருவன் தன் இச்சையைத் தீர்த்துக்கொண்டபோதும் ரெயில்வே சிலிப்பர் கட்டைகளும் சல்லிக்கற்களும் முதுகை அண்டிப் பதம்பார்க்க, ரெயில்வே சிப்பந்தி ஒருவன், கிரீஸ் அப்பிய உடலுடன் தன் இச்சையைத் தீர்த்துக்கொண்டபோதும் அந்தக் கனவே ஜொலியக்காவை உயிருடன் நடமாட வைத்திருந்தது. ஆனால் சாகும்வரை அவளது பாட்டி, அவன், முதுகுப் புண்ணைக் காட்டி பிச்சை எடுக்கிற பீத்தல் பறங்கி என்றே திட்டிக்கொண்டிருந்தாள். கடும் குளிர்கால அதிகாலையொன்றில் தன் உள்ளொடுங்கிய கன்னங்கள், இன்னமும் உள்ளொடுங்கிக் கிடக்க, வாய்பிளந்து பாட்டி இறந்துகிடந்தபோதும் அந்தக் கனவே ஜொலியக்காவை அந்தத் துயரத்திலிருந்து மீட்டுக்கொண்டுவந்தது. தாய் ஏற்படுத்திய கனவில் மிதக்கவே ஜொலியக்கா எப்போதும் விரும்பினாள். கப்பல் கோணேசர்மலைக்குப் பின்னே மறையத் தொடங்கியபொழுது இருட்டிவிட்டது. ஜொலியக்கா குடிசைக்குத் திரும்பினாள்.

குடிசை வாசலில் டைனமைட் கையிலேயே வெடித்ததால் முழங்கையுடன் இரண்டு கைகளையும் ஒற்றைக் கண்ணையும் இழந்த மணிகண்டன் நிற்பதை ஜொலியக்கா கண்டாள். அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதட்டில் ஒட்டியபடி, உதட்டின் இரு அந்தங்களுக்கும் நகர்ந்து கொண்டிருந்தது பீடி. பீடி ஒரு அந்தத்துக்கு நகர்ந்ததும் மறு அந்த உதட்டில் புகை வெளியேறுவதும், பின் மறு அந்தம் என பீடித்துண்டு நகர்வதையும் ஜொலியக்கா பார்த்துக்கொண்டுநின்றாள். அவன் உதட்டிலிருந்து பீடியைப் பிடுங்கித் தன் உதட்டில் வைத்து ஆழமாக இழுத்து, உதட்டைக் கோணி புகையை வெளியேவிட்டாள் ஜொலியக்கா. மீண்டும் அவன் உதட்டில் பீடியைச் செருகிவிட்டுக் குடிலுக்குள் மறைந்துபோனாள் ஜொலியக்கா.

## 1.8

குளிர். கடும் குளிர். பெத்தவன் நடந்தான். காலை புலரத் தொடங்கியிருந்தது. அமுக்கரின் மெத்தை வீடு. குடிசைகள். மரங்கள். வீதி. கடல். எங்கும் சாம்பல் படிவாய்ப் பனிப்பொழிவு. பெத்தவன் கண்களுக்குள் ரசம் போன கண்ணாடியின் காட்சிகளாக இருந்தது புலர் காலை. தோளில் இடியப்ப வாளி கனதியாய் அழுத்தியது. தோளில் இறங்கும் இடியப்பச் சூடு இதமாக இருந்தது. பெத்தவன் கடற்கரை நோக்கி நடந்தான். கப்பலில் அணைக்கப்படாத ஒரே ஒரு மின்குமிழ். கடலிலிருந்து மங்கலாகக் கரையை நோக்கி மஞ்சள்நிற ஒளியை உமிழ்ந்துகொண்டிருந்தது. பெத்தவன் மீன்வாடியை அண்டிநின்றான். கடற்கரைக் குருத்து மணலில் கால் சில்லிட்டது. கிடுகு மட்டை வேய்ந்த மீன்வாடி பனியில் ஊறி இளகிக்கிடந்தது. எதையும் தொடாமலே பெத்தவனால் சில்லிடுதலை உணரமுடிந்தது.

''சீயா....''

முக்காடிட்ட சீயா துணிக்குவியலாய் எட்டிப் பார்த்தார். மீன்வாடி உள்ளே இருண்டுகிடந்தது. துணிக்குவியலுடன் சீயா வாடிக்குள் மறைந்துபோனார். மீண்டும் துணிக்குவியலுடன் சீயா வெளியே வந்தபோது கையில் பனையோலைக்கடகம் இருந்தது. நைந்து பழையதாகிக் கோணிக்கிடந்தது பனையோலைக்கடகம்.

''ரெண்டு... நாலு...'' பெத்தவன் தொடங்க சீயா தொடர்ந்தார் ''கயாய்... அட்டாய்... தாயாய்...''

பனியில் ஊறிக்கிடந்த தோணிகளையும் வல்லங்களையும் தாண்டியும் மீன் வாடிகளில் நின்றும் பெத்தவன் நடந்தான். அடம்பன் கொடியின் தடித்த கரும்பசிய இலைகளில் பனி, நீராகத் தேங்கிக்கிடந்தது. இராவணன்மீசையின் கூர் முனைகளில் பனித்துளிகள் பூத்துக்கிடந்தன. பெத்தவன் அடம்பன் கொடிகளின் தடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைகள் உடையும்படி மிதித்து நடந்தான். கால்கள் ஈரமாகிச் சில்லிட, பெத்தவன் கடற்கரைப்பள்ளத்திலிருந்து விளையாட்டுத் திடலுக்கு ஏறி வந்தான். தோளில் இடியப்ப வாளியின் கனதி குறைந்திருந்தது. பெத்தவன் நடக்கும்போது துடையில் எத்துப்பட்ட ரூபாய் நாணயங்கள் கால்சட்டைப் பக்கட்டுக்குள் கலகலத்துக் கொண்டு வந்தன. அணைக்கப்படாத சூழ்லாம்பின் சுடர் காற்றில் அசைய பெத்தவனுக்குப் பின்னே தோணி ஒன்று கரைதட்டியது. கடற்கரையிலிருந்து வைரவர் கோவிலடியை அண்டி, விளையாட்டுத் திடலின் பசிய புற்தரையை ஊடறுத்துப்போகும் ஒற்றையடிப்பாதையில் பெத்தவன் நடந்தான். விளையாட்டுத் திடலின் ஓரமாகப் புதிதாய் முளைத்த ஆணை நெருஞ்சிகள் சிறிய வெள்ளைநிறக் குழாய்ப்பூக்களுடன் கிடந்தன. கழிப்புக்கு வெட்டிய தார்பூசணியின் மீது பூசிய குங்குமம் இரத்தச்சிகப்பாய் அச்சுறுத்தியதால் பெத்தவன் விலகி நடந்தான். வைரவர் கோவிலடி வெறிச்சோடிக்கிடந்தது. போன வெள்ளிக்கிழமை பேயாடிப் பந்தல் பிரித்த தடம் எதுவும் இல்லாது வெறுமையாகக் கிடந்தது வைரவர் கோவில். ஆல மரத்தடி மூத்தம்மாச்சியின் குடுமி அன்றைய இரவின் இருளில் ஆடிக்கொண்டிருக்க, பந்தங்களின் வெளிச்சத்தில் அவர் உதடுகள் ஓயாது மந்திரத்தை உச்சரித்துக் கொண்டேயிருந்தன. யோகராசா அண்ணனின் கையிலிருந்த உடுக்கை இடைவிடாது உறுமிக்கொண்டேயிருந்தது. உடுக்கின் உறுமலான அதிர்வில் தன் கால்கள் தன்னிச்சையின்றி வெடவெடக்க, காலுடன் சேர்ந்து உடம்பும் அதிர்ந்ததை பெத்தவன் நினைத்துப்பார்த்தான். தனக்கும் உரு ஏறி சாமி ஆடிவிடுவோமோ எனப் பயந்தது பெத்தவனுக்கு நினைவுக்கு வந்தது. பக்கத்திலிருந்த வதனி அக்கா காணாமல் போயிருந்தாள். மூத்திரம் முட்டிக்கொண்டுவந்தபோது மூத்தண்ணன் வீட்டுப்பக்கமிருந்து உய்ய்ய்... என்ற சீக்கை ஒலிபோல் சத்தம் வந்ததும் பின் மூத்தண்ணன் வேலி அடைப்பைத்தாண்டி குரங்குபோல் பாய்ந்து வைரவர் சடங்கு நடக்கும் இடத்துக்கு வந்ததும் நினைவுக்கு வந்தது. மூத்தண்ணனுக்கு ஆஞ்சநேயர் வாலாயமாம். அருகிலிருந்த செவ்விளநீர் மரத்தில் தாவி ஏறி, வாயால் செவ்விளநீரைப் பிடுங்கிக்கொண்டுவந்து, மணலில் குந்தியிருந்து வாயாலேயே மட்டையை உரித்து விரல்களால் இளநீரின் கண்களைப் பொத்து இளநீரைக் குடித்தார். காணி எல்லைப் பிரச்சினையால், செட்டியாரின் மகன் தலையில் அடித்ததால், மண்டை உடைந்து போட்டிருந்த கட்டிலிருந்து மூத்தண்ணனுக்கு இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. தனக்கு மூத்திரம் முட்டிக்கொண்டுவந்ததால், தான் அங்கிருந்து எழும்பி ஓடியது பெத்தவனுக்கு ஞாபகம் வந்தது. செட்டியாரின் பிள்ளைகள் மூத்தண்ணனுக்கு மருமகன்கள் என கள்ளுத்தவறணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாச்சி சொன்னது பெத்தவனுக்கு ஞாபகமிருந்தது. வைரவர் கோயில் தாண்டி வந்ததும் பெத்தவன் மூத்தம்மாச்சியின் மரவள்ளித்தோட்டத்தை அண்டி நின்றான். சின்னச் சின்ன பச்சைக் குடைகள் விரிந்ததும் விரியாததும்போல புதிதாக நட்ட மரவள்ளித்தண்டுகளை மூடி இலைகள் துளிர்த்துக் கிடந்ததைப் பார்த்தபடி பெத்தவன் வேலி அடைப்பை அண்டி நின்றான்.

''பெத்தவா...''

மூத்தம்மாச்சியின் குரலில் அரண்டுபோன பெத்தவன் வேலி அடைப்பைவிட்டு விலகி நின்றான். மூத்தம்மாச்சி கள்ளுத்தவறணை அம்மாச்சியின் அண்ணன் என்பது பெத்தவனுக்குத் தெரியும்.

''பெத்தவா... பின்னேரம் மரவள்ளிக்குத் தண்ணி ஊத்தவேணும்... வா...''

''சரி அப்புச்சி... வாரன்''

''கள்ளமடிச்சு ஒழிச்சியெண்டா கட்டிவச்சு தோல உரிச்சுப் போடுவன் வடுவா...''

சில சத நாணயங்கள் பெத்தவனின் கண்களுக்கு முன்னே தெரிய சிரித்த முகத்துடன் பெத்தவன் நகர்ந்தான். இடியப்பம் எனக் குரல் எடுத்துக் கத்த நினைத்த பெத்தவன் நின்றான். சின்னண்ணன் வீட்டுக் கடப்பில் சூட்டியக்கா இடுப்பில் கைவைத்துத் தன்னையே முறைத்துப் பார்த்தபடி நிற்பதைக் கண்டான். கல்லாலான ஓட்டு வீடுகள் நிறைந்த ஊருக்குள் பாதி கல் அடைப்பும் மீதி தகர அடைப்பும் ஓலைக்கூரையும் கொண்ட வீடு அது.

''என்ன பெத்தவா... எங்கட இடியப்ப யாவாரத்துக்கு போட்டியா நீயும் வந்திற்றாய் போல...''

''இல்ல... என்ற பெயர் பெத்தவன் இல்ல...''

''பின்ன...''

''அரியரெத்தினம்... அரியரெத்தினம், அப்பிடித்தான் பள்ளிக்கூட டாப்பில இருக்கு... குண்டுமணியக்கா டீச்சர் அப்பிடித்தான் டாப்புக் கூப்பிடுறவ...''

''அப்ப நான் உன்ன அரியம் அத்தான் எண்டு கூப்பிடவா...''

அரியம் சூட்டியக்காவைக் கடந்துபோனான். மூத்தம்மாச்சி வீட்டுக்கும் சின்னண்ணன் வீட்டுக்கும் இடையிலிருந்த திடலில் கூர் முகடு போட்டு, சணலாலான நெல்லுச்சாக்குகளைப் பிரித்து, பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்குகளை ஒன்றோடொன்று சேர்த்து, சணலால் கோணி ஊசி கொண்டு சேர்த்துத் தைத்த படங்கு கட்டியிருந்தது. படங்குக்குக்கீழ் கொட்டியிருந்த வெங்காயத்தின் மணம் காற்றில் கனதியாகப் பரவியிருந்தது. வெங்காயத்திலிருந்து அறுத்த தாரின் அழுகல் மணமும் சேர்ந்திருந்தது. விடியவிடிய வெங்காய வெட்டு நடந்திருந்தது. வேறுவேறு குவியலாய் வெங்காயங்கள் குவிந்து கிடந்தன. அம்மாவும் தமக்கையும் வெட்டிய வெங்காயக் குவியல் எதுவாக இருக்கும் என அரியம் ஊகிக்க முனைந்தான். பெரிய பெரிய கண்போன்ற கயிற்றுச் சாக்குகளில் வெங்காயம் மூட்டைமூட்டையாகக் கட்டி வைக்கப்பட்டிருந்தது. இரவு முழுவதும் எரிந்த பெற்றோல்மெக்ஸ் அணைத்து ஓரமாக வைக்கப்பட்டிருந்தது. அம்மாவும் அக்காவும் இரவு வீட்டுக்கு எப்போது திரும்பிவந்து படுத்தார்களோ தெரியாது என நினைத்தபடி அரியம் நடக்கத்தொடங்கினான். பனிக்குளிர் குறைந்திருப்பதுபோல அரியம் உணர்ந்தான். அரியம் செட்டியார் வீட்டை அண்டி நடந்து பிரதான வீதிக்கு வந்து ஐஸ்வாடியை நோக்கி நடந்தான்.

## 1.9

மிகப்பெரிய பள்ளம். ஆண்டுக்கணக்காக நீர்வழிந்த தடங்களுடன் கெட்டியான சாம்பல் படிவுகளுடன்கூடிய களித்தறைச் செங்குத்து அரண் பள்ளத்தைச் சூழ்ந்துகிடக்கிறது. இரவா பகலா என ஊகிக்கமுடியாது பள்ளமெங்கும் குளிர்ச்சியான மம்மல் வெளிச்சம். பள்ளத்தின் அடியாழத்திலிருந்து விண்நோக்கி வளர்ந்த தென்னை மரங்களால் செங்குத்து அரணின் விளிம்புகளைத் தொடமுடியவில்லை. செங்குத்து அரணின் களிமண் நிறத்துக்குச் சம்பந்தமில்லாது கிடக்கிறது பள்ளம். பால்போன்ற வெண்ணிறக் குருத்து மணல். திட்டான குருத்து மணலைச் சுற்றிலும் கடல்நீரைப் போல நீல நிறத்துடன், குமிழி விட்டபடி கிடக்கிறது தண்ணீர். ஆனால் அது கொதி நீர் போல தெரியவில்லை. குமிழி வெடிக்கும் ஓசையும் கேட்கவில்லை. இடையறாத கடலின் அலைகள் தரையில் அடிக்கும் பேரிரைச்சல் கேட்டபடி இருக்கிறது. தென்னைகளில் கட்டியிருந்த சூழ்லாம்புகளின் வெளிச்சம் தண்ணீரிலும் களிமண் அரண் சுவர்களிலும் பிரதிபலித்தபடியிருக்கிறது. வெற்றுடம்புடன் காக்கிக் கால்சட்டை அணிந்த பூவாவின் கால்கள், பள்ளத்தில் குவிந்துகிடக்கும் குருத்து மணலுக்குள் புதைந்துகிடக்கின்றன. அவர் வாசித்துக் கொண்டிருக்கும் ஆர்மோனியப்பெட்டியின் அடிப்பகுதியும் வெண்மணலுக்குள் புதைந்துகிடக்கிறது. பூவாவின் விரல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்மோனியக்கட்டைகளில் இயங்குவது துல்லியமாகத் தெரிகிறது. ஆனால் ஆர்மோனியத்தின் இசையைக் கேட்கமுடியவில்லை. அதிர்வுடன் கூடிய இடையறாத பேஸ்றம்மின் 'தும்... தும்...' என்னும் ஓசை கேட்கிறது. 'சலார்' என்ற சிம்பல்சின் சத்தம் இடைக்கிடை கேட்கிறது. ஆர்மோனியத்தின் இசை கேட்கவில்லை. பூவா ஆர்மோனியக்கட்டைகளுடன் மல்லுக்கு நிற்கிறார். பிங்க்கலர் தும்பியும் கறுப்புநிறத் தும்பியும் எனப் பல ஜோடித் தும்பிகள் பூவாவைச் சுற்றிப் பறக்கின்றன. தரையில் குந்திய தும்பிகளிலிருந்து கறுப்பு கோட்சூட் அணிந்த ஆணும் றோஸ்நிற ஆடை அணிந்த பெண்ணுமாக ஜோடிகள் எழுகிறார்கள். பூவாவைச் சுற்றிப் பல ஜோடிகள் நடனம் ஆடுகிறார்கள். அந்த அழகான மெல்லிய ஜோடிகளுக்குப் பொருத்தமில்லாத ஒரு ஜோடி ஆடிக்கொண்டிருக்கிறது. போட்டிருந்த கறுத்த கோட்டின் நிறத்தில் அவன் இருக்கிறான். அவன் முடி பற்றைக்காடெனக் கருகருவெனச் சுருண்டு கிடக்கிறது. ஆடும் மற்ற ஜோடிகளிலிருக்கும் பெண்களைப் போலல்லாது அவள் பருத்த உடலும் தடித்த இடையுமாக இருக்கிறாள். அவள் போட்டிருந்த பிங்க் உடையைவிட மினுமினுப்பாகவும் வெள்ளைவெளீரென்றும் இருக்கிறாள். அவன் அவளது இடையைப் பற்றி ஆடமுடியாது தவிக்கிறான். அவளது நீண்ட அங்கியின் ஓரத்தைப் பற்றியவனாக மற்ற ஜோடிகளுக்கு இணையாகவும் லாவகமாகவும் அவளுக்கு இணையாகவும் ஆடமுயற்சித்தபடி இருக்கிறான். பூவா ஆர்மோனியத்துடன் மல்லுக்கு நிற்கிறார். ஆட்ட வேகம் கூடிக்கொண்டே போகிறது. வெண்மணல் திட்டைச் சுற்றிலுமிருக்கும் நீரில் குமிழிகள் அதிகமாகின்றன. நீர்மட்டம் உயர்கிறது. வெண்மணல் திட்டும் உயர்கிறது. தென்னை மரங்கள் களிமண் அரணின் விளிம்புகளைத் தாண்டி அரைவாசிக்குமேல் உயர்ந்துவிட்டதைக் கண்டான். தன் கைகளுக்குள் அகப்படாத இடையைக்கொண்ட அந்தப் பெண்ணைக் கூர்ந்துபார்த்தான். ''றோஸ்மேரி'' ''றோஸ்மேரி'' அவன் உதடுகள் உச்சரித்தபடியே இருக்கின்றன. கடல் அலைகளின் ஆர்ப்பரிப்பு இப்பொழுது துல்லியமாகக் கேட்கிறது. சின்ன முற்ற வெளியில் பேண்ட் இசைக்குழு ஒன்றின் பயிற்சி இசை துல்லியமாகக் கேட்கிறது. ராசநாதன் கண்விழித்துப் பார்த்தான். பக்கத்திலிருந்த கதிரையில் பவன் தூக்கத்திலிருப்பதை ராசநாதன் கண்டான். ''ராசநாதன் பிளைச்சிட்டான்...''

பெரியாஸ்பத்திரியின் இரண்டாம் மாடியிலிருந்த வாட் ஒன்றிலிருந்து பவன் அலறிக் கத்தினான். அந்த வாட்டுக்கு வெளியே யன்னலோரமாக இருந்த தந்திக்கம்பத்தின் மாபிள் கப்பியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குந்தியிருந்த கிக்கிலிப்பேய்க்குருவி ஒன்று அலறியடித்துத் தந்திக்கம்பி வழியே நீண்ட தொலைவுக்கு, ஊர் நோக்கிக் கத்திப் பறந்துபோனது. ஊரின் முடிவிலிருந்த தபால் கந்தோரின் தந்திக்கம்பத்தின் மாபிள் கப்பியில் வந்தமர்ந்து, உரக்கக் கத்தி, தன் பதற்றத்தைத் தணித்துக் கொண்டது கிக்கிலிப்பேய்க்குருவி.

மரவள்ளிக்கன்றுகளுக்குத் தண்ணீர் வார்த்துக்கொண்டிருந்த அரியம் சேனாதி மாஸ்டரின் வாயையே பார்த்துக்கொண்டிருந்தான். பின் வேலிக்குள்ளால் புகுந்து பூவாவின் காப்பெண்டர் மாலை நோக்கி ஓடினான்.

*''ராசநாதன் அண்ணன் பிளைச்சிற்றாறாம்...''*

கதிரைக் கால் ஒன்றிற்கு பொளி கொத்திக்கொண்டிருந்த பூவா நிமர்ந்து அரியத்தை முறைத்துப்பார்த்தபோது, சுருக்கு வைத்துத் தைத்த கவுன், அகன்ற இடுப்பில் குடை மாதிரி விரிந்துகிடக்க, றோஸ்மேரி அக்கா பூவாவின் பின்னே அறைக்குள்ளிருந்து வந்துநிற்பதை அரியம் கண்டான். ''என்னது...''

*''ராசநாதன் அண்ணன் பிளைச்சிற்றாராம்... ஆனா... பீக்கர் அவுட்டாம்...''*

*''விளங்க இல்ல...''*

அரியம் தயங்கி நின்றான். பின் சேனாதி மாஸ்டர் கூறியது போலவே தானும் சொன்னது தவறு என உணர்ந்தான்.

*''பிளைச்சிற்றாராம்... கதைக்க ஏலாதாம்...''*

## 1.10

அரியம் தன் தொடைகளைக் காப்பாற்றிக்கொள்வதுபற்றி அதிகம் கவலைப்படத் தொடங்கியிருந்தான். தொடையாம்புலிபற்றி உனக்குத் தெரியுமா எனக் கேட்ட தள்ளுவண்டிக்கார மாமி, தொடையை வருடுவதுபோல வருடி, நான்கு விரல்கள் பதிய அடித்து, முரட்டுத்தனமான உள்ளங்கைக்குள் முழுதாகத் தொடையை அழுத்தப்பற்றி, முறுக்கித் திருகிவிட்டபோது, இரத்த ஓட்டம் சுண்ட, தன் தொடை வலியுடன் விதிர்விதிர்த்துப் போனபிறகு, அரியம் தன் தொடைகளைப் பாதுகாப்பதுபற்றி அதிகம் கவலைப்படத்தொடங்கியிருந்தான். குண்டுமணியக்கா டீச்சர் தொடையில் அழுத்திக் கிள்ளிய இடங்களில் இரத்தம் கன்றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகப்பாக இருப்பதை அரியம் கவலையுடன் பார்த்துக்கொண்டிருந்தான். காலையிலேயே கோடை வெயில் தகித்துக்கொண்டிருந்தது. தன் உடலில் வியர்வையின் நசநசப்படியும் சோர்வையும் அரியம் உணர்ந்தான். குண்டுமணியக்கா டீச்சரின் நரை முடியில் வெயிலின் மினுமினுப்பை அரியம் பார்த்தபடியிருந்தான். தன் இடுப்பில் கொடுக்குபோல் ஒட்டிக்கிடக்கும் மஞ்சள் காக்கிக் கால்சட்டைக்குக் கீழே வெளீரெனத் தொடை நீண்டுகிடப்பது அரியத்துக்குக் கூச்சமாக இருந்தது. குண்டுமணியக்கா டீச்சர் மேசையில் குப்புற விழுந்து தூங்கத்தொடங்கியபோது வகுப்பு சலசலக்கத் தொடங்கியது.

''டீச்சர் வெங்காயம் நெறுக்கத் தொடங்கீற்றாடா...''

''பாவம் இரவு வெங்காயக் கணக்குப் பாத்திருப்பா...''

''நல்லா நெறுக்கிறாடா...''

தங்கள் வகுப்பில படிக்கிற மூன்று வேதக்காரப்பிள்ளைகள், கிறிஸ்தவப்பாடம் படிக்க வாகமரத்துக்குக்கீழே ஃபிலோமினா டீச்சருடன் இருப்பதை அரியம் தன் வகுப்பிலிருந்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். அதிபர் அறையுடன் போட்டிருந்த ஒத்தாப்பிற்குள் முஸ்லீம் பிள்ளைகள் இஸ்லாம் பாடத்துக்கு நூர்ஜகான் டீச்சரிடம் போய்விட்டதால், சைவப் பாடம் படிக்கிற பிள்ளைகள் மட்டும் வகுப்பில் தங்கிவிட்டிருந்தனர். சமயப் பாடத்துக்கும் தங்கள் வகுப்புக்கும் குண்டுமணியக்கா டீச்சர் பொறுப்பாக இருப்பது அரியத்துக்கு எரிச்சலாக இருந்தது. சலசலப்பு இரைச்சலாக மாறத்தொடங்கிய போது, எதுவோ அழுகி மணக்கிற மாதிரியிருந்தது அரியத்துக்கு. தோசைக்கடை கலாதான் அழுகின குசு விட்டதாக அரியம் நினைத்தான்.

''எண்டப்பேய்... கௌரி சட்டையோட பிச்சீற்றாள், நாத்தம் குடலப் புடுங்குது''

கௌரிக்குப் பக்கத்திலிருந்து தம்பிடித்து அடித்தொண்டையால் கத்திவிட்டு தமிழ்ச்செல்வி சட்டென்று மல்லாந்து காலை நீட்டி விழுவதை அரியம் கண்டான். தூக்கக் கலக்கத்தில் தலையை உயர்த்திய குண்டுமணியக்கா டீச்சர் பிரம்பைத் தூக்கி மேசையில் அடிப்பதை அரியம் கண்டான். தன் கொடுக்குப் போன்ற காற்சட்டையை இழுத்துத் தொடையைக் காப்பாற்றிக்கொள்ள அரியம் முனைந்தான்.

''டீச்சர் கௌரிப் பெட்ட சட்டையோட பிச்சீற்றாள்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சனியன்கள் காலையில கடக்கரைப் பக்கமாச்சும் ஒதுங்கிறதில்ல... இங்க வந்து என்ற உசிர எடுக்குதுகள், ஆராச்சும் பெட்டையள் கிணத்தடிப்பக்கம் கொண்டே கழுவிவிடுங்க...''

கௌரியின் விசும்பல் சத்தம். வகுப்பு அமைதியாகிப் போனது. அரியம் பதறத் தொடங்கினான்.

''டீச்சர் அரியம்தான் அவள்ட பக்கத்து வீடு... அந்த கன்னதான்...''

சிவாயினி எழும்பிநின்று மூக்கைப் பொத்தியபடி முனகினாள். அரியம் தன் தொடைக்கு ஆபத்து வந்துவிட்டதை உணர்ந்தான்.

''எங்கடி அந்தச் சனியன்... எழும்பிவாடா வெளியில''

சட்டென்று எழும்பிய அரியம் உயரமான சீமெந்துத் தளம் போட்டிருந்த வகுப்பறையின் படிகளில் இறங்கிக் கீழே வந்துநின்றான். தன் கண்மட்டத்துக்கு நேரே சிணுங்கியபடி, ஆரோ அக்காச்சிமாரிடம் வாங்கிய காவியும் நீலமும் திட்டுத்திட்டாகப் படிந்த தோப்பறா வெள்ளைச் சட்டையைப் பின்பக்கம் தூக்கிப் பிடித்தபடி கௌரி வெளியே வருவதை அரியம் கண்டான்.

''சனியனுகள் காலங்காத்தாலேயே கழுத்தறுக்கவெண்டே வருகுதுகள்.''

குண்டுமணியக்கா டீச்சரின் குரல் வகுப்பறைக்குள்ளிருந்து அரைச்சுவர் தாண்டி வெளியே வந்தது.

தனக்கு நெருக்கமாக கௌரி வருவதை, வேதக்காரப்பிள்ளைகளும் ஃபிலோமினா டீச்சரும் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்ட அரியம் வேகமாக நடந்து கக்கூஸ் வாளியை எடுத்துக்கொண்டு கிணற்றடி நோக்கி ஓடினான்.

வேகமாகக் கிணற்றுக்கட்டுடன் உரசியபடி, தகரவாளியைக் கிணற்றுக்குள் போட்டுத் தண்ணீர் அள்ளி, கக்கூஸ் வாளிக்குள் ஊற்றி நிறைத்துக்கொண்டு, கக்கூஸ் வாளியைத் தன் தோளில் சுமந்து, தண்ணீர் தளும்பித் தன் தோளில் ஊற்றஊற்ற, ஓடி ஈச்சம் புதர்கள் மண்டிய மறைவில் வைத்துவிட்டு கௌரிக்காக எரிச்சலுடன் காத்துநின்றான்.

''சட்டையக்களட்டடி...''

பின்புறம் குத்தியிருந்த பூட்டூசியைக் கழற்ற தோப்பரா சட்டை தோள்களில் வழிந்து கீழேவிழ, கௌரிப் பெட்டை அம்மணக்குண்டியாக நின்றாள். தன் இரண்டு கைகளையும் குவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீரை வாரி கௌரியின் அம்மணக்குண்டியில் எத்தினான் அரியம். குந்தியிருந்த கௌரி தன் பீச்சாங்கையால் குண்டியைக் கழுவிக்கொண்டாள். தடித்த ஈச்சம் ஓலையைப் பிய்த்த அரியம் சட்டையில் அப்பிக்கிடந்த பீயை வழித்தெடுத்தான். சட்டையை, மிச்சமிருந்த கக்கூஸ் வாளித் தண்ணீரில் அமத்தி அலம்பியெடுத்தான். சட்டையைப் பிழிந்து உதறி கௌரி பெட்டையின் தோளில் போட்டுவிட்டு வாளியைத் தூக்கிக்கொண்டு ஓடினான் அரியம்.

வகுப்பறையை நோக்கி அரியம் ஓடியபோது, குண்டுமணியக்கா டீச்சர் கையிலிருந்த பிரம்பைக் காற்றில் விசிறியபடி, அதிபர் அறை நோக்கிப் போவதைக் கண்டான். நிலத்தில் சிதறிக்கிடந்த தன் புத்தகக்கொப்பிகளை மாட்டுத்தாள்பேப்பரில் சுற்றி எடுத்துக் கொண்டு, கம்பி வேலிக்குள்ளால் புகுந்து கடற்கரை நோக்கி ஓடினான் அரியம்.

தன் புத்தகக்கொப்பிகளைச் சுற்றியிருந்த மாட்டுத்தாள் உறைக்கு மேலால் தன் வெள்ளைச் சேட்டைக் கழற்றிச் சுற்றி ராவணன்மீசைப்பற்றைக்குள் மறைத்து வைத்தான். தன் கொடுக்கு போன்ற மஞ்சள் கால்சட்டையைக் கழற்றி வேறொரு இடத்தில், கடற்கரைச் சுடுமணலுக்குள் புதைத்துவைத்துவிட்டுக் கடலில் அம்மணமாகப் பாய்ந்து நீந்தத் தொடங்கினான் அரியம். முருகைக்கற்கள் உடலுடன் அண்டுப்படும் அளவுக்குத் தம்பிடித்து, மூச்சையடக்கி, கடல் தண்ணீர் தன்னை மேலே தூக்காதவாறு தரையுடன் ஒட்டிக்கிடந்தான் அரியம். சில்வாவின் நினைவு வந்ததால் தம்பிடிப்பதை விட்டுவிட்டுத் தன் உடலைக் கடல்மட்டத்துக்கு மேலே கொண்டுவந்து மூச்சுவிட்டான் அரியம். சில்வாதான் தனக்கு இப்படி எல்லாம் கடலில் கிடக்க, நீந்த கற்றுத்தந்ததை நினைத்துப் பார்த்தான். பாவம் தன்னைப் போலவே சில்வாக்கும் அப்பா இல்லை. எல்லாமே சீயாதான் அவனுக்கு. கடல் மட்டத்துக்கு மேலே தலையைத் துடக்கியபோது கண்கள் எரிந்தன, உதட்டில் உப்புக் கரித்தது..

## 1.11

சூட்டியக்காவின் மூர்க்கம் தணிவதாக இல்லை. கடும் கோடையின் நீண்ட பகல்பொழுது மூலைமுடுக்குகளில் இருளைப் படியவிட்டு, முற்றத்தில் மட்டும் மெல்லிருளுடன் கூடிய வெளிச்சத்தை விட்டிருப்பதைப் பார்த்தபடி நின்றிருந்தாள் சூட்டியக்கா. தனி ஒருத்தியாக அதிகாலையிலேயே பின் வேலியடைப்பைப் பிரித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது கிடுகுமட்டை வைத்துக் கட்டி, கிட்டிப்பிடித்து வேலியைப் பலமாக நிறுத்திய நேர்த்தியை, தன்னைத்தானே மெச்சியபடி இடுப்பில் கை ஊன்றிப் பார்த்து நின்றாள் சூட்டியக்கா. பழைய கிடுகுவேலியைப் பிரிக்கும்போதுதான் சூட்டியக்கா கருணைவாசனுடன் ஒரு வலிந்த சண்டையை நிகழ்த்தி முடித்திருந்தாள். பாவித்த பிரீதி ஒன்றைக் காட்டியே தன் சண்டையைத் தொடங்கினாள் சூட்டியக்கா. பாழடைந்த வளவின் மூலைக்குத்தில் சைக்கிள் திருத்தும் கடை வைத்திருக்கும் அவனைத் தவிர வேறு யாரும் இந்தப் பாழடைந்த வளவுக்குள் திரிவதில்லை என்றும் அவனே இரவில் பெண்களைக் கள்ளத்தனமாகக் கூட்டிவருவதாகவும் சூட்டியக்கா அவன் மீது குற்றம் சாட்டினாள். பாழடைந்த வளவுக்குள் மட்டுமின்றித் தான் முற்றம் கூட்டும்போதுகூட, அதிகாலையில் தன் வளவுக்குள்ளும் பாவித்த பிரீதிகள் கிடப்பதாக சூட்டியக்கா கூடிநின்ற சனத்திடம் முறைப்பாடு வைத்தாள். தாய் எவ்வளவோ தடுத்தபோதும் வலிந்து சண்டையைத் தொடர்வதில் சூட்டியக்கா மூர்க்கமாக இருந்தாள். கருணைவாசனின் அப்பாவித்தனமான முகம் சூட்டியக்காவின் நினைவில் அடிக்கடி வந்து உறுத்திக்கொண்டேயிருந்தது. தன்னைப் பொருட்படுத்தாது திரியும் கருணைவாசன் மீது எப்போதும் தன்னுள் உக்கிரமான கோபம் இருந்துகொண்டேயிருப்பதை சூட்டியக்கா உணர்ந்தாள்.

எல்லாக் குழந்தைகளையும்போல் தான் தலையால் பிறக்காது, காலால் பிறந்ததற்காக வருத்தப்பட்டாள். குளிக்கும்போதும் நல்ல உடை உடுத்தி வெளியே போகும்போதும் தன் உடலின் குறைகள் அதிகம் வெளித்தெரிவதாக வருத்தப்பட்டாள் சூட்டியக்கா. தட்டையான சற்று சாய்ந்தது போல் தலையும் பருத்த ஒருபக்க மார்பும் சூம்பலான சிறுத்த மறுபக்க மார்பும் சதைப்பிடிப்பில்லாத வற்றலான தன் உடலும் சூட்டியக்காவுக்குக் கவலை தருவதாகவே இருந்தன. சைக்கிள் றேசுக்குப் போன இடத்தில் கால் சுளுக்கியபோது, கருணைவாசனுக்கு சூட்டியக்காதான் வைத்தியம் பார்த்திருந்தாள். சுளுக்கு எடுபட்டபின் தன்னைக் கண்டுகொள்ளாது திரியும் கருணைவாசன்மீது கட்டுக்கடங்காத கோபத்தில் இருந்தாள் சூட்டியக்கா. எத்தனையோ பேருக்கு வைத்தியம் பார்த்திருந்தபோதும் கருணைவாசன் அளவுக்குத் தன்னை எவரும் பாதித்ததில்லை என்பதை சூட்டியக்கா உணர்ந்திருந்தாள்.

நீண்ட நாட்களாகப் பிளக்கமுடியாதுகிடந்த வாகை மரத்தின் அடிக்கட்டையைப் பிளந்து தூள்தூளாகக் கொத்திப்போட்ட விறகு குவியலாகக் கிடந்தது. 'டக்கெண்டு பத்தி சாம்பலாப் போயிரும், நிண்டு பத்தாது,' எனத் தாய் கத்தக்கத்த, நார்நாராய்க் கிழித்துப்போட்ட பனைமட்டைகள் இன்னொரு குவியலாய்க் கிடந்தன. வேலியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தறித்த பூவரசங் கதியால்கள் ஓரமாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அந்த நீண்ட கோடையின் பகல்பொழுதொன்றில் தன் வளவு தடம்மாறிப் புதுவடிவில் கிடப்பதைப் பார்த்தபடியிருந்தாள் சூட்டியக்கா.

கால்கள் கடுக்கின்றன. நடந்து நடந்து உரசியதில் தொடை பற்றி எரிகிறது. கயிறும் கருக்கும் வெட்டிய உடம்பின் பகுதிகள் பற்றி எரிகின்றன. நீண்ட நேரக் குளியலின் பின்னும் தன் உடல் சோர்வறியாது மூர்க்கமாக இருப்பதை சூட்டியக்கா உணர்கிறாள்.

''சூட்டியக்கா... சூட்டியக்கா...''

விரிந்துகிடந்த படலைக்கு வெளியே அரியமும் வதனியும் நிற்பதை சூட்டியக்கா கண்டாள்.

''என்ன பெத்தவா தனிய வரப் பயமா... கொக்காவையும் கூட்டிற்று வந்திருக்காய்...''

''என்ற பேர் பெத்தவன் இல்ல அரியம்...''

''எல்லாம் தெரியும்டா... முதல்ல உள்ளவாடா...''

''அக்காக்கு ஒரே இருமல்...''

''ம்... பிறகு...''

''அதுதான் அம்மா உங்களிட்டக் கொண்டே உள் நாக்கு பார்க்கச் சொன்னவ...''

''ஓஓஓ... அப்பிடியா வா... வா... பாப்பம்...''

உயர்த்திப் பிடித்த வலது கையிலிருந்த பித்தளை மண்ணெண்ணை விளக்கின் ஒளி இருள்மீது படிய, வதனியின் தாடையைப் பிடித்து உள்நாக்குப் பார்க்கும் சூட்டியக்காவைப் பார்த்தபடியிருந்தான் அரியம். வற்றலான தன் மார்பின்மீது ஈரச் சாரத்தைக் குறுக்க கட்டியிருக்கும் சூட்டியக்கா அப்பொழுதுதான் குளித்திருக்கவேண்டும் என அரியம் நினைத்துக்கொண்டான். வதனி திறந்த வாயை மூடாது நாக்கை வெளியே நீட்டியபடி பயத்தில் சூட்டியக்காவைப் பார்க்காது ஓரக்கண்ணால் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதை பெத்தவன் கண்டான். விளக்கை வதனியின் கையில் கொடுத்த சூட்டியக்கா வேலியிலிருந்த முருங்கையில் சவளக்கூடிய கெந்தொன்றை வளைத்து, சில நல்ல குருத்தான இலைகளை உருவியெடுத்து, தன் வாயில் போட்டுக் குதப்புவதை அரியம் பார்த்துக்கொண்டிருந்தான். குதப்பிய முருங்கை இலைகளை உள்ளங்கையில் துப்பிய சூட்டியக்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனியின் உச்சந்தலையில் வைத்து எதையோ முணுமுணுத்தபடி தன் விரல்களுக்குள் வதனியின் சில உச்சிமயிர்களைப் பற்றி சூட்டியக்கா சுண்டி இழுப்பதை அரியம் கண்டான்.

''என்ன பெத்தவா உனக்கும் இறங்கியிருக்கா கொண்டா பாப்பம்...''

சட்டெனத் தன் உச்சி முடியைப் பற்றிய சூட்டியக்கா தன்னை மார்புடன் இழுத்து அணைக்க முனைவதை அரியம் உணர்ந்தான். குறுக்க கட்டியிருந்த ஈரலிப்பான சாரத்துடன் சேர்ந்து, சூட்டியக்காவின் மார்புப்பகுதியும் தன் கன்னத்திலும் உதட்டிலும் மென்மையாக நசிபடுவதை அரியம் உணர்ந்தான். சூட்டியக்காவின் அடிவயிற்றிலிருந்து புறப்பட்ட பெருமூச்சுக்காற்று சூடாகத் தன் உடலில் பரவ, தன் உடல் சிலிர்த்துப்போவதை அரியம் உணர்ந்தான்.

''மூண்டு நாளைக்குப் பாக்கவேணும் நாளைக்கும் மாலைக்க கூட்டிவா, என்ன, பெத்தவனா... அரியமா...''

''அரியரெத்தினம்''

படலையைத் தாண்டிய அரியம் தன் தொடைக்குள் புதிதாக எதுவோ தடிப்பாக அண்டுப்படுவதை உணர்ந்தான்.

## 1.12

''அரியம்... நீ அந்த சிறிமாபுரத்து சில்வாவோட விளையாடுறதா இருந்தா, என்னோட விளையாட வரக்கூடாது சொல்லிப்போட்டன்... அவன்ட பறட்ட செம்பட்டத் தலையும்... எப்பப்பாத்தாலும் வியர்வையின்ட உப்புப் படிஞ்ச கறுத்த வெறும் மேலுமாத்தான் திரியிறான்... பத்தாததுக்கு யங்கிய குண்டி தெரியிறமாதிரி நழுவவிட்டுட்டு... ஆட்டிஆட்டி பளிப்பம் காட்டுறான்...''

''கௌரி... அவன் பாவம்டி, மிச்சம் நல்லவன்டி அவன்... அவனோட கூடத்திரியத் தொடங்கினாப்பிறகு உதயன் என்னோட தனகிறதுக்கெல்லாம் வாரதில்லத் தெரியுமா... சீயாட வாடிக்கு கோலாப்பத்தை வெட்ட லவ்லேனுக்க கூட்டிற்றுப் போனவன்... என்ன ஒரு வேலையும் செய்யவிடயில்லத் தெரியுமா... அவன்தான் முழுப்பத்தையும் வெட்டினது... கட்டி தூக்கி வாரதுக்குத்தான் நான் உதவி செஞ்சநான்... எனக்கு, சீயாட்ட நானும் வேலை செய்ததாச் சொல்லி இருவது சதம் வாங்கித்தந்தவன் தெரியுமா... பிறகு கோல மீன் பிடிபட்டோனே வாழை இலையில சுத்திப் பத்துப் பன்னிரெண்டு மீன் கொண்டாந்து அம்மாட்டக் குடுத்தவன்... அவன் நல்லம், நீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது கொடுக்குக்கொடுக்கெண்டு கதைச்சிருப்பாய் அவன் பளிப்பம் காட்டியிருப்பான்... அவன் உனக்கு என்ன பட்டம் வைச்சிருக்கான் தெரியுமா...''

''என்ன...''

''நுள்ளான்...''

''அவனக் காணட்டும் கடிச்சுவைக்கிறன்...''

''எவடம்... எவடம்...''

''புளியடி... புளியடி...''

''எவடம்... எவடம்...''

''புளியடி... புளியடி...''

''அரியம்... நீ அலாப்பி விளையாடுறாய்... காலால அடையாளம் வைச்சுவைச்சு வாராய்...''

''பீக்குண்டி நீ மட்டும் என்ன ஒழுங்காவா விளையாடுறாய்... சாத்திரியார் அம்மாட வளவு தாண்டமாட்டன் எண்டு போட்டு, எங்கெங்கயோ என்ன சுத்த விடுறாய்...''

''இன்னொருதரம் பீக்குண்டி எண்டு சொன்னாய்... பொத்தி இருக்கிற கண்ண நோண்டிக் கீழ போட்டிருவன்...'' ''கௌரி, இறுக்கிப் பொத்தாதடி நோகுது... கண்ணுக்குள்ள கறுப்பும் சிவப்பும் வெள்ளையுமா மாறி மாறி வருதுடி, பத்தாததுக்கு கண்ணுக்குள்ள பாம்பும் பல்லியுமா ஓடுதடி... கெதியா கீழ வைச்சுப்போட்டு விடண்டி...''

''விளையாட்டெண்டுவந்தா அப்பிடித்தான்... பேசாம நட...''

''எவடம்... எவடம்...''

''புளியடி... புளியடி...''

''எவடம்;;... எவடம்...''

''புளியடி... புளியடி...''

''எங்கடி கூட்டிற்றுப் போறாய்... என்ன நாத்தம்டி இது... வயித்தப் புடுங்குது...''

''செட்டியார் வீட்டு கண்டுக்குட்டிக்கு குறிசுட்டிருக்காங்க, அது கருப்பா தாறுமாறா பீச்சியிருக்கு, அதுதான் நாறுது...'' ''கௌரி... வீட்ட இரண்டு மூண்டு நாளா கூப்பங்கட மிச்சாட் அரிசிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோறுதான்... வயித்த கடுக்கிக்கடுக்கி கக்கூசுக்குப் போகுதுடி... காலயில நிமிந்து இருக்க ஏலாம வயிறு நோகுதுடி... இண்டைக்கு மூத்தம்மாச்சி அப்புட மரவள்ளிக்க கிழங்கு பிடுங்கி சுட்டுச் சாப்பிடுவமா...''

''எனக்கு ஏலாப்பா... வெங்காய வெட்டுக்க வதனியக்கா காசக் களவெடுத்தவ எண்டு சொல்லி சூடு வைச்சவங்க, களவெடுக்காமயே சூடு வச்சவங்க... வதனியக்கா காச்சல்ல கிடந்து, நான் களவெடுக்கயில்ல எண்டு பிணாத்தினது எனக்கு இப்பவும் ஞாபகம் இருக்கு... களவெடுத்து பிடிபட்டா கட்டிவைச்சு ரெண்டு பேர்ர தோலயும் உரிச்சுப்போடுவாங்க... உனக்குத் தெரியுமா உதயன் கராட்டி எல்லாம் பழகப்போறானாம், சும்மாவே உன்ன சாம்பல் மேட்டில போட்டு உருட்டி உருட்டி அடிச்சவன்''

''உண்மையாவாடி...''

''ம்... நீ விளையாட்டக் கவனி... எவடம்... எவடம்...''

''புளியடி... புளியடி...''

''எவடம்... எவடம்...''

''புளியடி... புளியடி...''

''கௌரி... தள்ளுவண்டிக்கார மாமி பொல்லாத ஆள் கண்டியோ, அந்தாளோட கவனமாத்தான் புழங்கவேணும், நேத்துப் பின்நேரம்... யப்ணா ஸ்டோறுக்குப் போய் காறாத்தல் சீனியும்... பூவாக்கு செய்யது பீடிக்கட்டும் வாங்கீற்று தார் றோட்டால வரேக்க... மழை வாரமாதிரி குளிர்க்காற்று அடிச்சுதா... நான் அப்பிடியே றோட்டில நல்லாயிருக்குதெண்டு நிண்டுட்டன்... அப்ப பாத்துப் பின்னால வந்த தள்ளுவண்டிக்கார மாமி... என்ற கமக்கட்டுக்க கையவிட்டு நெஞ்சில பிடிச்சு பின்புறமா தூக்கி தட்டமாலை சுத்தத் தொடங்கீற்றார்... எனக்கு தல கிறுகிறுக்கத் தொடங்கீற்று... கையில இருக்கிற சீனிச்சர கொட்டுப்பட்டா... அம்மாட்ட முதுகில குத்து வாங்கோணுமே எண்ட பயம் வேற... சுத்திப்போட்டு என்ன றோட்டில இறக்கி விட்டுட்டுது... எனக்கு றோடு, லைட் போஸ்ட் கட்ட, தகரவேலி, தென்ன மரம், வானம், முகில், மாமரம் எல்லாம் என்னச் சுத்திச் சுழலத் தொடங்கீற்று, தல கிறுகிறுத்து, நான் விழப்போக, என்ன டக்கெண்டு தூக்கி தள்ளுவண்டில்ல வைச்சு, தள்ளிக்கொண்டு போயிற்று... கூப்பங்கடையடியில நிப்பாட்டிப்போட்டு, என்ற சாரத்தத் தூக்கி... புண்ணாக்கிய நாலஞ்சு தரம் உருவிவிட்டுட்டாறடி... எனக்கு பயத்தில மூத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுக்கி இரண்டு மூண்டு சொட்டு மூத்திரம் சாரத்தில்பட்டுட்டுடி... பிறகு, லங்கோட்டு கட்டனும் துறை... லங்கோட்டு... எண்டு சொல்லி... கூப்பங்கடையடியில இறக்கிவிட்டுட்டு... தள்ளுவண்டில தள்ளிக்கொண்டே... உன்னிக்கு மட்டும்... உன்னிக்கு மட்டும்... றவசியம் சொல்வேன் அத... யாருக்கிட்டயும் செல்லிப்புடாதே... எண்டு பாடிக்கொண்டு பொயிட்டேர்... கண்டியோ...''

''இந்த ஊத்தக்கதையெல்லாம் என்னட்டச் சொன்னியென்டா உண்மையாவே உன்ற கண்ண நோண்டிப் போட்டிருவன்;...''

''உம்மையாவே நடந்ததுடி... இறுக்கி இறுக்கிப் பொத்தாதடி... கண் உள்ள போகப் போது...''

''பேசாம விளையாட்டக் கவனி...''

''எவடம்... எவடம்...''

''புளியடி... புளியடி...''

''எவடம்... எவடம்...''

''புளியடி... புளியடி...''

''கௌரி... நீ வேணுமென்டே சுடு புழுதி மணலுக்க எல்லாம் என்னக் கொண்டுபோறாய்...''

''நானுஞ்சேர்ந்துதானே நடக்கிறன்... பேசாம நட....''

''கௌரி உனக்குத் தெரியுமாடி... நேத்து ஏன் ரெத்தினண்ணன் வீட்ட வெடி எல்லாம் கொளுத்தினதெண்டு... கள்ளுத்தவறண அம்மாச்சிட ரெண்டாவது மகள்ற அவருக்கு, சிறிமா, விவசாய மன்னன் பட்டம் குடுத்திருக்காவாம்... அவர் உழுகிற ரெக்டர் மெசின், களப்ப, பெட்டி, எல்லாம் வாங்கப் போறாறாம்... கிணத்தடியில இருக்கிற தண்ணித் தொட்டி நிறையிற அளவுக்கு காசெல்லாம் வைச்சிருக்கிறாறாம்... எலக்சன் எல்லாம் கேக்கப்போறாறாம்... பெரிய குழப்பம் எல்லாம் வருமெண்டு மூத்தம்மாச்சி அப்புட விலாட்டு மாமரத்துக்குக் கீழவைச்சு பவன் அண்ணன், சிவராச மாஸ்டர் எல்லாம் கதைச்சுக்கொண்டு நிண்டவங்கடி...''

''அவங்க கதைக்கிறதையெல்லாம் வாய்பாத்துக்கொண்டு நிண்டுபோட்டு, கதைச்சுத் திறிஞ்சியெண்டா, கட்டி வைச்சுத்தான் ஒரு நாளைக்கு அவங்களிட்ட அடிவாங்கப்போறாய் சொல்லிப்போட்டன்...''

''எவடம்... எவடம்...''

''புளியடி.. புளியடி...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எவடம்... எவடம்...''

''புளியடி... புளியடி...''

''என்னடி... ஒரே இரைச்சலாக்கிடக்கு... நிறைய ஆக்கள் கதைக்கிறமாதிரிக் கிடக்கு... கள்ளுத்தவறண அம்மாச்சிட குரலும் கேக்கிறமாதிரிக் கிடக்கு...''

''பொறுடா பாக்கிறன்... டேய் கள்ளுத்தவறண அம்மாச்சி கையில துவக்கும்... சிகப்புக்கலர் தோட்டாவும் வைச்சிறுக்கிறார்... உதயன் சாரக்கட்டும் வெறும் மேலுமா நிக்கிறான்... மூத்தம்மாச்சிட அல்சேசன் கறுப்பு நாய் தென்ன மரத்தில கட்டி இருக்கிடா... அது அங்காலயும் இங்காலயும் பாஞ்சு பாஞ்சுகொண்டு நிக்குது...'

''அடியே உனக்குத் தெரியுமா நேற்றுக் காலயில... அந்த நாய்... சிறிமாபுறத்தில இருந்து ஈரப்பிலாக்கா, தேங்கா விக்கவாற புள்ளத்தாச்சி சிங்களப் பொம்பிளய ஒழுங்கேக்க போட்டு உருட்டி உருட்டிக் கடிச்சுப்போட்டுதாம்...''

''அந்த நாய்க்கு விசர் பிடிச்சிற்றாம்... சாத்திரியார் அம்மா கவனமாத் திரியச் சொன்னவடா...''

''டுமீல்.......''

''உ உ உ உ உ உ உ உ... ஓஓஓஓஓஓஓஓஓ''

''ராசப்பா, வால அறுத்தெடுத்துப்போட்டு, நாய தோடை மரத்துக்குக்கீழ குழிதோண்டிப் புதைச்சுப்போடு''

''கௌரி... கள்ளுத்தவறண அம்மாச்சிட குரல் கேக்குது... நாய் செத்திற்றுப் போல... அதுதான் வால அறுக்கச் சொல்லுறார்...''

''வால் எதுக்குடா...''

''வாலக் கொண்டேக்காட்டினா வெறும் தோட்டாக்கு பதிலா புது தோட்டா குடுப்பாங்க, ஊருக்க கணக்க நாயெல்லாம் வால் இல்லாம கூலமா திரியுதுகளே அதெல்லாம் தோட்டாக்காக வெட்டினது தாண்டி''

''எவடம்... எவடம்...''

''போடி நீயும் உன்ற விளையாட்டும்...''

''நில்லுடா நானும் வாரன்...''

✿✿✿


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

## 2.1

கடற்கரை விளிம்புகளைத் தவிர்த்துவிட்டுப் பிரதான தார்வீதி வழியே, அந்த அயல் கிராமங்களுக்குள் இருள் பதற்றத்துடன் கவிந்து வந்தது. குப்பி விளக்குகளிலிருந்தும் மின் விளக்குகளிலிருந்தும் மங்கலான மஞ்சள்நிற ஒளி கிராமங்களுக்குள் ஆங்காங்கே இருள்மீது கசிந்தது. பிரதான வீதி வாகன இரைச்சல்கள் ஏதுமற்றுக்கிடக்கிறது. வெள்ளை வேட்டி கட்டியிருந்த இளைஞர்கள் கூட்டம்கூட்டமாகப் பிரதான வீதியில் குழுமி நின்றார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் யங்சன்றைஸ் விளையாட்டுக்கழக உறுப்பினர்களாகவே இருந்தார்கள். முக்கோண வடிவில் சிகப்பும் மஞ்சளும் கலந்த பட்டத்தாள் பேப்பர் கொடிகள் வெட்டி ஒட்டியிருந்த சணல் கயிறுகள், அவர்கள் தலைக்கு மேலே மின்சாரக் கம்பங்களில் இழுத்துக் கட்டப்பட்டிருந்தன. காற்றில் அவற்றின் சரசரப்புக் கேட்கும் அளவுக்கு அவர்கள் அமைதியாக நின்றிருந்தார்கள். தோரணங்களும் காற்றில் உதறி உதறி கம்பீரமாக நிற்க முனைந்தன. தோரணங்களோ கொடிகளோ கட்டப்படாதிருந்த சிறிமாபுரத்திலிருந்து வந்த இளைஞர்களும் சாரத்துக்கு மேலே வெற்றுடம்புடன் குழுமி நின்றிருந்தார்கள். அயல் கிராமங்களுக்குள் முகங்களில் பயம் படர்ந்துகிடக்க பெண்களும் வயோதிக ஆண்களும் வளவுகளுக்குள்ளும் அடுக்களைகளுக்குள்ளும் இடையறாது நடந்துகொண்டிருக்கிறார்கள்.

''வெறுவாய்க்களங்கெட்ட நாய்கள்... குல நாசத்துக்கு வழிதேடப் போறாங்கள்...''

பொறுமையிழந்த மூத்தம்மாச்சி முற்றத்து விலாட்டு மாமரத்துக்குக் கீழே உலாவி, அடித் தொண்டையைக்காறி, தென்னை மரத்தடியில் துப்பிவிட்டு வானத்தை நிமிர்ந்து பார்த்தார்.

சாத்திரியார் அம்மாளும் அரியத்தின் அம்மாவும் அந்த வளவுப் பெண்களும் வேலியோரத்தில் சிறிமாபுரத்துப் பெண்களுடன் எல்லாம் சமரசமாகவே முடியும் எனப் பேசிக்கொண்டு நின்றிருந்தார்கள். மாலை மங்கிய பின்னரும் கடும் கோடையின் புழுக்கம் அவர்களின் உடலில் எரிவையும் அயர்ச்சியையும் விட்டிருந்தது, ஆனால் கச்சான் காற்று அவர்களின் உடலில் வியர்வையின் நசநசப்பில்லாது வைத்திருந்தது. கச்சான் காற்று அயல் கிராமங்களுக்குள் புழுதியையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சல்களையும் சிலவேளைகளில் மணலையும் வாரி அடித்தபடியே இருந்தது. சீயாவை இன்றிரவு வாடிக்குள் படுக்கவேண்டாம் என சில்வாவின் அம்மா களுமெனிக்காவிடம் சாத்திரியார் அம்மாள் முகத்தில் படிந்திருந்த புழுதியை சேலைத் தலைப்பால் துடைத்தபடி சொன்னாள். அமுக்கர் ஐயாவின் வீட்டுத் தொலைபேசியும் தபால் கந்தோர் தொலைபேசியும் இடைக்கிடையே அலறிஅலறித் தகவல் சொல்வதும் தகவல் வாங்குவதுமாக நேரம் கடந்துகொண்டேயிருந்தது.

தார் வீதியில் தனக்கு மிக நெருக்கமாக நிற்கும் உதயனின், சேட்டை மீறி புடைத்த நெஞ்சையும் திரண்ட கைபுயங்களையும் அரும்பிக்கிடக்கும் பூனைமுடி மீசையையும் இருளை ஊடறுத்துப் பார்த்தபடி நின்றான் அரியம். வீதியை சோடிக்கும் வேலை தொடங்கிய இரண்டு நாட்களாக அரியம் உதயனுக்கு நெருக்கமாகத்தான் நின்றான். அரியம் மட்டும் இல்லை, கரிகரன், சிறி, மகேஸ்வரன், அழகேஸ்வரன், தவா என ஒரு கூட்டமே, உதயனைச் சுற்றி நின்றார்கள். திருக்கைவால், சைக்கிள் செயின் எல்லாம் மறைத்துவைத்திருந்தார்கள். உதயன் தன் சைக்கிள் செயினை வைரவர்கோயில் ஆலமரத்துக்குக்கீழ், இடுப்பில் சுற்றி வைத்திருக்கும்படி அரியத்திடம் கொடுத்திருந்தான். அரியத்தின் வெற்றுடம்பில், சைக்கிள் செயினின் கறல் உறுத்தியது. சைக்கிள் செயினின் இடைவெளி இடுப்பைக் கிள்ளிக்கொண்டிருந்தது. இடுப்பில் செயினைச் சுற்றி, அதற்கு மேல் பள்ளிக்கூட வெள்ளைச் சேட்டை போட்டு, கள்ளுத்தவறணை அம்மாச்சியின் சால்வையை வேட்டியாகக் கட்டியிருந்தான். அவர்களுக்கு கராட்டி பழக்க இருப்பதாக உதயன் வாக்குக் கொடுத்திருந்தான். ஊர்வலம் நகருக்குள்ளேயே சுற்றிக்கொண்டிருந்தது. நேரம் செல்லச் செல்ல கிராமத்துக்குள் பயம் அதிகரித்துக்கொண்டேவந்தது. சைக்கிளில் வேகமாக வந்த குட்டியண்ணன் சொன்னார் ''ஊர்வலம் மடத்தடிச் சந்தி தாண்டீற்று...'' தூரத்தே லவுட்ஸ்பீக்கர் சத்தம் கேட்கத் தொடங்கியது.

''சங்கே முழங்கு... எங்கள் தாய்மொழி தமிழ் என்று... சங்கே முழங்கு...''

''சங்கே முழங்கு... எங்கள் தலைநகர் திருகோணமலை என்று... சங்கே முழங்கு...''

''சங்கே முழங்கு... எங்கள் தமிழினத் தலைவன் தந்தை செல்வா என்று... சங்கே முழங்கு...''

இரண்டு கரைகளிலும் தடிகளில் வெள்ளொளிர்வாய் பெற்றோல்மெக்ஸ் வெளிச்சம் சிந்த, வாழைமரங்களாலும் தோரணங்களாலும் சோடிக்கப்பட்ட தந்தை செல்வாவின் அஸ்தியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமந்த ரெக்டர், தன் இரண்டு கண்கள் போன்ற கெட் லைட்டின் வெளிச்சத்தை இருண்ட தார் வீதி மீது பாய்ச்சியபடி, பெட்டியை இழுத்துக்கொண்டு பிரதான வீதிவழியே சுடலை தாண்டி வந்துகொண்டிருந்தது. வெள்ளை வேட்டி உடுத்திய பிரமுகர்களுடன் புதிதாக அரசியல் பிரவேசம் செய்ய ஆசைப்படும் இளைஞர்களும் வர, ஊர்வலம் மெதுவாக நகர்ந்து வந்தது. அந்தக் கூட்டத்துக்கு ஒவ்வாத ஒரு உருவத்தைச் சில வெள்ளைவேட்டிக் காவலர்கள் அகற்ற முற்பட்டதால் கூட்டத்திற்குள் சிறு சலசலப்பு உண்டானது. பறட்டைத்தலையும் தாடி மீசையும், தெறித்து விழுந்துவிடுவது போன்ற கண்களும் ஊத்தைச்சாரமும் பட்டன் பூட்டாத சேட்டும் சாராய நெடியுமாக இருந்த அந்த மனிதரைக் கூட்டத்தைவிட்டு சிலர் அப்புறப்படுத்திப் பின்தள்ளிச் சென்றனர்.

''அந்தாளுக்கு ஏண்டா அடிக்கறீங்கள்... அந்தாள்தாண்டா திருமலைக்கவிராயர்...''

''ஆரா இருந்தா என்ன, குடிச்சா இப்பிடித்தான் கேள்வி கேப்பானா... அவன் கதைக்கிற கதைக்கு பல்லக் களட்டிக் கையில குடுத்துப் போடுவன்...''

''அந்தாள் நல்ல தமிழ்க் கவிஞனடா... கவிஞர் வில்வராயர்...''

''ஆரா இருந்தா என்ன கதைக்கிறத... இடம் வலம் தெரிஞ்சு கதைக்க வேணும்...''

லவுட் ஸ்பீக்கரின் சத்தமும் ரெக்டர் கெட்லைட்டின் வெளிச்சமும் முன்னே போக தந்தை செல்வாவின் அஸ்தியை சுமந்த ரெக்டர் சுடலையைத் தாண்டிப்போனது. சுடலை மதிலில் சாய்ந்திருந்த திருமலைக்கவிராயரின் குரல் லவுட்ஸ்பீக்கர் சத்தத்தில் அமுங்கிக் கேட்டுக்கொண்டிருந்தது.

''வரலாறு தெரியுமாடா பேப்பூலலி மக்களே... படிச்சிருக்கீங்களாடா... மாவிட்டபுரத்தில் ஒரு மந்தி அங்கு மடச்சேட்டை புரியுது வாசலில் குந்தி... மந்திக்கு பேன் பாத்த நந்தி ஆரெண்டு தெரியுமாடா உங்களுக்கு... தமிழினத் தந்தை செல்வாவாம்... துணிச்சலிருந்தா அந்தாள்ற அப்பன்ட பேரையும் சேர்த்து மைக்கில முழுசா சொல்லுங்கடா பாப்பம்... பேப்பூலலி மக்களே... சங்கே முழங்கா... சிங்களவன் ஊதினாலும் சரி... வெள்ளக்காரன் ஊதினாலும் சரி... தமிழன் ஊதினாலும் சரி... எந்தச் சாதிமான் ஊதினாலும் சரி... சங்கூகூகூகூகூகூகூகூ... தமிழன் என்டு சங்கு முழங்குமாம்.... பேப்பூலலி மக்கள்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளில் இலக்கற்றுப் பறந்து வந்த கற்கள் சுடலை மதிலில் விழுந்து தெறித்ததால் அமைதியாகிப் போன கவிராயர், களேபரத்தில் உடைந்துபோய்விடக்கூடாது என முன்னெச்சரிக்கையுடன் சுடலைக்குள் ஒளித்துவைத்த உருண்டைச் சாராயப்போத்தலைத் தேடத் தொடங்கினார். கவிஞரின் குரல் அமுங்கிப்போனதால் லவுட்ஸ்பீக்கரின் ஒலி துல்லியமாகக் கேட்கத்தொடங்கியது.

''தன்மானச் சிங்கம்...

தமிழர்களின் விடிவெள்ளி...

தந்தை செல்வாவின் அஸ்திக்கு...

பூரண கும்பம் வைப்பீர் வாசல் தோறும்...

முடியாதோர் பூமாலை தாரீர்...

அதற்கும் முடியாதோர் வீதியில் திரண்டு பேராதரவு தாரீர்...''

சிந்தாமணிபுரம் தாண்டி, படுக்கைக்குள் அஸ்தியைச் சுமந்த ஊர்வலம் மெல்ல நகர்ந்து வந்தது. வீதியோரங்களில் வைக்கப் பட்டிருந்த நிறைகுடங்களிலிருந்த நீரை, ரெக்டருக்கு முன்னே தார் வீதியில் ஒரு வெள்ளை வேட்டிக்காரர் ஊற்றி, நிறைகுடத் தேங்காயை வீதியில் சிதறு தேங்காய் அடித்தார். தொடர்ச்சியாகச் சிதறு தேங்காய்கள் தார் வீதியில் உடைபட ஊர்வலம் கிருஸ்ணபுரிக்குள் நுழைந்தது. யப்னா ஸ்டோரிலிருந்து கூப்பன்கடைச்சந்திவரை வீதியில் தொடர்ச்சியாகப் போடப்பட்டிருந்த சீனவெடிச்சரம் வெடிக்கத்தொடங்கியது. இருளை பளிச்பளிச் என்று கிழித்து, காற்றில் கந்தகநெடி பரவ, வெடியோசை தொடர்ச்சியாக அதிர, ஊர்வலம் கிருஸ்ணபுரி தாண்டி சிறிமாபுரத்துக்குள் நுழைந்தது.

லவுட்ஸ்பீக்கர்காரர் தன் குரலில் வீரியம் குறையாதிருக்க பாடுபட்டுக்கொண்டிருந்தார். இப்போது சிறிமாபுர வீதிகளில் ஆண்களைவிட இடுப்பில் துண்டும் மார்பில் பிளவுசும் அணிந்த சிறிமாபுரப் பெண்கள் அதிகமாகியிருந்தார்கள். அவர்கள் ஆண்களைத் தங்கள் வீட்டு வளவுகளுக்குள்ளும் ஒழுங்கைகளுக்குள்ளும் நகர்த்திக்கொண்டிருந்தார்கள். திடீரென்று சிறிமாபுர வீதியோர வீடு ஒன்றின் தகர வேலிக்குப் பின்னேயிருந்து எரிந்துகொண்டிருந்த விறகுக்கட்டைகளும் தணல்கங்குகளும் ஊர்வலத்துக்குள் சரமாரியாக வந்து விழத்தொடங்கின. சில வெள்ளை வேட்டிகளில் தீப்பற்றிப் பின் அணைந்தது. சில எரிந்த விறகுக்கட்டைகள் ரெக்டர் பெட்டிக்குள்ளும் விழுந்து தெறித்தன. பதறிப் போன ஊர்வலம் பதற்றத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலசலத்துச் சிதற முற்பட்டது. வெள்ளை வேட்டிப் பிரமுகர்கள் சிதற முற்பட்ட கூட்டத்தைக் கட்டுப்படுத்தி ''பொறுமை... பொறுமை...'' என ஊர்வலத்தைக் கட்டுப்பாட்டுடன் நகர்த்த முற்பட்டனர். சிறிமாபுரத்து பெண்கள் சத்தம் வைத்து ஆண்களை அடக்கி வீதியைவிட்டு அப்புறப்படுத்திக்கொண்டே, ஊர்வலத்தைக் கடந்துபோகுமாறு கேட்டுக் கொண்டிருந்தார்கள். லவுட்ஸ்பீக்கரின் சத்தம் அடங்கிப்போக, பதற்றத்துடன் சிதறிப்போன ஊர்வலம் மீண்டும் திரண்டு அமைதியாக நகர்ந்துகொண்டிருந்தது.

கூப்பன்கடை சந்தியில் நின்றிருந்த உதயன் அரியத்தின் இடுப்பில் சுற்றியிருந்த சைக்கிள் செயினை வேகமாக அவிழ்த்து எடுத்தான். குட்டியண்ணன், பவன் அண்ணனின் வேலிச் செத்தைக்குள் ஏற்கனவே மறைத்துவைத்திருந்த வாளை உருவி எடுத்தார். திருக்கைவால், தடிகள், இரும்புக் கம்பிகள் சகிதம் ஒரு சிறுகூட்டம், கூப்பன்கடையடிச்சந்தியிலிருந்து சிறிமாபுரம் நோக்கிப் பாய எத்தனித்தது. சேனாதி மாஸ்டரும் கள்ளுத்தவறணை அம்மாச்சியும் அவர்களைக் கடுமையாக அதட்டிக் கட்டுப்படுத்தினார்கள்.

''இப்ப அமைதியா இருங்க... ஊர்வலம் அமைதியா கன்னியா போய்ச் சேரட்டும்... பிறகு பாக்கலாம்...''

ஊர்வலத்திலிருந்து விலகிய ஜெகாண்ணனும் கள்ளுத்தவறணை அம்மாச்சியின் மகன் விஜயனும் தம் வேட்டி சேட்டுக்களில் தணல் பட்ட அடையாளங்களுடன் கூப்பன்கடைச்சந்திக்கு வந்துசேர்ந்தார்கள். மூர்க்கமான கொன்னை கோபத்துடன் ஜெகாண்ணன் வெடித்தார்.

''எ.. எ.. எ.. டுங்.. ங்.. ங்.. கம்மாச்சி.. சி... து... து... வக்க... ரெ... ரெ... ண்டு... பே... பே... ர்ர... ர... த... த... லையாச்சும்... ம்... உ... உ...ருலோனும்.. ம்... இ...இ... ண்டைக்கு...''

விஜயன் அமைதியாக நின்றார்.

''அஸ்தி சிறிமாபுரம் தாண்டி யமாலியாக்க போயிற்று... எல்லாம் அந்த சம்புவும்... தளசிடயும் ஏற்பாடுதான் இது... அவங்க ரெண்டுபேரும்தான் நாங்க திரும்பி வரேக்க கெக்கட்டம்விட்டு சிரிச்சுக்கொண்டு நின்னாங்கள்...''

''அந்தச் சம்பு நாய்... மங்களக்கா... மங்களக்கா...எண்டு குசினிவரைக்கும் புகுந்து புட்டுக் கட்டியும்... தேங்காப்பூவுமா திண்டதுக்கு நன்றி காட்டிற்றான்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தே மீண்டும் லவுட்ஸ்பீக்கர் ஒலிக்கத் தொடங்கியது. ஊர்வலம் சிறிமாபுரம், யமாலியா தாண்டி முருகாபுரிக்குள் நுழைந்துவிட்ட திருப்தியுடன் கூப்பன்கடைச்சந்தியில் கூடிநின்ற கூட்டம் மெல்ல கலையத்தொடங்கியது.

மூத்தம்மாச்சியின் ஈரப்பிலா மரத்துக்குக் கீழே உதயனும் சிவாவும் அரியமும் கூடிநின்றார்கள்.

''நான் சீயாட வாடியை கொழுத்தப்போரன், வாராக்கள் வாங்க... பயந்தாக்கள் வரவேணாம்...''

உதயன் மூர்க்கமாக நின்றான். இருளில் உதயனுக்குப் பின்னே ஒரு உருவம் கையில் தென்னைமட்டையின் அடிப்பக்கத்துடன் நெருங்குவதை அவர்கள் கவனிக்கவில்லை. உதயனின் முதுகில் சலார்சலாரென விழுந்த அடியுடன் அவர்கள் சிதறி ஓடினார்கள்.

''வெறுவாய்க்களம் கெட்ட நாய்கள்... அஞ்சுசதத்துக்கும் பத்துச்சதத்துக்கும் உடம்ப வருத்தி மனிசன் மாடா முறியிறம், சும்மா கிடந்து திண்டு திண்டு கொழுப்பேறிப்போன நாய்கள்... வாடியக் கொழுத்தப் போறாங்களாம்... வெறுவாய்க்களம் கெட்ட நாய்கள்... நானே காலையில உன்னக் கொண்டே பொலிசில குடுத்துப்போட்டுத்தான் மறுவேல பாப்பன்...''

மூத்தம்மாச்சி தென்னை ஓலையின் அடிமட்டையைக் கீழே போட்டுவிட்டு சீயாவின் வாடி நோக்கி இருளில் நடந்தார். நினைவு தெரிந்த நாளிலிருந்து தொடரும் நட்பு. இருளும் முதுமையும் பதட்டமும் தடுமாறவைத்தபோதும் வேகமாக நடக்க முனைந்தார் மூத்தம்மாச்சி.

## 2.2

தன் உதட்டில் கரிப்பது கடல் காற்றிலிருக்கும் உப்பின் சுவையா அல்லது தன் உதட்டின் வெடிப்பில் வழியும் இரத்தத்தின் சுவையா என்பது பற்றியெல்லாம் ஆராயும் மனநிலையில் ஜொலியக்கா இருக்கவில்லை. தொடர்ச்சியாக எதையாவது கார்ந்துகொண்டிருக்கவே ஆசைப்பட்டாள். கட்டுப்படுத்த முடியாதபடிக்குத் தொடர்ச்சியாக வாய்க்குள் எச்சில் ஊறிக்கொண்டேயிருந்தது. கடைவாயில் வழிந்த எச்சில் ஜொலியக்காவின் கழுத்து, நெஞ்சு எனப் பரவிக் கொண்டேயிருந்தது. குளிர், வெக்கை, இரவு, பகல் என்ற நினைவுகள் ஏதுமற்றுக் கிடக்கிறாள் ஜொலியக்கா. ஊதிப் பருத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலூனைப்போல தன் உடல் சுருக்கங்கள் ஏதுமற்று ஊதிப் பருத்து, வெம்மையில் தணலாய்க் காய்ந்துகொண்டிருப்பதான உணர்விலேயே ஜொலியக்கா உழன்றுகொண்டிருந்தாள். அவளது கோணல் மாணலாகச் சிதைந்து கறுத்துப்போன பற்களால் களிமண் கட்டி ஒன்றையோ காய்ந்த தடி ஒன்றையோ கார்ந்துகொண்டிருக்கவும் ஆசைப்பட்டாள்.

பல் வலி என்று ஜொலியக்கா வைத்தியசாலைக்குப் போனபோதெல்லாம் வைத்தியர்கள் மிரண்டுதான் போயிருந்தார்கள். இந்தப் பற்களுடன் வாழ்வது உன் உயிருக்கே ஆபத்தானது என்றார்கள். இந்தப் பற்கள் மிகவேகமாக உதிர்ந்து உன் வாய், பொக்கை வாயாகிவிடும் என்றார்கள். அப்படிச் சொன்ன ஒரு வைத்தியரின் மேசையைத் தன் பற்களால் கவ்வித் தூக்கிக் காட்டினாள் ஜொலியக்கா. வைத்தியர் தடுமாறிக் கதிரையுடன் கவிழ்ந்து விழுந்துபோனார். அந்த வைத்தியர் இறந்தும் போயிருக்கக்கூடும். ஜொலியக்காவின் பற்கள் இன்னமும் உதிராது தாடையைக் கெட்டியாகப்பற்றிக் கொண்டு எதையாவது கார்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

கருவாப்பட்டையின் சுவை நாக்கில் ஊறியதனால்தான் ஜொலியக்கா யப்னா ஸ்டோரின் பலசரக்குச் சாமான்கள் அடுக்கி வைத்திருந்த ராக்கையின் அடுக்கிலிருந்த சரைக்குள் கை வைத்தாள். யப்னா ஸ்டோர் முதலாளி ஜொலியக்காவின் கையை முறுக்கித் திருகிக் கையிலிருந்த கருவாப்பட்டையைப் பறித்து சரைக்குள் போட்டுவிட்டுத் தன் இடது கையால் ஜொலியக்காவின் கன்னத்தில் பொறி கலங்க அறைந்தார். ஆத்திரமடைந்த ஜொலியக்கா யப்னா ஸ்டோர் முதலாளியின் தோள்பட்டையைக் கார்ந்துவிட்டாள். சுடு புழுதி மணலில் ஜொலியக்காவை கடைக்காரர்கள் போட்டு உருட்டி அடித்ததில் உதடுகள் கிழிந்து உடல் முழுக்க சிராய்ப்புக் காயங்களாகக் கிடந்தாள் ஜொலியக்கா.

''எத்தினைக்கெண்டுதான் பொறுத்துப்போவாங்கள்... அண்டைக்கு ஐஸ் மில்லில... ஐஸ் கட்டி கேட்டு சண்டை போட்டிருக்காள்... குடுக்க இல்லை என்டோனே... ஐஸ்மில் வயசான காவல்காரரை நிலத்தில குப்புறவிழுத்தி முதுகில கடிச்சிருக்காள்... பள்ளிக்கூடத்துக்குப் போற சின்னப்பிள்ளைய மிரட்டி பென்சில வாங்கிச் சப்பி இருக்காள்...''

ஜொலியக்காவின் தலை கீழே தொங்கிக்கிடக்காதவாறு தன் கூலமான கைகளினால் முட்டுக்கொடுத்திருந்த மணிகண்டனண்ணன் சொல்லிக்கொண்டிருந்தான். ஜொலியக்காவின் உடம்பை யக்கடையான் தூக்கி வர, அரியம் கால்களைத் தோளில் வைத்துச் சுமந்துவந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அந்த மதியநேர வெயிலில் வியர்த்துக் களைத்திருந்தார்கள். ஜொலியக்காவின் உடம்பை வீதியிலிருந்து சாத்திரியார் அம்மாளின் வளவை நோக்கி சுமந்து வந்தார்கள். அவர்களுக்கு முன்னே வியர்வையில் நனைந்துபோயிருந்த தன் பருத்த உடலை அசைத்தபடி மூச்சுவாங்கி நடந்து வந்துகொண்டிருந்தாள் சாத்திரியார் அம்மாள்.

''சின்ன வயசில மாங்காய கையில வைச்சு திண்ணேக்க... சிறுவன் குரங்கொண்டு தன்ன... மாங்காக்காக உருட்டிஉருட்டிக் கடிச்சதெண்டு ஜொலி சொல்லி இருக்காள்... அதாலதான் இப்பிடி இருக்கோ சாத்திரியார் அம்மா...''

மணிகண்டனண்ணன் மெல்ல முனகிக்கொண்டான். இரத்தம் கலந்து எச்சில் ஜொலியக்காவின் கன்னத்தில் வழிந்துகொண்டிருக்க அவர்கள் சாத்திரியார் அம்மாளின் வளவுக்குள் நுழைந்தார்கள்.

''சிறுவன் கடிச்சுதோ... மந்திகடிச்சுதோ... எந்தக் குரங்கிட்டப் போய் நான் கேக்க... மரமஞ்சள் அவிச்சுக் குடிநீர் குடுத்துப் பாப்பம்... கொண்டே குடிசைக்க வழத்துங்க...''

பற்கள் கிட்டிக்கிடக்க விகாரமாகிப்போன முகமும் கை விரல்கள் குறண்டிக் கோணலாகக்கிடந்த உடலும் மிரட்டியதால், அரியம் வைரவர் கோவிலடி ஆலமரத்தை நோக்கி நடந்தான்.

## 2.3

எதிலோ, இடைவிட்டு இடைவிட்டு யாரோ தட்டுவது போன்ற மெல்லிய ஒலியை அரியம் கேட்டான். கண்விழித்தான் அரியம். வாதராணி மரத்தின் சிறிய இலைகளை ஊடறுத்து வந்த வெயில் தன் முகத்தையும் உடலையும் சுட்டெரிப்பதை உணர்ந்தான். அவன் படுத்திருந்த நிழல் விலகிவிட்டிருந்தது. வலது கணுக்கால் இடைவிட்டு இடைவிட்டுச் சுரீரென வலித்தது. வைரவர் கோவிலடி ஆலமரத்துக்குக்கீழ் உதயன் கராட்டி பழக்கும்போது, அவதானக் குறைவாகக் காலைப் பின்னால் வேகமாக எடுத்து, வைரவர் கோயில் சுண்ணாம்புச் சுவரில் இடித்துக்கொண்டதால் வலது கணுக்கால் திசு வெடித்துவிட்டிருந்தது. நாகலிங்கப் பரியாரியார் பத்துப்போட்ட காலையும் படுத்திருந்த சாக்கையும் இழுத்துக்கொண்டு அரியம் மகிழ மரத்தடி நிழலுக்குள் நகர்ந்தான்.

சாத்திரியார் அம்மாள் வளவு மதிய நேர உறக்கத்தில் அமைதியாகக் கிடந்தது. கடல்கூட அலை அடிக்கும் அரவமற்று உறங்கிக்கிடக்கிறது. இப்போது அரியத்துக்கு இடைவிட்டு இடைவிட்டுத் தட்டுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சத்தம் துல்லியமாகக் கேட்கிறது. தமிழ்ச் சொற்களைத் தொடர்ச்சியாக உச்சரித்துப் பேசமுடியாதுபோகும்போது, சில்வா சிரித்துக்கொண்டே நாக்கைச் சுழற்றி அந்த ஓசையை அடிக்கடி எழுப்புவது அரியத்துக்கு ஞாபகம் வந்தது. அரியம் சிறிமாபுர வேலியை நோக்கினான். சிறிமாபுர வேலி முன்னர் போல கம்பிவேலியாக இல்லாது பெரிய அரண் போல் வெந்திஸ்ஸில் வாங்கிய ரெயில்வே தண்டவாள சிலிப்பர் கட்டை நட்டு, தார் தகரம் அடித்த வேலியாக மாறிவிட்டிருந்தது. மேலும் கீழுமாக அடிக்கப்பட்டிருந்த இரண்டு தார் தகர இடைவெளிக்குள்ளால் வந்திருந்த கை விரல்களின் நகங்களை அரியம் கண்டான். தகர இடைவெளிக்குள்ளால் இரண்டு கண்கள் அவனைக் கூர்மையாகப் பார்த்துக்கொண்டிருந்தன. ஒருகணம் முள்ளந்தண்டு சிலிர்த்து வயிரெக்கி உடல் வெடவெடத்து அடங்கியது அரியத்துக்கு.

பத்துப்போட்ட காலை இழுத்துக்கொண்டு அரியம் சிறிமாபுர தகரவேலி நோக்கி நகர்ந்தான். தகர இடைவெளிக்குள்ளால் வந்திருந்த கைவிரல்கள் மறைந்துபோக, தகரவேலிக்குப் பின்னே ஒரு நிழலுருவம் அசைவதை அரியம் கண்டான். அரியம் குனிந்து தகர இடைவெளிக்குள்ளால் நீண்ட நாட்களுக்குப் பிறகு சிறிமாபுரத்தைப் பார்க்கிறான். தன் இடுப்பிலிருந்த சாரத்தை நழுவவிட்ட சில்வா குண்டியை ஆட்டி நெளிப்புக் காட்டிவிட்டு வீட்டுக்குள் மறைந்துபோனான்.

திரும்பி வந்த அரியம் மகிழ மரத்தடி நிழலில் கிடந்த சாக்கில் படுத்துக்கொண்டான். சில்வாவுடன் சுற்றிய சிறிமாபுர வீதிகளும் லவ்லேன் நெல்லு ஸ்டோர்களும் அரியத்தின் ஞாபகத்தில் வந்தன. போன சித்திரை வருசப் பிறப்புக்கு சில்வாவின் அம்மா, சக்கரையும் அரிசிமாவும் போட்டுச் செய்த கொண்டைப் பலகாரத்தைச் சீயாவின் வாடிக்குள் வைத்துத் தின்றது அரியத்துக்கு ஞாபகம் வந்தது. நாக்கில் புளிப்புத் தட்டியது அரியத்துக்கு.

வைரவர் கோயில் ஆலமரத்துக்குக்கீழே நடந்த கூட்டத்தில் கடுமையான தீர்மானங்கள் எடுத்திருந்தார்கள். சிறிமாபுரத்துக்காரர்களுடன் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது. குறிப்பாக வீட்டுக்குசினிவரைக்கும் வந்து பழகும் சம்பு போன்றவர்களை வீட்டுக்குள் மட்டுமில்லை, ஊருக்குள்ளேயே அனுமதிப்பதில்லை. யங்சன்றைஸ் விளையாட்டுக்கழகத்தில் எவ்வளவு திறமையான வீரராக இருந்தாலும் சிங்கள இளைஞர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. தமிழர்கள் சிங்களவர்களது வள்ளங்களில் தொழிலுக்குப் போகக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல் தமிழர்களது வள்ளங்களில் சிங்களவர்களைத் தொழிலுக்கு ஏற்றக்கூடாது. "நடக்காது..." ஒற்றை வார்த்தையில் முறித்துக்கொண்டு அமுக்கர் சம்மாட்டி தன் கருத்த பெரிய தொந்தியைத் தடவியபடி முதலில் எழும்பிப்போனார். தான் உயிருடன் இருக்கும்வரை தன் நீண்ட வளவின் விளிம்பிலிருக்கும் சீயாவின் வாடியை எழுப்பமுடியாது என்றார் மூத்தம்மாச்சி. ஊருக்குள் தனியொரு சிங்களக் குடும்பமாக இருக்கும் கிராம சேவகர் விக்டரின் வீட்டை எழுப்புங்கள், பிறகு சீயாட வாடியை எழுப்பிறத பாப்பம் என்று சொல்லிவிட்டு, தன் குடுமியை ஆட்டியபடி எழுந்து போனார் மூத்தம்மாச்சி. ஊருக்குள் சிங்களவர்களின் நடமாட்டம் குறைந்துதான்போனது. சாத்திரியார் அம்மாளின் வளவுக்கு மேலேயிருந்த கல்வீட்டுக்காரர்களெல்லாம் சிறிமாபுர வேலிக்குப் பதிலாக மதில் கட்டிவிட்டதை அரியம் நினைத்துப்பார்த்தான். கட்டாய வரி போட்டு அடைத்த தார் தகர வேலியோரத்தில் நிழலுருவம் ஏதும் தட்டுப்படுகின்றதா எனப் பார்த்தபடி படுத்துக்கிடந்தான் அரியம்.

## 2.4

"யக்கடையான் சீனாக்காரன் எண்டாலும்... மனிசிக்காரி காலிச் சிங்களத்திதானே..."

தலை நரைத்து, கூன் விழுந்து, முதுமையின் சோர்வுடன் தென்னைமரத்துக்குக் கீழேயிருந்து அரிசி அரிக்கும் காலிச் சிங்களப் பொம்பிளையைப் பார்த்தபடியிருந்தார் யக்கடையான். முழங்காலுக்குக் கீழே நீண்ட கைகளும் கால்களும் சோர்வடைந்து தான் திடீரென முதுமை அடைந்துவிட்டதுபோல கவலைப்பட்டார் சீன தேசத்து சிகப்புத்தோல் யக்கடையான். காலைப்பொழுதின் இளவெயில் காலிச் சிங்களப் பொம்பிளையின் கறுத்ததோலில் படிந்துகிடப்பதைப் பார்த்தபடியிருந்தார் யக்கடையான். கறுத்த பொம்பிளையாக இருந்தாலும், இளமையில் திடமான உடற்கட்டும் நல்ல முகவாகும் சிவந்த உதடுகளும் கொண்டவளாகத்தான் அவள் இருந்தாள்.

யக்கடையான் மிக இளவயதிலேயே, கிட்டத்தட்ட ஒரு அடிமைக்கூலித்தொழிலாளியாக ஆங்கிலேய சரக்குக்கப்பலில் சேர்ந்திருந்தார். அன்றைய தினம் நத்தார் களியாட்டத்தில் மூழ்கிக்கிடந்தது கப்பல். கரைகள் கண்ணுக்குத் தெரியும் காபர் ஒன்றில், அவர் வேலை செய்யும் கப்பல் நங்கூரம் இட்டிருப்பதை யக்கடையான் கணித்து வைத்திருந்தார். முகத்தில் கறுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மைத்தழும்புகள் நிறைந்த, வெள்ளைத்தோல்க்கார மேற்பார்வையாளன் அவரைத் தொடர்ச்சியாகத் தொல்லைப்படுத்திக் கொண்டேயிருந்தான். தனது திடகாத்திரமான உடற்கட்டைப் பற்றிய பயமில்லாது, அதிகாரத்திமிரில் தன்னை துஸ்பிரயோகம் செய்யும் அந்த மேற்பார்வையாளனை அவர் வெறுத்தார். புளித்த சாராய நெடியுடன் சதா எதையாவது தின்று துர்நாற்றம் வீசும் வாயால் கொஞ்சித் தன் முகத்தை எச்சில்படுத்தித் தொடையில் பிசுபிசுப்பான இந்திரியத்தை வழியவிடும் அம்மைத்தழும்புக்கார மேற்பார்வையாளனை அவர் கடுமையாக வெறுத்தார். யக்கடையான் அன்று தெளிவான தீர்மானத்துடனேயே இருந்தார். தப்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவைத்துவிட்டு அம்மைத்தழும்புக்கார மேற்பார்வையாளனை அன்றிரவு கப்பலின் ஒதுக்குப்புறமான இடத்தில் வைத்துச் சாராயப் போத்தலால் கடுமையாகத் தாக்கிவிட்டு, கடலுக்குள் கயிற்றில் தொங்கி இறங்கி, இருளோடு இருளாக நீந்திக் கரைசேர்ந்திருந்தார். தான் நீந்திக் கரைசேர்ந்த இடம் எந்தத் தேசம் என்பது பற்றியெல்லாம் அவர் கவலைப்பட்டிருக்கவில்லை.

நீந்திக் கரைசேர்ந்த விடியலில் யக்கடையான் கண்ணில்பட்டது காட்டுமரங்களுக்கிடையில் தெரிந்த வெள்ளைநிற நீண்ட கூர்கொண்ட கோபுரமே. காவி உடுத்தித் தலையை மொட்டையாக மழித்திருந்த, தம் நாட்டுச் சாதுக்கள் போன்று இருந்தவர்களிடமே அவர் சரணடைந்திருந்தார். அந்த பன்சலையிலிருந்த உயர்ந்த காட்டுமரங்களின் குளிர்ச்சியைப்போலவே, சாதுக்களும் அவருக்கு நிழல் தந்தார்கள். தன் தேசத்தைப்போலவே இங்கும் புத்தர் அவருக்கு நெருக்கமானவராக இருந்தார். பின் தான் கரைதட்டிய இடம் சிலோன் தீவின் காலி நகரம் என்பதை அறிந்துகொண்டார்.

அதிகாலையில் தேனீக்களின் இரைச்சலைப்போல சாதுக்கள் தனக்குப் புரியாத மொழியில் பிரித் ஓதும் ஓசை, அவரது அதிகாலைத் தூக்கத்தை நரகமாக்கிக்கொண்டேயிருந்தது. அந்தச் சாதுக்களைப்போல பிச்சையெடுத்துண்டு, இளமையின் உணர்வுகளை அடக்கமுடியாது போனதால் அவர் அங்கிருந்து வெளியேறினார்.

காலியின் நகர்ப்புறக் கடைகளில் மூட்டை தூக்கும் கூலிவேலையாட்களுடன் யக்கடையான் தன்னை இணைத்துக் கொண்டார். காலியின் புறநகர்ப் பகுதி ஒன்றில்தான் காலிச் சிங்களப் பொம்பிளையைத் துணையாக்கிக் கொண்டார். புத்தர் குழந்தைகளைப் பெற்றெடுத்த பின்னரே பிறப்பறுத்தல் பற்றிச் சிந்தித்தார். யக்கடையான் பிறப்பறுத்தல் என்பதில் கவனமாக இருந்தார். காலிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பொம்பிளை கருவுறாவண்ணம் கவனமாக இன்றுவரை இருக்கின்றார். யக்கடையான் பல தொழில்களுடன், தவிர்க்க முடியாது அவ்வப்போது களவெடுத்துமே காலிச் சிங்களப் பொம்பிளையின் தேவைகளையும் தனது தேவைகளையும் பூர்த்திசெய்துவந்தார். காலியில் களவெடுத்தபோது கட்டிவைத்துக் கடுமையாக அடித்தார்கள். சில வேளைகளில் பொலிசில் குடுத்துச் சிறைக்கும் அனுப்பியிருந்தார்கள்.

சாத்திரியார் அம்மாள் வளவுக்குள் குடிவந்த பிறகு, முதலில் எடுத்த களவு ரெக்டர் டயர்களைத் தாங்கும் இரும்புக்கிறாங்கைத்தான். அந்தப் பெரிய இரும்புக்கிறாங்கைத் தனி ஒரு ஆளாகத் தூக்கிச் சென்றிருக்கமுடியாது என்பதால், ஊருக்குள் கூட்டமாகத் திருடும் கும்பல் பற்றிய பயம் பரவிவிட்டது. கத்தரித்தோட்டத்துக்கு நீரிறைக்கும் மஞ்சள்நிற வூஸ்லி வோட்டப் பம்பைத் திருடிக்கொண்டு வந்தபோது சாத்திரியார் அம்மாளிடம் மாட்டிக்கொண்டார் யக்கடையான். கட்டிவைத்து அடிக்கவோ பொலிசில் குடுக்கவே செய்யாது எச்சரிக்கையுடன் விட்டுவிட்டார் சாத்திரியார் அம்மாள். இங்கு கரைவலை வேலைகளும் தோட்ட வேலைகளும் கடுமையான வயல்வேலைகளும் தென்னைமரத்தில் தேங்காய் பிடுங்கும் வேலையும் தொடர்ச்சியாகக் கிடைத்ததாலும் வாழ்க்கைச்செலவு குறைவாக இருந்ததாலும் காலம் களவில்லாது நகர்ந்துபோனது அவருக்கு. திரும்பவும் காலிக்குப் போய்ப் புதிதாகத் தொழில் செய்வது பற்றிய யோசனை இல்லாமலிருந்தது அவருக்கு. தனது கையிருப்புப் பற்றி யக்கடையான் சிந்தித்துப்பார்த்தார். கையிருப்பு காலிக்கு ஓராள் பஸ் செலவுக்கே பற்றாதிருந்தது. இருவருக்குமான பஸ் செலவு, குறைந்தது ஒரு வாரத்துக்கான சாப்பாட்டுச்செலவு என யக்கடையான் மனம் கணக்குப்போடத் தொடங்கியது. அவர் கண்களை மூடினார். காலிச் சிங்களப் பொம்பிளையும் சாத்திரியார் அம்மாளும் மறைந்து போனார்கள். அவரது கண்களுக்குள், அந்த ஊர் வீதியும் ஒழுங்கைகளும் மரங்களும் வீடுகளும் மனித முகங்களும் நாய்களும் கோழிக்கூடுகளும் தோட்டங்களும் ஒரு வரைபடம்போல் உருவாகத்தொடங்கின.

## 2.5

அரியம் பள்ளிக்கூட வகுப்பறைக்குள் வந்தபிறகும் பதற்றமாக இருந்தான். இன்று சித்திரப் பாடத்துக்கான சோதனை. தன் உதடு துடிக்காதபோதும், துடிப்பதான விதிர்விதிர்ப்பை உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளில் நடுக்கம். பதற்றத்தைத் தணிக்க அரியம் தன்னைச் சுற்றி, வகுப்பறையை நோட்டம்விட்டான். காலை நேர இளவெயில், வகுப்பறை அரைச்சுவருக்கு மேலாக, ஓரமாக இருந்த மேசைகளின் விளிம்போரமாய்ப் படிந்துகிடந்தது. கரும்பலகை எழுத்துக்கள் ஏதுமற்றுத் துடைக்கப்பட்டிருந்தது. ஆனாலும் வெண்கட்டித்துகள்கள் கரும்பலகையில் திட்டுத்திட்டாகப் படிந்துதான்கிடந்தன. பக்கத்திலிருந்த முசம்மீல் வெள்ளைத்தாளின் விளிம்புக்கு பென்சிலால் அடிமட்டம் வைத்து, கோடு அடிப்பதில் தீவிரமாக இருந்தான். இடப்பக்கத்தில் நீளமாக இருந்த வாங்கில் தொடர்ச்சியாக இருந்த தமிழ்ச்செல்வி, நஜீமா, கௌரிப்பெட்டை, சிவாயினி எல்லோரும் தலைகவிழ்ந்து, வெள்ளைப்பேப்பரின் விளிம்புக்குக் கோடு அடித்து, பெயர், வகுப்பு என்பவற்றை எழுதுவதில் தீவிரமாக இருந்தார்கள். திரும்பவும் அரியத்தைப் பதற்றம் பற்றிக்கொண்டது. அரியம் கண்களை மூடிக்கொண்டான்.

கண்ணுக்குள் பள்ளிக்கூடம் நோக்கி நீளும் சிறிமாபுரத்துத் தார் வீதியில், குட்டி அண்ணனின் தங்கச்சி நளாயினி அக்கா பள்ளிக்கூட வெள்ளைச்சட்டையுடன் குப்புற விழுந்துகிடந்தாள். அவளுக்கு முன்னே வீதியில் சிதறிக்கிடந்தன அவள் கையில் வைத்திருந்த புத்தகமும் கொப்பிச் சாமான்களும். சிறிமாபுரத்து ஆண்களும் பெண்களும் சின்னப் பிள்ளைகளும் கெக்கட்டம்விட்டுச் சிரித்தார்கள். நளாயினி அக்காவின் முழங்கால், முழங்கையில் ஏற்பட்ட சிராய்ப்புக் காயங்களில் இரத்தம் துளிர்த்துக்கிடந்தது. பழைய பெரிய லொறி டயர் ஒன்றை உருட்டிவந்து நளாயினி அக்காமீது மோதிவிட்டு சில்வா கெக்கலித்துச் சிரித்தான். சில்வா பின்புறமாக அரியத்தை நோக்கித்தான் டயரை உருட்டிவந்தான். அரியம் சட்டென விலகி நின்றதால்தான் முன்னே நடந்துபோய்க் கொண்டிருந்த நளாயினி அக்காவை டயர் மோதித் தள்ளியது. விசும்பிவிசும்பி அழுதபடி பள்ளிக்கூடத்துக்குள் வந்த நளாயினி அக்கா பரீட்சை எழுதுவாளா இல்லை திரும்பி வீட்டுக்குப் போய்விடுவாளா என அரியம் கவலைப்பட்டான். இப்போதெல்லாம் கிருஸ்ணபுரியிலிருந்து சிறிமாபுரம் தாண்டி யமாலியா சந்தியிலிருக்கும் பள்ளிக்கூடத்துக்குப் பயந்து பயந்தே வரவேண்டியிருந்தது.

''தமிழக் கட்டிய தக்காளி முட்டய...

வெட்டிப்பாத்தா... தும்புக்கட்டய...''

என்றோ...

''அணிலுக்கு முதுகில மூணு கோடு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு கெட்டான் தமிழனுக்கு...

மூஞ்சில மூணு கோடு...''

என்றோ...

கிருஸ்ணபுரிப் பிள்ளைகள் சிறிமாபுரம்தாண்டி பள்ளிக்கூடத்துக்கு வரும்போது இப்படி ஏதாவது சொல்லிச் சீண்டிக்கொண்டேயிருப்பார்கள். சிறிமாபுரத்து சம்புவோ சில்வாவோ தளசிட மகனோ சிறிமாபுர ஒழுங்கைக்குள்ளோ வீதியோரத்திலோ நின்று ஏதாவது சொல்லிக் கெக்கட்டம்விட்டு சிரித்துச் சீண்டுவார்கள். அருகில் வந்து தனகுவதில்லை. இனி அடிக்கடி இப்படித் தனகித் தொல்லைகொடுக்கப் போகிறார்கள் என்ற நினைப்பு அரியத்தை பயங்கொள்ளவைத்தது. கண்களைத் திறந்த அரியம் பதற்றத்தைக் குறைக்க வெள்ளைப் பேப்பரின் விளிம்புகளுக்குக் கோடு அடிக்கத்தொடங்கினான்.

மீண்டும் கண்களை மூடிச் சித்திரப்பாடம் எடுக்கும் ராசிக்பரீட் சேரைத் தன் நினைவுகளுக்குள் கொண்டுவர முனைந்தான். ஒடுங்கிய முகத்தில் படர்ந்துகிடக்கும் தாடியும் மீசையும் கழுத்துவரை நீண்டுதொங்கும் சுருண்ட தலைமுடியும் தடித்த பெரிய கொளர்வைத்த சேட்டும் எலிபெண்ட் கால் லோங்சுமாக அவர், அவன் நினைவுகளுக்குள் வந்துநின்றார். அவர் கைகளில் பச்சையான, பழுத்த, மண்ணுக்குள் புதைந்து உக்கிய இலைகளை வைத்திருக்கிறார். பச்சை இலையில் தெரியாத அதன் நரம்புகளை, பழுத்த இலையிலும் பழுத்த இலையில் காண முடியாத நரம்புகளை மண்ணுக்குள் புதைந்து உக்கிய இலையிலும் உற்றுக் கவனிக்கச் சொல்லிக்கொடுக்கிறார். அரியம் கண்களைத் திறந்தான். வகுப்பு பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்தது.

ராசிக்பரீட் சேர் பாதி வகுப்பறைச் சுவர் அவரது நெட்டையான உருவத்தை, இடுப்பளவுக்கு மறைக்க நடந்துவந்து, படிகளில் ஏறி வகுப்பறைக்குள் வந்தார். ஒரு கையில் பச்சை நிறத்தில், மஞ்சள் அடித்த பழுத்தும் பழுக்காததுமான பப்பாசிப்பழம், மஞ்சள் தூள் கலந்த தண்ணீர் ஊற்றிய கண்ணாடிப்போத்தலும் மற்ற கையில் அதிபர் அறைக்குள்ளிருக்கும் மர ஸ்ரூளுமாகத் தனது மேசை நோக்கிப் போனார். தனது மேசையின்மேல் ஸ்ரூளை வைத்து, அதன் மேல் மஞ்சள் தண்ணீர் நிறைத்த போத்தலையும் பப்பாசிப்பழத்தின் கூர்முனை அடிப்பகுதி தெரியுமாறும் வைத்துவிட்டு வகுப்பறையை நோட்டம்விட்டார். வகுப்பறை அமைதியாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்க... நீங்க... இருக்கிற இடத்தில இருந்து பார்க்க... உங்களுக்கு எப்பிடி... எப்பிடித் தெரியுதோ அப்பிடியே ஸ்ரூளின்ட அடிப்பகுதியோட சேர்த்துக்கீறுங்க...''

தன் கதிரையை வகுப்பறைப் பாதிச்சுவர் ஓரமாக இழுத்துப் போட்டு அமர்ந்து, புத்தகம் ஒன்றைப் படிக்கத் தொடங்கினார் ராசிக்பரீட் சேர்.

அரியம் வேகமாகக் கீறத் தொடங்கினான். போத்தலிலிருக்கும் வெளிர் மஞ்சள் நிறத்தையும் பப்பாசி அடிப்பகுதியிலிருக்கும் மினுங்கும் மஞ்சள் நிறத்தையும் தனது சோக் கலரால் வேறுபடுத்திக் கலரடிக்கமுடியாது திணறினான். கௌரிப் பெட்டை, மேசையில் முழங்கைகளை ஊன்றி எக்கி எக்கி மேசையைப் பார்ப்பதும் பின் கீறுவதும் ரேசறால் அழிப்பதுமாக இருந்தாள். அரியம் மீண்டும் கண்களை மூடினான். கௌரிப் பெட்டை பீ கழுவுவதற்காக அம்மணமாக அவன் கண்களுக்கு முன்னே நின்றாள். திடுக்கிட்ட அரியம் கண்களைத் திறந்தான். வேகமாகச் சிறிய துண்டுப் பேப்பரில் கௌரிப் பெட்டையை அம்மணமாகக் கீறத் தொடங்கினான். அவள் கால்களுக்கிடையில் வழிந்த மலத்தின் மஞ்சள் நிறத்தை துல்லியமாகக் கொண்டுவர முனைந்தான்.

''அடய்... நீ சோதனைக்கு படம் கீறாம... வப்புப் படமா கீறுறாய்... பொறு... பொறு... சேரிட்டச் சொல்லிக்குடுக்கிறன்...''

அரியம் நிமிர்ந்தான். ரவிச்சந்திரன் அவன் முகத்தை, தன் முகத்துக்கு மிக நெருக்கமாக வைத்துப் படத்தைப் பார்த்துக் கொண்டுநிற்பதைக் கண்டான். பயத்தில் தன் இதயம் வலிக்கும் அளவுக்கு வேகமாக அடிப்பதை அரியம் உணர்ந்தான். சட்டென சுதாகரித்துக்கொண்ட அரியம் அந்தத் துண்டுப்பேப்பரைக் கசக்கி வாய்க்குள்போட்டு சப்பத் தொடங்கினான். அரியத்தின் முகத்தையே விறைத்துப்பார்த்தபடியிருந்த ரவிச்சந்திரன் தன் வாங்கில் அமர்ந்து கீறத் தொடங்கினான். மீண்டும் தன் கண்களை மூடினான் அரியம். கண்களுக்குள் சிறிமாபுர வீதி, நளாயினி அக்கா, சில்வா, சம்பு, கௌரிப் பெட்டை என மாறிமாறி வந்தார்கள்.

## 2.6

குதூகலமான மனநிலையிலிருந்து விடுபடுவதை எப்போதும் கள்ளுத்தவறணை அம்மாச்சியின் மூத்தமகள் விரும்புவதில்லை. நடந்து முடிந்த நிகழ்வொன்றையோ அல்லது படக்காட்சி ஒன்றையோ அசைபோட்டுத் தன் குதூகலமான மனநிலையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கவைத்துக்கொண்டேயிருப்பாள். நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. தலையணைக்குள் முகத்தைப் புதைப்பதும் பாயில் புரள்வதும் போர்வையை இழுத்து மூடுவதுமாகப் பூட்டிய அறைக்குள் தனியே கிடந்து உழன்றாள் கள்ளுத்தவறணை அம்மாச்சியின் மூத்தமகள். இப்போதுகூட தன் திருமணநாள் நிகழ்வொன்றை அசைபோட்டுக் கொண்டிருந்தாள். சிவகுமார், முத்துராமன், ஜெயசங்கர் போன்ற கதாநாயகர்கள் மாதிரியெல்லாம் தனக்குக் கணவன் வேண்டும் என அவள் ஆசைப்பட்டதில்லை. நாகேஸ், சுருளிராஜன், வை.ஜீ. மகேந்திரன் மாதிரி இருந்தால்கூட கட்டிக்கொள்ள அவளுக்குச் சம்மதம்தான். இவர்களின் திரைப்பட நடிப்புக் குணாம்சங்களுக்கும் சாயலுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லாத தம்பலகாமத்துக் கிராம இளைஞனைத்தான் கள்ளுத்தவறணை அம்மாச்சி அவளுக்குக் கல்யாணம் கட்டிவைத்தார்.

வீட்டு விறாந்தையுடன் சேர்ந்ததுபோல காட்டு மரங்கள் நட்டு, பெரிய கொட்டகையெல்லாம் போட்டுத்தான் கள்ளுத்தவறணை அம்மாச்சி அவளுக்குத் தடபுடலாகக் கலியாணம் செய்துவைத்தார். அவளுக்குத் தன் கழுத்தில் அவன் தாலி கட்டிய கணம்கூட ஞாபகத்தில் தங்கவில்லை. ஆனால் தன் புருசன் வீட்டுக்குக் கால்மாறிப்போன நிகழ்வு நன்றாகவே ஞாபகத்திலிருந்தது. மாப்பிள்ளை பொம்பிளை ராசையாண்ணன்ட டெக்சியில் போக, பின்னால் தட்டிவேன், ரெத்தினண்ணன்ட ரெக்டர் பெட்டி என்று ஊர்க்காரர்களையும் ஏற்றிக் கொண்டுதான் கால்மாறிப் போனார்கள் தம்பலகாமத்துக்கு. அவள் தன் வாழ்நாளில் முதல் முதல் போன நீண்டதூரப் பயணம் அதுவாகத்தானிருந்தது. காலையில் புறப்பட்ட பயணம் ஒவ்வொரு கோயிலாக நின்று ஊர்ந்து வெயில் கொளுத்தத் தொடங்கியபோதுதான் போய்ச்சேர்ந்தது. தம்பலகாமம் கிராமத்துக்குள் ஊர்வலம் நுழைந்தபோது பழைய கோணேசர் கோவில் சந்தியில் இளைஞர்களும் நடுத்தர வயதானவர்களும் என ஒரு கும்பல் கையில் தடிகள், மான் கொம்புகள் சகிதம் வழிமறித்தது.

''மாப்பிள பொம்பிள கோணேசரக் கும்பிடுரதா இருந்தாலும் சரி... கால்மாறி மாப்பிள வீட்ட போறதா இருந்தாலும் சரி... மாமன்மார் எங்கட கள்ளுச்செலவுக்கும்... சாராயச்செலவுக்கும்... உப்புக்கண்டத்துக்கும் காச வைச்சா மேல நகரலாம் இல்லாட்டி ரகளதான்...''

கையில் தடியும் தலையில் முண்டாசும் கட்டிய ஒரு மீசைக்காரர் முன்னுக்கு வந்து தங்கள் கோரிக்கையை முன்வைத்தார். அவர்கள் கேட்டதுக்கு மேலேயே, அவர்கள் விரித்த வெள்ளை வேட்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கவேண்டியதை வைத்தார்கள் மாமன்மார். ஊர்வலம் பழைய கோணேசர் கோவிலடியிலிருந்து கோலாகலமாகக் கிளம்பியது. மாப்பிள்ளை பொம்பிளையைப் பின்னே நடக்கவிட்டு முன்னே சிலம்படி, சீனவெடி பறக்க மாப்பிள்ளையின் பட்டித்திடல் வீடுவரை பட்டையைக்கிளப்பினார்கள் கிராமத்து இளைஞர்கள். கால்மாறிப் போன இரவு ஏக கலவரங்களில் கழிந்ததென்றால் அதிகாலை வேறுமாதிரி விடிந்தது. டவுனிலிருந்து வந்தவர்கள் அதிகாலையில் கக்கூசைத் தேடினார்கள். வயல்வெளி ஓரமாகப் பனங்கூடலைக் காட்டினார்கள் கிராமத்தவர்கள்.

''அங்கினக்க அங்கின பனங்கூடலுக்க, கூர் சீவின இடிகட்ட வடலியில சாத்தி இருக்கும்... சாண் அளவுக்கு இடிச்சுப்போட்டு குந்தவேண்டியதுதான்... அப்பிடியே வாய்க்கால்ல கழுவிப்போட்டு வரவேண்டியதுதான்...''

இப்படித்தான் டவுன்காரர்களுக்கு கக்கூசுக்கு வழிகாட்டினார்கள் கிராமத்துக்காரர்கள். சிலர் நாங்க திரும்பி வீட்ட போய்ப் பார்க்கிறம் என்று அடக்கிக்கொண்டார்கள். அடக்க முடியாதவர்கள் வடலிகளில் சாத்தியிருக்கும் இடிகட்டைகளைத் தேடிப்போனார்கள். அவள் உறவுக்கார டவுன் பையனும் அடக்கமுடியாது இடிகட்டையைத் தேடிப்போனான். வடலிகளுக்குள் மலவாசலில் புல் குத்தாத, மண் ஒட்டாத இடமாக அவன் தேடிப்பிடித்து இடிகட்டையை நிலத்தில் குத்தி உட்காருவதற்குள் பொழுது புலரத் தொடங்கிவிட்டிருந்தது. அவன் தான் கட்டியிருந்த சாரத்தை இடுப்புக்கு மேல் தூக்கி நெஞ்சோடு அணைத்துப் பிடித்தபடி, இடிகட்டையால் குத்திய ஓட்டைக்கு நேரே மலவாசலை வைப்பதில் பிரயாசைப்பட்டுப் பின் முக்குவதற்காக நிமிர்ந்தான். அவனுக்கு எதிரே வடலி ஓரமாக புற்களுக்குள் மறைந்தும் மறையாததுமாக சுருண்டு அவனையே பார்த்தபடி படமெடுக்கும் நல்ல பாம்பைக் கண்டான். பயத்திலும் பதற்றத்திலும் விதிர்விதிர்த்துப் போன அவன், தூக்கி நெஞ்சோடு அணைத்துப்பிடித்த சாரத்தைக் கீழே விடாது, பதறியடித்து வயல்வெளி தாண்டி, பின்புறமாக மாப்பிள்ளை வீட்டு முற்றத்துக்குள் பாம்பு பாம்பெனக் கத்தியபடி நுழைந்தான். அவனைக் கல்யாண வீட்டுக்கு வந்திருந்த பெண்களும் ஆண்களும் சிறுவர்களும் சூழ்ந்து கொண்டார்கள்.

''எங்க பாம்பு...''

''அங்க வடலிக் காட்டுக்க...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பயத்தில் சாரத்தைக் கீழே விடுவதாய் இல்லை. அவன் உடல் உதறிக்கொண்டேயிருந்தது. நிலமையை உணர்ந்த வில்வராணிதான் சொன்னாள்.

''தம்பி... பொம்பிளப் பிள்ளையள்... சின்னப் பிள்ளையள் எல்லாம் நிக்குதுகள்... பாவம் உன்ற பாம்பக் கண்டு பயப்பிடப் போகுதுகள்... சாரத்தக் கொஞ்சம் இறக்கையாச்சி...''

''உங்களுக்க விசர்... பகிடியாக்கிடக்கு எந்தப் பெரிய பாம்பு.... படமெடுத்த... ப... டி...''

அவன் விக்கிக் குழறி நின்றான். தன் நிலையை அப்போதுதான் உணர்ந்தான். அவன் வெட்கிக்கொண்டே சாரத்தைக் கீழே விட்டான். அடுக்களைக்குள் வேலையாயிருந்த மாப்பிள்ளையின் தமக்கை வெளியே வந்து கேட்டாள்.

''பெரிய பாம்போ...''

வில்வராணி சொன்னாள்.

''பயத்திலயும்... குளிரிலயும் விறைச்சுக்கிடந்ததால கண்ணுக்குத் தெரிய இல்ல...''

''தம்பி படமெடுத்தது எண்டு சொல்லுது...''

''சத்தியமா... தம்பீட... படமெடுத்த பாம்ப நான் பாக்க இல்லையக்க...''

இரவு நேரத்தில் கெக்கட்டம்விட்டுச் சிரித்தால் வெளியில் கேட்கும் என நினைத்த கள்ளுத்தவறணை அம்மாச்சியின் மூத்தமகள் தலையணைக்குள் முகம்புதைத்துச் சிரித்தாள். அவள் இப்படி எதையாவது நினைத்துக்கொண்டிருப்பாள். அவளது தம்பலகாமத்து மாப்பிள்ளை வரும் அரவம் ஏதுமில்லை. நேரம் கடந்துகொண்டிருந்தது. தம்பலகாமத்து மாப்பிள்ளை அவளுடன் குடும்பம் நடத்தத் தொடங்கியபோது எல்லாமே புதிதாகத்தானிருந்தது அவளுக்கு. வெளியில் மிடுக்காகத் திரிந்தாலும் அவளை நெருங்கும் போது, கைகள் நடுங்க, இதயம் வெளியே சத்தம் கேட்கும் அளவுக்குப் படபடக்க, உதடுகள் துடிக்க, பயந்து பயந்தே அவளை நெருங்கினான். முதல் தடவை என்றில்லாது, கடைசியாக அவளை நெருங்கிய போதும் அவன் அதே பதற்றத்துடனும் பயத்துடனுமே நெருங்கிவந்து அணைத்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் ஆடிக்கொண்டிருந்த கதிரை மேசை எல்லாவற்றினதும் ஆட்டமும் நின்றுபோயிருந்தது. நல்ல தச்சுத் தொழிலாளியாகவும் அவன் இருந்தான். வந்த புதிதில் வேலைக்கெல்லாம் ஒழுங்காகத்தான் போய்வந்தான். அடிக்கடி அவனது நண்பர்கள் அவனைப் பார்க்க வரத்தொடங்கினார்கள். வேலைக்குப் போவதை விட்டுவிட்டுக் கிராமத்திலிருந்து வரும் நண்பர்களுடன் மாமனார் கள்ளுத்தவறணையில் கள்ளுக் குடிப்பதும் சினிமாவுக்குப் போவதும் பீடிப்புகையுமாகக் காலத்தை ஓட்டத்தொடங்கினான். மாமனாருக்கும் மருமகனுக்கும் மெல்ல மெல்ல தொடங்கிய முறுகல், வாய்ச்சண்டையில் தொடங்கி அடிதடியில் முடிந்துபோனது. குடித்துவிட்டு வீட்டுக்குள் வந்த அவனைக் கள்ளுத்தவறணை அம்மாச்சி வெளியே தள்ளி கதவை அடித்துச் சாத்தியதில், அவனது கை விரல்கள் கதவிடுக்கில் மாட்டி நசிபட்டுப் போயின. பின் சில நாட்கள் அவன் கிராமத்திலேயே இருந்தான். அவளால் அவனை விட்டுவிட்டு இருக்கமுடியாததால் தகப்பனுக்குத் தெரியாமல் அவனைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தாள். அவனது கிராமத்தில் கள்ளுத்தவறணை அம்மாச்சிக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க சந்தர்ப்பம் பார்த்திருப்பதாக அவளை மிரட்டி அனுப்பினார்கள்.

அவனை இரவில் ரகசியமாகச் சந்திப்பதற்குத் தனது வீடு தோதாக இல்லை என்பதை அவள் உணர்ந்திருந்தாள். எப்போதும் ஆட்கள் புழங்கும் இடம். வீடும் சீற் வீடு. கூரையைப் பிரித்து இறங்கவும் முடியாது. மூத்தம்மாச்சியின் வீடு அவளுக்குத் தோதாகப்பட்டது. வீட்டில் வளர்ப்பு நாயும் இல்லை. மூத்தம்மாச்சியின் ஒரே மகன் பவன் நுவரெலியாவில் வேலையிலிருந்தான். இரண்டு கிழடுகள் மட்டும்தான் வீட்டில். ஓட்டுவீடாக இருந்ததால் ஓட்டைப் பிரித்து அறைக்குள் இறங்க முடியும். வீட்டையொட்டி வளர்ந்த முருங்கை கூரையோடு சவண்டிருந்தது.

நகரத்துக்கு வேலையாக வருவதுபோல மாலை நேரங்களில் வந்து, மலரக்கா வீட்டிலோ ரெத்தினண்ணன் வீட்டிலோ தங்கி, மூத்தம்மாச்சியின் வீட்டு ஓட்டைப் பிரித்து இறங்கி, அவள் போட்டுக் கொடுத்த திட்டப்படி, அவன் அவ்வப்போது அவளிடம் வந்துபோய்க் கொண்டிருந்தான். தன் புருசனுடனேயே கள்ளத்தொடர்பு வைத்திருக்கும் முதல் பெண் தானாகத்தானிருக்கும் என நினைத்துக்கொண்டாள். தலையணைக்குள் முகத்தைப் புதைத்துச் சிரித்தாள். இன்று அவன் வருவானோ தெரியாது. அவன் வரும் அரவம் ஏதும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கண்ணயர்ந்தும் அயராததுமான விழிப்பில் கிடந்தாள். முருங்கைக்கெந்து ஓட்டுடன் உரசுவதுபோலக் கேட்டது. அவள் விழித்துக்கொண்டாள். கூர்ந்து கேட்டாள். சில வேளை முருங்கை காற்றுக்கு அசைந்து ஓட்டுடன் உரசக்கூடும். இல்லை ஓட்டில் நடக்கும் அரவம். முருங்கைக்கெந்துகள் மிதிபடும் அரவம். அவன் வந்துவிட்டான். அவள் பரபரப்பானாள். சட்டென்று எழுந்து அரவமில்லாது பாயைச் சுருட்டி ஓரமாக வைத்தாள். போர்வையால் முக்காடிட்டுப் போர்த்திக்கொண்டு அலமாரிக்கும் சுவற்றுக்கும் இடையிலிருந்த ஒடுக்கமான இடவில் ஒழிந்துகொண்டாள். அவன் வந்து ஏமாற்றத்துடன் திரும்பும்போது பின்புறமாக வந்து கட்டியணைப்பது அவளது திட்டமாக இருந்தது.

ஓடுகள் பிரிக்கும் அரவம் கேட்டது. இருளில் வெள்ளி தெரிவதும் மறைவதுமாக இருந்தது அவளுக்கு. கூரையில் அரவம் ஏதும் இல்லை. பிரமையாக இருக்குமோ என நினைத்தாள். முகத்தை ஓடு கழட்டிய இடவுக்குள்விட்டு அறையை அவனது விழிகள் நோட்டம் விடுவது போல உணர்ந்தாள். சிலவேளை தான் இல்லை என அவன் போய்விடுவானே எனப் பயந்தாள். ஏதாவது சமிக்ஞை செய்வோமா என நினைத்தாள். தொடர்ந்து ஓடு கழற்றும் அரவம் கேட்டது. அவள் அமைதியானாள். சிலாகை இடைவெளிக்குள் முதலில் கால்கள் நுழைந்துவர, பின் உருவம் மிகக் கஸ்டப்பட்டுத் தன்னை உள்ளே நுழைப்பதைக் கண்டாள்.

பயத்தில் அவள் உடல் வெடவெடக்கத்தொடங்கியது. ஓட்டைப் பிரித்து இறங்கிக் கொண்டிருக்கும் உருவம் அவனுடையதாக இல்லை. அந்த உருவம் தரையில் இறங்கிவிட்டது. இனிக் கத்திக் கூப்பாடு போடமுடியாது. அவன் கையில் கத்தி ஏதும் இருந்தால் ஆபத்து. அவள் மூச்சடக்கி அரவம் காட்டாது அமைதியாக இருப்பது என முடிவெடுத்தாள். அவள் கணவன் உடல் ஒடுங்கித் தட்டையாக இருக்கும். மிகச் சுலபமாக இறங்கி ஏறிப் போய்விடுவான். மல்லுக்கட்டி இறங்கிய அந்த உருவத்தை எங்கேயோ பார்த்தது போலத்தானிருந்தது அவளுக்கு. முழங்காலுக்குக் கீழே நீண்ட கைகள். இருளும் பயமும் அவளைச் சிந்திக்கவிடவில்லை. ஓசை எழாது அலமாரிக் கதவை நெம்பித் திறந்த அந்த உருவம், தான் கொண்டுவந்திருந்த பையில் அலமாரிக்குள்ளிருந்து எடுத்த சாமான்களைத் திணிப்பதை அவள் கண்டாள். அதே வேகத்தில் திரும்ப ஊசிக்காலில் தொங்கிய உருவம் சலாகைகளுக்குள்ளால் தன்னைத் திணித்து ஓட்டில் அரவம் ஏற்படுத்திவிட்டுப்போனது. அவள் பெருமூச்சுவிட்டாள். பிரித்த ஓட்டின் வெளிக்குள்ளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரங்களும் கரிய வானமும் அவளுக்குத் தெரிந்தன. சட்டென்று அவள் நினைவுகளில் அந்த உருவம் வந்து நின்றது. கள்ளன் - யக்கடையான். வெளியே போய் மூத்தம்மாச்சியையோ பூரணம் பெரியம்மாவையோ எழுப்பிச் சொல்ல பயந்தாள். எதை எப்படிச் சொல்வது. நடப்பது நடக்கட்டும். காலையில் பார்த்துக்கொள்வோம் என முடிவெடுத்தாள். நெஞ்சு படபடக்க பாயை விரித்துப் போர்வைக்குள் சுருண்டு தூங்க முனைந்தாள். எப்போது உறங்கினாள் என்று தெரியாத ஒரு கணத்தில் உறங்கியும் போனாள்.

## 2.7

ராசநாதன் சற்றுத் தெம்பாக இருந்தான். அவன் கையில் அரசாங்க உத்தியோகமும் ஒற்றைக் குழல் துப்பாக்கியும் இருந்தன. ராசநாதனை ஊருக்குள் எல்லோரும் ஏமலாந்திப் பேயன் என்றார்கள். பூவாவிடம் காப்பென்டர் வேலை பழகப்போனபோது மரத்தன் மரமண்டைக்கு மரவேலைதான் சரி என்றார்கள். ஊருக்குள் S.S.C வரை படித்த இளைஞர்கள் பாராளுமன்ற தேர்தலில் வெல்லப்போகும் தமிழரசுக்கட்சி உறுப்பினர் நேமிநாதனுக்காக வேலைசெய்தார்கள். இவன் மட்டும் தொடர்ந்து ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர் நவரெட்ணராசாவுக்காக வேலைசெய்யப்போனான். இவனைவிட ஒரு விசரன் இனி ஊருக்குள் பிறக்கப்போவதில்லை என்றார்கள். பூவாவின் மகள் றோஸ்மேரியை உருகிஉருகிக் காதலித்தான். பூவாவும் அவனை வளர்த்த மூத்தம்மாச்சியும் அவனது அண்ணன்மார்களும் கடுமையாக எதிர்த்தார்கள். மண்ணெண்ணைக்குள் மலத்தியன் பவுடரைக் கரைத்துக்குடித்தான். செத்துப்பிழைத்துத் திரும்பிவந்தான். கார்க்கதவுக்கு வெளியில் காலைவைத்துக்கொண்டு கதவை அடித்துச் சாத்திய மொக்கனுக்குக் காதல் ஒரு கேடா என்றார்கள். நஞ்சு குடித்ததால் தொண்டை பேசமுடியாது போய்விட்டது என்றார்கள் வைத்தியர்கள். ஊருக்குள்ளும் கடற்கரை ஓரங்களிலும் தன் பாட்டில் அனுங்கிஅனுங்கி, பின் முனகிமுனகித் திரிந்தான். அவன் அதிகம் றோஸ்மேரியின் பெயரையே முனகித் திரிந்ததாகத்தான் ஊருக்குள் கதைத்தார்கள். பழைய தடித்த குரல் திரும்ப வராவிட்டாலும் கீச்சுக் குரலில் சொற்களைத் தெளிவாக உச்சரித்துக் கதைக்கத்தொடங்கினான் ராசநாதன்.

திருகோணமலை நகர ஒற்றை அங்கத்தவர் தொகுதியில் ஐக்கியதேசியக்கட்சி சார்பில் போட்டியிட்ட நவரெட்ணராசா தோற்றுத்தான் போனார். நேமிநாதனுக்காக வேலை செய்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்குள் வெடிகொளுத்தித் திரிந்தார்கள். பாராளுமன்றத்தில் ஆட்சியைப் பிடித்தது ஐக்கியதேசியக்கட்சி. ஒரு வருடம் பவ்வியமாக ஆட்சியை நடாத்திய ஐக்கியதேசியக்கட்சி தோற்றுப்போன தம் உறுப்பினர்களை பலப்படுத்த திட்டம்போட்டது. தோற்றுப்போன உறுப்பினர்களின் கைகளில் வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பங்களை அள்ளி இறைத்தது ஐக்கியதேசியக்கட்சி.

பொலிஸ்பயிற்சிக்கல்லூரியில் மூன்று மாத உடற்பயிற்சியும் துவக்குச் சுடும் பயிற்சியும் பெற்ற ராசநாதன் ஒருகையில் ஒற்றைக்குழல் துப்பாக்கியுடனும் மறுகையில் திருகோணமலை நாலாம் கட்டையிலிருக்கும் வனஇலாகாவுக்கான பாதுகாப்பு உத்தியோகத்தர் நியமனக்கடிதத்துடனும் வந்திறங்கினான். ஏற்கனவே வனஇலாகா பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக இருந்த தர்மபால மற்றும் சிறில் ஐயாவுடனும் இணைந்துகொண்டான். தர்மபால நன்றாகத் தமிழ் கதைக்கக்கூடிய கந்தளாய் சிங்களவர். சிறில் ஐயா அவ்வப்போது தமிழ் பேசவரக்கூடிய அபயபுரச் சிங்களவர். இருவருமே திருமணம் முடித்த நடுத்தர வயதுக்காரர்கள். இருவருக்குமே பிள்ளைகள் இருந்தார்கள். கடமை முடிந்து ஓய் கிடைக்கும்போது இருவரும் மாறிமாறி வீட்டுக்குப் போய்விடுவார்கள். அவர்களைவிட மிக அருகில் அவனது ஊர் இருந்தும் ராசநாதன் அந்த வன இலாகா பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தங்கும் விடுதியில் கிடைத்ததைச் சமைத்துச் சாப்பிட்டுக்கொண்டு அங்கேயே கிடந்தான்.

அவர்கள் இருவரும் ராசநாதனைப் பேசவைக்கவும் வீட்டுக்குப் போய்வரச்செய்யவும் முயற்சித்தார்கள். ராசநாதன் கல்லுளிமங்கனாக இருந்தான். அவர்கள் தங்கள் முயற்சியில் தோல்வி அடைந்தார்கள். ராசநாதன் முனகிமுனகித் திரிந்தான். அவர்கள் அவனைப் பேசவைப்பது எனத் தீர்மானித்தார்கள். ஒரு ஞாயிறு மதியத்துக்குப் பிறகு இருவரும் கையில் மாட்டுத்தாள்பையில் எதையோ சுற்றி எடுத்துக்கொண்டு குவாட்டசுக்கு வந்தார்கள். ராசநாதன் முனகிக் கொண்டே படுத்துக்கிடந்தான். அவர்களைக் கண்டதும் எழுந்திருந்தான் ராசநாதன். அவர்கள் உள்ளே வந்ததும் குவாட்டஸ் கதவை மூடித் தாழ்ப்பாளைப் போட்டார்கள். ராசநாதனுக்குப் பயமாக இருந்தது. தாங்கள் மாட்டுத்தாள்பைக்குள் கொண்டுவந்ததை நிலத்தில் பரப்பிவைக்கத் தொடங்கினார்கள். ஒல்டரக் உருண்டை கண்ணாடிச் சாராயப் போத்தல் பொன்நிறத்தில் நடுநாயகமாகத் தகதகத்தது. மீன் பொரியலின் வாசனையும் கணவாய்ப் பிரட்டலின் வாசனையும் குவாட்டஸ் அறை முழுவதையும் நிறைத்தன. ராசநாதன் தகதகக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராயப் போத்தலைப் பார்த்தபடியிருந்தான். தர்மபாலவும் சிறில் ஐயாவும் ஒருவரையொருவர் பார்ப்பதும் ராசநாதனைப் பார்ப்பதுமாக இருந்தார்கள். சிறில் ஐயா சாராயப் போத்தலைத் தூக்கி அடியைத் தட்டி, போத்தலை நெஞ்சுடன் அணைத்து மூடியைத்திருகித் திறந்தார். தர்மபால மூன்று கண்ணாடிக்குவளைகளைப் பக்குவமாக நிமிர்த்தி வைத்தார். சிறில் ஐயா கண்ணாடிக்குவளைகளின் அடியில் கொஞ்சம் கொஞ்சமாக அளந்து சாராயத்தை ஊற்றினார். நாசியை அரிக்கும் காரமான சாராயவாடை அறைக்குள் பரவியது. தர்மபால சாராயம் ஊற்றிய குவளைகளுக்குள் செம்பிலிருந்து பக்குவமாகத் தண்ணீரை ஊற்றிக் கலந்தார். ராசநாதன் சாராயக் கண்ணாடிக்குவளைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். தர்மபால ராசநாதனின் முகத்தைப் பார்த்துவிட்டு மெல்லிய புன்னகையுடன் கதைக்கத் தொடங்கினார்.

''ராசநாதன் ஒன்னும் பயப்பட வேணா... நாங்க, படி கிடைச்சா... சம்பளம் கிடைச்சா... ஒப்பும் கிடைச்சா, அப்ப சரி... இப்பிடி பாட்டி பொடுரதுதான் சரி... பயப்பிட வேணா... நீங்க சல்லி ஒன்னும் குடுக்க வேணா... உங்களுக்கு ஒரு கிளாஸ் சிறில் ஐயா ஊத்தி வைச்சிருக்கார்... ரைட்... நீங்க இஸ்ரப்பட்டா குடிக்கிறது... இல்லைணா வேணா... கணவா இருக்கி... கீரி மீன் பெரியல் இருக்கி... சும்மா கொரிக்கிர... சரி... நாங்க புள்ளா மப்புப் போடுறம் சரி...''

சிறில் ஐயாவும் தர்மபாலவும் கிளாசைத் தட்டி சியஸ் சொல்லி முதல் மிடரைத் தொண்டைக்குள் விட்டார்கள். முகத்தையும் உடலையும் உதறி ஆசுவாசப்படுத்திக்கொண்டார்கள். பின் சிங்களத்தில் தமக்குள் கதைத்துக்கொண்டே இரண்டாவது மூன்றாவது ரவுண்ட் எனக் கடந்துபோனார்கள். ராசநாதன் பிடித்து வைத்த பிள்ளையார் போல சாராயக் கிளாசையே பார்த்துக்கொண்டிருந்தான். போக்குவெயிலின் தகிப்பில் குவாட்டஸ்க்குள் கடும்புழுக்கமாக இருப்பதை ராசநாதன் உணர்ந்தான். புழுக்கத்தில் உடல் வியர்வையில் பிசுபிசுத்தது. வெளியே இடி முழக்கம் கேட்டது. பின் குவாட்டஸ் ஓட்டில் மழை பொடுபொடுக்கும் ஓசை கேட்டது. ராசநாதன் குவாட்டஸ் கதவைத் திறந்து வெளியே எழும்பிப்போனான். வியர்த்திருந்த அவன் உடலைக் குளிர்க்காற்று தழுவியது. குவாட்டஸைச் சுற்றியிருந்த பெரிய காட்டுமரங்கள் மழையில் நனைந்துகொண்டிருந்தன. வெளியே காய்ந்துகொண்டிருந்த தன் காக்கி யூனிபோமை எடுத்துக்கொண்டு திரும்பிவந்தான். தன் கரிய சுருள்முடித்தலையிலிருந்து மழைத்துளிகளைத் தட்டிவிட்டுக்கொண்டான். குவாட்டஸ் கதவைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தி யூனிபோமைக் கொடியில் போட்டுவிட்டு வந்து அவர்களுக்கு நெருக்கமாக அமர்ந்தான். ராசநாதன் எலக்ஸன் வேலைகளுக்காகப் போகும்போது குடித்திருக்கிறான்தான். நஞ்சு குடித்த பிறகு இதுவரை அவன் சாராயம் குடித்திருக்கவில்லை. ராசநாதனுக்குக் குடித்துவிட்டு ஓ என்று கத்தவேண்டும்போலத்தான் இருந்தது. வெந்த குடல் ஏதும் பிரச்சினை குடுக்குமோ என்ற பயம் இருந்தது. ராசநாதன் கிளாசை நெருங்கி உட்கார்ந்தான். வெளியே திரும்பவும் இடியோசை கேட்டது. குவாட்டஸ் ஓட்டின் மீது பெருமழைத்துளிகள் தொடர்ச்சியாக விழத்தொடங்கின. வெளியே மழை வலுத்துப் பெய்துகொண்டிருந்தது. அறைக்குள் புழுக்கம் அதிகமாக இருப்பது போல ராசநாதன் உணர்ந்தான். கிளாசைத் தூக்கி ஒரு மிடறை வாய்க்குள்விட்டுத் தொண்டையை நனைத்துக் குடலுக்குள் இறக்கினான். வெம்மையுடன் கூடிய விறைப்பும் தகிப்புமாக இறங்கும் சாராயம் அவன் தொண்டைக்குள் எந்தவித தாக்கமும் இல்லாது குடலுக்குள் அடங்கிப்போனது. உச்சந்தலையில் மட்டும் ஒரு சுரீர் என்ற வலி இருந்ததுபோலத்தான் ராசநாதன் உணர்ந்தான். கிளாசுக்குள்ளிருந்த முழுச் சாராயத்தையும் குடலுக்குள் இறக்கிவிட்டு ராசநாதன் அமைதியாக இருந்தான். குடலுக்குள் ஏதோ ஒரு கொந்தளிப்பை அவனால் உணரமுடிந்தது. அவர்கள் தங்களுக்கு ஊற்றும்போது ராசநாதனுக்கும் ஊற்றினார்கள். ராசநாதனும் குடித்துக்கொண்டிருந்தான். சிறில் ஐயா, தர்மபாலவுக்கு ராசநாதனுடன் பேசு என்பது போல கண்ணால் சாடை காட்டினார். தர்மபால ராசநாதனின் முகத்தைப் பார்க்காது, கீரி மீனில் முள்ளைக் கந்தல் பார்ப்பதுபோல பாவனை செய்துகொண்டே கதையைத் தொடங்கினார்.

''ராசநாதன்... நீங்க வேதக்கார ஆக்கள் இல்லத்தானே... சைவம்தானே... கோணேசரத்தானே கும்பிடுறது...''

''ஓம்...''

''அப்ப நீங்க ஏன் அடிக்கடி மேரி... மேரி... என்டு சொல்லுறது... ஏதாவது நேத்திக்கடனா...''

ராசநாதன் முறைத்தான்.

''ராசநாதன் கோவம் வேணா... சும்மா பகிடிதான்... ராசநாதன் நீங்க கலியாணம் கட்டி இல்ல... அம்மாட பேரும் மேரியா இருக்க ஏலா... அப்ப ராசநாதன்ட ஒரு லவ் ஸ்டோரி இருக்குப் போல...''

''ஓம்... லவ்தான்... றோஸ்மேரி...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆய்… அப்ப சிறில் ஐயா நினைப்பு சரிதான்… சிறில் ஐயா சொல்லிட்டதுதானே… ராசநாதன் லவ்வில மாட்டி என்டு… சிறில் ஐயாவும் லவ்தான்… சிறில் ஐயா லவ் பண்ணேக்க நோனாட வீட்டபோய் இருந்து கதைக்கிற… நோனாட அம்மா கசாதுபண்ணச் சொல்லி கேக்கிற… இவர் ஓம் சொல்லிட்டு திரியிர… நோனாட அம்மா பாத்தா இது சரிய வாரமாதிரி இல்ல… இவர் வீட்டுக்க நோனாவோட பேசிட்டு இருக்க… நோனாட அம்மா… பெரிய ஆமப்பூட்ட போட்டு கதவ வெளியில பூட்டிற்றுபோய் பன்சால சாதுவ கூட்டிற்று வந்து காட்டின… வேற வழியில்லாம சிறில் ஐயா கசாது பண்ணினதுதான்…''

தர்மபாலவும் சிறில் ஐயாவும் வயிரெக்கி வாய்விட்டுச் சிரித்தார்கள். ராசநாதன் அமைதியாக இருந்தான். தர்மபால சிரிப்பை அடக்கித் தொடர்ந்தார்.

''ராசநாதன் என்ட நோனாட பேர் என்ன தெரியுமா… சந்திரவதனி… தமிழ்ப் பொம்பிள தெரியுமா… அவங்கட அப்பா கந்தளாயில நல்ல காசுக்காரரள் மட்டுமில்ல… சண்டியரும் கூட… நாங்க லவ் பண்ணினதுதான்… ஊருக்குள்ள பெரிய அமாருதான்… தமிழ் பொம்பிளப் பிள்ளைகளிட லவ் நல்லம் தானே… தாவணி போட்டுட்டு கோயிலுக்க போறன் சொல்லிட்டு சைக்கிள்ல என்னோட சந்திரவதனி வந்ததுதானே… சைக்கிள்ல கந்தளாயில இருந்து அபயபுரம்வரைக்கும் வந்ததுதானே… சிறில் ஐயாட வீட்டதானே கொண்டுவந்து வைச்சிருந்த… இந்தா சிறில் ஐயா இருக்கார் கேட்டுப்பாருங்க…''

''ஓவ்… ஓவ்…'' சிறில் ஐயா சக்கப்பணியக் கிடந்து மற்ற ரவுண்டுக்கு சாராயத்தை ஊற்றிக்கொண்டே தலையை ஆட்டினார்.

''கொஞ்ச நாள் அவங்கட அப்பா பெரிய கஜால் எல்லாம் பண்ணித் திரிஞ்ச… புறவு எனக்கு ரெண்டு பிள்ள பிறந்தது… மூத்தபிள்ள ஆம்பிளப்பிள்ள… இரண்டாவது பொம்பிளப்பிள்ள… அதுக்கு புறவு அவங்கட குடும்பம்… எங்கட குடும்பம் எல்லாம் ஒண்ணுக்க மண்டுக்க ஆயிட்டாங்க… வெட இவராய்… ஆம்பிளப்பிள்ளைக்கு அனுரபிரியதர்சன் என்டு பேர் வைச்ச… பொம்பிளபிள்ளைக்கு சாந்தினிரூபிகா என்டு பேர் வைச்ச… முதல்ல நான் ஆம்பிளப்பிள்ளைய அனுர என்டும் பொம்பிளப்பிள்ளைய ரூபிகா என்டும் கூப்பிடுறதா நினைச்சுத்தான் பேர் வைச்ச… தமிழ் பொம்பிளைகளிட லவ் நல்லம்தானே ராசநாதன்… என்ற நோனா… ஆம்பிளப்பிள்ளைய அனுர என்டும் பொம்பிளப்பிள்ளைய ரூபிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்டும் கூப்பிட தொடங்கினா... கொஞ்ச நாள் போன புறவுதான் எனக்கு நோனாட லவ் விளங்கீச்சு... புறவு நான் ஆம்பிளப்பிள்ளைய பிரியதர்சன் என்டும்... பொம்பிளப்பிள்ளைய சாந்தினி என்டும் கூப்பிட்ட... எல்லாம் லவ் தானே ராசநாதன்... எங்கட வீட்ட தை பொங்கல் கொண்டாடுர... வெசாக் பொசன் கொண்டாடுர... நீங்க ஒன்டும் யோசிக்க வேணா ராசநாதன்... நாங்க இருக்கம்... உங்கட பொம்பிள வேதக்காரப் பொம்பிள... நீங்க சைவம்... பிரச்சின வரும்தான்... பேசிப் பாப்பம்... இல்ல... நம்மட பக்கம்தான் அரசாங்கம் இருக்கு... கையில அரசாங்கம் தந்த துவக்கிருக்கு... சிறில் ஐயாட மச்சினாட்ட டெக்சி இருக்கு... பொம்பிள கடத்திரம்... என்ன சொல்லுர சிறில் ஐயா...''

''ஓவ்... ஓவ்... இன்னவா... இன்னவா...'' சிறில் ஐயா தலை தரையைத் தொடுமளவுக்குப் போதையிலிருந்தார்.

''என்ன ராசநாதன் நாங்க கதைக்கிற... நீங்க சும்மா இருக்கிற...''

''அவ வேதக்காரப் பொம்பிள மட்டும் இல்ல...''

''புறவு...''

''அவ பறங்கிப் பொம்பிள...''

''அம்மட்ட சுதி... சிறில் ஐயா கேட்டுச்சா இவன்... லவ்வுக்கு பொம்பிள தேட இல்லதானே... இவன் கலர் பொம்பிள தேடிப் போயித்தானே...''

''கியல வெடக்னே யாலுவா...''

ராசநாதனுக்கு வயிற்றுக்குள் குத்துவலி எழும்பியது. முதலில் ஏவறை வந்தது. பிறகு ஓங்காளம் ஓங்காளமாய் வந்தது.

''ராசநாதன் சாராயம் குடிச்சு பழக்கம் இல்லாட்டி இப்டித்தான் வரும்... பயப்பிட வேணாம்...''

''நான் சாராயம் எல்லாம் குடிச்சிருக்கன்...''

''புறவு என்ன..''

''றோஸ்மேரி கிடைக்க இல்லை எண்டு சொல்லி... மண்ணெண்ணையில மலத்தியன கரைச்சுக் குடிச்சு மாதக்கணக்கில ஆஸ்பத்திரியில சாகக்கிடந்தனான்... அதுக்குப் பிறகு குடிக்க இல்ல... இன்டைக்குத்தான் குடிச்சனான்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன ராசநாதன் இப்பிடிச் செஞ்ச... முதல்ல சொல்ல வேணாமா...''

''மோட வெடப்பாங்...''

சட்டென்று விழித்தவன்போல் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டிருந்த ராசநாதன் நிமிர்ந்து உட்கார்ந்தான். சட்டென்று எழும்பி நின்றான். அங்குமிங்கும் நடந்து தன்னை நிதானத்துக்குக் கொண்டுவரமுனைந்தான். தன் உடல் மழையில் நனைந்தது போல வியர்வையில் நனைவதை உணர்ந்தான். சிறில் ஐயாவைச் சுற்றிக்கொண்டு குவாட்ஸ் கதவைத் திறந்து வெளியே தள்ளாடியபடி வந்தான். வெளியே மழை தூறிக்கொண்டிருந்தது. முற்றத்தில் நின்ற முதிரை மரத்தைப் பிடித்துக்கொண்டான். தடுமாறி எழும்பிய தர்மபால பின்னால் போனார். சட்டென்று எழும்ப முடியாத சிறில் ஐயா இடுப்பால் அரக்கி கதவடிக்கு வந்து கதவு நிலையில் பிடித்து எழுந்துநின்றார். ராசநாதன் இரத்தவாந்தி எடுக்கத்தொடங்கினான். தர்மபால அவன் நெற்றியைத் தாங்கிப்பிடித்தார். பதறிப்போன சிறில் ஐயா தண்ணீர்ச் செம்பைத் தூக்கிக்கொண்டு தள்ளாடி வந்தார். இரத்தவாந்தி எடுத்த ராசநாதன் தலையை உயர்த்தி நிமிர்ந்துநின்று மூச்சுவிட்டான். பின் அறுத்துவிட்ட காட்டுக்கொடியைப்போல துவண்டு நிலத்தில் விழுந்தான் ராசநாதன்.

பதறிப்போன தர்மபாலவும் சிறில் ஐயாவும் ராசநாதனைத் தூக்கிக்கொண்டு வந்து குவாட்டஸ்க்குள் வழத்தினார்கள். தர்மபால ராசநாதனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் பயந்தார். வெறிமுறியும்மட்டும் சிகிச்சை அளிக்கமாட்டார்கள். ஆபத்து. சட்டென்று ஏதோ நினைத்த தர்மபால சிறில் ஐயாவின் கெரியர் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வீதிக்கு ஓடி, பின் சைக்கிளில் ஏறி மிதிக்கத் தொடங்கினார். சிறில் ஐயா குவாட்டஸைத் துப்பரவாக்கத் தொடங்கினார்.

மாலை இருட்டிக்கொண்டிருக்கும்போது திரும்பி வந்த தர்மபாலவின் பின் சைக்கிள் கெரியரில் வெதமாத்தையா ஒருவர் இருந்தார். வெதமாத்தையா ராசநாதனை சோதிக்கத் தொடங்கினார். வெதமாத்தையாவின் கை ராசநாதனின் நெஞ்சை வருடத் தொடங்கியது. ராசநாதன் முனகினான்.

''றோ...ஸ்...மே...இரி...''

தர்மபாலவும் சிறில் ஐயாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்களுக்கு வெறி முற்றாக முறிந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.8

கடல். அடிவானத்தைத் தொட்டு விரிந்து கிடக்கும் நீலக்கடல். நீண்ட கைகள் அடர்ந்த உப்புத்தண்ணீரைத் தள்ள, அகன்று விரிந்த நெஞ்சு கடலலைகளை மோதி உடைக்க, கால்களிரண்டும் துடுப்பாகத் தன் உடலை முன்னே உந்தித்தள்ள, அவன் நீந்திக்கொண்டிருந்தான். கடலைத் தொட்டுக்கொண்டிருக்கும் தொடுவானத்தை நெருங்கி, வானத்தைக் கிழித்து, எட்டிப் பார்க்க முனையும் மூர்க்கத்துடன் நீந்திக்கொண்டிருந்தான். தன் முதுகில் கடலலையின் தடிப்பான கனத்த நீர்த்திவலைகள் புரள்வதையும் தன் நனைந்த தலைமுடி கழுத்தில் படிந்துகிடப்பதையும் உணர்ந்தபடி அவன் நீந்திக்கொண்டிருந்தான்.

கொதிக்கும் நீர், குமிழியிடுவதுபோல சலசலப்பான இரைச்சல் தூரத்திலிருந்து தன்னை நோக்கி வருவதைக் கண்டான். அவனைச் சூழ மீன்கள் கூட்டம்கூட்டமாக இரைச்சலுடன் நெருக்கமாக நீந்திக்கொண்டிருந்தன. தன் பெரிய அகன்ற உள்ளங்கையால் கடல்நீரின்மேல் ஓங்கி அடித்தான். பேரிரைச்சலுடன் ஒரு வெடிப்போசை. கடலலைகளின் கனதியுடனான ஒரு உதைப்பு. தூக்கி வீசப்பட்ட அவன் உடல், அதிர்வையும் விதிர்விதிர்ப்பையும் உணர்ந்தது. அவனைச் சூழ ஒலித்த இரைச்சல் அடங்கிப்போயிருந்தது. உடல் சிதறிய மீன்களும் தலை சிதறிய மீன்களும் ஒற்றைக்கண் பிடுங்கப்பட்ட மீன்களும் அதிர்வில் மயங்கிப்போன மீன்களும் அவனைச் சூழ மிதந்துகொண்டிருந்தன.

அத்தாங்கைக்கொண்டு மீன்களை அள்ள துணைக்கு யாருமற்று அவதிப்பட்டான். கரையை நோக்கிக் கூக்குரலிட்டான். அதிர்வில் சிதறிய கடலடி முருகைக் கற்கள் அதன் இருப்பிலிருந்து உடைந்து அலையுடன் கரை ஒதுங்கி மணலில் புரண்டன. பொலிஸ் யூனிபோம் அணிந்த பொம்மைக்குப் பயந்த தகப்பன் அங்குமிங்கும் ஓடி, பின் மூஞ்சூறு எலி போல கல்லிடுக்குக்குள் ஒளிந்துகொண்டார். கவட்டுக்குள் சாரத்தை இடுக்கியபடி, அமுக்கர் சம்மாட்டி தன் கறுத்த தொந்தி கடல்நீரில் முட்ட, கரையில் இடுப்பில் கையூன்றி நின்றார். மீண்டும் மீண்டும் கரையை நோக்கிக் கூக்குரலிட்டான். தனக்கும் இதற்கும் எந்தச் சம்மந்தமும் இல்லை என்பது போல அமுக்கர் சம்மாட்டி கரையில் நின்றார். துணைக்கு யாருமற்ற தவிப்பில் மிதந்தான். ஆவேசம் வந்தவன்போல் தன் இரண்டு கைகளையும் அகல விரித்து, நெஞ்சுடன் மீன்களை அணையவிட்டுக் கரைநோக்கி நீந்த முனைந்தான். திடீரென்று தன் மணிக்கட்டுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு கைகளும் ஒருபக்கக் கண்ணும் கடல் தண்ணீரில் கரைந்து போவதைக் கண்டான். அச்சமும் பதற்றமும் தொற்றிக்கொள்ள நீந்த முடியாது கடலின் ஆழத்தில் அமிழ்ந்துபோனான். தன் நெற்றி மணல்தரையில் முட்டிப் பின் தன் உடல் தரையில்பட அமிழ்ந்து போனான். மூச்சு திணறத் தொடங்கியது.

மணிகண்டன் விழித்துக்கொண்டான். சீயாவின் வாடிவெளிச் சீமெந்துக் கட்டிலில் படுத்துக்கிடந்த மணிகண்டன் உருண்டு கடற்கரை மணலில் விழுந்திருந்தான். இரவுநேரக் கடற்காற்றின் ஈரலிப்பில் குளிர்ந்துகிடந்த மணல், அவன் உடல், தலைமுடி, முகம், தாடி என அப்பிக்கிடந்தது. விழுந்த இடத்திலேயே எழுந்து உட்கார்ந்தான் மணிகண்டன். பின்னிரவின் நிலவொளி கடலின் மேற்பரப்பு, தென்னைகள், வள்ளங்கள், கடற்கரை மணல் என எங்கும் ஒளிர்ந்துகொண்டிருந்தது. மணிக்கட்டுடன் சூம்பி கூலமான அவனது கைகள் முகத்தைத் துடைக்க பரபரத்தன. தன் தலையைச் சிலுப்பிக் கூலமான கைகளால் தலையில் தட்டி, முகத்திலும் தலைமுடியிலும் தாடியிலும் படிந்துகிடந்த மண்ணைத் தட்டிவிட்டுக் கொண்டான். இடுப்பிலிருந்து கழன்று நழுவிப்போன சாரம் கால்களுக்குள் சுருண்டுகிடந்தது. தான் அம்மணமாக இருப்பதை மணிகண்டன் அப்போதுதான் உணர்ந்துகொண்டான். சட்டென எழுந்தான் மணிகண்டன். கால்களுக்குக்கீழ் சுருண்டுகிடந்த சாரத்தை, கூலமான தன் கைகளில் கோர்த்து மேலே தூக்கினான். இடம்வலமாய் இடுப்பில் இறுக்கி, வயிற்றை எக்கி சாரத்தின் நுனியை இடுப்பில் சூம்பிப்போன கையின் முனையால் செருகிக் கொண்டான். மணிகண்டன் கடலைப் பார்த்தான். கடல் அமைதியாக இருந்தது. அலைகள் மெல்லிய ஓசையுடன் தரையில் அடித்துக் கொண்டிருந்தன. கடல்நீர்ப்பரப்பெங்கும் நிலவொளி மினுமினுப்புடன் கிடந்தது. மெல்லிய கடற்காற்று குளிர்ந்து வீசியது. தூரத்தே படகுகளில் சூழ்லாம்பின் வெளிச்சம் கடலில் மின்னிமின்னி மறைந்தது. இந்நேரம் தானும் கடலில் கிடந்திருக்க வேண்டியவன் என நினைத்துக்கொண்டான். மணிக்கட்டுடன் கூலமான தன் கைகளை ஒரு தடவை உயர்த்திப் பார்த்துக்கொண்டான் மணிகண்டன். இந்தக் கைகள் எவ்வளவு வெடிமருந்துகளைப் பிசைந்திருக்கும். எத்தனை டைனமெட்டுக்களை இறுக்கி வரிந்து கட்டியிருக்கும். ஒருமுறை வெடித்த டைனமெட்டின் வெடிப்பு ஓசையையும் வீரியத்தையும்விட மறுமுறை தயாரிக்கும் டைனமெட்டின் வெடிப்பின் வீரியம் கூடிக்கொண்டே போகவேண்டும் அவனுக்கு. ஒவ்வொருமுறை வெடிக்கும்போதும் டைனமெட் வெடிக்கும் சத்தம் குறைந்துகொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதாகவே அவன் நினைத்தான். சிலவேளைகளில் வாய்விட்டு வெளிப்படையாகவும் புலம்பியிருக்கிறான். அப்படி அவன் புலம்பிக்கொண்டு திரிந்தபோதுதான் அமுக்கர் சொன்னார்.

''எலேய்... நீ கடல்ல அடிக்கிற டைனமெட் அதிர்வில என்ற மெத்தவீட்டு யன்னலே அதிருது... சத்தத்தில என்ற காது நோகுது... டைனமெட் வெடிக்கிற சத்தம் குறையயில்ல... உன்ற காதுதான் செவிடாகிக்கொண்டுபோகுது...''

இப்படி நக்கலாகத்தான் அமுக்கர் சொன்னார். தான் செவிடாகிக் கொண்டிருப்பதை அவன் மெல்லமெல்ல உணரத் தொடங்கிய போதுதான், கவனப்பிசகில் கையிலேயே டைனமெட் வெடித்தது.

இரவு குடித்த சாராயத்தில் தண்ணீர் அதிகம் கலந்திருக்கவேண்டும். இல்லையேல் இவ்வளவு நேரத்துடன் தனக்கு வெறி முறிந்திருக்க வாய்ப்பில்லை என மணிகண்டன் நினைத்துக்கொண்டான். பீடி பற்றவேண்டும்போல இருந்தது மணிகண்டனுக்கு. சீயாவின் வாடி செத்தை ஓரம் மறைத்துவைத்த பீடியைத் தன் கூலமான கையினால் தடவி, உருட்டி இரு கைகளுக்குள்ளும் அமத்தியெடுத்துத் தன் பல்லிடுக்கில் பற்றிக்கொண்டான் மணிகண்டன். சீயாவின் வாடி வாசலில் தணித்துத் தொங்கவிடப்பட்டிருந்த சூழ்லாம்பின் கயிற்றுத்திரியில் தன் பற்களின் இடுக்கில் தொங்கிக்கொண்டிருந்த பீடியைப் பற்றவைத்துக்கொண்டான்.

கடலில் மின்னல் கீற்றுப்போல ஏதோவொன்று தெரிந்தது போலிருந்தது. சட்டென்று ஒரு மின்குமிழ் கடலில் அந்தரத்தில் ஒளிர, தொடர்ந்து மின்குமிழ்கள் ஒளிர்ந்துகொண்டே போயின. அப்போதுதான் கடலில் கப்பல் ஒன்று நிற்பதைத் தன் கண்கள் உள்வாங்கியதை மணிகண்டன் உணர்ந்தான். உட்துறைமுகத்துக்குள் போவதற்கு சமிக்ஞை கிடைத்திருக்க வேண்டும். கப்பல் புறப்படுவதற்கு ஆயத்தமாகியது. மணிகண்டனின் மனது கரையில் ஏதோ சலனத்தை கண்டதாகச் சொல்லியது. மணிகண்டன் கரையைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான். அவன் ஊகம் சரியாகத்தானிருந்தது. கரையில் தண்ணீருக்குள் வள்ளம் ஒன்று தத்தளித்துக்கொண்டுதானிருந்தது. முதலில் சத்தம் வைக்கத்தான் மணிகண்டன் நினைத்தான். வெண்ணிற ஆடை போன்று ஏதோ அசைந்ததால் பேய் பிசாசாக இருக்குமோ என பயந்தான். பேய்க்கு வள்ளத்தில் என்ன வேலை. சத்தமில்லாது கரையை அண்டி நடந்து கிட்ட நகர்ந்தான். வள்ளம் தத்தளிப்பிலிருந்து விடுபட்டுக் கடலுக்குள் துடுப்பு வலிப்பின் நேர்த்தியில் அலைகளைத் தாண்டி நகரத் தொடங்கியிருந்தது. படகுக்குள் கூர்ந்து பார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிகண்டன் வெண்ணிற ஆடை உடுத்திய பெண் துடுப்பு வலித்துப் போவதைக் கண்டான். தனக்கு நெருக்கமான நல்ல பழக்கமான உருவம் என நினைத்துக்கொண்டான்.

''ஜொலி...''

அவன் உதடுகள் மெல்ல முனகின. அவன் பல்லிடுக்கிலிருந்த பீடித்துண்டு விழுந்து அலையில் அடிபட்டு நனைந்து அணைந்து போனது. கடலுக்குள் படகு தள்ளப்பட்ட தடத்தைக் கலைக்காது கரையோரமாக நடந்துவந்த மணிகண்டன் சீயாவின் வாடி வெளிக்கட்டில் திரும்பவும் படுத்துக்கொண்டான்.

## 2.9

பிரதான வீதியைத் தவிர்த்துவிட்டு அயல்கிராமங்களுக்குள் வந்தபொழுது பதற்றத்துடன் கடற்கரையோரமாக விடிந்துகொண்டிருந்தது. சீயாவின் வள்ளம் இரவு காணாமல் போய்விட்டிருந்தது. சீயாவின் வாடியைச் சுற்றித் தமிழ் சிங்கள வேறுபாடின்றிக் கடற்கரைக்கு அதிகாலையில் ஏதோ ஒரு தேவைக்காக வந்தவர்களும் மீனவர்களுமாக சனங்கள் கூடிநின்றார்கள்.

''இது சதி வேலை மாதிரித் தெரியயில்ல... களவு மாதிரித்தான் தெரியுது... வள்ளத்தைத் தனி ஒரு ஆள்தான் தள்ளி கடல்ல இறக்கி இருக்கான்... பெரும்பிரயாசைப்பட்டுத்தான் வள்ளம் கடல்ல இறங்கி இருக்கு... மணல்ல கிடக்கிற தடம் அப்பிடித்தான் கிடக்கு... மணிகண்டன பிடிச்சு விசாரிச்சா தெரியும்... அவன்தான் விடிமுழிப்பனா இது வழிய பீடி பத்திக்கொண்டு திரியிரவன்...''

அமுக்கர் சம்மாட்டி தன் தொந்தியைத் தடவியபடி சொன்னார். சீயாவும் அதைத்தான் ஆமோதித்தார். பொழுது விடிந்த பின்னும் வெளிக்கட்டிலில் சுருண்டுகிடக்கும் மணிகண்டனை இன்று அங்கு காணவில்லை. சாத்திரியார் அம்மாளும் மணிகண்டனைத்தான் தேடிக் கொண்டிருந்தாள். அதிகாலையில் கோப்பித்தண்ணிக்காகத் தன்னை எழுப்பித் தொந்தரவு செய்யும் ஜொலியைக் காணவில்லை. அவள் படுத்துக்கிடக்கும் குடிசையும் வெறுமையாகத்தான் கிடந்தது. அவளது பழைய உடுப்புக்களும் குடிசைக்கு வெளியே எறிந்துகிடந்தன. சாத்திரியார் அம்மாளுக்கு சகுனம் சரியில்லை என்றுதான்பட்டது. யக்கடையான் தான் இருந்த குடிசையைக் காலி பண்ணிப்போய் வாரக்கணக்காகிவிட்டது. வள்ளத்தைத் தள்ளிக்கொண்டு போகுமளவுக்கு அவன் துணியவும் மாட்டான். ஊருக்குள் எடுத்த களவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிக்கும் நூறு ரூபா பங்கு வைத்துவிட்டுத்தான் போயிருந்தான். அவளது வளவுக்குள் இருப்பவர்களில் அவ்வளவு பெரிய தொகையை யாரும் காணிக்கை போடமாட்டார்கள் என்பது அவளுக்குத் தெரியும். மணிகண்டனைத் தேடிப் போனவர்கள், அப்போதுதான் கடலிலிருந்து திரும்பி வந்திருந்த ஒரு மீனவனைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். மெல்லிய கந்தல் சேட்டும் ஈரமாகிப்போன சாரத்துடனும் பின்னால் கையைக் கட்டிக் கூதலில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டே சொன்னான்.

''இரவு நாங்க மேல போக இல்ல... கோணேச மலைக்க திருக்க மீன் அம்பிடுதெண்டு போட்டு அங்கினதான் கிடந்த... அப்ப ஒரு வள்ளத்தில வெள்ள உடுப்புப் போட்ட ஒரு உருவம் கடல்ல கிடந்த கப்பல அண்டி நிண்டதக் கண்டனாங்க... பிறகு அந்த உருவத்த கப்பல்காரங்க நூல் ஏணிய இறக்கி ஏத்தி எடுத்ததக் கண்டனாங்க... ஏதும் கடத்தல் கிடத்தலா இருக்குமெண்டுபோட்டு நாங்க கிட்டப் போக இல்ல... பிறகு சங்கூதிக்கொண்டு கப்பல் கிளம்பிப் போயிட்டுது.... நாங்க திரும்பி வரேக்க வள்ளம் கோணேச மலைக்கு மேல ஒதுங்கிப்போனதக் கண்ட நாங்கள்...''

சிலர் வேறு வள்ளங்களைக் கடலில் இறக்கி சீயாவின் வள்ளத்தைத் தேடப்போனார்கள். ஏதோ சில கணக்குகள் சமப்பட்டதால் சாத்திரியார் அம்மாள் அங்கிருந்து மெல்ல நழுவிப்போனார். சாத்திரியார் அம்மாளைக் கவலைகள் தொற்றிக்கொள்ளத் தொடங்கி விட்டன. பூவா, காப்பென்டர் மால் அடியில் கிடந்த மரக்குற்றியில் அதே காக்கிக் காற்சட்டையும் வெற்றுடம்புமாக அமர்ந்திருந்தார். வயிற்றில் போட்டிருந்த தையலுக்கு மேலே ஒட்டியிருந்த பிளாஸ்டரைத் தடவிக்கொண்டிருந்தார். வயிற்றில் ஏற்பட்ட காயத்தின் வலியும் றோஸ்மேரியை இழந்த சோகமும் அவரை மெலிய வைத்துவிட்டது. காப்பென்டர் மால், ஓசைகள் ஏதுமற்று உறங்கிப்போய்க்கிடந்தது. சாத்திரியார் அம்மாள் அவரை ஏதும் கேட்காமல் கடந்துபோனார்.

ஊருக்குள்ளும் பொழுது விடிந்துகொண்டு வந்தது. தன் வீட்டின் வெளிக்குந்தில் சிவனே என்று அமர்ந்திருந்தார் மூத்தம்மாச்சி. முழங்காலிலிருந்து பாதம்வரை தன் கால்களை நீவிவிட்டபடியிருந்தார். விலாட்டு மாமரத்திலிருந்து அணில் கோதிய மாங்காய் ஒன்று விழுந்தது. ஆரையாவது ஏற்றி மிஞ்சிக் கிடக்கும் கப்பிக்காய்களை ஆய வேண்டும் என நினைத்துக்கொண்டார். திடீரென்று எதையோ நினைத்தவராக, வயது முதிர்ச்சியால் தொங்கிப்போன அவரது தசைகள் ஆடஆட வாய்விட்டுச் சிரித்தார். அவர் சிரித்துக் கொண்டிருக்கும்போதே அன்னபூரணிப்பெத்தா, முழங்கால் சில்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேய்ந்து போனதால் தூக்கி வைத்து நடக்க முடியாத காலை நிலத்தில் இழுத்துக்கொண்டு தேத்தண்ணிக் கோப்பையுடன் வந்தார். தேத்தண்ணிக் கோப்பையை நீட்டியபடியே கேட்டார்.

''என்ன காலையிலேயே சிரிப்பு பலமாக்கிடக்கு...''

''ம்... இல்ல புள்ளப்பூச்சிக்கெல்லாம் கொடுக்கு முளைக்கும் எண்டு ஆர் நினைச்ச...''

''நீ... அடிமுடி இல்லாமச் சொன்னா நான் எத நினைக்கிற...''

''இல்ல... இந்த ராசநாதன் பயலுக்கு வந்த துணிச்சலப் பார்... துவக்கோட கார் கொண்டுவந்து... அபயபுரச் சிங்களவனுகள வைச்சு பூவாட பெட்டயக் கிளப்பியிருக்கான்... இப்பிடி எல்லாம் நடக்குமெண்டு ஆர் நினைச்ச...''

''ஊருக்க பொடியள் சொல்லித் திரியிராங்கள்... பூவாவ வெட்டிப்போட்டுத்தான் பெட்டய தூக்கின தெண்டு... பூவா சொல்லுதாம்... இழுபறிப்படேக்க கையில வைச்சிருந்த உளிதான் வயித்த கிழிச்சதெண்டு... ராசநாதன் ஊருக்க வந்தா, பொடியள் ஏதாவது செய்து போடுவாங்கள்...''

''போடி போக்கத்தவளே... வைரவர் கோயிலடியில... சிங்களவன் ஊருக்க பூந்து பொம்பிளையளக் கடத்தினா என்ன செய்யிரதெண்டு தீர்மானம் எடுக்கயில்லையாமா...''

''சும்மா வாயவைச்சுக்கொண்டு இருக்கிறதுக்கு வழியப் பார்... ஊருக்குள்ள நீ நாட்டாம காட்டின காலம் எல்லாம் மலையேறிப்போச்சு... பொடியள்ட போக்குவரத்துச் சரியில்ல... சின்னப் பொடியள்ட கையால அடிகிடி வாங்கிப் போடாத...''

''வெறுவாய்க்கலம்கெட்ட நாய்கள்... ஊருக்க ஒரு வீடு வளவு விடாம களவு போயிருக்கு... கையக் கவட்டுக்க வைச்சுக் கொண்டிருந்துபோட்டு... வெள்ளையும் சுள்ளையுமா உடுத்திக் கொண்டு அங்கினக்க அங்கின கூடிநிண்டு கதைச்சா சரியா... எல்லாம் முடிஞ்சா...''

''பாடையில போவான்... பாத்து வைச்ச மாதிரி கூரைச்சீலையத் தூக்கிற்றுப் போயிருக்கான்... கூரச்சீலதானே போனா போகட்டும் எண்டு விட்டிரலாம்... புத்திகெட்டுப்போய்த்தானே விதநெல்லு வித்த காசு 250 ரூவாவையும் கூரச்சீல மடிப்புக்க பத்திரப்படுத்தி வைச்சிற்றன்... அந்தத் தோறையும்... அறைக்க படுத்துத்தானே கிடந்தவள்... ஒரு அருட்டுற உணர்வுகூட இல்லாமலா படுப்பாள்... கும்பகர்ணனுக்குப் பிறந்திருப்பாளோ...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பவும் தன் தளர்ந்து போன தசைகள் குலுங்க மூத்தம்மாச்சி வயிரெக்கிச் சிரித்தார்.

''சிரிப்பு ஒரு சாங்கமாத்தான் இருக்கு...''

''நீ வெங்கனாந்தியாவே இரு... அவள் உணர்வில்லாம படுக்கவும் இல்ல... நித்திரையிலயும் கிடக்க இல்ல... நீ நினைச்சியா அவள் உனக்கும் எனக்கும் பாவம் பார்த்து பாதுகாப்புக்கு இங்கவந்து படுக்கிறாள் எண்டு... அவள் கள்ளத்தனமா புருசனச் சந்திக்கிர ஏற்பாடோடுதான் இங்கவந்து படுக்கிறாள்... அவனிட்ட கள்ளுத்தவறணைக்க மட்டும் பூந்து படுக்காம... வீட்டையும் கொஞ்சம் கவனிக்கச் சொல்லு... முதல்ல அவள புருசன்காரனோட சேர்த்து வைக்கிற அலுவல பார்க்கச் சொல்லு... புள்ள கிள்ள உண்டாயிற்றா பிசகாப் போயிரும்... தாயில்லாப் பிள்ள பிறகு அதுவும் உன்ற தலையிலதான் வந்து விழும்...''

''ஆர் வந்து போறான் எண்டுறாய் நீ...''

''வேற ஆர் அவன் தம்பலகாமத்துக்காரன்தான்... சாமத்தில தென்னம் பாத்திக்க அவன் பதுங்கிறதக் கண்டிருக்கன்...''

அன்னபூரணிபெத்தா கண்ணைச் சிமிட்டியபடி சிந்தனையுடன் குந்திலிருந்து எழுந்தாள். மூத்தம்மாச்சியை ஒரு அகோரப் பார்வை பார்த்துவிட்டு, முழங்கால் சில்லு தேய்ந்து தூக்கி வைத்து நடக்கமுடியாத தன் கால்களை இழுத்து நடந்துபோனாள். திரும்பவும் வயது முதிர்ச்சியால் தொங்கிப்போன அவரது தசைகள் ஆட ஆட எங்கோ வெறித்துப் பார்த்தபடி வாய்விட்டுச் சிரித்தார் மூத்தம்மாச்சி.

## 2.10

அவர்கள் எதிரியைத் தாக்குவதற்கான சந்தர்ப்பம் ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். அவர்களைப் போலவே எதிரியும் உருமறைப்புச் செய்யவோ பதுங்கியோ இருக்கவில்லை. அவர்கள் லவ்லேன் ஆங்கிலேயர் காலத்து இடிந்து கைவிடப்பட்ட நெல்லு ஸ்டோர் சுவரில் சாய்ந்து கதைத்துக்கொண்டிருப்பதுபோல் நின்றிருந்தார்கள். நெல்லு ஸ்டோருக்குள்ளும் வெளியிலும் புதர்களும் காட்டு மரங்களும்மண்டி காடு போலத்தான் கிடந்தது. எதிரி வாகை மரத்தின் மெல்லிய நீண்ட தடிகளை வெட்டி கட்டாகக் கட்டுவதில் முனைப்பாக இருந்தான். எதிரிக்கும் அவர்களுக்கும் இடையில் மஞ்சளும் சிவப்பு நிறமும் கலந்த தோடு போல் சிறிய சிறிய கொத்துப் பூக்கள் பூத்துக்கிடந்த நாயுண்ணிப் பற்றை மட்டுமே இருந்தது. எதிரியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலிருந்த கூரான கொடுவாக்கத்திதான் அவர்களைத் தயங்கி நிற்க வைத்தது. காலை நேரங்களில் நெல் ஸ்டோர் இடிபாடுகளுக்குள்ளிருந்து எழும் வீரியமான பீ நாத்தத்தையும் மாலையில் ஊமத்தம்பூக்கள் பூப்பதால் எழும் ஊளைமணத்தையும் தாங்கிக்கொண்டு, அவர்கள் பல நாட்கள் இந்த லவ்லேனுக்குள் சுற்றித் திரிந்திருக்கிறார்கள். அப்போது அவர்கள் இடுப்பில் சைக்கிள் செயினும் கையில் சின்ன கிரீஸ்கத்தியும் இருந்தன. எதிரியை எதிர்பார்த்து எத்தனையோ நாட்கள் காத்துக்கிடந்திருக்கிறார்கள். அவர்கள் காத்துக்கிடந்த நாட்களில் சிக்காத எதிரி இன்று அவர்கள் எதிர்பார்க்காத தருணத்தில் சிக்கியிருக்கிறான்.

கையில் எந்த ஆயுதமும் இல்லாதபோதும் அவர்கள் கிடைத்த சந்தர்ப்பத்தை விட மனமில்லாது காத்திருந்தார்கள். எதிரியின் கையிலிருக்கும் ஆயுதம் நழுவும் சந்தர்ப்பத்துக்காக அவர்கள் காத்திருந்தார்கள். சிறிமாபுரம் தாண்டி யமாலியா சந்தியிலிருக்கும் பள்ளிக்குப் போகும்போதெல்லாம் அவர்கள் தனகிக் கொண்டுதானிருந்தார்கள். சம்புவின் தம்பியோ தளசின் மகனோ சில்வாவோ யார் தனிமையில் தாக்கக்கூடியநிலையில் கிடைத்தாலும் தாக்குவதென்ற நிலையில்தான் சில நாட்களாக சுற்றித் திரிந்துகொண்டிருந்தார்கள்.

சில்வா சிக்கிவிட்டான். கையில் கொடுவாக்கத்தி வைத்திருக்கிறான். சில்வா தான் வெட்டிய வாகைமரத்தடிகளைச் சேர்த்துக் கட்டாகக் கட்டிக்கொண்டிருந்தான். கட்டை இறுக்குவதற்காகக் கொடுவாக்கத்தியின் அடிமரப்பிடியை வரிச்சுகள் கட்டிய கயிற்றினுள்ளே செறுகிக் கத்தியைத் திருகிக் கட்டை இறுக்கினான். கத்தியின் கூர்ப்பகுதியை மற்ற கயிற்றுக்குள் செருகிவிட்டு எழுந்துநின்றான். அரியம் உதயனைப் பார்த்தான். உதயன் வைத்தகண் வாங்காது சில்வாவையே வெறித்துப்பார்த்துக்கொண்டிருந்தான். உதயன் சில்வாவை மூர்க்கமாகத் தாக்குவதற்குத் தயாராகிக்கொண்டிருப்பதை அரியம் கண்டான்.

சில்வா தான் கட்டிய வரிச்சுத்தடிக்கட்டைத் தூக்கித் தோளில் வைத்து நடக்கத் தொடங்கினான். உதயன் வேகமாக ஓடிக் காற்றில் எழும்பித் தன் வலது காலால் கறாட்டி கிக் ஒன்றைக் குடுத்தான். சில்வா வரிச்சுக்கட்டுடன் தகரப்பத்தையின் காய்ந்த காய்கள் கலகலப்பாக சத்தம் எழுப்ப முகம் குப்புற விழுவதை அரியம் கண்டான். உதயன் அரியத்துக்கு எந்தவித தாக்குதல் கட்டளைகளையும் வழங்கவில்லை. எப்படி என்ன தாக்குதல் செய்வது என்று தெரியாததால் அரியம் ஓடிப்போய் உதயனுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்வா விழுந்துகிடந்த நிலையிலேயே திரும்பி இவர்களைப் பார்த்தான். அவன் திருப்பித் தாக்குவதற்கான எதுவித எத்தனமுமின்றிக் கிடந்தான். உதயனையும் அரியத்தையும் சில்வா மாறிமாறி அப்பாவித்தனமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். உதயன் திரும்பவும் சில்வாவின் கால்களைத் தன் காலால் தாக்கினான். சில்வாவின் கால்கள் மீண்டும் தகரப்பத்தைகளின் காய்ந்த காய்களின் கலகல சத்தத்துடன் தள்ளி விழுவதை அரியம் கண்டான். சில்வா எழும்பவோ சத்தம் வைக்கவோ இவர்களைத் திருப்பித் தாக்கவோ முனையவில்லை. அவன் முகத்தில் பயமும் இல்லாததை அரியம் கண்டான்.

எதிரி திருப்பித் தாக்காததால் என்ன முறையான தாக்குதலை நிகழ்த்துவது எனத் தெரியாத உதயன் திரும்பி நடக்கத்தொடங்கினான். பின்னால் அரியமும் நடந்தான். அரியம் திரும்பிப் பார்த்த போது சில்வா எழும்பிநின்று இவர்கள் போவதையே பார்த்துக்கொண்டிருந்தான்.

## 2.11

இரட்டைக்குழல் துப்பாக்கி கையிலிருந்தபோதும் கள்ளுத்தவறணை அம்மாச்சி பதற்றமாகவே இருந்தார். உள்ளே வார்த்தடி போட்டுப் பாதுகாப்பாகப் பூட்டப்பட்ட இருள் படர்ந்துகிடந்த அறைக்குள் அவர் முடங்கிக்கிடந்தார். கள்ளுத்தவறணையின் கள்ளுப் பீப்பாக்கள் இருந்த அறையின் பழங்கால மரக்கதவு ஒரு உதைக்குத் தாக்குப் பிடிக்காது என்றுதான் கள்ளுத்தவறணை அம்மாச்சி நினைத்திருந்தார். நாலைந்து உதையும் சில கோடாரிக் கொத்தும் விழுந்தபோதும், கிரீச்சிட்டு அசைந்த கதவு, இருளில் கம்பீரமாக நிற்பதாகத்தான் கள்ளுத்தவறணை அம்மாச்சி நினைத்தார். கள்ளுப் பீப்பா அறையின் கதவும் கள்ளு அளந்து ஊத்தும் யன்னலும் சாத்தப்பட்டபின், அறைக்குள் புளிச்ச கள்ளின் நெடி வீரியமாக வீசத்தொடங்கியிருந்தது. தலை கிறுகிறுக்க எவ்வளவு நேரத்துக்குத் தன்னால் நிதானம் இழக்காது இருக்கமுடியும் என்று அவருக்குக் கவலையாக இருந்தது. கல்லாவுக்குள்ளிருந்த காசைக் கள்ளுத்தவறணை அம்மாச்சி லங்கோட்டிலிருந்த பொக்கேற்றுக்குள் வைத்திருந்தார். பூட்டிய அறைக்குள் கள்ளுத்தவறணையின் சுவர்க்கசிவுகளைப் போலவே தன் உடலும் கசிந்துகொண்டிருப்பதாகவே அம்மாச்சி நினைத்தார். முதலில் யன்னலைத் திறந்து ஒற்றை வெடியை பயப்பீதியை ஏற்படுத்த தீர்க்கலாம் என்று நினைத்தார். கதவைத் திறந்து ஒற்றை வெடியைத் தீர்த்துவிட்டுத் தப்பி ஓடிவிடலாம் என்றும் நினைத்தார். அவரிடம் ஒற்றைத் தோட்டா மாத்திரமே கையிலிருந்தது. அதுவும் குருவி சுட வாங்கிய சன்னம் நிரப்பிய தோட்டா. வெளியே இரைச்சலான ஆர்ப்பாட்டமான கூச்சல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கும் சத்தமும் கேட்டுக்கொண்டுதானிருந்தன. ஆராவது கதவை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தால் மட்டுமே வெடிவைத்துவிட்டுத் தப்பி ஓடுவதென்ற தீர்மானத்துடனேயே கள்ளுத்தவறணை அம்மாச்சி இருந்தார். சன்னம் நிரப்பிய தோட்டா அவரது இரட்டைக்குழல் துப்பாக்கியில் நாண் ஏற்றப்பட்டுத் தயாராகவே இருந்தது.

கள்ளுத்தவறணை அம்மாச்சி பல கள்ளுத்தவறணை மறியல் போராட்டங்களை இந்த கள்ளுத்தவறணை முற்றத்தில் சந்தித்திருக்கிறார். அவை இப்படி நடந்ததில்லை. வீதியின் ஓரத்தில் கதர் அல்லது வெள்ளை உடையணிந்து ஆண்களும் பெண்களும் காலையில் அல்லது மாலையில் வந்துநின்று கோசங்களை எழுப்புவார்கள். சில ஆர்ப்பாட்டங்களில் பெண்கள் முற்றத்தில் வட்டமாக இருந்து நெஞ்சில் அடித்து ஒப்பாரிவைத்து அழுவார்கள். சிலவேளைகளில் பெண்கள் மண் அள்ளிப்போட்டுத் திட்டுவார்கள். ஆக மிஞ்சிப்போனால் ஆவேசமடைந்த பெண்கள் தம் கணவன்மார் அல்லது உறவுக்காரர்களை விளக்குமாற்றால் அடித்துக் கலவரம் செய்திருப்பார்கள். அதற்குமேல் எதுவும் நடந்ததில்லை. இவற்றையெல்லாம் அவர் ஒரு நமட்டுப் புன்னகையுடன் கடந்துவந்திருக்கிறார். ஆனால் இன்று அப்படி இல்லை என்பதை அவர் தெளிவாக உணர்ந்திருந்தார்.

மாலைபட்டு இருட்டியபின் அவர்கள் வந்திருக்கிறார்கள். வந்தவர்கள் வெள்ளை உடை உடுத்தியிருக்கவில்லை. முகத்தை மூடித் துணி கட்டியிருந்தார்கள். அவர்களில் பெண்கள் இருக்கவில்லை. கையில் கள்ளுப் பீப்பாக்களைக் கொத்துவதற்கு அல்லது உடைப்பதற்குக் கையில் கோடரியோ பிக்காசோ வைத்திருந்தார்கள். சிலர் தடிகள் பொல்லுகள் வைத்திருந்தார்கள். வந்தவர்கள் முகத்தில் துணி கட்டியிருந்தபோதும் அவர்களது நடை உடை, பாவனை, பேச்சை வைத்து, அவரால் அவர்களை ஓரளவு ஊகிக்க முடிந்திருந்தது. இது கள்ளுத்தவறணை குத்தகையைத் தன்னிடமிருந்து பிடுங்கும் சதிவேலை இல்லை என்பதையும் கள்ளுத்தவறணை அம்மாச்சியால் உணரமுடிந்தது. தன் வருமானத்தின் ஆணிவேர் பிடுங்கப்பட்டுக்கொண்டிருப்பதை கள்ளுத்தவறணை அம்மாச்சியால் தெளிவாக உணரமுடிந்தது.

பந்துள, நகர மீன்சந்தையடிச் சிங்களச் சண்டியன். கள்ளுத் தவறணையில் கள்ளு அளந்து கொடுப்பவன். கள்ளுத்தவறணையில் வரும் சின்னச்சின்ன சண்டைகளையும் ரகளைகளையும் தன் சண்டித்தனத்தால் அடக்கக்கூடியவன். கள்ளுத்தவறணை அம்மாச்சியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மெய்ப்பாதுகாவலனும்கூட. வந்தவர்கள் முதலில் கள்ளுக்குடித்துக் கொண்டிருந்தவர்களுடன்தான் வாக்குவாதத்தில் ஈடுபடுபட்டார்கள். கள்ளுக்குடித்துக் கொண்டிருந்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை அசட்டைசெய்து தொடர்ந்து கள்ளுக்குடித்துக்கொண்டும் டேஸ்ட் பொரியல்களைக் கொரித்துக்கொண்டும் நையாண்டிக் கதைகளுடனும் இருந்தார்கள். முகத்தைத் துணியால் மூடியிருந்தவர்கள் சிலர் கம்பை இலாவகமாகச் சுற்றிக் கள்ளுக்குடித்துக் கொண்டிருந்தவர்களைத் தாக்கத்தொடங்கினார்கள். விழுந்த அடியில் கள்ளுக்குடித்துக்கொண்டிருந்தவர்கள் துடித்துப் பதைத்துக் கள்ளுப் போத்தல்களையும் ஜொக்குகளையும் விட்டுவிட்டு அலறியடித்து ஓடினார்கள். நிலைமையை உணர்ந்த பந்துள கள்ளுத்தவறணை அம்மாச்சியிடம் கதவைப் பூட்டி உள்ளால் வார்த்தடியைப் போடுமாறு சொல்லிவிட்டுக் கள்ளு பேறல்களுக்கிடையே மறைத்துவைத்திருந்த வாளை உருவிக்கொண்டு வெளியே காவலுக்கு நின்றான். பெற்றோல்மெக்ஸ் வெளிச்சம் கள்ளுத்தவறணையின் தூண்கள் மட்டும் நிற்கும் திறந்த சீமெந்துத் தளம்போட்ட பெரிய வெளிவிறாந்தையின் இருளைப் போக்க போதுமானதாக இருந்தது.

வந்தவர்கள் கொண்டுவந்திருந்த கோடரியால், வெளி விறாந்தையிலிருந்த கள்ளு பேறலையும் தண்ணீர்ப் பூலியையும் கொத்தினார்கள். தடியை உயர்த்திக் கள்ளுத்தவறணை வெளிவிறாந்தையின் ஓடுகளை உடைத்தார்கள். சில கொத்துக்களை பந்துளவைத் தாண்டி கதவிலும் கொத்தினார்கள். கதவை எட்டி உதைத்தார்கள். பந்துள வந்திருப்பவர்களை எடைபோடத் தொடங்கினான். வந்திருப்பவர்கள் ரகளை செய்யும் குடிகாரப் பேர்வழிகள் இல்லை. பத்துப் பன்னிரெண்டு பேருக்குமேல் இருந்தார்கள். அவர்கள் கம்பு சுற்றும் இலாவகம் பந்துளவை அச்சுறுத்தியது. பந்துள பயத்தைக் காட்டிக் கொள்ளாது வாளின் பிடியை இறுகப் பற்றினான். அவர்கள் கதவை உடைத்துத் திறக்க முனைந்தாலோ தன்னைத் தாக்க முற்பட்டாலோ திருப்பித் தாக்குவது என்ற நிலைப்பாட்டிலிருந்தான். முகத்தில் துணி கட்டி தாக்கிக்கொண்டிருந்தவர்களின் கவனம் கள்ளுத்தவறணை மூலையில் டேஸ்ட் பொரியல் விற்கும் சுக்குறுநாயரின் பக்கம் திரும்பியது. டேஸ்ட் பொரியல் இருந்த தகரபேசினை இழுத்து நடுவில் போட்டுக் காலால் மிதித்து நெளித்தார்கள். ஏற்கனவே வழிந்து கிடந்த கள்ளுடன் பொரியல்களும் சிதறின. கள்ளுத்தவறணைக்குள் கள்ளின் நெடியுடன் பொரியல் நெடியும் சேர்ந்துகொண்டது. சுக்குறுநாயர் அசையாது இருந்த இடத்திலேயே இருந்தார். ஆத்திரமடைந்த அவர்கள் சுக்குறுநாயரைத் தாக்கினார்கள். பொறுமையாக இருந்த சுக்குறுநாயர் எழும்பவோ ஓடவோ முனையவில்லை. சட்டென்று மரத்தன் ஓட தயாராவது போல ஒரு காலைத் தரையில் பாதம்படவும் மற்ற முழங்கால் நிலத்தில்படவும் அரை மண்டிக்கு எழுந்த சுக்குறுநாயர் பம்பரம் போல் சுழன்றார். வந்திருந்தவர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மூன்று பேர் அந்தரத்தில் பறந்து கள்ளுத்தவறணை முற்றத்து மணலில் விழுந்தார்கள். ஆத்திரமடைந்த ஒருவன் அவர் தலையில் தடியை இலாவகமாகச் சுழற்றி இறக்கினான். சிறிய வெடிப்போசைபோல கேட்டது. சுக்குறுநாயரின் தலையிலிருந்து இரத்தம் கொப்பளித்தது. அவர் அரை மண்டியில் நின்ற நிலையிலேயே சீமெந்துத் தரையில் சக்கப்பணிய விழுந்தார். கள்ளுத்தவறணைக்குள் கள்ளு நெடியுடன் இரத்த நெடியும் கலந்தது. சுக்குறுநாயரின் தலையிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்ட பந்துள மூர்க்கமானான்.

''கெரி பக்கையோ...''

எனக் கூவிக்கொண்டு அவர்களை நோக்கி வாளைக் கண்மண் தெரியாது சுழற்றி வீசியபடி ஓடினான் பந்துள. பந்துளவின் கத்தியும் அவர்களது தடியும் மோதும் ஓசை கேட்டது. பந்துளவின் கொலைவெறி மூர்க்கத்துக்கு ஈடுகொடுக்க முடியாது அவர்கள் பின்வாங்கி இருளில் மறைந்துபோனார்கள். பந்துள கதவைத் தட்டி கள்ளுத்தவறணை அம்மாச்சியை வெளியே வரச்சொன்னான். கள்ளுத்தவறணை அம்மாச்சி துவக்குடன் வெளியே வந்தார். மல்லாந்துகிடக்கும் சுக்குறுநாயரைக் காட்டியபடி பந்துள சொன்னான்.

''அம்மாச்சி... சும்மா சரி வெடி தீப்பாங்தானே...''

''துவக்கில தோட்டா இல்ல...''

பந்துள தன் உடலில் விழுந்த அடிகளின் வலியை உணர்ந்தவனாக கள்ளுத்தவறணை அம்மாச்சியின் முகத்தை பெற்றோல்மெக்ஸ் வெளிச்சத்தில் பரிதாபமாகப் பார்த்தபடி நின்றான்.

## 2.12

ஊ... ஊ... என்னும் பேரிரைச்சலுடன் சூரைக்காற்று அந்தக் கடற்கரையோர அயல் கிராமங்களுக்குள் கடலிலிருந்து புகுவதும் பின் அடங்குவதுமாக இருந்தது. தென்னைமரங்களும் பெரிய வேப்பமரங்களும் ஆலமரம் போன்ற பெரிய பெரிய மரங்களும் தலைவிரி கோலமாகப் பேயாட்டம் போட்டுக்கொண்டிருந்தன. மூன்று நாட்களாகத் தொடர்ந்து பெய்த அடைமழை காலையில்தான் சற்று ஓய்ந்திருந்தது. மதியம்வரை மூசாப்பாகவும் காற்றடிப்பதுமாகத்தான் இருந்தது. மதியத்துக்குப் பிறகுதான் மழை லேசாகத் தூறத் தொடங்கியது. மழை தூறத்தொடங்கியதும் காற்று வலுக்கத்தொடங்கியது. முதலில் கடற்கரையோரமாக இருந்த சாத்திரியார் அம்மாளின் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவுக்குள்ளேயே உயரமாக இருந்த காளி கோயில் தகர கூர்முகடுதான் காற்றில் நெம்பிப் பறந்து இரைச்சலுடன் கிணத்துக்கட்டில், மரக்கெந்துகளை முறித்துக்கொண்டு விழுந்தது. சாத்திரியார் அம்மாள் வளவுக்குள் இருந்தவர்கள் பதறிப்போனார்கள். சாத்திரியார் அம்மாள் சிறுத்துப்போன தன் குடும்பங்களுடன் அமுக்கர் சம்மாட்டியின் பெரிய பெரிய தூண்கள் தாங்கும் கொங்ரீட் போட்டிக்கோவில் தஞ்சமடைந்தார்.

அரியம் அமுக்கர் சம்மாட்டியின் கொங்ரீட் போட்டிக்கோவைத் தாங்கும் இரண்டு பெரிய தூண்களுக்கிடையில் நின்றான். அவன் போட்டிருந்த சேட்டும் சாரமும் காற்றில் வந்த மழைத்துளிகளில் நனைந்து ஊறிக்கொண்டிருந்தன. காற்று வலுக்கும்போது மரங்கள் முறியுமோசை சின்னச்சின்ன வெடியோசை போல கேட்டது. விக்டர் வீட்டு அஸ்பெஸ்டர் கூரை காற்று வலுக்கும்போது தன் இருப்பிலிருந்து கையைத் தூக்குவது போல எழும்புவதும் பின் அமர்வதுமாக இருந்தது. வானத்தில் சிறிய மரக்கிளைகளும் கஞ்சல்களும் இலக்கில்லாது தாறுமாறாகப் பறந்துபறந்து விழுந்துகொண்டிருந்தன. காற்று கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்து அமைதியாகியது. மழை விடாது தூறல் போட்டுக்கொண்டிருந்தது.

சக்கப்பணிய போட்டிக்கோ தரையில் அமர்ந்திருந்த பூவா வெறும் தரையில் ஆர்மோனியம் வாசிப்பதுபோல தன் விரல்களைத் தாளத்துடன் அசைத்துக்கொண்டிருப்பதை அரியம் கண்டான். பூவா இப்போதும் அதே அரைக்காற்சட்டையும் வெறும் மேலுமாக இருந்தார். அவர் சிவத்த உடம்பில் காயம் ஆறித் தையல்போட்ட தழும்பு பல்லுப்பல்லாய்ச் சுருங்கிக் கறுத்துக்கிடந்தது. சுக்குறுநாயர் நீட்டி நிமிர்ந்து சிவனே என்று படுத்திருந்தார். அவர் தலையில் வகிடெடுத்தது போல கள்ளுத்தவறணை கலவரம் நீள வடுவாக மாறி விட்டிருந்தது. சுக்குறுநாயரை இப்போது எல்லோரும் மரியாதையாகப் பார்ப்பதும் ஒதுங்கிப்போவதுமாக இருப்பதை அரியம் கண்டான். சாத்திரியார் அம்மாள் கால் நீட்டியிருந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார். அரியத்தின் அம்மா சாத்திரியார் அம்மாளின் காலடியில் குந்திக்கொண்டிருந்தாள். கௌரிப் பெட்டையும் வதனி அக்காவும் தோப்பராச் சட்டைக்குள் தங்கள் கால்களையும் புகுத்திக்கொண்டு தூண் ஒன்றில் சாய்ந்திருந்தார்கள். சாத்திரியார் வளவுக் குடும்பம் அவ்வளவுக்குச் சிறுத்திருந்தது. அமுக்கர் சம்மாட்டி தன் தொந்தி விட்டத்தைப் பார்த்து மேலும் கீழும் போய்வர சாக்குக்கட்டிலில் படுத்துக்கிடந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியத்துக்கு சாத்திரியார் அம்மாள் வளவுக்குள் போய்த் தங்கள் குடிசையைப் பார்க்கவேண்டும் போலத்தான் இருந்தது. யாரும் அங்கிருந்து கிளம்புவது போல இல்லை. மழையும் இடைவிடாது பெய்துகொண்டுதானிருந்தது. தூரத்தில் லவ்லேன் பக்கமிருந்து தங்களை நோக்கி, இரைச்சலுடன் எதுவோ ஓடிவருவது போன்ற சத்தத்தை அரியம் கேட்டான். பலத்த சடசடப்புச் சத்தம் அவர்களை நெருங்கிவந்தது. அங்கிருந்தவர்கள் தலைகளை நிமிர்த்தி வரும்வெளியைப் பார்த்தபடி இருந்தார்கள். எதையோ உணர்ந்து எச்சரிக்க வந்தவர் போல அமுக்கர் சம்மாட்டி சாக்குக்கட்டிலில் எழுந்து உட்கார்ந்ததை அரியம் கண்டான். அமுக்கர் சம்மாட்டி குப்புற சுக்குறுநாயருக்குப் பக்கத்தில் விழுந்தார். அவர் படுத்துக்கிடந்த சாக்குக்கட்டில் சுருண்டு எழும்பி அவர்களைத் தாண்டிப்போய் சுவரில் மோதி விழுந்தது. உள்ளே கண்ணாடிப் பொருட்கள் நொறுங்கும் ஓசையை அரியம் கேட்டான். தனக்கு எதிரே மணல் துகள்களும் கஞ்சல்களும் முறிந்த மரக்கிளைகளும் தகரத் துண்டுகளுமாகச் சிறிய மதில் சுவர்போல ஒன்று வேகமாக வருவதை அரியம் கண்டான். அரியம் கண்களை மூடிக் கொண்டான். தன் உடல் வலிக்குமளவுக்குக் குருணிகுருணியாக எதுவோ அள்ளி வீசப்படுவதையும் தன் உடலின் மீது கஞ்சல்களும் மரத்துண்டுகளும் விழுவதையும் அரியம் உணர்ந்தான். சூரைக் காற்றின் ஊ... ஊ... என்னும் பேரிரைச்சலை அரியம் மீண்டும் கேட்டான். இவ்வளவு நேரமும் கடலிலிருந்து வீசிய புயல் காற்று இப்போது தரையிலிருந்து கடல் பக்கமாக வீசத்தொடங்கியிருந்தது.

தன்மீது வீசிக்கொண்டிருந்த காற்றின் வேகம் தணிந்துவிட்டது போல அரியம் உணர்ந்தான். தன் இமைகள் மீது படிந்து கிடந்த மணலையும் தூசுகளையும் துடைத்துவிட்டு அரியம் கண்களைத் திறந்தான். சில நிமிடங்களுக்கு முன்னர் தாங்கள் இருந்த அமுக்கர் சம்மாட்டியாரின் போட்டிக்கோ மாதிரி அது தெரியவில்லை. லவ்லேன் பற்றைக் காட்டுக்குள் குந்தியிருப்பது போலத்தான் அரியம் உணர்ந்தான். அலரி மரத்திலிருந்து வெள்ளை அலரிப் பூக்களுடன் முறிந்து காற்றில் உருண்டு வந்திருந்த கெந்தொன்றை விலக்கியபடி அமுக்கர் சம்மாட்டியும் சுக்குறுநாயரும் எழும்பி வந்தார்கள். எழுந்து நின்ற சாத்திரியார் அம்மாளின் உதடு கிழிந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. எல்லோரது உடலிலும் ஏதாவது சிராய்ப்புக் காயங்கள் இருந்தன. அரியம் தன் உடலில் பல இடங்கள் காந்துவதை உணர்ந்தான். எல்லோருமே ஏதோ சதுப்பு நிலங்களில் உருண்டு புரண்டு எழும்பியவர்களைப் போல நின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுத் தணிய மழையும் விட்டிருந்தது. மூடிக்கிடந்த இருள் கலைய வெளிப்பை அவர்கள் உணர்ந்தார்கள். அரியம் வெளியே இறங்கி நடந்தான். குளிரில் உடல் கொடுகியது. நடந்தான் என்பதைவிட கடந்து கடந்து போனான் என்றுதான் சொல்லவேண்டும். முறிந்த மரக்கெந்துகளும் தென்னம்பாளைகளும் ஓலைமட்டைகளும் குரும்பைகளும் கிடுகுமட்டைகளும் தகரத்துண்டுகளுமாக எங்கும் இறைந்து கிடந்தன. சாத்திரியார் அம்மாள் வளவு தடம்மாறிக் கிடந்தது. பெரிய முருங்கைமரங்கள், வாதராணிமரங்களெல்லாம் வேருடன் பிடுங்கப்பட்டுச் சாய்ந்துகிடந்தன. பதிவான குடிசைகள் முழுதாக இருந்தன. காற்று கிடுகுகளை மட்டும் பிடுங்கி எறிந்திருந்தது. பூவாவின் காப்பென்டர் தகர மால் தடமில்லாது மறைந்துபோய்க் கிடந்தது. அவரது மால் இருந்த இடத்தில் பலகைகளை மூடி, மணல் கும்பம் போல கிடந்தது. அரியம் கடற்கரை நோக்கி நடந்தான்.

துணிக்குவியலுடன் மாத்திரமே சீயாவைப் பார்த்துப் பழகிய அரியம், சீயா நின்றிருந்த கோலத்தைக் கண்டு திடுக்கிட்டான். உலர்ந்து உடலுடன் தோள் ஒட்டி வயிறெக்கி இடுப்பில் கோவணத் துண்டுடன் ஒரு வரிச்சுத் தடியைப் போல நின்றிருந்தார் சீயா. அவரது கால்களும், கைகளும் இரத்தவாறாகக் கிடந்தன. கடலலைகளின் சீற்றத்தில் படகுகள் கடலுக்குள் இழுக்கப்படக்கூடாது என்பதற்காக வள்ளங்களை நைலோன்கயிறும் தேடாக்கயிறும் கொண்டு, தென்னைமர அடிகளில் தனியொரு ஆளாக இழுத்துக் கட்டியிருக்கிறார். தேடாக்கயிறுகள் வெட்டிய இடங்களிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. கன தமிழாக்களின் வள்ளங்களும் தப்பியிருந்தன. கடலலையின் சீற்றத்தில் மணல் அரித்து, சீயாவின் மீன் வாடியின் அரைவாசி சீமெந்துத் தளம் உடைந்து, பள்ளமாகிக் கிடந்த மணலில் சிதைந்துகிடந்தது. வாடியின் கூரை கடலில் மிதந்துகொண்டிருந்தது. அரியம் சீயாவின் அருகில் போனான். மழைநீரிலும் கடல்நீரிலும் ஊறிச் சூம்பி வெளிறிப்போய்த் தேடாக்கயிறு வெட்டி இரத்தம் கசிந்து, நடுங்கிக்கொண்டிருந்த அவரது விரல்களைப் பற்றினான். சீயா திரும்பி அவனைப் பார்த்துவிட்டுப் புன்னகையுடன் நடுங்கும் தன் விரல்களால், ஈரமாய்க் கிடந்த அவனது தலையைத் தடவினார். அரியம் தனக்கு மிக நெருக்கமாக ஏதோ அசைவது போல உணர்ந்தான். சில்வா தனக்கு மிக நெருக்கமாக நின்றிருப்பதை அரியம் கண்டான். சில்வா இரைச்சலுடன் ஓங்கி அடிக்கும் கடலலைகளைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

✿✿✿



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

## 3.1

அகல விரிந்துகிடந்த அவர்களது கண்கள் இருளில் ஒளிர்ந்து கொண்டிருந்தன. மரணம் தம்மை நெருங்கிவரக்கூடிய திசையை அவர்கள் அறிந்திருக்கவில்லை. திசை கெட்டு அவர்கள் பார்வை நாலாப்புறமும் அலைந்துகொண்டிருந்தது. இருளில் எட்டக்கூடிய பார்வைப் புலத்தையும் மீறித் தங்கள் பார்வையின் வீச்செல்லையை அதிகரித்துக்கொண்டே இருந்தார்கள். கண்ணீர் துளிர்த்துக்கிடந்த கண்கள் இருளில் அசாதாரணமான ஒளிர்வைக்கொண்டிருந்தன. வயது முதிர்ச்சியால் பார்வை மங்கி உலர்ந்துபோன கண்கள்கூட தம் இயல்புக்கு மீறி ஒளிர்ந்துகொண்டிருந்தன. இருள் மட்டுமே அவர்களுக்குப் பாதுகாப்புக் கவசமாக இருந்தது. பொழுதுபுலரும் போது அந்தக் கவசமும் உதிர்ந்துபோகும் என்பதை அவர்கள் அறிவார்கள். நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. துப்பாக்கி வேட்டோசைகளும் நிலம் அதிர பெரிய வெடிப்போசைகளும் தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருந்தன. அந்த கெந்தகபூமியின் நகரம் வெடிப்போசைகளால் அதிர்ந்துகொண்டும் தீச்சுவாலைகளால் கருகிக்கொண்டுமிருந்தது. ஊரின் மத்தியில் மூத்தம்மாச்சியின் ஈரப்பிலாமரத்துக்குக் கீழே சூடடிக்கப் பயன்படும் சாக்குப்படங்கு விரித்துகிடந்தது. படங்கில் குழந்தைகள் உறங்கிக் கிடந்தார்கள். பெண்கள் விழித்திருந்தார்கள். பெரும்பாலான ஆண்கள் கையில் கிடைத்ததை ஆயுதமாக ஏந்தியிருந்தார்கள். ஓர் இரவும்பகலுமாக நீடித்த முறுகல் நிலை உக்கிரமடைந்திருந்தது. கலவரத்தின் தீக்கங்குகள் முழுத்தீவையும் எரித்துக்கொண்டிருக்கும்போது, தமிழர் கனவுத்தலைநகர் மட்டும் தப்பிப் பிழைக்க எந்த வாய்ப்பும் இல்லை.

டொக்கயாட் கடற்படைத் தளத்திலிருந்து மதுபோதை ஏற்றிக் கொண்ட கும்பலொன்று தமிழர் கனவுத்தலைநகரின் நகரப்பகுதிக்குள் ஊடுருவியது. இன்னொரு கும்பல், மதுபோதை ஏறிய கடற்படை சிப்பாய்களை வழிநடத்திக்கொண்டு வந்தது. அவர்கள் பெற்றோல் கலன்கள் சகிதம் வெடிகுண்டுகளுடன் ஆயுததாரிகளாக றக் வண்டியில் வந்தார்கள். அவர்கள் கையில் தமிழர் கனவுத்தலைநகரின் நகரப்பகுதியின் வரைபடம் இருந்தது. வாக்காளர் பதிவுப்புத்தகம் இருந்தது. தமிழர் வணிகநிலையங்களையும் குடியிருப்புக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துல்லியமாகக் காட்டிக்கொடுக்கக்கூடியவர்களும் அவர்களுக்குள் இருந்தார்கள். இரவு ஒன்பது மணியளவில் அதிரத்தொடங்கிய தமிழர் கனவுத்தலைநகரின் நகரப்பகுதி, நள்ளிரவு தாண்டிய பின்னும் குண்டுவெடிப்புகளால் அதிர்ந்துகொண்டிருந்தது.

கனவுத்தலைநகரின் வீதிகளில் குண்டர்களின் அட்டகாசம் தொடங்கியபோதே சிறிமாபுரவாசிகளும் வன்முறையைக் கையிலெடுத்திருந்தார்கள். முதலில் கடற்கரையோரமாகச் சில குண்டர்கள் கையில் வாள்கள் சகிதம் கிருஸ்ணபுரிக்குள் புகுந்தார்கள். குட்டியண்ணன் தலைமையில் எதிர்பார்த்துக் காத்துநின்றவர்கள் முதலில் பெற்றோல் குண்டைக் கொளுத்தி எறிந்து, பின் டைனமெட்டை வெடிக்கச்செய்தார்கள். வந்தவர்கள் பின்வாங்கிப்போனார்கள். தங்கள் வீடுகள் கொளுத்தப்படக்கூடும் என்று பயந்த சாத்திரியார் வளவுச் சனங்களும் கிருஸ்ணபுரிச் சனங்களும் ஊரின் மத்தியிலிருந்த மூத்தம்மாச்சியின் ஈரப்பிலாமரத்திற்குக்கீழ் ஒன்றுதிரண்டார்கள். ஈரப்பிலாமரத்திற்குக்கீழ் விரித்துக்கிடந்த படங்கில் குழந்தைகள் உறங்க, பெண்கள் அருகில் காவல் இருந்தார்கள். அவர்கள் அங்கு திரண்ட கொஞ்ச நேரத்திலேயே திரும்பவும் சில குண்டர்கள் கையில் வாள்களுடன் சிறிமாபுரத்திலிருந்து இருளில் கிளம்பிவந்தார்கள். அவர்கள் இப்போது பிரதான வீதி வழியாக நுழைந்தார்கள். மூலைக்குத்திலிருந்த அப்புவின் சாராயக்கடை கம்பிவேலிக்கு மேலால் கம்பிக்கட்டையில் ஏறிக் குதித்து உள்ளேவர முற்பட்டார்கள்.

ஒற்றைக்குழல் துப்பாக்கியுடன் வட்டவிதானை அம்மாச்சி, மூத்தம்மாச்சியின் விலாட்டு மாமரத்தையொட்டி இருளில் நிலையெடுத்திருந்தார். அவர்களில் ஒருவன் கம்பிக்கட்டையில் ஏறும்வரை வட்டவிதானை அம்மாச்சி பொறுமையாகக் காத்திருந்தார். ஒரு கையில் வாளைப் பிடித்திருந்தவன் கம்பிக்கட்டையில் ஏறியிருந்தான். வட்டவிதானை அம்மாச்சி, அவனை இலக்கு வைத்தே சுட்டார். வெடி கம்பிக்கட்டையில் பட்டுப் பறந்தது. வேலியில் ஏறியவனை விட்டுவிட்டு, வாள்களுடன் வந்த மற்றவர்கள் கூச்சலிட்டுக் கொண்டே சிறிமாபுரம் நோக்கி ஓடினார்கள். கம்பிக்கட்டையில் ஏறியவன் வாளைப் போட்டுவிட்டு வீதியில் திரும்பவும் குதிக்க முனைந்தான். முள்ளுக் கம்பிவேலியில் சாரம் சிக்கிக்கொண்டதால் வேலியில் தொங்கித் தரையில் விழுந்தான். விழுந்தவன் சாரத்தையும் விட்டுவிட்டு சஸ்பெண்டருடன் சிறிமாபுரம் நோக்கி ஓடினான். சற்று நேரத்தில் சிறிமாபுரத்துக்குள் கேட்டுக்கொண்டிருந்த சலசலப்பு முற்றாக அடங்கிவிட்டது. ஆனாலும் ஈரப்பிலாமரத்துக்குக்கீழ் தஞ்சம் புகுந்திருந்தவர்களை பயம் விட்டகலவில்லை. இன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் கனவுத்தலைநகரத்துக்குள் விட்டுவிட்டு குண்டுகள் வெடிக்கும் ஓசையும் துப்பாக்கி வெடியோசைகளும் கேட்டுக்கொண்டுதான் இருந்தது. வானத்தில் ஒவ்வொரு குண்டு வெடிக்கும்போதும் புதிய புதிய இடங்களில் வானம் ஒளிர்ந்துகொண்டுதானிருந்தது.

மூத்தம்மாச்சியின் கிணற்றடியோரமாக இருந்த தென்னைமரத்தில் ஓய்வு பெற்ற பொலிஸ்காரர் சால்ஸ் நாகராசாவின் மகன் தவா, பல்லிபோல ஒட்டிக்கொண்டு ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தான். அவன் ஒவ்வொரு தடவை ஏறி இறங்கும்போதும் ஒரு செய்தியுடன் வருவான். வட்டவிதானை அம்மாச்சியின் ஒற்றை வெடியுடன் சிறிமாபுரக்காரர்கள் வீடுகளுக்குள் முடங்கி அடங்கிவிட்ட செய்தியையும் அவன்தான் அவர்களுக்குச் சொன்னான். ஒருதடவை ஏறி இறங்கித் தமிழர் கனவுத்தலைநகரின் நகரப்பகுதிக்குள் மார்க்கண்டு பிறதர்ஸ் ஸ்டோர் எரிவதாகச் சொன்னான். இன்னொருதடவை நந்தகோபால் சிப்பிங் கோப்பிரேசன் எரிவதாகச் சொன்னான். சிவன் கோவிலடி வீடுகளுடன் கணேசன் தியட்டரும் எரிவதாகச் சொன்னான். அவனை அசுப்புக்காட்டாது அமைதியாக இருக்குமாறு அங்கு நின்ற பெரியவர்கள் சொன்னபோதும் அவன் தென்னைமரத்தில் ஏறி இறங்கி, நகரத்தில் தனக்குத் தெரிந்த இடங்களையும் கடைகளையும் சொல்லி, எரிந்துகொண்டிருப்பதாகப் புளுகுமூட்டைகளை அவிழ்த்துவிட்டுக்கொண்டுதானிருந்தான். அவன் சொன்ன நேரத்தில் அவை எரியவில்லையாயினும் நகரத்துக்குள் அவை எல்லாம் எரிந்துகொண்டுதான் இருந்தன. அவன் சொல்லும் செய்திகள் அங்கிருந்தவர்களுக்குத் தேவையாக இருந்ததால் அவர்கள் அவனை அடக்க விரும்பவுமில்லை. அவன் ஏறி இறங்கிக்கொண்டுதானிருந்தான்.

எங்கோ தூரத்தில் சேவல் ஒன்று கூவியது. இன்னும் கொஞ்ச நேரத்தில் பொழுது விடிந்துவிடும் என ஈரப்பிலாமரத்துக்குக் கீழேயிருந்த வயதான பெத்தாக்கள் தங்களுக்குள் குசுகுசுத்துக்கொண்டார்கள். சில இளம்பெண்களும் குழந்தைகளும் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தார்கள். தவா பொழுது விடிவதற்குள், ஒரு தடவை தென்னையில் ஏறி இறங்கிவிடுவது என்ற முனைப்பில், அடிமரத்தில் தாவி, அரைவாசி தென்னைமரத்தில் ஏறியிருப்பான். நகரப் பக்கமிருந்து தார் வீதியில் இரைச்சலுடன் றக் வாகனம் ஒன்று வந்துநிற்பதை, தவாவைப் போலவே அங்கே விழித்திருந்தவர்களும் கேட்டார்கள். றக்கிலிருந்து கூச்சலாக சிங்களத்தில் கதைத்துக்கொண்டு, சப்பாத்துக்கால்கள் தார் வீதியில் சத்தம் எழும்பும்படி சிலர் குதிப்பதை அவர்கள் கேட்டார்கள். கூச்சலாக இரைந்து கதைக்கும் சத்தத்தையும் சிங்களத்தில் கட்டளையிடும் சத்தத்தையும் அவர்கள் கேட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவா தன் தலைக்கு மேலால், தார்வீதிப்பக்கமிருந்து கடற்கரைப்பக்கமாக சன்னங்கள் கூவல் ஓசையுடன் கடந்துபோக சடசடப்பான துப்பாக்கி வெடியோசைகளைக் கேட்டான். பயத்தில் தவாவுக்குக் கை கால்கள் உதறலெடுத்தன. தென்னைமரத்தைக் கட்டிப்பிடித்தபடி தன் கைகளிலும் தொடைகளிலும் நெஞ்சிலும் தென்னைமரப்பட்டை உரசும்படி வழுக்கிக் கீழே வந்தான். உடல் முழுவதும் சிறாய்ப்புக் காயங்களுடன் நிலத்தில் மல்லாந்து விழுந்தபடிகிடந்தான். குந்தியிருந்த பெத்தாக்களும் பெண்களும் தமக்கு நினைவிற்கு வந்த கடவுளர்களை முணுமுணுப்பாக உச்சரித்தபடி படங்கில் விழுந்து படுத்தனர். கையில் கிடைத்ததை ஆயுதமாக ஏந்தியிருந்த ஆண்களும் தாங்கள் நின்ற இடங்களிலேயே விழுந்து படுத்தார்கள்.

செட்டியார் வீட்டு வாழைப்பாத்திக்குள் சாரத்தை விரித்துப் படுத்துக்கிடந்த அரியமும் உதயனும் வெடிச்சத்தத்தில் விழித்தார்கள். உதயன் தன் இடுப்பிலிருந்து நழுவிப்போயிருந்த சின்ன கிரீஸ் கத்தியை இருளில் தடவிக் கையில் எடுத்துக்கொண்டான். தன் உயிர் போவதற்குமுன் ஒரு சிங்களவனையாவது குத்திவிடுவேன் என்றுதான் அரியத்திடம் இரவு முழுவதும் சொல்லிக்கொண்டிருந்தான். பெரிய வெடிப்போசை ஒன்று நிலத்தைக் கிடுகிடுக்க வைத்தது. தாங்கள் மணலுடன் அள்ளி வீசப்படுவது போன்ற உணர்வை அரியமும் உதயனும் உணர்ந்தார்கள். அவ்வளவு பெரிய வெடிப்போசையை அவர்கள் இவ்வளவு நெருக்கமாக முன்னொருபோதும் கேட்டிருக்கவில்லை. வெடிப்போசையின் அதிர்விலிருந்து தங்கள் செவிப்புலனும் உடலின் விதிர்விதிர்ப்பும் விடுபடாமலிருப்பதை உணர்ந்தார்கள். தமக்கு எதிரே மிகநெருக்கமாக லோன்றி தீப்பிடித்து எரியத் தொடங்குவதை அவர்கள் கண்டார்கள். ஒரு கணம் என்ன செய்வதென்று அறியாது திணறி அப்படியே கிடந்தார்கள். லோன்றியின் உள்ளே கிடந்த துணிகளில் தீப்பிடித்திருக்கவேண்டும். தென்னைவட்டை முட்டுமளவுக்குத் தீக்கங்குகள் பிரகாசமாகக் கொழுந்துவிட்டெரிந்தன. அவர்கள் எழும்பி ஓட நினைக்கவில்லை. தீக்கங்குகளின் வெளிச்சத்தில் அவர்கள் படுத்துக்கிடந்த வாழைப்பாத்தி பகல்போல வெளிச்சமாகக் கிடந்தது. தார்வீதியில் நின்றிருந்த நேவி றக்கையும் தோளில் துப்பாக்கியும் தடித்த உடுப்புக்களும் பூட்ஸ் காலுமாக நின்ற சிப்பாய்களை அவர்கள் கண்டார்கள். எழும்பி ஓடினால் கடற்படைச் சிப்பாய்கள் தம்மைச் சுட்டுக் கொன்றுவிடுவார்கள் என அவர்கள் நினைத்தார்கள். வாழைப்பாத்திக்குள் தொடர்ந்தும் தரையுடன் தரையாக ஒட்டியபடி படுத்துக்கிடந்தார்கள் உதயனும் அரியமும். தீக்கங்குகளின் வெக்கை அவர்கள் உடலைத் தகிக்கும் அளவுக்கு, லோன்றிக்கு அருகில் இருந்தார்கள். ஆனாலும் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழும்பி ஓட முயற்சிக்கவில்லை. உதயன் தன் கையிலிருக்கும் வில்லுக்கத்தி, இந்த வெடிப்போசைகளின் அதிர்வுக்கு முன்னே ஒன்றுமேயில்லை என்பதை உணர்ந்தான். இதைவிட பெரிதாக எதையாவது தேடவேண்டும் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டிருந்தான்.

லோன்றியைக் கொளுத்திய அவர்கள் றக்கில் ஏறிக்கொண்டார்கள். றக் உறுமிக்கொண்டு வேகமெடுத்துப்போனது. உதயனும் அரியமும் தவழ்ந்தும் ஊர்ந்தும் பின்வாங்கி, மூத்தம்மாச்சியின் ஈரப்பிலாமரத்தடியை நோக்கி நகர்ந்தார்கள். அவர்கள் நகர்ந்து கொண்டிருக்கும்போதே மீண்டும் வெடிச்சத்தங்கள் கேட்கத்தொடங்கின. றக் வண்டி சிறிமாபுரம் தாண்டி யமாலியா தாண்டி முருகாபுரிக்குள் போய்விட்டதை அவர்கள் உணர்ந்தார்கள். மீண்டும் பாரிய குண்டு வெடிக்கும் ஓசை. முருகாபுரிக்குள்ளிருந்த ஏதோ ஒரு கடை தீப்பற்றி எரிவதை கிருஸ்ணபுரிச் சனம் கண்டது.

## 3.2

காலை பதினொரு மணியைக் கடந்திருக்கும். வெயில் கொளுத்தியெடுத்துக்கொண்டிருந்தது. அகோரப் புழுக்கம். அரியம் அமைதியாக ஒழுங்கை முடக்கிலிருக்கும் சதுரக்கிணற்றடிக்குப் பக்கத்தில் வந்து நின்றான். நீர்க்குமிழிகள் வெடிப்பது போன்ற ஓசைகள் கிணற்றுக்குள்ளிருந்து கேட்டுக்கொண்டிருந்தன. ஊர் வனாந்தர அமைதியாகிப்போய்க் கிடந்தது. பிரதான விதிக்குப் போவது பற்றி அரியத்தால் எந்தத் தீர்மானமும் எடுக்க முடியவில்லை. கிணற்றுக்குள்ளிருந்து தவளைகளின் ''லபக்'' ''லபக்'' என்ற சத்தம் கிளம்பிக் கொண்டிருந்தது. பிரதான வீதியில் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சிறிமாபுரத்து வாக்குக்கண் டயஸ்பெரெரா இடப்பக்கக்காலைத் தேவைக்கு அதிகமாகவே விந்திவிந்தி நடந்து போனான். அவன் மிடுக்கில் இது எங்களது தேசம், காவலுக்கு நிற்பது எமது கடற்படைச் சிப்பாய்கள் என்ற தொனி தூக்கலாகவே இருந்தது. முந்தைய நாள் இரவு வட்டவிதானை அம்மாச்சி சுட்ட துப்பாக்கிக்குண்டு கம்பிக்கட்டையைப் பெயர்த்து அவனது காலைக் காயப்படுத்தியிருந்தது. காயத்துக்கு மருந்து கட்டியிருந்த வெள்ளைத்துணிக்கு மேலாக, இரத்தச்சிவப்பாக இருந்தது. ஓயாத வாகன இரைச்சலும் கோர்ன் சத்தமும் மாட்டுவண்டிகளின் கடகடப்பும் சைக்கிள் பெல் சத்தமும் எனக் கிடக்கும் தார்வீதி உறைந்துபோயிருந்தது. பச்சைநிற பொலிஸ் ஜீப்பில் ஸ்பீக்கர் கட்டி வீதிவீதியாக ஊரடங்குச்சட்டம் உடனடியாக அமுலுக்கு வருவதாக அறிவித்துப்போனார்கள். முந்தியநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலிருந்து அமுலுக்கு வந்த காலவரையற்ற ஊரடங்குச்சட்டம் எழுபத்தியிரண்டு மணித்தியாலங்களுக்கு மேலும் நீட்டிக்கப்பட்டிருந்தது. கலவரக் கூச்சல்களோ வெடியோசைகளோ இல்லாததால் ஊருக்குள் பயப்பீதி குறைந்திருந்தது. சோம்பிப்போய்க் கடற்கரையில் தென்னைமர நிழலில் படுத்துக்கிடந்த அரியத்தை அவன் அம்மா வந்து எழுப்பி ஊரடங்குச்சட்டம் பத்துமணியிலிருந்து இரண்டு மணிவரை தளர்த்தியிருப்பதால் யப்னா ஸ்டோருக்குப் போய் அரிசியும் கோதுமை மாவும் சீனியும் வாங்கிவா என்று துரத்திவிட்டாள். நேற்று டவுனுக்குப் பெரியகடைப்பக்கம் பகலில் ஊர் ஒழுங்கைக்குள் நடமாடியவர்களைப் பார்த்துப் பிரதான வீதியில் ரோந்துபோன ஆமி சுட்டதாகவும் எவருக்கும் ஏதும் ஆகவில்லை என்றும் செய்தி ஊருக்குள் பரவியிருந்தது.

உடலில் வியர்வையின் நசநசப்பு சேட்டை உடலுடன் ஒட்டவைத்திருந்தது. அரியம் பிரதான வீதியின் விளிம்பில் நின்றிருந்தான். வயிறு உப்பிய வெள்ளைப்பசு ஒன்று வீதிக்கு எதிர்ப்புறம் விழிகள் திறந்துகிடக்க தலையைத் தரையில் கோணலாகக் கிடத்தி விழுந்து கிடந்தது. அதன் தலையில் குந்தியிருந்த காகம் அதன் காதோரம் எதையோ கொத்தி இழுத்துக்கொண்டிருந்தது. இறந்துகிடக்கிறதா, அவர்கள் கொன்றுவிட்டார்களா, அரியம் ஒருகணம் திணறி நின்றான். தலையைத் தூக்கிச் சிலுப்பிவிட்டு மீண்டும் தலையை நிலத்தில், விழிகள் திறந்துகிடக்க, கிடத்தியது. பறந்த காகம் மீண்டும் அதன் தலையில் அமர்ந்துகொண்டது. அரியத்துக்குப் போன உயிர் திரும்பி வந்தது. வெள்ளைத்தொப்பியும் நீலநிற யூனிபோமும் அணிந்திருந்த தாடிவைத்த கடற்படைச் சிப்பாய்கள் நின்றிருந்தார்கள். பச்சைநிறப்பட்டியில் கொழுவி, தோளில் மாட்டியிருந்த துப்பாக்கிகள் இடுப்புக்குக் குறுக்காகத் தொங்கிக்கொண்டிருக்க, அந்த வேகாத வெயிலிலும் விறைப்பாக நின்றிருந்தார்கள்.

படுக்கைக்குடியிருப்புப் பக்கமிருந்து சாரி உடுத்தியிருந்த பெண் ஒருவர் பிரதான வீதியைக் குறுக்காகக் கடந்து யப்னா ஸ்டோருக்குப் போவதை அரியம் கண்டான். அம்மாவே கடைக்கு வந்திருக்கலாம் என அரியம் நினைத்தான். வீதியைக் குறுக்கறுத்துச் சிப்பாயைத் தாண்டிப் போனான் அரியம். சிப்பாய் தன்னைக் கூர்மையாகப் பார்ப்பதுபோல உணர்ந்தான் அரியம். திரும்பி சிப்பாயின் முகத்தைப் பார்த்தான். சிப்பாய் அவனை சாதாரணமாகவே பார்த்துக்கொண்டிருந்தான். தார் வெயிலில் உருகி வீதியின் ஓரங்களுக்குக் கசிந்து பரவுவது போல இருந்தது அரியத்துக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஸ்... ஸ்... என்ற கணக்கில ரெண்டு சிட்டுக்குருவி லேகியம்...''

முள்ளந்தண்டு சிலிர்க்க வெயிலில் நின்றான் அரியம். வீதிக்கு எதிர்ப்பக்க சைக்கிள் கடை தாழ்வாரத்தில் கம்பிவேலியோரமாகக் குந்தியிருந்த மணிகண்டனண்ணன் தாழ்ந்த குரலில் சொன்னான். அரியம் பொருட்படுத்தாது நடந்தான். ஜொலியக்கா காணாமல் போனபிறகு தலைமறைவாகிப்போயிருந்த மணிகண்டன் இப்போது சிலநாட்களாகத்தான் ஊருக்குள் நடமாடித் திரிகிறான். யப்னா ஸ்டோர் ஒற்றைப்பலகைக்கதவு மட்டும் திறந்திருந்தது. கடையடியில் கொஞ்ச சனம் நின்றிருந்தது, அரியத்துக்குத் தெம்பாக இருந்தது. கடைக்காரர் சாமான் சரைகளைக் கட்டி வேகமாக ஆட்களை விரட்டுவதில் குறியாக இருந்தார்.

தான் கொண்டுவந்த பையில் அரிசியும் கோதுமை மாவும் தேயிலைத்தூளும் பாரமில்லாதது போல கிடக்க அரியம் மீண்டும் தெருவுக்கு வந்தான். கொளுத்தியெடுக்கும் வெயிலில் கடற்படையின் றக் இரைச்சல் ஏற்படுத்தாது நகரப்பக்கமிருந்து ஊர்ந்து ஊர்ந்து வந்தது. அரியம் கடைத்தாழ்வாரத்தில் ஒதுங்கிக்கொண்டான். துப்பாக்கிகளை வெளியே நீட்டியபடியிருந்த நீலநிற யூனிபோம் அணிந்திருந்த சிப்பாய்களைச் சுமந்தபடி அந்த றக் ஊர்ந்து ஊர்ந்து யப்னா ஸ்டோர் தாண்டிப்போனது. பையைத் தோளில் தொங்கவிட்ட அரியம் வேமாக நடக்கமுனைந்து பின் நின்று, சாதாரணமாக இயல்பாக நடக்க பிரயத்தனப்பட்டான்.

''சிட்டுக்குருவி லேகியம்...''

சட்டென்று எங்கிருந்தோ நகர்ந்து வந்த மேகக்கூட்டத்தால் வீதியில் நிழல்படர்ந்தது. அரியம் வெயில் தணிந்த காற்றின் தழுவலில் கொஞ்சம் தன்னிலை மறந்து நடந்தான். மேகக்கூட்டம் நகர்ந்து வெயில் மீண்டும் சுட்டெரிக்கத் தொடங்கியபோது அரியம் அந்தக் கடற்படைச் சிப்பாயைத் தாண்டிப்போனான். காவலுக்கு நிற்கும் சிப்பாய் தன்னைக் கூப்பிடுவது போன்ற உணர்வு உந்த அரியம் நின்றான். அப்படி ஏதும் இல்லை எனத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் அரியம். முந்தியநாள் இரவு எரிந்து முகடு உட்குழிந்த லோன்றியின் புகைபடிந்த சுவர்களைப் பார்த்தபடி நடந்தான். லோன்றியோடு ஒட்டியபடி நின்ற கருத்த கொழும்பான் மாமரத்தின் கெந்தொன்று தடித்த மாவிலைகள், தளிர்கள், மாம்பிஞ்சுகள் எல்லாம் கருகித் தொங்கி நின்றிருந்தது. மெல்லிய சீட்டி அடிக்கும் ஒலியை அரியம் கேட்டான். அரியம் நின்றான். வீதியில் அவனைத்தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு யாரும் இல்லை. திரும்பி அரியம் சிப்பாயைப் பார்த்தான். சிப்பாயும் வீதியை அங்குமிங்கும் பார்த்துவிட்டு, அவனைத் துவக்கிலிருந்து கையை எடுக்காது விரல்களால் சைகைசெய்து கூப்பிட்டான். உடல் வெடவெடத்து அடங்கியது. தனது பாரம் குறைந்த பை கனதியாக மாறிவிட்டதுபோல பெரும் பிரயாசையுடன் அதைச் சுமந்து நடந்தான். கடை, சீனி, கோதம்மா, அரிசி, சாப்பாடு, போவது, வருவது என சில்வா உச்சரிக்கக்கூடிய சிங்களச் சொற்களைத் தன் நினைவிலிருந்து மீட்டு வசனமாக மாற்றுவதற்கு முனைந்தபடி அரியம் சிப்பாயை நெருங்கிப்போனான்.

''நெவிக்கட் தெக்காய்...''

நேவிக்காரன் ஒரு ரூபாய் குத்தியை அரியத்தின் கைக்குள் வைத்துப் பொத்தினான். ரூபாய்க் குத்தியின் நெருடலில் சுயநினைவுக்கு வந்த அரியம், திரும்பி யப்னா ஸ்டோரை நோக்கி வெயிலில் நடந்தான்.

''என்ற கணக்கில சிட்டுக்குருவி லேகியம் ரெண்டு...''

திறந்து கிடந்த ஒற்றைக்கதவையும் ஒன்றிரண்டாக நின்றிருந்த சனம் அடைத்துக்கொண்டு நின்றது. பின்னால் நின்றபடி அரியம் சற்று அதட்டும் குரலில் சொன்னான்.

''நேவிக்காறாக்களுக்கு ரெண்டு நெவிக்கேட் சிகரட்டாம்...''

கதவை அடைத்துக்கொண்டு நின்ற சனம் விலகி வழிவிட்டது அரியத்துக்கு. இரண்டு நெவிக்கட் சிகரட்டும் மிகுதி பத்து பத்து சதமாக இருபது சத நாணயங்களையும் கைக்குள் வைத்துப் பொத்தினார் யப்னா ஸ்டோர் கடைக்காரர்.

''மணிகண்டனண்ணனுக்கு தன்ற கணக்கில ரெண்டு சிட்டுக்குருவி லேகியமாம்...''

அவனை ஏறயிறங்க முறைத்துப் பார்த்தார் கடைக்காரர். பின் குனிந்து அடி றாக்கையிலிருந்து ஒரு கண்ணாடி போத்தலைத் திறந்து, மெழுகுத்தாளில் பொதி செய்யப்பட்டிருந்த சிட்டுக்குருவி லேகியத்தைக் கடைப் பலகையில் வைத்தார் கடைக்காரர். அரியம் திரும்பி வீதியைக் குறுக்கறுத்து நடந்தான். அரியம் சைக்கிள் கடைத் தாழ்வாரத்தில் குந்தியிருந்த மணிகண்டனை நோக்கி வேலிக்கு மேலால் இரண்டு லேகியங்களையும் போட்டான்.

''கோடான கோடி புண்ணியம் மகனே...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியம் வேகமாக சிப்பாயை நெருங்கி நின்று தன் கையை விரித்தான். சிகரட்டுக்களை மாத்திரம் பொறுக்கியெடுத்த சிப்பாய், அரியத்தின் கைகளைப் பொத்திக்கொண்டு சொன்னான்.

''யண்ட... யண்ட...''

வியர்வையில் கசிந்துகொண்டிருந்த உள்ளங்கையில் இரண்டு பத்துச் சத நாணயங்களும் உறுத்த அரியம் நடந்தான். ஒழுங்கைக்குள் இறங்கி நடக்கும்போது, முந்தியநாள் இந்த நகரத்தை எரித்தவர்கள் இவர்கள்தானா என அவனுக்கு நினைக்கத்தோன்றியது. அந்த இரண்டு பத்துச்சத நாணயங்களையும் சதுரக் கிணற்றுக்குள் போட்டான் அரியம். எதிரே அவனைச் சுட்டெரிப்பது போல உதயன் பார்த்துக்கொண்டு நிற்பதை அரியம் கண்டான்.

''நீ துரோகியடா... அதுவும் பச்சைத் துரோகி...''

## 3.3

கள்ளுத்தவறணை அம்மாச்சியின் இரண்டாவது மகள் ராணியை பயம் இரவுபகல் என்றில்லாது துரத்திக்கொண்டிருந்தது. நகரசபை மெம்பர் பொண்டாட்டி என்ற அந்தஸ்து, திமிரான நடையைப் பகலில் அவளுக்குக் கொடுத்தாலும் இரவுகள் அவளை பயத்தில் பித்துநிலைக்குக் கொண்டுபோய்விடுகின்றன. நேற்றிரவு தொடுவாப் பிள்ளையார் கோயிலிலிருந்து பூசையை முடித்துக் கொண்டு திரும்பிவரும்போது இருட்டிவிட்டிருந்தது. தன்னை யாரோ பின்தொடர்வதுபோல இருந்ததால் வேகமாக நடக்க முனைந்தாள். யாரோ ஒருவன் சைக்கிளை உருட்டியபடி அவளைப் பின்தொடர்ந்துகொண்டுதானிருந்தான். அவள் சாரி இடற இடற ஓட்டமும் நடையுமாக வீடு நோக்கி வந்துகொண்டிருந்தாள். பின்னால் திரும்பிப் பார்த்தாள். சைக்கிளை உருட்டிக்கொண்டு வந்தவன், சைக்கிளில் ஏறி வேகமாக மிதித்துக்கொண்டு வந்தான் இருளில். ராணி ஓடத் தொடங்கினாள். துரத்தி வந்தவன் சைக்கிளில் இருந்தபடியே அவளை எட்டி உதைத்தான். ராணி சாரி இடற வீதியில் இடக்கு முடக்காக விழுந்து உருண்டாள்.

''ஐயோ... காப்பாத்துங்க... காப்பாத்துங்க... சிங்களவன் என்ன வெட்டுறான்...''

ராணி கூச்சலிட்டாள். சனநடமாட்டமில்லாத அந்த இடத்தில் ராணி தனியே விழுந்து கிடந்தாள். ராணியைத் துரத்தி வந்தவன் சட்டென்று மறைந்து போனான். கள்ளன் காவாலியா, சிங்களவனா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணிக்குக் குழப்பமாக இருந்தது. ராணி எழும்பி இருண்ட வீதியில் தனியே நின்றிருந்தாள். தன் புருசனைச் சுற்றிக்கொண்டு திரியும் எத்தனை தடிமாடுகளுக்கு சாப்பாடு போடுகிறாள், ஆபத்தான நேரத்தில் துணைக்கு ஒருவர்கூட இல்லையே என ஆத்திரப்பட்டாள். அவள் வீதியில் நின்றிருந்த இடம் சியாமளா கொஸ்பிட்டல் இயங்கிய காலத்தில் பிணவறையாக இருந்த இடத்துக்கு நேரெதிரே. ராணி இங்கே குடிவந்தபோது, தம்பலகாமத்திலிருந்து வந்த கள்ளுத்தவறணை அம்மாச்சியின் மூத்த மகள், ராணியின் தமக்கை, வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு, பக்கத்திலிருக்கும் கொஸ்பிட்டலைக் காட்டிச் சொன்னாள்.

''இந்த கொஸ்பிட்டலில... எத்தின அவலச்சா நடந்திருக்கும்... அந்த ஆவிகள் இதுக்கதானே சுத்தும்...''

ராணி அப்போது அதைப் பொருட்படுத்தவில்லை. பேய் பிசாசாக இருக்குமோ என நினைத்த ராணி வேகமாக நடந்து வீட்டுக்குள் போனாள். ஆனால் காலால் உதைத்த வலி அவள் முதுகில் இருந்தது. பேய் அடித்தால் உயிரே போகும்போது வலிக்காமல் விடுமா என ராணி நினைத்துக்கொண்டாள். ஏற்கனவே தன் கணவனின் அரசியல் நடவடிக்கையால் பயந்து போயிருந்த ராணி, அந்த நிகழ்வுக்குப்பின் பித்துப் பிடித்தவள்போல் ஆகிவிட்டாள். அந்தச் சம்பவம் மட்டும் அவள் பித்துநிலைக்குக் காரணமாக இருக்கவில்லை.

விவசாய மன்னன் தணிகாசலத்தை நீண்ட நாட்களாகக் காதலித்துத் தமக்கையின் திருமணத்துக்குப்பின் சேர்ந்துவாழத் தொடங்கிவிட்டாள். அவர்கள், தணிகாசலத்தின் தமக்கை மங்களக்கா வீட்டின் ஒரு பகுதியில்தான், கிருஸ்ணபுரிக்குள் குடியிருந்தார்கள். இப்போது அவர்கள் முருகாபுரிக்குள் சியாமளா கொஸ்பிட்டலுக்குப் பக்கத்திலிருந்த பங்களா போன்ற பெரிய வீட்டில் வாடகைக்குக் குடிவந்துவிட்டார்கள். தனியார் வைத்தியசாலையான சியாமளா கொஸ்பிட்டல் ஒரு காலத்தில் பிரபலமாகத்தானிருந்தது. தங்கள் பிள்ளைகள் சியாமளா கொஸ்பிட்டலில்தான் பிறந்தது என நகரத்தில் இருப்பவர்களும் உள்ளூர்க்காரர்களும் பெருமையாகப் பேசிக்கொண்டு திரிந்த காலம் ஒன்றிருந்தது. அடுத்தடுத்து மர்மமான முறையில் அந்த கொஸ்பிட்டலில் சிலர் இறந்தபோது, பணத்துக்காக அங்கே கொலைகள் நடைபெறுவதாகக் கதைகள் உலாவத் தொடங்கின. பணக்காரன் ஒருவன், பிரசவத்துக்கு அனுமதிக்கப்பட்ட தன் மனைவியை வைத்தியர்களுக்குப் பணம் கொடுத்துக் கொன்றதாகப் பரவிய கதையுடன் அந்த கொஸ்பிட்டல் தன் செந்தளிப்பையும் செல்வாக்கையும் இழந்துபோனது. கைவிடப்பட்டுக்கிடந்த அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஸ்பிட்டலைத்தான் கலவரக்காரர்கள் அன்றிரவு குண்டுவைத்துத் தகர்த்துவிட்டுப் போயிருந்தார்கள். ஏற்கனவே பாழடைந்துகிடந்த அந்த கொஸ்பிட்டல் குண்டுவெடிப்பில் சிதைந்துகிடந்தது. அந்த சிதைந்த கட்டிடமும் ராணியை இரவில் பயங்கொள்ள வைத்துக் கொண்டிருந்தது என்பதும் உண்மைதான்.

ராணிக்கு அடுத்தடுத்து ஐந்து பிள்ளைகளும் பெண் பிள்ளை களாகவே பிறந்தார்கள். தணிகாசலம் நகரசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதால் அடிக்கடி அவரைத் தேடி விருந்தினர்கள் வரத்தொடங்கினார்கள். அவர்கள் குடியிருந்த மங்களக்காவின் ஒரு பகுதி வீடு போதாது இருந்ததினால்தான் இந்த பங்களா போன்ற வீட்டை வாடகைக்கு அமர்த்தியிருந்தார் தணிகாசலம். எப்போதும் வீடு நிறைய ஆக்கள் இருந்தார்கள். அடுப்பில் உலை கொதித்துக் கொண்டேயிருந்தது. ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்ற அரசனும் ஆண்டியாவான் என்பார்கள். இங்கே தணிகாசலத்தின் மெம்பர் பதவி அவர் கஜானாவைக் காலிபண்ணிக்கொண்டிருந்தது. இந்த பங்களாவுக்குக் குடிவந்த நாள் முதல் ராணி நிம்மதியின்றித் தவித்தாள்.

கலவரத்துக்குப் பிறகு நாட்டின் பாதுகாப்புக் கருதி சேனைப்பயிர்ச் செய்கைப் பாதுகாப்புக்கும் அரச தொழில் பாதுகாப்புக்கும் என வழங்கப்பட்ட ''சொட்கன்''களைக் குறித்த காலப்பகுதிக்குள் ஒப்படைக்க வேண்டும் என்றும் தவறும்பட்சத்தில் துப்பாக்கிகள் வைத்திருப்பவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் பொலீஸ் ஸ்பிக்கர் கட்டி, ஊர் ஊராக, வீதி வீதியாக அறிவித்திருந்தது. ஊரில் லைசென்ஸ் துப்பாக்கி வைத்திருந்தவர்கள் சிலர் நல்ல பிள்ளையாக ஒப்படைத்தார்கள். சிலர் இனந்தெரியாதவர்கள் வந்து பறித்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று பொலீஸில் முறைப்பாடு வைத்தார்கள். அப்படியான நேரத்தில்தான் வட்டவிதானை அம்மாச்சியின் எடுபிடியும் மச்சினனுமான மழுவன் மகேந்திரன் ''பிளையிங் பிஜன்'' என்ற இயக்கத்தை கன்னியாவில் தொடங்கினான். சைக்கிள் மட்காட்டிலிருந்த புறாச் சின்னத்தைத் தன் தொப்பியில் பதித்து வைத்துக்கொண்டு இயக்கத்தை நடாத்தினான். ஊருக்குள்ளிருந்த சில துப்பாக்கிகளை அவன்தான் கைப்பற்றியிருந்தான். அவன் கன்னியா ஆண்டான் குளப்பகுதிகளில் தமிழ் மக்களுடன் முண்டிக் கொண்டிருந்த சில சிங்களச் சண்டியர்களைக் கடத்தியதாகவும் செய்திகள் உலாவின. அவன் தன் ஐந்து விரல்களின் நடுவிலும் நான்கு தோட்டாக்களைச் செருகிவைத்துக்கொண்டு, அடுத்தடுத்து தோட்டாக்களை ''சொட்கன்னில்'' நாண் ஏற்றிச் சுடப் பழகிக் கொண்டிருப்பதாக அவனது கூட்டாளிகள் ஊருக்குள் கதைகளைப் பரப்பினார்கள். மழுவன் மகேந்திரன் தனி ஆளாகக் கன்னியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்குவாரிக்குள் மறைந்துகொண்டு வீதியில் ரோந்துபோன பொலீஸ் ஜீப்பை நோக்கி அடுத்தடுத்து இரண்டு மூன்று துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தான். பொலீஸ் ஜீப் போனட்டில் பட்டுத் தெறித்தன வெடிகள். பொலீஸ் திருப்பிச் சுடத்தொடங்கியது. வெடிக்குப் பயந்து பொலீஸ் தப்பி ஓடமுனையும் என்றுதான் மழுவன் மகேந்திரன் நினைத்தான். பொலீஸ் திருப்பிச் சுடும் என அவன் எதிர்பார்க்கவில்லை. தடுமாறிப்போன மழுவன் மகேந்திரன் கல்குவாரியின் கற்குவியல்களுக்குள்ளால் புகுந்து காட்டுக்குள் ஓடித் தப்பிக்க முனைந்தான். J.V.P கலகம் செய்த காலத்தில், கலகம் அடக்கும் பொலீஸ் பிரிவிலிருந்த வயதான தமிழ் பொலீஸ்காரர் ஒருவர் மழுவன் மகேந்திரனைக் காலில் சுட்டுப் பிடித்தார்.

பொலீஸ் விசாரணையில் தனக்கு துவக்கும் தந்து இயக்கம் நடத்துவதற்குப் பணமும் தந்தது நகரசபை மெம்பர் தணிகாசலம்தான் என மழுவன் மகேந்திரன் வாக்குமூலம் கொடுத்தான். அந்த பங்களா போன்ற வீட்டுக்குக் குடிவந்த இரண்டாம் நாளே பொலீஸ் தணிகாசலத்தைக் கைதுசெய்து போனது. பின் அரசியல் தலையீடு, போதுமான ஆதாரம் இல்லை என்ற காரணத்தினால் இரண்டு நாட்களில் தணிகாசலம் விடுதலையானார். தணிகாசலம் விடுதலையான இரண்டொரு தினங்களில் உப்புவெளி பொலீஸ் கஸ்ரடியிலிருந்து இரவோடு இரவாகத் தப்பிவந்தான் மழுவன் மகேந்திரன். உப்புவெளி பொலீஸ் நிலைய இரண்டாம் மாடி யன்னல் கதவை உடைத்துக் குதித்துத் தப்பியிருந்தான் மழுவன் மகேந்திரன். தப்பிவந்த மழுவன் மகேந்திரன் மூத்தம்மாச்சியின் முன்விறாந்தை பிளேட்டிற்கு மேலே, ஓட்டுத் தாழ்வாரத்துக்கு இடையில்தான் விடிய விடிய ஒளிந்திருந்தான். அதிகாலையில் ஊருக்குள் மழுவன் மகேந்திரனைக் கண்ட கிருஸ்ணபுரிக்காரர்கள் அரண்டுபோனார்கள். பின் தணிகாசலத்துக்குத் தகவல் கொடுத்தார்கள். அவர் வந்து சூடடிக்கப்போகும் மெசினில் படங்குக்குள் வைத்து மழுவன் மகேந்திரனைக் கட்டி, விடிந்தும் விடியாத வேளையில் ரெக்டர் பெட்டியில் சாக்குகளுடனும் படங்குகளுடனும் போட்டு நிலாவெளிப்பக்கம் அனுப்பிவைத்தார். பின் அவரது பணத்தில்தான் அவன் இந்தியாவுக்குத் தப்பிப்போனதாகச் சொன்னார்கள்.

சுடுதண்ணீர்ப்பானை கொதித்துக்கொண்டிருப்பதைப் போலத்தான் கள்ளுத்தவறணை அம்மாச்சியின் இரண்டாவது மகள் ராணியின் மனமும் கொதித்துக்கொண்டிருந்தது. தணிகாசலம் மெம்பராக வந்த ஐந்தாறு மாதங்களில் எவ்வளவோ நடந்து முடிந்துவிட்டது. சிறிமாபுர குடியேற்றக்காரர்களின் கொட்டத்தை அடக்கவேண்டுமென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லவ்லேனுக்குள் தமிழர்களைக் குடியேற்றவேண்டும் என்ற தீர்மானத்தை நகரசபை எடுத்தது. முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும். தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களின் நாசுக்கான காய்நகர்த்தலில், லவ்லேனுக்குள் தமிழர்களுக்கான நாற்பதுவீட்டுத்திட்டத்தைக் கொண்டுவந்து சேர்த்தது திருகோணமலை நகரசபை. அந்த வீட்டுத்திட்டத்தைக் கொண்டுவருவதில் மும்முரமாகவும் தீவிரமாகவும் செயற்பட்டது தணிகாசலம் என்பதால் அவருக்கே அந்த வீட்டுத் திட்டத்தை அமைப்பதற்கான பொறுப்பும் கொந்தறாத்தும் வழங்கப்பட்டிருந்தது.

சிறிமாபுரத்துக்கு எதிரே பிரதானவீதியை ஒட்டித் தபால் கந்தோருக்குப் பக்கத்தில் முதல் கட்டமாகப் பத்து வீடுகளை அமைத்துச் சனத்தைக் குடியமர்த்திவிட்டுப் பிறகு மற்ற வீடுகளை அமைப்பது எனத் தீர்மானித்தார்கள். வேகமாக அத்திவாரம்போட்டு சுவர்களும் லின்டர் மட்டத்துக்கு உயர்ந்துகொண்டிருந்தன. அப்படியான ஒரு இரவில்தான், குடும்பமாகவே தபால் கந்தோரும் வீடுமாக இருந்த போஸ்ட்மாஸ்டர் ஏகாம்பரத்திடமிருந்து நகரசபைத் தலைவருக்கும் தணிகாசலத்துக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும் தொலைபேசி அழைப்பு வந்தது, கட்டிடங்களை சிலர் பின்புறமாக இடித்து விழுத்துவதாக. தணிகாசலம் சில அரசியல் பிரமுகர்களையும் இளைஞர்களையும் திரட்டிக்கொண்டுபோனார். உடைத்துக்கொண்டு இருந்தவர்கள், இவர்களைக் கண்டதும் அலவாங்குகளை விட்டுவிட்டு இருளோடு இருளாக லவ்லேன் புதர்களுக்குள்ளும் ஆங்கிலேயரின் சிதைந்த கட்டிடங்களுக்குள்ளும் மறைந்துபோனார்கள். அன்று மாலைவரை கட்டப்பட்டிருந்த பச்சைச் சுவர்க்கட்டுகள் இடிந்து விழுந்துகிடந்தன. ஆற அமர பொலீஸ் அந்த இடத்துக்கு வந்தது. ஒப்புக்கு விசாரணை செய்துவிட்டுக் கூட்டமாக நிற்பதற்கு அனுமதியில்லை என இளைஞர்களைக் கலைத்துவிட்டுப் போனது.

அடுத்த நாள் அதிகாலை இயல்புக்கு மீறிய பதற்றத்துடன் விடிந்தது. காலையில் சாமிக்குப் பூ ஆய்ந்துகொண்டிருந்த போஸ்ட்மாஸ்டர் ஏகாம்பரத்தை, முகத்தில் துணிகட்டி வந்த ஒருவன் நாட்டுக் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டு சிறிமாபுரத்துக்குள் ஓடி ஒளிந்து கொண்டான். தோளில் சிறு காயத்துடன் அவர் தப்பிக்கொண்டார். இடிக்கப்பட்டது அரசவீட்டுத்திட்டம் என்பதாலும் சுடப்பட்டவர் அரச உத்தியோகத்தர் என்பதாலும் தவிர்க்கமுடியாது பொலீஸ் விசாரணைக்கு வந்தது. போஸ்ட்மாஸ்டர் ஏகாம்பரம் தன்னைச் சுட்டது சிறிமாபுரச் சிங்களவர் இல்லை என்றும் வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட கூலிப்படை என்றும் அவனைத் தன்னால் அடையாளம் காட்டமுடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் வாக்குமூலம் கொடுத்தார். தணிகாசலமும் கட்டடங்களை இடித்தவர்களை அடையாளம் காட்டமுடியும் என்றார். வேறுவழியில்லாது பொலீஸ் இன்ஸ்பெக்டர் பெர்ணான்டோ சிறிய பொலீஸ் படையுடன் தணிகாசலத்தையும் ஏகாம்பரத்தையும் ஜீப்பில் அழைத்துக்கொண்டு சிறிமாபுர உள்வீதிகளில் சுற்றினார்கள். போஸ்ட் மாஸ்டர் சிறிமாபுரத்துக்குள் நடமாடிய வெளியாட்களைக் கைகாட்டினார். தணிகாசலம் சிறிமாபுரத்துக்குள் அட்டகாசம்புரியும் சிலரைக் கைகாட்டினார். பொலீஸ் அவர்களைக் கைது செய்துகொண்டு போனது. சிறிமாபுரக்காரர்களின் அட்டகாசம் கொஞ்சம் அடங்கியது போலத்தானிருந்தது.

நேரம் இரவு பத்துமணியைக் கடந்துவிட்டிருந்தது. மெம்பர் தணிகாசலம் வீட்டு முன்விறாந்தையில் இன்னமும் கூட்டம் நடந்துகொண்டுதானிருந்தது. ராணி காத்திருந்தாள், பிளேன் ரீயோ, ரீயோ போடச்சொல்லிக் கேட்கலாம். அவளது உறவுக்காரப் பெண்கள் அவளுக்கு உதவத்தான் இங்குவந்து தங்கியிருந்தார்கள். எல்லோருமே நல்ல தூக்கத்தில் கிடந்தார்கள். பிள்ளைகளும் அரவம்கூட இல்லாது நல்ல தூக்கத்தில் கிடந்தார்கள். லைட் வெளிச்சம் கதவிடுக்குக்குள்ளால் விழுந்துகொண்டுதானிருந்தது. பத்து வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருந்தன. அங்கு குடிபோக சனம் பயந்தது. சாம்பல்தீவு சீனித்தம்பி மட்டுமே துணிச்சலுடன் குடிபோவதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார். மற்ற வீடுகளில் குடிவரக்கூடியவர்களைப் பற்றியும் பாதுகாப்பு சம்பந்தமாகவும் தான் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. ராணிக்குப் புழுக்கமாக இருந்தது. பின்கதவைத் திறந்துவிட்டாள். கடற்காற்று சிலுசிலுவென்று அடித்தது. வெளிக்கதவின் நிலைப்படிக்குக் கீழே குந்தினாள். புழுக்கத்தில் வியர்த்திருந்த உடல், கடற்காற்றில் குளிர்ந்துகொண்டிருந்தது. ராணி பெருமூச்சுவிட்டாள். நேரம் கடந்துகொண்டிருந்தது.

அவளுக்கு சியாமளா கொஸ்பிட்டல் மதிலோரம் யாரோ பதுங்குவது போல இருந்தது. மனப்பிரமையாக இருக்குமோ எனத்தான் நினைத்தாள். பயம் மனதுக்குள் இடித்தது. சட்டென்று எழுந்து டோச் லைட்டை எடுத்தாள். மதிலோரமாக அடித்துக்கொண்டே கூர்ந்து பார்த்துக்கொண்டுவந்தாள். முதலில் எதுவும் புலப்படவில்லை. கூர்ந்து கவனித்துக்கொண்டே டோச் லைட்டை மதிலோரமாக மறுவலமாக அடித்துக்கொண்டு வந்தாள். மதிலோரத்தில் திட்டாக ஏதோ அவள் கண்களுக்குத் தட்டுப்பட்டது. மீண்டும் அந்த இடத்தில் டோச் லைட்டைக் குறிப்பாக அடித்துப்பார்த்தாள். சாக்கால் தலையை மூடியிருந்த இரு உருவங்கள் குந்தியிருந்தன. ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் வாள் இருப்பதையும் கண்டாள். அவள் போட்ட "வீல்" என்ற கூச்சலில் படுத்திருந்தவர்கள் எழும்பி உட்கார்ந்தார்கள். கூட்டத்தில் கதைத்துக் கொண்டிருந்தவர்கள், முன் கதவால் வெளியில் பாய்ந்து பின்புறம் ஓடி வந்தார்கள். மதிலோரம் குந்தியிருந்த இரண்டு உருவங்களும் மதிலால் பாய்ந்து சியாமளா கொஸ்பிட்டலுக்குள் குதித்து ஓடுவதைக் கண்டார்கள். ஏற்கனவே மணலுக்குள் புதைத்து வைத்திருந்த வாள்களை எடுத்துக்கொண்ட சிலர், டோச் லைட் சகிதம் நாலாப்புறமும் அவர்களைத் தேடித் துரத்திப்போனார்கள்.

வீரிட்டுக் கத்திக்கூச்சலிட்ட ராணி மூர்ச்சையாகிப்போனாள். கண்விழித்து எழும்பிய குழந்தைகள் அவளைச் சுற்றி அழத்தொடங்கின. உதவிக்கு வந்திருந்த உறவுக்காரப் பெண்கள் ராணியின் முகத்தில் தண்ணீர்த் தெளித்து அவளை ஆசுவாசப்படுத்தினார்கள். சிலர் குழந்தைகளைத் தோளில்போட்டு மீண்டும் நித்திரையாக்க முனைந்தார்கள். பெரிய பிள்ளைகள் தாயின் முகத்தைத் துடைத்துவிட்டுக் கொண்டிருந்தார்கள். துரத்திப்போனவர்கள் திரும்பி வந்தார்கள். யாரும் அகப்படவில்லை. ஆனால் தொடுவாப் பிள்ளையார் கோயில் முடக்கில் நின்றிருந்த ஒரு வாகனம் புறப்பட்டுப்போனது என்ற செய்தியோடு வந்தார்கள். துரத்திப் போனவர்களில் ஒருவன், அந்த வாகனம் இன்ஸ்பெக்டர் பெர்ணான்டோவின் பொலீஸ் ஜீப் என்பதில் தனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை என்றான். தணிகாசலம் வீட்டில் விடியும்வரை லைட்டுகள் எரிந்துகொண்டேயிருந்தன.

## 3.4

நள்ளிரவு. சில நாட்களாக எந்தக் கலவரமோ பதற்றமோ இல்லாது கிருஸ்ணபுரிச் சனம் உறங்கமுடிந்தது. நவஜோதி மாஸ்டர் உறக்கத்தைத் தொலைத்துவிட்டுக் காத்திருந்தார். வைரவர் கோவிலடியில் கற்களை அடுக்கி சிலிப்பர் கட்டையைக் குறுக்காகப்போட்டு வாங்குபோல அமைத்திருந்த இடத்தில் அமர்வதும் பின் எழும்பி நடப்பதுமாக இருந்தார். புலிகள் இயக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட நாள்முதல் நவஜோதி மாஸ்டர் புளகாங்கிதத்துடன் காணப்பட்டார். தனது நடை உடை பாவனைகளிலும் தன் நடத்தையிலும் தன் சிரிப்பிலும்கூட தான் மர்மமானவன் என்ற தொனி வெளியில் தெரியவேண்டும் என விரும்பினார். ஊரில் யாருக்கும் கிடைக்காத பாக்கியம் தனக்குக் கிடைத்திருப்பதாக நம்பினார். அதிகமாக சலசலப்பாகப் பேசிக்கொண்டு திரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவஜோதி மாஸ்டர் மௌனியாகிப் போனார். தன் வீட்டுக்காரர்களுடனும்சரி, ஊரில் உள்ளவர்களுடனும்சரி வினோதமான அங்க அசைவுகளுடன் கூடிய சைகை மொழியிலேயே பேசினார்.

நவஜோதி மாஸ்டர் ஆறாம் கட்டையிலிருக்கும் ஆத்திமோட்டை பள்ளிக்கூடத்தில்தான் ஆசிரியராக வேலை பார்த்தார். அந்தப் பள்ளிக்கூடத்தில் புலிகள் இயக்கம் கூட்டம் போட்டது. பாடசாலை நேரத்தில் அதுவும் பட்டப்பகலில் புலிகள் கூட்டம் போடுவார்கள் என யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆத்திமோட்டை பள்ளிக்கூடம் பிரதான வீதியிலிருந்தும் உள் ஒழுங்கைகளிலிருந்தும் உள்ளே தனித்த தீவொன்றிலிருப்பதுபோல அமைந்திருந்ததால்தான் அவர்கள் அதைத் தெரிவுசெய்திருந்தார்கள். புலிகள் வரும்போது கூடவே அவர்களுடன் சேர்ந்து ஊர் இளைஞர்களும் வந்தார்கள். திறந்தவெளி முற்றத்தில்தான் கூட்டம் நடத்தினார்கள். வந்திருந்த புலி உறுப்பினர்கள் கடும்பயிற்சியினால் உடல் கறுத்துத் தசை நார்கள் இறுகிப்போன மனிதர்களாக இருந்தார்கள். தங்கள் முகங்களை, அணிந்திருந்த தொப்பியால் பெருமளவுக்கு மறைத்திருந்தார்கள். ஆயுதங்களை இடுப்பில் தாங்கி பெக்கி சேட்டால் மூடியிருந்தார்கள். கூட்டம் நடப்பதற்கான ஏற்பாடுகள் முடிந்ததும் வெள்ளை வேட்டி சேட் சகிதம் ஒருவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்தார்கள். வெள்ளை வேட்டி சேட் சகிதம் வந்தவர் முதலில் சாதாரண சம்பிரதாயமான பேச்சுடன்தான் தொடங்கினார். பின் முழங்கத் தொடங்கினார். தலைவரின் கொள்கைகள், அவரது திட்டமிடல்கள் பற்றியெல்லாம் பேசினார். மூச்சுக்கு முந்நூறுதடவை தலைவரின் பெயரை உச்சரித்தார். தலைவரின் காலத்தில் அடையமுடியாத தமிழ் ஈழம் வேறொரு காலத்திலும் சாத்தியமில்லை என முடித்தார். சம்பிரதாயப்பூர்வமான நன்றிகளுடன் கூட்டத்தைத் தொடங்கிய வேகத்திலேயே முடித்துவிட்டுப் போனார்கள்.

பள்ளிக்கூடத்திலும் ஆத்திமோட்டைக் கிராமத்திலும் அதே பேச்சாகத்தானிருந்தது. வந்து பேசியவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் பாடசாலை ஒன்றில் ஆசிரியராக இருப்பவர் என்ற தகவல்களும் பரவியிருந்தன. மற்ற இயக்கக்காரர்களைச் சுலபமாகச் சந்திக்க முடியும். மக்களோடு மக்களாகப் புழங்குவார்கள். பொறுப்பாளர்களிலிருந்து வால்பிடிப்பவர்கள்வரை அரசியல் பேசுவார்கள். புலி உறுப்பினரைக் காண்பது என்பது மிக அரிதானது. நவஜோதி மாஸ்டர் மனக்கணக்குப் போடத் தொடங்கினார். யாழ்ப்பாணத்திலிருந்து அரசியல் பேச்சாளர் வந்திருக்கிறார். எனவே திருகோணமலையில் புலிகளுக்கான அரசியல் ஆலோசகருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சாளருக்குமான இடம் காலியாக இருக்கிறது. அந்த இடத்தைத் தான் கைப்பற்றுவது என முடிவு செய்தார். நவஜோதி மாஸ்டர் புலிகளுடன் வலிந்து தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முனைந்தார். புலிகளையோ புலிகளின் வால்களையோ கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. புலிகள் அதிகமாக அலட்டிக்கொள்பவர்களை நம்புவதில்லை. புலிகள் தம்முடன் தொடர்புவைத்துக்கொள்பவர்களின் பின்னணி பற்றி மிகக் கவனமாக இருப்பவர்கள். நவஜோதி மாஸ்டர் தன்னை விஞ்ஞானப் பாட ஆசிரியர் என்றுதான் சொல்லிக்கொண்டு திரிந்தார். இப்போது தான் விவசாய ஆசிரியர் என்று வெளிப்படையாகவே சொல்லத் தயங்குவதில்லை. ஆத்திமோட்டையைச் சேர்ந்த பெண்ணைக் காதலித்துக்கொண்டு வேறு திரிந்தார். மெல்லமெல்ல அந்தப் பிள்ளையுடனான தொடர்புகளைக் குறைத்துக்கொண்டார். புலிகள் இப்படியானவர்களை நம்பமாட்டார்கள். ஏனென்றால் இவர்களிடம் ரகசியங்கள் தங்காது என்பது அவர்களுக்குத் தெரியும். நவஜோதி மாஸ்டரைப் பொறுத்தவரை திருகோணமலை மாவட்ட புலிகளின் அரசியல் ஆலோசகர் பேச்சாளர் என்ற இடம் காலியாக இருக்கிறது. அதைக் கைப்பற்றும்வரை ஓயப்போவதில்லை என முடிவெடுத்தார். அதற்காக அவர் எதையும் இழப்பதற்குத் தயாராக இருந்தார்.

நவஜோதி மாஸ்டரின் போக்கால் அவரது குடும்பம் கலவரமடைந்திருந்தது. ஏனென்றால் தமக்கை, தங்கைகள், தம்பிமார் என முழுக்குடும்பமே அவரது வருமானத்தைத்தான்; நம்பியிருந்தது. நவஜோதி மாஸ்டரின் காதல் விவகாரம் ஓரளவுக்கு அவர்கள் குடும்பத்திற்கும் தெரிந்துதானிருந்தது. நவஜோதி மாஸ்டரின் தமக்கையும் தாயும் நல்லநாள் பார்த்து ஆத்திமோட்டைக்கு வெளிக்கிட்டுப்போனார்கள். இவர்களது திடீர் வருகையால் பெண்வீடு கலவரமடைந்தது. நவஜோதி மாஸ்டரின் தாய் அந்தப் பெண்ணின் காலில் விழுவதற்கும் தயாராகத்தான் இருந்தார்.

''உனக்கும் அவனுக்கும் ஏதாவது பிரச்சினை எண்டாலும் சொல்லிப்போடு அம்மா... நாங்க உங்கட வாழ்க்கைக்கு குறுக்க வரமாட்டம்.... அவன விட்டா எங்கட குடும்பத்துக்கு வேற நாதி இல்ல... அவன பைத்தியக்காரனா தெருவழிய பாக்கிற அளவுக்கு எனக்கு சக்தி இல்ல...''

''சத்தியமா... அவருக்கும் எனக்கும் ஒரு பிரச்சினையும் இல்ல... இப்ப கொஞ்ச நாளா இங்காலப் பக்கம் வாறதும் குறைவு... நான் அவரோட கதைக்கிறன் அம்மா...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெண் அடக்கமுடியாத அளவுக்கு வெட்கப்பட்டுத் தலைகுனிந்து நின்றாள். நவஜோதி மாஸ்டருக்குப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பேச்சாளர், ஆலோசகர் பதவி கிடைத்ததோ இல்லையோ, அவரது காதல் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டிவிட்டது. இரண்டு குடும்பங்களும் ஒன்றுக்குள் ஒன்றெனக் கலந்து புழங்கத்தொடங்கியிருந்தன. இதையெல்லாம் கண்டும்காணாதது போல விட்டுவிட்டு, அவர் தனது கனவை மெய்ப்படவைக்கும் திட்டங்களை சதா சிந்திக்கத் தொடங்கினார்.

புலிகளுடன் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்காக நவஜோதி மாஸ்டர் ஒரு வரைபடத்தைத் தயாரித்தார். துல்லியமான தகவல்களுடனும் போதுமான விபரங்களுடனும் இருந்தது அந்த வரைபடம். மிகுந்த சிரமத்தின்பின் சில நாட்கள் கழித்து ஏரியா புலிகளின் வால் ஒன்றை சந்தித்து அந்த வரைபடத்தைச் சேர்ப்பித்தார். வரைபடத்தைச் சேர்ப்பித்த நாள்முதல் பள்ளிக்குள் அவர் மாணவர்களையும் சில நேரங்களில் மாஸ்டர்மாரையும் அதிபரையும்கூட அதட்டுபவராக மாறிப்போனார். புலிகளின் பொறுப்பாளருடன் சரிசமமாகக் கதிரையிலிருந்து அரசியல் பேசுமளவுக்குத் தனது அரசியல் அறிவை வளர்த்துக்கொள்ள பத்திரிகைகளுக்குள்ளும் விளங்காத அரசியல் புத்தகங்களுக்குள்ளும் மூழ்கிப்போனார். ஆழ்க் கிணற்றில் போட்ட கல்லாக அவரது வரைபடம் புலிகளிடம் கிடந்தது. தனக்கு அழைப்பு இன்றுவரும் நாளைவரும் எனக் காத்திருந்து ஏமாந்துபோனார். சிலவேளை தனக்குத் தெரியாமல் காரியத்தை முடித்துவிட்டார்களோ எனவும் அவருக்கு நினைக்கத்தோன்றியது. அப்படி கிருஸ்ணபுரி ஊருக்குள் சலசலப்பு ஏதும் ஏற்பட்டிருக்கவில்லை.

நவஜோதி மாஸ்டர் விளங்காத அரசியல் புத்தகங்களைப் படிப்பதையும் பத்திரிகைகள் வாசிப்பதையும் நிறுத்தியிருந்தார். தான் போட்டுக்கொடுத்த வரைபடத்தையும் மறந்து போயிருந்தார். O/L எடுக்கும் மாணவர்களது கொப்பிகளை, ஒவ்வொருவராகக் கூப்பிட்டுத் திருத்திக்கொண்டிருந்தார். திருத்தி முடித்துப் பாடம் எடுப்பதற்காக எழும்பிய நவஜோதி மாஸ்டர் மஞ்சள் நிறத்தில் தன் டயரிக்குக் கீழே ஒரு துண்டுக்காகிதம் இருப்பதைக் கண்டார். திரும்பவும் கதிரையில் அமர்ந்த நவஜோதி மாஸ்டர், அந்த மஞ்சள் காகிதத்தை விரித்தார். அவர் கண்ணில் முதலில்பட்டது சிவப்பு நிறமும் மஞ்சள் நிறமும் கலந்த புலிச்சின்னமே. நவஜோதி மாஸ்டர் அந்தக் காகிதத்தைப் பதற்றத்துடன் மடித்து டயரிக்குள் வைத்துக் கொண்டார். தான் குனிந்து கொப்பி திருத்தும்போதுதான் யாரோ வைத்திருக்கிறார்கள். அப்படியென்றால் வகுப்புக்குள் புலி இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாணவர்களது முகமாகக் கூர்ந்து தேடிக்கொண்டு வந்தார் நவஜோதி மாஸ்டர். எந்த ஒரு மாணவனது முகத்திலும் அவரால் புலியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தொடர்ந்து வகுப்பெடுக்கும் மனநிலை இல்லாததால் டயரியையும் தூக்கிக்கொண்டு நவஜோதி மாஸ்டர் டொயிலட் பக்கம் போனார். குறித்த திகதியில், குறித்த நேரத்தில், குறித்த இடத்தில் சந்திக்கும்படி புலிச்சின்னம் சொன்னது. எச்சிலைத் தொட்டு புலிச்சின்னத்தை அழித்துக் கரைத்துவிட்டுப் பேப்பரைப் பத்திரப்படுத்திக்கொண்டார். எதிர்ப்பட்ட தன் வகுப்பு மாணவர்களுக்கு மிகுந்த மரியாதை கொடுத்து விலகி நடந்துபோனார்.

நவஜோதி மாஸ்டருக்குப் புதிராகத்தானிருந்தது. ஆறாங்கட்டை மலை உச்சியிலிருக்கும் முருகன் கோயிலுக்கு, அதுவும் வெள்ளிக்கிழமை மாலை பூசை நேரத்துக்கு வரச்சொல்லி இருந்தார்கள். சனநடமாட்டத்துக்குள் எப்படி வருவார்கள், என்ன பேசுவார்கள். இருள் படர்ந்தும் படராத நேரத்தில் நவஜோதி மாஸ்டர் கோயிலடியில் நின்றிருந்தார். கோயிலில் சனம் குறைவாகத்தான் நடமாடிக் கொண்டிருந்தது. நேரம் மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டிருந்தது.

''சேர்...''

நவஜோதி மாஸ்டர் திரும்பிப்பார்த்தார். வயது மதிக்க முடியாத தோற்றத்தில் நெற்றி நிறைய விபூதிப்பூச்சும் சந்தனப்பொட்டும் அதற்குமேல் குங்குமப்பொட்டும் காதில் பூவுமாகத் தூய வெள்ளை வேட்டி சட்டையில் ஒருவர் நின்றிருந்தார். நவஜோதி மாஸ்டரைப் பார்த்து சிரித்தபடி நின்றிருந்தார். நவஜோதி மாஸ்டரால் அவரை இனங்காண முடியவில்லை. அப்போது அவர் இருந்த மனநிலையில் சிவபூசைக்குள் கரடி ஏன் நுழைந்தது என்ற கேள்விதான் அவருக்குள் எழும்பியது. குங்குமப்பொட்டுக்காரர் புன்னகை மாறாத முகத்துடன் நவஜோதி மாஸ்டரின் முகத்தையே பார்த்துக்கொண்டு சொன்னார்.

''சேர்... உங்கட திட்டத்த நடமுறைப்படுத்திறதா மேலிடம் உத்தரவு போட்டிருக்கு... வார கிழமை புதன் இரவோ... வெள்ளியிரவோ... தம்பிமார் வருவினம்... உங்கட வயிரவர் கோயிலடியில உங்கள சந்திப்பினம்... நீங்க இடங்களக் காட்டிப் போட்டு விலகுங்கோ... மற்றத அவை பார்த்துக்கொள்ளுவினம்... சேர்... தம்பிமார்ர உயிர் எவ்வளவு பெறுமதியானது எண்டு உங்களுக்கு சொல்லி விளங்கப்படுத்தத் தேவையில்லை என நினைக்கிறன்... ஏதும் இசகு பிசகா நடந்தா... பிறகு மாஸ்டர் குங்குமப்பொட்டுத்தான்... மாஸ்டருக்கு நான் சொல்லுரது விளங்கும் எண்டு நினைக்கிறன்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னவர் இவரின் பதிலை எதிர்பார்க்கவும் இல்லை, கதைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கவுமில்லை. கோயில் கோபுரத்தைப் பார்த்து இரண்டு கையையும் உயர்த்தி ''முருகா...'' ''அப்பனே....'' என வாய்விட்டுக் கும்பிட்டுவிட்டு மலையிலிருந்து இறங்கிப்போனார். நவஜோதி மாஸ்டருக்குக் கொஞ்சம் ஏமாற்றமாகத்தானிருந்தது. வந்துபோனதும் வால்தான் முழுப்புலி இல்லை.

நவஜோதி மாஸ்டர் திரும்பவும் கடற்கரைப்பக்கம் நடந்துபோனார். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை இருட்டு. யங்சன்றைஸ் கிரவுன்ட் புல்தரையும் கடற்கரை மணலும் கடலும் இருளடைந்துகிடந்தன. திரும்பவும் சிலிப்பர் கட்டையில் வந்து அமர்ந்துகொண்டார். புதன் இரவு வரவில்லை. இன்று எப்படியும் வருவார்கள் என நம்பியிருந்தார். அவர் நம்பிக்கை வீண்போகவில்லை. அவர்கள் இருவர் வந்தார்கள். அவர் எதிர்பார்த்தது போல கடற்கரைப் பக்கமிருந்து வரவில்லை. பிரதானவீதிப்பக்கமிருந்து ஒழுங்கைக்குள்ளால்தான் வந்தார்கள். வந்தவர்கள் முழுப் புலிதான் என்பதில் நவஜோதி மாஸ்டருக்கு சந்தேகமே இல்லை. ஜீன்சும் பக்கி சேட்டும் அணிந்திருந்தார்கள். கடும்பயிற்சியால் இறுகிப்போன தசைநார்கள் எலும்புடன் ஒட்டிக் கிடந்தன கைகளில். இடுப்பில் ஆயுதம் இருப்பது தெளிவாகத் தெரிந்தது. அவர்கள் நவஜோதி மாஸ்டரிடம் ஆறுதலாகப் பேசக்கூடிய நிலையில் தாங்கள் இல்லை என்றும் வந்த வேலை வேகமாக முடியவேண்டும் என்றும் சொன்னார்கள். நவஜோதி மாஸ்டருக்கு அவர்களது அவசரம் புரிந்திருந்தது.

அதிகம் அலட்டிக்கொள்ளாது அவர்கள் போகவேண்டிய முதல் வீட்டுக்கு அருகில் வைத்து வீட்டுக்காரர்களது செல்வநிலையை விளங்கப்படுத்திவிட்டு இருளில் ஒதுங்கி நின்றுகொண்டார். நாய் உறுமிப் பின் சத்தமில்லாது அடங்கி முனகலுடன் பின்வாங்கியது. நவஜோதி மாஸ்டர் காட்டிய முதல் வீட்டின் வெளிமின்குமிழ் உயிர்த்தது. பின் வெளிலைட் அணைய வீட்டுக்குள் லைட் எரியத் தொடங்கியது. நவஜோதி மாஸ்டர் நிலைகொள்ளாது தவித்தார். பின் அந்த வீட்டு உள்லைட்டும் அணைந்து போனது. அவர்கள் இருவரும் இருளில் நின்றிருந்த நவஜோதி மாஸ்டரை நெருங்கி வந்தார்கள்.

''காயா... பழமா...''

''பழந்தான் மாஸ்டர்... நாங்க எதிர்பார்த்த அளவில இல்ல...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் கோணல் முற்றும் கோணல். இங்கேயே தேறவில்லை என்றால் மற்ற வீடுகளைப் பெரிதாக எதிர்பார்க்க முடியாது. அடுத்தடுத்து இரண்டு வீடுகளின் நாய்கள் குரைத்து அடங்க, மின்குமிழ்கள் உள்ளும் புறமுமாக எரிந்து அணைய இருட்டில் நின்றிருந்தார் நவஜோதி மாஸ்டர். மூன்றாவது வீட்டிலிருந்து வெளியேறிவந்த அவர்கள் வேகமாக நடந்து வந்தார்கள். இப்போது அவர்கள் இடுப்பிலிருந்த ஆயுதத்தைக் கையில் ஏந்தியிருந்தார்கள். வந்தவர்களில் ஒருவன் நவஜோதி மாஸ்டரின் கையைப் பற்றினான். தன் கையைப் பற்றியிருப்பவனின் கையின் வலுவும் உறுதியும் இறுக்கமும் அவரை நிலைகுலையவைத்தது.

அவரது கையைப் பற்றியபடியே ஒருவருக்கு ஒருவர் பாதுகாப்பாக ஒழுங்கையிலிருந்து தாவி நடந்து இடம் வலமாக மாறி மாறித் தங்களுக்குள் நிலை எடுத்துக்கொண்டே நகர்ந்தவர்கள், ஒழுங்கை முடக்கின் வேலியோரத்தில் எதிரும்புதிருமாக அமர்ந்துகொண்டார்கள். அவர்களின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாது திணறிய நவஜோதி மாஸ்டர் இழுபட்டு வந்தார். தான் எந்தத் திசையில் அமர்வது எனத் தெரியாது கிழக்கே கோணேசர் மூலையைப் பார்த்து அமர்ந்துகொண்டார். நவஜோதி மாஸ்டரின் கையைப் பற்றியிருந்தவன் அவர் கையை விட்டுவிட்டுத் தன் துப்பாக்கியை வலுவாகப் பிடித்துக்கொண்டான். நவஜோதி மாஸ்டருக்கு நெஞ்சு படபடத்தது. நவஜோதி மாஸ்டருக்கு எதிரே குந்தியிருந்தவன் தணிந்த குரலில் சொன்னான்.

''மாஸ்டர் நிலமை சரியா இல்ல... எங்கள ஆரோ கண்காணிக்கற மாதிரியும் பின் தொடர்ற மாதிரியும் இருக்கு... நாங்க ஊருக்கு வார விசயம் வெளியில தெரிஞ்சிருக்கு... நாங்க போன வீடுகள்ள அவங்க அளக்கிற கதையிலயே தெரியுது... இனிமேல் நாங்க இங்க நிக்கிறது அவ்வளவு பாதுகாப்பு இல்ல... நாங்க கிளம்பிறம்...''

அவ்வளவுதான் அவர்கள் கதைத்தார்கள். பின் கடற்கரைப் பக்கமாகத் தங்களுக்குள் நிலை எடுத்தபடி நடந்து மறைந்து போனார்கள். நவஜோதி மாஸ்டருக்குப் பதற்றம் அடங்க நீண்ட நேரம் பிடித்தது. அவர் இரகசியமாகத்தான் இந்த விசயத்தை மனதில் சுமந்து திரிந்தார். இன்று மதியந்தான் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாமல் நல்ல நண்பன் என்ற முறையில் விஜயனுக்குச் சொல்லியிருந்தார். கதை ஊருக்குள் இவ்வளவு வேகமாகப் பரவியிருக்கும் என அவர் கிஞ்சித்தும் எண்ணவில்லை. நவஜோதி மாஸ்டர் நினைவுகளில் குங்குமப்பொட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.5

தமிழர்களின் கனவுத்தலைநகரின் நகரப்பகுதி, மறையும் சிவப்புநிறச் சூரியனை மறைக்கும் அளவுக்குப் புகைமூட்டத்தால் மூடிக்கிடந்தது. வீதிகளில் சந்திக்குச்சந்தி டயர்கள் எரிந்து கொண்டிருந்தன. டயர்கள் எரிவதால் ஏற்பட்ட புகைமூட்டத்திலும் டயர் எரியும் வெடுக்கிலும் தமிழர்களின் கனவுத்தலைநகரம் மூச்சுத்திணறிக்கொண்டிருந்தது. எதற்கும் துணிந்துவிட்ட தமிழ் இளைஞர்கள் கூட்டம் கையில் வாள்களுடனும் அலவாங்கு, கோடரிகளுடனும் சந்திக்குச்சந்தி காவல் நின்றது. இப்போது அவர்களிடம் சில பயிற்சிபெற்ற இளைஞர்களும் வெடிகுண்டுகளும் கைத்துப்பாக்கிகளும்.

பத்தாம் நம்பர் கிராமத்துக்குள் நீதிமன்றத்திலிருந்து ''சமன்'' கொண்டுவந்த இரண்டு சிங்கள பொலீஸ்காரர்களைத் தமிழ் இளைஞர்கள் கடத்திக் கொன்று கடற்கரையில் புதைத்துவிட்டதாக ஒரு செய்தி வந்தது. வழிதவறி சிவன் கோவிலடிப் பக்கம் வந்த சிங்களக் குடும்பம் ஒன்றை காருடன் கடத்திக் கொன்று தாட்டுவிட்டதாக ஒரு செய்தி பரவியது. பெரிய கடை புல்லுத்தோட்டப் பக்கம் ஊருக்குள் கள்ளச்சாராயம் குடிக்கப்போன கடற்படைச் சிப்பாய்கள் நால்வரை புல்லுத்தோட்ட இளைஞர்கள் கொன்றுவிட்டதாக இன்னொரு செய்தி வந்தது. சல்லிப்பக்கம் கடலில் மீன்பிடித்துக் கொண்டு நின்ற சிங்கள மீனவர்களைக் கரையிலிருந்து படகுகளில் போன இளைஞர்கள் இரவு கொன்றுவிட்டு வந்ததாகவும் இன்னமும் படகு பிணங்களுடன் மிதப்பதாகவும் செய்திகள் பரவியவண்ணமிருந்தன.

இந்தக் கலவரங்களின் தொடக்கப்புள்ளியாக இருந்தது சிறிமாபுரத்துக்கு முன்னே லவ்லேனுக்குள் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டம். பெரும்பிரயத்தனத்திற்குப்பின் கொண்டுவரப்பட்ட நாற்பதுவீட்டுத்திட்டத்தில் ஐந்து வீடுகள் முழுமையாகக் கட்டிமுடிக்கப் பட்டிருந்தன. ஐந்து வீடுகளில் குடிபுகுவதற்கு எந்த ஒரு தமிழ்க் குடும்பமும் தயாராக இருக்கவில்லை. சாம்பல்தீவைச் சேர்ந்த துணிச்சல்காரரான சீனித்தம்பி அவர்கள் தன் மனைவி, இரண்டு பெண் பிள்ளைகளுடன் அங்குக் குடியேற சம்மதம் தெரிவித்தார். தான் குடியேறியபின் மற்றவர்கள் வரச் சம்மதிப்பார்கள் என அவர் கூறினார். அவர் நல்லநாள் பார்த்து சிறிமாபுரச் சனங்களையும் விருந்துக்கு அழைத்து பால்காய்ச்சிக் குடிபுகுந்தார். இரண்டு மூன்று நாட்கள் இளைஞர்கள் பாதுகாப்புக்கென இரவில் மற்ற கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளுக்குள் படுத்துக்கிடந்தார்கள். பின்னர் அவரவர் வேலைகளில் மூழ்கிப்போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனித்தம்பி குடும்பத்துடன் சிறிமாபுரச் சனமும் நெருக்கமாகத்தானிருந்தது. ஊருக்குள்ளும் ஊருக்கு வெளியிலும் வீடு வாசல் இல்லாத சனம் இருந்தும் குடியேறாததால் அந்த வீடுகள் சும்மாதான் கிடந்தன.

எப்போதும் தன் உள்ளுணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பழக்கப்பட்டவர் போஸ்ட்மாஸ்டர் ஏகாம்பரம். அந்த உப்புவெளி பிரதேசத்துக்கான உபதபாலகத்துக்குத் தபால் அதிபராக யாழ்ப்பாணத்திலிருந்து வந்தபோது, உபதபால் கந்தோர் கிருஸ்ணபுரிக்குள் ஒரு தனியார் வீட்டு முன்பக்க ஒத்தாப்பில் வாடகைக்கு இயங்கிவந்தது. தன் மனைவியை யாழ்ப்பாணத்தில் விட்டுவிட்டு திருகோணமலை நகரப்பகுதியில் தனியாக வாடகை வீட்டில்தான் முதலில் குடியிருந்தார். பின் லவ்லேனுக்குள் அரச காணியிலிருந்து தபாலகத்துக்கென ஒரு துண்டு நிலத்தை உரிமமாகப் பெற்றுத் தபாலகத்தைத் தனக்கான வீடாகவும் தபாலகமாகவும் இருக்கக்கூடியமுறையில் அமைத்துக்கொண்டார். அங்குதான் அவருக்கு ஆணும் பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள் பிறந்து வளர்ந்தது எல்லாம்.

கலவர நேரங்களில் சிறிமாபுரத்துக்குள் ஏற்படும் மாற்றங்களை கவனித்துத் தொலைபேசிமூலம் ஊருக்குள்ளும் அரசியல் முக்கியஸ்தர்களுக்கும் தெரியப்படுத்திவிடுவார். அதனால்தான் சிறிமாபுரவாசிகளால் கூலிக்கு அமர்த்தப்பட்ட ஒருவன் நாட்டுக் கைத்துப்பாக்கியால் அவரைச் சுட்டான். அவரது முன்னுணர்வு எச்சரித்ததால்தான் அன்று அவன் சுட்டபோது குனிந்து நிலத்தில் விழுந்து உருண்டு சின்ன காயத்துடன் தப்பித்துக்கொண்டார். இரண்டு மூன்று நாட்களாக சிறிமாபுரத்துக்குள் வித்தியாசமான ஆட்களின் நடமாட்டம் தெரிவதை அவர் அவதானித்திருந்தார். ஏதோ கலவரத்துக்கான முஸ்தீபு எனக் கணித்த அவர், ஊரவரையும் எச்சரித்து, சீனித்தம்பியையும் எச்சரித்திருந்தார். சீனித்தம்பி சிங்களவர்கள் தாய்ப் பிள்ளைகள்போல தன் குடும்பத்துடன் பழகுவதாக அவருக்குச் சொல்லியிருந்தார். ஆனால் தபால் அதிபர் ஏகாம்பரம் சூடுகண்டபூனை. அவர் ஏற்கனவே தன் சொந்த ஊருக்குப் போவதற்காக இடமாற்றத்துக்கு விண்ணப்பித்திருந்தார். தன் குடும்பத்தையும் யாழ்ப்பாணத்தில் தன் உறவுகளுடன் விட்டுவிட்டு வந்து தனது இடமாற்றத்துக்காகக் காத்திருந்தார்.

கலவரம் தொடங்குவதற்கு முதல் நாள் இரவு அவருக்குத் தூக்கம் வரவில்லை. அவரது உள்ளுணர்வு அங்கிருந்து ஓடு ஓடு என விரட்டுவதுபோல இருந்ததால் எழுந்து வெளியே வந்தார். சிறிமாபுர சந்தியில் அரவம் காட்டாது கூட்டமாகச் சிலர் திரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பதை இருளுக்குள் ஊடறுத்துப் பார்த்துப்பழகிய அவரது கண்கள் கண்டுகொண்டன. தந்திக் கம்பத்திலிருந்து இறங்கிய ஒருவன் வீதியில் குதித்து ஓடுவதைக் கண்டார். தந்திக் கம்பத்தைக் கூர்ந்து பார்த்தார். தொலைபேசி வயர் துண்டிக்கப்பட்டு நிலத்தில் கிடந்தது. நிலைமையை உணர்ந்த அவர் திரும்பி வீட்டுக்குள் போவதைப் பற்றி சிந்திக்கவே இல்லை. இடுப்பில் கட்டியிருந்த சாரத்துண்டுடன் ஓடத்தொடங்கினார். தனது பின்பக்க வீட்டுக் கிடுகுவேலியால் ஏறிப் பாய்ந்து ஒழுங்கைக்குள்ளால் ஓடி, யமாலிய பாடசாலை கம்பிவேலிக்குள்ளால் புகுந்து, உள் ஒழுங்கைகளுக்குள்ளால் முருகாபுரிப்பக்கம் ஓடினார். நகரசபை மெம்பர் வீட்டைக் குறிவைத்து ஓடினார் போஸ்ட்மாஸ்டர் ஏகாம்பரம், தணிகாசலம் வீட்டுக்கதவைத் தட்டும்போது வியர்வையில் நனைந்திருந்தார்.

முருகாபுரிப்பக்கமிருந்தும் கிருஸ்ணபுரிப்பக்கமிருந்தும் திரண்டவர்கள் லவ்லேன் வீட்டுத் திட்டத்தை நெருங்கியபோது சீனித்தம்பியின் வீடு தீக்கங்குகளால் பொசுங்கிக்கொண்டிருந்தது. பெற்றோல் மணமும் டயர் உருகும் மணமும் அவர்களைத் திணறடித்தன. தீயை அணைத்து வீட்டுக்குள் புகுந்தபோது வீட்டு வாசலில் கருகியபடி கிடந்தது சீனித்தம்பியின் உடல். உள்ளறைக்குள் சீனித்தம்பியின் மனைவியின், பிள்ளைகளின் கருகிய உடல்களையும் கண்டார்கள்.

அந்தப் படுகொலைகளுக்கு நீதி வேண்டும் எனக் கோரி கர்த்தால் போட்டார்கள். நேரம் மதியத்தைத் தாண்டியபோதுதான் மற்றொரு துயரமான செய்தி ஊருக்குள் பரவியது. யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்த, நிலாவெளி கிராம சேவகர் சரவணமுத்துப்பிள்ளையின் இரண்டாவது மருமகன் கணேசின் பஸ் சனத்துடன் திரியாய்ப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டுவிட்டது என்ற செய்தி. திரியாய் பகுதியில், சிங்களக் கிராமப்பகுதி காட்டு வழித்தடத்தில் கணேஸ் பஸ் சனங்களற்று நின்றுகொண்டிருப்பதாகவும் பயணிகள் இறக்கப்பட்டுக் காட்டுப்பகுதிக்குள் வெட்டப்பட்டு டயர் போட்டு எரிக்கப்பட்ட செய்தி சிவன் கோவில் பகுதியைப் பெருஞ்சினத்துக்கு ஆளாக்கியிருந்தது. கணேஸ் சிவன் கோவில் பகுதியைச் சேர்ந்தவர். அவர்தான் அன்று பஸ்சை ஓட்டி வந்திருந்தார்.

தமிழரான நகரசபைத் தலைவரின் சிவன் கோவிலடி வீட்டில் அரசியல் பிரமுகர்களின் கூட்டம் தீவிரமாக நடந்துகொண்டிருந்தது. குறிவைக்கப்பட்டிருக்கும் அரசியல் பிரமுகர்களை இந்தியாவுக்கு அனுப்புவது குறித்துத் தீவிர விவாதம் நடந்தது. நகரசபை மெம்பர் தணிகாசலம் குடும்பம் நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவுக்குப் போவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்துமுடிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.6

உப்பி வீங்கிக்கிடந்த இடப்பக்கக் கன்னத்தைத் தடவியபடியிருந்தான் அரியம். கண்ணிமைகளும் வீங்கித் தடித்துக்கிடந்தன. உதயனுடன் ஊருக்குள் திரிந்துகொண்டிருக்க வேண்டியவன், தென்னைமரத்துக்குக்கீழ் கிடந்த கள்ளுத்தவறணை அம்மாச்சியின் சாக்குக்கட்டிலில் படுத்துக்கிடந்தான். குடிசைக்கு வெளியே இறப்பில் கயிற்றில் தொங்கியபடி எரிந்துகொண்டிருக்கும் அரிக்கன்லாம்பின் சிமிலிகளைப் பார்க்கமுடியாத அளவுக்குக் கண்கள் கூசுவதும் நோவதுமாக இருந்தது அரியத்துக்கு. டைனமெட் வெடிக்கும்போது கல் பறந்து அடித்திருக்கவேண்டும் என கள்ளுத்தவறணை அம்மாச்சி சொல்லிவிட்டுப் போயிருந்தார். கண் தப்பினது அருந்தப்பு என்றுதான் எல்லோரும் சொன்னார்கள். உதயன் இருட்டும்வரை இருந்துவிட்டுத்தான் போனான். ஊருக்குள் விழுப்புண் பட்டவர்களில் அவனும் ஒருவன். சில ஊர்ப்பெரியவர்கள்கூட அவனை வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். தான் பெரிய மனிதனாகிவிட்ட உணர்வுடன் இருந்தான் அரியம். ஓய்வுபெற்ற பொலீஸ்காரர் நாகராசாவின் மகன் தவாவின் மரண ஊர்வலத்தில் செல்லும்போதுதான் அரியம் காயப்பட்டிருந்தான்.

சீனித்தம்பி அவர்களின் படுகொலை, கணேஸ் பஸ்ஸில் வந்தவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டதுடன் ஏற்பட்ட கலவரம், பிறகு போடப்பட்ட ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படுவதும் பின் அமுலுக்கு வருவதுமாகத் தொடர்ந்துகொண்டிருந்தது. ராணுவமும் கடற்படைச் சிப்பாய்களும் வீதியில் கனரக வாகனங்களோடு ஆயுதங்களைத் தாங்கிக் காவலுக்கு நின்றுகொண்டிருந்தார்கள்.

செட்டியாரின் சிறி, தவா அண்ணன், குட்டி அண்ணன், விஜயன் அண்ணன் என அப்புவின் அடிவளவில் கூடியிருந்து கதைத்துக்கொண்டிருக்கும்போதுதான் மடத்தடிப்பக்கம் குண்டு வெடிக்கும் ஓசை கேட்டது. துப்பாக்கிப் பிரயோகங்களும் கேட்டன. மீண்டும் பெரிதாகக் கலவரங்கள் ஏதும் தொடங்கப்போகிறதோ என எல்லோரும் பயந்தார்கள். அப்போதுதான் தவா வழமையைப்போல தென்னையில் ஏறி நிலமையைப் பார்த்துச்சொல்வதாகக் கூறினான். மற்றவர்கள், வேண்டாம் வீதியில் ஆமி நிற்கிறது, ஆபத்து எனத் தடுத்தார்கள். தவா எதையும் கேட்கும் நிலையில் இல்லை. அப்புவின் உயரமான தென்னைமரத்தில் தாவி வேகமாக ஏறத்தொடங்கினான். தவா வட்டை நெருங்கியிருப்பான், மடத்தடிப்பக்கமிருந்து ஒரு ஒற்றை வெடி, தொடர்ந்து கூவல் ஓசை. வானில், நிலத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்நோக்கிப் பாய்ந்தது ஒளிக்கீற்று ஒன்று. பின் எங்கும் ஒளிவெள்ளம். இருளில் அருகில் இருப்பவர்களைத் துலக்கமாகக் காணும் அளவுக்கு வெளிச்சம் பால்போல படர்ந்துகிடந்தது.

''பரா லைட் அடிக்கிறார்கள்... கூடி இருக்காம கலைஞ்சு போங்க... இல்லாட்டி பரா வெளிச்சத்தில இலக்கு வைச்சு சுட்டுப்போடுவாங்கள்...''

கூட்டம் கலைய எத்தனித்தது. அப்போதுதான் வட்டை நெருங்கிய தவா அந்த வெளிச்சத்தைக் கண்டு திணறினான். இறங்குவதைவிட வட்டுக்குள் ஏறி ஒளிப்பது என தீர்மானித்தான் தவா. வேகமாக ஏறி தென்னமட்டையைப் பற்றி வட்டுக்குள் நுழைய உன்னினான் தவா. பதற்றத்தில் பச்சைமட்டைக்குப் பதிலாக அவன் பழுத்தமட்டையைப் பற்றியிருந்தான். தென்னைவட்டிலிருந்து பிடிகழன்ற பழுத்தமட்டையுடன் மட்டையாக, தவா கீழே விழுவதைக் கூடிநின்றவர்கள் பரா வெளிச்சத்தில் கண்டார்கள். வெட்டி விழுத்திய இளநீர்க்குலையைப் போல தவா நிலத்தில் விழுந்து சிதறிப்போனான். கழுத்து முறிந்து விழுந்த இடத்திலேயே தவாவின் உயிர் பிரிந்தது.

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்ததால் பெரும் பிரயத்தனத்துக்குப் பின்தான் அவன் உடலை சுடலையில் தகனம் செய்வதற்குக் காலை பத்துமணியிலிருந்து பதினொரு மணிக்குள் எல்லாம் முடிவடைய வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி கொடுத்திருந்தது பொலீஸ். இளைஞர்களைத் தவிர்த்துவிட்டு வயதானவர்களும் நடுத்தர வயதானவர்களும்மட்டும் சவ ஊர்வலத்தில் போனார்கள். உதயன்தான் அரியத்தையும் இழுத்துக்கொண்டு போனான். சேமக்கலச் சத்தமோ சீனவெடிச் சத்தமோ நிலப்பாவாடை விரிப்பவர்களின், கிரியை செய்பவர்களின் அதட்டல்களோ இல்லாது தவாவின் சவ ஊர்வலம் நகர்ந்தது. பேச்சுகள்கூட இன்றித்தான் சவ ஊர்வலம் மயான அமைதியில் ஊர்ந்துகொண்டிருந்தது. வீதியில் காவலுக்கு நின்ற ராணுவம் இவர்களை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தது. திடீரென்று பின்னால் வந்துகொண்டிருந்த சச்சிதானந்தம் மாஸ்டர் பட்டினத்தார் பாடலைப் பாடத்தொடங்கினார்.

அவர் இரு அடிகளைப் பாட, மற்றவர்கள் திருப்பிப் பாட என இறுக்கம் தளர்ந்த தவாவின் சவ ஊர்வலம் இயல்பாக நடக்கத் தொடங்கியது. சவ ஊர்வலம் கேணியடி பிள்ளையார் கோவில் தாண்டி சிந்தாமணிபுரத்தை நெருங்கியது. இன்னும் பத்தடி தூக்கிவைத்தால் சுடலையை நெருங்கிவிடலாம் என்ற அளவில் சவ ஊர்வலம் சுடலையை நெருங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியம் தன் கால்களுக்குக்கீழ் விசுக்கென்று காற்று அடித்துப் போனது போலத்தான் முதலில் உணர்ந்தான். பின் அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்ததுபோல இருந்தது. பின் புயல் அடித்தபோது அள்ளிக்கொட்டியது போல கஞ்சல்களும் மணலும் பறந்தன. பின் வெடிப்போசை ஒன்று கேட்டு அடங்கியது. அரியத்தைப் போல நான்கைந்து பேர் நிலத்தில் சுருண்டு விழுந்துகிடந்தனர். ஆச்சரியமாகப் பாடையைச் சுமந்துகொண்டு வந்த நால்வரும் வெடி அதிர்வில் பாடையைக் கைவிடவோ பதறவோ இல்லை. சச்சிதானந்தம் மாஸ்டரும் பாடிக்கொண்டிருந்த பட்டினத்தார் பாடலை நிறுத்தவில்லை. அவர் தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தார். முதலில் கலைந்து ஓடியவர்கள், நடுவீதியில் பாடையைச் சுமந்தபடி அசையாது நிற்பவர்களைக் கண்டதும் திரும்பி ஊர்வலத்துக்குள் வந்தார்கள். ஓடி வந்த ராணுவச் சிப்பாய்கள் சிந்தாமணிபுரம் பார்த்து இரண்டு மேல்வெடி வைத்தார்கள். விழுந்து கிடந்தவர்களை மற்றவர்கள் தூக்கினார்கள். யாருக்கும் பெரிதாக ஒன்றும் இல்லை. சின்னச் சின்ன காயங்கள்தான். ஊர்வலத்தில் வந்த மணிகண்டன் தெளிவாகச் சொன்னான்.

''இது வெடி குண்டு இல்ல... டைனமெட் தான்...''

கண்களை மூடியபடி சித்தர் நிலைக்குப் போயிருந்த சச்சிதானந்தம் மாஸ்டர் விடாது பட்டினத்தார் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார். பதற்றம் தணிந்த சவ ஊர்வலம் மீண்டும் சுடலை நோக்கிச் சென்றது. இவ்வளவு நாளும் அமைதியாக இருந்த சிந்தாமணிபுரத்துக்காரர்களும் இப்போது சேட்டையைத் தொடங்கிவிட்டார்கள் என்று கதைத்துக் கொண்டார்கள். சிந்தாமணிபுரத்துக்காரர்கள் குடியேற்றக்காரர்கள் இல்லை. அவர்கள் நீண்டகாலமாக அங்கு வசிப்பவர்கள். வம்புதும்பை விரும்பாதவர்கள். அவர்களில் அதிகமானோர் கிருஸ்ண வழிபாட்டை விரும்புபவர்கள். தவாவை அடக்கம் செய்துவிட்டு சுடலையிலிருந்து திரும்பியபோது, சிந்தாமணிபுரத்தில் பெண்களும் வயதானவர்களுமாகக் கூடிநின்றார்கள். முதலில் பயமாக இருந்தாலும் எப்படியும் தாண்டிப் போய்த்தானே ஆகவேண்டும் என்ற நிலையில் நடக்கத்தொடங்கினார்கள். சிந்தாமணிபுரத்தில் கூடிநின்றவர்களில் வெள்ளை பிளவுசும் இடுப்பில் சாரத்துண்டும் கட்டியிருந்த பெண் அவர்களுக்குக் குறுக்காக வந்தார். பின் தன் கைகளைத் தலைக்கு மேலே கூப்பியபடி வணங்கினார். பின் சொன்னார்.

''எங்கட ஆக்களுக்கும்... இதுக்கும் சம்மந்தம் இல்ல... வெளியில இருந்து வந்தவன் செஞ்ச நாச வேலை பாருங்க... அவன் எங்கட ஊருக்க ஒழிச்சிருக்கிறது தெரியும்... அவன் கண்ணில பட்டா நாங்க பிடிச்சு ராலாமி மாத்தையாட்ட குடுக்கிறது... இது கிருஸ்ண தெய்யோ மேல சத்தியம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தாமணிபுரக்காரர்கள் சொன்னது போல மாலையே ஊருக்குள் ஒளித்திருந்த இரண்டு சிறிமாபுரத்துக்காரர்களைப் பிடித்து ராணுவத்திடம் ஒப்படைத்ததாகவும் ராணுவம் அவர்களைத் துரத்திவிட்டதாகவும் உதயன் சொல்லிவிட்டுப்போயிருந்தான். உதயன் அரியத்துக்குப் பக்கத்தில்தான் சவ ஊர்வலத்தில் நடந்து வந்துகொண்டிருந்தான். நல்லவேளையாக அவனுக்குக் காயம் ஏதும் பட்டிருக்கவில்லை என அரியம் நினைத்துக்கொண்டான். அரியத்துக்குச் சுடலையிலிருந்து வரும்போது வீக்கமோ வலியோ இருந்திருக்கவில்லை. இப்போது காதடி வலிக்கிறது. கன்னம் வீக்கம் கண்டுவிட்டது. இன்னமும் டைனமெட் வெடிச்சத்தத்தால் காதுக்குள் இரைச்சல் இருந்து கொண்டேதான் இருக்கிறது.

## 3.7

நெற்றிப் பொட்டில் இலக்கு துல்லியமாக இருந்ததால் குட்டியண்ணன் இலகுவாக முன்னேறிக்கொண்டிருந்தான். எதிரிகளற்ற மைதானம் அவனுக்கு முன்னே வெறுமையாகக் கிடந்தது. அதுகூட அவனுக்கு சவாலாகத்தானிருந்தது. தன் மனதில் தன்னுடைய முன்னேற்றத்தைத் தடுக்கவல்ல பலமான எதிரிகளை நிறுத்தி வைத்திருந்தான் குட்டியண்ணன். அவன் மனவுறுதிக்குப் பயந்ததுபோல அடங்கி ஒடுங்கி அவன் கால்களுக்குள்ளேயே கட்டுண்டபடி உருண்டு கொண்டு இருந்தது பந்து. நிலம் வெளுக்காத அதிகாலைப்பொழுதில் யங்சன்றைஸ் மைதானத்தில் தனியாக விளையாடிக்கொண்டிருந்தான் குட்டியண்ணன்.

இப்போது குட்டியண்ணன் தன் விளையாட்டுமுறையை மாற்றியிருந்தான். பந்தை மேல்நோக்கி அடித்தான். பின் அண்ணாந்து பந்தைப் பார்த்துக்கொண்டே பந்துக்கு நேர்கீழே அதைத் துரத்திக் கொண்டு ஓடினான். பந்து நிலத்தில் விழும்முன் நெஞ்சில் தாங்க முனைந்தான். அல்லது நிலத்தில் விழுந்த பந்து மீள எழாதவாறு, வலது காலின் பாதத்துக்குக்கீழ் பந்தை அடக்க முனைந்தான். அவனது எண்ணம் சில வேளைகளில் நிறைவேறியது. சில நேரங்களில் பந்து அவன் ஓடிப்போவதற்கு முன்னமே நிலத்தில் விழுந்து உருண்டுபோனது. தொடர் கலவரங்கள், கர்த்தால்கள், ஊரடங்குச்சட்டங்களால் நீண்ட நாட்களாக யங்சன்றைஸ் மைதானம் உறங்கிக்கிடந்தது. எந்த ஒரு போட்டியும் நடக்கவில்லை. நடக்கப் போவதுமில்லை. ஆனாலும் குட்டியண்ணன் அந்த அதிகாலை வேளையில் பயிற்சியில் ஈடுபட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தமுறை மாரி மழை பொய்க்கப்போகிறது போலத்தான் கிடக்கிறது. இந்த மாரியின் முதல் மழை ஐப்பசி மாதத்தின் இரண்டாம் நாளாகிய நேற்றிரவுதான் பெய்தது. குட்டியண்ணன் நேற்றிரவு தன் இரவுச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு கைகழுவுவதற்காக குசினிக்கு வெளியே, இலந்த மரத்தடியிலிருந்த தண்ணீர்க்குடத்தை நோக்கிப் போனான். சிலுசிலுவென குளிர்க்காற்று கடற்கரைப் பக்கமிருந்து அடித்தது. ஒரு சில மழைத்துளிகள் அவன் உடலில் விழ குளிர்ந்தது. வேகமாகக் கைகழுவிய குட்டியண்ணன் கொடியில் காய்ந்துகொண்டிருந்த துணிகளை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் வந்தான். சடசடப்புடன் அந்த மாரியின் முதல் மழை நிலத்தில் இறங்கியது. சோ என ஒரு பாட்டம் மழை பெய்தது. பின் தரையிலிருந்து கடல் நோக்கி அடித்த பலத்த காற்று மழை முகில்களைக் கலைத்தது. இரவு பெய்த மழையில் யங்சன்றைஸ் மைதான புற்தரை ஈரலிப்பாகக் கிடந்தது. குட்டியண்ணனின் கால் பாதங்களும் பந்தும் ஈரலிப்புடன். மணல் திட்டுக்களில் ஓடும்போது பாதங்களில் ஈரமண் ஒரு படையைப் போல ஒட்டிக்கொண்டுவந்து, பின் உதிர்ந்து விழுந்தது. ஈரலிப்பான மண் கிளம்பிய இடங்களில், வெளியே தலைகாட்டிய காய்ந்தமணலும் நிலம் வெளுக்கும் அந்த அதிகாலை வேளையில் தன் சேட்டைகளைப் பார்த்துச் சிரிப்பது போல இருந்தது குட்டியண்ணனுக்கு. தன் பாதங்களும் பந்தும் ஈரலிப்பாகி ஊறி, மணல் ஒட்டி, கனதியாகிவிட்டதுபோல இருந்ததால், தன் விளையாட்டுக்களை நிறுத்திக்கொண்டான். தரையிலிருந்து அதிகாலை வேளையில் கடலை நோக்கி அடிக்கும் கொண்டல் காற்றில் தன் உடல் சில்லிட்டுக்குளிர பந்தைக் காலால் உருட்டியபடி கடற்கரை நோக்கி நடந்தான்.

கோணேசர்மலையையொட்டிக் கடலுக்குள்ளிருந்து வெளிக்கிளம்பிக் கொண்டிருந்தது செந்நிறப் பரிதித் துண்டு. கொஞ்சநேரத்திலேயே அடிவானையும் கோணேசர்மலையையும் கடலையும் செந்நிறமாக்கி, மேலே முழுச்சூரியன் எழும்பிவிட்டது. தன் வாழ்நாளில் இனி ஒருபோதும் காணமுடியாது போய்விடும் என்பதைப் போல அந்தக் காட்சியைத் தன் முழு நினைவுகளிலும் பதித்துவிடவேண்டும் என்ற வெறியுடன் பார்த்துக்கொண்டு நின்றான் குட்டியண்ணன். தாயை அதிகமாக நேசிப்பவன். தன் சகோதரிகள் மீது அளவுகடந்த பாசத்தை வைத்திருப்பவன். கடற்கரையிலிருந்து திரும்பிவந்தான் குட்டியண்ணன். பந்தை வேலிக்கு மேலால் வளவுக்குள் போட்டுவிட்டுத் தோட்ட பொதுக்கிணற்றடிக்கு வந்துசேர்ந்தான். கிணற்றுத்தண்ணீரை அள்ளித் தலையில் வார்த்துக்கொண்டான். மாரிக்கால அதிகாலை நேரக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றுநீரின் இளஞ்சூடு அவன் உடல் முழுவதும் பரவியது. மீண்டும் ஒரு தரம் இந்தக் குளியல் கிடைக்காது போகலாம் என்ற உணர்வுடன் நீண்ட நேரம் தலை முழுகினான்.

கிணற்றடியிலிருந்து திரும்பிய குட்டியண்ணன் தன் வீட்டு வெளிக்குந்தில் அமர்ந்திருந்தான். தன் தாயையும் சகோதரிகளையும் நீண்ட நேரமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். அவர்களது ஒவ்வொரு அசைவையும் அணுஅணுவாக உள்வாங்கியபடியிருந்தான். தாய் அவனுக்கு அருகே வைத்துவிட்டுப்போன பாண் துண்டை சின்னச்சின்ன துண்டுகளாகப் பிய்த்து மாசிச்சம்பலை அள்ளிச் சுவைத்துச் சுவைத்துச் சாப்பிட்டான். வீட்டுச்சாப்பாடு. அவன் கண்கள் கலங்கின.

திரும்பவும் யங்சன்றைஸ் மைதானத்துக்கு வந்த குட்டியண்ணன், கடற்கரையோரமாக நடந்து சாத்திரியார் வளவுப்பக்கம் வந்து நின்றான். பூவாவின் காப்பென்டர் மால் உறங்கிப்போய்க்கிடந்தது. விறகைக் கத்தியால் பிளக்க முனைந்துகொண்டிருந்த அரியம் குட்டியண்ணனைக் கண்டான். அதிகமாகத் தங்களுடைய வீட்டுப்பக்கம் நடமாடாத குட்டியண்ணனைக் கண்டதும் அரியம் கத்தியைக் கீழேபோட்டுவிட்டு உற்சாகமாக ஓடி வந்தான்.

''வா''

என ஒற்றை வார்த்தையை மட்டும் உதிர்த்துவிட்டு பிரதான வீதி நோக்கி நடந்துபோனான் குட்டியண்ணன். அரியம் அமைதியாகப் பின்னால் போனான். சதுரக் கிணற்றடி முடக்கில் குட்டியண்ணன் நின்றான். குட்டியண்ணன் தன் சேட்பொக்கேற்றிலிருந்து எதையோ எடுப்பதை அரியம் கண்டான்.

''இத வைச்சுக்கொள்... அடிக்கடி வீட்ட போ.... அம்மாவோ அக்காச்சி ஆக்களோ ஏதும் கேட்டா... ஏலாதெண்டு சொல்லாம செய்து குடு... தோட்ட வேலை செய்யச் சொன்னா செய்து குடு... சரியா... இப்ப திரும்பி வீட்ட போ...''

குட்டியண்ணன் பிரதான வீதி நோக்கிப் போனான். அரியம் குட்டியண்ணன் பொத்திவிட்ட தன் கையை விரித்துப் பார்த்தான். இரண்டு ரூபா தாள் காசு. அரியம் அந்த இரண்டு ரூவா தாள் காசை மடித்து தன் காற்சட்டை பொக்கெட்டுக்குள் பத்திரப்படுத்திக்கொண்டான்.

பிரதான வீதிக்கு வந்த குட்டியண்ணன் சிறிமாபுரப்பக்கம் நடந்தான். சீனித்தம்பியின் புதுவீடு புகைபடிந்துகிடந்தது. கைவிடப்பட்ட தபாலகத்தின் கதவு திறந்துகிடக்க கஞ்சல்களும் குப்பைகளும் மண்டிக்கிடந்தன. திரும்பி கிருஸ்ணபுரிப்பக்கம் நடந்தான் குட்டியண்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமாபுரப்பக்கம் பார்த்துக் கறுவிக்கொண்டான். ''திரும்பி வருவன், உங்களுக்குப் பாடம் படிப்பிக்க திரும்பி வருவன்''. அன்று மாலைவரை நண்பர்களையும் உறவுகளையும் தேடிப்போய்ச் சந்தித்தான். அந்த ஊரின் மனிதர்களது முகங்களையும் அவர்களது நினைவுகளையும் முழுமையாக, நீண்ட நாட்களுக்கு மனதில் சுமக்கவேண்டும் என்ற பெருவிருப்புடன் அன்றைய பொழுதைக் கடந்து வந்திருந்தான் குட்டியண்ணன்.

## 3.8

கிருஸ்ணபுரி ஊருக்குள் இளைஞர்களைப் பெற்ற தாய்மார்கள் தங்கள் நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டார்கள். இரவுச்சாப்பாட்டுக்குப் பின் ''இதில பொயிற்று... இப்ப வந்திருவன்...'' என்று சொல்லிப்போன பிள்ளைகள், பல இரவுகள் கடந்தும் இன்னும் திரும்பி வரவில்லை. நல்லது கெட்டது, உதவி ஒத்தாசைக்குக்கூட இளைஞர்கள் இல்லாத வெறுமையை அந்த ஊர் அனுபவிக்கத் தொடங்கியிருந்தது. குட்டியண்ணன், உதயன், சச்சி, மகேஸ்வரன், குமார், மோகண்ணன், மேகன் எனப் பல இளைஞர்கள் இரவின் இருளோடு இருளாகக் கரைந்துபோயிருந்தார்கள்.

பெர்ணான்டோவின் பச்சைநிற பொலீஸ் ஜீப், அந்திக்கருக்கலிலும் அதிகாலை வேளைகளிலும் நடுநிசிகளிலும் தன் லைட்டை அணைத்துவிட்டு, அதன் சக்கரங்கள் மழைக்கால ஈரலிப்பான கிறவல் வீதியில் உருள வந்து ஒளிந்து நின்றிருக்கும். நகரசபை மெம்பர் தணிகாசலம், ஒரு இடம் என்றில்லாது தினமும் தன் இருப்பிடத்தை மாற்றி மாற்றி ஒளிந்து திரிந்தார். பின் இரவோடு இரவாக அவரது குடும்பமும் ஊருக்குள்ளிருந்து தலைமறைவாகிப் போனது.

தலைமுடியை மேவி இழுத்த ஓரிரு இளைஞர்கள் இருளோடு இருளாக ஊருக்குள் புதிதாக நடமாடத் தொடங்கியிருந்தார்கள். பகலில் அவர்கள் ரெத்தினண்ணன் வீட்டின் பூட்டிய அறைகளுக்குள்ளேயே முடங்கிக்கிடந்தார்கள். பிறகு ஊர் வீதிகளுக்குப் பழக்கப்பட்ட இந்த ஊர் இளைஞர்களைப்போலவே அவர்களும் இப்போது இயல்பாக ஊருக்குள் பகலிலும் நடமாடத் தொடங்கினார்கள்.

ஊருக்குள் வந்த தலைமயிரை மேவி இழுத்த டெலோ பொடியங்கள் ஊரைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்கள் வசப்படுத்த முனைந்தார்கள். இதுவரை ஊருக்குள் நடந்த படுகொலைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகள் பற்றித் தகவல்களைத் திரட்டினார்கள். ஊருக்குள்ளும் பல விசாரணைகளை முடுக்கிவிட்டார்கள். கள்ளுத்தவறணைக் கலவரமும் விசாரணைக்கு வந்தது. சுக்குறுநாயரும் விசாரணைக்கு உட்பட்டார்.

சுக்குறுநாயர் இந்தியப்புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்ற வகையில் இயக்கம் அவரை மரியாதையான விதத்தில்தான் அணுகியது. முதலில் முழுமையாக மௌனம் காத்த அவர் பின் கௌரிப் பெட்டைக்காக மௌனம் கலைந்தார். சுக்குறுநாயர் இந்தியாவின் கேரளாப் பகுதியைச் சேர்ந்தவர். களரி பயிற்றுவிக்கும் குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை. மூத்த பிள்ளை தமக்கை. சொத்துப் பிரச்சினையில் தன் தமக்கையின் கணவரை அடித்தே கொன்றுவிட்டார். தூக்குத்தண்டனைக்குப் பயந்த அவர் குடும்பம், கொஞ்சநாளைக்கு இலங்கையில் தலைமறைவாக இருக்கும்படி கண்டிக்கு அனுப்பி வைத்தது. குடும்பத்துடன் தன் உறவை முற்றாகத் துண்டித்துக்கொண்ட சுக்குறுநாயர் கண்டியிலிருந்து தலைமன்னார், யாழ்ப்பாணம் எனச் சுற்றித்திரிந்து, பின் வயது முதிர்ச்சியால் திருகோணமலையே தஞ்சம் எனக்கிடந்தார். பத்து வருசத்துக்கு முன்புதான் பெரியகடை ஆஸ்பத்திரிப் பகுதியில் அனாதையாகத் திரிந்த கௌரிப் பெட்டையைத் தத்துப் பிள்ளையாக்கிக் கொண்டதாக வாக்குமூலம் கொடுத்தார். இந்தியாவுக்கும் தனக்குமான தொடர்பு அறுந்து ஐம்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டதாகச் சொன்னார். கள்ளுத்தவறணை கலவரத்துக்குப் பின் சுக்குறுநாயரை பயத்துடன் அணுகிய ஊர், அவர் கொலைகாரன் என்று தெரிந்ததும் இன்னும் அவரிடமிருந்து ஒதுங்கி நடக்கத்தொடங்கியது.

ஊருக்குள் மௌனமாக கனவிசயம் நடந்துகொண்டிருக்க, மௌனியாக நடிக்கத் தொடங்கிய நவஜோதி மாஸ்டர், நிரந்தர மௌனியாகிப்போனார். இந்த ஊருக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதுபோல ஒதுங்கிக்கொண்டார். ஊருக்குள் நிதிதிரட்ட புலி இயக்கப் பொடியங்களை வரச்சொல்லிவிட்டு ஊருக்குள் கதையைக் கசியவிட்டிருந்தார் நவஜோதி மாஸ்டர். பயிற்சிபெற்ற இரண்டு இயக்கப்போராளிகளின் உயிரில் அக்கறை இல்லாது நடந்து கொண்டதாக புலி அவர்மீது குற்றம் சுமத்தியது. அவர் படிப்பிக்கும் ஆத்திமோட்டை பாடசாலைக்குப்போன புலி இயக்கப் பொடியள் மதியநேர வெயிலில் பள்ளிக்கூட மைதானத்தில் முட்டுக்காலில் நிறுத்தி தண்டனை வழங்கியதாக செய்தி ஊருக்குள் பரவியிருந்தது. தன் வீட்டுக்குள்ளேயே முடங்கிப்போன நவஜோதி மாஸ்டர், வேறு ஒரு திட்டத்தைச் செயல்படுத்த முனைந்துகொண்டிருந்தார். அவர் கையில் ''ஓல்கன்றி'' பாஸ்போட் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் இயக்கத்துக்குப் போன பின்பு அரியம் தனித்துப் போனான். அரியத்தின் இடப்பக்க கண்ணுக்கும் காதுக்குமிடையில் இரத்தம் சுண்டி, பெரிய குத்திக்காசு போல ஒரு கறுத்த மறு நிரந்தரமாகத் தங்கிவிட்டது. அடிக்கடி கண் வலித்தது. காதும் சில வேளைகளில் இரைச்சலாக இருந்தது. ஊரடங்குச் சட்டம், கர்த்தால் என மாறிமாறி வந்துகொண்டிருந்ததால் பள்ளிக்கூடம் போவதுபற்றி அரியம் சிந்திப்பதில்லை. அரியம் திரும்பவும் கௌரிப் பெட்டையுடன் தான் கூடிக்கொண்டு திரிந்தான். புதுப்புதுக் கதைகளாகச் சொல்லி கௌரிப் பெட்டையை மிரட்டித் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முனைந்தான். இந்தியாவிலிருந்து உதயன் தனக்குக் கடிதம் போட்டிருப்பதாக கௌரிப் பெட்டையிடம் சொன்னான் அரியம். அதில் சீறிப் பாய்ந்து வரும் துப்பாக்கிச் சன்னங்களை, தடியைச் சுற்றித் தடுக்கும் பயிற்சி, தம்மை நோக்கி எறியப்பட்ட குண்டைத் தடியாலேயே திருப்பியடித்து எதிரியிடம் போய் விழக்கூடிய பயிற்சியெல்லாம் உதயன் எடுப்பதாகவும், விரைவில் உதயன் திரும்பி வந்துவிடுவான் என்றும் அரியம் சொல்லிவைத்திருந்தான். வந்ததும் தனக்கும் பயிற்சி தருவான் என்றும் சொன்னான். ஊருக்குள் இறந்த தவாண்ணனின் ஆவியும் சீனித்தம்பி குடும்ப ஆவியும் திரிவதாகவும் இரவில் தனியாக எங்கும் போக வேண்டாம் எனவும் அரியம் கௌரிப் பெட்டையை மிரட்டிவைத்திருந்தான். தனியாக இரவு வேளைகளில் ஊரின் இருண்ட சந்துபொந்துகளுக்குள்ளெல்லாம் திரிந்து பழகிய கௌரிப் பெட்டை பயந்துதான்போனாள். இரவில் எங்கு போவதென்றாலும் துணையில்லாது அவள் வெளியே போகப் பயந்தாள்.

அன்று இரவும் அப்படித்தான் நடந்தது. தேயிலைத்தூள் முடிந்துபோயிருந்தது. அதிகாலையில் தேத்தண்ணிக்குத் தேவைப்படும் என்பதற்காக கௌரிப் பெட்டை அரியத்தையும் கூட்டிக்கொண்டு யப்னா ஸ்டோருக்குப் போய் வாங்கிக்கொண்டு பிரதான வீதியில் வந்துகொண்டிருந்தாள். திடீரென்று அரியம் தேவாரத்தைத் தூசனச் சொற்களுடன் கலந்து உரக்கப் பாடத் தொடங்கினான்.

''ஏன்டா சனியனே... தேவாரத்த தூசனமாப் பாடுறாய்...''

''போடி மொக்குப் பண்டாரம்... பேய்க்கு தேவாரத்துக்கும் பயம்... தூசனத்துக்கும் பயம்... ரெண்டையும் சேர்த்து உரக்கப் பாடினா ஒரு பேயும் கிட்டவராது...''

''உண்மையாவாடா...''

''சத்தியமா... வேணுமென்டா நீயும் உரக்கப் பாடிக்கொண்டுவா...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரிப் பெட்டைக்கு பயம்பிடித்துக்கொண்டது. பயத்தில் அங்குமிங்கும் மிலாந்தி பார்த்து, அரியத்துடன் நெருக்கமாக உரசியபடி நடந்து வந்தாள். அரியம் கல்லில் கால் இடறுவது போல கௌரிப் பெட்டையைக் கட்டிப்பிடித்தான். அவள் பயத்தில் அமைதியாக வருவதை சாதகமாக்கிக்கொண்டு உள் ஒழுங்கையில் வரும்போது, திரும்பத்திரும்ப அரியம் கௌரிப் பெட்டையைக் கட்டிப்பிடிக்க முனைந்தான். சதுரக்கிணற்றடி முடக்கில் கௌரிப் பெட்டை இருளுக்குள் நின்றுகொண்டாள். உல்லாசமாக சினிமாப் பாட்டை தூசனம் கலந்து பாடிக்கொண்டு இடறுப்படுவது போல கௌரிப் பெட்டையைக் கட்டிப்பிடிக்கப் போன அரியம், அருகில் வந்துகொண்டிருந்த கௌரிப் பெட்டையைக் காணாது பயந்து தடுமாறினான். திரும்பிப் பார்த்தபோது சதுரக்கிணற்றடி முடக்கில் கௌரிப் பெட்டை இருளில் தனியே நின்றிருப்பதை அரியம் கண்டான். திரும்பி கௌரிப் பெட்டையை நோக்கி அமைதியாக வந்தான் அரியம். அவன் நெருங்கி வரும்வரை அங்கேயே நின்றாள் கௌரிப் பெட்டை. அரியம் நெருங்கி வந்ததும் தன் தோப்பறாச் சட்டையை முழங்காலுக்கு மேல் தூக்கிப் பிடித்த கௌரிப் பெட்டை, தன் காலால் அரியத்தின் நெஞ்சில் ஓங்கி உதைத்தாள். அலமலந்து கிறவல் வீதியில் பிடரி அடிபட விழுந்தான் அரியம்.

''பொம்பிள பொறுக்கி நாயே... இன்னொரு தரம் சேட்ட விட்டி எண்டா... அறுத்து நாய்க்கு போட்டிருவன்...''

கௌரிப் பெட்டை அரியத்தைத் தாண்டிப் போனாள். அரியம் பயத்தில் அரண்டுபோனான். பிலாக்கொட்டையும் கடலப்பருப்புமா தின்ற சனியனுக்கு என்ன பலம் என அரியம் நினைத்துக்கொண்டான். கௌரிப் பெட்டையுடனான உறவும் முறிந்துபோனதால் அரியம் மீண்டும் தனித்துத் திரிந்தான்.

அரியத்துக்கு இப்போது நெருக்கமாக இருப்பது சிவாதான். தனிச்சிங்களமொழிச்சட்டத்தை எதிர்த்துத் தனது பொலீஸ் உத்தியோகத்தை ராஜினாமா செய்த சிவசுப்பிரமணியத்தின் இரண்டாவது மகன்தான் சிவா. அவர்களும் அந்த ஊருக்குப் புதியவர்கள்தான். அவர்கள் கோணமலையார் வீட்டில் வாடகைக்கு வந்திருந்தார்கள். சிவாவுடன் அதிகமாக நெருங்கிப் பழகமுடியாது. அவன் எந்த நேரத்தில் என்ன மனநிலையில் இருப்பான் என்று யாருக்கும் தெரியாது. சட்டென கோபப்படும் அவன் யாரையும் தாக்கவும் தயங்கமாட்டான். ஏதோ சைக்கிள் தகராறில் தன் நாக்கை மடித்துப் பற்களுக்குள் கடித்துக்கொண்டு, தன் தமையனைத் தகரப்படலைக்குள் வைத்து மொங்குமொங்கென்று மொங்கியதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த பிறகு அரியம் அவனுடன் அவதானமாகத்தான் இருந்தான். சிரித்துப்பழகும்போது அருமையாகத்தான் பழகினான். ஆனாலும் அரியத்துக்கு பயம் இருந்துகொண்டுதானிருந்தது. இப்போதைக்கு அரியத்துக்கு சிவாவைவிட்டால் வேறு நட்பு கிடையாது.

## 3.9

வெடிப்புக் கண்ட நிலம். வெடிப்புக் கண்டு உப்பிய நிலத்தின் மணலிலிருந்து வெளிவரும் வளைந்த தண்டு ஒன்று. நிமிர்ந்து கொள்ளும் சவண்ட மெல்லிய சிறிய தண்டு. அந்தத் தண்டைச் சூழ்ந்து அடுத்தடுத்து வெடிக்கும் நிலம். நிலத்திலிருந்து தலைதூக்கும் பல தண்டுகள். காற்றைத் துளைத்துக்கொண்டு இலைகளற்று வேகமாக வளரும் அந்தத் தண்டுகள். சுடுகாடுபோலிருந்த அந்தப் பரந்தவெளி முழுவதும் அந்தத் தண்டுகளாலான காடு. புழுக்களாக நெளியும் அந்தத் தண்டுகள். அந்தத் தண்டுகள் தன் உடலில் பட்டுவிடாதபடி அவன் ஓடினான். சிந்தாமணி அவனைத் துரத்திக் கொண்டுவருகிறாள். அவள் உடல், தலைமுடி எங்கும் திட்டுத்திட்டான சகதியும் மணலும். அவள் கண்கள் இருந்த இடத்திலும் சகதியும் மண்ணும். துரத்தி வந்த சிந்தாமணி அவனை நிலத்தில் விழுத்தி அமத்திப் பிடித்தாள்.

''அரியம்... சனியனே எழும்புடா...''

அரியம் விழித்தெழுந்தான். வதனி அவன் உடலை உலுப்பிக்கொண்டிருந்தாள்.

''சனியனே எழும்புடா... றவுண்டப்பாம்... ஊர் முழுக்க ஆமி நிக்குது...''

அரியம் எழும்பி நின்றான். குடிசையைவிட்டுப் பாய்ந்து வெளியே வந்தான். வேகமாக ஒழுங்கைக்குள் இறங்க முனைந்தான். பின்னால் துரத்தி வந்த வதனி, அவன் பிடரி மயிரைக் கடப்படியில் வைத்துப் பிடித்து, அரியத்தை உள்ளே இழுத்து வந்தாள். பின் பிடரிமுடியை விடாமல், அவன் தலையில் குட்டுகுட்டு என்று குட்டினாள்.

''சனியனே... ஒழுங்கை முழுக்க ஆமி நிக்குது... எங்க போகப் போறாய்...''

தணிந்த குரலில் கடுமையான தொனியில் சொன்னாள் வதனி. தன் தலையைத் தடவியபடி ஒழுங்கையை அப்போதுதான் கூர்ந்து பார்த்தான் அரியம். விடிந்தும் விடியாத அதிகாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கைக்குள் மின்சாரக்கம்பங்களோடு கம்பமாக, கையில் துவக்கும் தலையில் இரும்புத் தொப்பியுமாக ராணுவம் நின்றிருந்தது தெரிந்தது. ஊரடங்குச்சட்ட நேரங்களில் பிரதான வீதியில் நின்றிருப்பது போல, யாரும் வெளியேறாதபடி ராணுவம் ஒழுங்கைக்குள் நின்றிருந்தது. கிருஸ்ணபுரி ஒழுங்கையின் வடக்குப்பகுதி வீடுகள், சிறிமாபுரவேலியோடு இருந்ததால், சாத்திரியார் அம்மாள் வீட்டுப் பக்கப்பகுதியை விட்டுவிட்டு, அந்த ஊரை றவுண்டப் செய்திருந்தது ராணுவம். சட்டென வெளியடுப்பிலிருந்த கரிக்கட்டித்துண்டு ஒன்றை வாய்க்குள் போட்டுச் சப்பிப் பல்லைத் துலக்கியபடி கிணற்றடிக்குப் போனான். வேகமாகக் குளித்து முடித்த அரியம், ஈரம் துவட்டியும் துவட்டாததுமாக அவசரஅவசரமாகப் பள்ளிக்கூட வெள்ளை சேட்டையும் நீலக்காற்சட்டையையும் போட்டுக்கொண்டான். பக்குவமாகத் தலையைப் படிய வாரிக்கொண்டான். குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்து நின்றான். பின்னால் கையைக் கட்டிக்கொண்டு சாத்திரியார் அம்மாள் வளவுத் தென்னைமரத்துக்குக்கீழ் பக்குவமாக நின்றுகொண்டான்.

''ஓவர் அக்டிங் உடம்புக்கு ஆகாது மகனே...''

அரியம் திரும்பிப் பார்த்தான். நீண்ட நாட்களுக்குப் பின் மிக நெருக்கமாக கௌரிப் பெட்டை நின்றிருந்தாள். அதே தோப்பராச் சட்டையுடன்.

''போடி தடி மாடு...''

''மகனே... இண்டைக்கு சனிக்கிழமை பள்ளிக்கூடம் எல்லாம் லீவு எண்டு ஆமிக்கும் தெரியும்...''

அரியத்துக்கு உடம்பு ஒருமுறை உதறிப்போட்டது. பயத்தை மறைத்துக்கொண்டு கௌரிப் பெட்டையைத் திரும்பி முறைத்துப் பார்த்தான். பின் திரும்பவும் குடிசைக்குள் போனான். வெள்ளை பள்ளிக்கூட சேட்டைக் கழட்டிக் கொடியில் போட்டான். கொடியில் கிடந்த வெளிறிய நாவல்நிறச் சேட்டைப் போட்டுக்கொண்டான். காற்சட்டையை மாற்ற அரியம் எத்தனிக்கவில்லை. அரியம் திரும்பவும் வெளியே வந்து நின்றான். அமுக்கர் சம்மாட்டி மெத்தைவீட்டுக்குள்ளிருந்து ராணுவத்தினர் சிலர் சோதனையை முடித்துவிட்டு வெளியே வந்தனர். சிறிமாபுரவேலியோடு இருந்த தமிழ் வீடுகள் சோதனையிலிருந்து தப்பித்துவிட்டன. சாத்திரியார் அம்மாள் வளவுக்குள் ராணுவம் வரவில்லை. ரெத்தினண்ணன் வீட்டுக்குள்ளும் ராணுவம் போகவில்லை. அங்குதான் தலைமேவி இழுத்த இயக்க அண்ணாச்சி தங்கியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணுவம் சோதனையை முடித்துக்கொண்டு வெளியேறும்போது நேரம் பத்துமணியைத் தாண்டிவிட்டது. ராணுவம் ஊருக்குள் இரண்டு பேரை மாத்திரமே கைது செய்து பொலீஸிடம் ஒப்படைத்தது. ஒருவர் நவஜோதி மாஸ்டர், மற்றொருவர் மூத்தம்மாச்சியின் மகன் பவன். நவஜோதி மாஸ்டரை யாரோ காட்டிக்கொடுத்துவிட்டதாகக் கதை பரவியது. மூத்தம்மாச்சி வீட்டில் மரங்கள் அடுக்கிவைப்பதற்காகப் போடப்பட்டிருந்த குடிசைக்குள் அச்சடிக்கப்பட்ட இயக்கப் பிரச்சார நோட்டிஸ்கள் இருந்ததால்தான் பவனைக் கைதுசெய்துகொண்டு போயிருந்தார்கள்.

நவஜோதி மாஸ்டரின் குடும்பமும் பவனின் குடும்பமும் அவர்களை விடுதலை செய்யச்சொல்லி உப்புவெளி பொலீஸ் ஸ்டேசனில் பழியாய்க்கிடந்தார்கள். விசாரணை முடிந்ததும் விடுவதாக பொலீஸ் சொன்னது. மாலைவரை விசாரணை நடந்தது. நவஜோதி மாஸ்டரை பொலீஸ் விசாரித்துவிட்டு விடுதலை செய்துவிட்டது. பவனை விடுதலை செய்யவில்லை. ரெத்தினண்ணன் வீட்டுவாசலில் நின்று கள்ளுத்தவறணை அம்மாச்சி திட்டத்தொடங்கினார்.

''நீங்கள் எல்லாம் மனிசரா... சும்மா தான் உண்டு, தன்ற வேலை உண்டெண்டு இருந்தவனை பொலீஸில மாட்டிவிட்டுப்போட்டு... வீட்டுக்குள்ள படுத்தா கிடக்கிறீங்க... பொலீஸ் அடிச்ச அடியில பவன்ட தாடை திரும்பிக் கிடக்கு... இனி அவன் மனிசனா திரும்பி வரப்போறதில்ல...''

கள்ளுத்தவறணை அம்மாச்சி கத்திவிட்டுப் போனபின், ரெத்தினண்ணன் அவரது மகள் சாந்தி அக்காவைக் கூட்டிக்கொண்டு போய் பொலீஸில் சரணடையச்செய்தார். சாந்தியக்கா வீதியில்கிடந்த நோட்டிஸ்களைத் தான் வாசித்துவிட்டு அங்கே ஒளித்துவைத்ததாக வாக்குமூலம் கொடுத்துச் சரணடைந்தார். சாந்தியக்காவை பொலீஸ் கைது செய்துவிட்டு, பவனை அன்று மாலையே விடுதலை செய்தது. கள்ளுத்தவறணை அம்மாச்சி சொன்னதைப் போல பவனுக்குத் தாடை பெயர்ந்திருக்கவில்லை.

## 3.10

யாழ்ப்பாணம் - திருகோணமலை என்ற பெயர்ப் பலகையுடன் வந்த சிவப்பு நிற C.T.B பஸ், திருகோணமலை பஸ்நிலையத்தில் எரிந்த டீசல் மணத்துடனும் தூரப் பயணத்தினால் சக்கரங்கள் சூடாகிய ரப்பர் மணத்துடனும் நீண்ட பெருமூச்சுபோன்ற இரைச்சலை ஏற்படுத்தியபடி வந்து நின்றது. சிவகுமார் தன் முதுகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொங்கும் பயணப்பையுடன் பஸ்ஸிலிருந்து இறங்கினான். மதியத்துக்குப் பிந்திய மாரிகால வெயில் ஊசியால் குத்துவது போல முகத்தைச் சுட்டெரித்தது. ரெத்தினண்ணன் வீட்டிலிருந்த, தலைமேவி இழுத்த இயக்கப் பொடியன் என யாரும் நம்பமுடியாத அளவுக்கு அவன் மாறிப்போயிருந்தான். தலைமுடியை ஒட்ட வெட்டிப் படிய வாரியிருந்தான் சிவகுமார். சாந்தி பொலீஸில் சரணடைந்ததும் சிவகுமார் ரெத்தினண்ணன் வீட்டிலிருந்து வெளியேறியிருந்தான். சாந்தி ஒரேயடியாக வீதியில் கிடந்த நோட்டிசைத்தான் வாசித்துவிட்டு பத்திரப்படுத்தியதாக ஒரே வாக்குமூலத்தையே திரும்பத்திரும்பக் கொடுத்தாள். பொலீஸ் வேறுவழியில்லாமல் கோட்டில் அவளைப் பாரப்படுத்தியது. நீதிமன்றம் குறைந்த கால சிறைத்தண்டனையுடன் விடுதலை செய்திருந்தது. அதன் பின்னர்தான் சிவகுமார் யாழ்ப்பாணத்திலிருந்து மீண்டும் திருகோணமலைக்குத் திரும்பிவருவது என முடிவு செய்திருந்தான். கன்னியாவில் வட்டவிதானை அம்மாச்சியின் வீட்டில் தங்கியிருந்த இன்னொரு இயக்கப் போராளியான ரமேஸ் இங்கே அரசியல் வேலைகள் அதிகமாக இருப்பதால் வரும்படி கேட்டிருந்தான்.

பஸ்நிலையத்தைவிட்டு வெளியே வந்த சிவகுமாருக்கு மனது படபடப்பாக இருந்தது. யாரோ தன்னைப் பின்தொடர்வது போன்ற உணர்வு. சிவகுமார் தன்னை நிதானப்படுத்திக்கொள்ள முயன்றான். எதிரே இருந்த தேத்தண்ணிக்கடைக்குள் போனான். பிளேன் ரீக்கு ஓடர் செய்துவிட்டுக் காத்திருந்தான். எங்கோ தவறு நடந்துவிட்டது. இனி இந்தத் தவறைச் சீர்செய்ய முடியாது. சிவகுமார் பஸ்ஸிலிருந்து இறங்கியதும் காளி கோவிலடியிலிருக்கும் கலா டீச்சர் வீட்டுக்குப் போவதாகத்தான் நினைத்திருந்தான். அநாவசியமாக ஒரு அப்பாவியைப் பலிகொடுக்க அவன் விரும்பவில்லை. திரும்பவும் பஸ்நிலையத்துக்குள் போவது, புறப்படும் பஸ்ஸில் திரும்பவும் ஏறுவது, எங்காவது காட்டுப்பகுதிக்குள் இறங்கிச் செல்வது, பின் நிலைமையைச் சமாளிப்பது என முடிவுசெய்தான். பிளேன் ரீ வந்தது. குடித்துவிட்டுச் சில்லறையைக் கடை மேசையில் வைத்துவிட்டு மீண்டும் பஸ்நிலையத்தை நோக்கி நடந்தான். குச்சவெளி பஸ் புறப்பட ஆயத்தமாக நின்றுகொண்டிருந்தது. பஸ் படிக்கட்டுகளில் தாவி ஏற முனைந்தான் சிவகுமார். ஆனால் அவனைப் பின்தொடர்ந்தவர்கள், அவனை விட்டுப்பிடிக்கும் மனநிலையில் இருக்கவில்லை.

இரண்டு வலுவான கைகள் அவனைப் பற்றிக் கீழே இழுத்தன. திமிரும் அவனை மடக்கி நிலத்தில் குப்புற விழுத்திக் கைகளைப் பின்னே திருகிப்பிடித்து விலங்கிட்டன. பஸ்நிலைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுபுழுதிமணலில் கிடந்த கற்கள் முகத்தில் அண்டுப்படக்கிடந்தான் சிவகுமார். அவன் பையைப் பிரித்து அவர்கள் சோதனை செய்தார்கள். உடுப்பைத் தவிர வேறு எதுவும் இல்லை. அவனைச் சூழ நின்ற பயணிகள் புதினம் பார்த்தார்கள்.

''லொக்குக் கொட்டியா... லொக்குக் கொட்டியா...''

ஒரு சிங்களப் பெண் பதறியடித்துக்கொண்டு பஸ்நிலையத்தை விட்டு ஓடினாள். சிவில் உடையில் இருந்த இரண்டு ராணுவச் சிப்பாய்கள் சிவகுமாரைக் கைத்துப்பாக்கி முனையில் பஸ்நிலையத்துக்கு வெளியே கொண்டுபோனார்கள். வெளியே ராணுவ ஜீப் வண்டி ஒன்று காவல் நின்றது. சிவகுமாரை ஜீப்புக்குள் தள்ளி ஏற்றினார்கள். ஜீப்புக்குள் ஏறிய சிவகுமார் எதிரே ரமேஸ் விலங்கிடப்பட்ட நிலையில் தலைகுனிந்து இருப்பதைக் கண்டான். அவன் ஊகம் சரியாக இருந்தது. ஜீப் கோட்டை ராணுவ முகாம் நோக்கிப் போனது.

ஜீப் கோட்டைக்குள் போகும் முடக்கில் வளைவெடுத்த போது, சிவகுமார் எதிரிலிருந்த ராணுவச் சிப்பாயைக் காலால் எட்டி உதைத்தான். முழங்காலால் சிப்பாயின் நெஞ்சில் வலுவாக உதைத்தான். பின்பகுதி திறந்த அந்த ஜீப்பிலிருந்து குதித்து தார் வீதியில் விழுந்து எழும்பி ஓட எத்தனித்தான். அடிபட்ட சிப்பாய் சிவகுமாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். துப்பாக்கிக்குண்டுகள் உடலைத் துளைக்க, உதடுகள் தார்வீதியில் இழுபட்டுப் பிய்ந்து போக, வீதியில் உராய்ந்துகொண்டு போனான் சிவகுமார். கோட்டை வாசலில் கண்கள் திறந்துகிடக்க விழுந்துகிடந்தான். திறந்துகிடந்த கண்களுக்குள் பரந்து விரிந்த கோணேசர்மலையை ஒட்டிய நீலக்கடல்.

## 3.11

நாளை கர்த்தால். அரியத்துக்கு ஆர் கர்த்தால் போடுகிறார்கள், ஏன் போடுகிறார்கள் என்பது பற்றியெல்லாம் தெரியாது. நாளை கர்த்தால். கடைக்குப் போகிற வேலைகூட இருக்காது. ஊர் சுற்றுவதற்கு எந்தக் கட்டுப்பாடும் இருக்காது. இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு பூவாவின் வெளிவிறாந்தையில் வந்து படுத்திருந்தான் அரியம். சிவா இருட்டுக்குள் அரியத்தைத் தேடி பூவாவின் காப்பெண்டர் மாலுக்கு வந்தான்.

சிவா வைரவர் கோயில் ஆலமரத்தடிக்கு அரியத்தைக் கூட்டிப்போனான். வைரவர் கோயிலடி ஆலமரத்துக்குக் கீழே சிவாவைவிட உயரமாக ஆனால் ஒல்லியான ஒருவன் நின்றிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியத்துக்கு அவனை முன்னர் சந்தித்ததாக ஞாபகமில்லை. அவன் சிவன் கோயிலடிப் பொடியன் என்று மட்டும்தான் சிவா சொன்னான். அவன் கையில் ஒரு பேப்பர்கட்டு இருந்தது. அவர்கள் ஒரே கொங்றீட் வார்ப்பாலான, பதிவான கூடாரம் போன்ற வைரவர் கோவில்கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனார்கள். உள்ளே இருள் மண்டிக்கிடந்தது. கதவைச் சாத்திக்கொண்டார்கள். சிவா தன் கைக்குள் பொத்தியிருந்த தீப்பெட்டியிலிருந்து தீக்குச்சியை உருவி உரசினான். பாம்பு சீறுவதைப்போல தீக்குச்சி பற்றிக்கொண்டது. இப்போது மூவரது முகங்களிலும் வெளிச்சம் படிந்தது. சிவா மாடத்திலிருந்த குத்துவிளக்கை ஏற்றிவிட்டுத் தீக்குச்சியை அணைத்துக் கீழேபோட்டான். சிவன் கோவிலடிப் பையன் கையிலிருந்த பேப்பர் சுருளை விரித்தான். அது கர்த்தால் அறிவிப்பு நோட்டிஸ். ஏற்கனவே ஊருக்குள் கர்த்தால் என்ற செய்தி பரவித்தானிருந்தது. வெள்ளைப் பேப்பரில் சிவப்பு மையில் அச்சடித்த கர்த்தால் நோட்டிஸ்.

தமிழ் மக்கள் மீதான இன வன்முறையை நிறுத்தக்கோரிய நோட்டிஸ். எல்லா இயக்கங்களும் சேர்ந்து தமிழ் மக்களின் உரிமைக்கான பதினொருஅம்சக்கோரிக்கையை முன்வைத்து நாடளாவிய கர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தன. சிவா வேகமாக குசுகுசுவென அந்த நோட்டிசை வாசித்தான். அரியத்துக்கு அதிலிருந்த வசனங்கள் ஏதும் நினைவில் தங்கவில்லை. சிவா நோட்டிசின் மேற்பகுதியில் மடிப்பொன்றை ஏற்படுத்தத்தொடங்கினான். இரவில் ஒட்டும்போது நோட்டிஸ் தலைகீழாக ஒட்டுப்பட்டு விடக்கூடாது என்பதற்காக. இரவில் தடவிப்பார்த்து மடிப்பைக் கண்டுபிடிக்கமுடியும். நோட்டிஸில் மடிப்பை ஏற்படுத்தியதும் சிவா குத்துவிளக்கை அணைத்துவிட்டான். மீண்டும் அவர்களை இருள் சூழ்ந்துகொண்டது. சனநடமாட்டம் அடங்கவேண்டும். இது பிரதானவீதி. ஆமி பொலிஸ் றோந்து போகும். வேறு வேறு இனச் சனங்களின் நடமாட்டம் இருக்கும் பகுதி.

வைரவர் கோயில் கதவுநிலைப்படியில் தலைசாய்த்திருந்த அரியம் உறங்கிப் போயிருந்தான். ஏதோ அரவம் கேட்டு அரியம் எழும்பினான். வைரவர் கோயிலுக்குள் வெளிச்சமிருந்தது. குத்துவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. சிவன் கோவிலடிப் பொடியன் வாளி ஒன்றைப் பிடித்துக்கொண்டிருக்க, சிவா வாளிக்குள் தடி ஒன்றினால் கிண்டிக்கொண்டிருந்தான். அரியத்துக்கு கோதுமைமாவின் மணமடித்தது. அவர்கள் பசை கிண்டிக்கொண்டிருந்தார்கள். அரியம் முகத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்துக்கொண்டு அவர்களை நெருங்கி உட்கார்ந்தான். எப்போது வாளி, கோதுமைமா எல்லாம் கொண்டுவந்தார்கள் என அரியத்துக்குத் தெரியவில்லை. சுவருக்கு வெள்ளையடிக்கும் பிறகும் தரையில் கிடந்தது.

அரியம் பசைவாளியைத் தூக்கிக்கொண்டான். சிவா நோட்டிஸ்கட்டுக்களைக் கையில் எடுத்திருந்தான். சிவன் கோவிலடிப் பையன் பிறஸ்சை எடுத்துக்கொண்டு, வைரவர் சூலம் குத்தியிருந்த மாடத்திலிருந்து, வெளிச்சத்தில் மினுங்கிக்கொண்டிருந்த கைக்குண்டொன்றை எடுப்பதை அரியம் கண்டான். அரியத்தின் நெஞ்சு படபடத்து அடங்கியது. சிவா தெளிவாகச் சொல்லிவிட்டான். யமாலிய பள்ளிக்கூடத்தடியிலிருந்து மடத்தடிச்சந்தி சுடலை மட்டும் ஒட்டுவதென்று. அரியத்துக்கு பயமாக இருந்தது. சிறிமாபுரம் தாண்டிப்போய் நோட்டிஸ் ஒட்டுவது என்பது வில்லங்கத்தை விலைக்கு வாங்குவதற்குச் சமனானது. சிவாவின் மூர்க்கம் தெரிந்திருந்ததால் அரியம் அமைதியாக இருந்தான். குத்துவிளக்கை அணைத்துவிட்டுக் கதவைப் பூட்டிவிட்டு வெளியேவந்தார்கள்.

செட்டியார் வீட்டு ஒழுங்கையில் நடந்தார்கள். நாய் ஒன்று உறுமிவிட்டுப் படுத்தது. பிரதான வீதியை அண்டி அவர்கள் நின்றார்கள். வீதியில் வாகன இரைச்சல் இல்லை என்பதையும் ஆள் நடமாட்டம் இல்லை என்பதையும் உறுதிப்படுத்திக்கொண்டு, போதுமான நேரம் எடுத்து, ஒவ்வொருவராகப் பிரதான வீதியைக் கடந்தார்கள். கம்பிவேலிக்குள்ளால் புகுந்து கைவிடப்பட்ட கொய்யாத்தோட்ட வளவுக்குள் இறங்கி நடந்தார்கள். லவ்லேன் இடிந்த நெல் ஸ்டோர்களின் மறைவில் நடந்துபோனார்கள். லவ்லேன் வீட்டுத் திட்டவீடுகளையும் போஸ்ட்மாஸ்டர் வீட்டையும் தாண்டி, கம்பிக்குள்ளால் புகுந்து யமாலியா பள்ளிக்கூடத்துக்குள் போய்ச் சேர்ந்தார்கள். பாடசாலை வகுப்பறை ஒன்றுக்குள் அமர்ந்து, நிதானமாகத் தம்மை யாரும் பின்தொடரவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டார்கள். வீதியில் நடமாட்டத்தைக் கவனமாக ஆராய்ந்தார்கள். பின் முதல் நோட்டிஸைப் பள்ளிக்கூட இரும்புக் கிறாதிக் கதவுகளைத் தாங்கும் தூணில் சிவா ஒட்டினான். பாடசாலையின் பிரதான வீதியோரத் தகரவேலியில் சிவா நோட்டிஸை ஒட்ட, மற்ற இருவரும் காவல் நின்றார்கள். பிரதான வீதியைத் தாண்டிப்போன சிவா, யமாலியா வீதியோரக் கடைகளின் கதவுப் பலகைகளிலும் சுவர்களிலும் ஒட்டிவிட்டு வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான வீதியில் லொறி ஒன்றும் பொலீஸ் ஜீப்பொன்றும் போனபோது அவர்கள் லவ்லேன் வீட்டுத்திட்ட கைவிடப்பட்ட வீடொன்றின் பின்புறம் பதுங்கியிருந்தார்கள். வாகனங்களில் இரைச்சல் அடங்கும்வரை அவர்கள் பொறுமையாகக் காத்திருந்தார்கள். திடீரென்று சிவா என்ன நினைத்தானோ தெரியாது, இரண்டு மூன்று நோட்டிஸ்களை எடுத்துக்கொண்டு பிறஸை பசைவாளியில் தோய்த்தெடுத்துக்கொண்டு பிரதானவீதி தாண்டி சிறிமாபுரப்பக்கம் போனான். சிறிமாபுரப் பிரதானவீதியிலிருந்த வீடொன்றின் வேலிக்குள்ளால் புகுந்து வீட்டுச்சுவரிலோ கதவிலோ நோட்டிஸ் ஒன்றை அவன் ஒட்டுவதை அவர்கள் இருளில் கண்டார்கள். நாய் குரைத்தாலோ யாரும் விழித்துக்கொண்டாலோ அதோகதிதான். சிறிமாபுர வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த சிவா, சிறிமாபுர ஓரமாக இருந்த மின்கம்பத்தில் ஒரு நோட்டிஸையும் தகர வேலியில் ஒரு நோட்டிஸையும் ஒட்டிவிட்டுச் சிரித்துக்கொண்டு அவர்களை நோக்கி வந்தான்.

இருளும் நோட்டிஸ் ஒட்டுவதும் அவர்களுக்குப் பழக்கப்பட்டு விட்டது. ஊர் ஒழுங்கைகளுக்குள் பதுங்கியும் நாய்கள் குரைக்கும் போது அவை தொடர்ச்சியாகக் குரைக்காவண்ணம் அமைதிகாத்தும் அந்தப் பிரதானவீதியின் ஓரங்களிலிருந்த மின்கம்பங்களிலும் தகரவேலிகளிலும் கடைச்சுவர்களிலும் கடைப்பலகைக் கதவுகளிலும் என மடத்தடிச்சந்தி சுடலைவரை ஒட்டிவிட்டுத்தான் ஓய்ந்தார்கள். அவர்கள் சுடலைக்கு எதிரே இருந்த ரெயில்வே ஸ்டேசனின் பின்புறத்துக்குள் நுழைந்தார்கள். கையிலிருந்த இரண்டு நோட்டிஸ் களையும் கைவிடப்பட்ட ரெயில் பெட்டியில் ஒட்டிவிட்டு, ரெயில் பெட்டிக்குள் ஏறி ஓய்வெடுத்தார்கள். பின் சிவன் கோவிலடிப் பொடியன் அவர்களிடமிருந்து தலையசைப்பால் விடைபெற்று ரெயில்வே பொறியியலாளர் பங்களாவின் மதில்சுவரால் ஏறிக் குதித்து மறைந்துபோனான்.

அரியமும் சிவாவும் ஊருக்குள் வந்தபோது ஊர் விழித்திருந்தது. உள் ஒழுங்கைகளில் இளைஞர்களின் நடமாட்டம் இருந்தது. அவர்கள் பெரியபெரிய மரக்கட்டைகளையும் கற்களையும் பிரதான வீதிக்கு நகர்த்திக்கொண்டிருந்தார்கள். சிலர் பெரிய சிறிய டயர்களை வீதியில் போட்டு எரிக்க முனைந்துகொண்டிருந்தார்கள். கிருஸ்ணபுரி முடக்கில் ஜெகாண்ணன் பெரிய ரெக்டர் டயர் ஒன்றை சிறிமாபுர எல்லையில் போட்டு பற்றவைத்துக்கொண்டிருந்தார். அவர்கள் ஜெகாண்ணனை நெருங்கிப்போனார்கள். சின்னப் பொடியள் இது வழிய திரிய வேணாம் என கொண்ணிக் கொண்ணி அவர்களை விரட்டிவிட்டார். சிவாவும் அரியமும் ஒருவர் முகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். அவர்கள் வந்து பூவாவின் வெளித்திண்ணையில் படுத்துக்கொண்டார்கள். உடல் அசதியில் அரியம் தூங்கிப்போனான்.

பூவாவின் திண்ணையில் படுத்திருந்த அரியத்தை ஒற்றை வெடிச்சத்தம் எழுப்பி உட்கார வைத்தது. கண்கூசும் அளவுக்கு வெயில் எரித்துக்கொண்டிருந்தது. நேரம் ஒன்பது மணி தாண்டியிருக்கும் என்றுதான் அரியம் நினைத்தான். இரவில் அலைந்து திரிந்ததில் தலை விண்விண் என வலித்தது. சிவா எப்போது எழும்பிப்போனான் எனத் தெரியவில்லை.

அரியம் வீட்டிலிருந்து திரும்பவும் ஊருக்குள் உலாவரப் புறப்பட்டபோது நேரம் காலை பதினொரு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. கர்த்தால் என்பதால் ஊருக்குள் யாரும் வெளியே செல்லவில்லை. அரியம் சிவாவை முற்றாகத் தவிர்த்துவிடும் மனநிலையில் இருந்தான். கடற்கரையால் யங்சன்றைஸ் மைதானத்துக்குள் வந்து, வைரவர் கோயிலடியில் ஏறினான். ஊருக்குள் ஆண்கள், பெண்கள் எனக் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

அரியம் செட்டியார் வீட்டு ஒழுங்கையில் பிரதானவீதி நோக்கி நடந்தான். வீதியில் போட்டு எரித்த டயர்களின் வாடை கனதியாக வீசிக்கொண்டிருந்தது. வீதியில் டயர்கள் எரிவதால் எழுந்த புகை மரங்களுக்கும் வீடுகளுக்கும் மேலாக எழுந்துகொண்டிருந்தது. பொதுக் கிணற்றடியில் செட்டியாரின் சிறியும் பவன் அண்ணனும் கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

''இதோட சிறிமாபுரத்தான் அடங்கிப்போயிருவான்... றோட்டில போய்ப் பாருங்களன் புதினத்த... சிறிமாபுர மெயின் றோட்டில மட்டுமில்ல... ஒழுங்கையிலகூட ஒரு ஈ, காக்கா இல்ல... மிரண்டுபோய் கிடக்காங்களாம்... கொட்டித் தமாய்... கொட்டித் தமாய்... எண்டு பதறித் திரியிறாங்களாம்... மூண்டே மூண்டு நோட்டிஸ்தான். ஒண்டு சிறிமாபுர லைட்போஸ்டில... மற்றது தகரவேலியில... ஒண்டு தளஸ்ட வீட்டு வாசல்கதவில... இயக்கம் எண்டா என்ன சும்மாவா... சிறிமாபுரத்தான் யோசிச்சிருப்பான்... வீட்டு வாசல்ல வந்து நோட்டிஸ் ஒட்டினவங்களுக்கு யன்னல திறந்து போட்டு கிறினெட்ட கழட்டிப்போட எவ்வளவு நேரம் செல்லுமெண்டு... இதோட அடங்கிப்போயிருவாங்கள்...''

அரியத்துக்கு சிவாவைப் பார்க்கவேண்டும்போலிருந்தது. சிவா பிரதானவீதியில்தான் நிற்பான். அரியம் பிரதானவீதியை நோக்கி ஓடமுனைந்தான். சிவா பிரதானவீதியிலிருந்து அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தான். சிவாவின் முகத்தில் அடக்க முடியாத சிரிப்பு பொங்கிவழிந்துகொண்டிருந்தது. வா என்பது போல கையைக் காட்டிவிட்டு சிவா அவனைத் தாண்டி ஓடிக்கொண்டிருந்தான்.

''இவனுகள் பட்டுத்திரியிர பாடு பெரும்பாடு... ஆற்ற கையாள வெளுவ வாங்கப் போறாங்களோ தெரியாது''

ஒழுங்கைக்குள் சிவாவைத் துரத்திக்கொண்டு ஓடினான் அரியம். வைரவர் கோயிலடி தாண்டி, யங்சன்றைஸ் மைதான கோல்போஸ்டுகள் தாண்டி, அவர்கள் கடற்கரை நோக்கி ஓடினார்கள். சிவா ஓடிக்கொண்டே சேட்டை கழற்றிச் சுருட்டி மணலில் வீசிவிட்டு, சாரத்துடன் கடலில் குதித்து நீந்தத் தொடங்கினான். பின்னால் வந்த அரியமும் சேட்டைக் கழற்றிக் கடற்கரை மணலில் போட்டுவிட்டுச் சாரத்துடன் கடலில் குதித்து சிவாவை நோக்கி நீந்திப் போனான்.

''கர்த்தால் வெற்றிடா... சிறிமாபுரமே அடங்கிப்போயிற்று...''

சிவா வெற்றிக்களிப்பில் தலைகால்புரியாமல் கடலில் நீந்திக்கொண்டிருந்தான். அரியமும் அவனது வேகத்துக்கு ஈடுகொடுக்க முனைந்தான். அவர்கள் நீண்டநேரம் கடலில் குளித்துக் கொண்டிருந்தார்கள். பசி வயிற்றைப் பிசையத்தொடங்கியதும் அவர்கள் கடலிலிருந்து வெளியேறி வீடுகளை நோக்கி நடந்தார்கள்.

அரியம் சாப்பிட்டுவிட்டு பூவாவின் மாலுக்குள், இரவு காலில் தைத்த முள் ஒன்றை எடுப்பதற்காக பூட்டூசியுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தான். முள் ஆழத்தில் புதைந்து கிடந்தது. தோலை ஆழமாகப் பிய்த்து இரத்தம் வரும்படி நசித்தபோதும் முள் வெளியேறாது கடுக்கிக்கொண்டேயிருந்தது. அப்போதுதான் சிவா திரும்பவும் அரியத்தைத் தேடி வந்தான். சிவாவின் முகம் கறுத்திருந்தது. அவர்கள் ஏதும் பேசிக்கொள்ளாது கடற்கரையை அண்டி நடந்து, யங்சன்றைஸ் மைதானத்துக்குள்ளால் வைரவர் கோயிலடியை நோக்கிப் போனார்கள். சிவா எதுவும் பேசவில்லை. அரியம் காலைக் கெந்திக்கெந்தி நடந்து வந்தான்.

''ஆமிக்காராக்கள் மூண்டாங்கட்டப் பக்கமிருந்தும்... மடத்தடிப் பக்கமிருந்தும்... றோட்ட கிளியர் பண்ணி வாறாங்களாம்... டவுன் றோட்டெல்லாம் கிளியர் பண்ணிப் போட்டாங்களாம்... C.T.B பஸ்ஸ ஓட விடறதுக்கு ஏற்பாடு செய்யிறாங்களாம்... C.T.B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்ஸ இந்த றோட்டால ஓடவிடக்கூடாது... C.T.B பஸ் ஓடினா கர்த்தால் தோல்வி ஆகியிரும்... C.T.B பஸ்ஸை மட்டும் ஓடவிடக்கூடாது...''

சிவா தீர்மானமாக இருந்தான். அவர்கள் மீண்டும் நடந்தார்கள். உள் ஒழுங்கைகளுக்குள்ளாலும் பாழ்வளவுகளுக்குள்ளாலும் நடந்து, அவர்கள் கள்ளுத்தவறணையடியை நோக்கிப் போனார்கள். பகலில் ஊருக்குள் வைத்து ஏதும் செய்வது ஆபத்தானது என அவர்களுக்குத் தெரியும். அவர்கள் கள்ளுத்தவறணை பக்கமாக பிரதானவீதியைத் தாண்டி, தபோவன ஆச்சிரமத்தை ஒட்டிய நொச்சிப் புதர்கள் மண்டி காடுபோல இருந்த இடத்தைக் குறிவைத்திருந்தார்கள். போகும் வழியில் எறியக் கூடிய கைக்களவான கருங்கற்கள், கூழாங்கற்களைப் பொறுக்கி, மடித்துக் கட்டிய சாரத்துக்குள் போட்டுக்கொண்டே வந்தார்கள். கற்களின் பாரத்தில் அவிழ்ந்துகொண்டிருந்த சாரத்தை, அவர்கள் திரும்பத்திரும்ப இடுப்பில் இறுக்கமாகக் கட்டிக்கொண்டார்கள். அவர்கள் பிரதானவீதியை நெருங்கியபோது நகரப்பக்கமிருந்து ராணுவ வண்டி ஒன்றின் உறுமலைக் கேட்டார்கள். சாரத்துக்குள்ளிருந்த கற்கள் முழங்காலில் இடிக்க இடிக்க திரும்பி ஓடி வந்து, கள்ளுத்தவறணைக்குப் பின்புறம் கற்களை, சாரத்தை அவிழ்த்துக் கொட்டிவிட்டு, ஊர்மனைக்குள் வந்தார்கள். வேப்பமரம் ஒன்றுக்குக்கீழ் வலைபொத்திக் கொண்டிருந்தவர்களுடன் அமர்ந்து வீதியை நோட்டம்விட்டார்கள்.

நகர்ப் பக்கமிருந்து சிறிய ராணுவப் படையணி ஒன்று, கவசவாகனம் சகிதம் அந்தப் பிரதானவீதியில் அங்குலஅங்குலமாக முன்னேறிக்கொண்டிருந்தது. வீதியின் இரண்டு கரைகளிலும் துப்பாக்கியை நீட்டிப்பிடித்தபடி ராணுவம் வந்துகொண்டிருந்தது. இன்னொரு ராணுவ அணி, தடித்த, நுனி வளைந்த கம்பிகளால் வீதியில் கிடந்த டயர்களை வீதியின் ஓரங்களுக்கு நகர்த்தியும் கற்களையும் மரக்கட்டைகளையும் ஒதுக்கியபடியும் முன்னேறிக் கொண்டிருந்தது. அந்தப் படையணிகளுக்குப் பின்னே செயினில் ஓடும் டேங்கர் ரக கவச வாகனம் இரைச்சலுடன் நகர்ந்து வந்து கொண்டிருந்தது. அவர்கள் வேப்பமரத்துக்குக்கீழ் காத்திருந்தார்கள். டேங்கர் ரக கவச வாகனத்தின் இரைச்சல் மெதுமெதுவாக அடங்கிக்கொண்டிருந்தது.

மீண்டும் அவர்கள் கள்ளுத்தவறணையடிக்கு வந்துசேர்ந்தார்கள். தாங்கள் குவித்து வைத்துவிட்டுப்போன கற்களைச் சாரத்துக்குள் போட்டு, சாரத்தை மடித்துக்கட்டிக்கொண்டார்கள். பிரதானவீதி நோக்கி நடந்தார்கள். முதலில் சிவா பிரதானவீதியைக் கடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபோவன ஆச்சிரம ஒழுங்கைக்குள் போனான். அரியம் காத்திருந்து, பின் பிரதானவீதியை நெருங்கி நின்றான். வீதி வெறிச்சோடித்தான் கிடந்தது. டயர்கள் வீதியோரங்களில் புகைந்துகொண்டிருந்தன. கற்களும் மரக்கட்டைகளும் வீதியோரத்திற்கு நகர்த்தப்பட்டிருந்தன. டாங்கர் போன தடம் தார்வீதியில் பல்லுப்பல்லாகக் கிடந்தது. தார் கிளம்பி, நொறுங்கிய கற்கள் வெளித்தெரிந்தன. டாங்கர் நகர்ந்து போனபோது ஏற்படுத்திய ''டணங்'' ''டணங்'' என்ற ஓசை அரியத்தின் காதுகளுக்குள் இன்னும் கேட்டுக்கொண்டிருந்தது. அரியம் பிரதான வீதியைத் தாண்டி சிவாவிடம் போய்ச்சேர்ந்தான். அவர்கள் பாழ்வளவின் மணக்கும் நொச்சிப் பத்தைகளுக்குள் வசதியான ஒரு இடத்தில் அமர்ந்துகொண்டார்கள். கற்கள் அவர்களுக்கு முன்னே குவித்து வைக்கப்பட்டிருந்தன. அவர்கள் காத்திருந்தார்கள். நேரம் கடந்துகொண்டிருந்தது.

முதலில் சில சைக்கிள்கள் வீதியில் ஓடத்தொடங்கின. பின் மோட்டார் சைக்கிள்கள், மீன் வாடி லொறிகள் என வீதி மதியத்துக்குப்பின் இயல்புநிலைக்குத் திரும்பிக்கொண்டிருந்தது. அவர்களது இலக்கு C.T.B பஸ் மட்டுமாகவே இருந்தது. பெரும்பாலும் மீன் வாடி லொறிகளும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிகளும்தான் இடைவிட்டு இடைவிட்டு ஓடிக்கொண்டிருந்தன. அவர்கள் காத்திருந்தார்கள். C.T.B பஸ்ஸின் முனகலோசை மூன்றாங்கட்டைப்பக்கமிருந்து கேட்டது. அவர்கள் உசாரானார்கள். கற்களைக் கையில் எடுத்துக்கொண்டார்கள். பஸ்ஸின் சிவப்பு நிறம் கண்ணில் பட்டவுடன் பஸ்ஸை நோக்கிக் கற்களை வீசினார்கள். பஸ் கண்ணாடி நொறுங்கும் ஓசை இரண்டு தரம் கேட்டது. பஸ் வீதியோரமாக ஒதுங்கி நின்றது.

'ஓடுடா... ஆமி பஸ்ஸுடா...''

சிவா கத்திக்கொண்டு ஒழுங்கை தாண்டி தபோவன மதிலால் ஏறிக் குதித்து ஓடினான். தடுமாறிய அரியம் படபடப்புடன் ஒழுங்கை தாண்டி தபோவன மதிலில் ஏறினான். பிரதான வீதியிலிருந்து ராணுவச் சிப்பாய் ஒருவன் துப்பாக்கியை நீட்டிப் பிடித்தபடி, ஒழுங்கைக்குள் திரும்பித் துரத்திக்கொண்டுவந்தான். அரியம் மதிலால் பாய்ந்து ஓடி, தபோவன வளவு தாண்டி, வேலியால் புகுந்து, மட்டிக்கழி கண்ணாப்பற்றைக்குள் ஓடினான். சிவா எந்தப்பக்கம் ஓடினான் எனத் தெரியவில்லை. அரியம் கண்ணாப்புதர்களுக்குள் மறைவாகத் திரிந்து சிவாவை தேடிப் பார்த்தான். சிவாவைக் காணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியம் கண்ணாப்புதர்களினடியில் வேர்கள் பிணைந்து வலைபோல பரவிக்கிடந்த இடத்தில், தொடர்ச்சியாக மஞ்சளும் பச்சை நிறமும் கலந்து, பஞ்சு போல படர்ந்துகிடந்த குளிர்ச்சியான பாசிமீது படுத்துக்கொண்டான். இரவு நோட்டிஸ் ஒட்டும்போதும் நடுவீதியில் டயர்களைப் போட்டு எரித்தபோதும் இருந்த விளையாட்டுத்தனம், இப்போது பூதமாகப் புறப்பட்டுவந்து மிரட்டிக்கொண்டிருந்தது.

அரியத்துக்கு இன்னமும் படபடப்பு அடங்கியிருக்கவில்லை. தலை கொதிக்கத் தொடங்கியிருந்தது. சிவாவின் மூர்க்கம் அவனால் ஈடுகொடுக்கமுடியாத ஒன்று. சிவாவிடமிருந்து தூரமாக ஓட வேண்டும் போல இருந்தது அரியத்துக்கு. தபோவன ஆச்சிரமப்பக்கம் தென்னைமரம் ஒன்றின் வைரமான மேற்பரப்பை மரங்கொத்தி ஒன்று இடையறாது கொத்திக்கொண்டிருந்தது. அந்த ஓசை அவன் தலைக்குள் வலியை ஏற்படுத்திக்கொண்டிருந்தது. இவ்வளவு நெருக்கமாக ராணுவத்தைத் தாண்டி வருவோம் என அவன் நினைத்திருக்கவில்லை. ராணுவச் சிப்பாய் சுட நினைத்திருந்தால் இப்போது தன் உடல் தபோவன மதிலில் தொங்கிக்கொண்டிருந்திருக்கும் என நினைத்தான் அரியம்.

சிவாவுடன் பழகுவதும் திரிவதும் அரியத்துக்கு அவ்வளவு சுலபமாக இல்லை. சிவா சொல்வதைக் காதில் வாங்காது பிராக்குப் பார்த்தால் கையைப் பின்புறமாக வலிக்கும்படித் திருகிப்பிடிப்பான். அரியம் விலகிவிலகிப் போனாலும் சிவா அவனை வலிய வந்து அழைத்துக்கொண்டுதான் திரிகிறான். அவங்கட அம்மா ''பிசாசுகள்'' ''பிசாசுகள்'' என்று திட்டத்திட்ட.

சிவா நகரத்திலிருக்கும் பெரிய பள்ளிக்கூடத்தில்தான் படித்தான். அந்தப் பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுக்கூடத்திலிருந்து ரசாயனப் பொருட்கள், திரவங்கள் எனக் கொண்டுவந்து ஒளித்துவைத்திருந்தான். பழுதடைந்த மின்குமிழ்களின் மாபிள் அடைப்பை பல்ப் சிதையாத வண்ணம் உடைத்து, அதற்குள் பெற்றோலைவிட்டுத் திரி வைத்து, மெழுகும் காச்சிய வச்சிரமும் மரத்தூளும் கொண்டு பிசைந்து பசையால் அடைத்து, பெற்றோல் பம்ஸ்; செய்ய முனைந்தான். சில நேரங்களில் ரசாயனப் பொருட்களையும் சேர்த்துப் பயன்படுத்திப் பார்த்தான். பல தடவை கையில் சூடும் பட்டிருக்கிறது. அவன் ஆள்காட்டி விரல் ஏதோ இரசாயனம்பட்டு நாவல் கலரில் கன்றிக்கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெத்தினண்ணன் வீட்டிலிருந்த தலைமேவி இழுத்த இயக்கப் பொடியன் சிவகுமார், ஆமி பிடித்துக்கொண்டு போகும்போது, கோட்டை வாசலில் வைத்துத் தப்பிக்க முனைந்தான். ராணுவம் சிவகுமாரை சுட்டுக் கொலை செய்திருந்தது. ரெத்தினண்ணன் குடும்பத்துக்குத்தான் அதிக ஆபத்து இருந்தது. சிவகுமாரை ரமேஸ்தான் காட்டிக்கொடுத்திருந்தான். சிவாவும் அரியமும் அவர்கள் நடத்திய வகுப்புகளுக்கெல்லாம் போயிருக்கிறார்கள். சிவா அவர்களிடம் புத்தகங்கள் எல்லாம் வாங்கிப் படித்துக் கொண்டு திரிந்திருக்கிறான்.

ரமேஸ் கன்னியாவிலிருந்து சவர்க்காரப் பெட்டிக்குள் சவர்க்காரங்களோடு கிறினெட்டுக்களை நகரப்பகுதிக்கு, சைக்கிள் பின்கெறியரில் கட்டிக்கொண்டு துவரங்காட்டுப் பகுதியால் வந்துகொண்டிருந்தான். எதேச்சையாக அந்த வீதியில் றோந்து போன ராணுவத்தைக் கண்டதும் சைக்கிளை விட்டுவிட்டு ஓடமுனைந்தான். ராணுவம் துரத்திப்பிடித்துவிட்டது. மொக்கன் கையிலிருந்த குண்டை ராணுவத்தின்மீது எறிந்துவிட்டுத் தப்பியிருக்கலாம். இல்லை குண்டை வெடிக்க வைத்து இறந்திருக்கலாம். ரமேஸ் பிடிபட்டதும் கன்னியாவிலிருந்த வட்டவிதானையாரின் குடும்பம் இரவோடுஇரவாகத் தலைமறைவாகிவிட்டது. ரெத்தினண்ணன் குடும்பம் இன்னும் ஊருக்குள்தான் இருந்தது.

பொழுது இருட்டிக்கொண்டுவந்தது. குழப்பமான நினைவுகளும் பசிய மென்மையான கண்ணாமர அடிப்பாசியும் அரியத்தை அங்கேயே கிடக்கவைத்திருந்தது. சிவா தேடி வரவில்லை. ஒரேயடியாக இருட்டிவிட்டால் வழி தவறிவிடக்கூடும். வீதியில் இன்னமும் ராணுவம் நிற்கவும்கூடும்.

அரியம் கண்ணாப்புதர்களுக்குள்ளிருந்து புறப்பட்டுத் தபோவனத்துக்குள் நிற்கும் தென்னைமரங்களை இலக்கு வைத்து நடந்தான். தபோவன ஆச்சிரமத்தின் வேலியோரத்தில் நின்று, தபோவனத்தை நோட்டம்விட்டான். தபோவனத்து மாடங்களில் சுட்டி விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. காவிச்சாரி உடுத்திய ஆச்சிரமத்து அம்மாவும் வேறு சிலரும் நடமாடிக்கொண்டிருந்தார்கள். வேலிக்குள்ளால் புகுந்து ஆச்சிரமத்துக்குள் போனான். மதிலால் ஏறிக் குதிக்காது கதவைத் திறந்துகொண்டு ஒழுங்கைக்குள் போனான். வீதியில் வாகனப் போக்குவரத்து இருந்தது. நேராக நடந்து பிரதானவீதி தாண்டி உள் வீதிகளுக்குள்ளால் வீடு நோக்கி நடந்தான். அவனது மனம் சிவாவுடனான உறவை முற்றாகத் துண்டித்துவிடு என ஓலமிட்டுக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.12

அவர்களது வீரச்சாவு ஊருக்குள் அறிவிக்கப்பட்டுவிட்டது. கடலில் கடற்படையுடன் சமர். இந்தியாவிலிருந்து பயிற்சி முடித்துக் கொண்டு திரும்பியவர்கள் அவர்கள். காட்டிக் கொடுப்போ எதேச்சையானதோ, வழிமறித்து நின்றது கடற்படை. நீண்ட நேரச் சமர். அவர்களது சிறிய படகு கடலில் வெடித்துச்சிதறியது. அவர்களது உடல்கள் கடலில் அமிழ்ந்து கரைந்து போயின. குட்டியண்ணன், சச்சி, மேகண்ணன். ஊர் துவண்டுகிடந்தது.

கடல் உறங்கிக்கிடந்தது. இருள் கவிந்து, கடல் கறுப்பாகக் கிடந்தது. ஓ... என இரைந்து, அலையடித்து ஆர்ப்பாட்டம் பண்ணும் கடலா இது என நம்பமுடியாத அளவுக்குக் கடல் அமைதியாக இருந்தது. அலைகள் தவழ்ந்து வந்து, மெதுவாகக் கரையில் மடிந்து திரும்பிக்கொண்டிருந்தன. இந்தக் கடல் அவர்கள் சாவுக்குக் காரணமாக இருந்திருக்க முடியாது.

அவர்கள் நினைவு தட்டும்போது, கண்களில் நீர் முட்டும். தெருப்படலையைத் திறக்கும் ஒவ்வொரு கணமும் அவர்களது உடைகள், அவர்களது சாயலின் நிழலாட்டங்கள். அவர்களை ஒத்தவர்களது சாயல்களைக் காணும் ஒவ்வொரு கணத்திலும் தம் புறையடித்துப்போன கண்களைக் கூர்மையாக்கித் தேடும் தாய்மார்கள். தெருப்படலையைத் திறக்கும் ஒவ்வொரு கணமும் அவர்கள் வீதியைப் பார்க்கத்தான்போகிறார்கள். ஒவ்வொரு நிழலசைவையும் கூர்ந்து கவனிக்கத்தான்போகிறார்கள்.

அந்த ஊர் எந்த இரைச்சலுமின்றி நிசப்தமாக இருக்க விரும்பியது. அந்த ஊருக்குள் ஒரே ஒரு வீடு மட்டும் களியாட்டத்தின் உச்சத்தில் இருந்தது. அது விக்டரின் வீடு.

கிருஸ்ணபுரிக்குள்ளிருந்த ஒரே ஒரு சிங்களக் குடும்பம் விக்டருடையது. சிவாவின் குடும்பம் வாடகைக்கு இருந்த கோணமலையரின் வீட்டுக்கும் சாத்திரியார் அம்மாள் வளவுக்கும் நடுவில் சிறிமாபுரத்தை அண்டியிருந்த வீடு அவனுடையது. விக்டர் குருநாகல் பகுதியைச் சேர்ந்தவன். செல்வச்செழிப்பில் மிதப்பவன். அரச தொழில் நிமித்தம் திருகோணமலைக்கு வந்தவன். வாடகை வீட்டில் வசிப்பதை கௌரவக் குறைவாக நினைப்பவன். நகரத்துக்குள் காணியோ வீடோ விலைக்கு வாங்கமுடியாதுபோனது அவனுக்கு. நகரத்தை அண்டிய அந்தப் பகுதியில் நொத்தாரிசு ஒருவருடைய வெற்றுக்காணியை அதிக விலை கொடுத்து வாங்கி, பெரிய கல்வீடாகக் கட்டிக்கொண்டு, தன் குடும்பத்துடன் குடிவந்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அங்கு குடிவந்தபோது அந்த ஊருக்குள் அரை குந்து வைத்த ஓலைக்குடிசை வீடுகள்தான் இருந்தனவாம். அமுக்கர் சம்மாட்டியின் மெத்தைவீடுகூட பின்னர்தான் கட்டப்பட்டதாம். அவன் தன் மனைவிக்கு சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொடுத்தபோது ஊரே கூடிநின்று வேடிக்கை பார்த்ததாம். அப்போது ஆண்கள் ஓட்டுவதற்கே அந்த ஊரில் சைக்கிள்கள் குறைவாகத்தான் இருந்ததாம். விக்டர் யப்பான் தயாரிப்பான சிவப்புநிற யமகா மோட்டார்சைக்கிளில்தான் நகர்வலம் வருவான். அவன் சிறிமாபுரத்துச் சனத்தையோ கிருஸ்ணபுரிச் சனத்தையோ கணக்கிலும் எடுப்பதில்லை. அவர்களுடன் தொடர்பும் வைத்துக்கொள்வதில்லை. அவனைப்பொறுத்தவரையில் இந்த இரண்டு ஊர்க்காரர்களும் வாழ்க்கையை அனுபவிக்கத்தெரியாத ஜடங்கள். பஞ்சப் பரதேசிகள்.

சிறிமாபுரக்காரர்களும் சரி, கிருஸ்ணபுரிக்காரர்களும் சரி, விக்டரை ஒரு சிங்களவனாகக் கருதுவதே இல்லை. அவன் தன் நட்புவட்டங்களைத் தமிழ், சிங்கள வேறுபாடின்றி, உயர் அரச அதிகாரிகள், வர்த்தகர்களுடன் மட்டுமே வைத்துக்கொள்பவன். விக்டரின் வீடு எப்போதும் களியாட்டத்தில் மூழ்கியேகிடக்கும். விக்டர் தினமும் ஏதாவது ஒரு நிகழ்வை அல்லது காரணத்தைக் களியாட்டத்துக்கெனத் தேடிக்கொண்டேயிருப்பான். படுகொலைகள், ஊரடங்குச்சட்டம், கர்த்தால் என இரண்டு சமூகங்களும் திணறிக் கொண்டிருந்த நாட்களில்கூட விக்டரின் வீட்டில் களியாட்ட நிகழ்வுகள் நிகழ்ந்தவண்ணம்தான் இருந்தன.

விக்டரின் கொண்டாட்ட நிகழ்வுகள் ஒரு நாளுடன் முடிவடைந்துபோவதில்லை. சில வேளைகளில் இரண்டு மூன்று நாட்கள்கூட தொடர்வதுண்டு. அன்றும் அப்படித்தான் நிகழ்ந்து கொண்டிருந்தது. இது விக்டரின் மனைவியின் அறுபதாவது பிறந்தநாள் கொண்டாட்டம். பொக்ஸ் செட், வர்ண மின்குமிழ்களின் ஒளிர்வு, பைலாப் பாடல்களோடு நடன நிகழ்வுகளெனக் களியாட்டம் உச்சநிலையிலிருந்தது. இரண்டாவது நாளாகத் தொடர்ந்து கொண்டிருந்தது. இரவு பதினொரு மணியைத் தாண்டியும் களியாட்டம் முடிவுக்கு வருவதாக இல்லை. இவ்வளவு நாட்களாகப் பொறுத்த அந்த ஊர் இன்று விக்டரை மன்னிக்கும் மனநிலையில் இருக்கவில்லை. குறிப்பாக ஜெகாண்ணன் விக்டரை மன்னிக்கும் மனநிலையில் இருக்கவில்லை. ஏனென்றால் குட்டியண்ணன் ஜெகாண்ணனின் தம்பி.

''இ... இ... வன்... ன்ன்ன்... ட... கொ... கொ... ட்டத்த... அ...அ... டக்... கோ... கோ...ணும்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகாண்ணன் கோபத்தின் உச்சத்தில் தன் கைவிரல்களைப் பொத்தி ஈரப்பிலாமரத்தில் குத்தினார். மூத்தம்மாச்சியின் ஈரப்பிலாமரத்துக்குக்கீழ் பவன், சிறி, கரிகரன், சிவா என ஒரு கூட்டம் குழுமி நின்றிருந்தது. அங்கு நின்றவர்கள் ஜெகாண்ணனின் கோபத்தைத் தணித்துவிட முயற்சித்துக்கொண்டிருந்தார்கள். விக்டர் செல்வாக்குள்ள மனிதன், அவனைப் பகைத்தால் வாழ்நாள் முழுவதும் ஜெயில் கம்பியெண்ணவைத்துவிடுவான் என்ற பயம் ஊருக்குள் இருந்தது. சிவா ஜெகாண்ணனைத் தனிமையில் சந்திக்க விரும்பினான். அதற்கான சந்தர்ப்பத்துக்காக அவன் காத்திருந்தான்.

''ஜெகா... அவன்ட சேட்டை இண்டைக்கு நேற்றா... நெடுகத்தானே பாக்கிறம்... அவனோட கொழுவி ஒண்டும் நடக்கப் போறதில்ல... முதல்ல வீட்ட போய் அம்மாவ, தங்கச்சியாக்கள கவனி... இனி அவங்கள கவனிக்கிறதுதான் முக்கியம்...''

பவன் பக்குவமாக ஜெகாண்ணனை வீட்டுக்கு அனுப்ப முயற்சித்தார். ஜெகாண்ணன் கடப்பைத் திறந்து வீட்டுக்குப்போகும் ஒழுங்கையில் நடந்தார்.

''ஆராவது பின்னால போங்கடா... அவன் வீட்ட போகாம வேறெங்கையும் போகப்போறான்...''

பவன் சொன்னார். சிவா சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள முடிவெடுத்தான்.

''அவரோட நான் போறன்...''

சிவா ஜெகாண்ணனுக்குப் பின்னால் அமைதியாகப் போனான். ஜெகாண்ணன் வீட்டுக்கடப்பை நெருங்கினார். சிவா மெதுவாக முனகினான்.

''அண்ணாச்சி...''

''ம்...''

''என்னட்ட பெற்றோல் பொம் இருக்கு...''

''எ...எ...ன்ன்ன்...ன''

''என்னட்ட பெற்றோல் பொம் இருக்கு... நாங்க கிட்டப்போய் முகத்தக் காட்டத் தேவையில்ல... எல்லாச் சனமும் படுத்திற்று... கள்ளுத்தவறணை அம்மாச்சியின் மூலக்குத்தில நிண்டு அடிச்சாப் போதும்... நீங்க அடிக்காட்டியும்... நான் அடிக்கிற முடிவோடதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கன்... கொழுத்திவிடுறதுக்குத்தான் ஆள் இல்ல... நானே கொழுத்தி... நானே எறியிரது கஸ்டம்... சிலவேள... கையில வெடிச்சிற்றா பிரச்சினையாப் போகும்...''

''எ... எ.... ங்ங்க... இ...இ... ருக்க்...கு...''

''வாங்க காட்டுறன்...''

இப்போது சிவாவைப் பின்தொடர்ந்துபோனார் ஜெகாண்ணன். சிவா கள்ளுத்தவறணை அம்மாச்சியின் பின்வேலிக்குள்ளால் புகுந்துபோனான். ஜெகாண்ணன் பின்தொடர்ந்தார். கள்ளுத்தவறணை அம்மாச்சியின் கக்கூசுடன் இருந்த கொய்யாமர அடிப்பொந்துக்குள் கைவிட்ட அரியம், இரண்டு குண்டு பல்புக்களை வெளியே எடுத்தான். பின் துழாவி தீப்பெட்டியையும் எடுத்துக்கொண்டான்.

''வெ... வெ... டிக்க்...கு... மா...''

தாழ்ந்த குரலில் கேட்டார் ஜெகாண்ணன். சிவாவும் தாழ்ந்த குரலில் சொன்னான்.

''வெடிக்கும் அண்ணாச்சி... நம்புங்க... நீங்க உயரமான ஆள்... இடது கைப்பழக்கமுள்ளதால... உங்களால வேலியத்தாண்டி... ஒழுங்கையையும்தாண்டி... எறிய ஏலும்... மற்றது அண்ணாச்சி... விக்டர்ற வீட்டோட பதிவான செவ்விளனிமரம் இருக்கு... நல்லாக் காஞ்ச மட்டைகளும், பாளைகளும் இருக்கு... அத இலக்கு வைச்சு அடிச்சா நிண்டு பத்தும்...''

ஜெகாண்ணன் சிவாவைக் கூர்ந்து பார்த்தார். இருவர் முகத்திலும் புன்னகை ஒன்று மலர்ந்து பின் இறுகியது. இருவரும் கள்ளுத்தவறணை அம்மாச்சியின் மூலைக்குத்துக்குப் போனார்கள். A.E. மனோகரனின் சின்னமாமியே பொக்ஸை அதிரவைத்துக் கொண்டிருந்தது. வர்ண மின்விளக்குகள் பற்றிப்பற்றி அணைந்து கொண்டிருந்தன. ஜெகாண்ணன் இலக்கை நோட்டம் விட்டார். வேலிதாண்டி எறியும்போது இடையில் தடுப்பதற்கு மரங்கள் எதுவும் இல்லாத இடத்தில் நின்றுகொண்டார். சிவா மணலைக் குவித்து ஒரு பெற்றோல் பொம்மை விழுந்துவிடாதபடி மணலில் நிறுத்திவைத்தான். ஒரு பெற்றோல் பொம்மை ஜெகாண்ணனின் கையில் கொடுத்தான். அவர் தலையாட்டியதும் சிவா தீக்குச்சியைப் பெட்டியில் உரசித் திரியைப் பற்றவைத்தான். திரியில் தீப்பற்றிய கணம் ஜெகாண்ணன் இடதுகையால் இலக்கை நோக்கி பெற்றோல் பொம்மை வீசினார். திரியில் பிடித்திருந்த தீ, ஒழுங்கைத் தாண்டுவதற்கு முன்னமே அணைந்துவிட்டதை இருவரும் கண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கை நோக்கிப் போன பெற்றோல் பொம் விழுந்து உடைந்த சத்தம் அவர்களுக்குக் கேட்கவில்லை. A.E. மனோகரனின் குரல் அதற்கு இடம்கொடுக்கவில்லை.

''அண்ணாச்சி அவசரப்படாதீங்க... இன்னொண்டு இருக்கு... நான் கொழுத்திறன்... திரியில நெருப்பு கொஞ்சம் பிடிக்கும் மட்டும் வைச்சிருந்துபோட்டு எறியுங்க... அதே இடத்துக்கே...''

தாழ்ந்த குரலில் சிவா சொன்னான். ஜெகாண்ணன் தவறு தன்னுடையது என்பது போல தலையை ஆட்டினார். மணலிலிருந்த இரண்டாவது பெற்றோல் பொம்மை ஜெகாண்ணன் கையில் எடுத்துக்கொண்டார். சிவா ஜெகாண்ணனின் முகத்தைப் பார்த்து அவசரப்படவேண்டாம் என்பது போல கையைக் காட்டினான். ஜெகாண்ணன் தலையை அசைத்துக்கொண்டார். மீண்டும் சிவா தீக்குச்சியை உரசித் திரியைப் பற்றவைத்தான். ஜெகாண்ணன் பொறுமையாக இருந்தார். திரியில் பிடித்த தீ பற்றிப் பின் வட்டவிளிம்புகளுக்குப் பரவத் தொடங்கியது. கொஞ்சம் பிரகாசமாக எரிந்தது. ஜெகாண்ணன் இலக்கைக் குறிவைத்து எறிந்தார். திரி அணையாது ஒழுங்கைத் தாண்டிப்போனது பெற்றோல் பொம்.

''கும்...''

அவர்கள் எதிர்பார்க்கவில்லை. பெரும் தீச்சுவாலை ஒன்று அந்தரத்தில் எழுந்து வான் நோக்கிச் சுடர்விட்டு எரிந்தது. இருளில் நின்றிருந்த இருவர் மீதும் வெளிச்சம் பகல்போல படர்ந்தது. அவர்கள் ஓடத்தொடங்கினார்கள். கள்ளுத்தவறணை அம்மாச்சியின் வேலிதாண்டிப் பாய்ந்து ஓடி இருளுக்குள் நின்று திரும்பிப் பார்த்தார்கள். செவ்விளனி வட்டு பெரும் தீப்பந்தம் போல எரிந்துகொண்டிருந்தது. விக்டர் வீட்டு மின்சார வயர் துண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். A.E. மனோகரனின் குரல் அடங்கிப்போனது. விக்டர் வீட்டுக்குள் இருள் படிந்தது. வெளியே தீப்பந்தம்போல் தென்னை வட்டு சுடர்விட்டு எரிந்துகொண்டிருந்தது.

## 3.13

சிவசுப்பிரமணியம் சிவாவின் அப்பா. தனிச்சிங்களமொழிச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதும் தன்னுடைய பொலீஸ் உத்தியோகத்தைத் தூக்கி எறிந்துவிட்டு வெளியேறி வந்தவர். பெரியாரியவாதி. குற்றவாளிகளின் மனதைப் புரிந்துகொள்வதற்காகச் சுயமாக உளவியல் படித்தவர். ஈ.வெ.ரா. பெரியாரின் படத்தை வீட்டுச்சுவரில் தொங்கவிட்டிருந்தார். 'வழிபடுவதற்கு இல்லை அறிந்து கொள்வதற்கு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வாசகத்தைப் படத்துக்குக்கீழே ஒட்டியும் வைத்திருந்தார். அவர் தனியார் நிறுவனம் ஒன்றில் இரவுநேரக் காவலாளியாக இருந்தார். பகலில் கிடைக்கும் வேலை எதுவாக இருந்தாலும் செய்வார். எந்த கௌரவ வேசங்களும் அவரைப் பாதிப்பதில்லை. தன் பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தன் உடல்நிலை, வயதையும் தாண்டி கடுமையாக உழைத்துக் கொண்டிருப்பவர். மென்மையாக கதைக்க, சிரிக்கத் தெரிந்தவர். மற்றவர்கள் தனக்கு அறிவுரை சொல்வதையோ மற்றவர்களுக்குத் தான் அறிவுரை சொல்வதையோ விரும்பாதவர். அவர் தன் பிள்ளைகளுக்கு நந்தன், லோஜி, சிவா, திரு எனச் சுருக்கமான பெயர்களையே வைத்திருந்தார். தன் பிள்ளைகளிடம் வெள்ளாள சாதித்திமிர், அவர்கள் பெயர்களில்கூட வந்துவிடக்கூடாது என நினைத்தவர். அவர் மற்றவர்களுடன் கதைத்துக்கொண்டு நிற்பது என்பது மிக அரிதானது. மேலதிக வருமானம் குறைந்துவிடும் எனத் தெரிந்தும் அவர் தன் இரவுநேரக் காவல் கடமையைப் பகல் நேரத்துக்கு மாற்றியிருந்தார். அவர் இரவு நேரங்களில் தன் பிள்ளைகளுக்கு அருகில் இருக்க விரும்பினார்.

சிவசுப்பிரமணியம் பொலீஸ்காரர் தன் வீட்டுக்கடப்பில் நின்றிருந்தார். இருள் ஒழுங்கை முழுவதையும் மூடியிருந்தது. இரவு ஒன்பது மணியைத் தாண்டிவிட்டது. இரவுச் சாப்பாட்டுக்குக்கூட சிவா வீட்டுக்கு வரவில்லை. சிவா இயல்பில் நல்லவன்தான். திடகாத்திரமான உடல் கொண்டவன்தான். அவனது கோபமும் மூர்க்கமும்தான் அவரைக் கவலைகொள்ளவைத்தது. அந்தக் கோபமும் மூர்க்கமும் ஒரு இலக்கை அல்லது இலட்சியத்தை அடையும்முன் அவனை அழித்துவிடக்கூடாது என்பதே அவரது இப்போதைய கவலையாக இருந்தது. அவரால் அதைச் சீர்செய்ய முடியாது என்பது அவருக்குத் தெரியும்.

அவர் மெல்ல கடற்கரை நோக்கி நடக்கத் தொடங்கினார். விக்டர் வீட்டு மதிலை நெருங்கியதும் நின்றார். செவ்விளனி மரத்தின் வட்டு தீப்பிடித்து எரிந்ததால், கருகி, அழுகி தலைகவிழ்ந்து தொங்கிக்கொண்டு கிடந்தது. இன்னும் கீழே விழுந்துவிடவில்லை. விக்டரின் வீடு நிரந்தர அமைதியுடன் இருளில் மூழ்கிப்போய்விட்டது. சீண்டுவாரற்றுப் பகலிலும் உறங்கித்தான்கிடந்தது. தீயினால் துண்டிக்கப்பட்ட மின்சார வயர் தொங்கியபடியேகிடந்தது. விக்டர் இந்த வீட்டைவிட்டுப் போய்விட்டான். அந்த வீட்டை மட்டுமல்ல, மாவட்டத்தைவிட்டே போய்விட்டான். தன் அரச உத்தியோகத்தை மாற்றல் எடுத்துக்கொண்டு தன் சொந்த மாவட்டமான குருநாகலுக்குப் போய்விட்டான். அவன் பயன்படுத்திய சிவப்புநிற யமகா பைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிக்கோவில், டபிள் ஸ்டாண்டில் விட்டபடியே நின்று கொண்டிருக்கிறது. அந்தச் சம்பவம் நிகழ்ந்த இரவின், விடியற்காலைப் பொழுதில்தான், அவன் அந்த வீட்டைவிட்டுப் போனான். அவன் தன் குடும்பத்துடன் அந்த வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது கையில், உடுப்புப்பை மட்டுமே இருந்ததாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள். நண்பர் ஒருவரின் காரில் தன் குடும்பத்தை ஏற்றிக்கொண்டு குருநாகலுக்குப் போய்விட்டான். அவனது உடைமைகள் அந்த வீட்டுக்குள் போட்டுப் பூட்டப்பட்டவண்ணமே இருந்தன. நான் திரும்பி வருவேன் என்று ஊருக்கு விடுக்கும் செய்தியா அல்லது இவை எல்லாம் எனக்குப் பொருட்டே இல்லை என்ற மமதையா என ஊகிக்கமுடியாதிருந்தது.

சிவசுப்பிரமணியம் பொலீஸ்காரர் நடந்துவந்து பூவாவின் காப்பென்டர் மால் அடியில் நின்றார். குப்பி விளக்கின் வெளிச்சத்தில், அரியம் கதிரைக்கால் சட்டம் ஒன்றைப் பிடித்திருக்க, பூவா திறப்பனத்தால் அந்தச் சட்டத்தில் ஓட்டை போட்டுக் கொண்டிருந்தார். சிவாவின் வயதை ஒத்தவன் அரியம். சிவா குள்ளமாக தடித்த உடல் கொண்டவன். அரியம் மெல்லிய உயரமான உடல் கொண்டவன். இருவருமே திடகாத்திரமான புயங்களைக் கொண்டவர்கள். சிந்தாமணிபுரத்தில் வைத்து குண்டடிபட்டவன். சிவாவின் அப்பா அரியத்தை வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டு நின்றார். பின் கடற்கரை நோக்கி நடந்தார்.

கடற்கரை, மைதானம், மூத்தம்மாச்சியின் ஈரப்பிலாவடி, பொதுக்கிணற்றடி எல்லாம் வெறிச்சோடிக்கிடந்தன. சிவசுப்பிரமணியம் பொலீஸ்காரருக்கு மகன் சிவாவின் புதிய சேர்க்கை யாருடன் எனக் கண்டுபிடிக்கமுடியாதிருந்தது. பிரதானவீதியிலிருந்த கடைத் திண்ணைகளைப் பார்த்துக்கொண்டு கள்ளுத்தவறணைப்பக்கம் நடந்தார் சிவசுப்பிரமணியம் பொலீஸ்காரர்.

''ஐஸ்பெக்டரி வளவுக்க கிடக்கானுகள்...''

''தகவலுக்கு... நன்றி ஐயா...''

அவரையும் அவனையும் தெரிந்த யாரோ, இந்த நேரத்தில் அந்தத் தகவல் அவருக்கு தேவைப்படும் என்பதை உணர்ந்தவன், அவரிடம் சொல்லிவிட்டுப்போனான். குரலை மட்டுக்கட்டமுடிய வில்லை. இருளில் அடையாளமும் தெரியவில்லை. அவர் ஐஸ்பெக்டரிப்பக்கம் நடக்கத் தொடங்கினார். இருளில் காட்டுக் கொடிகள் படர்ந்து, மூடிய கம்பிக்கட்டைகள் ஆங்காங்கே மனிதர்கள் போல காவல் நின்றன. ஐஸ்பெக்டரியின் பின்புறவேலியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டியிருந்த, ஒற்றையடிப்பாதையில் சிவசுப்பிரமணியம் பொலீஸ் நடந்துகொண்டிருந்தார். ஐஸ்பெக்டரி பின்புறம் இருந்த காவலாளி தங்கும் குடிசைக்குள், நன்றாகத் தணித்து வைக்கப்பட்ட அரிக்கண்விளக்கின் மங்கலான வெளிச்சத்தில் சிலரின் அசைவைக் கண்டார். கொடிகள் படர்ந்து தாழ்வாகக்கிடந்த, கம்பிக்கு மேலால் கடந்து காவல்குடிசையை நோக்கிப் போனார். பாதிச்சுவர் வைத்து, சுவருக்கு மேல், சதுரக்கம்பிநெற் அடித்த தகரக்காவல் குடிசைக்குள் போடப்பட்டிருந்த மேசையைச் சுற்றிச் சிலர் இருப்பதை சிவசுப்பிரமணியம் பொலீஸ் கண்டார். மேசையைச் சுற்றி இருந்தவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளவில்லை. அவர்கள்மீது படிந்திருந்த மிகக்குறைவான மம்மல் வெளிச்சத்தில், அங்கு இருந்தவர்களுக்குள் சிவாவின் உருவத்தை அடையாளம் கண்டு கொண்டார். அவர்களுக்கு நடுவே இருந்து கரகரப்பான இரைச்சலும் இடைவிட்ட சத்தமும் வந்துகொண்டிருந்தது. அது வானொலிப் பெட்டியின் இரைச்சல்.

அவர்கள் செய்தி கேட்டுக்கொண்டிருப்பதாக அவர் நினைத்தார். B.B.C, வெரிட்டாஸ் வானொலி அல்லது ஆகாசவாணிச் செய்திகள் தான் இந்த நேரத்தில் ஒலிபரப்பாகும். ஆகாசவாணி, செய்தியின் இறுதியில்தான் ஈழச்செய்திகளை வாசிக்கும். இப்போது அதற்கான நேரந்தான் என சிவசுப்பிரமணியம் பொலீஸ்காரர் கணித்தார். இலங்கைத் தமிழர்கள் யாரும் இலங்கை ''லங்காபுவத்'' செய்தியறிக்கைகளைக் கேட்பதில்லை. செய்தி கேட்கும் ஆவலில், அவர் காவல் குடிசையை நெருங்கி இருளுக்குள் நின்றார்.

அந்த வானொலிப்பெட்டி செய்தி அறிக்கை எதையும் ஒலிபரப்பிக்கொண்டிருக்கவில்லை. கரகரப்பு. சத்தமான துப்பாக்கி வேட்டோசை. சத்தம் குறைந்த எதிர்ப்பக்க வேட்டோசை. கரகரப்பு. குண்டுவெடிக்கும் ஓசை. கட்டளையிடும் குரல். கரகரப்பு. தூசணத்தால் திட்டும் சத்தம். கரகரப்பு. குண்டுவெடிக்கும் ஓசை. சிவசுப்பிரமணியம் பொலீஸ்காரருக்கு அவர்கள் செய்தி கேட்டுக் கொண்டிருக்கவில்லை என்பது புரிந்தது. டெலோ இயக்கம் திருகோணமலை - குச்சவெளி பொலீஸ் ஸ்டேசனைத் தாக்கி அழித்து, ஆயுதங்களைக் கைப்பற்றிய ஒலிநாடாவை, அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

சிவசுப்பிரமணியம் பொலீஸ்காரருக்கு இந்தியாவிலிருந்து வந்த ஒலிபரப்பொன்றில், அந்தத் தாக்குதல் செய்தியாக வாசிக்கப் பட்டபோது, இடைநடுவே, பதிவு செய்யப்பட்ட தாக்குதலின், கத்தரிக்கப்பட்ட பகுதி ஒன்று ஒலிபரப்பானது ஞாபகம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது கத்தரிக்கப்படாத தாக்குதலின் முழுப்பகுதியும் ஒலிநாடாவாக ஊருக்குள் உலாவிக்கொண்டிருக்கிறது. மேசையிலிருந்த வானொலிப் பெட்டியை உற்றுப் பார்த்தார். அது புதிதாக சந்தைக்கு வந்திருந்த, உயரம் குறைந்த, நீளம் கூடிய, இரண்டு கெசட் பீஸ் போடக்கூடிய, இரட்டைக் கதவு கொண்ட கறுத்த பெனசொனிக் டேப் ரெக்கோடர். அவர்கள் கேட்டுக்கொண்டே, பல பிரதிகளாக, கெசட் பீஸ்களில் பதிவு செய்துகொண்டிருந்தார்கள். அவரது டோர்ச் லைட்டில் இருந்த மூன்று எவறடி பெற்றிகள் காணாமல் போயிருந்தது ஞாபகம் வந்தது.

சிவசுப்பிரமணியம் பொலீஸ்காரர் சிலகாலம் அந்த பொலீஸ் ஸ்டேசனில் கடமையாற்றி இருக்கின்றார். அப்போது அவர் இளைஞனாக இருந்தார். அப்போது ஒரு சிறிய பொலீஸ் ஸ்டேசனாகத்தான் அது இருந்தது. அவர் கடமையிலிருந்த காலத்தில் எட்டுப் பேர்தான் கடமையில் இருந்ததாக ஞாபகம். கடற்கரைக்கும் பிரதானவீதிக்கும் இடையில் காட்டுப்பகுதிக்குள் அமைக்கப்பட்டிருந்தது. கடல்வழியாக நடைபெற்றுக்கொண்டிருந்த கள்ளக் கடத்தல்களைத் தடுப்பதற்கும் கண்காணிப்பதற்குமாக அமைக்கப்பட்ட பொலீஸ் ஸ்டேசன் அது. அவர்கள் அப்போது சில கள்ளக்கடத்தல்காரர்களைப் பிடித்திருக்கிறார்கள். கள்ளக்கடத்தல் பொருட்களை மீட்டிருக்கிறார்கள். அவர் கடமையிலிருந்த காலத்தில் ஒரு தடவை இல்லை இரண்டு தடவை அந்தப் பொலீஸ் ஸ்டேசன் தாக்கப்பட்டது. நாட்டு வெடிகுண்டுகள், கட்டுத்துவக்குகள் சகிதம் தாக்குதல் நடாத்தியிருந்தார்கள். தாக்குதல் நடத்தியவர்கள் கள்ளக்கடத்தல்காரர்கள். அன்று பொலீஸ்காரர்கள் அந்தத் தாக்குதலை முறியடித்து, சில கடத்தல்காரர்களைக் கைதுசெய்துமிருந்தார்கள். பின் அந்த பொலீஸ் நிலையம் விஸ்தரிக்கப்பட்டு, டெலோ இயக்கம் தாக்குதல் நடத்தியபோது இருபதுக்கும் மேற்பட்ட பொலீஸ்காரர்கள் அங்கு இருந்ததாக அறிந்துகொண்டார். டெலோ இயக்கம் பெரும் தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றிக்கொண்டதாகத்தான் செய்திகள் சொல்கின்றன.

''தம்பி... ஐயாச்சி சிவா...''

தணிவான குரலில்தான் அவர் கூப்பிட்டார். டேப்ரெக்கோடரின் இரைச்சல் நின்றுவிட்டது. அரிக்கண் விளக்கின் மங்கிய ஒளியும் அணைந்தது. அந்தக் காவல் குடிசைக்குள்ளிருந்து இருளுடன் இருளாகச் சில உருவங்கள் வெளியே வந்தன.

''நான் சிவாட அப்பா...''

''இங்க எல்லாம் ஆர் தேடிவரச் சொன்னது...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயாச்சி நீங்க சாப்பிட இல்ல... நீங்க சாப்பிட இல்ல எண்டு அக்கா சாப்பிட இல்ல... அக்கா சாப்பிட இல்லை எண்டு நான் சாப்பிட இல்ல... நான் சாப்பிட இல்ல எண்டு அம்மா சாப்பிட இல்ல...''

சிவா அமைதியாக ஐஸ்பெக்டரியின் பிரதான வாசலை நோக்கி நடந்தான். பின்னால் சிவசுப்பிரமணியம் பொலீஸ்காரர் போனார். இருளுக்குள் அவர்கள் போவதை, காவல் குடிசைக்கு வெளியே நின்றவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

## 3.14

தான் அந்த வளவுக்குள்ளிருந்து வெளியேறப்போவதில்லை என்று சாத்திரியார் அம்மாள் பிடிவாதமாக மறுத்துவிட்டாள். கள்ளுத்தவறணை அம்மாச்சி வந்து, சத்தம் இல்லாது அவர்களை எழுப்பியபோது இரவு பதினொரு மணியை நெருங்கியிருந்தது. ஆந்தை ஒன்று இடைவிடாது தென்னையிலிருந்து அப்போது கத்திக்கொண்டிருந்தது.

''இரவு மூண்டாங்கட்டப் பக்கம் இருந்து... ஊருக்கு வந்த செட்டியாரை... சிறிமாபுரத்தில வைச்சி வெட்டிக்கொண்டு போட்டு... டயர் போட்டு பத்தவச்சிருக்காங்கள்... பிள்ளைகள் தகப்பனக் காண இல்ல எண்டு தேடித் திரிஞ்சிருக்குதுகள்... இப்பதான் தகவல் கிடைச்சிருக்கு... பொலீஸ் வந்து பொடியக் கொஸ்பிட்டலுக்கு கொண்டுபோகுது... இயக்கம் சிறிமாபுரத்த தாக்கப்போகுதெண்டு ஊர் முழுக்க கதை பரவி இருக்கு... கையில கிடச்சத... மூட்டமுடிச்சா கட்டிக்கொண்டு கடற்கரைக்குப் போங்க... சனம் படகில கடலால வெளியேறிக்கொண்டு இருக்குது...''

தொடர்ச்சியான நெருக்கடிகளால் ஏற்கனவே அந்த கிருஸ்ணபுரிச் சனம் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறிக்கொண்டுதானிருந்தது. வசதியிருந்தவர்கள் நகரப்பக்கமாகவும் சிலர் சாம்பல்தீவு, நிலாவெளிக் கிராமப்புறப்பக்கமாகவும் தங்களது வசதிக்கு ஏற்ப வெளியேறிக்கொண்டுதான் இருந்தார்கள். ஊருக்குள்ளிருந்து குடும்பம் குடும்பமாக சனம் காணாமல் போய்க்கொண்டுதான் இருந்தது. அரியத்தின் அம்மாவும் கையில் கிடைத்ததை மூட்டை முடிச்சாகக் கட்டிக்கொண்டு, தன் இரண்டு பிள்ளைகளையும் பாதுகாக்கவெனப் புறப்பட்டுவிட்டாள். சாத்திரியார் அம்மாள், சுக்குறு நாயர், கௌரிப் பெட்டை, காப்பெண்டர் பூவா போன்றவர்கள் மட்டுமே அந்த வளவுக்குள் மிஞ்சிக்கிடந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கடற்கரைக்கு வந்தபோது பெரும்பாலான சனம் வெளியேறிவிட்டிருந்தது. ஒரு சில சனந்தான் இன்னும் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தது. கடலில் அலியா போட்டுகள் நின்று கொண்டிருந்தன. கரையிலிருந்து சிறிய தோணிகளில் சனத்தை ஏற்றிக் கடலில் நின்றுகொண்டிருந்த பெரிய அலியா போட்டில் சனத்தை மாற்றிக்கொண்டிருந்தார்கள் மீனவர்கள். அரியம் குடும்பமும் தட்டுத்தடுமாறி சிறிய தோணியில் இடம்பிடித்துப்போய்க் கடலில் நின்றிருந்த பெரிய அலியா போட்டில் ஏறிக்கொண்டது. அலியா போட் நீண்ட நேரமாக அந்த இடத்திலேயே கடலில் தத்தளித்தபடி கிடந்தது. போட் ஓடுவதற்கு முன்னமே வதனி வாந்தி எடுத்துச் சோர்ந்து களைத்துப் படகுக்குள் சுருண்டு படுத்துக்கிடந்தாள். சிறிய தோணி ஒன்று மீண்டும் கரையிலிருந்து வந்துகொண்டிருந்தது. அந்தத் தோணியிலிருந்த டீசல் கலன் ஒன்றை அவர்கள் அலியா போட்டுக்குள் ஏற்றினார்கள். அப்போதுதான் சனத்துக்குப் புரிந்தது டீசல் இல்லாமல்தான் படகு கடலில் தத்தளித்துக்கொண்டு கிடக்கிறது என்பது.

படகு வேகமெடுத்து அலைகளில் மேலும் கீழுமாகத் தாழ்ந்து மிதந்து நிலாவெளிப்பக்கம் போய்க்கொண்டிருந்தது. போய்க்கொண்டிருந்த படகு இடைநடுவில் இஞ்சின் நின்றுவிட கடலில் தத்தளித்தது. சனம் எஞ்சின் கோளாறா எனப் பயந்தது. படகோட்டிகள் வாயில் கை வைத்து அமைதியாக இருக்கும்படி கட்டளையிட்டார்கள். நிலாவெளிப்பக்கமிருந்து கடற்படைத்தளத்தை நோக்கி கன்போட் ஒன்று இரைச்சலுடன் போய்க்கொண்டிருந்தது. அவர்களுக்கு இரைச்சல் மட்டுமே கேட்டது. கன்போட் கண்ணில் படவில்லை. கன்போட் அவர்களுக்கு மிக நெருக்கமாகத்தான் தாண்டிப் போனதாக படகோட்டிகள் சொன்னார்கள்.

கிருஸ்ணபுரியைப் போலவே இங்கும் கரை தெரியும் தூரத்தில் அலியா படகு கடலில் நின்றிருந்தது. கரையலிருந்து துடுப்பு வலித்துக் கொண்டு தோணிகள், அலியா போட்டை நெருங்கிவந்து நின்றன. சனம் தோணிகளில் ஏறிக் கரையை நோக்கிப் போனது. அரியத்தின் குடும்பம் ஏறிய தோணி கரையை நெருங்கிக்கொண்டிருந்தது. கடற்கரை முழுவதும் சனம் திருவிழாவைப் போல குவிந்துகிடந்தது. தரை வழியாக சைக்கிளில் போனபோது கொண்டுபோன மூட்டையைவிட சிறிய மூட்டையுடன் அரியத்தின் அம்மா, வளர்ந்த தன் பிள்ளை களுடன் நிலாவெளிக் கடற்கரையில் இறங்கினாள்.

✿✿✿



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

## 4.1

அடம்போடை மலைச்சாரல். மதிய நேர வெயில். மினுமினுக்கும் காய்ந்த மஞ்சள்நிற முள்ளிகள். ததும்பும் கானல் நீர். அத்திமர நிழலில் பாறையில் அரியம் படுத்துக்கிடந்தான். அவனைச்சூழ காசிப்பிள்ளை ஐயாவின் பட்டிமாடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. வயல்வெளிகளை அண்டி அரண்போல் காடு சூழ்ந்துகிடக்கிறது. உப்புவெளிபோல் இங்கு சிறிமாபுரம் தாண்டி காலையில் எழும்பி பள்ளிக்குப்போகும் பதற்றம், பயம், சோதனை எல்லாம் இங்கு இல்லை. சிறிமாபுரத்துச் சிங்களவர்கள் ஊருக்குள் புகுந்து வெட்டுவார்கள் என்ற பயம் இங்கு இல்லை. இங்கு அதிகமாகத் தமிழ்க் குடும்பங்கள்தான். நிலாவெளிக்குக் கடலால் அகதியாகத் திரும்பி வந்தபிறகு காசிப்பிள்ளை ஐயாவின் பட்டியை மேய்ப்பதில் காலம் போகிறது. வீட்டுச்செலவுக்கு இப்போதைக்கு வேறு வழியும் இல்லை. கைத்துப்பாக்கி, நோட்டிஸ் என இரகசியமாக இயங்கும் இயக்கத்தைத்தான் அரியம் அங்கு கண்டான். இங்கு சாரம் உடுத்தி பக்கி சேட் அணிந்த இயக்க அண்ணாச்சிமார் துவக்குகளுடன் சைக்கிளில் திரிகிறார்கள். சில இயக்க அண்ணாச்சிமார் கடத்திய பச்சைநிற, பால் ஏற்றும் பிக்கப் வாகனத்தில் இயந்திரத்துப்பாக்கியை வெளியே தெரியும்படி வைத்துக்கொண்டு திரிகிறார்கள். சாம்பல்தீவு பாலத்தில் இயக்கம் சென்றி அடித்திருக்காம். ஆமி இறங்கினா இயக்கம் அடிச்சு நிப்பாட்டுமாம் என்று ஊருக்குள் கதை பரவியிருந்தது.

''கிழிச்சானுகள்... அரசாங்கம் என்ன கச்சைக்க கைவச்சிற்று, சும்மா பாத்துக்கொண்டிருக்கும் எண்டு நினைச்சாங்களா... துவக்க கவட்டுக்க செருகீற்று பொட்டையலுக்கு முன்னால போய் நிண்டாச் சரியா... என்டைக்கு பொம்பிளைக்காக துவக்க தூக்கி... இந்தியாவில நடுத்தெருவில நிண்டு ஆளயால் சுட்டாங்களோ அண்டைக்கே இவங்கள்ள நம்பிக்கை விட்டுப்போச்சு...''

பெரியையாவின் வீட்டுச்சந்தியிலிருக்கும் பெரிய கூலாம்பழ மரத்தடிக்குக்கீழ் நின்று இப்படியான அதிரடிப் பேச்சுக்களோடுதான் கனகையாண்ணன் அரியத்துக்கு அறிமுகமானார்.

''மெய்யே... நீ கோபாலபுரம் இந்திரன்ட மகன்தானே... மெம்பர் அரசரெத்தினத்திட பேரன்தானே... உண்ட கொப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பிடிச் செத்தான், உண்ட அப்பம்மா எப்பிடிச் செத்தாள்... எண்டு உனக்குத் தெரியுமோ... எல்லாம் அவலச் சா... அது சரி... உண்மையில் உண்ட கொப்பன் ஆர் எண்டு உனக்குத் தெரியுமோ..."

எப்போதும் இறுக்கமான மோதிரத்தைக் கழட்டுவதுபோல தன் விரல்களை இழுத்துவிட்டுக்கொண்டே, கேள்விகேட்பது போல கதைத்துக்கொண்டிருந்தார் கனகையாண்ணன். அவனைக் காணும்போதெல்லாம் இப்படித்தான் கனகையாண்னன் தன் பூர்வீகம் பற்றி அடிக்கடி விசாரிப்பதை வழக்கமாக்கிக்கொண்டிருந்தார். அரியம் அவரைக் கண்டு அச்சப்படவும் ஒதுங்கவும் தொடங்கினான்.

கோபாலபுரத்து துரையண்ணன் அப்படி எல்லாம் இல்லை. அவர் தபால்கந்தோரில் பியூனாக இருக்கிறார். அவருக்கு ஏதோ தீராத வருத்தம் இருப்பதாகப் பேசிக்கொண்டார்கள். உடல் மெலிந்து கோறையான நெஞ்சுடன், சைக்கிளில் ஏறி ஓடிக் கடிதம் கொடுப்பதைவிட பெரும்பாலும் உருட்டிக்கொண்டு போய்த்தான் கடிதங்களை வீடுகளில் சேர்ப்பித்தார். அதனால்தான் அவர் கலியாணம் கட்டிக்கொள்ளவில்லை எனவும் பேசிக்கொண்டார்கள். அவர் அரியத்தின் அம்மாவுக்கு உறவுக்காரர். அவர்தான் அவர்கள் அகதியாக நிலாவெளிக்குத் திரும்பி வந்தபிறகு, வந்து பார்த்துக் குடிசையைத் திருத்த உதவியெல்லாம் செய்திருந்தார். ஆனால் அரியத்தின் அம்மாவுக்கு அவரைப் பிடிப்பதில்லை.

இயக்கம் சிறிமாபுரத்தைத் தாக்கவிருப்பதால் ஆபத்துவரும் என்றுதான் கிருஸ்ணபுரியில் இருந்தவர்களும் படுக்கை, பத்தாம் நம்பரில் இருந்தவர்களும், இரவோடு இரவாக அகதியாக மீனவர்களின் படகுகளில் ஏறி ஓடினார்கள். சில படகுகளை கன்போட் துரத்தியதால் அவை மூதூர்ப்பக்கம் தப்பிப்போயின. சில படகுகள் முல்லைத்தீவுப்பக்கம் கரைதட்டின. சில பெரிய அலியா போட்டுக்கள் ஒரேயடியாக இந்தியா போனதாகவும் சொன்னார்கள். சாத்திரியார் அம்மாளுடன் சுக்குறுநாயரும் கௌரிப் பெட்டையும் வேறு சிலரும் படகு ஏறாது கால்நடையாக பாலம்பெட்டாறு, தம்பலகாமம் எனத் தங்கித்தங்கிக் கந்தளாய்ப்பக்கம் போனதாக அரியம் கேள்விப்பட்டிருந்தான். கந்தளாயில் சாத்திரியார் அம்மாளுக்கு உறவுகளும் பூர்வீகக் காணித்துண்டும் இருப்பதாகச் சொன்னார்கள். கல்வீட்டுக்காரர்கள் பெரும்பாலும் இங்குதான் அகதியாக வந்திருந்தார்கள்.

மூத்தம்மாச்சி, நடுங்கள் அம்மாச்சி, உதயன்ட அப்பா வட்டவிதாணை அம்மாச்சி, கள்ளுத்தவறணை அம்மாச்சி எல்லாரும் சகோதரமுறை உடையவர்களாக இருந்தார்கள். பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு இருந்தவர்கள் திருமணம் செய்தமுறையில் இங்குள்ளவர்களுக்கு உறவுக்காரர்களாகவும் இருந்தார்கள். அரியம் இப்போது அவர்கள் உறவுமுறைகளை அறியத் தொடங்கியிருந்தான். அங்கிருந்து வந்த கல்வீட்டுக்காரர்கள் எல்லாம் பெரும்பாலும் இங்கிருக்கும் உறவினர்களின் கல்வீடுகளில்தான் அகதிகளாகத் தங்கியிருந்தார்கள். இயக்கம் போட்டில இரவோடு இரவாக கடலால போய் சிறிமாபுரத்தப் பார்த்து இரண்டு மூண்டு துவக்குச் சூடு வைத்துவிட்டு வந்ததாம். அலஸ்த்தோட்டப்பக்கம் கள்ளுக் குடிக்க வந்த தளசையையும் இன்னொரு சிறிமாபுரத்துக்காரரையும் இயக்கம் கடத்தி காரியத்தை முடிச்சிட்டுதாம் என்ற கதையும் ஊருக்குள் பரவியிருந்தது. சிறிமாபுரக்காரர்களின் அட்டகாசம் கொஞ்சம் அடங்கியிருப்பதாக அரியம் கேள்விப்பட்டிருந்தான்.

கள்ளுத்தவறணை அம்மாச்சியுடன் இங்கிருந்து போகும் போது பார்த்த அடம்போடைமலையின் பிரமாண்டமும் பிரமிப்பும் உயரமும் சிறுத்துவிட்டதுபோலத்தான் அரியத்துக்கு இப்போது தோன்றியது. ஆனாலும் அடம்போடைமலை உச்சியில் வேர்களின் பிடியில் சிக்கித் தொங்கிக்கொண்டிருக்கும் கற்பாறை அரியத்தை அச்சுறுத்திக்கொண்டுதானிருந்தது. தாங்கள் கைவிட்டுப்போன குடிசையும் கண்ணகையம்மன் கூர்முகட்டுக் கூரையும் உயரம் குறைந்து சிறுத்துவிட்டதுபோல அரியம் உணர்ந்தான். வீதிகூட அகலம் குறைந்து ஒடுங்கி நீள்வதாகத்தான் அரியத்துக்குப்பட்டது. அரியத்தைப் போலவே குலமும் சோமியும் சோதியும் வளர்ந்துவிட்டார்கள். சிந்தாமணி மூளைக்காய்ச்சல் வந்து இறந்துபோய்விட்டாள் என்ற செய்தி அரியத்துக்குக் கவலை தருவதாக இருந்தது. உப்புவெளியிலிருக்கும் போது சிந்தாமணி முகம், உடல் எல்லாம் மண் அப்பிக்கிடக்க விடியற்காலை கனவில் வந்தது அரியத்துக்கு ஞாபகம் வந்தது. ஏவரப்பெத்தாவும் நடுங்கள் அம்மாச்சியும் இப்போதும் உயிருடன்தான் இருக்கிறார்கள். தாங்கள் மூன்று பேர் தங்கிய அந்தக் குடிசையைப் பெரிதாக்கித் திரும்ப செப்பனிட்டபோதும் தமக்கைக்கும் தாய்க்கும் போதாததாக இருந்ததால் அரியம் கண்ணகையம்மன் கோயில் வெளித்திண்ணையில்தான் இரவில் தூங்குகிறான்.

அத்திமர நிழலில் பாறையில் படுத்துக்கிடந்த அரியம் வியர்வை பிசுபிசுப்பால் எழுந்து அமர்ந்தான். வயல்வெட்டை, அடம்போடைமலைச்சாரல் எங்கும் வெயில் உக்கிரமாக எரித்துக் கொண்டிருந்தது. கானல்நீருக்குள் காசிப்பிள்ளை ஐயாவின் மாடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அன்னம்மாக் கிழவி இங்குதான் எங்காவது பச்சிலைகளை முறித்துக்கொண்டிருக்கும். காசிப்பிள்ளை ஐயாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டி இவ்வளவு பெருகிக் கிடப்பதற்கு அன்னம்மாக் கிழவிதான் காரணம் என்று எல்லோரும் சொல்கிறார்கள். எப்படிப்பட்ட நோயாக இருந்தாலும் விடியவிடிய கண் முழிச்சிருந்து வைத்தியம் பார்த்து, மாட்ட விடிய எழுப்பிப் போட்டுத்தான் கிழவி மறுவேலை பார்க்கும் எனப் பெருமையாகப் பேசிக்கொண்டார்கள். அன்னம்மாக் கிழவி உடல்தசைகள் வற்றி வறண்ட தேகத்துடன் கூன்விழுந்து போயிருந்தாள். ஒரு கன்றுக்குட்டியின் எத்தலுக்குக்கூட தாங்காத தேகம். பெரியபெரிய நாம்பன் மாடுகளே அன்னம்மாக் கிழவியின் அதட்டலுக்கு அடங்கிப்போகும். சில கன்றுக்குட்டிகள் குழைவாக உரசிக் கிழவியை இடறியும் விட்டுவிடும். அரியத்தின் மீதும் அன்னம்மாக் கிழவி பாசமாகத்தான் இருந்தாள். மடிச்சீலையில் சுற்றி ஏதாவது தின்பண்டத்தைக் கிழவி மறைத்துவைத்திருக்கும். பச்சிலைகளை நெஞ்சுடன் அணைத்துப் பிடித்தபடி அன்னம்மாக் கிழவி சிவப்பு நாம்பனுடன் மல்லுக்கு நிற்பதை அரியம் கண்டான். திரும்பவும் அரியம் சோர்வுடன் அத்திமர நிழலில் கிடந்த பாறையில் விழுந்து படுத்தான்.

## 4.2

சின்ன வயதிலேயே சிரிக்க பயந்ததால் தாடை இறுகிக் கடுகடுத்த முகமாகிப் போனவள் அரியத்தின் அம்மா கல்யாணி. சுருள்முடி, பறட்டைத்தலை. கவலையைத்தவிர வேறு அறியாததால் உருக்குலைந்த உடல்வாகு. அவள் ஆய்ந்துபோட்ட கத்தரிக்காய்கள் விதானையார் வீட்டு வெளிவிறாந்தையில் குவியலாய்க்கிடந்தன. கத்தரிச்சுனை பட்ட இடங்களிலெல்லாம் அரிப்பெடுத்துக் கொண்டேயிருந்தது. சொறியாது அடக்கிக்கொண்டாள். காயமாகும். உடலில் இரத்தம் சுண்டி வற்றிவிட்டது. காயம் பட்ட இடத்தில் புழுவைத்துவிடும்.

நல்ல கத்தரிக்காய்களைத் தெரிந்து பசளை பேக்கில் போட்டாள். பழுத்த சூத்தை குத்திய காய்களை வேறாகத் தெரிந்து போட்டாள். மாலை கருக்கலாகிக் கொண்டிருந்ததால் அவள் பதற்றமாக இருந்தாள். வேகமாகத் தெரிந்து போட்டால்தான் கறிக்கு இரண்டு சூத்தைக் கத்தரிக்காயாவது எடுத்துப்போகமுடியும். வதனி தனியே இருப்பாள். வெள்ளந்தி, எதற்கெடுத்தாலும் பல்லைக்காட்டிக்கொண்டு நிற்பாள். காசிப்பிள்ளை ஐயாவின் போயிலைத் தோட்டத்தைக் கவனிக்கும் சிவத்தின் பார்வை சரியில்லை. எப்போதும் பூனையை மரத்தில் ஏறவிட்ட நாயைப்போல நாக்கைத் தொங்கப்போட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வீணி வடியவடிய அவள் குடிசையையே சுற்றிச்சுற்றி வருகிறான், அந்த ஒறண்டல் நாய். மனதுக்குள் அவனைத் திட்டிக் கொண்டாள். நாலைந்து சூத்தைக் கத்தரிக்காய்களை மடிக்குள் கட்டிக் கொண்டு புறப்பட்டாள். விதானையார் வீட்டு வெளிப்படலையைத் திறந்துகொண்டு வீதிக்கு இறங்கினாள் கல்யாணி. இன்னும் முகம் மறையும் அளவுக்குப் பொழுது கருக்கலாகி இருக்கவில்லை.

வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கிய கல்யாணி ஒருகணம் நின்றாள். வைரவர் சூலம் குத்தியிருந்த புளியமரத்துக்குக்கீழ் சிலர் நின்று கதைத்துக்கொண்டிருந்தார்கள். வைரவர் சூலத்துக்கு அருகில் எரிந்துகொண்டிருந்த சுட்டி விளக்கின் மெல்லிய சுடர், கருக்கல் இருளைக் கலைத்துக்கொண்டிருந்தது. கதைத்துக்கொண்டிருப்பவர்களில் கனகையாவின் குரலை அவள் துல்லியமாகக் கணித்துக்கொண்டாள். திரும்பி வேலும்மயிலும் மாமாவின் வீட்டுக்கு அருகில் போகும் கொச்சித்தோட்ட குச்சொழுங்கைக்குள் இறங்கி நடக்கத் தொடங்கினாள்.

''மெய்யே... அது சரி... இங்க இருந்து போய் திரும்ப இங்க வந்தா... நீ அகதியே...''

அகதிச் சாமான்களுக்குப் பதிந்துவிட்டு வரும்போது வழிமறித்த கனகையா இப்படித்தான் அவளைக் கேட்டான், ஏதோ அவன் வீட்டுச்சாமான்களிலிருந்து தூக்கித் தருவது போல. கல்யாணி கனகையாவை நஞ்செனவெறுத்தாள். அவள் பிள்ளைகளைத் தனியே மடக்கி அவர்கள் பூர்வீகத்தைக் கேட்டு, தேவையில்லாது அவர்களைத் தொல்லைப்படுத்திக்கொண்டிருந்தான். அவன் மல்லாந்து குறட்டைவிட்டு மதியத் தூக்கத்தில் படுத்துக்கிடக்கும் தோட்டப்பிட்டி வேப்பமரத்துக்குக் கீழே யாரும் இல்லாத நேரம் பார்த்து பெரிய பாறாங்கல்லைத் தூக்கி அவன் தலையில் போட்டுவிடவேண்டும் என மனதுக்குள் கறுவிக்கொண்டாள். பிள்ளைகளின் படிப்பு நின்றுபோய்விட்டது. கள்ளுத்தவறணை அம்மாச்சியின் பாடும் சிரமமாகத்தான் நகர்கிறது. கள்ளுத்தவறணையை முற்றாகக் கைவிட்டுவிட்டார். மூத்தமகள் புருசனோட தம்பலகாமப்பக்கம் போய்விட்டாள். மற்ற பிள்ளைகள் திசைக்கொருவராக இருந்தார்கள். அம்மாச்சி கன்னியாவிலிருந்துதான் அவ்வப்போது இங்கு வந்து செல்கிறார். கடைசியாக வந்தபோது மிக வேதனையுடன் இருந்தார். பந்துளவைக் காணவில்லை என அவன் மனைவி கன்னியாவிற்குத் தேடி வந்து ஒப்பாரி வைத்துவிட்டுப் போயிருந்தாள். கந்தளாய்ப்பக்கம் ஏதோ அலுவலாகப் போன பந்துள திரும்பி வரவில்லை. இயக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடியள் கடத்திவிட்டதாகத்தான் அவன் மனைவி நினைத்தாள். ஆருடைய காலில் வேண்டுமென்றாலும் விழத் தயாராக இருப்பதாக அம்மாச்சியின் காலில் விழுந்து அழுதுவிட்டுப் போயிருந்தாள்.

அம்மாச்சியும் தனக்குத் தெரிந்த கன்னியா, நிலாவெளி, சாம்பல்தீவு, தம்பலகாமத்து இயக்கப் பொடியள் என்று விசாரித்தார். தாங்கள் கடத்தவில்லை என்றும் தங்களுக்கு பந்துளவைத் தெரியாது என்றும் சிலர் சொல்லியிருக்கிறார்கள். தம்பலகாமத்து இயக்கப் பொடியன் ஒருத்தன் கள்ளுத்தவறணை கலவரத்தில் பந்துளவிடம் வெட்டுவாங்கின சுக்கிலாதான் இப்ப கந்தளாய் டெலோ இயக்கத்துக்குப் பொறுப்பாக இருக்கிறான், எதற்கும் போய்க் கேட்டுப்பாருங்கள் என்று அம்மாச்சிக்குச் சொன்னான். அம்மாச்சி அவனையும் சந்தித்துவிட்டார்.

''அம்மாச்சி... பழச எல்லாம் மனசில வைச்சு பழிவாங்கிற மனநிலையில நாங்க இல்ல... இப்ப எங்கட இலட்சியமும் நோக்கமும் வேற அம்மாச்சி... அதோட நாங்கமட்டுந்தான் இயக்கம் எண்டில்ல... புளாட், புலி, E.P.R.L.F என்டு கன இயக்கம் இருக்கு... பத்தாததுக்கு ஈரோசும் இப்ப ஆக்கள் கடத்துதாம் எண்டு கேள்வி... எதுக்கும் விசாரிச்சுப் பாருங்க...''

இப்படித்தான் அந்த சுக்கிலா அம்மாச்சியிடம் சொல்லி அனுப்பியிருந்தான். அதை பந்துளவின் மனிசி கேட்பதாக இல்லை. கடைசியாக அம்மாச்சியை சந்திக்க வந்த பந்துளவின் மனிசி, தனக்கு பந்துள கிடைக்கவில்லை என்றால், தன் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வந்து அம்மாச்சியின் வீட்டுவாசலில் வைத்து நஞ்சுகுடிக்கப்போவதாக மிரட்டிவிட்டுப் போயிருந்தாள். அம்மாச்சி வந்து அவளிடம் கவலைப்பட்டுவிட்டுப் போனார். கல்யாணி கொச்சித்தோட்ட குச்சொழுங்கைக்குள்ளிருந்து கண்ணகையம்மன் கோவில் வீதியில் ஏறியிருந்தாள்.

துரை அவளுக்கு நெருக்கமான உறவுக்காரன் என்று சொல்லமுடியாவிட்டாலும் உறவுக்காரன்தான். அவள் கணவன் இந்திரனுடன் கூடித் திரிந்தவன். ஒருவழியில் பார்த்தால் அவளுக்கு அண்ணன் முறை. நோய் முற்றிக் கோறையாகிப் போன நெஞ்சுடன், தொய்வு வந்தவன்போல் மூச்செடுக்கமுடியாத நிலையில்கூட அவளை வந்து பார்த்துப்போனான். பியூனாக இருப்பதால் அவளுக்கு அவ்வப்போது பண உதவியும் செய்தான். தான் சீக்கிரம் செத்துவிடுவேன் என்று சொல்லித் தன்னைப் பதிவுத் திருமணம் செய்துகொள்ளுமாறு அவன் அவளை வற்புறுத்திக்கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மரணத்துக்குப் பிறகு அவளுக்குத் தனது அரச பணிக்கான ஒய்வூதியம் கிடைக்கும் என்றும் சொன்னான். வளர்ந்த பிள்ளைகளை வைத்துக்கொண்டு, இப்படியான பேச்சுக்கள் அவளுக்கு வேதனையாகவும் அருவருப்பாகவும் இருந்தன. பணம் கிடைக்கும் என்பதற்காக மலம் தின்ன முடியுமா எனத் தன்னைத் தானே கேட்டுக்கொண்டாள். அவள் இருளில் பல நினைவுகளோடு நடந்தாள்.

கண்ணகையம்மன் கோயிலடியை நெருங்கும்போது குடிசைக்குள் விளக்கு எரிவது கல்யாணிக்குத் தெரிந்தது. வதனி விளக்கு வெளிச்சத்தில் அசைவது தெரிந்தது. நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். கண்ணகையம்மன் கோவிலடிக்கு வந்தபோது அரியம் கிணற்றில் குளித்துக்கொண்டிருந்தான். காசிப்பிள்ளை ஐயாவின் மாடுகளைப் பட்டியில் அடைத்துவிட்டு இப்பொழுதுதான் திரும்பியிருக்கவேண்டும் என நினைத்துக்கொண்டாள். அரியம் வளர்ந்துவிட்டான். அவன் உதடுகள் தடித்துவிட்டன. மீசை பூனைமுடி போல் அரும்பத் தொடங்கிவிட்டது. புயங்கள் திரண்டுவிட்டன. வதனியும் வயதுக்கு மீறிய தோற்றத்துடன் வளர்ந்துவிட்டாள். ஆமி சாம்பல்தீவுப் பாலத்திலிருக்கும் இயக்கத்தின் சென்றியை உடைத்துக்கொண்டு உள்ளே வரும் என எல்லோரும் மிரட்டுகின்றார்கள். அப்படி வந்தால் அரியத்தைத் தப்பியோடும் ஆண்களுடன் உப்பளம் தாண்டிப் பெரியகுளப்பக்கக் காட்டுக்குள் அனுப்பிவிடமுடியும். வதனியை என்ன செய்வது. தானும் காட்டுக்குள்தான் ஓடவேண்டும்.

## 4.3

பச்சைநிற பிக்கப் வாகனம் தார்வீதியில் தலைதெறிக்க குச்சவெளிப்பக்கம் பாய்ந்து போனது. நிச்சயமாக அது பிளாட்காரர்கள் கடத்திய வாகனம் என்பதில் சந்தேகம் இல்லை. காலை இளவெயில் வீதிகளிலும் புதர்களிலும் புற்தரைகளிலும் மஞ்சள்நிற ஒளியையும் மரங்களின் நிழலையும் படரவிடத் தொடங்கிய நேரம். குலமும் சோமியும் செல்வத்தார் தென்னந்தோப்புக்குள் சிக்கிக்கொண்டார்கள். அதிகாலையில் கடற்கரைக்கு மட்டி தோண்ட வந்தவர்கள் செல்வத்தார் தென்னந்தோப்புக்குள் பதுங்கினார்கள். வீதியில் போய்க் கொண்டிருந்த சைக்கிள்காரர்கள் சைக்கிளை பிரப்பம் புதர்களுக்குள் தள்ளிவிட்டுவிட்டு தென்னந்தோப்புக்குள் புகுந்தார்கள். அரசண்ணனின் றோஸா வேன் சனத்துடன் நிலாவெளிப்பக்கம் அலறியடித்துப் பறந்துபோனது. ஹெலிக்கப்டரின் இறக்கைகளின் சடசடப்பா, ஹெலிக்கப்டரிலிருந்து சுடப்படும் துப்பாக்கி வேட்டோசைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடசடப்பா எனத் தென்னந்தோப்புக்குள் பதுங்கியிருந்தவர்களால் முதலில் ஊகிக்கமுடியாதிருந்தது. அவர்களால் இப்போது துல்லியமாகத் துப்பாக்கி வேட்டோசையையும் ஹெலிக்கப்டரின் இறக்கைகளின் சடசடப்பையும் தெளிவாக வேறுபடுத்திப் பார்க்கமுடிந்தது. நிலாவெளிப்பக்கம் வேகமாகப்போன அரசண்ணனின் றோஸா வேனைத் துரத்திக்கொண்டுபோன ஹெலிக்கப்டரிலிருந்து வேட்டோசைகள் தீர்க்கப்படுவதை அவர்களால் கேட்கமுடிந்தது.

திரும்பவும் குச்சவெளிப்பக்கம் பறந்து திரும்பிய ஹெலிக்கப்டர் கடற்கரையையும் உப்பளத்தையும் வளைத்துச் சுற்றத் தொடங்கியது. தென்னந்தோப்புக்குள் நின்றவர்கள் ஹெலிக்கப்டர் சுற்றும் திசைக்கு எதிர்த்திசையில் தென்னையையொட்டித் தொடர்ச்சியாக நகர்ந்துகொண்டிருந்தார்கள். திடீரென்று கடற்கரைப்பக்கமாகத் தாழப்பறந்த ஹெலிக்கப்டர் தென்னந்தோப்புக்குள் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கியது. தென்னங்குருத்துக்களும் ஓலைகளும் சிதறிப் பறந்தன. தென்னைமரங்களில் வெடிபட்டுப் பட்டைகள் பெயர்ந்தன. பட்டைகள் பெயர்ந்த இடத்தில் வெண்மஞ்சள் நிறத்தில் பிசினுடன் சிதறலாக நார்கள் வெளிப்பட்டுக்கிடந்தன. இரண்டு மூன்று ரவுண்ட் சுழன்று வந்தடித்த ஹெலிக்கப்டர் பின் நகரத்தை அண்டிப் பறந்து மறைந்தது.

தென்னந்தோப்புக்குள் பதுங்கியவர்கள் ஒவ்வொருவராக வெளியேறத் தொடங்கினார்கள். வீதியில் சனம் பழையபடி நடமாடத் தொடங்கியது. சோமியும் குலமும் மட்டிகளால் உப்பிக்கிடந்த பசளை பேக்கை தோளில் சுமந்தபடி வீதியில் இறங்கி நடந்தார்கள். குலம் குள்ளமாகவும் தடித்த உடல்வாகுடனும் இருந்தான். அவன் போட்டிருந்த பழுப்புக்கலர் டி சேட் முதுகில் கிழிந்துகிடந்தது. ஓடிசலான தேகத்துடன் உயரமாக இருந்தான் சோமி. அவர்கள் உடுத்தியிருந்த பற்றிக்சாரமும் அவர்களது கால்களும் மட்டி தோண்டியதால் ஏற்பட்ட சுரியிலும் கடல்நீரிலும் நனைந்து ஊறிக்கிடந்தன. தடித்த விழுதுகளை வீதியின் இருமருங்கிலும் ஊன்றிப் பெருவிருட்சமாக நின்ற ஆலமரத்துக்குக்கீழிருக்கும் நாகதம்பிரான் கோயிலடியை நெருங்கி வந்தார்கள். ஆலமரத்துக்குக்கீழ் சனம் கூட்டமாக நின்றிருந்தது. ஹெலிக்கப்டரிலிருந்து சுடப்பட்ட கலிபர் சன்னங்கள் நடுவீதியில் தாருடன் கற்களைப் பெயர்த்து, தொடர்ச்சியாக சீரான இடைவெளியில் சிறியசிறிய பள்ளங்களைத் தோண்டியிருந்தன. அரசண்ணனின் றோஸா வேன் வீதியிலிருந்து மதகுப் பள்ளத்தில் இறங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சனத்துக்கு ஒண்டும் இல்ல... ஹெலி துரத்தி அடிக்குதெண்டு போட்டு... மரத்துக்குக்கீழ நிப்பாட்டுவம் எண்டு சைற் எடுத்தன்... வேன் வந்த வேகத்தில பள்ளத்துக்க இறங்கிற்று. சனங்கள் இறங்கி ஆலமரத்துக்குக் கீழ ஓடிப்போய் நிண்டுட்டுதுகள்...''

''எங்கயாண்டாப்பா ஆமி இறங்கினது...''

அரசண்ணனுடன் சைக்கிளிலிருந்து இறங்காது பெடலில் கால் ஊன்றியபடி கதைத்துக் கொண்டிருந்தார் கூப்பன் கடை மனேஜர் அருட்சிவம்.

''சேச்சே... ஆமி ஒரு இடமும் இறங்கயில்ல... இயக்கம் அவ்வளவு லேசில விட்டிருமோ... இருட்டோட இருட்டா ஆமி கடலால குச்சவெளி பொலிஸ்டேசன் இருந்த இடத்தில இறங்கப் பாத்திருக்கு... இயக்கம் திருப்பி அடிச்சதில இறங்க ஏலாம போயிட்டது... அந்தக் கடுப்புத்தான் போற போக்கில சனத்தில காட்டிப்போட்டுப் போறாங்கள்...''

குள்ளமான அரசண்ணன் தன் இடுப்பில் ஒரு கையை ஊன்றி மற்ற கையால் தன் வழுக்கை விழுந்த தலையைத் தடவியபடி கீச்சுக்குரலில் ஆறுதலாகவும் பக்குவமாகவும் சொல்லிக்கொண்டிருந்தார். குலமும் சோமியும் வேனைப் பார்த்தபடி தாண்டிப்போனார்கள். நிலம் வெளிக்கும்முன் அவர்கள் மட்டிதோண்ட வந்திருந்தார்கள். மட்டி தோண்டிக்கொண்டிருக்கும்போது குச்சவெளிப்பக்கம் கடலில் கன்போட்டுக்கள் நின்றுகொண்டு கரையைப் பார்த்துச் சுட்டுக் கொண்டிருந்தன. வெடிச்சத்தம் தூரத்தில் கேட்டுக்கொண்டிருந்ததால் அவர்கள் அலட்டிக்கொள்ளவில்லை. ஹெலி பறந்து அடித்தபோது அவர்கள் கொஞ்சம் தடுமாறித்தான்போனார்கள்.

குலமும் சோமியும் எந்த இயக்கக் கூட்டமென்றாலும் முதல் ஆக்களாய்ப் போய்விடுவார்கள். நிறைய படங்களுடன் கூடிய கலர்கலரான நோட்டிஸ் எல்லாம் வாசித்திருக்கிறார்கள். துவக்குகளின் தரம், வகை பற்றியெல்லாம் நிறைய தெரிந்துவைத்திருந்தார்கள். இயக்கம் சொல்வதெல்லாம் நடக்கத் தொடங்கிவிட்டது என்றுதான் அவர்கள் நினைத்தார்கள். அரியமும் அவர்களுக்கு நிறைய சிறிமாபுரக் கதைகள் சொல்லியிருந்தான். சிறிமாபுரம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம். அருகிலிருந்த கிருஸ்ணபுரி சனம் அகதியாக இங்கு வந்துவிட்டது. கிருஸ்ணபுரி சனத்தின் நிலம் பறிபோய்விட்டது. இங்கிருந்து தாமும் எங்கே அகதியாகப் போகப்போகிறோமோ தெரியாது எனக் குலமும் சோமியும் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். இயக்கம் அவர்களுடைய நிலமும் முழுமையாகப் பறிபோகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறது என்றுதான் சொல்கிறது. எங்களுடைய கடற்கரையில் கக்கூசுக்குப் போறதெண்டாலும் சிங்களவனிட்டக் கேட்டுட்டுத்தான் போகவேண்டி வரும். ஆமி கிராமத்துக்குள் ஊடுருவினா ஆக்களைக் கண்மூடித்தனமா சுட்டுத்தள்ளும். பெண்களை மானபங்கப்படுத்தும். இயக்கங்கள் இப்படித்தான் பிரச்சாரம் செய்தன.

விந்தி விந்தி நடக்கும் விஞ்ஞானப் பாடம் படிப்பிக்கும் சுரேஸ் மாஸ்டர் தலைமையில்தான் கிராமத்துக்குள் முதல்முதலாக ஈரோஸ் இயக்கத்தின் பிரச்சாரக்கூட்டம் நடந்தது. இரவு பத்துமணி போலத்தான் கூட்டம் நிலாவெளி மகாவித்தியாலயத்தின் மூடிய விஞ்ஞான ஆய்வுக்கூட அறையில் மெழுகுத்திரி வெளிச்சத்தில் நடந்தது. அந்தக் கூட்டத்தில்தான் குலமும் சோமியும் இயக்க அண்ணாச்சிமாரை முதல்முதலாகக் கண்டது. கிராமத்துக்குள் தூரத்து இடி முழக்கம் எனப் பெயர் பெற்றது ஈரோஸ் இயக்கம். இனவாத அரசாங்கத்தின், கொழும்பில் உள்ள பொருளாதார மையங்களைத் தகர்த்தால்தான் அவர்களுக்குப் புத்தியில் உறைக்கும் என வாதிட்டார்கள். அந்தக் கூட்டத்தில சுரேஸ் மாஸ்டரும் நிறைய ரகசியப் புத்தகங்களை மேற்கோள்காட்டிப் பேசினார். கூட்டம் முடிந்து வெளியே வந்தவர்கள், சுரேஸ் மாஸ்டர் பேராதெனியா பல்கலைக்கழகத்திலிருக்கும்போது றோகண விஜயவீரவின் சிங்களப் புரட்சி இயக்கத்தில் இருந்தவர் எனப் பேசிக்கொண்டார்கள். அந்தக் கூட்டத்துக்குப் பிறகு சுரேஸ் மாஸ்டருக்குப் பள்ளிக்கூடத்துக்குள் தனி மரியாதை இருந்தது. கொழும்பில் வெடிக்கும் குண்டுகளுக்கெல்லாம் ஈரோஸ் இயக்கம் உரிமை கோரிக்கொண்டிருந்தது.

நிலாவெளி கூட்டுறவுச்சங்கத் தலைவர் கனகரெத்தினம் தலைமையில்தான் புளாட் இயக்கத்தின் பிரச்சாரக்கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டம் நள்ளிரவைத் தாண்டிய பின்னர்தான் தொடங்கியது. கூட்டுறவுச்சங்கக் கட்டிடத்தில் பெற்றோல்மெக்ஸ் வெளிச்சத்தில் கூட்டம் நடந்தது. ஏகாதிபத்திய ஒழிப்பென்று ரசியப்புரட்சியை முன்வைத்துப் பிரச்சாரம் செய்தார்கள். பெரும்பாலான தமிழர்கள் வறுமைக்கோட்டுக்குக்கீழ்தான் வாழ்வதாக புளாட்காரர்கள் புள்ளிவிபரங்களுடன் பேசினார்கள். சீனப்புரட்சியைக் காட்டி ஆயுதத்தால் வர்க்கப்புரட்சி சாத்தியம் என்றும் சொன்னார்கள். ஆயுத முனையில் சாதிய ஒடுக்குமுறைகள் ஒழிக்கப்படும் என்றார்கள். பாளை சீவும் கத்தி கூராக இருந்தும் பற நாய்கள் என்றும் பள்ளுப் பயலுகள் என்றும் முகத்துக்கு நேரே திட்டும் கனகையா போன்றோர்களை இன்னும் எதிர்க்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டி பேக்குடன் நடந்த அவர்கள் தங்களுக்குள் ஏதும் பேசிக் கொள்ளவில்லை. மாதா கோயில் முடக்கில் திரும்பி கிராமத்துக்கு வெளியே ஒதுக்குப்புறமாக இருந்த உப்பள கரச்சிவெட்டையை அண்டிய பனங்கூடலுக்குள் இருக்கும் தங்கள் குடிசைகளை நோக்கி நடந்தார்கள். பாதி கறல் தகரங்களையும் சிதைந்த ஓலைகளையும் இறவானமாகக் கொண்ட குடிசைகள்.

## 4.4

சாம்பல்தீவு புள்ளகுளத்துப் பாலத்தைத் தவிர்த்த ஒரு ராணுவப்படையணி, கரச்சி வெட்டைக்குள்ளால் தரைவழியாக இருளோடு இருளாக ஏழாம்கட்டை வயல்வெளி தாண்டி நிலாவெளிக் கிராமத்துக்குள் ஊர்ந்து ஊர்ந்து முன்னேறிக்கொண்டிருந்தது. கடல்வழியாக அரவம் இல்லாது ஏழாம்கட்டை தாமரைக்குளப்பக்கமாகத் தரையிறங்கிய இன்னொரு ராணுவப்படையணி, கடற்கரையோரமாக நிலாவெளிக் கிராமத்தைச் சுற்றிவளைத்துக்கொண்டது. கோயில் மணியோசை கேட்டுத் தூக்கத்திலிருந்து விழித்துப் பழகிய அந்தக் கிராமம் துப்பாக்கி வெடியோசை கேட்டுப் பதறியடித்துக்கொண்டு விழித்தெழும்பியது.

கிராமத்துக்குள் புகுந்த ராணுவம் முதலில் சுட்டது வாசிகசாலையின் திறந்த விறாந்தையில் துவக்குடன் படுத்துக்கிடந்த இரண்டு இயக்கப் பொடியளைத்தான். பின் கிராமம் வெடியோசைகளாலும் குண்டுவெடிப்பு ஓசைகளாலும் அதிரத் தொடங்கியது. இருளோடு இருளாகத் தாழப்பறந்த ஹெலிக்கப்டர் காட்டுப்பகுதிக்குள் சரமாரியாகச் சுட்டுக்கொண்டு போனது. அலஸ்தோட்டப் பகுதியில் தயாராக இருந்த கவச வாகனங்கள் கடுமையான தாக்குதல்களை நிகழ்த்திக்கொண்டு புள்ளகுளத்துப் பாலத்திலிருந்த இயக்கத்தின் சென்றியை உடைத்துக்கொண்டு உள்ளே பாய்ந்தன. புள்ளகுளத்துப் பாலத்தில் சென்றி இருந்த இயக்கம் கரச்சிவெட்டைப்பக்கமாக இருந்த ராணுவத்தின் முற்றுகையை உடைத்துக்கொண்டு கன்னியா காட்டுப்பகுதிக்குள் ஊடுருவியது. அதேநேரம் நிலாவெளி கிராமத்திற்குள் சிக்கிக்கொண்ட இயக்கமும் உப்பளப்பக்கமாக ராணுவத்தின் முற்றுகையை உடைத்துக்கொண்டு பெரியகுளம் காட்டுக்குள் புகுந்தது. இயக்கம் ராணுவ முற்றுகையை உடைத்தது என்பதைவிட அதைத் தடுக்க ராணுவம் சிறிதும் முயற்சிக்கவில்லை என்பதுதான் உண்மையாக இருந்தது. கிராமத்து மனிதர்கள் கலைக்கப்பட்ட பட்டிமாடுகள் போல சிதறத் தொடங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் வெடியோசை கேட்ட உடனேயே சுதாகரித்துக்கொண்ட சேமியும் குலமும் அவர்கள் சமூகத்து நடுத்தர வயதானவர்களுடனும் இளைஞர்களுடனும் பெண்களுடனும் சேர்ந்து ஆமி அவர்களது பகுதியை நெருங்கும் முன்னரே தமக்குக் கிட்ட இருந்த கரச்சிவெட்டையைத் தாண்டி ஓடி, நீலப்பணிக்கன் குளக்காட்டுப்பகுதிக்குள் நடக்கத் தொடங்கினார்கள். இருளோடு இருளாக கிராமத்து இளைஞர்கள் தமக்குத் தெரிந்த பீலிகள், முதலைப்பாலிகளுக்குள் விழுந்து காட்டுப்பகுதிக்குள் ஓடினார்கள். சிலர் ஆமியிடம் வெடிவாங்கிச் சுருண்டு விழுந்தனர். சிலர் நேரடியாக ஆமியிடமே சிக்கிப் பிடிபட்டனர். இனி கரச்சிவெட்டையைத் தாண்டிக் காட்டுக்குள் போகமுடியாது எனத் தீர்மானித்த இளைஞர்கள் ஊருக்குள் ஒளிய இடம் தேடினார்கள். சிலர் பெரியதோட்டக் கிணறுகளுக்குள் இறங்கி அடிப்பாருக்குள், தலையைத் தண்ணீருக்கு மேல் வைத்து ஒளிந்துகொண்டார்கள். தப்பிக்க வேறு மார்க்கம் அறியாத பெண்களும் இளைஞர்களும் பரந்து விரிந்த அந்தக் கிராமத்தின் ஏக்கர் கணக்கான கொச்சி, கத்தரி, போயிலைத் தோட்டங்களுக்குள் தஞ்சமடைந்தார்கள்.

உப்பளவீதியில் அரியமும் வதனியும் அம்மாவும் கரச்சி வெட்டைப்பக்கம் மூச்சிறைக்க ஓடினார்கள். ராணுவம் சுட்டுக் கொண்டிருந்ததால் உப்பளப்பக்கமிருந்து சிலர் திரும்பி ஓடி வந்துகொண்டிருந்தார்கள். திரும்பி ஓடி வந்தவர்களுடன் சேர்ந்து, தாமும் திரும்பி ஓடி வந்து, கிராமத்தின் நடுவிலிருந்த விதானையாரின் அடர்த்தியான கத்தரித்தோட்டத்திற்குள் சுனைக்கச் சுனைக்க புகுந்தார்கள். தரையுடன் ஒட்டியபடி தவழத்தொடங்கினார்கள். ஒரே இடத்தில் குவிவது ஆபத்து என்பதால் ஆளுக்கு ஒரு திசையில் தவழத்தொடங்கினார்கள். இப்போது வெடிகள் கிராம உள்வீதிகளிலும் பரவலாகக் கேட்கத் தொடங்கின. சில சன்னங்கள் கத்தரித் தோட்டத்துக்கு மேலாலும் கூவிப்போயின. தவழ்ந்துபோன அரியம், கத்தரிக்கன்றுகள் நடும்போது, கத்தரிக்கன்றுகளுக்குத் தண்ணீர் வார்ப்பதற்காக நீளமாக வெட்டப்பட்ட குழியைக் கண்டான். எது நடந்தாலும் அதுவே தஞ்சம் என நினைத்த அரியம் குழிக்குள் இறங்கி மல்லாந்து படுத்துக்கொண்டான்.

மல்லாந்து படுத்துக்கிடந்த அரியம் கத்தரி இலைகளுக்கூடாக, சாம்பல் நிறமாகக்கிடந்த வானம், நீலநிறமாக மாறத் தொடங்கி இருந்ததைக் கண்டான். தாழப்பறந்த ஹெலிக்கப்டர் கத்தரி, கொச்சித் தோட்டங்களுக்குள் தலைக்கறுப்பைக் கண்டபோதெல்லாம் சுட்டுக்கொண்டு போனது. ஒவ்வொரு தடவை ஹெலிக்கப்டர் அவன் பதுங்கிக்கிடந்த இடத்தைக் கடக்கும்போதும் உயிர்போய்த் திரும்பி வந்துகொண்டிருந்தது அரியத்துக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் முற்றியபின் பியூன் துரை கோபாலபுரத்திலிருக்கும் தனது வீட்டிலிருந்து வெளியேறியிருந்தார். திருமணமான தன் தங்கையைச் சிரமப்படுத்த வேண்டாமென நினைத்தார். கோபாலபுரத்திலிருந்து நிலாவெளிக்கு சைக்கிள் ஓடி வருவதும் அவருக்கு சிரமமாகத்தான் இருந்தது. அவருடைய தேவைகள் மிகக் குறைவாக இருந்ததால் பழைய வெள்ளைக்காரன் காலத்து சிற்றோட்டுத் தபாலகத்தின் பின் களஞ்சிய அறையைத் தனது தங்குமிடமாக மாற்றியிருந்தார். முன் விறாந்தை, பின் விறாந்தை, களஞ்சிய அறை என இருந்தது அந்த தபாலகம். ஆங்கிலேயர் காலத்தில் கட்டுக்குளப்பற்றில் பிரதான தபாலகமாக அது இருந்ததாக கனகையா போன்றவர்கள் வரலாறு சொல்வார்கள். இப்போது நிலாவெளிக்கு வரும் கடிதங்களுக்கும் மணி ஓடர்களுக்குமாகத் தபால் கந்தோரின் போஸ்ட்மாஸ்டராகவும் பியூனாகவும் துரை இருந்தார்.

ராணுவம் தபால் கந்தோரடிக்கு வந்தபோது காலை பத்துமணியைக் கடந்திருந்தது. சீமெந்தால் வார்க்கப்பட்ட சிவப்புத் தபால்பெட்டிமீது வெயில் உக்கிரமாகக் காய்ந்துகொண்டிருந்தது. கடற்கரைப்பக்கமிருந்த மாதா கோயிலுக்கு எதிரே பிரதானவீதியை ஒட்டிய வளவின் உட்பகுதிக்குள் பன்னீர் மரங்களும் கருங்காலி மரங்களும்சூழ இருந்த தபால் கந்தோருக்குள் ராணுவம் நுழைந்தது.

அதிகாலையில் வெடிச்சத்தத்தோடு எழும்பியிருந்த துரை, தலைமுழுகித் தன் பியூன் காக்கி உடையணிந்து நெற்றியில் விபூதிப்பூச்சும் சந்தனப்பொட்டுமாகத் தபால் கந்தோர் கதவைத் திறந்துவைத்துவிட்டு மூலைக்குத்துச் சுவர் ஓரமாக ஸ்ரூலில் பாதுகாப்பாகக் குந்தியிருந்தார். அரச உத்தியோகமும் நோயால் கோறையாகிப்போன உடலும் தனக்குப் பாதுகாப்பாக இருப்பதால், அவர் எங்கும் ஓடவோ ஒழியவோ இல்லை. இறுகிக் கடுகடுத்துப் போன வியர்வை வழியும் முகங்களுடன் ராணுவம் உள்ளே வந்தது. இரும்பு ஆமைத் தொப்பி இன்னும் அவர்களது முகத்தைக் கோரமாக்கியிருந்தது. தடித்த பச்சைநிறக் காக்கி உடையும் கனத்த சப்பாத்துக்கால்களுடனும் துப்பாக்கிகளுடனும் தபால்கந்தோருக்குள் மூர்க்கமாக வந்த இரண்டு ராணுவச் சிப்பாய்களைக் கண்ட பியூன் துரை ஒரு கணம் ஈடாடித்தான் போனார். மற்றவர்களைப் போல் தானும் ஓடி ஒளிந்திருக்கலாமோ என அவருக்கு எண்ணத்தோன்றியது. தபால் கந்தோர் வெளிவாசலில் இருவர் நின்றுகொண்டார்கள். தபால்கள் தரம்பிரித்துப்போடும் பெட்டிகள், மூலை முடுக்குகள் எனக் கிடந்தவற்றையெல்லாம் கிண்டிப்போட்டார்கள். தேடுதலை முடித்துக்கொண்டு உள்ளே வந்தவர்கள் வெளியேறி, வெளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். பியூன் துரை பெருமூச்சு விட்டுக்கொண்டார். இப்போது அவர் தபால்கந்தோர் யன்னலோரக் கவுண்டரிலிருந்த கதிரையில் மிடுக்காக அமர்ந்திருந்தார். வடக்குப் பக்கமாக கோபாலபுரம் குச்சவெளிப்பக்கம் என அகோரமான வெடியோசைகள் கேட்டுக்கொண்டுதான் இருந்தன.

தபால்கந்தோருக்கு வெளியே நின்ற ராணுவத்தில் மிக இளையவனைப் போல இருந்தவன், தபால்கந்தோர்பக்கம் உற்றுஉற்றுப் பார்ப்பதும் பின் குனிந்து பார்ப்பதுமாக இருந்தான். பியூன் துரைக்குக் கொஞ்சம் பயமாகத்தானிருந்தது. அந்த இளம் ராணுவச்சிப்பாய் திரும்பி தபால்கந்தோருக்குள் வந்தான். பியூன் துரை கதிரையிலிருந்து எழும்பி நின்றார். தபால் கந்தோர் வளவுக்குள் வந்த இளம் ராணுவச்சிப்பாய் வெளியே வெயிலில் காய்ந்துகொண்டிருந்த தபால்பெட்டியை நோக்கிப் போனான். தபால்பெட்டியின் நிலைக்குத்துப் பக்கத்திலிருந்த தபால் போடும் சிறிய வாய்க்குள் கைவிட்டு எதையோ வெளியே இழுப்பதை பியூன் துரை கண்டார். கையில் கசங்கிக் கிழிந்தபடி வந்த துண்டு கலர் பேப்பரை ராணுவச்சிப்பாய் உற்றுஉற்றுப் பார்ப்பதை துரை கண்டார். வெளியே வீதியில் நின்ற மூன்று ராணுவச் சிப்பாய்களும் உள்ளே வந்தார்கள். துரை பதற்றமாகத் தபால் கந்தோருக்குள்ளிருந்து வெளிவிறாந்தைக்கு வந்தார். ராணுவச்சிப்பாய் ஒருவன் தபால்பெட்டியைத் திறக்குமாறு துரையைப் பார்த்துச் சைகை செய்தான். துரை நிலைப்படிதாண்டி வெளியே வந்த வேகத்தில் தடுமாறித் திரும்பி உள்ளே போனார். சுவரில் ஆணியடித்துக் கொழுவியிருந்த தபால்பெட்டித் திறப்பை நடுங்கும் கையினால் பற்றியெடுத்தார்.

தபால்பெட்டியின் பின்கதவை நடுங்கும் கைகளினால் பியூன் துரை திறந்தார். சில கடித உறைகளுடன் கட்டுக்கட்டாய் மடித்து, மூலைகள் கசங்கிய நிலையில் திணித்து உள்ளே தள்ளப்பட்டிருந்த நோட்டிஸ் கட்டுக்களை அவர் பயத்துடன் வெளியே எடுத்து, ராணுவச்சிப்பாயின் கையில் கொடுத்தார். ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி எனச் சில முக்கிய அரசியல் பிரமுகர்களை ராணுவ உடையில் கிட்லரின் நெப்போலியனின் உருவ அமைப்பில் காட்டூனாகக் கீறப்பட்ட இயக்க நோட்டிஸ்கள். அதிகாலையில் ஓடும்போது ஆரோ ஒரு நாய் தன்னிடம் இருந்த நோட்டிஸ்களைத் தபால்பெட்டிக்குள் திணித்துவிட்டுப் போயிருக்கிறது. இரவுச்சாப்பாட்டுக்குப் பிறகு வலி மாத்திரைகளைப் போட்டுவிட்டுத் தூங்கிப்போனார். சாமத்தில் மாத்திரைகளின் மயக்கத்தில்கூட யாரோ தபால்கந்தோர் வளவுக்குள் நடப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவும் கதைத்துக்கொண்டிருப்பது போலவும் அவருக்குப்பட்டது. உடல் சோர்வு அவரை எழுந்திருக்க விடவில்லை. தான் படுத்துக் கொண்டே ஆரது என்று கேட்டு அதட்டியது அவர் ஞாபகத்துக்கு வந்தது. பயம் இல்லாமப் படுங்கண்ண, நாங்கதான் என்ற பதில் தனக்குத் திருப்தியாக இருந்ததால் திரும்பவும் தூங்கிப்போனது கனவுக்காட்சி போல அவர் ஞாபகத்திற்கு வந்தது. இரவு வெளிவிறாந்தையில் இயக்கப் பொடியள் படுத்திருந்திருக்கிறார்கள் என்பது அவருக்கு உறுதியாகிவிட்டது.

சாதரணமாகவே முற்றிய நோயால் தாக்குப்பிடிக்கமுடியாது வேதனையும் வலியுமாக இருக்கும் உடல், இப்போது அகோரமாக வலிப்பதையும் மூச்சுத்திணறுவதையும் பியூன் துரை உணர்ந்தார். கண்கள் இருண்டு மங்கிக்கொண்டுவந்தன. ராணுவம் தபால்கந்தோரைப் பூட்டுமாறு துரைக்குக் கட்டளை போட்டது. பியூன் துரை தபால்கந்தோரைப் பூட்டித் திறப்பைத் தன் மஞ்சள்நிறக் காக்கிக் காற்சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டார். அவரது காக்கிநிற மேல் சட்டையைக் கழற்றி அவர் கைகளைப் பின்புறமாக மடக்கிக் கட்டினார்கள். தலைக்குமேல் வெள்ளம் சாண் ஏறினால் என்ன முழம் ஏறினால் என்ன. அவர் நடப்பது நடக்கட்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தார்.

வெயிலின் தகிப்பு அவர் உடலை வதைக்க பிரதானவீதியில் முன்னே நடக்கவிட்டு ராணுவச்சிப்பாய்கள் பின்னே நடந்து போனார்கள். மாதா கோவிலடியிலிருந்து உப்பளத்துக்குப் போகும் கிறவல்வீதியில் இறங்கி நடக்குமாறு பியூன் துரைக்குக் கட்டளையிட்டு அவர்கள் பின்னே நடந்து போனார்கள். ராணுவச் சிப்பாய்கள் போகும் வழியிலிருந்த கத்தரி, கொச்சி, போயிலைத் தோட்டங் களுக்குள் அவ்வப்போது துப்பாக்கிகளை நீட்டிச் சுட்டுக்கொண்டு போனார்கள். அவை இலக்கில்லாது சுட்ட வெடிகளாயினும் பியூன் துரைக்கு யாரோ வெடிப்பட்டு அலற முடியாது வலியுடன் தரையில் உருளுவது போலத்தானிருந்தது. உப்பளப்பக்கம் இறங்கும் முடக்கில் பவானியார் தென்னந்தோட்டத்துக்கு எதிரே நின்ற இன்னொரு ராணுவ அணியை நோக்கிப் போனார்கள். பவானியார் தென்னந்தோப்புக்கு எதிரே நின்றிருந்த ராணுவ அணியின் தலைகளுக்கு மேலே உயரமாகத் தெரிந்தது, காசிப்பிள்ளையரின் கத்தரித்தோட்டத்தில் வேலை செய்யும் சிவத்தின் தலை. இவ்வளவு நேரமும் கிராமத்துக்குள் ராணுவத்தைத்தவிர வேறு ஒருவரையும் காணாத துரைக்கு சிவத்தைக் கண்டதும் தெம்பாக இருந்தது. கிராமத்துக்குள்ளேயே அதிக உயரமானவன் சிவந்தான். முதுகுக்கூனல், அவனுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணல் புளியங்கா என்ற பெயரைக் கொடுத்துவிட்டது. சிவம் வழமையாகப் போடும் மஞ்சள் சேட், அவன் இடுப்புக்கு மேலே பெண்களின் பிளவுஸ் போல தொங்கிக்கொண்டிருந்தது. அவன் கைகளையும் பின்னால் மடக்கி அவன் தலையில் கட்டும் முண்டாசுத் துவாயால் கட்டியிருந்தார்கள்.

நேரம் மதியத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. சிவமும் பியூன் துரையும் வியர்த்துக் களைத்திருந்தார்கள். தன் உடல் வலியால் அவதிப்பட்ட பியூன் துரை பின்னால் கைகள் கட்டப்பட்டிருந்ததால் நிலத்தில் அவதிப்பட்டுக் குந்தி, சாய்ந்து, நிலத்தில் விழுந்து, பின் நிமிர்ந்து சப்பாணி கொட்டி அமர்ந்தார். தென்னைமரத்தின் நிழலும் உப்பளக்காற்றும் கொஞ்சம் இதமாகத்தானிருந்தன. சிவம் நின்று கொண்டே இருந்தான். சிவமும் பியூன் துரையும் தங்களுக்குள் கதைத்துக்கொள்ளவில்லை. ராணுவமும் தங்களுக்குள் அதிகமாகக் கதைத்துக்கொள்ளவில்லை. ஒரு ராணுவச் சிப்பாயின் முதுகிலிருந்த வானொலிப்பெட்டி ஓயாது இரைந்துகொண்டிருந்தது. துரைக்கு அந்த இரைச்சல் தலையிடியை அதிகப்படுத்திக்கொண்டிருந்தது. அவர்கள் ஏதோ கட்டளைக்காகக் காத்திருப்பதை பியூன் துரையால் உணர முடிந்தது.

குச்சவெளிப்பக்கம் கேட்டுக்கொண்டிருந்த தொடர் வெடியோசைகளும் குறைந்திருந்தன. அவ்வப்போது கிட்டத்திலும் தூரத்திலும் ஒற்றை வெடிகள் கேட்டுக்கொண்டுதானிருந்தன. ஏதோ கட்டளை வந்திருக்கவேண்டும். இறுக்கம் குறைந்த ராணுவத்தினர் தளர்வாக நடமாடத் தொடங்கியதை பியூன் துரை கவனித்தார். அவர்கள் இப்போது தங்களுக்குள் சிங்களத்தில் சாதாரணமாக உரையாடத் தொடங்கினார்கள். பியூன் துரைக்குக் கொஞ்சம் பயம் குறைந்து நோயின் வலியும் குறைந்திருந்தது போலத்தானிருந்தது. சிவத்திடம் உன்னால் தென்னைமரத்தில் ஏறமுடியுமா என ஒரு ராணுவ வீரன் சைகையால் பாதி தமிழும் பாதி சிங்களமும் கலந்து கேட்டான். சிவம் ஓம் என்பது போல தலையை ஆட்டினான். துரைக்குப் பசியும் தாகமும் எடுக்கத்தொடங்கியது. சிவத்தின் கைக்கட்டை அவிழ்த்த ராணுவச்சிப்பாய், பவானியார் தென்னந்தோப்புக்குள்ளிருந்த தென்னையில் ஏறி இளனி பறிக்கும்படி சிவத்துக்குக் கட்டளையிட்டான். சிவம் துவாயைத் தளைநார்போலக் கட்டி காலுக்குள் கொழுவிக் கொண்டு தென்னையில் ஏறி இளனியாகப் பார்த்துப் பறித்துப்போட்டான்.

சிவம் துவாய்த் துண்டால் முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு துரைக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்துகொண்டான். அவர்கள் இளநீர் வெட்டிக் குடித்தார்கள். பின் கோம்பையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளந்து வழுக்கையை வழித்துத் தின்றார்கள். பியூன் துரையின் வயிறு குத்துவலியுடன் காந்தத் தொடங்கியிருந்தது. இளனி குடித்த ராணுவம் சிவத்தை ஓடும்படி கட்டளையிட்டது. சிவம் அவர்களைப் பார்த்தபடி நடந்து போனான். ராணுவம் அவனை ஓடும்படி அதட்டினார்கள். அவன் உயரத்துக்கு ஓடுவதும் நடப்பதும் வினோதமாக இருந்தது. ராணுவச்சிப்பாய்கள் தங்களுக்குள் ஏதோ கதைத்துக் கொண்டார்கள். பின் அவர்கள் சிவத்தைத் திரும்பிவருமாறு கூப்பிட்டார்கள். வீதிக்குக் குறுக்காக ஒரு கோட்டைத் தன் துவக்குமுனையின் பைனட்டால் ஒரு ராணுவச்சிப்பாய் கீறினான். பின் சிவத்தை ரேஸ் ஓடுவதற்குத் தயாராவதுபோல கோட்டின் விளிம்பில் குந்தவைத்தான். தான் மேலே சுட்டதும் ஓடவேண்டும் எனச் சிங்களத்தில் கட்டளையிட்டான். பின் தன் துவக்கில் ரவையை நாண் ஏற்றி உயர்த்திப் பிடித்தபடி சிங்களத்தில் திரும்பிப்பார்க்காது ஓடவேண்டும், நடக்கக்கூடாது என எச்சரிக்கை செய்தான். பின்னால் நின்ற சில ராணுவச்சிப்பாய்கள், தாம் குடித்த இளனிக் கோம்பைகளையும், சின்னச் சின்ன குரும்பைகளையும் கையில் எடுத்துக்கொண்டார்கள்.

ராணுவச்சிப்பாயின் மேல்வெடியுடன் சிவம் ஓடத்தொடங்கினான். உயரமான அவன், நெஞ்சுப் பகுதிக்குள் கையைப் பிடித்தபடி கூனல்முதுகுடன் ஓடுவது வினோதமாக இருந்தது. பின்னாலிருந்து ராணுவச்சிப்பாய்கள் இளனிக் கோம்பைகளையும் சின்னக் குரும்பை களையும் அவன்மீது இலக்கு வைத்து எறிந்தார்கள். சிவம் அந்த நாய்க்களித்தரைவீதியில் ஓடிக்கொண்டிருந்தான். கூழாவடிப்பக்கமிருந்து வீதிக்கு ஏறி வந்த இன்னொரு ராணுவச்சிப்பாய்களின் குழு, வெடியோசையைக் கேட்டார்கள். அதைத் தொடர்ந்து ஓடிவரும் சிவத்தையும் கண்டார்கள். அவர்களது துப்பாக்கிகள் சிவத்தைப் பார்த்து வெடிக்கத் தொடங்கின. ஓடிக்கொண்டிருந்த சிவம் பின்னால் தூக்கி வீசப்பட்டுக் களித்தரைவீதியில் புழுதி எழ உரசிக்கொண்டு விழுவதை பியூன் துரை கண்டார். நீண்டு நெடுத்த சிவத்தின் கால்கள் வெயிலில் வீதியில் கிடக்க, கூனலான உடல் வீதிக்கு வெளியே புற்தரையில் கிடந்தது. சிவத்திடமிருந்து அலறல் சத்தமோ முனகலோ துரைக்குக் கேட்கவில்லை.

''அனே பவ்'' என்று பின்னாலிருந்த சிப்பாய் ஒருவன் முனகியது போலத்தான் துரைக்கு இருந்தது. சிலவேளை அது அவரது பிரமையாகக்கூட இருக்கலாம். கூழாவடிப்பக்கமிருந்து வந்த ராணுவச்சிப்பாய்களில் அதிகாரி ஒருவனும் இருந்தான். அவன் இங்கு இருந்த ராணுவச்சிப்பாய்களைக் கடுமையாக எச்சரிப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரையால் விளங்கிக்கொள்ளமுடிந்தது. அந்த அதிகாரி துரையைக் காட்டி ஏதோ கேட்டான். ஒரு சிப்பாய் நோட்டிஸ்களை அதிகாரியிடம் மரியாதையாகக் கையளித்தான். நோட்டிசை வாங்கிப் பார்த்த அதிகாரி, தன்னுடன் வந்த சிப்பாய்க்கு ஏதோ கட்டளை பிறப்பித்தான். அங்கே நின்ற மற்ற ராணுவக்குழுவுக்கும் ஏதோ கட்டளை பிறப்பித்தான். பரபரப்பான அவர்கள் திரும்பவும் பிரதானவீதிக்குப் போகத் தயாரானார்கள். பியூன் துரை எழுந்து நிற்க பிரயாசைப்பட்டார். வயிற்று வலியாலும் நீண்ட நேரம் உணவு இல்லாததாலும் பின்னால் கை கட்டப்பட்டிருந்ததாலும் எழும்பமுடியாது தவித்தார். அதிகாரி தன்னுடன் கூட வந்த சிப்பாய் ஒருவனுக்கு ஏதோ கட்டளை பிறப்பித்தான். அந்தச் சிப்பாய் தன் துவக்கைத் தோளில் கொழுவிவிட்டுத் தென்னந்தோப்புக்குள் நீளமாக வளர்ந்துகிடந்த கொடிகளை அறுத்துக் கயிறு போல திரித்துக்கொண்டான். ராணுவ அணி பிரதானவீதி நோக்கி நடக்கத்தொடங்கியது.

கொடிகளைக் கயிறு போல திரித்தெடுத்த சிப்பாய் துரையின் கழுத்தில் மாலை போல கொடியைப் போட்டுத் திருகிப் பிடித்துக் கொண்டான். பின் மற்ற சிப்பாய்களைப் போல பிரதான வீதி நோக்கி நடக்கத்தொடங்கினான். பியூன் துரை எழ முயற்சித்தார். அவர் தலை அந்தரத்தில் உயர்ந்திருக்க, முதுகுப்பகுதி, இடுப்பு, கால் எனத் தரையில் உரச இழுத்துக்கொண்டு நடந்துபோனான் சிப்பாய். அவரது கோறையான உடல் அவனுக்குப் பாரமாக இருந்திருக்காது. காய்ந்த முருங்கைச்செத்தல் மரத்துண்டு போல வீதியில் உருண்டு பிரண்டு இழுபட்டுப்போனது அவரது உடல். உயிருள்ள உடலுக்கான எந்தவித பிரயத்தனமும் இன்றி இழுபட்டுப்போனார். பிரதானவீதியில் மாதா கோயிலுக்கு எதிரே இவர்களுக்காக ராணுவ றக் வண்டி ஒன்று நின்றுகொண்டிருந்தது. உடல் முழுவதும் சிராய்ப்புக் காயங்களுடன் மயங்கிக்கிடந்த பியூன் துரையை அவர்கள் றக் வண்டியில் தூக்கிப் போட்டார்கள். வெவ்வேறு இடங்களில் ராணுவம் பிடித்துக்கொண்டு வந்தவர்களையும் ராணுவ றக் வண்டியில் ஏற்றினார்கள். பின் குச்சவெளிப்பக்கமாக றக் வண்டி உறுமிப் பாய்ந்துபோனது. பின்னால் ராணுவ வாகனங்களும் கவச வாகனங்களும் சென்றன.

துப்பாக்கி வேட்டோசைகள் அடங்கி, ராணுவ வாகனங்களின் இரைச்சல் ஓய்ந்தபின்னும் நீண்ட நேரமாக நிலாவெளிக் கிராமம் மயான அமைதியில் உறைந்துபோய்க்கிடந்தது. முதலில் வயதான ஆண்களும் பெண்களும் வீடுகளுக்குள்ளும் வளவுகளுக்குள்ளுமிருந்து வீதிக்கு வெளியே வந்து நிலைமையைக் கணிக்க முனைந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகளில் ராணுவத்தால் சுடுபட்டுக்கிடந்தவர்களை இனங்காண முனைந்தார்கள். வெளியே வந்த வயதானவர்கள் கத்தரி, கொச்சி, போயிலைத்தோட்டங்களின் விளிம்பில் நின்றும் தோட்டக்கிணறுகளுக்கு அருகில் போயும் உறவுகள் ஒளிந்திருக்கக்கூடும் என நம்பிய இடங்களில் நின்று, தம் உறவுகளின் பெயர் சொல்லி இரைச்சல் இல்லாது மென்மையான குரலில் அழைத்துக்கொண்டிருந்தார்கள். எதிரில் வரும் வயதான மற்ற உறவுகளுடன் கொஞ்சம் சத்தமாக உரையாடி கிராமத்துக்குள்ளிருந்து ராணுவம் வெளியேறிவிட்டதை ஒளிந்திருந்த உறவுகளுக்குத் தெரிவிக்க முனைந்தார்கள்.

காட்டுக்குள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடியவர்களும் தப்பிப்போன இயக்கப் பொடியங்களும் திரும்பவும் போக்குவெயில் முதுகில் விழ, உப்பளக் கரச்சிவெட்டையைத் தாண்டிக் கிராமத்துக்குள் வந்தார்கள். பசியுடனும் தாகத்துடனும் அவர்கள் கிணற்றிலிருந்து தண்ணீரள்ளி வயிறு நிறையும் மட்டும் குடித்தார்கள்.

பிடிபட்டவர்களின் உறவுகள் மாதா கோயில் சந்தியில் நடுவீதியில் குந்தியிருந்து மாரிலடித்து ஒப்பாரிவைத்தார்கள். காயம்பட்டுக்கிடந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டுபோகும் முயற்சியில் இறங்கினார்கள்.

அரியம் பள்ளத்திலிருந்து எழுந்து கத்தரித்தோட்டத்துக்கு வெளியே வந்தான். மாடுகள் படுத்துக்கிடக்கும் திடலிலிருந்த புளியமரத்துக்குக் கீழே, தடித்த ராணுவச் சப்பாத்துத் தடங்களும் சாப்பாடு கட்டி வந்த பேப்பர்களும் பிஸ்கட் உறைகளும் கிடந்தன. ராணுவம் இந்த இடத்தில் நீண்ட நேரம் தரித்திருந்திருக்கிறது, ராணுவம் தனக்கு மிக நெருக்கமாக இருந்திருக்கிறது என்ற நினைப்பு அரியத்தை நடுங்கவைத்தது. அரியம் கண்ணகையம்மன் கோவிலடியை நோக்கி நடந்தான். கோவிலடியில் தாயும் வதனியும், அன்னம்மாக் கிழவியும் தான் வரும் திசைக்கு எதிர்த்திசையில் தன்னை எதிர்பார்த்து வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டான். அரியத்தைக் கண்டதும் தாய் குசினிக்குள் தேத்தண்ணி வைக்க உள்ளே போனாள். அரியம் கண்ணகையம்மன் கோயில் கிணற்றில் தண்ணீரள்ளித் தலையில் வார்த்துக்கொண்டு தண்ணீரைக் குடித்துத் தன் தாகத்தையும் பசியையும் தணித்துக்கொண்டான். தலையைத் துடைத்து சாரத்தை மாற்றிக்கொண்டு தனக்காகக் காத்துநிற்கும் அன்னம்மாக் கிழவியிடம் போனான். கிழவி தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த பட்டர் றசுக்குப் பக்கட்டைக் கொடுத்துவிட்டு அவன் தலையைத் தடவிவிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிப்பிள்ளையரின் பட்டிப்பக்கம் போனாள். அரியம் பட்டர் நசுக்கைக் கடித்துக்கொண்டே குலத்தையும் சோமியையும் காண கரச்சிவெட்டை உப்பளப்பக்கம் அவர்களது குடியிருப்பை நோக்கி நடந்தான்.

## 4.5

அரியம் சுடலையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான். ஆங்கிலேயர் காலத்து முகடு சிதைந்த சிற்றோடு வேய்ந்த மெத்தைவீட்டுச் சந்தியிலிருந்து நூலகத்தையொட்டிக் கடற்கரை நோக்கிப் போகும் மணல் வீதியில் அரியம் ஓடிக்கொண்டிருந்தான். வெம்மை தணிந்த மாலைநேரப் போக்குவெயிலில் அவன் நிழல் நீளமாக முன்னே மணலில் படிந்தபடி அசைய அரியம் ஓடிக்கொண்டிருந்தான். அவனுக்கு முன்னும்பின்னுமாக சிறுவர்களும் இளைஞர்களும் நடுத்தர வயதானவர்களும் எனப் பலர் கடற்கரைப்பக்கமிருந்த சுடலையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தார்கள். முதியவர்கள் தமக்கு இயலுமான வேகத்தில் சுடலையை நோக்கி நடந்தார்கள். முதலில் குண்டுவெடித்த ஓசையின் அதிர்வில் பயந்து ஒடுங்கி ஒளிவதற்கு இடம் தேடினார்கள் நிலாவெளி கிராமத்தவர்கள். பின்னர் செய்தியறிந்து கடற்கரையிலிருந்த சுடலையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தார்கள். அரியம் கடற்கரையை நெருங்கியபோது ஏற்கனவே வந்து சேர்ந்திருந்தவர்கள் கடற்கரை மணலில் பள்ளமும் திடலுமாகக் கிடந்த சுடலையில் படர்ந்துகிடந்த பசிய அடம்பன் கொடி இலைகளை மிதித்துக்கொண்டு கூட்டமாக நின்றிருந்தார்கள்.

இரண்டு நீளமான தடிகளில் மூட்டிய சாரத்தைக் கோர்த்து ஸ்டெச்சர் மாதிரி வைத்திருந்தார்கள். காயம்பட்ட கூட்டுறவுச்சங்கத் தலைவர் கனகரெத்தினத்தை அதில் கிடத்தி நாலுபேர் காவிக்கொண்டு குழுமி நின்றவர்களை விலக்கிச் சுடலையிலிருந்து பிரதானவீதிக்கு ஓடினார்கள். சிலர் பின்னால் ஓடினார்கள். அவரைத் தூக்கி வழத்தியவர்களின் உடலில் இரத்தம் படிந்துகிடந்தது.

நேற்று அதிகாலையில் ஆமி கிராமத்துக்குள் நுழைந்தபோது முதலில் சுட்டது புள்ளகுளத்துப் பாலத்தில் சென்றி இருந்துவிட்டு வந்து படுத்துக்கிடந்த புளட் இயக்கப் பொடியள் இரண்டு பேர்களைத்தான். அதில் ஒருவன் மட்டக்களப்புப் பொடியன். மற்றவன் மூதூர்ப் பொடியன். இரண்டு பேர்களதும் உடலை இன்று பின்னேரம்தான் அடக்கம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அடக்கம் செய்யும்போது அவர்களுக்கு மரியாதை செய்வதற்காக இயக்கப் போராளி J.R. கிறினெட்டை வெடிக்கச்செய்ய முனைந்தார். J.R. கிறினெட் மற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறினெட் போல கிலிப்பைக் கழற்றிப்போட்டு எறியும் கிறினெட் இல்லை. அது கையில் குத்தி நொப்பைத் தெறிக்கப்பண்ணிய பிறகுதான் எறியவேண்டும். இயக்கப் போராளி J.R. கிறினெட்டை கடற்கரையில் நின்ற தென்னையில் குத்தி இழுத்து வெடிக்கவைக்க முயற்சி செய்தார். கை நழுவிய J.R. கிறினெட் தரையில் விழுந்து வெடித்தது. போராளி அந்த இடத்திலேயே உடல் சிதறிப்போனான். கிறினெட் வெடித்தது கடற்கரை பள்ளப்பகுதி என்பதால் கூடி நின்ற சனத்துக்கு ஏதும் நடக்கவில்லை. குண்டை வெடிக்கப்பண்ணவேண்டாம் சனம் பயப்பிடும் என்று சொல்லப்போன கூட்டுறவுச்சங்கத் தலைவர் கனகரெத்தினம் காயப்பட்டிருந்தார்.

தனக்கு முன்னமே வந்திருந்த குலத்துடனும் சோமியுடனும் அரியம் சனத்துக்குள் புகுந்துகொண்டான். சிதறிய போராளியின் உடலை நிலத்தில் விரித்திருந்த வாழை இலையில் வைத்திருந்தார்கள். தென்னைமரத்தடி வேர்களைச் சில்லம்பலமாகக் கொத்திக் குழிவெட்டியதுபோல பள்ளமாகிக்கிடந்தது. தென்னையின் பட்டைகள் கோறையாகப் பெயர்ந்து தென்னை மரம் சாய்ந்துபோய்க் கிடந்தது. தென்னையில் இரத்தமும் தசைத் துணுக்குகளும் படிந்துகிடந்தன. இரத்தம் வாழை இலையிலிருந்து நிலத்தில் வடிந்துகொண்டிருந்தது. சதைத் துணிக்கைகளும் இரத்தமும் கலந்து தெறித்ததில் அடம்பன் கொடி இலைகள் சிவப்பாகக் கிடந்தன. இரத்த வெடுக்கு அந்த பிரதேசத்தையே மூச்சுமுட்டவைத்துக்கொண்டிருந்தது. கடலலைகளின் உரத்த இரைச்சலையும் மீறிக் கடலில் கன்போட்டின் இரைச்சல் கேட்டது. குச்சவெளிப்பக்கமிருந்து போக்குவெயிலில் மினுங்கியபடி கன்போட் ஒன்று நகர்ப்பகுதியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. நடை துவண்டுபோன குலமும் சோமியும் அரியமும் அங்கிருந்து நகர்ந்து நிலாவெளிக் கிராமத்துக்குள் போனார்கள்.

## 4.6

கிராமசேவகர் சரவணமுத்துப்பிள்ளையின் பார்வை, தான் நின்றிருந்த சடைத்துப் பெருத்த கூழாமரத்தின் அகன்று விரிந்த அடிப்பகுதியைப் பற்றியபடி மண்ணுக்குள் புதையும் வேர்களின்மீது நிலைத்துக்கிடந்தது. எந்த ஒரு பிரயோசனமுமின்றி அடிமுடி தேடிப்போன படைத்தல் கடவுளையும் காத்தல் கடவுளையும் சபித்தார். வேலையில்லாத வெட்டிப் பயல்கள். ஓய்வின் விளிம்பில் அவர் நின்றிருக்கும் காலம். அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு இன்னும் சில மாதங்களில் அவருக்கு ஓய்வு கொடுத்துவிடும். மசிறாண்டிகள். யாருடைய அரசு யாருக்கு ஓய்வு கொடுப்பது. அவரைச் சுற்றிக்கிடக்கும் சொத்துக்களுக்கும் பிள்ளைகள் வழி வந்து குவிந்துகொண்டிருந்த வருமானத்துக்கும் முன்னால் இந்த ஓய்வூதியப்பணம் வெறும் பிச்சைக்காசுதான். எல்லாவற்றையும் உதாசீனம் செய்யும் மனநிலைக்கு வந்திருந்தார் கிராமசேவகர் சரவணமுத்துப்பிள்ளை. அவரது இரண்டாவது மகள் சுசீலாவின் கணவர்தான் கணேஸ். யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் ஓடிக்கொண்டிருந்த தனியார் பஸ்தான் கணேஸ் பஸ். அன்று திரியாய்ப் பகுதியில் வைத்துக்கடத்தப்பட்டது. பின் பஸ் மட்டும் உப்புவெளி பொலீஸ் நிலையத்தில் கிடந்தது. பயணிகள் என்னவானார்கள், அன்று பஸ்சை ஓட்டிச்சென்ற தன் மருமகன் கணேஸிற்கு என்னவானது என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.

இந்த கிராமசேவகர் உத்தியோகம் தந்தைவழி முதுசமாக தந்தையின் மரணத்துக்குப்பின் இருபத்தைந்து வயதில் அவருக்குக் கிடைத்துவிட்டது. அவர் கிராமசேவகராக இந்த நிலாவெளிக் கிராமத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றபோது அது ஒரு கௌரவப் பதவியாகத்தானிருந்தது. ஊதியமோ ஓய்வூதிய உரித்தோ இல்லாத பதவி. பின்னாட்களில் இடையில்தான் இவை எல்லாம் வந்து அந்தப் பதவியுடன் ஒட்டிக்கொண்டன. தான் பிறந்து வளர்ந்த நிலாவெளிக் கிராமத்தின் இன்மை, வறுமை, சுகம், துக்கம், கிராமசேவகர் அதிகாரப்பணி, சமூகப்பணி என முப்பத்தைந்து வருடங்கள் சேவையாற்றியிருக்கிறார். எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும் தான் மௌனியாக நின்று எதிராளியைப் பேசவிட்டு அவனிடமிருந்தே தீர்வையும் கிரகித்துக்கொள்ளும் ஆற்றல் உள்ளவராகத்தான் அவர் இருந்தார். ஆக மிஞ்சிப்போனால், தன் இமைகளை அகல விரித்து அதிகாரத் தோரணையுடனான ஒரு கோபப்பார்வை போதும், எதிரி ஒடுங்கி சரணடைந்துவிடுவான். இல்லையென்றால் ஒரு அதட்டல். அப்படித்தான் ஊரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். ஆனால் இன்று கூழாமரத்தின் அடிவேரை வெறுமனே வேடிக்கை பார்க்க வைத்துவிட்டார்களே என ஆதங்கப்பட்டுக்கொண்டார்.

இந்த அரசுக்கு எப்போதாவது தான் விசுவாசமில்லாது தன் கடமையை அல்லது அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்திருக்கிறேனா எனத் தன் நினைவுகளின் அடுக்குகளுக்குள் தேடிக்கொண்டிருந்தார். இயக்கங்கள் ஆயுதங்களுடன் ஊருக்குள் நடமாடுகின்றன. இதைத் தான் அரசுக்கு அறிக்கையிடமுடியுமா. சில வேளை தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கையிட்டிருந்தால் இந்த அகோரமான படுகொலைகள் நிகழாது தடுத்திருக்கமுடிந்திருக்குமோ. இங்கு தம்மைப் போன்றவர்களுக்கு எந்த வேலையும் இல்லை. எஞ்சிக்கிடக்கும் வாழ்வின் நாட்களையா, நிமிடங்களையா, வினாடிகளையா எதை எண்ணுவது என்று தெரியவில்லை எனத் தனக்குத்தானே சொல்லிக்கொண்டார்.

தன் தமையன் காசிப்பிள்ளை கல்வியில் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை. தன் சொத்தை மட்டும்தான் அவர் தந்தை இருவருக்கும் பிரித்துக்கொடுத்தார். தன் தந்தை சேர்த்து வைத்துவிட்டுப் போன சொத்துக்களைவிட கிராமசேவகர் சரவணமுத்துப்பிள்ளை நேசித்தது தந்தையின் முதுசங்களாகத் தனக்குக் கிடைத்த இந்தப் பதவியையும் தந்தை பாதுகாத்து வைத்துவிட்டுப்போன ஆங்கிலேயர் காலத்திலிருந்து பேணப்பட்ட கிராமநிர்வாக அறிக்கைக் கோப்புகளையும் தந்தையின் நாட்குறிப்புப் புத்தகங்களையும்தான். அந்த அறிக்கை களையும் நாட்குறிப்புக்களையும் படித்துத் தன் கடமையையும் நிர்வாகத் திறனையும் வளர்த்துக்கொண்டவர் அவர். எத்தனை பிரச்சனைகள். கோட், கச்சேரி, பொலீஸ் ஸ்டேசன் என ஏறி இறங்கியிருப்பார். அவரது நிர்வாகத்திறன், பிரச்சனைகளை அணுகும்முறை, மற்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் ஆலோசனை என்பவற்றால் தன் அதிகாரப் படிநிலைக்கும் அப்பாலான கௌரவத்தையும் மரியாதையையும் பெற்றவர் அவர்.

மீசைமுடி கறுக்காத ராணுவச்சிப்பாய் அறைந்திருந்தான், அதுவும் அவர் மனைவி முன்னிலையில். தன் பதவி நிலை, தன் கடமைகளைத் தெளிவான சிங்கள மொழியில் அவர் சொல்லியிருந்த போதும் அவன் அறைந்தான். அவரின் வயதைக்கூட கவனிக்காது சப்பாத்துக்காலால் அவர் தொடையில் எட்டி உதைத்தான். அவர் உடல் அவமானத்தால் கூனிக்குறுகிப்போனது. தன் உடலிலிருந்து தன் உயிர் இன்னும் பிரியாதிருப்பதற்காக வெட்கப்பட்டார். அவரது அரசபதவி இலட்சினைகளையும் நாட்குறிப்புக்களையும் கிளறி எறிந்தார்கள். தன் தந்தையின் முதுசம் எனப் பேணி வந்த நாட்குறிப்புக்களையும் அறிக்கைக் கோப்புக்களையும் வீடு முழுவதும் சோதனை என்ற பெயரில் விசிறி இறைத்திருந்தார்கள். அவர்கள் சூறையாடிவிட்டுப்போன வீட்டை ஒழுங்குபடுத்தும் மனநிலையில் அவர் இருக்கவில்லை. அவற்றை எல்லாம் அப்படியே விட்டுவிட்டுத்தான் இரண்டு மூன்று நாட்களாக ஊருக்குள் அறிக்கைப் பதிவேடும் நாட்குறிப்புக் கொப்பியுமாகத் திரிந்துகொண்டிருந்தார். எந்தப் பிணம் எந்தப் புதருக்குள் தோட்டப்பிட்டிக்குள் நாறிக்கிடக்கிறதோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மனதைப் போலவே, தோளில் சுமந்திருக்கும் லெதர் பைக்குள் இருக்கும் நாட்குறிப்புக் கொப்பியும் அறிக்கைப் புத்தகங்களும் கனதியாக இருக்கின்றன. அவர் தலைக்குள்ளிருந்து வடிந்து வந்த வியர்வைத்துளி கன்னங்களில் வழிந்து நெஞ்சில் விழுந்தது. பொழுது மதியத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. தொடர்ந்து ஊருக்குள் நடக்கக் கால்கள் மறுத்தன. நிற்பதற்குக்கூட சிரமப்பட்டார். கூழாமரத்தின் வேர்களைப்போல தடித்த வேர்கள், தன் கால்களைப் பற்றி மணலுடன் வலுவாகப் பிணைத்துத் தன்னைத் தாங்கி நிற்காதா என ஏங்கினார்.

எந்த அரசாங்கத்துக்கு இதை எப்படி அறிக்கையிடுவது. அவரது தந்தையுடைய காலத்திலும் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்ததாக அவரது டயரிக்குறிப்பில் படித்தது ஞாபகம் வந்தது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதுகளில் ஆங்கிலேயர் காலத்தில் அது நடந்திருந்தது. நிலாவெளி உப்பள ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டபோது ஆங்கிலேய அரசு வேறு மாவட்டத்திலிருந்து ஊழியர்களைக்கொண்டுவந்து உப்பளத்தை இயங்கவைக்க முனைந்தபோது கலவரம் வெடித்தது. அதை அடக்க வந்த ஆங்கிலேய அரசப்படை துப்பாக்கிப்பிரயோகம் செய்யும் நிலை ஏற்பட்டபோது உப்பள ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் நாற்பத்து நான்கு பேர் ஆண் பெண் வேறுபாடின்றிக் காயமடைந்ததாக அந்த நாட்குறிப்பில் தந்தை குறிப்பிட்டிருந்தது அவருக்கு ஞாபகம் வந்தது. அவரது தந்தை ஆங்கிலேய அரசப்படை தன் மக்கள் மீது நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தினாலேயே அந்த அசம்பாவிதம் நிகழ்ந்ததாக ஆங்கிலத்திலும் தமிழிலும் நேர்மையாகப் பதிவு செய்திருந்தார். இந்த நிகழ்வைத் தன்னால் நேர்மையாகப் பதிவுசெய்யமுடியுமா எனத் தனக்குத்தானே கேட்டுக்கொண்டார் கிராமசேவகர் சரவணமுத்துப்பிள்ளை.

காயப்பட்டது என்னவோ வெறும் ஐந்து பேர்கள்தான், அவர்களை நிலாவெளி ஆஸ்பத்திரியிலிருந்து திருகோணமலை நகர ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்விட்டார்கள். காசிப்பிள்ளையின் கொச்சித்தோட்டத்துக்குள் இறந்தநிலையில் நேற்று மீட்கப்பட்ட முருகன் கோயில் குருக்களின் மகன் சர்வானந்தசர்மாவின் உடலுடன் நிலாவெளிக் கிராமத்து இளைஞர்கள், நடுத்தர வயதினர் எனப் பத்தொன்பது பேர் இறந்துபோயிருந்தார்கள். இரண்டு இயக்கப் பொடியள் வாசகசாலை வெளிவிறாந்தையில் கொல்லப்பட்டிருந்தார்கள். முந்தைய நாள் சுடலையில் கைத்தவறி வெடித்த குண்டினால் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கப் பொடியன் இறந்து போனான். ஊரவர் ஒருவர் காயப்பட்டிருந்தார். ராணுவம் சந்தேகத்தின் பேரில் பதினொரு பேரைக் கைதுசெய்து கொண்டு போயிருந்தது. இந்த விபரங்களை அப்படியே அரசுக்கு அறிக்கையிடமுடியுமா. இல்லை நாட்குறிப்பில்தான் எழுதமுடியுமா.

இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச்சூட்டிலும் குண்டுவெடிப்பிலும் நிலாவெளி கிராமத்துக்குள் காயப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆறு. எப்படி ராணுவம் சுட்டதில் இறந்தார்கள் எனப் பதிவுசெய்ய முடியாதோ அதே போல இயக்கத்தவர் இறந்ததையும் பதிவுசெய்ய முடியாது. வெளியூரிலிருந்து தொழிலுக்காக வந்த மூவர் இறந்ததாகத்தான் கணக்குக்காட்டமுடியும். இறந்தவர்களின் எண்ணிக்கை இருபத்து இரண்டு. காணாமல் போனோரின் எண்ணிக்கை பதினொன்று, இப்படித்தான் பெயர் விபரங்களுடன் அறிக்கையிடமுடியும். நாட்குறிப்பிலும் எழுதமுடியும். நெஞ்சுக்குள் எதுவோ ஓடிப் பின் அறுந்துவிட்டதுபோலும், சின்னதாய் ஒரு வலி சுரீரென்று இருந்தது போலவும் உணர்ந்தார் சரவணமுத்துப்பிள்ளை.

நிலாவெளிக் கிராமத்தைச் சுடுகாடாக்கிய ராணுவம், அங்கிருந்து புறப்பட்டுப்போய், இயக்கம் அடித்துக் கைப்பற்றிய குச்சவெளி பொலீஸ் ஸ்டேசன் இருந்த இடத்தில் முகாமடித்துக் கொண்டது. நேற்று ராணுவத்தால் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்கக்கோரி, கிராமத்தைச் சேர்ந்த வயதான கோயில் தலைவர்கள், கிராமோதயத் தலைவர்கள் எனப் புறப்பட்டுப் போனார்கள். கிராமசேவகர் என்ற முறையில் அவரையும் அழைத்திருந்தார்கள். தன் உடல்நலக்குறைவைக் காரணம்காட்டிப் போக மறுத்துவிட்டார். அந்த மீசைமுடி கறுக்காத ராணுவச்சிப்பாயின் முகம் அவர் மனதில் கனன்றுகொண்டிருந்தது. தன் கிராமத்தைச் சேர்ந்தவர்களைக் காக்கும் கடமையிலிருந்து தான் நழுவிவிட்டது போலத்தான் அவர் மனம் அவரை அரித்துக் கொண்டிருந்தது. திரும்பவும் நெஞ்சில் ஒரு வலி ஓடி அறுத்தது.

தாங்கமுடியாத வலியையும் நோவையும் நெஞ்சுக்கூட்டுக்குள் உணர்ந்தார். மெல்ல மணலில் குந்தி கூழாமரத்தில் தன் முதுகைச் சாத்தி அமர்ந்துகொண்டார். வலியின் தீவிரம் கூடிக்கொண்டேயிருந்தது. தாறுமாறாக எகிறும் இதயத்துடிப்பை நெஞ்சைப் பொத்தியிருக்கும் கையில் உணர்ந்தார். கண்கள் இருட்டிக்கொண்டு வந்தன. உடல் வியர்க்கத்தொடங்கியது. மழையில் நனைந்ததுபோல வியர்வையால் உடல் ஈரலிப்பாக மாறிக்கொண்டிருப்பதை உணர்ந்தார். பின் மெல்லமெல்ல கொஞ்சம்கொஞ்சமாக நினைவுகளற்றுப்போவதை உணர்ந்தார் கிராமசேவகர் சரவணமுத்துப்பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4.7

அடம்போடை மலைச்சாரலில் காசிப்பிள்ளையரின் மாடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அரியம் நூற்றுக்கணக்கான பட்டிமாடுகளுக்கும் பற்றைகளுக்கும் சிறிய கற்பாறைகளுக்குமிடையே ஓடினான். வேகமாக ஓடிவந்து பின் நிலத்தில் விழுந்து உருண்டு கால்களை நண்டுப் பாலிக்குள் முதலில் இறக்கிப் பின் தன் உடலையும் புகுத்திக்கொண்டான் அரியம். பாலைக் கொடிகளை இழுத்துத் தலைக்கு மேலே மூடிக்கொண்டான். சுற்றிவரக் கரச்சிவெட்டையை அண்டிய சிறிய கண்டல் தாவரங்கள் நின்றிருந்தன. மதியநேர வெயில் உச்சந்தலைக்கு நேர் மேலே நின்றது. சிறிய பாலைக்கொடி இலைகளை ஊடறுத்து வந்த சூரிய ஒளி அரியத்தின் தோளிலும் தலையிலும் படிந்துகிடந்தது. கால்களும் உடலும் குளிர்ச்சியிலிருக்க, தோளும் தலையும் வெயிலில் சூடேறிக் கொதிக்கத்தொடங்கின. புள்ளகுளத்துப்பாலப்பக்கம் குண்டுவெடிக்கும் சத்தமும் அதைத் தொடர்ந்து துப்பாக்கி வெடிச்சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்டதால் தான் அரியம் ஓடிவந்து நண்டுப்பாலிக்குள் ஒளிந்துகொண்டான். இந்தக் கரச்சிவெட்டையில் இலைகள் தடித்த கண்டல் தாவரங்களுக்குள் நிறைய சின்னதும் பெரியதுமான நண்டுப்பாலிகள் இருக்கின்றன. குலமும் சோமியும் முதலில் ஆக்கள் இறங்கி ஒளியக்கூடிய நண்டுப்பாலிகள் இருக்கின்றன எனச் சொன்னபோது அரியம் நம்பவில்லை.

கவச வாகனங்கள் சகிதம் ராணுவ வாகனத் தொடரணி, புள்ளகுளத்துப்பாலப்பக்கமிருந்து குச்சவெளிப்பக்கமோ குச்சவெளிப் பக்கமிருந்து புள்ளகுளத்துப்பாலப்பக்கமோ நேரம் காலம் இல்லாது போகும். இப்படிப் போகும்போது ராணுவம் சனத்துடன் முண்டவோ கிராமங்களுக்குள் இறங்கவோமாட்டார்கள். தரை வழியாகவும் கடல் வழியாகவும் ராணுவம் ஆயுதத் தளபாடங்களைக் கொண்டு போய்க் குச்சவெளி ராணுவ முகாமை பலப்படுத்திக்கொண்டிருந்தது. அப்படி ராணுவத் தொடரணி எந்த முனையிலிருந்து புறப்பட்டாலும் இயக்கம் சில துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்கும் அல்லது குண்டை வெடிக்கவைத்துச் சிறிய எதிர்ப்பைக் காட்டுவார்கள். சிலவேளை ராணுவமே தன் வரவை வேட்டுக்களைத் தீர்த்து அறிவித்துவிட்டுத்தான் வரும். ராணுவ வாகனத் தொடரணி போகும்போது வீதி வெறிச்சோடிப் போய்விடும். நிலாவெளி கிராமத்துச் சனம் ஒளிந்துகொள்தற்கு நிறையவே இடங்களைத் தெரிந்துவைத்திருந்தது. எங்கெங்கு நிற்கிறார்களோ அங்கங்கேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் மறைந்துகொள்வார்கள். இப்போது உப்பளக் கரச்சிவெட்டையைத் தாண்டிக் காட்டுக்குள் ஓடுவதில்லை. வாகனத் தொடரணிக்குப் பாதுகாப்புக் கொடுத்தபடி தாழப்பறக்கும் ஹெலிக்கப்டர் கரச்சிவெட்டை, காடு என்று சுட்டுக்கொண்டு போகும்.

இன்று நடுமதியத்தில் கிளம்பியிருக்கிறது ராணுவ வாகனத் தொடரணி. அரியம் இன்னும் மதியச்சாப்பாடு சாப்பிடவில்லை. அரியத்தின் மதியச்சாப்பாட்டுப் பொட்டணி அத்திமரக்கெந்தில் தொங்கிக்கொண்டிருந்தது. சிலவேளை அந்தச் சாப்பாட்டைக் காகம் கொத்திச் சிந்திவிடவும் கூடும். எப்படியும் வாகனத் தொடரணி நிலாவெளிக் கிராமத்தைத் தாண்டிப்போக இரண்டு மணித்தியாலங்களாவது செல்லும். சிலவேளைகளில் பதுங்கியிருக்கும் இயக்கம் கைக்குண்டுத் தாக்குதலோ துப்பாக்கிப் பிரயோகமோ செய்யக்கூடும். அப்படி நடந்தால் ராணுவம் கடும் துப்பாக்கிப் பிரயோகத்துடன் கடந்துபோகும். அப்படியான நேரங்களில் கிராமத்தைக் கடந்துபோக வாகனத் தொடரணிக்கு மூன்று நான்கு மணித்தியாலங்கள்கூட பிடிக்கும். அப்படி கட ந்துபோகும்போது நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் வடுக்களை, வீதியோர வீடுகள், பள்ளிக்கூடக் கட்டடம், நூலகக் கட்டடம், கடைகள், மரங்கள் எனக் எல்லாவற்றிலும் காணமுடியும்.

தூரத்தே ஹெலிக்கப்டர் சூகைகளின் சடசடப்பொலி கேட்கத் தொடங்கியது. அப்படியென்றால் வாகனத் தொடரணி ஏழாம்கட்டைத் தாண்டி அடம்போடை மலையை நெருங்கிவிட்டது என அரியம் நினைத்தான். கவச வாகனங்களின் உறுமும் சத்தம் கேட்டது. ஹெலிக்கப்டர் சத்தம் நெருங்கி வந்துகொண்டிருந்தது. அரியம் தலையை நிமிர்த்திப் பாலைக்கொடி இலைகளை ஊடறுத்து வானத்தைப் பார்க்க முனைந்தான். நண்டுப்பாலியின் பின்பக்கத் தரையில் தலை முட்டியது. பிடரி மயிரில் மணல் ஒட்டிக்கொண்டது. கொட்டுப்பட்ட மணல் சேட் கொலறுக்குள்ளால் முதுகில் கொட்டுண்டதை அரியம் உணர்ந்தான். தாழப்பறந்து வந்த ராணுவ ஹெலிக்கப்டரின் பச்சைவர்ணம் அடித்த அடிப்பாகம் அரியத்துக்கு மிகக் கிட்டத்தில் தெரிந்தது. அரியம் ஒளிந்திருந்த நண்டுப்பாலியைக் கடந்துபோனது ஹெலிக்கப்டரின் நிழல்.

ஹெலிக்கப்டரும் ராணுவ வாகனத் தொடரணியும் தாண்டிப் போகும் ஒவ்வொரு தடவையும் நிலாவெளிக் கிராமத்தை ராணுவம் முதல் தடவை சூறையாடிப்போன நினைவுகள், ஒவ்வொருவருக்கும் அவரவர் அனுபவங்களுடன் திரும்ப எழுந்துகொண்டேயிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் பணம் கொடுத்து வெளியே வந்தார்கள். சிலர் தமக்கிருக்கக்கூடிய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வெளியே வந்திருந்தார்கள். விடுதலையாகி வந்தவர்கள் நகரத்துக்கு இடம்பெயர்ந்துவிட்டார்கள்.

நிலாவெளிக் கிராமத்திலிருந்து அன்று பிடிபட்டவர்களில் மூவரது நிலை என்னவென்று யாருக்கும் தெரியவில்லை. தபால்பெட்டிக்குள்ளிருந்த நோட்டிஸ் கட்டுடன் பிடித்துக்கொண்டு போன நோயாளியான பியூன் துரை பற்றி எந்தத் தகவலும் இல்லை. இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் பிடித்துச்செல்லப்பட்ட சுரேஸ் மாஸ்டர் என்னவானார், இயக்கத்துக்கு அடைக்கலம் கொடுத்த குற்றச்சாட்டுடன் பிடித்துச்செல்லப்பட்ட அடைக்கலநாதனின் நிலையும் என்னவென்று இதுவரை தெரியவில்லை. சுரேஸ் மாஸ்டரையும் அடைக்கலநாதனையும் காட்டிக்கொடுத்தது யார் என இயக்கங்களின் புலனாய்வுப் பிரிவுகள் தேடிக்கொண்டிருப்பதாகவும் அவர்கள் மிக விரைவாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் ஊருக்குள் கதைகள் பரவியிருந்தன.

வீதியிலிருக்கும் பள்ளங்களில் விழுந்து எழும்பிப்போகும் ராணுவ கனரக வாகனங்களின் தடதடப்பின் அதிர்வை, நண்டுப்பாலிக்குள் இருக்கும் அரியத்தின் உடல் உணர்ந்தது. கனரக வாகனங்கள் வீதியில் அரியத்துக்கு நேரெதிரே தாண்டிப்போய்க்கொண்டிருந்தன. அரியத்துக்குத் துரையண்ணனின் ஞாபகம் வந்தது. நீண்ட நேரமாக ஒடுக்கமான நண்டுப்பாலிக்குள் இருப்பதால் அரியத்துக்கு மூச்சுமுட்டுவது போல இருந்தது. வாகனத்தில் ஏற்றும்போதும் இறக்கும்போதும் துரையண்ணன் நினைவில்லாதுதான் இருந்ததாக விடுதலையாகி வந்தவர்கள் சொன்னார்கள். அவர்களை ஒரு அறையில்போட்டு அடைக்கும்போதும் சரி, பின் உவர்மலையிலிருக்கும் பிளான்டன் பொயின்ட் ராணுவத் தலைமையகத்துக்குக் கடற்படை கன்போட்டில் கொண்டுசெல்லும்போதும் சரி, அவர்களுடன் துரையண்ணனோ சுரேஸ் மாஸ்டரோ அடைக்கலநாதனோ இருக்கவில்லை எனத்தான் அவர்கள் சொன்னார்கள்.

மாரடைப்பால் கிராமசேவகர் சரவணமுத்துப்பிள்ளை கூழாமரத்தடியில் இறந்த செய்தியை, அவர் இறந்த அன்று மதியமே ராணுவம் அவர்களுக்குத் தெரிவித்ததாக விடுதலையாகி வந்தவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் ஆமிக்கு நெருக்கமான உளவாளி ஊருக்குள் நடமாடிக்கொண்டிருக்கிறான். அகதியாக வந்தவர்களுடன் நிலாவெளிச் சனம் கதைக்கவும் உறவு வைத்துக்கொள்ளவும் பயந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ராணுவம் நிலாவெளிச் சனத்தைச் சூறையாடியபோது அகதியாக வந்தவர்களில் ஒருவருக்கும் ஏதும் ஆகியிருக்கவில்லை என்ற செய்தி கிராமத்துக்குள் வலுவாகப் பரவியிருந்தது.

வீதியில் ரெக்டர் ஒன்று அக்சலேட்டரை இறுக்கி அமத்தியதால் எழுந்த சத்தத்துடன் கடகடத்துப்போகும் சத்தம் அரியத்துக்குக் கேட்டது. அப்படியென்றால் ராணுவம் தூரமாகக் கடந்துவிட்டது. சன நடமாட்டம் தொடங்கிவிட்டது. அரியம் பாலைக்கொடிகளை விலக்கித் தலையை வெளியே நீட்டிப் பார்த்தான். மதியநேர வெயிலில் எல்லாம் அமைதியாக உறங்கிக்கிடந்தன. கண்டல் தாவரம் ஒன்றின் அடியைப் பற்றிய அரியம் தன் உடலை நண்டுப் பாலிக்குள்ளிருந்து வெளியே இழுத்தெடுத்தான். நண்டுப்பாலியின் ஈரலிப்பில் ஒடுங்கியபடியிருந்த கால்கள் விறைத்துக் குளிர்ந்துபோய் இருந்தன. எழும்பிநின்ற அரியம் தள்ளாடியபடி அடம்போடை மலைச்சாரலை நோக்கி நடந்தான். காசிப்பிள்ளையரின் பட்டிமாடுகள் ஆங்காங்கே மேய்ந்துகொண்டிருந்தன. அத்திமரத்துக்குக்கீழ் கிடந்த கற்பாறையில் அன்னம்மாக் கிழவி அவன் மதியநேர சாப்பாட்டுப் பொட்டணியை மடியில் பத்திரப்படுத்தியபடி இவனுக்காகக் காத்திருப்பதை அரியம் கண்டான்.

## 4.8

வேலும்மயிலும் மாமா ஏழாம்கட்டை நசீர் காஜ்ஜியார் கடையில் வாங்கிய புதிய சங்குமார்க் சாரத்தை உடுத்திக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினார். நிலாவெளிக் கிராமத்தை மாலை வெயில் தத்தெடுத்திருந்தது. வேலும்மயிலும் மாமா புதிய நீலநிற சங்குமார்க் சாரம் மொரமொரப்பாக விறைத்துக்கொண்டு நிற்க கூப்பன் கடைச்சந்திக்கு வந்து சேர்ந்தார். கூப்பன் கடையை அகதிச்சனம் மொய்த்துக்கொண்டிருந்தது. டவுனிலிருந்து அகதிகளுக்கான உலர் உணவுப்பொருட்கள் காலையில் வந்திருந்தன. சனம் அகதிச்சாமான்களைப் பெற்றுக்கொள்வதில் மும்முரமாக இருந்தது. வேலும்மயிலும் மாமா தான் உடுத்தியிருந்த சங்குமார்க் சாரத்தை அவிழ்த்து, சத்தம் எழ உதறிக் கட்டிக்கொண்டார். புதிய சாரத்திலிருந்து சங்குமார்க் லேபல்பேப்பர் இன்னமும் உரிக்கப்பட்டிருக்கவில்லை. அது சாரத்தை இன்னமும் விறைப்பாக நட்டுக்கொண்டிருக்கும்படி செய்தது. வேலும்மயிலும் மாமாவை யாரும் கண்டுகொள்ளவில்லை.

வேலும்மயிலும் மாமா காசிப்பிள்ளை வீட்டுப்பக்கம் நடையைப் போட்டார். காசிப்பிள்ளை வீட்டுப் படலையடியில் சிலர் நின்றிருந்தார்கள். அரியத்தின் அம்மா, வதனி, அன்னம்மாக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவி, ஊர்ப் பெண்கள் எனக் கூடிநின்றார்கள். வேலும்மயிலும் மாமா அவர்களுக்கு அருகில் போய் நின்றார். தன் புதுச்சாரத்தைச் சத்தம் எழும்படி அவிழ்த்து உதறிக் கட்டிக்கொண்டார். யாரும் கண்டுகொள்ளவில்லை. சாரத்தை அவிழ்த்துப் படீரெனச் சத்தம் எழும்படி உதறி மீண்டும் கட்டிக்கொண்டார்.

''என்ன மாமா புதுச்சாரம் போல...'' வதனிதான் கேட்டாள்.

''ஓமடி பிள்ள... காஜ்ஜியார் கடையில வாங்கினதடி பிள்ள... நாப்பத்தஞ்சு ரூவா... கடப்பொடியன் ஐம்பது சதமும் குறைக்கமாட்டன் எண்டுட்டான்... அறுவான்...''

''ஏன் மாமா... முப்பத்தஞ்சு ரூவாக்கும் சாரம் இருக்குத்தானே...''

''சேச்சே... இது சும்மா லோக்கல் சாரமில்ல... இது ஒரிஜினல் சங்குமார்க் சாரம்... இங்கே... லேபில் உரிக்கக்கூட இல்ல...''

மீண்டும் சாரத்தை உதறிக் கட்டிய வேலும்மயிலும் மாமா கூழாவடிப்பக்கம் போக முனைந்தார். நடுவீதியில் கனகையா, லேன் மாஸ்டர்கார போடியோடு மல்லுக்கு நின்றுகொண்டிருந்தார். இரண்டு பேரும் ஆளையாள் சேட் கொலரைப் பற்றிக்கொண்டு இழுபட்டார்கள். சனம் விலக்கிவிட முனைந்துகொண்டு நின்றது. வேலும்மயிலும் மாமாவுக்கு சண்டை சச்சரவு என்றால் ஆகாது. அடுத்த சந்தியால் திரும்பிக்கொண்டு வீட்டுக்குப் போனார்.

வேலும்மயிலும் மாமா தனிக்கட்டையாகத்தான் அந்த வீட்டிலிருந்தார். அவரது மனைவி இளம் வயதில் இறந்து போய்விட்டார். வேலும்மயிலும் மாமாவிடம் கொச்சித்தோட்டம், காணி, பூமி என்று சொத்துக்கள் இருக்கின்றன. அவரது ஒரே மகளை டவுனில் ஒரு ஆசிரியருக்குத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார். அவர்கள் டவுனில்தான் வசிக்கிறார்கள்.

கிருஸ்ணபுரிக்குள்ளிருந்து அகதியாக வந்த அவரது நெருக்கமான உறவுக்காரர்கள் அங்கு தங்கியிருந்தார்கள். அவர்களுக்கு மாபில் டொயிலட்டில் டொயிலட் போகத் தெரியவில்லை, மின்சாரச் சுவிட்சுகளைப் போடத் தெரியவில்லை என்றுகூறி அவர்களை வெளியேற்றிவிட்டார். இப்போது அவருடன் வேறு விருந்தினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தனிக்கட்டையாக இருக்கும் அவருக்கு அவ்வளவு பெரிய வீடு தேவையில்லை எனக் கூறிக்கொண்டு அங்கு குடிவந்துவிட்டார்கள். அவர்கள் இரவில் மிக ரகசியமாகத்தான் அவரது வீட்டில் நடமாடிக் கொண்டிருந்தார்கள். பகலில் அவர்களை அவர் கண்டதாக அவருக்கே ஞாபகம் இல்லை. தள்ளித்தள்ளியிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல் வீடுகளில் வேலும்மயிலும் மாமா வீட்டில் விசேட விருந்தினர்கள் இருக்கிறார்கள் என்றால் யாரும் நம்பமாட்டார்கள். கொச்சித்தோட்டங்கள் சூழ தென்னைமரங்களுக்குள்ளிருக்கும் அவரது வீடு எப்போதும் உறங்கியேகிடப்பதால் யாரும் அலட்டிக் கொள்வதில்லை. அவர்கள் அவ்வளவு பக்குவமாக இருந்தார்கள். இரவுகளில் எங்கிருந்தோ வருவார்கள். சிலநேரங்களில் ஆயுதங்கள் தனிமையில் கட்டிலில் கிடத்தியும் சுவர்களில் சாத்தியும் இருக்கும். இரவுகளில் தோய்த்து உலரவிட்ட உடுப்புக்கள்கூட பொழுது புலரும்போது கொடியில் காணக்கிடைக்காது. எந்த வம்புதும்புக்கும் போகாத, சண்டை சச்சரவுகளிலிருந்து விலகியேயிருக்கும் தனக்கு இப்படி ஒரு நிலைமை வந்துவிட்டதே எனக் கவலை கொண்டார். அகதிச்சனத்தை வீட்டைவிட்டுக் கிளப்பும்போது இப்படி வில்லங்கம் வரும் என்று கனவிலும் அவர் நினைக்கவில்லை. அவரது வீட்டிலிருக்கும் விருந்தினர்கள் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது அவருக்குத் தெரியாது. வெளியில் சொன்னால் தனக்கும் ராணுவக் கட்டுப்பாட்டிலிருக்கும் நகரத்தில் வாழும் தன் மகளுக்கும் மருமகனுக்கும் ஆபத்து வரலாம் என்பதால் வேலும்மயிலும் மாமா அடக்கியே வாசித்தார்.

## 4.9

இருள் போர்த்திக்கொண்டிருந்த மம்மல் பொழுது. பட்டிமாடுகள் நெருக்கமாக நடந்து போவதால் ஏற்பட்ட புழுதிப்படலம், பொழுதை இன்னும் இருட்டாக்கிவிட்டதுபோல இருந்தது அரியத்துக்கு. சேட்டுப் போடாத உடம்பும் இடுப்பில் சாரமுமாக அரியம் பட்டிமாடுகளுக்குப் பின்னே அவை எழுப்பும் புழுதிக்குள் மறைந்தபடி வந்துகொண்டிருந்தான். சுனைச்சாக்கில் புரண்டது போலவும் மஞ்சள்நிற அந்துப்பூச்சிகள் மேல் முழுவதும் மொய்ப்பதைப் போலவும் அரியம் தன் உடலில் கொஞ்ச நாளாகவே அரிப்பு ஏற்பட்டிருப்பதை உணர்ந்தான். முன்னே போய்க்கொண்டிருந்த பட்டிமாடுகள் உப்புக் கரச்சிவெட்டையிலிருந்து கூழாவடி வீதியின் மேட்டுப்பகுதியில் ஏறிக்கொண்டிருந்தன. பட்டிமாடுகளின் முதுகோடு முதுகாக இடுப்புவரை மறைந்துகொண்டு அன்னம்மாக் கிழவியும் கூழாவடி வீதியின் மேட்டில் ஏறிக்கொண்டிருப்பதைப் பின்னே இருந்த அரியம் கண்டான். மாட்டின் கால் குளம்புகள் தன்னை மிதித்துத் துவைத்துவிடும் என்ற பயத்தில் அரியம் பட்டிமாடுகளுக்கு முன்னேயோ நடுவிலோ போவதில்லை. கரச்சிவெட்டையில் பரவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த மாடுகள், ஊர் வீதியில் ஏறியதும் ஒடுங்கி நெருக்கியடித்துக் கொண்டு நகர்ந்தன. அன்னம்மாக் கிழவி மடியில் கட்டிய பச்சிலைக் கட்டுகளுடன் நெருக்கியடித்துப் போகும் மாடுகளுக்கு நடுவே அநாயாசமாக நடந்து போனாள். சில வேளைகளில் மாடுகள் மிதித்துக் காலை நொண்டிக்கொண்டு கிழவி திரிவதுமுண்டு.

பட்டிமாடுகளுக்கு நடுவிலிருந்து முன்னே போன அன்னம்மாக் கிழவி பட்டிமாடுகளைக் காசிப்பிள்ளையரின் சாலைக்குப் போகவிடாமல் மறித்துப் பிரதானவீதி நோக்கித் திருப்புவதை அரியம் கண்டான். காலையில், இன்று மாலை சிவராச அண்ணனின் போயிலைத்தோட்டத்துக்கு எருக்கட்ட விடவேண்டும் எனக் கதைத்தது அரியத்துக்கு ஞாபகம் வந்தது. பட்டிமாடுகள் பிரதானவீதி தாண்டி பாடசாலை வீதியிலிறங்கி சிவராசா அண்ணனின் போயிலைத் தோட்டத்தை நோக்கி நகர்ந்து சென்றன. உள்வீதிகளில் ஒடுங்கி நடந்துவந்த மாடுகள், சிவராசா அண்ணனின் போயிலைத்தோட்ட அடைப்புக்குள் பரவி விரிந்து நின்றன. எருக்கட்டுவதற்காக உழுது மட்டப்படுத்திய போயிலைத்தோட்டத்திற்குள் புழுதி கிளம்பத் தொடங்கியது. சில நாம்பன் மாடுகள் பசுக்களின் மீது ஏறி சவாரி விட்டன. கன்றுக்குட்டிகள் துள்ளிக் கிளம்பி வெடிவாலைத் தூக்கிக்கொண்டு ஓடி சேட்டை விட்டதில் எழுந்த புழுதி, இருளில் மாடுகள் அங்கு நிற்பதை முற்றாக மறைத்துவிட்டிருந்தது.

சுனை தடிப்பாக உடல் முழுவதும் படிந்துவிட்டது போலத்தான் அரியம் உணர்ந்தான். அவன் தோல்கள் தடித்து மொரமொரப்பாகிவிட்டது. அரிக்கும் இடங்களில் சொறியும்போது உடல் முழுவதும் வெள்ளைக் கோடுகள்போல படிந்துவிடுகிறது. உடல் அசதியில் துவண்டது. நடக்கும்போதே தூங்கிவழிந்தான் அரியம். வேகமாகக் கண்ணகையம்மன் கோவிலடிக்குப் போக எத்தனித்தான். உடலில் கடியும் அசதியும் போக தலைமுழுகவேண்டும் என நினைத்தான். பிரதானவீதியிலிருந்து கிராமக்கோட் தார்வீதியில் இறங்கி நடந்தான். கிராமக்கோட் வீதி, அரியம் கிருஸ்ணபுரிக்கு கள்ளுத்தவறணை அம்மாச்சியுடன் போனபோது இருந்ததைப் போலவே, குண்டும்குழியுமாகக் கிடந்தது. அரியம் இருளில் நிதானமாக நடக்க முனைந்தான். வேலும்மயிலும் மாமா வீட்டுப் படலையடியில் கீசலாக யாரோ கத்திக் கூப்பாடுபோடும் சத்தம் கேட்டது. இரைச்சலான உரையாடல்களும் அதட்டும் சத்தமும் கேட்டுக்கொண்டிருந்தன. சனம் கும்பலாக நின்றிருந்தது. இருளில் நின்றிருப்பவர்களை அரியம் அடையாளம் காண முற்பட்டான். சின்ன சுட்டி விளக்கு எரியும் வைரவர் சூலம் குத்தியிருந்த புளியமரத்துக்குக்கீழ் அரியம் தரித்து நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துப் பன்னிரெண்டு நாட்களுக்குமுன் வேலும்மயிலும் மாமா காணாமல் போயிருந்தார். மகளைப் பார்க்க என நகரத்துக்குப் போன வேலும்மயிலும் மாமா திரும்பிவரவில்லை. புள்ளகுளத்துப் பாலத்தடியில் வைத்து பஸ்ஸில் இரண்டு பேர் அவருடன் கதைத்துக்கொண்டு போனார்கள். மூன்றாங்கட்டையடியில் வைத்து அவர்களுடன் வேலும்மயிலும் மாமா இறங்கினார். அவர்கள் இருவரும் வேலும்மயிலும் மாமாவை நடுவில் விட்டு இரண்டு பக்கங்களிலும் அணைத்துக்கொண்டு நடந்து போனார்கள். பஸ்ஸில் அவருடன் நிலாவெளியிலிருந்து நகரத்துக்குப் போன கனகம்மாக்கா தகவல் சொல்லியிருந்தார். இறக்கிக்கொண்டு போனவர்கள் ராணுவச்சீருடை எதுவும் அணிந்திருக்கவில்லை என்றும் அவர்கள் சாதாரண சேட்டும் ஜீன்சும்தான் அணிந்திருந்ததாக கனகம்மாக்கா கூடுதல் தகவலும் கொடுத்திருந்தார். வேலும்மயிலும் மாமாவின் மகனும் மகளும் தங்களுக்குத் தெரிந்தவர்களைப் பிடித்துக்கொண்டு பொலீஸ் ஸ்டேசன், ஆமி கேம்ப் என அலைந்து திரிந்தார்கள். ஆனாலும் அவரைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. வேலும்மயிலும் மாமா வீட்டில் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பொடியள் தங்கியிருக்கும் விசயம் கிராமத்துக்குள் கசிந்துகொண்டிருந்தது. கிராமத்துச்சனம் கிலிபிடித்துத் திரிந்தது. அப்படியென்றால் ராணுவத்துக்குத் தகவல் கொடுக்கிற உளவாளி, ஊருக்குள் சர்வசாதாரணமாக இரவு பகல் என்றில்லாது நடமாடிக்கொண்டிருக்கிறான். சனம் மட்டுமில்லாது இயக்கங்களும் திணறத் தொடங்கியிருந்தன.

அரியம் வேலும்மயிலும் மாமாவுக்கு ஏதும் ஆகிவிட்டதோ எனப் பயந்தான். ஆனால் இது ஒப்பாரிச் சத்தமாக இல்லை. சண்டையிடும் சத்தமாகத்தானிருந்தது. அரியம் முன்னோக்கி நகர்ந்தான். கூட்டத்துக்குள் சண்டையின் நடுநாயகமாக நிற்பவரை அவரது குரலையும் தடித்த பருமனான உடலையும்கொண்டு அரியம் அடையாளம் கண்டுகொண்டான். சிவாவின் அம்மா. சிவாவின் குடும்பமும் இங்கே ஒரு போயிலைமாலில்தான் அகதிகளாக இருந்தார்கள். அரியம் சிவாவுடன் இப்போது அதிகமாகத் தொடர்பு வைத்துக்கொள்வதில்லை. பட்டிமாடுகளுடன் அரியம் திரிவதால் சிவாவும் அவ்வளவாக அரியத்துடன் தொடர்புவைத்துக்கொள்வதில்லை. அரியத்துக்கு இதமாகக் கதைக்கும் சிவாவின் அப்பாவைப் பிடிக்கும். சிவாவின் அம்மாவை அரியத்துக்குப் பிடிக்காது.

''பிசாசுகள்... பிசாசுகள்... சனி ஞாயிறுகூட வீட்டில கிடக்காதுகள்... வீட்டில கிடக்கிற வேலை வெட்டிய விட்டுப்போட்டு ஊர்மேயிர பிசாசுகள்... பிசாசுகள்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாவை வீட்டில் தேடிப்போனால் சிவாவின் அம்மா இப்படித்தான் அரியத்தைத் திட்டித் துரத்துவார். இப்போது அவரிடம் சிக்கியிருக்கும் அப்பாவி யாரென அரியம் இருளை ஊடறுத்துக் கூட்டத்துக்குள் கூர்ந்து கவனிக்க முனைந்தான். அந்த உடல் மெலிந்த உருவத்தை அரியம் இனங்கண்டுகொண்டான். அது குலத்தின் அம்மா. அரியத்தின் நினைவுகளில் ஏதோ தட்டுப்பட்டது. குலமும் சோமியும் சிவாவும் கரச்சிவெட்டைகளிலும் அடம்போடை மலைப்பக்கமும் கச்சனக்கல்பக்கமும் திரிவதை அரியம் கண்டிருக்கிறான். அப்படியென்றால் ஏதோ கிராமத்துக்குள் நடந்திருக்கிறது. அரியம் இன்னும் கொஞ்சம் முன்னேறிப்போனான்.

கனகையாண்ணன் நின்றிருந்தார். கைகளைப் பின்னே வைத்துக்கொண்டு தன் விரலில் சிக்குப்பட்ட மோதிரத்தைக் கழற்ற சிரமப்படுவதுபோல விரல்களை உருவிவிட்டுக்கொண்டிருந்தார் கனகையாண்ணன். பின்னால் இருளில்போய் நின்றான் அரியம்.

''என்ன நடந்ததாம்...''

என மெல்ல முனகினான் அரியம். கனகையாண்ணனுக்குத் தன் முனகல் கேட்டிருக்காது எனத்தான் அரியம் நினைத்தான். அவருக்குப் பாம்புக்காது.

''லோ படிச்ச பொலீஸ்காரன்ட வழிசலும்... சீவள்கார பொன்னையா... பிச்சாண்டியிட... தறுதலைகளும் சேர்ந்து... புலிக்குப் போக எண்டு... நீலப்பணிக்கன் காட்டுக்க சுத்தித் திரிஞ்சிருக்குதுகள்... புலி ஆமி உடுப்பில அந்தப் பக்கம் போயிருக்கு... புலி இந்தக் களுசறைகளை பிடிச்சு தனித்தனியா என்னடா இது வழிய திரியிரியள்... எண்டு மிரட்டி இருக்கு... பொலீஸ்காரன்ட வழிசல் சொல்லியிருக்கு காணமப்போன மாட்டத் தேடி வந்த நாங்கள் எண்டு... மற்ற ரெண்டு களுசறைகளும் சொல்லியிருக்கு இயக்கத்துக்குப் போக வந்த நாங்கள் எண்டு... ரெண்டு களுசறைகளுக்கும் நாலு சாத்துச் சாத்தி திரத்தி விட்டுட்டு... பொலீஸ்காரன்ட வழிசல... புலி தங்களோட கூட்டிக்கொண்டு போயிற்றுது... அது தான் பொலிஸ்காரன்ட பெண்டில்... குறுக்கால அம்பிட்ட பிச்சாண்டிட... பொண்டாட்டிட குடும்பியப் பிடிச்சிற்று நிக்காள்... தன்ற பிள்ளையக் கொண்டா எண்டு...''

தனக்கு சமதையான ஒருவருக்குப் பதில் சொல்வது போல கனகையாண்ணன் பதில் சொல்லிக்கொண்டிருக்க அரியம் பின்னால் நழுவிப் போனான். அவர் திரும்பிப் பார்ப்பதற்குள் நழுவிவிடவேண்டும். அரியம் திரும்பிப் பிரதானவீதிக்கு வந்தான். சிவாவினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமியினதும் குலத்தினதும் நினைவுகள் தொடர்ச்சியாக அரியத்துக்கு வந்துகொண்டிருந்தன. சோமியும் குலமும் என்ன ஆனார்கள் என்பதுதான் அரியத்துக்குக் கவலையாக இருந்தது.

அரியம் குச்சொழுங்கைக்குள்ளால் கண்ணகையம்மன் கோவிலடிக்கு வந்தபோது குடிசைக்குள் கருவாடும் கத்தரிக்காயும் சுடும் மணம் எழும்பிக்கொண்டிருந்தது. அப்படியென்றால் சுட்ட கத்தரிக்காய்க்குள் கருவாடு, கொச்சிக்காய், வெங்காயம் போட்டு பினைஞ்ச சம்பல் தயாராகிக்கொண்டிருக்கிறது. அரியம் நேரடியாகக் கிணற்றடிக்குப் போனான்.

கத்தரிக்காய் கருவாட்டுச் சம்பலின் ஏப்பம், சிவா, குலம், சோமி, அன்னம்மாக் கிழவி, பட்டிமாடுகள், அடம்போடை மலைச்சாரல், கிருஸ்ணபுரி ஒழுங்கைகள், கௌரிப் பெட்டை என குழப்பமான நினைவுகளுடன் உடல் அசதியும் சேர்ந்துகொள்ள அரியம் கண்ணகையம்மன் வெளிவிறாந்தை சீமெந்துக்கட்டில் புரண்டுகொண்டு கிடந்தான்.

மிகப்பெரிய சாணிக்கும்பம். சுற்றிவர அடர்ந்த காட்டு மரங்கள். சாணிக்கும்பத்தில் ஆங்காங்கே வெடிப்பு விழுகிறது. வெடிப்பு விழுந்த இடங்களிலிருந்து சாணிக்கட்டிகள் பெயர்ந்து விழுகின்றன. சாணிக்கட்டிகள் பெயர்ந்த இடங்களில் துளைகள் தெரிகின்றன. அந்தத் துளைகளுக்குள்ளிருந்து பெரிய நீலநிறக் கண்களும் இறக்கைகளும் கொண்ட ஈக்கள் வெளியேறிப் பறந்து வருகின்றன. அவன் ஓடத் தொடங்குகிறான். அவன் உடலை அந்த இலையான்கள் நகங்களால் கீறி இரத்தக்கசிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. அடர்ந்த காடு, வெளியேறும் பாதை தெரியாது அவன் ஓடிக்கொண்டிருக்கிறான். அவன் உடல் முழுவதும் அரிப்பெடுக்கிறது. வதனி அக்கா இந்தப் பக்கமா ஓடு என்று கூவுகிறாள். அரியம் கண்விழித்தான்.

''அ... ரி... ய... ம்...''

தன்னை மிகத் தாழ்ந்த குரலில் யாரோ அழைப்பதை அரியம் கேட்டான். சட்டெனத் தன் சாரத்தை இழுத்து இடுப்பில் கட்டிக்கொண்ட அரியம் எழும்பி உட்கார்ந்தான். தனக்கு முன்னே இரண்டு உருவங்கள் உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

''சோமியும்... குலமுமாடா...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சத்தம் போடாம... எங்களோட கொஞ்சம் ஒரு இடத்துக்கு வந்திற்று... திரும்பி வந்து படு...''

அரியம் சட்டென்று தலைமாட்டில் கழற்றிவைத்திருந்த சேட்டை எடுத்துப் போட்டுக்கொண்டான். தன் உடம்பில் சேட் பட்டதும் சொறிந்ததால் ஏற்பட்ட காயங்கள் காந்தத் தொடங்கியதை உணர்ந்தான். குலமும் சோமியும் முன்னே கூழாவடிப்பக்கம் நடக்கத் தொடங்கியிருந்தார்கள். அரியம் பின்னே போனான். தன் சஸ்பெண்டரை இரவு குளித்துவிட்டு அலம்பி கிடுகுமட்டையில் காயப்போட்டது ஞாபகம் வந்தது. ஈரமாக இருக்கும். வந்து எடுத்துக்கொள்ளலாம் என அரியம் விட்டுவிட்டான். அவர்கள் மூவரும் கூழாவடி நோக்கி அமைதியாக நடந்தார்கள். மூவர் கால்களிலும் செருப்பு இல்லை. நாய் ஒன்று எழும்பி உறுமிக் குரைத்துவிட்டு அமைதியாகிப் போனது. இப்போது நேரம் என்னவாக இருக்கும். கணிக்கமுடியவில்லை அரியத்துக்கு. அவர்கள் கூழாமரத்தடியில் நின்றார்கள்.

''உனக்கு உதயண்ணனத் தெரியும்தானே...''

சோமி கேட்டான்.

''கிருஸ்ணபுரி உதயனத்தானே கேக்கிறாய்...''

''ஓம்''

''ஓ அவர எனக்கு நல்லாத் தெரியும்... அவர் இப்ப இந்தியாவில இருக்கிறார்...''

''இல்ல... அவர் இப்ப இந்தியாவில இல்ல... இங்கதான் இருக்கிறார்... இப்ப நிலாவெளி டெலோ பொறுப்பாளரா இருக்கிறார்...''

''எனக்கு அது தெரியாது... கிருஸ்ணபுரிக்க கண்டதுக்குப் பிறகு நான் அவரச் சந்திக்க இல்லை...''

''நாங்க ரெண்டு பேரும் டெலோ இயக்கத்தில சேர்றதெண்டு முடிவெடுத்திற்றம்... உதயண்ணன் இப்ப எங்க நிப்பேர் எண்டும் விசாரிச்சிற்றம்... நீ எங்களோட வந்து... எங்கள அறிமுகப் படுத்திவிட்டாப்போதும்... மற்றத நாங்க கதைச்சுக்கொள்ளுவம்... இனி நாங்க இங்க இருக்க ஏலாது... நல்லா அவமானப் பட்டிட்டம்... இனி இருந்தா குழந்தப் பிள்ளைகள்கூட எங்கள ஆமிட்ட காட்டிக்குடுக்கும்... நாங்க போய்த்தான் ஆகவேணும்... எங்களோட வந்திற்று நீ திரும்பிவா...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இருளில் நடக்கத் தொடங்கினார்கள். கூழாவடியிலிருந்து ஏழாங்கட்டை நோக்கிப்போகும் கச்சனக்கல் வீதியில் நடந்து போனார்கள். அரியத்துக்கு சஸ்பெண்டர் போடவில்லை என்பது உறுத்தலாக இருந்தது. இரவுதானே, திரும்பி வந்து பார்த்துக்கொள்ளலாம் என நடந்தான்.

அவர்கள் ஏழாம்கட்டை சந்தியில் வந்து நின்றார்கள். வீதியிலிருந்து இறங்கி நசீர் காஜியார் புடவைக்கடைக்குப் பின்னாலிருந்த வளவுக்குள் நாவல்மரத்துக்குக்கீழே நின்றுகொண்டார்கள். நசீர் காஜியார் கடையின் பின்புறக்கதவிற்குமேல் மின்குமிழ் ஒன்று ஒளிர்ந்துகொண்டிருந்தது. அவர்கள் நீண்டநேரம் காத்திருந்தார்கள். அரியம் கால் கடுக்கியதால் நிலத்தில் குந்திக்கொண்டான். குலமும் சோமியும் நசீர் காஜியார் கடையின் பின்புறக்கதவையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

நிலத்தில் குந்திய அரியத்தைக் குட்டித்தூக்கம் உலாஞ்சவைத்தது. சட்டென்று நசீர் காஜியார் பின்கதவுக்கு மேலே எரிந்துகொண்டிருந்த மின்குமிழ் அணைந்தது. குலமும் சோமியும் உசாரானார்கள். அரியத்தைத் தட்டி எழுப்பிவிட்டார்கள். நசீர் காஜியார் புடவைக் கடையின் பின்பகுதி இருளுக்குள் சில உருவங்கள் அசைவதை அரியம் கண்டான். ஒரு குள்ளமான உருவமும் நான்கு உயரமான உருவங்களும் ஒழுங்கையில் நடந்து வந்துகொண்டிருந்தன. அரியத்தால் இருளில் உதயனைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. அவர்கள் நாவல்மரத்தை நெருங்கி வந்துகொண்டிருந்தார்கள்.

''அ.. ண்.. ணா.. ச்.. சி..''

இரகசியமான குரலில்தான் சோமி கூப்பிட்டான். நெருக்கமாக நடந்து வந்தவர்கள் சட்டென்று தனித்தனியே விலகி இருளில் கரைவது போல கரைந்து, மறைந்து, நிலையெடுத்துக்கொண்டார்கள். அவர்கள் தாக்குதல் நடத்தக்கூடும் என்றுதான் அரியம் நினைத்தான்.

''அண்ணாச்சி... அது நாங்கதான்...''

சோமியின் குரலில் அரியம் பயத்தை உணர்ந்தான். ஒரு தடித்த குரல் இருளுக்குள் மறைந்து கொண்டு அதட்டியது.

''நாங்க எண்டா... ஆர்ரா...''

''அண்ணாச்சி நாங்க நிலாவெளிக் கரச்சிப்பக்கம் இருக்கிற... சீவள்கார பிச்சாண்டிட மகன் சோமி... இது பொன்னையாட மகன் குலம்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளில் கரைந்திருந்த அவர்கள் மீண்டும் உருப்பெற்றுத் தனித்தனியே வந்தார்கள்.

''என்னடா வேணும் உங்களுக்கு...''

''அண்ணாச்சி... நாங்களும் இயக்கத்துக்கு வரப்போறம்... நாங்களும் உங்களோட சேர்ந்து போராடத் தயார இருக்கம் அண்ணாச்சி...''

''அதுக்கு... இப்பிடித்தான் இருட்டில வழிமறிப்பீங்களாடா... ஆமி எண்டு நினைச்சு இழுத்திருந்தமெண்டா... என்னடா ஆகிறது...''

''எங்களுக்கு வேற வழி தெரியேல்ல அண்ணாச்சி...''

''நீங்க ரெண்டு பேரும் தானேடா புலிக்குப்போய் வாங்கிக் கட்டிக்கொண்டு வந்தாக்கள்...''

''ஆமிக்கும் இயக்கத்துக்கும் அவ்வளவு வித்தியாசம் தெரியாத ஆக்களா அண்ணாச்சி நாங்க... நிக்கிறது ஆரெண்டு தெரிஞ்சுதான் அண்ணாச்சி நாங்க கேட்டனாங்கள். புலி காட்டுக்கையும் படங்காட்டி, ஊருக்கையும் படங்காட்டிப்போட்டுப் பொயிற்றாங்கள் அண்ணாச்சி... ஊருக்க தல காட்டேலாம பண்ணிப்போட்டாங்கள் அண்ணாச்சி... இனி ஊருக்க ஆமி வந்தா சின்னப்புள்ளகூட அவனுகதான் புலிக்குப்போய் திரும்பி வந்தவங்களெண்டு காட்டிக் கொடுக்கும் அண்ணாச்சி... நாங்க உங்களோட வாரம்... இல்லையெண்டா நேர போய் குச்சவெளி ஆமிக் கேம்புக்க சரணடையப் போரம்...''

சோமியின் குரல் தழுதழுத்திருந்தது.

''ஆற்றா அது மூண்டாவதா ஒருத்தன் பதுங்கிறான்...''

''இது கிருஸ்ணபுரி அரியம்... உதயண்ணனோட திரிஞ்சவன்...''

தன் இருப்பை மறந்து, சோமியின் குரலுக்கும் பதில் குரலுக்கும் செவி சாய்த்திருந்த அரியம் அவர்களது கவனம் தன் மீது திரும்பியதும் பதறிப்போனான். அமைதியாக நின்ற உருவங்களிலிருந்து ஒரு உருவம் அவனை நெருங்கி வந்தது. நெருங்கி வரும் உருவத்தின் அதிகாரத் தோரணையிலும் சாயலிலும் அது உதயன்தான் என்பதை அரியம் அடையாளம் கண்டுகொண்டான். உதயனின் முகத்தில் அவனது வழமையான சின்னச் சிரிப்பொன்று இருந்தது போலத்தான் அரியத்துக்குத் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பெத்தவனாடா... கிருஸ்ணபுரிச் சனம் முழுக்க இங்கதான் கிடக்கிறீங்க... என்னடா...''

''இங்க கண்ணகையம்மன் கோவிலடியிலதான் இருக்கம்...''

அரியத்தின் வாய்தான் ஏதோ பதில் சொன்னது. தன் தோளில் விழுந்திருக்கும் கனதியான, பயிற்சியால் இறுகிப்போன, உறுதியான கையைத் தன் தோள்களால் நீண்ட நேரத்துக்குச் சுமக்கமுடியாது என்றுதான் அரியம் நினைத்தான். குலத்தையும் சோமியையும்விட தான் உயரமாகிவிட்டது போல இருந்தது அரியத்துக்கு. தான் சஸ்பெண்டர் போடவில்லை என்பது அரியத்தை உறுத்திக்கொண்டு தான் இருந்தது. அரியத்தைப் போலவே குலமும் சோமியும் காலில் செருப்புக்கூட அணிந்திருக்கவில்லை. அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள். அடம்போடை மலையைச் சுற்றிக்கொண்டு அவர்கள் பெரியகுளம் காட்டுப்பகுதிக்குள் ஊடுருவிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்னே காடு விரிந்துகொண்டிருந்தது. செம்மஞ்சள்நிறச் சூரிய ஒளி காட்டுமரங்களின் உச்சி நுனியில் அவர்களுக்கு முன்னே படர்ந்துகொண்டு போனது. சூரியன் அவர்களுக்குப் பின்னே எழுந்துகொண்டிருந்தது.

## 4.10

இந்தக் கனகையாவ குறமாசத்தில பிறந்தவனெண்டு நினைச்சானுகளா நிலாவெளியானுகள். கண்டவன்நிண்டவன் எல்லாம் கூப்பிட்டு விசாரிக்கிற அளவில கேவலமாவா போனன். கொழுத்தி எடுக்கிற வெயில்ல காடு கரம்பை எல்லாம் அலைய வேணுமெண்டு எனக்கு என்ன தலையெழுத்தா. துவக்க நீட்டிக் கொண்டு நிண்டா கனகையா கால்ல விழுவானெண்டு நினைச்சாங்களா. அவைட சிறப்ப காட்டுக்க, அவ கூப்பிடுற இடத்துக்குவேற போகவேணுமாம். வேலவெட்டி இல்லாத வெறும் வெட்டிப்பயலெண்டு நினைச்சாங்களா. வெயில் தணிஞ்ச பொழுதிலகூட உவர்தர தாண்டி காட்டுப்பகுதிக்க போனதில்ல. வேகாத வெயில்ல நடக்கவிட்டுட்டானுகள். சிங்களவனிட்ட ஊம்பிக்கொண்டு திரிஞ்சா என்ன, சோனகனோட திரிஞ்சா உனக்கென்ன. சிங்களவனோட கோவமெண்டா குச்சவெளியில கேம்ப் போட்டுத்தானே இருக்காங்கள். அங்கபோய் வீரத்தக் காட்டுறதுதானே. துவக்க கவட்டுக்க செருகிக்கொண்டு பொம்பிளயலுக்கு சோக்காட்டவே நேரங்காணாது, ஆமியோட சண்டைக்குப்போக நேரம் எங்க இருக்கப் போகுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரகு வேல எண்டா தம்பட்டம் அடிச்சி செய்யிற வேலையா. தொழில்ல எதிர்ப்பக்கம் நிக்கிறவன் சிங்களவனா, ஆமியா, பொலீசா, அரசியல்காரனா, பிக்குவா, கள்ளன் காவாலியா ஆருக்குத் தெரியும். சாதகம் பார்த்தா தொழில் செய்ய ஏலும். அவனும் தரகன் நானும் தரகன். காணியா, வாகனமா, போயிலச் சிப்பமா, நெல்லு மூடையா, அப்பப்ப அத இத எண்டு எவ்வளவ கைமாத்தி விட்டிருப்பன். தரகுத் தொழிலெண்டா சுத்துமாத்து, நெளிவுசுளிவு, ஏமாத்து எல்லாம் சேர்ந்ததுதான். சிங்களம் மட்டுமில்ல, தரகுக் கெண்டே ஒரு நாக்கு சுழட்டுற மொழி இருக்கெண்டு நேற்றுப் பெஞ்ச மழைக்கு இண்டைக்கு முளைச்சதுகளுக்குத் தெரியுமா. காட்டிக் குடுக்கிறதுக்கு எவ்வளவு கொமிஸனெண்டு கேள்வி வேற.

சுளையா ஐம்பதாயிரம் வேணுமாம். போராட்ட நிதியாம். காலக்கெடு வேற. இல்லாட்டி உள்ள வைப்பினமாம். மழயில, வெயில்ல, பனிக்குளிரில, தின்னாம, தூங்காம, கண்டகண்ட கடத்தாழ்வாரங்கள்ள மட்டய விரிச்சுப்படுத்து, காவிபிடிச்சு மூத்திரவெடுக்கடிக்கிற கக்கூசில, காலயில வயிறு குமட்டக்குமட்ட குந்தி எதிரிய அவன் நினைக்காத இடத்தில மடக்கி குழஞ்சு, கும்பிடுபோட்டு அதட்டி உருட்டி, ஏமாத்தி, ஏமாந்து, சதம்சதமா சேர்த்த காச, நோகாம நொங்கெடுக்கப்பாக்கினம் இவ. இந்த தொழில விட்டுப்போட்டு, நான் என்ன தெரு வழிய திருவோடா தூக்கிறது. நாரப்பயலுகளா, என்ற பின்னணி தெரியாம விளையாடாதீங்கடா.

இந்தக் கூழாவடிமரத்துக்குக் கீழதான் நெஞ்சப் பொத்திக் கொண்டு விழுந்து செத்துப்போனான் சரவணமுத்துப்பிள்ள. அப்பன் சேர்த்து வைச்சுப்போட்டுப்போன சொத்து. அப்பன்ட கிராமசேவகர் தொழில். சும்மா குந்தியிருந்து தின்டாலே மூண்டு தலைமுறைக்கு தாங்கிற சொத்து. அட்டணக்கால் போட்டுக்கொண்டு கூப்பிட்ட குரலுக்கு ஏவலாள் வேற. லோ என்ன, லெக்சர் என்ன, மயிரப்பிளந்த கதையென்ன. என்ன நிம்மதியா தொழில் செய்யவிட்டானா. எத்தின தரம் பொலீஸில மாட்டிவிட்டிருப்பான். கோடு, கச்சேரி எண்டு அலையவிட்டிருப்பான். தானும் தின்னமாட்டானுகள். தள்ளியும் படுக்கமாட்டானுகள். பெரிய தர்மவானாம், ஞானவானாம், ஆமி அடிச்சானாம், றோசம் பொத்துக்கொண்டுவந்துதாம், தன்மானமுள்ள றோசக்காரனாம், நெஞ்சப் பொத்திக்கொண்டு செத்துப்போனானாம். இப்ப தியாகியாம். உசிரோட இருக்கேக்க அவன் பிளைக்கவிடயில்ல. இப்ப இவனுகள் வந்திருக்கிறாங்கள். எனக்கும் அப்பன் சொத்து சுகமெண்டு தேடிவைச்சிற்றுப் போயிருந்தா ஏன் இந்த நாய்ப்பிளைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப இந்த ஊருக்க என்ன பிளைப்பு நடக்குது. ஒவ்வொருத்தனுக்கு ஒரு இயக்கமெண்டு ஊம்பிக்கொண்டுதானே திரியிறாங்கள். அத தங்கட பிளைப்புக்கும் தங்கட எதிரிய மிரட்டுறதுக்கும்... அதையும் இந்த இயக்கங்கள் தங்களுக்கு சார்பான ஆக்களெண்டா கண்ண மூடிக்கொண்டுதானே இருக்கினம். இந்தப் பிளைப்பு கன நாளைக்கில்ல. தங்களுக்குள்ளேயே அடிபட்டுக்கொண்டு கோவணமும் இல்லாம திரியேக்க தெரியும் இந்த கனகையா யாரெண்டு.

வேலும்மயிலுக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல்ல பிரச்சினைதான். அதுக்காக அவன ஆமிட்ட பிடிச்சுக்கொடுக்கவேணும் எண்ட அவசியம் என்னக்கில்ல. அது எப்பவோ நடந்தது. வேலும்மயிலும் வீட்டுக்குள்ள புலி பதுங்கிக்கிடக்கெண்டு பூதக்கண்ணாடி வைச்சு, ஆராச்சியா நடத்திக்கொண்டிருந்தனான். எனக்கு வேற வேலவெட்டி இல்லையா. ஒருத்தன்ட சாவிலதான் இன்னொருத்தன்ட வாழ்வு இருக்கெண்டா உலகத்தில ஒருத்தனும் உயிரோட வாழமுடியாது. ஒருத்தன அண்டித்தான் இன்னொருத்தன்ட பிளைப்பு நடக்க ஏலும். இந்த கனகையாவுக்கு அனுபவப்பாடம் இருக்கு தம்பிமாரே. என்னக் கொல்றதுக்கு நீங்க இந்தியாவில போய் பயிற்சியெடுக்கவேண்டியதுமில்ல, அமெரிக்கன்ட துவக்கும் தேவையில்ல. ஒரு மண்வெட்டிப் பிடிகாணும் தம்பிமாரே.

நான் இப்படித்தான் தம்பிமாரே. வெள்ளக்காக்கா மல்லாந்து பறக்குதெண்ட, நிமிர்ந்து பாக்கிற ஆள் நான் இல்லத் தம்பிமாரே. இப்படித்தான் இருப்பன். உங்களுக்கு பயந்து ஊரவிட்டு ஓடவும்மாட்டன், தொழில விட்டுக்கொடுக்கவும் மாட்டன். இந்தத் திண்ணையிலதான் படுத்துக்கிடப்பன். வந்து சுட்டுப்போட்டுப் போங்க. என்ற சாவிலதான் இந்த ஊரிண்ட பாதுகாப்பு இருக்கெண்டா நான் சாகத் தயார் தம்பிமாரே. இங்க நான் மட்டும் அடாவடிக்காறனில்ல. நான் வெளிப்படையா அடாவடித்தனம் பண்ணுறவன். இங்க கனபேர் சந்தர்ப்பத்த பயன்படுத்தி நாசுக்கா அடாவடித்தனம் பண்ணிப்போட்டு நல்ல பிள்ளையா நடிச்சுத் திரியினம். அதுதான் உண்மை தம்பிமாரே.

## 4.11

தன் கையிலிருக்கும் கிறினெட்டின் உலோக இடைவெளிக்குள் வியர்வையின் கசிவை அரியம் உணர்ந்தான். மதிய நேர வெயில் நேர்மேலே பனைவட்டை ஊடறுத்து வந்து உடலை சுட்டெரித்துக் கொண்டிருந்தது. பிரதானவீதியை அண்டிப் பனைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடலிகளும் புதர்களுமாய்க் கிடந்த காணி ஒன்றின் கிறவல்மலையிலிருந்து வடியும் மழைநீர், கடலுக்குள் போகும் மதகை ஒட்டிய திடலில்தான் அரியமும் ரவி அண்ணனும் நிலையெடுத்திருந்தார்கள். அவர்கள் பதுங்கியிருந்த புதர் அவர்களை முழுதாக மறைத்திருந்தது என்று சொல்லமுடியாது. பட்டப்பகலில் சனத்துக்கு சந்தேகம் வராமல், சனத்தைப் பாதிக்காமல் தாக்குதல் நடத்துவது சிரமம் என்று ரவி அண்ணனும் உதயனும் இந்தத் தாக்குதல் திட்டத்தை விரும்பவில்லை. குள்ளமான, தவக்களை எனப் பெயரெடுத்த தில்லையண்ணன் இந்தத் தாக்குதலை நடத்தியேதீரவேண்டும் எனப் பிடிவாதமாக இருந்தார். கிராமங்களுக்குள் டெலோ இயக்கத்தின் மீதிருந்த நம்பிக்கை குறைந்துவருவதால் ஏதாவது செய்தாகவேண்டிய நிர்பந்தம் அவர்களுக்கு இருந்தது.

புலிகள் புள்ளகுளத்துப்பாலத்தை இரவோடு இரவாகக் குண்டுவைத்துத் தகர்த்துவிட்டார்கள். குச்சவெளி பிரதானவீதியில் சென்றி அடித்து ராணுவத்தை முகாமுக்குள் முடக்கிவிட்டார்கள். முன்னேறி வந்த ராணுவத்தையும் பலமாகத் தாக்கி, அவர்களது கவச வாகனத்தையும் பெயர்த்து, முகாமுக்குள் முடக்கிவைத்திருந்தார்கள். குச்சவெளி ராணுவத்துக்கான தரைவழிப் பாதையைப் புலிகள் துண்டித்துவிட்டார்கள். இது கிராமங்களுக்குள் மற்ற இயக்கங்களது செல்வாக்கையும் பொருளாதாரத்தையும் பாதித்துக்கொண்டிருந்தது. மற்ற இயக்கங்களுக்குக் கௌரவப் பிரச்சினையாக வேறு இருந்தது. ஏதாவது செய்தாகவேண்டும் என்ற நிலையில்தான் டெலோ இயக்கம் இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டது.

அரைகுறைப்பயிற்சியுடன் இந்தத் தாக்குதலுக்கு வந்தது அரியத்தை அச்சுறுத்திக் கொண்டுதானிருந்தது. குலமும் சோமியும் அடம்பிடித்து இந்தியாவில்தான் பயிற்சி பெறுவோம் என இந்தியாவுக்குக் கிளம்பிப்போய்விட்டார்கள். அரியத்துக்கு அப்படி கடுமையான எண்ணம் ஏதும் இருந்திருக்கவில்லை. புதிதாகச் சேர்ந்திருந்த சில இளைஞர்களுடன் திரியாயை ஒட்டிய காட்டுக்குள் பயிற்சியெடுத்துவிட்டு மீண்டும் உதயனுடன் வந்து சேர்ந்துவிட்டான்.

புலிகளால் உடைக்கப்பட்ட பாலத்திற்குக் கேடறால் ஒரு தற்காலிகப் பாலம் அமைத்துத் துண்டிக்கப்பட்ட தரைவழியைத் திறக்க ராணுவம் முனைந்தது. ராணுவம் புள்ளகுளத்துப் பாலத்துக்கருகில் அலஸ்தோட்டப்பகுதியில் நகரப்பகுதிப்பக்கம் காப்பரண் ஒன்றை அமைக்கும் முயற்சியில் இறங்கியிருந்தது. அதற்காக ராணுவம் சிறியரக ரக் வண்டி ஒன்றில் கற்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகரங்களையும் சிலிப்பர் கட்டைகளையும் புள்ளகுளத்துப் பாலத்தக்கருகில் கொண்டுவந்து இறக்கத்தொடங்கியிருந்தது. அந்த ரக் வண்டியை அலஸ்தோட்டப்பகுதியில் வழிமறித்துத் தாக்கித் தங்கள் வல்லமையைக்காட்ட டெலோ இயக்கம் ரகசியமாகக் களத்தில் இறங்கியிருந்தது.

சனத்துக்குச் சந்தேகம் வராதவகையில் அவர்கள் இரண்டு இரண்டு பேராகத்தான் இந்த இடத்துக்கு வந்துசேர்ந்திருந்தார்கள். சாரமும் சேட்டும் அணிந்து, தடித்த செருப்பைக் காலில் அணிந்திருந்தார்கள். ஆயுதங்களை உரப்பையில்தான் கொண்டுவந்திருந்தார்கள். சனநடமாட்டம் இல்லாத பனங்கூடலும் பற்றைக்காடுமாகப் பிரதானவீதியை அண்டிய பகுதியில் மூன்று இடத்தில் நிலையெடுத்திருந்தார்கள்.

கிறவல்மலை வீதியோடு இணையும் வீதி முடங்கும் இடத்தில், நகரத்திலிருந்து வரும் ரக் வண்டி மீது தாக்குதலை நிகழ்த்துவதற்காகத் தில்லையண்ணன் கிறினெட்டுடனும் ரைபிளுடனும் தனியாக நிலையெடுத்திருந்தார். குள்ளமான திடகாத்திரமான தில்லையண்ணன் அந்தத் தாக்குதலுக்கான முழுப்பொறுப்பையும் ஏற்றிருந்தார்.

இரண்டாவது நிலையெடுப்பில்தான் ரவி அண்ணனும் அரியமும் இருந்தார்கள். ரவி அண்ணனிடம் ரைபிளும் அரியத்திடம் இரண்டு கிறினெட்டும் இருந்தன. தாக்குதல் நடத்தியபின் தில்லையண்ணன் வெளியேறிப்போவதற்காக, பாதுகாப்புத் துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு அல்லது கிறினெட் தாக்குதலை நடத்துவதற்கு எனத்தான் அவர்கள் இங்கே இருந்தார்கள். வீதிக்கு எதிர்ப்புறம் துவரங்காட்டு வீதி திரும்புமிடத்தில் உதயனும் சிவம் அண்ணனும் நிலையெடுத்திருந்தார்கள். பாலத்தில் வேலைசெய்து கொண்டிருக்கும் ராணுவம் தாக்குதல் நடக்கும் இடத்துக்கு வராமல் தடுப்பதற்கான கட்டவுட்டில் அவர்கள் இருந்தார்கள். ஆனால் இன்று மூன்றாவது நிலையெடுப்பு அவசியமானதாகத் தோன்றவில்லை. பாலத்தடியில் ராணுவத்தின் நடமாட்டம் எதுவும் இருக்கவில்லை.

பாலம் தகர்க்கப்பட்ட பின்னர் அந்த வீதியில் வாகனப்போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. சைக்கிளில் போகின்றவர்கள் சிலரும் மோட்டார் சைக்கிளில் போகின்றவர்களும் வயல் வேலைகளுக்குப் போகும் ரெக்டர்களும்தான், நீண்டநேர இடைவெளிகளில் அவர்களைக் கடந்து துவரங்காட்டுவீதியில் திரும்பி கன்னியாப்பக்கம் போய்க் கொண்டிருந்தன. நேரம் கடந்துகொண்டிருந்தது. ராணுவ ரக் வண்டி வரவில்லை. பாலத்தடியிலும் ராணுவத்தின் நடமாட்டம் இல்லை. இன்று தாக்குதல் நடைபெறாமல் அவர்கள் பின்வாங்கப் போவதாகத்தான் அரியத்துக்குப்பட்டது. கொளுத்தியெடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலில் வியர்வை அவர்களை நனைத்துக்கொண்டிருந்தது. ஆனாலும் அவர்கள் வீதியிலிருந்து கண்களை எடுக்கவில்லை. அவர்கள் காத்திருந்தார்கள்.

நகரப்பகுதியிலிருந்து ரெக்டர் ஒன்று அமத்திப் பிடித்த அக்சலெட்டரிலிருந்த காலை எடுக்காத இரைச்சலுடனும் தடதடப்புடனும் வந்துகொண்டிருந்தது. அரியம் கூர்ந்து பார்த்தான், ஆமி ரெக்டர். அரியத்துக்குப் பதற்றமாக இருந்தது. அரியம் ரவியண்ணனை ஒருகணம் திரும்பிப் பார்த்தான். சாந்தமாக இருந்த ரவியண்ணனின் முகம் இறுகிக்கொண்டிருந்தது. தாடைக்கும் காதடிக்குமிடையே எலும்புகள் புடைத்து ஏறி இறங்கி அசைந்தன. கைநரம்புகள் புடைக்க ரைபிளை அவர் இறுக்கமாகப் பற்றுவதை அரியம் கண்டான். ஆமி ரெக்டரைக் கூர்ந்து பார்த்தான் அரியம். ரெக்டரை ஒரு ராணுவச்சிப்பாய் ஓட்டி வந்தான். மட்காட்டில் இன்னொரு சிப்பாய். ரெக்டர் பெட்டியின் முன்பகுதியில் தட்டிமீது சாய்ந்தபடி இரண்டு சிப்பாய்கள் சாய்வாக நின்றிருந்தார்கள். பெட்டிக்குள் ஏற்றப்பட்ட கற்களின் மீதோ கட்டைகளின் மீதோ பின்புறம் பார்த்தபடி இரண்டு சிப்பாய்கள். ரெக்டரின் உதறலுடன் குலுங்கியபடி அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். முதல் கட்டவுட்டை அவர்கள் தாண்டியிருந்தார்கள். தாக்குதல் நிகழவில்லை, தாண்டியபின்னும் நிகழவில்லை. தில்லையண்ணன் விட்றோபண்ணிப் போய்விட்டாரோ.

''நாங்க அடிக்கிறம்... எதிர்த்தடிக்க கால அவகாசம் போதாது... நீ ரெக்டர் தாண்டினதும் கிறினெட்ட சார்ஜ்பண்ணு... கிறினெட் வெடிச்சாமட்டும் போதும்... மற்றத நான் பார்க்கிறன்...''

அவர்கள் ஆளையாள் திரும்பிப் பார்க்கவுமில்லை, ரெக்டரிலிருந்து கண்களை எடுக்கவும் இல்லை. ரவியண்ணன் கட்டளை உறுதியாக இருந்தது. அரியம் உசாரானான். நெஞ்சு அடைத்து மூச்சிடறி விக்கலெடுத்தது. கிறினெட் வியர்வையின் ஈரலிப்பில் கைக்குள்ளிருந்து நழுவுவதுபோல இருந்தது. தன் பலம் முழுவதையும் தன் கைக்குள் கொண்டுவர முனைந்தான் அரியம். தன் உடல் அந்த இடத்திலிருந்து மாயமாக மறைந்துபோவதை அரியம் உணர்ந்தான். ரெக்டர் அவர்கள் பதுங்கியிருந்த இடத்தைக் கடந்துபோனது.

''எழும்பி அடி...''

ரவி அண்ணனின் கட்டளை அவன் நாடிநரம்புகளுக்குள் ஊடுருவிப்பாய்ந்தது. தன் தசைகளைப் போலவே மனமும் இறுக்கமடையும் அந்தக் கணத்தை அரியம் உணர்ந்தான். வேகமாக எழும்பினான். எழும்பும்போதே பற்களுக்கிடையில் கிளிப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயம் நன்னுப்பட்டு கி ரிப் உருவுப்பட்டுத் தொங்கிக்கொண்டிருந்தது. ரெக்டர் பெட்டியைச் ᵔ யாக இலக்கு வைத்தான். போதுமான நேர இடைவெளிவிட்டு, ரெக்டரின் வேகத்தைக் கணித்து கிறினெட்டை வீசினான். வீசிய வே கத்தில் கால் கிறவல் குருணிக்கற்களில் சறுக்கியது. மதகுப் பள்ளத்தி ா சரிவில் சறுக்கிக்கொண்டுபோய் விழுந்தான் அரியம். குண்டுவெடிப்பின் அதிர்வு, பனைகளிலும் வடலிகளிலும் நிலத்திலும் அதிர்ந்து வெடியோசையுடன் அடங்கியது. அள்ளிவீசப்பட்ட மணல் துணிக்கைகளதும் வெடிச்சிதறல்களதும் இரைச்சல் பனையோலைகளில் சடசடத்தது. அரியம் மதகுப்பள்ள சகதிக்குள் கால்புதைய நின்றிருந்தான். குண்டுவெடிப்பின் இரைச்சல்களும் புழுதியும் அடங்கியுமடங்காத கணத்தில் ரவி அண்ணனின் ரைபிள் தொடர் வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கியது. ரவைக்கோதுகள் திடலிலிருந்து கீழே உருண்டு வந்தன. திட்டப்படி ஆளையாள் பார்க்கத் தேவையில்லை. பகல்நேரம் என்பதால் தாக்குதல் நிகழ்ந்ததும் மற்றவர்களுக்கு உதவி தேவையில்லை என உணரும்பட்சத்தில் அந்த இடத்திலிருந்து வேகமாக வெளியேறிவிடவேண்டும் என்பது கட்டளை. கன்னியாகாட்டுப்பகுதியை நோக்கி ஓடவேண்டியதுதான். அரியத்தின் இடுப்பில் இன்னுமொரு கைக்குண்டு இருந்தது. அது தற்பாதுகாப்புக்கானது. அரியம் கன்னியாகாட்டுப்பகுதியை நோக்கி ஓடுவதற்குத் தயாரானான். ரவியண்ணன் ஓட எத்தனிக்கவில்லை. சுடுவதும் வீதியை நோக்கி முன்னேறுவதும் நிலையெடுப்பதும் பின் ஒற்றை அல்லது இரட்டை வெடிகளைத் தீர்ப்பதுமாக அவர் பனைகளில் நிலையெடுத்துக்கொண்டு முன்னேறிக்கொண்டிருந்தார். அரியம் ஓடும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு இடுப்பிலிருந்த கிறினெட்டைக் கையில் எடுத்துக்கொண்டு பனைகளில் மறைவாக நிலையெடுத்தபடி வீதி நோக்கி முன்னேறினான்.

வீதியில் அரியம் முதலில் கண்டது, ராணுவ பூட்ஸ்சுடன் பிய்த்தெறியப்பட்டிருந்த காலைத்தான். அரியத்துக்கு மூச்சுத்திணறியது. உடல் வெடவெடத்து நடுங்கி அடங்கியது. ரெக்டர் வீதியைவிட்டு விலகி எதிர்ப்பக்க பள்ளத்துக்குள் இறங்கிக்கிடந்தது. ரெக்டர் சாய்ந்த அதே பக்கம் பெட்டியும் சாய்ந்து நிலைக்குத்தாக நின்றது. குண்டுவெடிப்பிலிருந்து தப்பி, ஓட முனைந்த சிப்பாயை ரவியண்ணன் சுட்டுக்கொன்றிருந்தார். குண்டு, ரெக்டர் பெட்டிக்குள்ளேயே விழுந்து வெடித்திருந்தது. மற்ற சிப்பாய்கள் குண்டுவெடிப்பிலும் ரெக்டர் கவிழ்ந்ததிலும் நசுங்கிப்போயிருந்தார்கள். அரியத்துக்கு ரெக்டரில் குலுங்கிக்குலுங்கி வந்த ராணுவச் சிப்பாய்கள் இவர்கள் இல்லை எனத்தான் எண்ணத்தோன்றியது. கட்டவுட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர்கள் எவருமே பின்வாங்கியிருக்கவில்லை. எல்லாரும் நிலையெடுத்தபடி ரெக்டரை நெருங்கி வந்திருந்தார்கள். ரவியண்ணன் மற்றவர்களுக்கு அரியத்தைக் கண்ணால் காட்டினார். எல்லோரது கண்களும் அரியத்தின் உடலை ஒருகணம் தழுவிப் பின் இலக்கில் நிலைத்ததை அரியம் கண்டான். தில்லையண்ணன் சனத்தின் ரெக்டர் எனத்தான் சாதாரணமாக இருந்திருக்கிறார். ராணுவத்தின் ரெக்டர் என உணர்ந்து துல்லியமாகத் தாக்குவதற்கான கால அவகாசம் போதாமையால் அவர் தாக்குதலைத் தவிர்த்திருந்தார்.

முடிந்தளவுக்கு வேகமாக ஆயுதங்களை அவர்கள் கைப்பற்றினார்கள். அரியத்திடம் இப்போது ரைபிள் ஒன்று இருந்தது. சில ரவைக்கூடுகளும். அவர்கள் கன்னியாக்காட்டுக்குள் தப்பிப்போகின்ற திட்டத்தைக் கைவிட்டார்கள். அவர்கள் கைப்பற்றிய ஆயுதங்களுடன் புள்ளகுளத்துக் கரச்சிவெட்டைத் தாண்டி சாம்பல்தீவு கிராமத்துக்குள் ஓடினார்கள். கன்னியாக்காட்டுப் பகுதிக்கு மேல் பறந்த ஹெலிக்கப்டர், கன்னியாக்காட்டுப்பகுதிக்குள் தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தது. அவர்கள் அடுக்குப்பார்காட்டுப் பகுதிக்குள் இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள்.

## 4.12

அரியத்தின் அம்மா கல்யாணி மனம் பேதலித்துப்போயிருந்தாள். நீண்ட நேரமாகத் தலைக்கு அரப்பு வைத்துத் தலைமுழுகிக் கொண்டிருந்தாள் கல்யாணி. தனக்கு ஒரே ஒரு பிள்ளை. வதனி மட்டுமே என அவளது மனது கூக்குரலிட்டுத் திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தது. அந்த மனிதர்களின் கோரமான உடல்கள், அவள் கண்முன்னே வரும் ஒவ்வொரு கணமும் அவள் ஓடிவந்து கண்ணகையம்மன் கோவில் கிணற்றில் அரப்பு வைத்துத் தலைமுழுகிக்கொண்டிருந்தாள். தெருக்களில் பினாத்திக்கொண்டு திரிந்தாள். கண்ணகையம்மனை மன்றாடிமன்றாடிக் கும்பிட்டாள். கோயில் சுவற்றில் தலையை முட்டிக்கொண்டாள். அந்த நினைவு வரும் கணங்களில் ஆலமரத்திலோ குடிசையின் கப்புகளிலோ தலையை முட்டிக்கொண்டாள்.

டெலோ இயக்கம் அலஸ்தோட்டப்பகுதியில் வைத்து ராணுவ ரெக்டரைத் தாக்கி ராணுவச் சிப்பாய்களைக் கொன்று, ஆயுதங்களை மீட்டு வந்த அன்று மாலை நேரத்துக்குப் பின்னர்தான் அவள் துன்பப்பட்டுத் திரியும்நிலை வந்தது. அந்தத் தாக்குதல் நடந்த சில மணிநேரத்துக்குள்ளேயே அந்தத் தாக்குதல் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் கிராமத்துக்குள் தீயாய்ப் பரவிவிட்டன. அரியத்தின் பெயர் கிராமத்துக்குள் சிலாகிக்கப் பட்டுக்கொண்டிருந்தது.

அன்று கச்சனக்கல் கிராமத்துக்குள் ஜெயத்தின் தோட்டத்தில் புகையிலைக்கன்று நடும் வேலை இருந்தது. சம்பவம் நடந்த காலைப்பொழுதிலேயே கல்யாணி, கனகக்கையுடன் அங்கு போய்விட்டாள். மதிய உணவு சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது தான் புள்ளகுளத்துப்பாலப்பக்கம் குண்டுவெடிக்கும் சத்தமும் துப்பாக்கி வெடிச்சத்தமும் கேட்டன. பாலம் தகர்க்கப்பட்டிருந்ததால் ராணுவத் தொடரணி வரும் என்ற பயம் இருக்கவில்லை. அவர்கள் அதைப் பொருட்படுத்தவும் இல்லை. பின் ஹெலிக்கப்டர் ஒன்று கன்னியாக்காட்டுப்பகுதிக்குமேல் வட்டமடித்துச் சுட்டுக்கொண்டு போன சத்தம் கேட்டது. ஏதோ நடந்திருக்கிறது என அவர்கள் பேசிக் கொண்டார்கள். அவர்கள் அடிமுடி தேடவில்லை. புகையிலைக்கன்று நடும் வேலையின் தீவிரத்தில் அவர்கள் மூழ்கிவிட்டார்கள்.

மாலைநேர தேத்தண்ணிக்கு அவர்கள் மரத்துக்குக்கீழ் கூடிய போதுதான் அந்தச் செய்தி பரவியது. எல்லோரும் கல்யாணியை மரியாதையாக நடத்த முற்பட்டார்கள். கல்யாணி எப்போதும் போல இயல்பாக இருக்க விரும்பினாள். அவளது அடிமனதில் விசித்திரமான பயங்கள் தோன்றத்தொடங்கின. தனக்கு இப்போது கிடைக்கும் மரியாதையை அவள் விரும்பவில்லை. தான் செய்துகொண்டிருக்கும் தொழிலைத் தன் மகளின் வாழ்க்கையை அது பாதிக்கும் எனப் பயந்தாள். மீண்டும் இப்போது சில துப்பாக்கி வேட்டோசைகள் புள்ளகுளத்துப்பாலப் பக்கமிருந்து கேட்டது.

அவர்கள் வேலையில் மும்முரமானார்கள். நிலைமை எப்படி வேண்டுமானாலும் மாறலாம். அவர்கள் தங்களுக்குள் உரையாடிக் கொண்டிருக்கவில்லை. உழுது எருவும் நீரும் விட்டுக் கட்டிய தோட்டத்துக்குள் குறிப்பிட்ட இடைவெளிகளில் சீராகக் கன்றுகளை நட்டுக்கொண்டு வந்தார்கள். சூரியன் செம்பியன்மலைக்குக் கீழே இறங்கிக்கொண்டிருந்தது. அவர்கள் சாரியின் விளிம்போரம் சகதியின் படிவுகள் கனமாகிக்கொண்டிருந்தன. அவர்கள் கன்றுகளை நட்டு முடித்து, வேகமாகத் தோட்டக்கிணற்றில் கைகால்களைக் கழுவிக் கொண்டு ஜெயத்தின் தோட்டத்துக்குள்ளிருந்து ஒழுங்கையில் இறங்கிப் பிரதானவீதி நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். கனகக்கையும் கல்யாணியும் தங்களுக்குள் கதைத்துக்கொள்ளவில்லை. அவரவர் யோசனை அவர்களுக்கென்ற நிலையில் நடந்துகொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பிரதானவீதியை நெருங்கிக்கொண்டிருந்தார்கள். நிலாவெளி வேதக்கோயிலடிப்பக்கமிருந்து நெஞ்சிலடித்துக்கொண்டு இரட்டைக்கரத்தை சிங்கராயரின் மனைவியும் மகளும் நாலைஞ்சு பேரும் பிரதானவீதி வழியே ஏழாங்கட்டைப்பக்கம் ஓடினார்கள். பிரச்சினை என்னவெனத் தெரியாததால் கனகக்கை அவர்களுக்குப் பின்னே வேகமாகப் போனாள். வீட்டுக்குப் போகும் வேகத்திலிருந்த கல்யாணியும் கனகக்கைக்குப் பின்னால் போனாள். ஏழாங்கட்டையடியில் பனையோடு சேர்ந்து வளர்ந்த ஆலமரத்துக்குக்கீழ் சனம் கும்பலாக நின்றிருந்தது. பிரதானவீதியில் சக்கப்பணியக் கிடந்த சிங்கராசாவின் மனைவி, மார்பில் அடித்து ஒப்பாரி வைத்துக் கத்திக்கொண்டிருந்தாள். மயங்கிக் கிடந்த சிங்கராசாவின் மகளை மடியில் தூக்கிவைத்து எழுப்ப முனைந்துகொண்டிருந்தாள் ஒரு பெண். கல்யாணியும் கனகக்கையும் கூட்டத்தை உடைத்துக்கொண்டு உள்ளே போனார்கள்.

கல்யாணியின் கண்ணில் முதலில்பட்டது இரட்டைக்கரத்தை வண்டிதான். அதைச் சுற்றி ஏன் இவ்வளவு சனம் புதினம் பார்க்கிறார்கள் என்பது அவளுக்குப் புரியவில்லை. இயக்கப் பொடியங்களும் ஆயுதங்களுடன் நின்றிருந்தார்கள். தார் றோட்டில் வண்டியிலிருந்து இரத்தம் சொட்டுச்சொட்டாக விழுந்து படர்வதைக் கண்ட கல்யாணி பயந்துபோனாள். நிர்வாணமாக இரண்டு உடல்கள் இரத்தக்காயங்களுடன் வண்டியில் பாதி உடல் கிடக்க தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவளுக்கு மூச்சுமுட்டி உடல் வெடவெடத்துப்போனது. சடலங்களைக் கூர்ந்து கவனித்தாள். ஒரு உடல் இரட்டைக்கரத்தை சிங்கராயருடையது. மற்றது அவர் மகள்வழிப் பேரன் சுதனுடையது.

கல்யாணியும் கனகக்கையும் காலையில் வேலைக்குப் புறப்பட்டு வரும்போது, இரட்டைக்கரத்தை சிங்கராயர் பொச்சுமட்டைகளை ஏற்றிக்கொண்டு நகரத்தை நோக்கிப் போனது கல்யாணிக்கு ஞாபகம் வந்தது. வண்டியின் முன்பக்கம் நுகத்தடியில் வெறும் மேலும் வேட்டித்துண்டும் தலையில் முண்டாசுமாக சிங்கராயரும் கூடாரம்போல் ஏற்றப்பட்ட பொச்சுமட்டைக்கு மேல் மகள்வழிப் பேரன் சுதன் மஞ்சள்நிற டீ சேட்டும் அடிடாஸ் கால்சட்டையுடனும் இருந்து போனது ஞாபகம் வந்தது.

காலையில் பொச்சுமட்டை ஏற்றிக்கொண்டு புள்ளகுளத்துக் கரைச்சிவெளிக்குள்ளால் இறங்கி டவுனுக்குப் போனது இரட்டைக்கரத்தை சிங்கராயரின் வண்டி. பொச்சுமட்டையை இறக்கிவிட்டுத் திரும்பும் போது பாலத்தடியில் பிரச்சினை என்றதும் மூன்றாங்கட்டையடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தரித்து நின்றிருக்கிறார்கள். நேரம் தாழ்த்தி வெளிக்கிட்டு வந்திருக்கிறார்கள். சிங்கராயர் வயதானவராக இருந்ததாலும் சுதன் சிறுவனாக இருந்ததாலும் பிரச்சினை இருக்காது என நம்பி அவர்கள் வந்திருக்கிறார்கள்.

ராணுவம் அவர்களைத் துவரங்காட்டுச்சந்தியில் வைத்து மறித்து விசாரித்திருக்கிறது. அவர்கள் நிலாவெளி என்று சொன்னதும் அவர்களைத் தடுத்துவைத்திருந்திருக்கிறார்கள். காலையில் நடந்த தாக்குதலுக்கு அவர்களைப் பழிவாங்க ராணுவம் திட்டமிட்டிருக்கிறது. அவர்களை நிர்வாணமாக்கிச் சுட்டுக்கொன்றுவிட்டு வண்டியில் அவர்களைத் தூக்கிப்போட்டு இருவரது கால்களையும் பிணைத்து வண்டிக்கு முன்னும்பின்னுமாகத் தலையும் கைகளும் கீழே தொங்குமாறுவிட்டு இரட்டைக்கரத்தை மாடுகளைத் துரத்தி விட்டிருக்கிறார்கள். பழக்கப்பட்ட மாடுகள் அவர்கள் உடல்களைச் சுமந்துகொண்டு புள்ளகுளத்துக் கரச்சிவெளி தாண்டி வந்திருக்கிறது. பாலம் உடைக்கப்பட்டிருந்ததால் சனப்போக்குவரத்தற்ற வீதியில் தனிமையில் அவர்களது உடல்களைச் சுமந்த இரட்டைமாட்டுவண்டி பின் மதியநேரத்தில் ஊரை நோக்கி ஊர்ந்து மாலைப்பொழுதில் வந்துசேர்ந்திருக்கிறது. ஏழாம்கட்டைக்கு வந்த பின்புதான் சனம் கண்டது. அந்த உடல்களிலிருந்து இன்னமும் இரத்தம் தார்வீதியில் வழிந்துகொண்டிருந்தது. டெலோ இயக்கத்தின் தாக்குதலுக்கு மாலையில் ராணுவம் பழிவாங்கியிருக்கிறது. உடல்களைப் பார்த்து பேதலித்துப் போய் நின்ற கல்யாணியை கனகக்கைதான் கையைப் பிடித்து இழுத்துக் கூட்டத்துக்கு வெளியே கொண்டுவந்தாள்.

''நாசமாப்போக... என்ற குடிய கெடுக்க வந்ததுகள்... நாசமாப்போக... யாரோ பாவி பெத்ததுகள் செய்த பாவத்துக்கு... என்ற புருசனையும்... பேரப்பிள்ளையையுமா நான் பலிகொடுக்க வேணும்...''

சிங்கராயரின் மனைவி வீதியில் சக்கப்பணியகிடந்தபடி வீதியோர மண்ணை அள்ளி யாரையோ திட்டுவதுபோல கல்யாணியைத் திட்டிக்கொண்டிருந்தாள்.

கல்யாணி திரும்பத்திரும்ப அரப்பு வைத்துக் கண்ணகையம்மன் கிணற்றில் தலைமுழுகிக்கொண்டிருந்தாள். வதனிக்குத் தாயைக் காணக்காண பயமாக இருந்தது. மனிசி மூளைய விட்டுட்டுதெண்டா என்ன செய்யிறது. தனக்குப் பாதுகாப்பற்றுப்போய்விடும் என்ற பயம் பிடித்துக்கொண்டது. அந்தத் தாக்குதலுக்குப் பின்னர் அரியத்தின் பெயர் அடிபடத் தொடங்கியிருந்தது. பலர் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களது ஓட்டு வீடுகள் சும்மாதான் கிடக்கு, காணியையும் பாத்துக்கொண்டு தேங்கா மாங்கா தேவை எண்டாலும் எடுங்கோ எனச் சிலர் வந்து கேட்டார்கள். கல்யாணி அவற்றை எல்லாம் முற்றாக மறுத்துவிட்டாள். சிலர் வலிய வந்து, உலர் உணவுப் பொருட்களைக் கொடுக்க முற்பட்டபோதும் அவள் அவற்றை வாங்க மறுத்து விட்டாள். அவன் மூலம் கிடைக்கும் எந்த நன்மையும் தனக்குத் தேவையில்லை என்பது கல்யாணியின் தீர்மானம். அவள் அதில் தீவிரமாக இருந்தாள். என்னதான் பைத்தியக்காரி மாதிரி திரிந்தாலும் அவள் வேலைக்குப் போவதிலிருந்து பின்வாங்கவில்லை.

வதனி வேறு ஒரு திட்டத்தை மனதுக்குள் வைத்திருந்தாள். அரியம் இயக்கத்துக்குப் போனதற்குப்பின்னர் வீட்டிற்கு வரவில்லை. அவள் தனக்குத் தெரிந்த இயக்கத்தோடு தொடர்பு வைத்துக் கொண்டிருப்பவர்களிடம் எல்லாம் அம்மாக்குச் சுகமில்லை. தம்பியை ஒருக்கா ரகசியமா வந்து அம்மாவைப் பாத்திற்றுப் போகச்சொல்லுங்க எனச் சொல்லிவைத்தாள்.

அவளது முயற்சி வீண் போகவில்லை. அரியம் சில தினங்கள் கழித்துச் சைக்கிள் ஒன்றில் இரவு அவர்கள் தூங்கியபின் வந்து எழுப்பினான். வதனி எழும்பி வந்தாள். தாய் அவனைப் பார்க்க மறுத்து அடம்பிடித்துக் குடிசைக்குள்ளேயே படுத்துக்கிடந்தாள். வதனி அவனுக்குத் தேத்தண்ணி போட்டுக்கொடுத்தாள். பின் அவனை அழைத்துக்கொண்டு கண்ணகையம்மன் கோயில் முற்றத்துக்கு வந்தாள்.

''தம்பி... அம்மாட நிலமை வரவரச் சரி இல்ல... எனக்கு பயமாக்கிடக்கு... நான் தனிய அனாதையா அந்தரிச்சுப்போயிருவனோ எண்டு... எனக்கு நீ ஒரு உதவிய... உங்கட இயக்கத்திட்ட சொல்லி செய்துதரவேணும்...''

''என்ன...''

''கோபாலபுரத்தில... அப்பாட பேர்ல... மூண்டு ஏக்கர் வயல் காணியும்... தென்னம்பிள்ளைகளோட சேர்ந்த... குடியிருப்புக் காணி ஒண்டும் இருக்கெண்டு அம்மா அடிக்கடி சொல்லுறவ... அந்த காணியின்ட உறுதி எல்லாம் மனிசி பத்திரப்படுத்தி வைச்சிருக்கு... அந்தக் காணியில ஆரோ அப்பாட தங்கச்சி முறையான ஆக்கள்... அடாத்தா பிடிச்சுவைச்சுக்கொண்டு இருக்கினமாம்... அப்பாட சொந்தத் தங்கச்சியா இருந்தாக்கூட பரவாயில்ல... தங்கச்சி முறைதானம்... அது அப்பாட சொத்து... முறைக்கு எங்களுக்குத் தானே வரவேண்டியது... நாங்க ஏன்... ஆற்றயும் இரவல் குந்தில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குந்திக்கொண்டு இருக்கவேணும்... அங்க போனா அம்மாட நிலமை சிலவேளை நல்லாயினாலும் நல்லாயிரும்... மனிசியும் எத்தின நாளைக்கடா இப்பிடி கூலி வேலைக்குப் போய் கஸ்டப்படுறது... உங்கட இயக்கத்திட்ட சொல்லி அத மீட்டுத் தர ஏலாதாடா தம்பி...''

சில நாட்களாக அவள் தனக்குள் பேசிப்பார்த்த விடயங்களை ஒரு பிசகும் இல்லாது சொல்லிவிட்டு அவன் முகத்தைப் பார்த்தாள். அரியம் வதனியின் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றான். இவள் எப்ப இப்படி எல்லாம் யோசிக்கத்தொடங்கினாள் என நினைத்தான்.

''இப்ப நான் உதயனோட இங்க நிலாவெளியில இல்ல... நான் ரவியண்ணனோட திரியாய் பக்கம் நிக்கிறன்... எதுக்கும் நான் ரவியண்ணனோட கதைச்சுப்போட்டுச் சொல்லுறன். இதுக்கு அம்மா ஒத்துக்கொள்ளுவாவா...''

''வேற வினையே வேணாம்... இந்த விசயம் அம்மாக்குத் தெரியாது... தெரியவும் வேணாம்... நீ ஏலுமானதச் செய்... நான் அம்மாட கால்ல கையில விழுந்தாவது அங்க கொண்டேச் சேர்த்திருவன். அங்கயும் தோட்டவேலைகள் இருக்கும்... நான் சமாளிப்பன்... இந்த உதவிய மட்டும் எனக்கு எப்பிடியாச்சும் செய்து தா...''

''சரி பாப்பம்''

அரியம் சைக்கிளில் ஏறி மிதிக்கத்தொடங்கினான். வதனி பிழைத்துக்கொள்வாள்.

## 4.13

அன்னம்மாக் கிழவி வெகுண்டுபோயிருந்தாள். உக்கிரமானவளாக மாறிப்போயிருந்தாள். விடியாத அந்த வேளையில் தனக்குப் பழக்கப்பட்ட பெரியகுளம் காட்டுப்பகுதிக்குள் அவள் நடந்து கொண்டிருந்தாள். பட்டிநாம்பன் அவளுக்கு முன்னே மிடுக்காகப் போய்க்கொண்டிருந்தது. அவள் வாளைத் தன் தலைக்கு மேலே உணர்ச்சிவேகத்துடன் தூக்கிப்பிடித்திருந்தாள். சில பொழுதுகளில் வாளைச் சுழற்றினாள். சில பொழுதுகளில் காற்றைக் கிழித்து எதிரியைக் குத்தினாள். அது வாகரைக் குருவிநாச்சியின் இடைவாள். கொன்றுவிட்டார்கள். அவளது குழந்தையைக் கொன்றுவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தோளிலும் மார்பிலும் போட்டு வளர்த்த தன் குழந்தையைக் கொன்றுவிட்டார்கள். தன்னைத் தாயாக மதித்த, மற்றவர் முகம்பார்த்துச் சினக்கத் தெரியாத அவள் குழந்தையைக் கொன்றுவிட்டார்கள். காசிப்பிள்ளையரைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள்.

இரவுச்சாப்பாட்டுக்குப் பின்னர் தன் படுக்கையைத் தூங்குவதற்காகத் தயார்படுத்திக்கொண்டிருந்தாள் அன்னம்மாக் கிழவி. வீட்டு முன்வாசலில் கேட்ட வெடியோசையின் அதிர்வில் பின்கட்டுக்குள்ளிருந்து வாசலடிக்கு ஓடி வந்தாள். வாசல் படியில் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பவர்போல இருந்தார் காசிப்பிள்ளையர். அவரிடம் வழமையாக வந்துபோகும் இயக்கப் பொடியள் திரும்பிப் பார்த்துக்கொண்டே கடப்பைக் கடந்து ஒழுங்கையில் இறங்கிப் போனார்கள். அவர்கள் தோளில் துப்பாக்கிகள் தொங்கிக்கொண்டிருந்தன. நீட்டிய ஒரு கால் நிலத்தில் உதைத்திருக்க, ஒரு கால் மடிந்து வாசற்படியில் குத்தியிருக்க முழங்கை விறாந்தைத்தளத்தில் மடிந்திருக்க நிலைப்படியில் தலைசாய்த்து ஆறுதலாக யாரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பவர்போல இருந்தார் காசிப்பிள்ளையர். வாசல் மின்குமிழ் வெளிச்சத்தில் அவரது வெற்றுடம்பில் நெஞ்சிலும் வயிற்றிலுமிருந்து இரத்தம் கொப்பளித்துக்கொண்டிருந்தது. இடுப்பிலிருந்த வெள்ளைவேட்டி இரத்தத்தில் செந்நிறமாகிக்கொண்டிருந்தது. அவரது மனைவியும் பிள்ளைகளும் வெளியேவந்து மாரிலடித்து ஒப்பாரி வைக்கும்வரை அன்னம்மாக் கிழவி பிரமைபிடித்துப்போய் நின்றுகொண்டிருந்தாள். காசிப்பிள்ளையரின் உறவுகள் அந்த வளவுக்குள் இருளுடன்இருளாக வந்து குவிந்துகொண்டிருந்தபோது அன்னம்மாக் கிழவி அந்த வளவுக்குள்ளிருந்து வெளியேறிக்கொண்டிருந்தாள். அவள் கையில் வாள் ஒன்று இருந்தது. கக்கத்தில் துணிமூட்டை ஒன்றும் இருந்தது.

இருளுக்குள் கூழாவடிதாண்டி கரச்சிவெளிக்குள் இறங்கினாள் அன்னம்மாக் கிழவி. பட்டிக்குத் திரும்பாது கள்ளப்பட்டு கிராமத்துக்குள் திரிந்துகொண்டிருந்த பட்டிநாம்பன், அந்த நேரத்தில் அன்னம்மாக் கிழவியைக் கண்டதும் மருண்டு, பயந்து அவளைப் பார்த்தது. அன்னம்மாக் கிழவியின் முகக்குறிப்பைக் கவனித்துக்கொண்டு நின்றது. அவள் தன்னைக் கண்டுகொள்ளவில்லை என்பதை அது புரிந்துகொண்டது. அவளுக்குப் பின்னால் போய்ச் செல்லமாக முட்டியது. பக்கவாட்டில் போய் உரசியது. தன்னை அவள் உதாசீனம் செய்வதால் தன்னுடன் அன்னம்மாக் கிழவி கோபத்திலிருப்பதாக நினைத்தது. பின் அவளுக்கு முன்னே கம்பீரமாக நடந்துபோனது. அன்னம்மாக் கிழவி பின்னே நடந்து போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம்மாக் கிழவிக்கு காசிப்பிள்ளையரைச் சுட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்துப்பார்த்துப் படலையைத் தாண்டித் துவக்குடன் போன இருவரையும் நன்றாக ஞாபகம் இருந்தது. ''அண்ணாச்சி'' ''அண்ணாச்சி'' என்று வாய் நிறைய பல்லும் முகம் நிறைய சிரிப்புமாக வந்து நின்றவர்கள்தான் அவர்கள். அவர்கள் அந்தத் திண்ணையில் தின்று குடித்துக்கிடந்தவர்கள். மாட்டுத்தாள்பேப்பரில் கட்டுக்கட்டாய்ச் சுற்றிக்கொண்டு போனவர்கள். வாங்கிப்போனது என்னவென அவள் அறிவாள். நெல்லு மூடைமூடையாகக் கொண்டுபோனவர்கள் அவர்கள். எல்லாப்பக்கத்திலும் அவரை வருத்திக்கொண்டிருந்தார்கள். காசிப்பிள்ளையரை இனந் தெரியாதவர்கள் சுட்டுக்கொன்றார்கள் என யாரும் சொல்லமுடியாது. அன்னம்மாக் கிழவிக்குக் காசிப்பிள்ளையரைக் கொன்றவர்கள் யாரென்று தெரியும். அன்னம்மாக் கிழவி பெரியகுளம் காட்டுப்பகுதிக்குள் இறங்கியிருந்தாள்.

அன்னம்மாக் கிழவி நிலாவெளியைப் பூர்வீகமாகக் கொண்டவளில்லை. அவளது பூர்வீகம் சீனன்குடா விமானநிலையத்தை ஒட்டிய சின்னம்பிள்ளைச்சேனைப்பகுதியாக இருந்தது. அவள் தன் நினைவு தெரிந்த நாளிலிருந்து தன் தாய் தந்தையரின் முகத்தைத் தேடித் திரிந்தவள். மலேரியா காய்ச்சலுக்கு அவர்களைப் பலிகொடுத்துவிட்டாள். அப்படித்தான் மயிலைக்குஞ்சு அப்புச்சி அவளுக்குச் சொல்லியிருந்தார். முகத்தில் உவர்தரையில் புல்லு முளைத்ததுபோல முகத்தில் வெள்ளைநிற முடிகள் கம்பிபோல நட்டுக்கொண்டு நிற்கும். கன்னங்கள் உட்குழிந்து தாடைகள் மீது கறுத்த தோல் படிந்துகிடக்கும். நரைத்த முடிகள் சுருள்சுருளாக நெற்றியின் மொட்டைப் பகுதியில் கிடக்கும். மயிலைக்குஞ்சு சிரிக்கும்போது கோணல்மாணலான பற்கள் வெளித்தெரியும். எப்போதும் அந்தக் கடற்கரை ஓரத்து மணல்வெளிகளில் தடித்த காரிக்கன் துணியிலான சட்டையைப் போட்டுக்கொண்டு ஓடித்திரியும் அவளை அன்னம்மா அன்னம்மா எனக் கூப்பிட்டபடியே திரிவார். அன்னம்மா எப்போதும் சின்னம்பிள்ளைச்சேனையிலிருந்து ஆட்களை ஏற்றிக்கொண்டு கின்னியாவுக்குக் கடலேரியில் போகும் தோணிகளைப் பார்த்துக்கொண்டு நிற்பாள். சிலவேளைகளில் செம்பந்துக் கோளமாய்க் கடலில் இறங்கும் சூரியனை மாலைநேரங்களில் பார்த்துக்கொண்டு நிற்பாள். அப்போது மயிலைக்குஞ்சு என்னதான் தொண்டைவைத்துக் கத்தினாலும் கேட்காததுபோல நின்றுவிடுவாள். அடித்துப்பிடித்து அவளைத் தேடிவரும் மயிலைக்குஞ்சு அவளைக் கண்ட பிறகுதான் நிம்மதி அடைவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மணற்பரப்பையும் கடலையும் செஞ்சூரியனையும் ஒருநாள் தான் விட்டுப் போகவேண்டிவரும் என அவள் நினைக்கவில்லை. அப்போதும் சண்டை நடந்தது. ஆங்கிலேயர்களும் யப்பான்காரனும் சண்டை போட்டார்கள். அன்னம்மா பன்புல்லுக்குச் சாயம் காய்ச்சிக்கொண்டிருந்த அதிகாலை வேளையில் வானத்தில் ஒரே நேரத்தில் இரைச்சலுடன் நிறைய விமானங்கள் பறப்பதைக் கண்டாள். பொதுவாக ஒன்று இரண்டு விமானங்கள் இறங்குவதை அல்லது ஏறுவதைத்தான் பார்த்திருக்கிறாள். ஒரேநேரத்தில் இவ்வளவு விமானங்கள் ஒன்றாகப் பறப்பதை அவள் கண்டதேயில்லை. விமானங்களின் பேரிரைச்சல் அவளைக் கிலிகொள்ளவைத்தது. விமானங்களிலிருந்து கறுப்பாகச் சிறியசிறிய மரத்துண்டுகள் விழுவதைக் கண்டாள். சைரன் ஒலி எழும்பியது. பயந்துபோன அன்னம்மா வீறிட்டுக் கத்திக்கொண்டு மயிலைக்குஞ்சிடம் ஓடினாள். சைரன் ஒலி கேட்ட மயிலைக்குஞ்சும் அவளை நோக்கி ஓடி வந்தார். அவளை இழுத்துக்கொண்டு குழி ஒன்றிற்குள் பதுங்கினார். தடி ஒன்றை வாயில் கவ்விக்கொள்ளும்படி கொடுத்துவிட்டு அவளது காதைத் தன் கைகளால் பொத்தினார். அவள் முகத்தைப் பார்த்துச் சிரித்தார். அவளும் சிரித்தாள். நிலம் அதிர்ந்தது. குண்டுகள் விழுந்து தொடர்ச்சியாக வெடித்துக்கொண்டுபோயின. அவர்கள் ஒளிந்து கொண்டிருந்த குழியின் ஓரங்கள் இடிந்து மணல் உள்ளே கொட்டியது. அவர்கள் எழும்பி ஓடவில்லை. விமானங்கள் குண்டுமழை பொழிந்தன. விமானங்கள் போன பின்பும் சீனன்குடா வெள்ளைக்காரர்களது விமானநிலையத்துக்குள் வெடியோசை கேட்டுக்கொண்டுதான் இருந்தது. சீனன்குடா விமானநிலையம் எரியும் தீக்கங்குகளுடன் புகையையும் கக்கிக்கொண்டிருந்தது. சின்னம்பிள்ளைச்சேனை கிராமத்தை புகை மூடிக்கொண்டது. புகைமூட்டத்தால் அந்த சின்னம்பிள்ளைச்சேனை கிராமத்திலிருந்து மக்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு தூரமாக நடக்கத்தொடங்கினார்கள்.

மயிலைக்குஞ்சு அன்னம்மாவைத் தோளில் தூக்கிக்கொண்டு நடந்தார். சிலர் திரும்பிப் போகும் முடிவில் இடையிலிருந்த கிராமங்களில் தங்கிவிட்டார்கள். மயிலைக்குஞ்சுக்குத் திரும்பிப்போகும் எண்ணமில்லை. தங்களது வகுத்துவாரிலிருக்கும் ஒரே ஒரு கொழுந்து அன்னம்மா. அவளை இழக்க அவர் விரும்பவில்லை. அவர் பசி தாகம் மறந்து நடந்தார். ஒரு இரவு மட்டும் கிராமம் ஒன்றில் தங்கினார். இரண்டு பகல்கள் நடந்து குமரன்கடவையை வந்தடைந்தார். ஏற்கனவே வெள்ளையர்களுக்குப் பயந்த அவரது சமூகம் இங்குதான் காடுகளை வெட்டிப் புதியகிராமம் ஒன்றை உருவாக்கிக்கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம்மாவுக்கு இந்த இடம் புதிதாக இருந்தது. அண்ணாந்து பார்க்கவேண்டிய உயரமான காட்டுமரங்களும் விதவிதமான காட்டுப்பழங்களும் பறவைகளும் என இங்கு வேறு மாதிரி இருந்தன. கடற்கரையையும் கடலேரியையும் வெண்மணற்பரப்பையும் இழந்திருந்தாலும் அன்னம்மா புதிய உறவுகளுடனும் காட்டுடனும் சங்கமமாகிக்கொண்டிருந்தாள். அந்த இடம் முற்றிலும் வேறானது. சமதரையைக் காணமுடியாது. உயரமான மலைகள்போன்ற கெட்டியான செம்பாட்டு மணற்திட்டிகளையும் பள்ளப்பகுதியில் குட்டைகளையும் கொண்டதாக அந்த நிலம் இருந்தது. விரைவாகவே அங்கு காட்டுமரங்களாலான, களிமண்சுவர் வைத்த வீடு ஒன்றை மயிலைக்குஞ்சு கட்டிக்கொண்டார். தானியங்கள் இங்கு நன்றாகவே விளைந்தன. இங்குதான் அன்னம்மா காட்டுவாழ்க்கைக்கும் மரங்களுக்கும் பூண்டுகளுக்கும் கொடிகளுக்கும் தன்னைப் பரிச்சயப்படுத்திக்கொண்டாள். அந்தக் கிராமம் காடுகளை வெட்டி வளர்ந்துகொண்டிருக்கும்போதே அவளும் வளர்ந்தாள்.

காட்டுக்குள் சூரியன் விழுந்த பின்னும் கோடைகால மாலைப்பொழுதில் நீண்ட நேரத்துக்குப் பிறகுதான் இருள் கவியும். அன்னம்மா குடிசையின் வெளித்திண்ணையில் சுளகுடன் இருந்தாள். குரக்கன் நெத்துக்களைத் தட்டிச் சிவப்புநிறக் குரக்கன் தானியத்தைப் பொச்சிலிருந்து பிரித்தெடுத்துக்கொண்டிருந்தாள். மயிலைக்குஞ்சும் அவரை ஒத்த கிழவர் ஒருவரும் மெல்லிய உடல்வாகுகொண்ட இளைஞன் ஒருவனும் பள்ளப்பகுதியிலிருந்து திடலிலிருந்த அவர்களது குடிசையை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். அந்த இளைஞன் வெள்ளைவேட்டி கட்டியிருந்தான். தோளில் வெள்ளைத் துண்டும் இருந்தது. அந்தக் கிழவரை அன்னம்மாவுக்கு நன்றாகத் தெரியும். அவர் பரிசாதிக் கிழவன். அந்த இளைஞன் அவரது மகனாக இருக்கவேண்டும். பரிசாதிக் கிழவரது சாயல் அந்தப் பையனில் இருந்ததை அன்னம்மா கவனித்தாள். வந்தவர்கள் முற்றத்தில் பாயை விரித்து உட்கார்ந்துகொண்டார்கள். அன்னம்மா சுளகை ஓரமாக வைத்துவிட்டு வந்தவர்களுக்குச் சாயம் வைக்க அடுப்படிக்குள் போனாள். மயிலைக்குஞ்சு பின்னால் அடுக்களைக்குள் வந்தார்.

''சாயத்த நான் வைக்கிறன் பிள்ள... நீ மோனே துரவில கைகால் அலம்பிற்று... நல்ல பிடவ ஒண்ட கட்டிற்று சுருக்கா வா மோனே...''

அன்னம்மாவுக்குக் கடும் யோசனைகள் மாறிமாறி வந்துகொண்டிருந்தன. இருட்டிக்கொண்டு வரும் வேளையில் எங்கே போகப்போகிறார்கள். அவள் தன்னால் முடிந்தளவுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டாள். இப்போது வீட்டுமுற்றத்தில் சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களும் ஆண்களும் வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அவளது அயலவர்கள். மயிலைக்குஞ்சு சாயம்போட்டுக் குவளையில் ஊற்றி வைத்திருந்தார். சாயத்தைக் கொடுத்துவிட்டு என்ன செய்வது என்று தெரியாததால் அவள் ஒதுங்கி நின்றாள்.

மயிலைக்குஞ்சு அன்னம்மாவை அணைவாகக் கூட்டி வந்தார். பரிசாதிக் கிழவர் பையனைக் கூப்பிட்டார். பரிசாதிக் கிழவர் பையனின் கையைப் பிடித்திருந்தார். மயிலைக்குஞ்சு அன்னம்மாவின் கையைப் பிடித்திருந்தார். பையனது கையில் பெண்ணின் கையைப் பிடித்துக்கொடுத்தார்கள். மயிலைக்குஞ்சு கண்கலங்கினார். மணமக்கள் பெரியவர்களது காலில்விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார்கள். திண்ணையில் தம்பதியை அமரவைத்துக் கலத்தில் அரிசிச்சோற்றைப் போட்டுப் பிசைந்து ஒருவர் மற்றவருக்கு ஊட்டிவிடும்படி சொன்னார்கள். பின் அங்கு கூடிநின்ற ஆண்களும் பெண்களும் கலைந்துபோனார்கள். மயிலைக்குஞ்சும் பரிசாதிக் கிழவனும் கையில் கள்ளு நொதித்துக் கொண்டிருந்த சுரக்காய்க் குடுவையைத் தூக்கிக்கொண்டு பள்ளப் பகுதிக்குள் இறங்கி மறைந்துபோனார்கள். அவர்கள் இருவரும் தனித்துவிடப்பட்டார்கள்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர்தான் அவனது பெயர் வைத்தியலிங்கம் என்பதையும் அவன் பரிசாதிக் கிழவனின் மூன்றாவது தாரத்தின் இளைய மகன் என்பதையும் தெரிந்துகொண்டாள். வைத்தியலிங்கம் நிறைய மூலிகைகளையும் வைத்திய வாகடங்களையும் தெரிந்து வைத்திருந்தான். அவன் மனிதர்களுக்கு மட்டுமில்லாது வளர்ப்பு மிருகங்களுக்கும் பரிசாதம் பார்க்கத் தெரிந்துவைத்திருந்தான். அன்னம்மாவுக்கு இப்போது நிறைய மூலிகைகள் பற்றித் தெரிந்திருந்தது. அன்னம்மா அடுத்தடுத்து இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அவர்கள் பெரிய திடலாக இருந்த கெட்டியான செம்பாட்டு நிலத்தின் சரிவில் சமதரையாக இருந்த இடத்தில் தங்களுக்கான புதிய குடிசையைப் போட்டுக்கொண்டார்கள். கீழே குட்டை ஒன்றும் இருந்தது.

கடும் பனிக்காலமொன்றில் மயிலைக்குஞ்சு கடும் மூச்சிறைப்பால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டார். வைத்தியலிங்கத்தின் பரிசாதத்திற்கும்சரி, பரிசாதக் கிழவனது பரிசாதத்துக்கும்சரி, அவரது நோய் அகல்வதாக இல்லை. தன் காலம் முடிந்துகொண்டிருக்கிறது என மயிலைக்குஞ்சுக்குப் புரிந்திருந்தது. அன்னம்மாவைக் கூப்பிட்டு அனுப்பினார். மயிலைக்குஞ்சு கையில் ஒரு முழத்திற்கும் கூடுதலான நீளம்கொண்ட உருளைக்கட்டை ஒன்றை வைத்திருந்தார். அன்னம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கட்டையை அவர் நீண்ட நாட்களாக வைத்திருப்பதைக் கண்டிருந்தாள். சின்னம்பிள்ளைச்சேனையில் இருந்தபோதும் வைத்திருந்ததைக் கண்டிருந்தாள். இங்கு வந்தபின்னும் அந்தக் கட்டையை இடம் மாற்றிமாற்றி வைப்பதைக் கண்டிருந்தாள். இது அப்படி என்ன சொத்து என்று அவளுக்குத் தெரியாது. அவளை அருகில் இருத்தித் தலையைத் தடவிய மயிலைக்குஞ்சு அந்த மரக்கட்டையை அவள் கையில் கொடுத்தார். அது கனமாக இருந்தது. அவள் இவ்வளவு நாளும் நினைத்ததுபோல பட்டை உதிர்ந்த கரையான் அரித்த மரக்கட்டைத்துண்டு இல்லை என்பதை அதன் கனம் அவளுக்குச் சொன்னது. அது ஒரு பித்தளை உருளைக்குத்தி. அதன் மேற்பரப்பில் இருந்த சின்னச்சின்ன கடைசல் கைவேலைகள். களிம்பு பிடித்துக் கறுத்துக் கிடந்தது அந்தப் பித்தளைக்குத்தி. அன்னம்மா அதை அன்றுதான் தூக்கிப் பார்த்தாள். அதன் இரண்டு முனைகளிலும் சிறிய பித்தளை கொழுவி இருந்தது. அதை அவள் திறந்தாள். கண்ணுக்குத் தெரியாதிருந்த கோடு போன்ற இடத்தில் இரண்டாக வாய் பிளந்தது பித்தளைக்குத்தி. அன்னம்மா அதைத் திறந்தாள். அது இரண்டு பாதியாகத் திறந்து கொண்டது. களிம்பு பிடித்த பிடியுடன் கறல் கட்டியும்கட்டாமலும் கூர் மழுங்காத வாள் ஒன்று உள்ளே இருந்தது.

''பிள்ள... இது... வாகரைய ஆண்ட குருவிநாச்சியின்ட இடைவாள். காலம்... மாறி... மாறி... கை மாறி கடைசியா... என்ற தாய் சின்னாச்சியிட கையில இருந்தது... மனிசி சாகேக்க என்ற கையில தந்தது... உன்னயத்தவிர எங்கட அடியில வேற ஒருத்தரும் இல்ல... என்ற கண்ணால... உன்னட்ட சின்னாச்சியின்ட சாயல... கண்டிருக்கன்... சின்னாச்சி குருவிநாச்சிட அம்சத்தோட இருந்ததா கேள்விப்பட்டிருக்கன்... உன்னட்டையும்... அந்த குருவிநாச்சிட அம்சம் இருக்கிறதாத்தான் நம்பிரன்... உன்னட்ட இத தரோனும் எண்டு மனம் சொல்லிச்சு தந்திற்றன்...''

இப்படிச் சொல்லித்தான் அன்னம்மாவிடம் அந்த வாளைக் கொடுத்தார் மயிலைக்குஞ்சு. அந்த கடும் பனிக்காலம் கடந்து போவதற்கு முன்னரே மூச்சிரைப்பால் அவதிப்பட்டு இறந்தபோனார் மயிலைக்குஞ்சு. அடுத்தடுத்துப் பனிக்காலங்கள் வந்துபோய்க் கொண்டிருந்தன. அவளது குழந்தைகளும் வளர்ந்துகொண்டிருந்தார்கள். செழிப்பாக இருந்த அந்த நிலம் கடும் வறட்சிகாணத் தொடங்கியது. அடுத்தடுத்த மூன்று ஆண்டுகள் கடும் வறட்சியில் குளம் குட்டைகள் நீரின்றி வறண்டுபோயின. கையிலிருந்த இருப்புக்களும் தீர்ந்துகொண்டிருந்தன. விலங்குகள் இறக்கத்தொடங்கின. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டும் மழை பொய்க்குமானால் இங்கிருந்து வெளியேறுவதைத் தவிர வேறு வழி இருக்காது என்றுதான் கிராமத்துக்குள் பேசிக் கொண்டார்கள்.

ஆனால் அந்த வருடம் மாரி மழை பொழிந்தது. வறட்சிக்குப் பின்னான மழை ஈவிரக்கமின்றித் தொடர்ந்து அடைமழையாகப் பெய்தது. குட்டைகள் நிறைந்தன. அன்னம்மா தான் அங்கு வந்ததற்குப்பின், அந்த நிலத்தில் அப்படி ஒரு மழையைக் கண்டதில்லை. தை பிறந்த பின்னும் அடைமழை தொடர்ந்து பெய்தது. நிலம் சதுப்புநிலமாகிக் கொண்டிருந்தது. அந்த செம்பாட்டுத்தரை கூழாகி, நடக்கும்போது கணுக்கால் அளவுக்குப் புதையும் சதுப்புநிலமாகிக் கொண்டிருந்தது. தொடர்ந்து மழை பெய்துகொண்டிருந்தது. அதிகாலைப்பொழுதில் குடுவையைத் தூக்கிக்கொண்டு குடிதண்ணீர் எடுப்பதற்காக அன்னம்மா கொட்டுக் கிணற்றை நோக்கிப் போனாள். அவள் கணவனும் இரண்டு மகன்களும் குளிரில் கொடுகியபடி குடிசைக்குள் உறங்கிக்கிடந்தார்கள்.

தொடர்ந்து பெய்துகொண்டிருக்கும் மழையைப் பொருட் படுத்தாது அன்னம்மா கொட்டுக்கிணற்றடியில் நீர் மொண்டு கொண்டிருந்தாள். அடைமழையின் இரைச்சலையும் தொடர் இடி ஓசைகளையும் மீறி மரக்கெந்தொன்று உடையும் ஓசையை அன்னம்மா கேட்டாள். இந்த அடைமழைக்கு மரங்களே பிரளும்போது, மரக்கெந்து உடையாது என்ன செய்யும் என நினைத்தாள். கொட்டுக்கிணற்றில் நீர் மொண்டுகொண்டு அன்னம்மா குடிசைக்குத் திரும்பிக்கொண்டிருந்தாள். போகும்போது வழிப்பாடு கணுக்கால் புதையும் சகதியாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது வழிப்பாடு கணுக்காலையும் தாண்டிய சதுப்புநிலமாக மாறிவிட்டதுபோல இருந்தது. அன்னம்மா பதற்றமடைந்தாள். அவளால் நடக்கமுடியாத அளவுக்கு வழிப்பாடு சகதியாகி முழங்கால்வரை புதைந்துவிடும்போல இருந்தது. தன் பலம் முழுவதையும் சேர்த்து அன்னம்மா குடிசையை நெருங்கிப்போனாள். குடிசையை நெருங்க நெருங்கத்தான் அன்னம்மா புரிந்துகொண்டாள், நிலம் அதே அளவில் சதுப்புநிலமாகத்தான் இருக்கிறது. மேலே இருந்த திடலிலிருந்து மண், மழைக்குக் கரைந்து கூழாக வந்து கொண்டிருக்கின்றது என்பதை. அவள் உடல் ஒருகணம் பதறியது. தன் பிள்ளைகளும் கணவனும் குடிசைக்குள் தூக்கத்தில்கிடக்கிறார்கள். பதறித்துடித்த அவள் தன் கையில் இருந்த தண்ணீர்க் குடுவையைக் கீழே போட்டுவிட்டுத் தன் பலம் முழுவதையும் சேர்த்து முழங்கால் அளவுக்குப் புதையும் சகதியில் முன்னேற முனைந்தாள். தன் கணவனையும் பிள்ளைகளையும் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் பிந்திவிட்டது. மேட்டு நிலத்திடலிலிருந்து பாதியாக இடிந்து கூழாகக் கரைந்த செம்பாட்டுக் களிமண், குடிசையையும் அடித்துக்கொண்டு கீழேயிருந்த குட்டைக்குள் இறங்கியிருந்தது. அவள் வாழ்ந்த குடிசை இருந்த இடத்தில் வெறும் சதுப்புநிலம் மட்டுமே. உடல் மனம் எல்லாம் உறைந்துபோக அந்தச் சதுப்புநிலத்தில் கத்தகூட திரணியற்று நின்றிருந்தாள் அன்னம்மா.

பொழுது விடிந்துகொண்டிருந்தது. அடைமழை விடாது பெய்துகொண்டிருந்தது. திடல் தொடர்ச்சியாகக் கரைந்து குட்டைக்குள் இறங்கிக்கொண்டிருந்தது. அவள் முன்னேறவோ பின் நோக்கிப் போகவோ திரணியற்றுச் செஞ்சகதியாகக் கரைந்து, எங்கும் பரவிக்கொண்டிருந்த சகதிக்குள் நின்றிருந்தாள். குட்டை செஞ்சகதியால் நிறைந்துகொண்டிருந்தது. நீண்டநேரமாக அவள் அந்த இடத்திலேயே உறைந்துபோய் நின்றிருந்தாள். சிலபொழுது முழங்கால் வரைக்கும் சகதி உயரும், அப்போது தன்னையும் மூழ்கடித்துக்கொண்டு போகட்டும் என நினைத்தபடி நின்றிருந்தாள். அவள் தன் மரணத்தை வேண்டிக் கொட்டும் மழையில் நின்றுகொண்டிருந்தாள். எதேச்சையாக கிராமத்தவர் அவளைக் கண்டு, மீட்டு மயிலைக்குஞ்சின் குடிசைக்குள் கொண்டுவந்து கிடத்தும்வரை அன்னம்மா அங்கேதான் நின்றிருந்தாள்.

மழை ஓய்ந்து வெயில் எரித்துச் செஞ்சகதிக் கூழ் கெட்டியான தரையாக, குட்டையையும் சேர்த்து செந்நிறவெளியாக மாறிவிட்டிருந்தது. அந்தச் செந்நிற மணலுக்குள்ளிருந்து தன் குழந்தைகளும் கணவனும் முளைத்து வருவார்கள் என அவள் காத்துக்கிடந்தாள். தன் காத்திருப்பு வீணானது என்பதை அவள் உணர்ந்துகொண்டாள். அவளுக்கு வாழ்வு கொடுத்த செம்பாட்டுமண் தன் வாழ்வைப் பறித்துக்கொண்டும்விட்டது என்பதை அவள் மனம் ஏற்றுக்கொண்டது. தன் குழந்தைகளினதும் கணவனதும் நினைவுகள், இங்கிருந்தால் தன்னைத் துன்பப்படுத்தும் என நினைத்தாள். அதிகாலைவேளை ஒன்றில் துணிப்பொட்டணியையும் மயிலைக்குஞ்சின் நினைவாக அவரது படுக்கையுடன் அவள் சுற்றிப் பாதுகாத்து வைத்த, வாகரையை ஆண்ட குருவிநாச்சியின் வாள்ப்பேழையையும் சுமந்து, காட்டுவழிப்பாதையில் நடக்கத்தொடங்கினாள். பகல்பொழுது முழுவதும் நடந்தாள். சோர்ந்து களைத்துக் காட்டுப்பாதையில் விழுந்துகிடந்தாள். பெரியகுளம் காட்டுப்பகுதிக்குள் வேட்டைக்குப் போன சிலர், அவளை மீட்டு நிலாவெளி கிராமத்துக்குக் கொண்டு வந்தார்கள். அப்போது நிலாவெளிக் கிராமசேவகராக இருந்த காசிப்பிள்ளையரின் தந்தையிடம் ஒப்படைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிலிருந்து அந்த வீடே அவளுக்கு அடைக்கலமாகிப் போனது. காசிப்பிள்ளையும் சரவணமுத்துப்பிள்ளையும் சிறுவர்களாக இருந்தார்கள். காசிப்பிள்ளையும் சரவணமுத்துப்பிள்ளையும் அவளுக்குக் குழந்தைகளாகிப் போனார்கள். அவர்களும் அவர்களது பட்டிமாடுகளுமே அவளது உலகம் என மாறிப்போனது. காசிப்பிள்ளையின்மேல் அவள் அளவு கடந்த பாசம் வைத்திருந்தாள். அவளுடைய உலகம் அந்த வீடுதான் என்றாகிப்போனது. அவளது குழந்தையைக் கொன்றுவிட்டார்கள். பாவிகள், அவரிடம் கையேந்தி நின்ற பாவிகள், அவரைக் கொன்றுவிட்டார்கள். அன்னம்மாக் கிழவியின் மூத்தபிள்ளையைக் கொன்றுவிட்டார்கள்.

அன்னம்மாக் கிழவி வெல்கம்விகாரைப்பகுதியை அடைந்த போது பொழுது நன்றாக விடிந்துவிட்டது. அவளுக்கு முன்னே பட்டிநாம்பன் கம்பீரமாக நடந்து போய்க்கொண்டிருந்தது. சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும் ஓடை ஒன்றுக்கு அருகே அவர்கள் இளைப்பாறினார்கள். வேர்களும் கூழாங்கற்களும் நீருக்குள் படிந்துகிடந்தன. ஓடைக்குள் தண்ணீர் எந்தச் சலனமுமின்றிப் பளிங்குபோல ஓடிக்கொண்டிருந்தது. பட்டிநாம்பன் முதலில் வாய் வைத்து ஓடையில் தண்ணீர் குடித்தது. அன்னம்மாக் கிழவி முகம் கழுவி, வாய் கொப்பளித்து, தண்ணீரை மொண்டு விழுங்கினாள். தண்ணீர் அமிர்தம்போல தொண்டைக்குள் இறங்கியது. அன்னம்மாக் கிழவியும் பட்டிநாம்பனும் அந்த இடத்தில் ஓய்வெடுத்தார்கள். அருகே அன்னம்மாக் கிழவியின் துணிப்பொட்டணியும் குருவிநாச்சியின் வாள்பேழையும் இருந்தன.

## 4.14

வதனி தன் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டுவிட்டாள். தன் உரிமையை நிலைநாட்டிக்கொண்டுவிட்டாள். அவள் தன் தந்தையின் காணிக்குள் அதிரடியாக நுழைந்துவிட்டாள். தென்னைகள் நிறைந்த அந்த வளவுக்குள் தேங்காய் போட்டு வைப்பதற்காக அத்தை முறையானவள் கட்டிவைத்திருந்த தகரக்குடிசையை அறுக்கையாக்கிக்கொண்டு தாயையும் அழைத்துக்கொண்டு குடிபோய் விட்டாள். தந்தையின் வயல்காணியில் வெள்ளாமை செய்து கொண்டிருப்பவரிடம் போய் தனக்குத்தான் குத்தகை தரவேண்டும் என எச்சரித்துவிட்டு வந்திருந்தாள். அடுத்தமுறை வெள்ளாமை செய்பவர்களைத் தான்தான் தீர்மானிப்பேன் எனத் திடமாகச் சொல்லிவிட்டு வந்தாள். அரியம் நேரடியாக எதிலும் தலையிடவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவியண்ணன்தான் தலையிட்டார். வதனி தன் எதிர்கால வாழ்க்கைக்கு வழிசமைத்துக்கொண்டுவிட்டாள். அரியம் நிம்மதிப் பெருமூச்சுவிட்டான்.

அரியம் திரும்பவும் நிலாவெளிக்கு உதயனோடு வந்துவிட்டான். புள்ளகுளத்துப்பாலத்தில் சென்றி இருந்துவிட்டுக் காலையில்தான் அரியமும் சீலனும் சைக்கிளில் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் தோளில் ரைபிள்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அடம்போடைமலை தாண்டும்போது பொழுது புலர்ந்துகொண்டு வந்தது. அவர்கள் கச்சனக்கல் வீதிக்குள் திரும்ப முனைந்தபோது வாசிகசாலையடியில் சனம் கூட்டமாக நின்றிருந்தது. சீலன் சைக்கிளைத் திருப்பாது நேராக வாசிகசாலை சந்திக்கு சைக்கிளை மிதித்தான். அவர்களைக் கண்டதும் சனம் விலகியது. வாசிகசாலைக்குப் பக்கத்தில் பிரதானவீதியிலிருந்த மின்கம்பத்தில் ஒருவர் சாய்ந்தபடி நின்றிருந்தார். தலை பின்புறமாகப் பக்கவாட்டில் சாய்ந்துகிடந்தது. நெற்றியிலிருந்து வடிந்த இரத்தம் காதடியால் நிலத்தில் வழிந்து கொண்டிருந்தது. கழுத்தில் மட்டை ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. மட்டையில் ''தேசத்துரோகி'' என எழுதப்பட்டிருந்தது.

''இந்தாள் பிரபாகரன கொண்டம்பண்ணிக்கொண்டு திரியேக்கயே தெரியும்... இந்தாள் தன்ற வாயாலேயே தனக்கு வாய்க்கரிசி போடப்போறான் எண்டு...''

சீலன் சொன்னான். அரியம் கூர்ந்து பார்த்தான். கனகையாவின் திறந்துகிடந்த கண்கள் தன்னையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டான். அவரது தடித்த கறுத்த உதடுகள் பிரிந்து ஏதோ கேட்பதுபோல இருந்தது அரியத்துக்கு.

''மெய்யே... உனக்கு உன்ற கொப்பன் யார் எண்டு தெரியுமே...''

அரியம் தலையைச் சிலுப்பிக்கொண்டான். வயல்வெளிகளிலும் கிராமவீதிகளிலும் தோட்டப்பிட்டிகளிலும் அலைந்து திரியும் கனகையாண்ணன் குரல். ''மெய்யே... என்ன சுட்டது ஆர் எண்டு தெரியுமே...'' எனக் கேட்டுக்கொண்டு அலைந்து திரிவதுபோல இருந்தது அரியத்துக்கு. நிலாவெளிக் கிராமத்துக்குள் இது இரண்டாவது படுகொலை. இயக்கங்கள் ஏதோ ஒன்று செய்த இரண்டாவது படுகொலை. தங்களுடைய இயக்கத்துக்குள்ளேயே என்ன நடக்கிறது என்பது வெளியில் தெரியாது. தங்கள் இயக்கமே இதைச் செய்திருக்கவும்கூடும் எனத்தான் அரியம் நினைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்துக்குள் இயக்கங்களிலொன்று செய்த முதலாவது படுகொலை காசிப்பிள்ளையரது. காசிப்பிள்ளையரது படுகொலை கிராமத்துக்குள் இயக்கங்கள் மீதான நம்பிக்கையை இழக்க வைத்திருந்தது. இயக்கங்களுக்கு வாரிவாரி இறைத்துக்கொண்டிருந்த மனிசன். இனந் தெரியாதவர்கள் எனச் சொல்லி யாரும் தப்பிக்கமுடியாது என்பது சனத்துக்குத் தெரியும். வாங்கியதில் திருப்தியடையாத இயக்கம் ஒன்று கைவரிசையைக் காட்டிவிட்டது என்பது சனத்துக்கும் தெரியும்.

அன்னம்மாக் கிழவி இரவோடிரவாகக் காணாமல் போனது கிராமத்துக்குள் பரபரப்பாகப் பேசப்பட்டது. சுட்டவர்களை அன்னம்மாக் கிழவி பார்த்திருக்கிறாள். அவர்களால் தனக்கு ஆபத்து வரும் என நினைத்த அன்னம்மாக் கிழவி, பயத்தில் கிராமத்தைவிட்டு ஓடிவிட்டாள் என்றுதான் சனம் கதைத்துத் திரிந்தது. பரமசிவம் ஒரு கதையைக் கிராமத்துக்குள் கொண்டுவந்தார். தனது பெரியகுளத்து வயலிலிருக்கும் காவல்குடிசையைத் தாண்டி, அன்னம்மாக் கிழவி ஆக்ரோசமான கோபத்துடன் தலைக்கு மேலே வாளைச் சுற்றிக் கொண்டு காசிப்பிள்ளையரின் பட்டி நாம்பனில் ஏறிப்போனதைத் தான் கண்டதாகவும் தனக்கு நெருக்கமாக அவள் கடந்துபோனதாகவும் கோபத்தில் அவள் தன்னைக் கவனிக்கவில்லை என்றும் சொன்னார். அவள் போன வேகத்தில் தன் பிள்ளைபோன்ற காசிப்பிள்ளையின் படுகொலைக்குப் பழிதீர்க்க திரும்பிவருவாள்போலத்தான் தனக்குத் தெரிவதாகச் சொன்னார். அன்னம்மாக் கிழவி பற்றி இன்னுமொரு செய்தியும் ஊருக்குள் வந்தது. வெல்கம்விகாரைக்குப் பக்கத்திலிருக்கும் பிள்ளையார் கோயில் பூசாரி ஒரு தகவலை கிராமத்துக்குள் ரகசியமாகக் கசியவிட்டிருந்தார். வெல்கம்விகாரை ராணுவமுகாமுக்குள் காசிப்பிள்ளையரின் பட்டி நாம்பன் கட்டிப்போடப்பட்டிருப்பதைத் தான் கண்டதாக. சிலவேளை அன்னம்மாக் கிழவி வெல்கம்விகாரை ராணுவமுகாமுக்குள்தான் இருக்கவேண்டும். அன்னம்மாக் கிழவியின் கையிலிருந்த வாள், இருபத்தியிரண்டாவது கஜபாகு ரெஜிமென்டின் வாள் என்றும் அவள் ராணுவத்தின் புலனாய்வுக்காரியாக இருக்கலாம் என்ற சந்தேகமும் கிராமத்துக்குள் எழுப்பப்பட்டது.

நிலாவெளி கிராமத்துச் சனம், அன்னம்மாக் கிழவி வெல்கம்விகாரை கேம்புக்குள் இருப்பதை உறுதியாக நம்பியது. அன்னம்மாக் கிழவிக்குக் காடு கரம்பை எல்லாம் அத்துப்படி. நிச்சயமாக காசிப்பிள்ளையரின் படுகொலைக்குப் பழிவாங்க அன்னம்மாக் கிழவி காட்டுக்குள்ளால், ராணுவத்தை வழிநடத்தி வருவாள் என அந்தக் கிராமம் பயந்துகொண்டிருந்தது. கிராமத்துச் சனத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல இயக்கங்களுக்கும் அந்தப் பயம் இருந்தது. அரியத்தின் நினைவுகளில் தன்னை வாஞ்சையுடன் தடவிய அன்னம்மாக் கிழவி. அரியம் மீண்டும் ஒருமுறை பெருமூச்சு விட்டுக்கொண்டான். சீலன் சைக்கிளை கிராமக்கோட்டு வீதியில் திருப்பினான்.

## 4.15

சித்திரைமாத வெயில் கொளுத்தியெடுத்துக்கொண்டிருந்தது. காலை பத்துமணியை நெருங்கியிருக்கக்கூடும். காட்டு வெயில் அவர்கள் உடலைத் தீயாய் எரியவைத்துக்கொண்டிருந்தது. அவர்கள் ஒற்றையடிப்பாதையில் நடந்துகொண்டிருந்தார்கள். முன்னே தவக்களை எனப்படும் குள்ளமான தில்லையண்ணன் தன் உறுதியான கால்களை நிலத்தில் அழுந்தப்பதித்து நடந்துகொண்டிருந்தார். நடுவில் அரியம் நடந்துகொண்டிருந்தான். பின்னால் உதயன் வந்துகொண்டிருந்தான். உதயனிடம் மட்டுமே தற்பாதுகாப்புக்காக இடுப்பில் கைத்துப்பாக்கி இருந்தது. அரியத்திடமும் தில்லையண்ணனிடமும் எந்த ஒரு ஆயுதமும் கையில் இருக்கவில்லை. அவர்கள் தங்கள் ரைபிள்களைக் கல்மிட்டியாப் பகுதியிலிருந்த அவர்களது ஆதரவாளரான முஸ்லீம் ஒருவருடைய காட்டுக்கொட்டிலில் பத்திரப்படுத்திவிட்டு வந்திருந்தார்கள். அவர்கள் எந்த ஒரு தாக்குதலை நடத்துவதற்காகவும் இங்கு வரவில்லை. தம்பலகாமப்பகுதிக்குள் போவதற்காக கல்மிட்டியா காட்டுப்பகுதிக்குள்ளால் நடந்துகொண்டிருந்தார்கள்.

முகத்துக்கு நேரே காட்டுமரங்களை ஊடறுத்து வந்த வெயில் முகத்தைச் சுட்டெரித்துக்கொண்டிருந்தது. அவர்கள் நடந்து வியர்த்துக் களைத்திருந்தார்கள். காட்டின் அடர்த்தி குறைந்துகொண்டுவந்தது. அந்த வெயிலின் உக்கிரத்துக்குச் சம்மந்தமில்லாது, குளிர்க்காற்று வந்து தழுவிப்போனது. காற்று அடர்த்தியான அவிந்துபோன சேற்று வாடையைச் சுமந்துவந்தது. முன்னே நடந்துகொண்டிருந்த தில்லையண்ணன் நின்றார். பின்னால் வந்தவர்களும் நின்றனர். எதிரே அவர்கள் நடந்து வந்த, கெட்டியாக இருந்த தரைக்கு சம்மந்தமில்லாது ஈரலிப்பால் கசிந்துகொண்டிருந்தது தரை. கொஞ்சம் தள்ளி நீர் தளும்பிக்கொண்டிருந்தது. காடு முடிவடைந்து வயல்பகுதி தொடங்கும் இடம் என்பதை தில்லையண்ணன் உணர்ந்து கொண்டார். காட்டை ஊடறுத்துப் பார்த்தார். எதிரே வயல்வெளி தெரியவில்லை. வெள்ளமயமாய் நீர் தளும்பிக்கொண்டிருந்தது. அந்த ஏப்பிரல் மாத வெயில் காலத்துக்குச் சம்மந்தமில்லாத வெள்ளப்பெருக்கு, காற்றிலிருக்கும் குளிர், மேலே சுட்டெரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலின் கொடூரம். அந்த வெள்ளம் முழங்காலுக்குக்கீழ் போகாத வெள்ளம். காட்டுவிளிம்பிலிருந்து தூரமாக சனங்கள் வெள்ளத்துக்குள் நடமாடுவது தெரிந்தது. மீண்டும் தம்பலகாமம் பழைய கோணேசர் கோயிலடியில் மாலை சந்திப்பது என்ற முடிவுடன் அவர்கள் வேறுவேறு இடங்களிலிருந்து காட்டுக்குள்ளிருந்து வெளிப்பட்டார்கள்.

கந்தளாய்க்குளம் உடைந்துவிட்டது. திருகோணமலை நகரிலிருந்து நாற்பது மைல் தொலைவில் மேற்கே கிடக்கிறது அது. இரண்டு பெரிய மலைகளை இணைக்கிறது அதன் அணைக்கட்டு. பெரியபெரிய கற்களைக்கொண்டு கட்டப்பட்டது அந்த அணை. ஐம்பத்து எட்டு அடி உயரமானது அந்த அணை. சோழர்கள் கட்டியதாகச் சொல்கிறார்கள். குளத்தைப் பூதங்களைக்கொண்டு சோழ மன்னன் குளக்கோட்டன் கட்டினான் எனவும் கதைகள் உண்டு. அந்தக் குளத்தை மக்களுக்குப் பாதுகாப்பான ஒரு குளமாகத்தான், அந்த பிரதேசத்தை ஆண்ட வெண்டரசன் என்னும் குறுநில மன்னன் ஒருவன் அமைத்ததாகவும் கதைகள் உண்டு. பின் சோழர்கள் அதை பிரமாண்டமாக்கியதாகவும் அதை எதிர்த்த குறுநில மன்னனான வெண்டரசனை சோழர்கள் கொன்றார்களென்றும் கதைகள் உண்டு. அந்தக் குளம் அமைக்கப்பட்ட காலத்தில் பெய்த மழையால் நீர் ஏந்து பிரதேசத்தில் சிக்கிக்கொண்ட நூற்றுக்கணக்கான மக்கள் ஓர் இரவுக்குள்ளேயே அங்கு சிக்கி மாண்டுபோனதாகவும் கதைகள் உண்டு. அந்த மக்கள் வெள்ளெலிகளாக, வெள்ளைப் பாம்புகளாக, வெள்ளை முதலைகளாக வாழ்வதாக அந்தக் குளத்தைச் சுற்றி நிறைய கதைகள் உண்டு. பின் வந்த அரசர்களால் அது தொடர்ச்சியாகப் புனரமைக்கப்பட்டுக்கொண்டே இருந்தது. ஆங்கிலேயர் காலத்தில் அது இன்னமும் உயர்த்தப்பட்டது. அந்த மதகுக்குள் ராட்சத மீன் ஒன்று சிக்கியதால் குளம் உடையும் ஆபத்து ஏற்பட்டபோது ஒரு கட்டாடி அதில் இறங்கி மீனை விடுவித்து குளத்தைக் காப்பாற்றினான். பொங்கி வந்த மதகு நீர் அவனைத் தூக்கி வீச அவன் கல்லில் விழுந்து உடல் சிதறி பலியானான். அதைத் தாங்கமுடியாத குடும்பமும் அந்தக் குளத்தில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டதாகவும் கதைகள் உண்டு. இது டச்சுக்காரர்கள் காலத்தில் நடந்ததாம். கந்தளாய்க்குளம் இப்போது உடைந்துவிட்டது.

மாரிகால வெள்ளப்பெருக்கால் அது உடையவில்லை. சித்திரைமாதக் கோடை காலத்தில் அது உடைந்துவிட்டது. அரியம் நிதானமாக அந்த வெள்ளத்துக்குள் கால் வைத்து வயல்வெளியின் சதுப்புநிலத்துக்குள் நடந்தான். தூரத்தே தெரியும் சன நடமாட்டத்தைக் குறிவைத்து மெதுவாக அரியம் முன்னேறிக்கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கொளுத்தியெடுக்கும் வெயிலுக்கும் காலுக்குக்கீழே இருக்கும் குளிர்ச்சிக்கும் சம்மந்தம் இல்லாதிருந்தது. நீரின் மூர்க்கத்தைப் பார்த்த அரியம் மிரண்டுபோயிருந்தான். உயரமான பெரியபெரிய கற்கள், சிறிய கற்கள் எனக் குளம் உடைந்த இடத்திலிருந்து ஆறு ஏழு மைல்களுக்கு அப்பால் கற்கள் உருண்டு வந்திருந்தன. ரெயில் தண்டவாளங்கள் இரண்டும் ஒன்றோடொன்று திருகி முறுக்கப்பட்டுக் கயிறுதிரித்ததுபோல இருந்தன. சில்லம்பலமாய் உடைந்த சிலிப்பர் கட்டைகள் திசைக்கொன்றாய்க் குத்திக்கொண்டு நின்றன. அதற்குள் சிக்கிய மனிதர்களின் நிலையை அரியத்தால் கற்பனைசெய்துகூட பார்க்கமுடியவில்லை.

அந்தக் குளத்தின் பள்ளப்பகுதியில் வசித்த இரண்டாயிரத்து ஐநூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த எட்டாயிரம் பேருக்கும் மேல் இறந்துபோயிருந்தார்கள். ஒருசில சிங்கள முஸ்லீம் குடும்பங்களைத் தவிர்த்து அதிகமாக அந்தப் பகுதியில் வாழ்ந்தவர்கள் தமிழர்களாகத்தான் இருந்தார்கள். தான் அரசியல் நடவடிக்கைகளுக்காக வந்தபோது இங்கே சாத்திரியார் அம்மாளையும் சுக்குறுநாயரையும் கௌரிப் பெட்டையையும் கண்டு கதைத்ததாக உதயன் சொல்லியிருந்தான். அவர்கள் எங்காவது தப்பியோடிக் கிடப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் அரியம் வந்திருந்தான். ஆறு மைல்களுக்கப்பால் இந்த நிலை என்றால் அடிவாரத்தில் இருந்தவர்களது நிலையை நினைத்துப்பார்க்கக்கூடமுடியவில்லை. மூன்று நான்கு நாட்கள் கடந்தும் இன்னமும் கந்தளாய்ப்பகுதியில் தண்ணீர் பத்தடிக்குக் கீழே போகவில்லையாம். அரியம் சதுப்புநிலத்தில் இடறிஇடறிப் போய்க்கொண்டிருந்தான்.

யாரோ யாரையோ கூப்பிட்டார்கள். அரியம் குரல் வந்த திசையில் திரும்பினான். சகதியில் எதையோ பிடித்துக்கொண்டு ஒருவர் அவனைத்தான் கூப்பிட்டுக்கொண்டிருந்தார். அரியம் வேகமாக அவரை நெருங்கிப்போனான். ஒரு ராணுவச்சிப்பாய். அந்த ராணுவச்சிப்பாயின் காக்கி உடை தொம்பல்பட்டுப் பழுப்புக்கலரில் கிடந்தது. நெருங்கி வந்தபின் விலகிச்செல்லமுடியாது. சகதிக்குள் புதைந்துகிடந்த உடல் ஒன்றை அந்தச் சிப்பாய் வெளியே எடுக்க முனைந்துகொண்டிருந்தான். அந்த உடலுக்குமேல் நீளமான உருளையான மரக்கட்டை ஒன்று கிடந்தது. அரியம் குனிந்து கட்டையை நகர்த்த முனைந்தான். அது கட்டை இல்லை. உருளையான கொங்றீட் தூண். அந்த ராணுவச்சிப்பாயும் அரியமும் சேர்ந்து கற்றூணை நகர்த்தினார்கள். கற்றூண் நகர்ந்ததும் நீரில் உப்பி மணத்துக்கொண்டிருந்த உடல் நீரில் மிதக்கத்தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் அரியம் கவனித்தான், நிறைய ராணுவச் சிப்பாய்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டிருப்பதைக் கண்டான். அரியம் அங்கிருந்து விலகிப்போக விரும்பவில்லை. சில இடங்களில் மாடுகளின் உடல்களை மீட்டார்கள். சில இடங்களில் சிதைந்த மனிதர்களின் உடல் பாகங்களை மீட்டார்கள். மீட்புப்பணி மாலைவரை தொடர்ந்தது. அரியம் ராணுவச்சிப்பாய்களுடன் சாப்பிட்டான். அவர்களது பிஸ்கட், தேத்தண்ணியைப் பகிர்ந்துகொண்டான். பின் அவர்கள் கவனிக்காத கணத்தில் ஊறிப்போன உடுப்புடன் ரயில்வே தண்டவாளம் இருந்த திடலான மேடு போன்றிருந்த இடத்தினூடாகத் தம்பலகாமப்பக்கம் போவோர்களுடன் நடக்கத்தொடங்கினான். பாதை சிதையாத இடத்திலிருந்து ரெக்டர் பெட்டி ஒன்றில் தொத்திக்கொண்டு தம்பலகாமம் பழைய கோணேசர்கோயிலடியை நோக்கிப் போனான். ஏற்கனவே தில்லையண்ணனும் உதயனும் வேறு சிலரும் இருந்தார்கள். அரியம் ஊறிப்போன உடுப்புடன் அவர்களுடன் சேர்ந்துகொண்டான்.

''என்ன ஆமிக்காராக்களோட நல்ல சல்லாபம் போல கிடக்கு...''

''நாங்களும் சனத்துக்காகத் தானே வந்த நாங்கள்...''

அவர்கள் கமநலத் திணைக்களப்பதிவேடுகள், வட்டவிதானையின் பதிவுகள், விதானையாரின் பதிவுகளைச் சேகரித்திருந்தார்கள். அரியம் அவற்றுக்குள் சாத்திரியார் அம்மாள், கௌரிப் பெட்டை, சுக்கறுநாயர் போன்றவர்களின் பெயரை உறுதிப்படுத்திக்கொண்டான். ராணுவச் சிப்பாய்களுடன் மீட்புப்பணிகளில் ஈடுபட்டபோது சகதிக்குள் புதைந்துகிடந்த தடியொன்று முகத்தில் தாக்கியதில் பொய்மூக்கு உடைந்து ரத்தம் வழிந்தது. அப்போது அதை அவன் அசட்டை செய்திருந்தான். இப்போது அதிகமாக இரத்தம் வடிவதாக அரியம் நினைத்தான். கண்கள் கலங்கிப்போயின அரியத்துக்கு.

## 4.16

''தம்பி... இவ்வளவு பதட்டமா இருந்தா எதுவும் பேச முடியாது... பதட்டத்தக் குறையுங்க... என்னத் தெரிஞ்சு... என்ன நம்பி வந்திருக்கீங்க... என்ற வாசல்வரைக்கும் என்ன தேடி வந்திற்றீங்க... இதுக்கு மேல நான் ஒரு நம்பிக்கையும் தர ஏலாது... நீங்க ஏதாவது பேசினாத்தான் உண்டு... விடியக்காலையிலேயே இப்பிடி வேத்துக்கொட்டுது... சரி... உங்களால பேசமுடியாட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவாயில்ல... நான் கேக்கிறதுக்காவது பதில் சொல்லுங்க... வீட்டில ஏதாவது பிரச்சினையா... வீட்டவிட்டு ஓடி... வந்திற்றீங்களா... லவ் பிரச்சினையா...''

''இல்ல சேர்...''

''ஆமி ஏதாவது தேடுதா...''

''இப்ப ஆமி இல்ல சேர் பிரச்சின... என்ன சல்லிக் கடற்கரைப்பக்கம் வைச்சு... திரத்தித் திரத்தி சுட்டாங்கள் சேர்... என்ன கடைசி மட்டும் உயிரோட விடமாட்டாங்க சேர்...''

''யார் சுட்டது...''

'புலி...''

''தோழர்... நீங்க...''

''டெலோ''

''நேற்றிரவோட தடை செய்துபோட்டாங்கள்... அவங்கட கையிலயிருந்து தப்பி... இதுல உயிரோட இருக்கிறீங்க எண்டா... உங்களுக்கு ஆயுசு கெட்டிதான்... தோழர் எங்க நிண்டு தப்பி வந்த நீங்க...''

''நான் கடைசியா நிண்டது இறக்கக்கண்டியில... என்னோட சீலன் என்ட பொடியனும் நின்டவன்... ரெண்டு பேரும் இரவுச் சாப்பாட்டுக்கு வழமையா முஸ்லீம் தோழர் வீட்டிலதான் சாப்பிடுற நாங்கள்... சாப்பாட்டுக்கு எண்டு அங்க போகேக்கதான் அவர் எங்கள வழிமறிச்சு தன்ற வீட்டுப்பக்கம் போகவேணாம்... புலி டெலோவ தடைசெய்துபோட்டுது. உதயண்ணன், தில்லையண்ணன் குறுப் எல்லாம் நிலாவெளிப்பக்கத்தால புலியின்ட ரவுண்டப்ப உடைச்சுக்கொண்டு கடலால வெளியேறிப்போயிற்றாங்கள். உங்கள மீன் பிடிக்கிற படகில ஏத்திவிடுறன்... அவங்க எவ்வளவு தூரம் கடலால டவுன்பக்கம் கொண்டேவிட ஏலுமோ... அவ்வளவு தூரம் கொண்டேவிடுவாங்க... தப்பிப்போய் ஆமிட்ட சரணடையுங்க... இல்ல எண்டா... உசிரோட இருக்கமாட்டீங்க... எண்டு அந்த முஸ்லீம் தோழர்தான் படகேத்திவிட்டவர்... எங்களால சல்லியத் தாண்டமுடியயில்ல... கடல்ல புலிட கண்காணிப்பு இருந்தது... போட்காராக்கள் சல்லிக்கடக்கரையில இறக்கிவிட்டுட்டுத் திரும்பிப் போயிற்றாங்கள்... நாங்கள் சல்லிக்குள்ளால அலஸ்தோட்டப்பக்கம் ஓடி வந்தம்... புலி எங்களக் கண்டுட்டு திரத்திச் சுட்டாங்கள்... நாங்களும் திருப்பிச்சுட்டுக்கொண்டு பின்வாங்கி வந்தம், ரைபிள்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டா தீர்ந்துபோச்சு... பிரப்பம்பத்தைக்க துவக்க தூக்கி எறிஞ்சுபோட்டு, பத்தைகளுக்கையும் வளவுகளுக்குள்ளயுமாக ஓடி... மூண்டாங்கட்டபக்கம் வந்தம்... இதுக்குப் பிறகு சீலன், இரண்டு பேரும் இனி ஒண்டாப் போறது ஆபத்து... நீ உண்ட வழியப் பாத்துக்கொள்... நான் என்ற வழியப் பார்த்துக்கொள்ளுறன் எண்டுபோட்டு அன்புவழிப்புரப்பக்கம் போயிற்றான்... நான் கடக்கரை ஓரமாகவே நடந்துவந்து டவுன் பக்கமா இருந்த மீனவ சங்கக் கட்டிடத்துக்க படுத்துப்போட்டு விடிய எழும்பி நேரா இங்க வந்திற்றன் சேர்...''

''தோழர் உங்கட பெயர் என்ன எண்டு நான் தெரிஞ்சு கொள்ளலாமா... விருப்பமில்லாட்டி வேண்டாம்;...''

''பெத்தவன், அரியம் எண்டு கூப்பிடுவாங்கள் முழுப்பெயர் இந்திரன் அரியரெத்தினம்...''

''தோழருக்கு என்ற பேர் தெரியுமா... என்னப் பற்றி ஏதும் தெரியுமா...''

''ஓம்... சேர்... உங்கட பேர் டொக்டர் ஞானி... நீங்க பல்டொக்டர்... பள்ளிக்கூடத்தில இருந்து விலத்தின பிள்ளைகளுக்கு திரும்ப படிக்கிறதுக்கு வாய்ப்புகள ஏற்படுத்திறவர்... பாதிக்கப்பட்ட ஆக்களுக்கு கெம்பன்சேசன் எல்லாம் கொடுக்கவேணும் எண்டு வாதாடுர வக்கீல்... நீங்க நிலாவெளிப் பள்ளிக்கூடத்தில கூட்டம் வைக்கேக்க கண்டிருக்கிறன்...''

''என்ன ஏன் நீங்க இவ்வளவு தூரம் கவனிக்கவேணும்...''

''...''

''ம்... தலையக் குனிஞ்சா என்ன அர்த்தம்... ஆக என்னையும்... றக்கி எடுத்திருக்கீங்க...''

''.....''

''போட்டுத்தள்ளுறதுக்கு எண்டு ஏதும் திட்டமிருந்ததா...''

''அதெல்லம் எனக்குத் தெரியாது சேர்... கண்காணிக்கச் சொன்னாங்க... கண்காணிச்சன்...''

''இப்ப ஏதாவது கையில வைச்சிருக்கீங்களா...''

''சேர்... நானே உயிர்பிச்ச கேட்டு வந்திருக்கன்;...''

''சரி... இப்ப என்ன செய்றதா உத்தேசம்... ஆமிட்ட சரணடையப் போறீங்களா...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன செய்யிறதெண்டே தெரிய இல்ல சேர்... தப்பிப் பிளச்சுக்கிடக்க ஏதும் வழியிருந்தாக் காட்டுங்க சேர்;...''

''சரி... சரி... கையவிடப்பா... அம்மா... அப்பா...''

''அப்பா இல்ல சேர்... அம்மாவும் அக்காவும்தான்... அவங்க இப்ப கோபாலபுரத்தில இருக்காங்க...''

''டவுனுக்க யாராவது இருக்காங்களா...''

''இல்ல சேர்...''

''கடைசியா எங்க படிச்சது... தொடர்ந்து படிக்க விருப்பமா...''

''யமாலியா... மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பள்ளிக்கூடத்தில சேர்... இனி படிக்கிறதப் பற்றியெல்லாம் நினைக்க ஏலாது சேர்... எங்கயாச்சும்... பேக்கரியில விறகு கொத்திற வேலை எண்டாலும் செய்வன் சேர்...''

''தெளிவு... ம்... யமாலியாவில எண்டா பேத் சேட்டிபிகேட் இருக்கும்... இப்போதைக்கு ராசிக் G.S. இருக்கான், ஒரு போட்டோ சைனாவது வாங்கீருவம்... ஆள அடையாளப்படுத்துறதுக்கு... பிறகு மிச்சத்தப் பாப்பம்... சரி தோழர் வாங்க... கடையில ஏதாவது சாப்பிட்டு வருவம்...''

## 4.17

ஆட்டிஸ்ட் நம்பிக்கு மெல்லியதாய் ஒரு பயம் மனதில் படரத் தொடங்கிவிட்டது. பொடிப்பயல் தொழிலைக் கற்றுக்கொண்டு நம்மை மிஞ்சிவிடுவானோ என. அவனது பார்வைக் கோணமும் கை விரல்களின் நுட்பமும் அவரைக் கொஞ்சம் மிரளவைத்துக் கொண்டுதான் இருந்தது. சேர்க்கைகளில் பொடிப்பயல் பிரமாதமான நிறங்களை உருவாக்கிக்கொண்டிருந்தான். பொடிப்பயலிடம் வேகமும் இருந்தது. அந்த வேகம் ஆபத்தானது. இந்தத் தொழிலைப் பொறுத்தமட்டில் இழுத்தடிப்பு முக்கியமானது. இல்லையென்றால் வருமானத்தைப் பாதிக்கும். மௌசு குறைந்துவிடும். பொடிப்பயல் மீது சட்டென்று கைவைக்கவும்முடியாது. டொக்டர் ஞானியின் சிபார்சில் வந்திருப்பவன். சரஸ்வதி தியட்டர் முதலாளியின் செல்லப்பிள்ளையாக மாறிக்கொண்டிருப்பவன்.

பொடிப்பயல் தியட்டர் வளாகத்தைவிட்டு எங்கும் வெளியில் போவதில்லை. அடைக்கோழிபோல பழைய சாமான்கள் போடும் அறையில் அடைந்துகிடந்தான். எந்த வேலையைக் கொடுத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமையாகத் துப்பரவாகச் செய்தான். தியட்டருக்கு வருபவர்கள் பயன்படுத்தும் சிறுநீர் கழிக்கும் பகுதி எந்த நேரமும் சுத்தமாக இருந்தது. டொயிலட் மாபிளிலிருந்து தரை வரை பளிச் என சுத்தமாக இருக்கிறது. எரிசோடா மணம் எப்போதும் குறையாவண்ணம் பார்த்துக்கொண்டான். கை சுத்தம். ஆகமொத்தத்தில் சரஸ்வதி தியட்டர் முதலாளிக்கு நல்லதொரு அடிமை கிடைத்துவிட்டான். அந்த தியட்டர் வளாகத்தைவிட்டு வெளியே கடைக்கோ வேறு தேவைக்கோ கேட்டால் மட்டும் முகம் கறுத்துவிடுகிறது. பொடிப்பயலின் பலவீனமாக அவரது கையிலிருக்கும் துருப்புச் சீட்டாக ஆட்டிஸ்ட் நம்பியிடம் இருப்பது அது ஒன்றுதான்.

ஆட்டிஸ்ட் நம்பி திருகோணமலை நகரப்பகுதியில் கொடிகட்டிப் பறந்துகொண்டிருக்கும் ஆட்டிஸ்ட். பெரும்பாலான நகரப்பகுதிக் கடைகளின் முகப்பில் தொங்கும் பெயர்ப்பலகைகள், அலங்கார வளைவுகள், விளம்பரப்பலகைகள் எல்லாம் அவரது கைவண்ணம் தான். தியட்டர் பட விளம்பரங்கள், கட்டவுட், நோட்டிஸ் எல்லாம் அவரது கையில்தான் இருக்கிறது. அவரிடம் உதவிக்கென்று ஒரு அணி இருக்கிறது. அந்த அணி நிரந்தரமானது இல்லை. புதிது புதிதாக ஆக்கள் இணைவதும் விலகுவதுமாக இருப்பார்கள். அவர் யாரையும் நிரந்தரமாகத் தன்னுடன் வைத்துக்கொள்வதில்லை. குறிப்பாக இவன் வேலையைக் கற்றுக்கொண்டு விடுவான் என அவர் மனது சொல்லிவிட்டால், ஒருசில நாட்களிலேயே அவருக்கு அவனைத் தாக்குவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துவிடும். கையிலிருக்கும் பிறஸ்சோ, பெயின்ட் வாளியோ பதம்பார்த்துவிடும். அதற்குப் பிறகு அவன் அவருடன் தொடர்ந்து நிலைக்கமாட்டான். சிலர் அதோடு ஒரேயடியாக அந்தத் தொழிலிலிருந்து விலகிவிடுவார்கள். சிலர் வஞ்சம் வைத்துத் தனியாகத் தொழில் தொடங்குவார்கள். அவர்களைக் கையாள தனிவழிகள் அவரிடம் இருந்தன. அப்படிப் பட்டவர்களில் ஒருவன் அவரை வழியில் மடக்கித் தாக்கியுமிருந்தான். அவர் அதற்கெல்லாம் அசரமாட்டார். நம்பிக்கு முன்னரும் திருகோணமலையில் ஆட்டிஸ்ட் என்று எவரும் இருக்கவில்லை. ஆட்டிஸ்ட் நம்பிக்குப் பிறகு யாரும் பிறக்கப்போவதுமில்லை. இது அவர் தன்னைச்சூழ ஏற்படுத்திவைத்திருக்கும் பிம்பம்.

ஆட்டிஸ்ட் நம்பிக்கு இன்னொரு பெயரும் இருக்கிறது. அது ஆட்டுக்குடல். போதையின் உச்சத்தைத் தொடுவதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வார். சாராயத்துக்குள் தண்ணீரெல்லாம் விட்டுக் குடிப்பதில்லை. சாராயத்துக்குள் அந்த, இந்த இலைகள், வேர்களெல்லாம் போட்டுப்பார்ப்பார். வெறி அதிகமாவதற்காக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராயத்துக்குள் சிகரட் சாம்பலைப்போட்டு எல்லாம் குடித்துப் பார்ப்பார். திடீரென்று தொடர்ச்சியான வாந்திபேதி. மலத்துடன் இரத்தம் வெளியேறத்தொடங்கியது. தலைமுடிகள் உதிர்ந்து தலையில் முடி இருந்ததற்கான தடமில்லாமல் போனது. உயிர் அதிக நாள் உடலில் தங்காது எனக் கைவிரித்துவிட்டார்கள் வைத்தியர்கள். சரஸ்வதி தியட்டர் முதலாளிதான் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி சிகிச்சைக்காக இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார். இந்தியாவில் அழுகிப்போன குடல்துண்டை எடுத்துவிட்டு ஆட்டுக் குடலைப் பொருத்தி ஆட்டிஸ்ட் நம்பியை உயிருடன் திருப்பி அனுப்பிவைத்தார்கள். வயிறெக்கிக் குடலுடன் ஒட்டிவிட்டது. தலையில் கௌபோய் தொப்பியும் முகத்தில் கறுப்பு நிற சன்கிளாஸ் ஒன்றும் நிரந்தரமாகத் தங்கிவிட்டன. ஆட்டிஸ்ட் நம்பி குடியை விட்டிருந்தபோதும் சிகரட் புகைப்பதை விடவில்லை.

ஆட்டிஸ்ட் நம்பிக்கு சரஸ்வதி தியட்டருக்கு வந்திருக்கும் பொடிப்பயல்மீது பயம் வந்துவிட்டது. பொடிப்பயல் சொல்கிறான், ''நீங்க இன்னமும் கமலஹாசனை கடவுள் அமைத்து வைத்த மேடை பாடலுக்கு வாயசைத்த உருவத்தைத்தான் வரைந்துகொண்டிருக்கிறீங்க'' என்கிறான். சிவாஜியை வரைந்தால் ''பாசமலர் சிவாஜிதான் ஞாபகம் வருகிறது'' என்கிறான். அவர் கண்ணைமூடித் தலையைச் சிலுப்பியெல்லாம் பார்த்தார். ''வசந்த மாளிகை'' சிவாஜி கணேசனையோ ''வாழ்வே மாயம்'', ''மூன்றாம் பிறை'' கமலஹாசனையோ ஆட்டிஸ்ட் நம்பியால் நினைவுக்குள் கொண்டுவரமுடியவில்லை. பொடிப்பயல் பாதிவுருவத்தைத்தான் வரைகிறான் மிச்சத்தை விட்டுவிடுகிறான். அந்தப் பாதி உருவங்களுக்குள் அந்தந்த நடிகர்கள் மனதுக்குள் முழுமையாக வந்துவிடுகிறார்கள். பட கட்டவுட்டுகளில் அவர் கதாநாயகனின், கதாநாயகிகளின் முழுவுருவப்படங்களை மட்டுமே வரைந்து பழக்கப்பட்டவர். அவன் வில்லன் நடிகர்களைக்கூட எங்காவது மூலையில் ஆக்ரோசமாகச் செருகிவிடுகிறான். அந்தப் படத்தில் பாடியிருக்கக்கூடிய பாடகர், பாடகிகளைக்கூட வரைந்துவிடுகிறான். சௌந்தர்ராஜனின் நெற்றிப்பட்டையுடன் ஒருபக்கத்தோற்றத்தை மட்டுமே வரைந்திருந்தான். அவரே அசந்துபோய் நின்றார். ஏன் தன்னால் இப்படி சிந்திக்கமுடியாமல் போனது என்பது பற்றிய யோசனை அவருக்கு வந்தது.

பொடிப்பயலின் இன்னொரு சேட்டையும் அவருக்குப் பயத்தைக் கொடுத்தது. சில கழிவுத் துண்டுபேப்பர்களில் அவன் வரையும் படங்கள். ஒரு நிர்வாணமான சிறுமி அழுதபடி, வேறுவேறு கோணங்களில் பவ்விதமான வர்ணங்களில். மிகக்கிட்டவாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளைகளில் மிகத்தூரமாக என விதம்விதமாக வரைந்து வைத்திருந்தான். இன்னுமொரு படத்தில் தார்வீதி பளிங்குபோல மின்னியது. அதில் பனையின் ஓலையுடன், அதன் வட்டு கண்ணாடிக்குள் தெரிவதுபோல வீதியில் நிழலாகத் தெரிகிறது. அந்த வீதியில் பூட்ஸ் காலுடன் துண்டாப்பட்ட கால் பகுதி ஒன்று, இரத்தம் வடிந்தபடிகிடக்கிறது. சில துப்பாக்கிமுனைகள் அந்தரத்தில் மிதப்பதுபோல கிடக்கின்றன. இந்தப் படங்கள் சொல்லும் கதை அவருக்குப் புரியவில்லை. பொடிப்பயலின் அடைக்கோழித்தனத்துக்கும் இந்தப் படங்களுக்கும் ஏதோ சம்மந்தம் இருக்கிறது என்பது மட்டும் அவருக்குப் புரிந்தது.

பொடிப்பயல் வரைந்துவைத்திருந்த சில படங்களை எடுத்துக் கொண்டு சரஸ்வதி தியட்டர் முதலாளியிடம் போனார் ஆட்டிஸ்ட் நம்பி. ஏதாவது இங்லிஸ் படம் ரிலீஸ் ஆகுதோ என படங்களைக் காட்டிக்கேட்டார் ஆட்டிஸ்ட் நம்பி. படங்களை மேலோட்டமாகப் பார்த்த சரஸ்வதி தியட்டர் முதலாளி புறங்கையால் படங்கள் வைத்திருந்த, ஆட்டிஸ்ட் நம்பியின் கைகளைப் தள்ளிவிட்டு, எழும்பிப்போய்விட்டார். பொடிப்பயலிடம் முதலாளியை வசியம் பண்ணும் மருந்தேதும் இருக்கிறதோ என சந்தேகம் வந்தது ஆட்டிஸ்ட் நம்பிக்கு. பொடிப்பயல் மர்மமானவன், கவனமாகத்தான் கையாளவேண்டும் என முடிவெடுத்தார் ஆட்டிஸ்ட் நம்பி.

## 4.18

அரியத்தின் குதிகால்கள் நெருப்புத்துண்டங்கள்போல சிவந்து கொதித்துக்கொண்டிருந்தன. அந்த பிளான்டன்பெயின்ட் ராணுவமுகாமின் கிறவல்மலையின் சாய்வில் ஏறிக்கொண்டிருந்தான் அரியம். அரியம் நிர்வாணமாக இருந்தான். கால் கைகள் சங்கிலியால் பிணைக்கப் பட்டிருந்தன. நிர்வாணமான உடல் முழுவதும் கன்றிச் சிவந்திருந்தது. கன்றிச் சிவந்த இடங்களில் தோல் கிழிந்து வடிந்த இரத்தம் காய்ந்திருந்தது. மலவாசலில் இரத்தம் கன்றி நீலம்பாரித்துக்கிடந்தது. கன்றிப்போன பாதங்களைக் குருணிக்கற்கள் நிறைந்த கிறவல் மலையின் சாய்வில் மெதுமெதுவாகத் தூக்கிவைத்து ஏறிக் கொண்டிருந்தான். கால் கைகள் விலங்கிடப்பட்டிருந்தன. விலங்குகளைப் பிணைக்கும் சங்கிலிகளைத் தன் கைகளுக்குள் சேர்த்துப்பிடித்தபடி கூனுன்டநிலையில் அரியம் அந்த கிறவல் மலையில் ஏறிக்கொண்டிருந்தான். பாதங்களின் கன்றிப்போன இடங்களிலோ வெடித்த இடங்களிலோ கிறவல்மலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருணிக்கற்கள் தைக்கும்போது, உச்சந்தலையில் வலியின் விதிர்விதிர்ப்பை உணர்ந்தபடி அரியம் ஏறிக்கொண்டிருந்தான். ஏறுவதைவிட இறங்குவது கொடூரமானது. குருணிக்கற்கள் கால்களை இடறி வழுக்கிவிடச்செய்துவிடும். அதிஸ்டம் இருந்தால் வெறும் சிராய்ப்புக்காயங்களுடன் தப்பிவிடலாம். இல்லையென்றால் எங்காவது ஒரு கிறவல்மலையின் கற்களிலோ மரக்கட்டையின் அடிப்பகுதியிலோ தலை அடிபட்டுச் சிதறி இறந்துபோக வேண்டியதுதான். தன் பலம் முழுவதையும் திரட்டி, அரியம் கூனுண்டநிலையில், கிறவல்மலையின் உச்சிக்கு ஏறியிருந்தான். குடலுடன் ஒட்டிய வயிறு அரியம் நிமிர்ந்து நிற்கமுடியாதஅளவுக்கு வலித்துக்கொண்டிருந்தது. அரியம் ஏறியபின்னும் கூனுண்டபடியே தான் நின்றான்.

கிறவல்மலை உச்சியிலிருந்து கீழே பார்த்தான் அரியம். கடலலைகள் மலைஅடிவாரத்தில் முட்டிக்கொண்டிருந்தன. காலைக்கடனை முடிக்க அங்கே போய்த்தான் ஆகவேண்டும். எந்த கண்காணிப்பும் இல்லை. தப்பிக்கமுடியாது. இங்கே இரண்டே இரண்டு தீர்வுகள்தான். வாழவேண்டுமானால், சித்திரவதையை அனுபவித்துத் திரும்பி எப்படியாவது கூண்டுக்குப் போகவேண்டும் அல்லது செத்துமடியவேண்டும். கிறவல்மலையின் உச்சியில் தட்டையாக அறுக்கப்பட்ட மரக்குற்றி ஒன்றின்மேல் இரும்புக்கம்பியால் ஒட்டப்பட்ட தட்டையான நாய்க்கூடு ஒன்று இருந்தது. அது சாய்ந்தால் கடலுக்குள் உருண்டுவிழும் அல்லது கைதிகளை அடைத்துவைக்கும் கூண்டின் பின்பகுதிக்கு உருண்டுபோகும். அந்தக் கூண்டுக்குள் நிர்வாணமாக ஒரு மனிதவுடல் கொடுகிக்கிடக்கிறது. கால் கைகளை நீட்டி நிமிர்த்தமுடியாது, நிமிர்ந்து இருக்கமுடியாது. அசையமுனைந்தால் ஏதாவது ஒரு திசையில் உருண்டு சிதையவேண்டும். இதுதான் சித்திரவதையின் கடைசிக்கட்டம், இந்தக் கூண்டுக்குள் அடைக்கப் பட்டால் சடலமாகத்தான் வெளியேவரமுடியும்.

அரியம் தன் உடலின் முழுப்பலத்தையும் திரட்டித் தன் உடலைச் சுமந்துகொண்டுவந்து சல்லிக்கற்கள் நிறைந்த கடலின்கரையில் கிடத்தினான். உடல் முழுவதும் தீப்பிடித்தது போல ஒரு வெம்மையுடன் கணகணப்பாக எரிந்தது. அரியம் தலையைத் தட்டையான கல் ஒன்றில் கிடத்திவிட்டு, உடலைக் கடலுக்குள் விட்டிருந்தான். மலவாசலுக்குள்ளால் நெருப்புத்துண்டம்போல எரிவுடன் எதுவோ வெளியேறியதுபோலத்தான் இருந்தது. சலத்துவாரத்துக்குள்ளிருந்தும் எதுவோ வெளியேறியதுபோலத்தான் இருந்தது அரியத்துக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியம் தன்னைக் காட்டிக்கொடுத்தது ஆட்டிஸ்ட் நம்பியாகத் தான் இருக்கவேண்டும் என நினைத்தான். அவர்தான் அவனுடன் முரண்டிக்கொண்டு திரிந்தவர். அவர் தன் பெயரையும் வருமானத்தையும் தக்கவைத்துக்கொள்வதற்காக எதையும் செய்யக்கூடியவர் என சரஸ்வதி தியட்டர் முதலாளி சொல்லித்தானிருந்தார். சீலன் இந்த பிளான்டன்பொயின்ட் கேம்பில்தான் இருக்கிறான். சர்வசாதாரணமாக உலாவித் திரிகிறான். அவன் ராணுவத்தின் புலனாய்வுப்பிரிவில் இருக்கிறான். அவன்தான் இப்போது பல இயக்கக்காரர்களைக் காட்டிக்கொடுத்துக்கொண்டிருந்தான். சீலனும் தன்னைக் காட்டிக் கொடுத்திருக்கலாம் என அரியம் நினைத்தான். உயிர் போனாலும் யாரையும் காட்டிக்கொடுப்பதில்லை, ஒத்துக் கொள்வது, பயிற்சி எடுத்ததை ஒத்துக்கொள்வது, நடப்பது நடக்கட்டும், வாழ்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தால் கிடைக்கட்டும், யாரையும் காட்டிக் கொடுப்பதில்லை. அரியம் தீர்மானமாக முடிவெடுத்தான். கடலிலிருந்து வெளியேறி கிறவல்மலைக்கெந்தில் ஏறத்தொடங்கினான்.

## 4.19

''யராவ டக்கால என்ட....''

''ஒவ் மாத்தையா...''

பூசா அரசியல் கைதிகள் தடுப்புமுகாமில் கைதிகளை அவர்களது சொந்தப்பெயர் சொல்லிக் காவலர்கள் கூப்பிடுவது கிடையாது. அவர்கள் கைதுசெய்யப்பட்ட காரணம் அல்லது காவலர்களின் மனநிலைக்கேற்ப பெயர்கள் அமைந்துவிடுகின்றன. டீசல், பெற்றோல், லெக்கு, கொட்டி, வலிகய, பொடி எனப் பல பெயர்களில் இருந்தார்கள். அரியத்தை யராவ என்றுதான் காவலர்கள் கூப்பிடுகிறார்கள். அரியம் எந்த வேலையைக் கொடுத்தாலும் செய்துகொண்டிருந்தான். குறிப்பாக டொய்லட், பாத்ரூம் கழுவும் வேலைகள் எதையும் அரியம் முகம் சுளிக்காமல் செய்துகொண்டிருந்தான். சில வேலைகளில் அந்த வேலைக்காக விசேட சாப்பாடுகளும் கிடைப்பதுண்டு. யராவ அரியம் காத்திருந்தான்.

கெட்டியான செம்பாட்டுத்தரை. திட்டிகளில் அடர்த்தியான கரும்பசிய புற்களும் மட்டமான தரைகளில் செம்பாட்டுமண் வெளித்தெரிவது போன்ற புற்தரையுமாகக் கிடக்கிறது மைதானம் போன்ற பூசாமுகாமின் முற்றம். சிறைச்சாலையில் கைதிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைத்துவைக்கும் தாழ்வான கட்டடத்தின் வெளிப்புறச்சுவரில் சாய்ந்திருந்தான் அரியம். தூரத்தே அசைந்துகொண்டிருக்கும் கைதிகளை உன்னிப்பாகக் கவனித்தபடி இருந்தான் யராவ அரியம். கட்டடத்தின் நிழல் அவன் கால்களில் அரைவாசிக்கு மேல் விழுந்துகொண்டிருந்தது.

அரியம் தான் உள்ளூருக்குள் பயிற்சியெடுத்ததை ஒத்துக் கொண்டான். தான் புலிகளை அடையாளம் காட்டுமளவுக்கு அவர்களுடன் தொடர்பு எதையும் வைத்துக்கொள்ளவில்லை என பிளான்டன்பொயின்ட் ராணுவத்திடம் வாக்குமூலம் கொடுத்தான். பின்னர் அடி குறைந்தது. அங்கிருந்து பூசாக்கு மாற்றிவிட்டார்கள். வந்த புதிதில் வரவேற்படி, கடமை தொடக்கநேர, முடிவுநேர அடி, மதுபானநேர அடி எனப் பலவகையான அடிகள் கிடைத்தன. பத்திரிகைகளில் வரும் புதிர்விளையாட்டுப்போல அந்த முகாம் முழுவதும் இருக்கும் கம்பிவேலிகள்.

நடுவில் தேன் இருக்க எறும்புக்கு வழிகாட்டவேண்டும். நிறைய வழிகள் இருக்கும். வழி எங்காவது அடைபட்டு இருக்கும். சரியான வழி ஒன்றுதான் இருக்கும். சரியான வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். இப்படித்தான் பூசா அரசியல் கைதிகள் முகாமின் முற்றம் கம்பிவேலிகளால் குறுக்கும் நெடுக்குமாக அமைக்கப்பட்டிருந்தது.

ஒரு மனிதன் நேராக நடக்க முடியாது, பக்கவாட்டில்தான் நகர முடியும். அப்படித்தான் அந்தக் கம்பிவேலிகளின் இடைவெளி இருக்கும். பல தடவைகள் அந்தக் கம்பிவேலிக்குள் சிக்கி அலைந்து திரிந்திருந்தான் யராவ அரியம். மலசலக்கூடத்துக்குப் போகும்வழி, உணவு விடுதிக்குப் போகும்வழி, சிறைக்கூடங்களுக்குப் போகும்வழி, விசாரணை அறைகளுக்குப் போகும்வழி, குளிக்கப்போகும்வழி எல்லாம் இப்படித்தான் இருக்கும். உடலில் கம்பி கிழிக்ககிழிக்க போய்ச்சேரவேண்டிய பாதையைத் தேடிக்கண்டுபிடித்திருந்தான் யராவ அரியம். யராவ அரியத்துக்கு இப்போது எல்லாம் தண்ணீர்பட்டபாடு. உடலில் காயங்கள் ஆறிவிட்டன. தழும்புகள் மட்டும் உடல் முழுவதும் கிடந்தன.

இன்றைக்கு யராவ அரியத்துக்கு இந்தியன் ரெயினிங் எடுத்த இயக்கப் பொடியள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தனித்தனி செல்களின் பின்பகுதியிலிருக்கும் டொயிலட்டுகள் கழுவுவதற்கான கடமை இருந்தது. இந்தியன் ரெயினிங் எடுத்த இயக்கப் பொடியளைத் தனித்தனி செல்லில் போட்டுப் பூட்டிவைத்திருந்தார்கள். அவர்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பும் கடுமையானது. இந்தியன் ரெயினிங் எடுத்த கைதிகளோடு மற்ற கைதிகள் தொடர்போ பேச்சோ வைத்துக்கொள்ளக்கூடாது என்பது கடுமையான சட்டமாக இருந்தது.

சாதாரண சந்தேகக்கைதிகளைப் பெரியகோலில்தான் அடைத்து வைத்திருந்தார்கள். அரியம் சாதாரண கைதிகள் அடைக்கப்படும் கோலில்தான் அடைக்கப்பட்டிருந்தான். இந்தியன் ரெயினிங் எடுத்த புளாட் சாமியண்ணனும் அதே கோலில்தான் அடைக்கப் பட்டிருந்தார். சாமியண்ணன் மிக நீண்ட காலமாகக் கைதியாக இருக்கிறார்.

இந்தியன் ரெயினிங் எடுத்த கைதிகள் காலைக்கடனை முடித்துக்கொண்டு செல்களுக்குத் திரும்பும்வரை காத்துக்கொண்டிருந்தான் யராவ அரியம். அவனுக்கு அந்த டொயிலட்டுகளைத் துப்புரவாக்கும் பணி இருக்கிறது. பூசா சிறைச்சாலை காட்டுப்பகுதி ஒன்றுக்குள்தான் இருக்கிறது. மதில்களின் விளிம்போரம் அடர்த்தியான காடு, புறமதிலோடு ஒட்டியபடி வளர்ந்துகிடக்கிறது. உயரமான மதில்களும் அதற்கு மேல் கம்பிவேலிகளும் இடைக்கிடை சென்றிகளும் எனச் சூழப்பட்டிருந்தது பூசா சிறைச்சாலை. சென்றிகளில் எப்போதும் ஆயுதம் தாங்கிய ராணுவச்சிப்பாய்கள் துப்பாக்கியுடன் இருந்தார்கள். யராவ அரியம் இந்தியன் ரெயினிங் கைதிகளைக் கூர்ந்து கவனித்தபடியிருந்தான்.

யராவ அரியம் இங்கு வந்த புதிதில் அடுத்தடுத்துப் பல நோய்களைச் சந்தித்தான். முதலில் மலேரியா, பின் நெருப்புக் காய்ச்சல் எனப் பல நாட்கள் கஸ்டப்பட்டுக் கிடந்தான். அவனைப் பிடித்தாட்டிய மோசமான நோயென்றால், அவன் தோலில் படர்ந்த ஒருவித கடித்தேமல். சொறியச் சாறிய சுகமாகத்தானிருக்கும். பின் அது காயமாகி ரணமாக வலிக்கும். நீண்ட நாட்கள் அந்தக் கடியால் அரியம் அவதிப்பட்டான். அந்தக் கடிக்கு செவன என இங்கே பெயர் வைத்திருந்தார்கள். அது சுரண்டி அதிஸ்ட இலக்கங்களைச் சரிபார்க்கும், அதிஸ்ட லாபச் சீட்டின் பெயர். அதற்கு ஒருவகை வெள்ளைநிற, பால் போன்ற பசைத் திரவம் பூசக் கொடுத்தார்கள். பின் அது அடங்கிப்போய்விட்டது. யராவ அரியம் எழும்பினான். இந்தியன் ரெயினிங் கைதிகளை அடைக்கும் செல் பூட்டப்பட்டுக் கொண்டிருந்தது. டொயிலட்டுகள், குளியலறைகள் சுத்தம் பண்ணும் வேலை இருக்கிறது யராவ அரியத்துக்கு.

✿✿✿



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

## 5.1

பூசா முகாமிலிருந்து பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட அரசியல் கைதிகளை ஏற்றிக்கொண்டு வந்த C.T.B. பஸ், சிவன் கோயிலடியிலிருந்த தந்தை செல்வாவின் சிலைக்கும் சிவன் கோயிலடி மதிலுக்கும் இடையிலிருந்த மைதானம் போன்ற வெளியில் வந்துநின்றது. அந்த இடம், அவர்களை எதிர்பார்த்துக் காத்து நின்றவர்களாலும் புதினம் பார்க்க வந்தவர்களாலும் நிறைந்து காணப்பட்டது. செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களும் I.P.K.F ராணுவ அதிகாரிகளும் நின்றிருந்தார்கள். பஸ்சுக்குள் பஸ் கண்ணாடிகள் உடைந்து தெறித்த சிதறல்கள் கிடந்தன. கைதிகள் அமர்ந்திருந்த பஸ் சீற்களிலும் கைதிகளின் உடைகளிலும் இரத்தச்சிதறல்கள் படிந்துகிடந்தன. பஸ்சுக்குள்ளிருந்த கைதிகளில் அனேகமானோர் காயமடைந்திருந்தார்கள்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை விரும்பாத, அரசியல் கைதிகளின் விடுதலையை விரும்பாத, சிங்களவெறிக் காடையர்கள் அந்த பஸ் மீது தாக்குதல் நடத்தியிருந்தார்கள். பூசா தடுப்பு முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதிகளை ஏற்றிய இரண்டு C.T.B. பஸ்கள், செஞ்சிலுவைச்சங்க வாகனங்களின் பாதுகாப்புடன் திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்தன. கபறணைசந்திவரைக்கும் அவர்கள் விடுதலையான மகிழ்ச்சியுடன் மூன்று மணித்தியாலயங்கள் பயணப்பட்டு வந்தார்கள். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியே அணிவகுப்பின்போது தாக்கப்பட்டிருந்ததால் மனதுக்குள் தாங்கள் திருகோணமலை போய்ச்சேரும்வரை எந்த உத்தரவாதமும் இல்லை என்பதை அவர்கள் உணர்ந்தே இருந்தார்கள். பூசாமுகாமிலிருந்து புறப்படும்போதே இலங்கை ராணுவத்தினர் தங்கள் வழக்கமான பாணியில் உட்காயங்களுடன்தான் அவர்களை வழியனுப்பிவைத்திருந்தார்கள். அந்த இரண்டு பஸ்களுக்குள்ளிருந்த கைதிகள் தங்கள் விடுதலை, இவ்வுலகத்திலிருந்து கிடைக்கும் நிரந்தர விடுதலையாக மாறிவிடக்கூடாது என்ற மனநிலையில்தான் சிங்களப்பகுதிகளைக் கடந்து வந்துகொண்டிருந்தார்கள்.

கபறணை காட்டுப்பகுதிக்குள் வைத்துத்தான் வீதியில் கட்டையைப் போட்டு மறித்த சிலர், அந்த இரண்டு C.T.B. பஸ்கள் மீதும் சரமாரியான கல்லெறித் தாக்குதலை நிகழ்த்தினார்கள். சாரதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையை உணர்ந்திருந்தார்கள். சாதுரியமாகச் செயற்பட்டு பஸ்ஸின் வேகத்தைத் தணித்து, வீதிக்கு வெளியே பஸ்ஸை இறக்கி, திரும்பவும் வீதியில் பஸ்ஸை ஏற்றித் தாக்குதலின் உக்கிரத்தைக் குறைத்து பஸ்ஸை செலுத்தி வந்துகொண்டிருந்தார்கள். முன்னே வந்த செஞ்சிலுவைச்சங்க வாகனமும் பஸ்சும் வந்துசேர்ந்திருந்தன. பின்னே வந்த பஸ்சும் செஞ்சிலுவைச்சங்க வாகனமும் இன்னும் வந்து சேர்ந்திருக்கவில்லை.

முன்னே வந்த பஸ் தம்பலகாமம்சந்தியைத் தாண்டி வந்து கொண்டிருந்தபோது, இந்திய ராணுவத்தின் மகேந்திரா ஜீப் ஒன்றும் செஞ்சிலுவைச்சங்க ஜீப் ஒன்றும் கபறணைப்பக்கம் வேகமாகச் சென்றன. இரண்டாவது பஸ் சாரதி கல்லெறித் தாக்குதலில் கடுமையாகக் காயப்பட்டிருந்ததால் அவரால் தொடர்ந்து பஸ்ஸை செலுத்தமுடியவில்லை என்ற செய்தியும் இந்திய ராணுவச்சிப்பாய் ஒருவர் அந்த பஸ்ஸைச் செலுத்தி வந்துகொண்டிருக்கிறார் என்ற செய்தியும் சிவன்கோவிலடிக்கு வந்துசேர்ந்தன. இந்தியஅமைதிகாக்கும் படை திருகோணமலை நகரத் தெருக்களில் முதல்முதலாக வந்தபோது அவர்களுக்கு மலர்மாலையும் சொக்லேட் மாலையும் போட்ட மக்கள், மனதால் இன்னொருமுறை மலர்மாலை போட்டார்கள்.

இரண்டாவது பஸ்சும் சிவன்கோவிலடி தந்தை செல்வாவின் சிலைக்கும் சிவன் கோவிலடி மதிலுக்கும் இடையிலான வெளியில் வந்துநின்றது. அந்த பஸ்சிலிருந்து இருவர் மட்டுமே இறங்கினார்கள். மற்றவர்கள் அனுராதபுரச்சந்தியில் இறங்கிவிட்டார்கள். அவர்கள் அனுராதபுரச் சந்தியிலிருந்த சிங்களவர் ஒருவருடைய சாராயக்கடையை உடைத்துப்புகுந்து, மது போதையால் தங்கள் உடல்வலியையும் மனவலியையும் போக்கிக்கொண்டு இன்னொரு கலவரத்தை அந்த இடத்தில் தொடக்கி வைத்தார்கள்.

இரண்டாவது பஸ்சிலிருந்து இறங்கிய அரியம் தன் பிடரிமயிர் வியர்வையில் நனைந்தது போல இரத்தத்தில் ஊறி ஈரலிப்பாக இருந்ததை உணர்ந்தான். கண்ணாடித்துண்டு ஏறியிருக்க வேண்டும். செஞ்சிலுவைச்சங்கத்தினரிடம் மருந்து கட்டிக்கொண்ட அரியம், சிவன் கோவிலடி மதிலோடு அடுக்கிவைக்கப்பட்டிருந்த மின்சாரக்கம்பங்களில் ஒன்றில் அமர்ந்துகொண்டான். ஒரு சிறுமி கையில் டம்ளரும் இன்னொரு கையில் தேத்தண்ணி பொயிலருமாக அவனை நோக்கி வந்தாள். அவன் கையில் ஒரு டம்ளரைக் கொடுத்து தேத்தண்ணியை ஊற்றிவிட்டுப் போனாள். அரியத்துக்கு கௌரிப் பெட்டையினதும் வதனியினதும் நினைவுகள் வந்தன. கௌரிப் பெட்டையின் நினைவுகள் இனி வெறும் நினைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே அவனிடம் இருக்கும் என்பதை அவன் உணர்ந்தான். கையில் தேத்தண்ணி டம்ளருடன் வந்த சாமித்தம்பி அண்ணன் அரியத்துக்குப் பக்கத்தில் மின்சாரக்கம்பத்தில் அமர்ந்துகொண்டார். அவரது நீண்ட தாடியில் இரத்தம் படிந்து கழுவிய தடம் கிடந்தது.

தமிழர்களின் கனவுத்தலைநகரின் நகரப்பகுதி மீண்டும் டயர்கள் எரிவதாலும் கடைகள் உடைக்கப்படுவதாலும் தாக்குதல் நடத்துபவர்களது ஆக்ரோசமான உரையாடல்களாலும் புகைவலையங்களாலும் கொந்தளிக்கத்தொடங்கியிருந்தது. நகரப்பகுதியையும் அதனை அண்டிய பகுதிகளிலும் கலவரம் மூண்டிருந்தது. பல சிங்களக்கடைகளும் பாண்பேக்கரிகளும் சாராயக்கடைகளும் வீடுகளும் அடித்து உடைக்கப்படுவதும் சூறையாடப்படுவதும் தீவைக்கப்படுவதுமாகக் கலவரம் தீவிரமடையத் தொடங்கியிருந்தது. சிலர் கொல்லப் பட்டதாகவும் செய்திகள் வந்துகொண்டிருந்தன. சிங்களக் கிராமங்கள் இடம்பெயரத் தொடங்கின. அவர்கள் தங்கள் மூட்டைமுடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு கோட்டை ராணுவ முகாமுக்குள்ளும் நேவி கடற்படைத் தளத்துக்குள்ளும் அகதிகளாகப் போய்க்கொண்டிருந்தனர். சிலர் மாவட்டத்தைவிட்டே இடம்பெயர்ந்துகொண்டிருந்தார்கள்.

சிவன் கோவிலடி முன்றிலில் செஞ்சிலுவைச்சங்கம் அமைத்திருந்த தற்காலிகக் கூடாரத்துக்கு வெளியே பூசாமுகாமிலிருந்து விடுதலையான கைதிகள் சிலர் நடமாடிக்கொண்டிருந்தார்கள். குடும்ப உறவுகளால் காணாமல்போனவர்களாகக் கருதப்பட்டுக் கைவிடப்பட்டவர்கள், கலவரம் காரணமாகத் தொடர்ந்து பயணம்செய்து, தூரத்து கிராமங்களிலிருந்த வீடுகளுக்குப் போகமுடியாதிருந்த அரசியல் கைதிகளென ஒன்பது பேர் மட்டும் சிவன் கோவிலடி முன்றிலில் தங்கியிருந்தார்கள். அவர்கள் சிவன் கோவில் கிணற்றிலும் அயலிலிருந்த வீடுகளிலும்போய்க் குளித்தும் உடுப்புக்களைத் துவைத்துக்கொண்டும் வந்தார்கள். துவைத்த உடுப்புக்களைத் திருத்தத்திற்காகக் கொண்டு வந்து போட்டிருந்த மின்சாரக்கம்பங்களில் விரித்து உலரவிட்டார்கள். பின் அந்த வெளியில் பாய் ஒன்றை விரித்து உட்கார்ந்துகொண்டார்கள். இரவுச்சாப்பாட்டை செஞ்சிலுவைச்சங்கம் கொண்டுவரும். அவர்கள் காத்திருந்தார்கள். தேய்பிறை நிலவு மெல்ல எழும்பிக்கொண்டிருந்தது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்சினை இருந்தது. அவர்கள் அமைதியாக உரையாடிக்கொண்டிருந்தார்கள். கும்பலொன்று அவர்களை நோக்கி வந்தது. கையில் அலவாங்கு, பெற்றோல் கேன், கோடரி, இரும்புக் கேடர்கள் என அவர்கள் கையில் வைத்திருந்தார்கள். அந்த சிவன் கோவிலடி முற்றத்திலிருந்த அரசியல் கைதிகள் அமைதியாக இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்கள் தானே அண்ண... பூசாவில இருந்து விடுதலையாகி வந்தாக்கள்...''

''ஓம்...''

''ரோசம்... மானம்... சூடு... சுரணை... ஒண்டும் இல்லையாண்ணே உங்களுக்கு... ஆமிட்ட எவ்வளவு அடி வாங்கியிருப்பீங்க பூசாவில... அத திருப்பிக்குடுக்கவேணாமா அண்ண... இந்தியன் ஆமி சொல்லீட்டுதண்ணே... நோ சூட்டிங் ஓடர்... பட்... ஏளிமோனிங் பீஸ் கிப்பிங்... ஒரு இரவு தந்திருக்கிறாங்க... விடியிரதுக்குள்ள திருகோணமலையில இருந்து சிங்களவன காலிபண்ணு எண்டு... இந்தியன் ஆமிட கவேட் ஒண்டு... கோட்ட வாசல்லயும் இன்னொன்டு நேவி கேம்ப் வாசல்லயும் நிக்குது... இதுக்கு மேல உங்களுக்கு என்ன பாதுகாப்பு வேணும்... அவங்களுக்கே இவ்வளவு உணர்வு இருக்கேக்க... எங்களுக்கு எவ்வளவு இருக்கோணும்... நாங்க ஆயுதம் தாரம் அண்ண... நீங்க வாங்க... இப்ப நாங்க அசோஹறா பேக் கவுஸத்தான் தாக்கப்போறம்... அங்க பத்துப் பன்னிரெண்டு சிங்களவனுகள் கிடக்காங்கள்...''

''தம்பி... அந்த அசோஹறா பேக் கவுஸில பாண் வாங்கித் தின்னாத தமிழன் ஒருவனும் இந்த திருகோணமலை டவுனில இருப்பான் எண்டு நான் நினைக்கயில்ல... கிராமங்களில இருந்தே சனம் பாண்வாங்க எண்டு... மினக்கெட்டு இங்க வந்து வாங்கிப்போயிருக்கு தம்பி... அதுகிடக்கட்டும்...''

''அண்ண நீங்க புளாட்காறனாண்ண... இப்படித் தத்துவம் பேசிப்பேசியே காலத்த கழியுங்க... நீங்க எல்லாம் சரிவரமாட்டீங்க... அத நாங்க பார்த்துக்கொள்ளுறம்... எங்களிட்ட வேற ஆக்கள் இருக்காங்க...''

''இவங்களோட பேசி நேரத்த போக்கவேணாம்... வாங்கடா போவம்...''

''கொஞ்சம் பொறு மச்சான்... அவரிட்ட நான் ஒரு கேள்வி கேட்டுட்டுவாறன்... சிறிமாபுர லவ்லேனுக்க... சீனித்தம்பி எண்டு ஒராள்ட குடும்பத்த வெட்டிப்போட்டு... டயர் போட்டு பத்தவச்சாங்களே... செட்டியார் எண்டு ஒராள இரவோட இரவா வெட்டி டயர் போட்டு எரிச்சாங்களே... ஞாபகம் இருக்கா... சீனித்தம்பி குடும்பமும் செட்டியாரும்... புளாட்டிலயா... E.P.R.L.F. இலயா இருந்தவங்க... எந்த இயக்கத்தில இருந்தவங்க... அவங்களும் அப்பாவித் தமிழாக்கள்தான்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியண்ணனிடம் கேள்வி கேட்பவரை அரியம் இனம் கண்டுகொண்டான். அது சிறி... செட்டியார்ர மகன் சிறி... கிருஸ்ணபுரிச் சிறியண்ணன்.. அப்படி என்றால் செட்டியார் குடும்பம் இங்கு எங்கேயோ அருகில்தான் இருக்கிறார்கள். செஞ்சிலுவைச்சங்க வாகனம் அவர்களுக்கான உணவுப்பொருட்களுடன் வந்துநின்றது.

## 5.2

தந்தை செல்வாவின் சிலைக்கும் சிவன் கோவில் மதிலுக்கும் இடைப்பட்ட அந்த வெளியில் தோரணங்களும் நடுவில் நடப்பட்ட கம்பத்திலிருந்து ஓரங்களை நோக்கிக் கட்டப்பட்ட நூல்களில் சிவப்பு மஞ்சள் வர்ணக் கடதாசிகளும் பட்டொளிவீசிப் பறந்து கொண்டிருந்தன. வண்ணான்குளத்தையொட்டிப் படங்குகட்டி மேடை போடப்பட்டிருந்தது. தந்தை செல்வாவின் சிலை, காகங்களின் எச்சம் கழுவப்பட்டுப் புதியவர்ணம் பூசப்பட்டிருந்தது. கறாஜ்ஜிலிருந்து வடிந்த ஒயில் தேங்கிநின்று கறுப்பாகக் கிடக்கும் சிலையின் அடிப்பகுதி குருத்துமணல் போட்டு நிரவப்பட்டிருந்தது. ஓரமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த கறாஜ் வாகனங்கள் அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தன. அந்த இடம் சிவன் கோவில் திருவிழாக்காலத்தைவிட அதிகமாக சனத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

கறுத்த துளைகள் அதிகமாகக்கொண்டதும் கறல்பிடித்து பெயின்ற் உரிந்த S.M.G இயந்திரத் துப்பாக்கி தாங்கிய, தலைப்பாகை கட்டிய I.P.K.F ஐ.க.மு.கு இன் சீக்கிய ராணுவ வீரர்கள் அந்தப் பிரதேசத்தை உயர்பாதுகாப்புவலயமாகப் பிரகடணப்படுத்திப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தார்கள். தங்கள் பதவித்தரத்தை வெளிப்படுத்தும் ராணுவச்சீருடையில் இந்திய ராணுவ, இலங்கை ராணுவ உயரதிகாரிகள் மேடையில் சிம்மாசனம் போன்ற கதிரையில் அமர்ந்திருந்தார்கள். சிவில் நிர்வாக அதிகாரிகள், வெள்ளை வேட்டி கட்டிய அரசியல் பிரமுகர்கள், இயக்கப் பொறுப்பாளர்கள், செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள், சமாதான ஒப்பந்தத்தால் விடுதலையாகி வந்த கைதிகள், சிவில்சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், புதினம் பார்க்க வந்த பொதுமக்கள் என ஏகப்பட்ட சனம் அந்த இடத்தை மொய்த்திருந்தது.

இயக்கங்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு ஆயுதங்களைக் கையளிக்கும் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. கோடை தகித்துக்கொண்டிருந்தது. புழுக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமுகர்கள் வியர்த்துக் கறுத்திருந்தார்கள். நேரம் மதியத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. ஆயுதம் ஒப்படைக்கும் நிகழ்வு தொடங்கியது. சனத்துக்கு இயக்கங்கள் பயன்படுத்திய நவீனரக ஆயுதங்களைப் பார்க்கும் ஆவல். சனம் அலை மோதி மேடையை நெருக்கியடித்தது. இயக்கங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கத்தொடங்கின.

முதலில் புலிகள் இயக்கம்தான் ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்கியது. குழாய் சவண்ட சொட் கண்கள், பழுதடைந்த 303 துப்பாக்கிகள், சில கைக்குண்டுகள், ஆங்கிலேயர் காலத்து ஒற்றைவெடி தீர்க்கும் கைத்துப்பாக்கிகள் என இயக்கங்கள் மாறிமாறிக் கையளித்துக் கொண்டிருந்தன. மேடையிலிருந்த இலங்கை ராணுவ அதிகாரி ஒருவர் கெக்கட்டம்விட்டுச் சிரித்து அருகிலிருந்த இந்திய ராணுவ அதிகாரியின் தோளில் தட்டிவிட்டு எழும்பிப்போனார். மியூசியத்தில் வைக்கவேண்டியதுகளைக்கூட இயக்கங்கள் பாதுகாத்துவைத்திருக்கின்றன என ஒரு அரசியல் பிரமுகர் சிலாகித்துப் புளகாங்கிதம் அடைந்தார். ஆயுத ஒப்படைப்பு சப்பென்று போனதால் சனம் கலைந்துபோகத் தொடங்கியது.

டொக்டர் ஞானி தனது பழைய ரலி சைக்கிளை சிவன் கோவிலடி வில்வமரத்தில் சாத்திப் பூட்டித் திறப்பை எடுத்துக்கொண்டார். டொக்டர் ஞானி எப்போதும்போல காவி படிந்த வெள்ளை வேட்டியும், காவிநிற சேட்டும் போட்டிருந்தார். தனது காவிபடிந்த வேட்டியின் ஒரு முனையை இடது கையின் விரலில் கொழுவித் தூக்கிப்பிடித்தபடி, ஒரு பக்கமாகச் சாய்ந்த தனது நடையுடன் தேர்முட்டியை நோக்கி நடந்தார். தேர்முட்டியின் படிகளில் குந்தியிருந்து புதினம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அவரைக் கண்டதும் எழும்பி மடித்துக் கட்டியிருந்த சாரத்தை அவிழ்த்து உதறிவிட்டுக்கொண்டு நின்றார்கள். அந்தத் தேர்முட்டி படிக்கட்டுகளில் இருந்தவர்கள் பெரும்பாலும் பூசா சிறையிலிருந்து விடுதலையாகி வந்தவர்களாகத்தான் இருந்தார்கள். ஞானி அவர்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே வந்தார். அவர்களும் சிரித்துக்கொண்டே அவரைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

''வணக்கம் தோழர்களே...''

''வணக்கம் சேர்...''

''வந்து இறங்கினதும்... இறங்காததுமா உங்கட கைவரிசையக் காட்டிப்போட்டீங்க என்ன... நல்ல பேர் எடுத்துப்போட்டீங்க... பூசாவில இருந்து விடுதலையான கைதிகள்தான் திருகோணமலையில கலவரத்த தொடக்கினது எண்டு... விளங்கினமாதிரித்தான்... கொஞ்சமாவது யோசிக்கமாட்டீங்களாடா... இன்னும் விடுதலையாகாம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசாவிலயும் வெலிக்கடையிலயும் மற்ற சிறைகளிலயும் இருக்கிறவங்கள ராணுவம் எவ்வளவு சித்திரவதை செய்திருப்பாங்கள் எண்டு... நீங்க ஏன் யோசிக்கவேணும்... நீங்கதான் விடுதலையாகி வந்திற்றீங்களே... மற்றவன் எக்கேடுகெட்டா நமக்கென்ன... இந்த கலவரத்த காரணம் காட்டியே மற்றாக்கள்ட விடுதலைய அரசாங்கம் பிந்திப்போட்டுக் கொண்டே இருக்கு... இருக்கப்போகுது..''

''நாங்க இல்ல சேர்... அந்தக் குடிகாரக்கூட்டந்தான் சாராயக்கடைக்க பூந்தது... அது பிறகு கலவரமா மாறுமெண்டு... நாங்க கனவிலயும் நினைக்க இல்ல...''

''ஓமடாப்பா... இப்ப எல்லாம் கதைப்பீங்க... கனபேருக்கு அண்ட இரவு நல்ல கலக்சனாமே... கேள்விப்பட்டன்... ஆரோ ஒரு வெங்காயம்... செக் புத்தகத்த எடுத்து பொக்கேட்டுக்க வைச்சிற்று... எழுத... எழுத... இனிக் காசுதான் எண்டு சொல்லிக் கொண்டு நிண்டுதாம்... எண்டதையும் கேள்விப்பட்டன்...''

டொக்டர் ஞானியின் கண்ணில் பட்டவர்கள் அங்கிருந்து நழுவமுடியாதவர்களாகச் சிரித்து மழுப்பிக்கொண்டு நின்றார்கள். கண்மறைவில் நின்றவர்கள் மெல்ல, பின்னால் நழுவி ஒழுங்கை களுக்குள்ளும் வளவுகளுக்குள்ளும் தலைமறைவானார்கள். ஞானி தொடர்ந்து நடந்து, சிவன் ஸ்ரீட்டுக்குள் நடக்கத் தொடங்கினார். ஆரோ ஒரு பிரமுகர் ஆயுத ஒப்படைப்பு மிகச்சிறப்பாக நடைபெற்றதாகவும் பெருந்தொகையான அயுதங்கள் ஒப்படைக்கப்பட்டதாகவும் சமாதானத்துக்கான எல்லாக் கதவுகளும் திறக்கப்பட்டுவிட்டதாகவும் ஒலிபெருக்கியில் அலறிக்கொண்டிருந்தார்.

## 5.3

அரியம் பதற்றப்படாமல் எந்த வம்புதும்புக்கும் போகாமல் நிதானமாக இருக்க விரும்பினான். அரியம் திரும்பவும் சரஸ்வதி தியட்டரில் வேலைக்குச் சேர்ந்துவிட்டான். ஆட்டிஸ்ட் நம்பி இப்போது சரஸ்வதி தியட்டரில் வேலையில் இல்லை. அவர் வீட்டில்வைத்துக் கடைகளுக்குப் பெயர்ப்பலகை எழுதுவது, கென்ரெக்ட் எடுத்து வீடுகளுக்கு பெயின்றடிப்பது என அவர் படுபிசியாக இருந்தார். இப்போது சரஸ்வதி தியட்டர் முதலாளிக்கு எல்லாமாக இருப்பது மாசிலாமணி. மாசிலாமணியின் தோற்றத்தையும் கதை பேச்சுக்களையும் பார்த்த அரியம் அவரிடம் நிதானமாகத்தான் நடந்துகொள்ளவேண்டும் என நினைத்தான். மாசிலாமணிக்கு மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் நின்ற நாய் ஒன்று வீதியைப் பார்த்துக் குரைத்தபோது மனிசன் எகிறிக் குதித்து தியட்டர் படிக்கட்டில் தடுமாறி இடறி விழுந்துபோனார். தடுமாற்றமும் மறதியும் பதறியடிப்பதும் அவரது சுபாவமாக இருந்தது. அவர் புள்ளப்பூச்சி என்பதை அரியம் சீக்கிரமாகவே தெரிந்துகொண்டான். சரஸ்வதி தியட்டர் இப்போது முன்னர் இருந்தது போல இல்லை. சரஸ்வதி தியட்டர் முதலாளி லைசென்ஸ் எடுத்து பார் ஒன்று நடத்திக்கொண்டிருந்தார். அரியம் பூசாவிலிருந்து வந்த மறுநாளே சரஸ்வதி தியட்டர் முதலாளியைச் சந்தித்தான். அவர் அவனை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டார். அவருக்கு பார் நடத்துவதற்கு நம்பிக்கையான ஆள் வேண்டும். தியட்டர் வருமானம் குறைந்துகொண்டிருந்தது. வீட்டில் டெக் T.V என சனம் மாறிக்கொண்டிருந்ததால் தியட்டர் வருமானம் குறைந்துபோயிருந்தது. புதுப்படங்களை உடனுக்குடன் ஓட்டுவதற்காக சரஸ்வதி தியட்டர் முதலாளி மினிதியட்டர் ஒன்றைக் கட்டிக்கொண்டிருந்தார். அவருக்கு அரியத்தின் தேவை அதிகமாக இருந்தது. அரியம் அங்கேயே தங்கக்கூடியவன். அது அவரது தொழில்களுக்குப் பாதுகாப்பு.

அரியம் சரஸ்வதி தியட்டருக்கு வந்து ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டது. அரியத்தின் ஒரு மாதச் சம்பளமும் சாராயக்கடை டிப்சுமாக எட்டு நூறுரூபாய்த் தாள்கள் பொக்கேட்டுக்குள் இருந்தன. இன்று பௌர்ணமி தினம். சாராயக்கடை திறக்கமுடியாது. படம் ஓடாது. ஆனால் எல்லா விசயமும் களவாய் நடக்கும். மாசிலாமணி இன்று அவனுக்கு ஓய்வு கொடுத்திருந்தார். தன்னுடைய சைக்கிளையும் தருவதாக வாக்குக் கொடுத்திருந்தார். அரியம் மாசிலாமணிக்காக சரஸ்வதி தியட்டர் வாசலில் காத்து நின்றான். மாசிலாமணி தனது திடகாத்திரமான பருத்த உடலையும் அகன்ற தலையையும் ஆட்டியபடி சைக்கிளில் வந்துகொண்டிருந்தார்.

மாசிலாமணி சைக்கிளை நல்ல நிலையில் வைத்திருந்தார். சைக்கிள் தார்வீதியில் இதமாக உருண்டு ஓடியது. அரியம் உற்சாகமாகக் காலை வேளையில் சைக்கிளை ஓட்டிப்போனான். மடத்தடி ரவுண்டபோட்டில் சைக்கிளைத் திருப்பி கிருஸ்ணன் கோவிலடியால் ரெயில்வே நோக்கிப் போய் மாதா கோவில் முடக்கில் திரும்பி சுடலையைத் தாண்டிப்போனான். சிந்தாமணிபுர ஆலமரத்தடியில் கால்குத்தி நின்றான். ஆலமரத்துக்குக் கீழிருந்த மாடத்துக்குள் புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்த கிருஸ்ணர் சிலை இல்லை; புத்தரும் இல்லை. மாடம் சருகுகளால் நிறைந்துகிடந்தது. இங்குதான் அரியத்துக்கு, தவா அண்ணனின் சவ ஊர்வலத்தின்போது டைனமெட் வெடித்துக் கல் சிதறி அடித்தது. அரியத்தின் நெற்றியில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுத்தமறு மறைந்துவிட்டது. இடதுகண்ணில் படலம் ஒன்று படர்ந்ததுபோல மங்கலான பார்வைதான். சிலநேரங்களில் தலைவலியும். அரியம் சைக்கிளை உன்னி மிதித்தான். சிந்தாமணிபுரம் வெறிச்சோடிக்கிடக்கிறது. சனம் கோட்டைப்பக்கமோ நேவிப்பக்கமோ இடம்பெயர்ந்துவிட்டது. வீடுகள் முழுமையாகக் கிடந்தன, உடைக்கப் பட்டிருக்கவில்லை. சருகுகளும் குப்பைகளும் மண்டிக்கிடக்கும் வளவுகளுக்குள் கதவுகள் பூட்டப்பட்டு அனாதையாகக் கிடக்கும் வீடுகளைப் பார்த்தபடி சைக்கிளை மிதித்துப் போனான் அரியம்.

அரியம் கள்ளுத்தவறணையடியை நெருங்கியிருந்தான். கள்ளுத்தவறணையின் தூண்களும் சுவர்களும் மட்டுமே நின்றிருந்தன. ஓடுகள், சலாகைகள், கைமரங்கள், எல்லாம் மாயமாக மறைந்துபோயிருந்தன. யன்னலும் கதவும் கழற்றப்பட்டு, நிலைகள் சுவரிலிருந்து பிடுங்கப்பட்டிருந்தன. கள்ளுத்தவறணைக்குப்பக்கமாக இருந்த எல்லா ஓட்டுவீடுகளும் அப்படித்தான். சுவர்கள் மட்டும் நட்டுக்கொண்டு நின்றன. குடிசைகள் இருந்த தடம் எதுவும் கண்ணில்படவில்லை அரியத்துக்கு. கம்பிக்கட்டைகள் பிடுங்கப் பட்டிருந்தன. வேலி என்ற ஒன்று இருந்ததற்கான தடங்கள் ஏதும் அங்கு இருக்கவில்லை. அந்தப் பிரதேசம் முழுவதும் திறந்த வெளியாகக் கிடந்தது. வெறும் சுவர்கள் மட்டும் ஆங்காங்கே தனிமையில் நின்று கொண்டிருந்தன.

அரியம் சைக்கிளை கிருஸ்ணபுரி ஒழுங்கைக்குள் திருப்பினான். ஒழுங்கையின் இருமருங்கிலும் கோரைப் புற்களும் புதர்களும் கொடிகளுமாக முளைத்துப் படர்ந்துகிடந்தன. ஒழுங்கை ஒற்றையடிப் பாதையைப்போல கடற்கரை நோக்கி நீண்டது. சதுரக்கிணற்றடி முடக்குத் தாண்டி சைக்கிள் உருண்டது. வேலிகளற்ற வளவுகள் கண்முன்னே எல்லைகளற்று விரிந்தன. வெற்றுச் சுவர்கள் வனத்தை அண்ணாந்து பார்த்து வெறித்துக்கொண்டு நிற்பதுபோல பட்டது அரியத்துக்கு. எல்லையோரத்தில் சிறிமாபுர வீடுகள் முழுமையாக இருந்தன. ஆனால் சனசந்தடியற்று நிசப்தமாகக் கிடந்தன. விக்டரின் வீடு, சுவர்களைத் தவிர மற்ற எல்லாம் வழித்துத் துடைக்கப் பட்டிருந்தது. அமுக்கர் சம்மாட்டியின் மெத்தைவீட்டு முன்பகுதி அப்படியே நின்றது. உள்ளே வெளிச்சம் படர்ந்து வெற்றிடமாகக் கிடந்தது. சாத்திரியார் அம்மாள் வளவு வந்ததும் அரியம் நின்றான். கடற்கரைவரை நீண்ட அந்த வளவு ஒரு மைதானத்தைப் போல வெட்டவெளியாகக் கிடந்தது. புதர்கள் ஆங்காங்கே மண்டிக்கிடந்தன. புதர்களுக்கு மத்தியில் சீமெந்துதளம் பெயர்ந்தநிலையில் சாத்திரியார் அம்மாளின் காளி கோவில் இருந்த தடம் மட்டும் கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரையில் நின்று உப்புக்காற்றைச் சுவாசித்தான் அரியம். தன் நாசி நிறையும்மட்டும் சுவாசத்தை நீட்டி இழுத்தான். பின் கடற்கரையிலிருந்த பிரதானவீதிக்கு சைக்கிளை உருட்டியபடி நடந்தான் அரியம்.

சில்வா பின்னால் ஓடிவந்து தோளில் கைபோட்டுக் கடலில் குளிக்க கூப்பிட்டான். துணிக்குவியலாக சிறிமாபுரப்பக்கமிருந்து சியா சிரித்துக்கொண்டு வந்தார். குளிரில் விறைத்து சூம்பிப்போன அவரது விரல்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. தேங்காய்ப்பூவைப் பிழிவதுபோல தன் உள்ளங்கைக்குள் பொத்தித் தூக்கிப்பிடித்த சாரியுடன் தன் பருத்த உடலை இடம்வலமாக அசைத்து நடந்துவருகிறார் சாத்திரியார் அம்மாள். காக்கிக் கால்சட்டையுடன் வெற்றுடம்பாகத் தன் பானை வயிற்றைத் தடவியபடி நிற்கிறார் பூவா. பூவாவைப் போய்ப் பார்க்கவேண்டும் என நினைத்தான் அரியம். வதனியும் கௌரிப் பெட்டையும் தூக்கிப்பிடித்த தோப்பிறாச் சட்டையுடன் சில்லுக்கோடு விளையாடுகிறார்கள். உதயன் புழுதியில் அரியத்துடன் கட்டிப் புரள்கிறான். சிவா நாக்கை மடித்துப் பற்களுக்குள் கடித்துக்கொண்டு சிரிக்கிறான். விக்டர் தன் சிவப்பு நிற யமாகா பைக்கில் போகிறார். நாய்கள் குரைக்கின்றன. மூத்தம்மாச்சி யாரையோ அதட்டுகிறார். யாரோ விறகு கொத்தும் ஓசை கேட்கிறது. அடுப்பில் தாளிக்கும் மணம் எழுகிறது. தோட்டத்துக்கு நீரிறைக்கும் இயந்திரத்தின் ஓசை கேட்கிறது. கள்ளுத்தவறணை அம்மாச்சி சைக்கிளில் அவனைத் தாண்டிப்போகிறார். மாமி தள்ளுவண்டியைத் தள்ளிக்கொண்டே போகிறார். தள்ளுவண்டி ஒன்று பிரதானவீதியில் கடகடத்துப் போய்க்கொண்டிருந்தது. அரியம் வேகமாக சைக்கிளில் ஏறி மிதித்தான். பிரதான வீதியை அண்டி கால்குத்தி நின்றான். மாமி தன் தள்ளுவண்டிக்குள் அவுட் மோட்டர், டீசல் கலன்கள் என சாமான்களை ஏற்றிக்கொண்டு யமாலியாப்பக்கமிருந்து நகரத்தை நோக்கித் தள்ளிக்கொண்டுபோனார். அதே கறுத்து மெலிந்த வெற்றுடம்பு. இடுப்பில் பழைய சாரத்துண்டு. தலையில் முண்டாசு, செருப்புப் போடாத வெற்றுக்கால்கள். தள்ளுவண்டிக்கார மாமி போய்க்கொண்டிருந்தார். ஏதோ ஒரு பரவசம் தனக்குள் கிளர்வதை அரியம் உணர்ந்தான்.

சிந்தாமணிபுரத்தைப் போலவே சிறிமாபுரத்திலும் வீடுகள் முழுமையாக இருந்தன. வீடுகளும் ஒழுங்கைகளும் சனசந்தடியற்று வெறுமையாகக் கிடந்தன. தளசின் வீட்டுக்கதவில் சிவா ஒட்டிய நோட்டிஸின் தடம் இருப்பது போலத்தான் அரியத்துக்குப்பட்டது. யமாலியா மெ.மி.த.க. பள்ளிக்கூடம், முருகாபுரி, மூன்றாம்கட்டை எனத் தாண்டிப்போனான் அரியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியத்தின் சைக்கிளுடன் கூடவே ராணுவ ரெக்டர் ஒன்று வருகிறது. ரெக்டர் மட்காட்டிலும் பெட்டிக்குள்ளும் ராணுவச்சிப்பாய்கள் குலுங்கிக்குலுங்கி வருகிறார்கள். கைக்குண்டொன்று ரெக்டர் பெட்டிக்குள் வந்து விழுகிறது. குண்டு வெடித்துத் தீப்பொறிகளும் புகையும் தூசிப் படலமும் எழுகின்றன. வெடிமருந்தின் நெடி காற்றில் பரவுகிறது. இரத்தச் சிதறல்கள் வீதியில் தெரித்து வீழ்கின்றன. துண்டாடப்பட்ட கால் ஒன்று, அணிந்திருந்த சப்பாத்துடன் வீதியில் வந்து விழுகிறது. ரெக்டர் பெட்டியுடன் வீதி ஓரமாகக் கவிழ்ந்து கிடக்கிறது. ரெக்டரின் பெரிய சக்கரத்துக்குக்கீழ் சிப்பாய்கள் நசிந்து கிடக்கிறார்கள். குண்டுவெடிப்பிலிருந்து தன்னை சுதாகரித்துக் கொண்ட சிப்பாய் ஒருவன் வீதியைத் தாண்டிப் புதர்களைநோக்கி ஓடமுனைகிறான். ரவியண்ணனின் துப்பாக்கி ரவைகள் அவனை வீதியில் சுருண்டுவிழச் செய்கின்றன. அரியம் சைக்கிளை வேகமாக மிதித்துப்போனான்.

அரியம் துவரங்காட்டுச் சந்தியை நெருங்கியிருந்தான். சின்னச்சின்ன கடைகள் முளைத்திருந்தன. இந்தியாவிலிருந்து திரும்பிவந்திருந்த சனம் குடியேறத் தொடங்கியிருந்தது. பெட்டிக்கடைகளும் சிறிய பலசரக்குக்கடைகளும் புதிதாக அமைக்கப்பட்டிருந்தன. துவரங்காட்டுச் சந்தியில் சனப்புழக்கம் இருந்தது. அரியம் துவரங்காட்டுச்சந்தி தாண்டிப் போனான்.

புள்ளகுளத்துப் பாலத்தடியில் சனம் குவிந்துகிடந்தது. அரசரின் றோசா வேன் மெதுமெதுவாகப் பாலத்தின்மீது ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. பாலத்தின் மறுபக்கத்திலேயே சனம் வேனைவிட்டு இறங்கி, பாலத்தின்மீது நடந்து இந்தப்பக்கமாக வந்து நின்றுகொண்ட பின்னர்தான், வேன் பாலத்தில் ஊர்ந்து வந்தது. இந்திய ராணுவம், புலிகளால் குண்டு வைத்து உடைக்கப்பட்ட புள்ளகுளத்துப் பாலத்தின்மீது இரும்புக் கேடர்களைப் போட்டு, தடித்த இரும்புத் தகடுகளைப் பரவி, தற்காலிகப் பாலம் அமைத்திருந்தது. கேடர்கள் மீது தகடுகள் தடதடப்பான ஓசை ஏற்படுத்த இடமும் வலமுமாகச் சாய்ந்து நிமிர்ந்து பாலத்தில் ஊர்ந்து வந்தது அரசரின் றோசா வேன். பாலம் தாண்டி வந்து, வீதியோரத்தில் நின்றது வேன். சனம் மீண்டும் வேனில் ஏறிக்கொண்டது. வேன் நகரம் நோக்கிப் புறப்பட்டுப் போனது. வேன் நகரும்வரை பாலத்தின் இருபக்கமும் காத்துநின்ற சைக்கிள்காரர்களும் மோட்டார் சைக்கிள்காரர்களும் பாலத்தில் நகரத்தொடங்கினார்கள். அரியம் சைக்கிளை உருட்டியபடி பாலத்தில் கேடர்கள்மீது போடப்பட்டிருந்த தகடுகளின்மீது நடந்தான். பாலத்தைத் தவிர்த்த ரெக்டர் ஒன்றும் மாட்டுவண்டி ஒன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளகுளத்துக் கரச்சிவெளி ஓரமாக கண்ணாக்காடுகளை அண்டி தண்ணீரை விலக்கியபடி போய்க்கொண்டிருந்தன. அரியம் பாலம் தாண்டிப் போனான்.

மூச்சு வாங்கவாங்க சைக்கிளை மிதித்து ஆறாம்கட்டை ஏற்றத்தில் ஏறினான் அரியம். காலை நேரத்திலேயே வியர்த்திருந்தான். சைக்கிள் இறக்கத்தில் மிதிக்காமலே உருண்டு வேகமெடுத்தது. வியர்வையில் பட்ட காற்று உடலைக் குளிரச்செய்து சிலிர்க்கவைத்தது. ஏழாங்கட்டை வயல்வெளிக்குள்ளிருந்த செல்வத்தாரின் அரிசிமில் சிதைந்து விழுந்துகிடந்தது. டவுன் பக்கமிருந்து எண்பத்துமூன்று கலவரத்தில் இடம்பெயர்ந்துவந்த சனம் இங்கு அகதியாகத் தங்கியிருந்தார்கள். இங்கே அகதிமுகாம் இருந்தபோது சீலனும் அரியமும் பலதடவை வந்துபோயிருக்கிறார்கள். இந்த அகதிமுகாமில் இருந்தவர்கள் அவர்களுக்குச் சமைத்த உணவு கொடுத்திருக்கிறார்கள். இந்த அகதிமுகாமில் இரவில் தங்கியும் இருக்கிறார்கள். வெல்கம்விகாரை ராணுவமுகாமிலிருந்து அடித்த செல், மில் அகதிமுகாமில் விழுந்து பலர் இறந்த செய்தியை, அரியம் பூசாமுகாமிலிருக்கும்போது கேள்விப்பட்டிருந்தான். இந்த அகதிமுகாமில் இருந்தவர்களில் பலர் அரியத்துடன் நெருக்கமாக இருந்திருக்கிறார்கள். தனக்குத் தெரிந்தவர்கள்கூட இறந்திருக்கக்கூடும் என நினைத்தான் அரியம். முகாமில் இறந்தவர்களது விபரம் எதுவும் அறியமுடியாதிருந்தது. இறக்கத்தில் வந்த சைக்கிள் சமதரைக்கு வந்து, வந்த வேகத்தில் போய்க்கொண்டிருந்தது.

இறக்கத்திலிருந்து வந்த சைக்கிளின் வேகத்தைக் குறைய விடாது, அரியம் சைக்கிளை மிதித்துக்கொண்டுபோனான். சைக்கிள் ஏழாங்கட்டை வயல்வெளியை ஊடறுத்துப்போனது. வயல்வெளி எங்கும் காலைவெயில் படர்ந்து கிடந்தது. அரியத்தின் வலது கன்னமும் காது மடலும் வெயிலில் சுள்ளிட்டன. எதிரே அடம்போடைமலை வேகமாக நெருங்கி வந்துகொண்டிருந்தது. அடம்போடைமலையின் அடிவாரத்துக்குள்ளிருந்து முளைத்து வெளியே வருவதுபோல பச்சைநிற ஜீப் ஒன்று பாய்ந்து வந்தது. பதறிய அரியம், அடுத்த கணமே தன்னைச் சுதாகரித்துக்கொண்டான். அது இந்திய ராணுவத்தின் மகேந்திரா ஜீப். ஜீப் அரியத்தை நெருங்கிவந்தது. அரியம் அவர்களைப் பார்த்துக் கையசைத்தான். அந்த மகேந்திரா ஜீப்பை ஓட்டி வந்தவர் முதல்கொண்டு மற்ற சிப்பாய்களும் தலையில், தலைப்பாகை அணிந்த சீக்கிய ராணுவச்சிப்பாய்களாக இருந்தார்கள். அவர்களும் கையசைத்தபடி அரியத்தைத் தாண்டிப்போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடம்போடைமலை அரியத்தை நெருங்கி வந்துகொண்டிருந்தது. மலைக்கெந்தில் இன்னமும் மரவேர்களின் பிடிப்பில் இப்போதும் விழுந்துவிடுவேன் என்று அச்சுறுத்திக்கொண்டு அந்தக் கற்பாறை தொங்கிக்கொண்டுதானிருந்தது. அடம்போடைமலைச்சாரலில் பட்டிமாடுகள் சில மேய்ந்துகொண்டிருந்தன. அது காசிப்பிள்ளையரின் மாடுகள் மாதிரித் தெரியவில்லை என அரியம் நினைத்துக்கொண்டான். காசிப்பிள்ளையரின் பட்டிமாடுகளுக்கு என்னவாயிற்று. அரியம் படுத்துக்கிடக்கும் அத்திமர நிழலில் கிடந்த கற்பாறையில் ஒரு வயதான மனிதர் குந்திக்கொண்டிருந்தார். அவர் தலையில் முண்டாசு கட்டியிருந்தார். முகத்தில் வெண்தாடி படர்ந்துகிடந்தது. அரியத்தால் அவரை மட்டுக்கட்ட முடியவில்லை. அவருக்கு முன்னே சில காதுநீண்ட வெள்ளாடுகளும் மேய்ந்துகொண்டிருந்தன.

அரியம் கச்சனக்கல்சந்திக்கு வந்திருந்தான். பிரதானவீதியிலிருந்து உப்பளத்துக்குப் போகும் கிறவல்வீதியில் சைக்கிளை இறக்கினான். கிறவல்வீதியில் சைக்கிள் கரகரத்து உருண்டது. சனநடமாட்டமற்று உறங்கிக்கிடந்தது வீதி. வீடுகளுக்குள்ளும் வளவுகளுக்குள்ளும் நடமாட்டம் இருந்தது. கைவிடப்பட்ட தோட்டங்கள் எல்லாம் புதர்கள் வளர்ந்தும் பாலைக்கொடிகளும் காட்டுக்கொடிகளும் படர்ந்துகிடந்தன. தோட்டவேலிகள் சிதைந்துகிடந்தன. அரியம் கண்ணகையம்மன் கோயிலடியில் வந்து நின்றான். அவர்கள் குடியிருந்த குடிசை இருந்தஇடம் தெரியவில்லை. மண்திடல் மட்டும் இருந்தது. திடலின் நடுவில் நாயுண்ணிப்பற்றை ஒன்று வளர்ந்து கிடந்தது. அரியம் உள்ஒழுங்கைகளில் சைக்கிளை இலக்கில்லாது ஓடவிட்டான். கிராமத்துக்குள்ளிருந்த பெரியதோட்டக்காரர்கள் எல்லாம் வெளிநாடுகளுக்கும் நகரத்தை நோக்கியும் ஓடிவிட்டார்கள். சின்னச்சின்ன தோட்டக்காரர்கள்தான் ஏதாவது செய்துகொண்டிருந்தார்கள். அரியம் திரும்பவும் கண்ணகையம்மன் கோயிலடிக்கு வந்து கிராமக்கோட்டுத் தார்வீதியில் சைக்கிளை மிதித்தான். இடிந்து பெயர்ந்துகிடந்த கிராமக்கோட்டுவீதியின் பள்ளங்களில் விழுந்த சைக்கிள் உதறிக்கொண்டு போனது. அரியம் இறங்கி சைக்கிளை உருட்டத் தொடங்கினான்.

''கூய்... நில்லு வாரன்...''

வேலும்மயிலும் மாமாவின் அடிவளவுக்குள்ளிருந்து யாரோ சத்தம் வைத்தார்கள். வீதியில் அவனைத் தவிர வேறுயாரும் இல்லை. அடிவளவுக்குள்ளிருந்து ஒரு உருவம் அசைவது தெரிந்தது. வேலும்மயிலும் மாமா காணாமல்போன பிறகு கைவிடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொச்சித்தோட்டம் பாழடைந்துகிடந்தது. வேலி அடைப்புக்களின் கம்பிகள் அறுக்கப்பட்டுக் கம்பிக்கட்டைகள் பிடுங்கப்பட்டுக்கிடந்தன. வேலும்மயிலும் மாமாவின் வளவுக்குள் புதிதாக கொங்கிரீட் கம்பிக்கட்டைகள் கிடந்தன. புதிய முள்ளுக்கம்பி றோல் மினுமினுப்புடன் கிடந்தது. தன்னை நோக்கி வந்துகொண்டிருப்பவரின் நடையிலும் உருவத்திலுமிருந்தே அது வேலும்மயிலும் மாமாதான் என்பதை அரியம் தூரத்தில்வைத்தே மதித்துவிட்டான். அப்படியென்றால் வேலும்மயிலும் மாமா உயிருடன்தான் இருக்கிறார். வேலும்மயிலும் மாமா நெற்றியில் கைவைத்து அவனைக் கூர்ந்து பார்த்துக்கொண்டு வந்தார். அரியம் வேலும்மயிலும் மாமாவைப் பார்த்துச் சிரித்தான்.

''அட..ட..ட..டேய்... நான் கோபாலன் எண்டு எண்ணியெல்லோ உன்ன மறிச்சுப்போட்டன்...''

''பரவாயில்ல மாமா... சொல்லுங்க என்ன வேணும்...''

''இவன் கோபாலன் வேலிய அடைச்சுத்தாரன் அடைச்சுத்தாரன் எண்டுபோட்டு, ஒழிச்சுத் திரியிரான்... அவனத்தான் தேடித்திரியிரன்... கள்ளப்பயல் கண்ணில படுறான் இல்ல... கம்பிக்கட்டையையும்... கம்பியையும் வாங்கிப்போட்டுட்டு காவல் காக்கிறதே பெரும்பாடாக் கிடக்கு... அகதிச்சனம் எண்டைக்கு ஊருக்க வந்துதோ அண்டைக்கே கிராமம் சுடுகாடாப் போயிற்றுது... நாசங்கட்ன அகதிச்சனம்... கம்பிய வெட்டி கம்பிக்கட்டையை எடுத்து விறகுக்கு கொத்தி எரிச்சுப்போட்டுதுகள்... அதுதான் கம்பிக்கட்டைக்கு பதிலா... கொங்ரீட் கட்ட போடப்போறன்... எதக் கொத்தி அவையலிட பருப்ப வேக வைக்கிணம் எண்டு நானும் பாக்கத்தானேபோறன்... இவன் கோபாலன் எங்கயாச்சும் கண்ணிலபட்டா நான் தேடினதாச் சொல்லு... ஐம்பது... நூறு... கூடவேணுமென்டாளும் கேட்டு வாங்கச்சொல்லு... வேலய முடிச்சுத்தந்தா புண்ணியமாப்போகுமாம் எண்டு சொல்லு...''

''சரி மாமா..''

''தம்பிய... நான் இன்னும் மட்டுக்கட்ட இல்லையே...''

''உங்கட கொச்சித்தோட்டத்தில வேல செஞ்ச கல்யாணிட மகன் அரியம்...''

''எடேய்... எடேய்... என்ற கொச்சித்தோட்டத்துக்க தானே நீ பிறந்தனி... பார்ரா... எவ்வளவு பெரிய ஆளா வளர்ந்து நிக்கிறாய்... எங்கடா உன்ற கொம்மாவையும்... கொக்காவையும்... காணம்... ஊருக்க இல்லப் போல கிடக்கு... ஒருக்கா வந்து முகத்த கண்ணில காட்டிற்றுப் போகச் சொல்லு...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவங்க இப்ப இங்க இல்ல மாமா... அக்காவும்... அம்மாவும்... கோபாலபுரத்தில இருக்காங்க எண்டு நினைக்கிறன்... அவங்கள பாக்கத்தான் போரன்... மாமா...''

''அதுதான் ஆக்கள்ட சிலமன இங்க காணம்... கட்டாயம் என்ன ஒருக்கா சந்திக்கச் சொல்லு...''

''கட்டாயம் சொல்லுவன் மாமா... மாமட்ட எனக்கொரு சந்தேகம்...''

''என்னடா மோனே...''

''மாமாவா ஆரோ கடத்தினதா கதை பரவினதே...''

''அந்த நாசமறுப்ப என்னத்தச் சொல்லடா மோனே... என்ற வீட்டின்ட புறத்தியில கிடக்காளே தோற சறோ... அந்த களுசறதான் நாய்வேல பார்த்தவள்... பாவம் அப்பாவி கனகையவ சுட்டுப் போட்டாங்கள்... கனகையாட வாய்தான் கூடாது... கொஞ்சம் சண்டித்தனமுந்தான்... ஆனா எட்டப்பன் வேலை எல்லாம் செய்யமாட்டான்... இவள் சறோ கள்ளச்சாராயம் விக்கிறது... பத்தாததுக்கு... மற்ற தொழிலும் செய்யிறது... இரவில கிராமத்தில கிடக்கிற கழிசடைகள் எல்லாம் இங்கதானே கிடக்கிற... கொஞ்சநாள் புலியின்ட புலனாய்வுப்பொடியள் என்ற வீட்டிலதானே கிடந்தவங்கள்... புலிப்பொடியள்ட நடமாட்டத்துக்கு இந்த தோறையும்... தோறையிட்ட இரவில வாறாக்களும் இடைஞ்சலா இருந்திருக்கிறாங்கள்... புலிப்பொடியள் சறோவ இரவோட இரவாப் போட்டு அடிச்சிருக்காங்கள்... இங்க இந்தத் தொழில் செய்யக் கூடாது எண்டு... இவள் மூண்டாங்கட்டப்பக்கம் போய் எங்கேயோ கிடந்திருக்கிறாள்... அந்தக் கோவத்திலதான் அவள் என்ன காட்டிக்கொடுத்தவள்... நான் புலிப்பொடியளுக்கு சாப்பாடுபோட்டு வளர்க்கிறன் எண்டு... என்ன பஸ்சால இறக்கிக்கொண்டே ஒரு இடுக்குக்க நிக்கவிட்டுப்போட்டு... ஆரையோ ஒரு பொம்பிளய, முகம் எல்லாம் மூடிக் கூட்டிக்கொண்டு வந்து காட்டினாங்கள்... அப்பதான் உருவத்தப் பார்த்தன் சறோ... பிறகு என்னத்தக் கதைக்கிறது... நான் சொல்லிப்போட்டன் புலிப்பொடியள் அடாத்தாத்தான் வீட்டில இருக்காங்கள் எண்டு... முதல்ல கொஞ்சம் அடிச்சாங்கள்... பிறகு... மருமகன் கல்விக் கந்தோரில செல்வாக்கான ஆள்தானே... தனக்குத் தெரிஞ்சாக்கள பிடிச்சு கதைச்சவர்... பிறகு அடிக்கிறதில்ல... வெலிக்கடைக்கோ பூசாக்கோ அனுப்ப இல்ல... இந்தியனாமி வந்தோன விட்டிற்றாங்கள்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சறோக்காவ... இப்ப கூழாவடியில கண்டனான்...''

''தோற... அவள் அக்காவோ... கிடக்காள் இங்க பிறத்தியில தான்... திரும்பவும் வந்து கிடக்காள்... இருக்கு ஒரு நாளைக்கு அவளுக்கு...''

''சரி மாமா நான் பொயிற்றுவாரன்...''

''கவனமா பாத்துப் போ... கோபாலன் கண்ணில பட்டா வரச்சொல்லிப்போட்டுப்போ...''

அரியம் சைக்கிளை உருட்டிக்கொண்டு நடந்தான். வேலும்மயிலும் மாமா சாரத்தை அவிழ்த்து உதறிக் கட்டினார். சைக்கிளை உருட்டிக்கொண்டுபோன அரியம் நின்றான்.

''என்ன மாமா புதுச்சாரம் போல...''

''ஓமடா... மோனே...''

''டவுனில மகள் வாங்கித் தந்தது... ஒரிஜினல் கிப்ஸ் சரம்... எண்பத்தைஞ்சு ரூவா... ஏதோ வோட்ட மார்க் எல்லாம் இருக்காண்டு மருமகன் சொன்னவர்... இந்தக் கோதாரி எல்லாம் எனக்குத் தெரியாதுடா தம்பி...''

வேலும்மயிலும் மாமா புதுச்சாரத்தை அவிழ்த்து உதறிக் கட்டிக்கொண்டார். அரியம் மெத்தைவீட்டுச் சந்திவரை சைக்கிளை உருட்டிக்கொண்டு போனான். பிரதானவீதியில் சைக்கிளில் ஏறி கோபாலபுரம் நோக்கி சைக்கிளை மிதித்துப்போனான்.

செல்வத்தாரின் தென்னந்தோப்பில் செல்லடியாலும் ஹெலிக்கப்டரிலிருந்து சுட்டதாலும் பல தென்னைகளின் வட்டுக்கள் கருகிப்போயிருந்தன. உயிர்ப்புடனிருந்த தென்னைமரங்களில் சன்னம்பட்ட வடுக்கள், பெரியபெரிய கோரையாகிப்போய் கறுத்த வடுக்களாகக் கிடப்பதைப் பார்த்துக்கொண்டே போனான் அரியம். தென்னைகள் சோடையடித்துக் காய்களற்றுக் கிடந்தன. அடிபெருத்த மருதமரங்கள் நிற்கும் கோபாலபுரச்சந்தியிலிருந்து கிராமத்துக்குள் போகும் வெண்மணல்புழுதி நிறைந்த வீதிக்குள்ளால் போனான் அரியம்.

அரியம் புலிகளிடமிருந்து தப்பிப்போனபோது தாயும் வதனியும் இங்குதான் இருந்தார்கள். கொச்சிக்காய் மில் தாண்டியதும் அரியம் நின்றான். தென்னைகளுடன் கூடிய அந்த வளவைக் கண்டுபிடிப்பது அரியத்துக்குச் சிரமமாக இருக்கவில்லை. தான் கடைசியாகப் பார்த்தபோது இருந்ததைவிட அதிக மாற்றங்கள் கண்டிருந்தது வளவு. முள்வேலி நேர்த்தியாக அடைக்கப்பட்டுத் தலைமறைப்புக்காகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னைமட்டை கட்டப்பட்டிருந்தது. ஓலைக்குடிசை இருந்த இடத்தில் அரைக்குந்து வைத்த தகரக்கொட்டகை இருந்தது. வீடு ஆளரவமற்று உறங்கிக் கிடந்தது. சிலவேளை தாயும் வதனியும் தோட்டவேலைக்குப் போயிருக்கலாம் என அரியம் நினைத்தான். தகரக்கொட்டகைக் கதவு திறந்தநிலையிலேயே கிடந்தது. முன் தகரக் கடப்பைத் திறந்துகொண்டு உள்ளே போனான் அரியம்.

அடிவளவுக்குள் தென்னைமரங்களுக்கு இடையே ஆள் நடமாட்டம் தெரிந்தது. சிறு பெண் குழந்தை ஒன்று முன்னே வரப் பின்னால் வயிற்றைத் தள்ளிக்கொண்டு மூச்சிறைக்க கர்ப்பிணிப் பெண் ஒருவர் வந்துகொண்டிருந்தார். வதனியா? இல்லை. அந்தப் பெண் குள்ளமாகத் தடிப்பாக இருந்தாள். ஆனால் இந்தப் பெண்ணை எங்கோ பார்த்ததாக அரியம் நினைத்துக்கொண்டான். முன்னே ஓடி வந்த குழந்தை அரியத்தைக் கண்டதும் பின்வாங்கித் தாய்க்குப் பின்னால் போனது.

''ஆர் வேணும்...''

''இங்க கல்யாணி எண்டு ஒரு அம்மாவும்... வதனி எண்டு ஒரு அக்காவும் இருந்தவங்க...''

''எனக்குத் தெரியாது அம்மாவத்தான் கேக்கவேணும்... அம்மா...''

அந்த அரைக்குந்து வைத்த தகரக்கொட்டகைக்குள்ளிருந்து வந்த கறுத்த தடித்த உருவம். செல்வத்தாரின் மில் அகதிமுகாமில் இருந்தவர்கள். சங்கரின் அம்மா.

''ஆர் வேணும்...''

''இங்க கல்யாணி எண்டு ஒரு அம்மாவும்... வதனி எண்டு ஒரு அக்காவும் இருந்தவங்க...''

''அந்த டெலோக்காரப் பொடியண்ட குடும்பமா...''

''.......''

''அவங்க டெலோக்காரக்களுக்கும்... புலி இயக்கப் பொடியங்களுக்கும் சண்டை தொடங்க... தென்னமர வாடிப்பக்கமோ... கொக்குளாய்ப்பக்கமோ... பொயிட்டாங்கலாம்... சும்மா கிடந்த வளவுக்க நாங்க இப்ப கொஞ்ச நாளாத்தான் இருக்கிறம்...''

அந்த கறுத்த, தடித்த அம்மாவின் முகத்தில் திடீரெனத் தோன்றிய பதற்றத்தையும் பயத்தையும் கண்ட அரியத்துக்கு மூச்சுத்திணறியது. சட்டென்று வளவுக்குள்ளிருந்து வெளியேறி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிளில் ஏறி மிதிக்கத்தொடங்கினான். தான் விரும்பாத வேசங்களும் வேண்டாத ஒப்பனைகளும் தன்மீது படிவது போலவும் தன்னை நெருக்கமாக யாரோ பின்தொடர்ந்து வருவதுபோலவும் அரியம் உணர்ந்தான். சைக்கிளை மிதிப்பதற்கு அரியம் சிரமப்பட்டான். அதிகமாகப் பள்ளங்களில் விழுந்து எழும்பிப்போனது சைக்கிள். தன் உடலைத் துப்பாக்கிச் சன்னங்கள் சல்லடைபோடுவது போலவும் தன் மூளையை நாய் ஒன்று நடுவீதியில் நக்குவது போலவும் தன் கண்முன்னே தோன்றும் காட்சிகளை, தலையைச் சிலுப்பி உதறியபடி சைக்கிளை மிதித்துப்போனான் அரியம். அந்த அம்மா சங்கரின் தாயார். புலி இயக்கத்தில இருக்கிற சங்கரின் அம்மா. அரியத்துக்குத் தான் தப்பிப் போனபின்னர் ஏதோ இங்கே நடந்திருக்கிறது என்பதை மட்டும் உணரமுடிந்தது. அம்மாவும் அக்காவும் என்னவானார்கள். வரும்போது இருந்த உற்சாகம் எல்லாம் வடிந்திருந்தது. பொக்கேற்றுக்குள் இருந்த எட்டு நூறுரூபாய் நோட்டுக்களும் வெறும் வெற்றுக்காகிதங்களாகத் தோன்றியது அரியத்துக்கு. இப்போது இருக்கிற பிரச்சினை பத்திரமாக மாசிலாமணியரின் சைக்கிளை அவரிடம் ஒப்படைப்பது மட்டுமே. அரியம் வேகமாக நகரத்தை நெருங்கிக்கொண்டிருந்தான்.

## 5.4

பிள்ளையார் கோவில் ஐயர் கண்மூடி தியானத்தில் நின்றார். கர்ப்பக்கிரகம் அமைதியாக இருந்தது. வெளியே சலசலப்பாக இருந்தது. வேட்டியை இடுப்பில் கொடுக்காகக் கட்டிய புலி ஆதரவு இளைஞர்கூட்டம் அங்கப்பிரதட்சணம் செய்வதற்குத் தயாராக நின்றார்கள். அடியழிப்பதற்குப் புலிகளின் அன்னையர் முன்னணிப் பெண்கள் காத்து நின்றார்கள். பிள்ளையார் கோவில் ஐயர் கையில் மஞ்சள் தண்ணீர் கரைத்த செம்புடன் கர்ப்பக்கிரகத்தில் தியானத்தில் நின்றார். அவர் வெளியேவந்து, காத்து நிற்பவர்களுக்குத் தலையில் மஞ்சள் தண்ணீர் ஊற்றினால்தான் நிகழ்வு ஆரம்பிக்கும். ஐயருக்குப் பிள்ளையார் எந்த நல்ல சகுனத்தையும் காட்டவில்லை.

தனது வாக்குக்கண் பார்வைக்கு ஐம்பது வயதுக்கு மேல்தான் குபேரனின் பார்வை தன் மீது படும் என ஐயர் தனது சாதகக் குறிப்பைக் கணித்துவைத்திருந்தார். தமிழர்களின் கனவுத்தலைநகரில் காளி கோவிலும் பிள்ளையார் கோவிலும் அருகருகே இருந்த போதிலும் காளி கோவில் வருமானம் என்பது நினைத்துப் பார்க்கமுடியாத அளவில் பிரமாண்டமாக இருந்தது. வெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைத்தட்டுடன் காலம் தள்ளமுடியாத நிலையில்தான் பிள்ளையார் கோவில் ஐயர் தனது வீட்டோடு ஒரு கடையை அமைத்திருந்தார். காகிதாதிப் பொருட்கள் விற்பனை, றோனியோ பண்ணிக்கொடுப்பது, சாதகக்குறிப்புக்கள் எழுதிக்கொடுப்பது என அவர் தனக்கென ஒரு சிறு வருமானத்தை உருவாக்கியிருந்தார். இப்போது அந்தக் கடையின்மீதுதான் புலிகள் உருவத்தில் குபேரனின் கடைக்கண்பார்வை விழுந்திருக்கிறது.

பெயரில்லாத, முறையான நகரசபைப் பதிவில்லாத, அந்தக் கடையை ''கணேசா பிரஸ்'' ஆக மாற்றுங்கள் என்கிறார்கள் புலிகள். முழுமையான முதலீட்டை நாங்கள் செய்கிறோம். புலிகளின் தலையீடு எதுவும் இருக்காது என்கிறார்கள். நிருவாகம் முழுமையாக ஐயருடையதாகவே இருக்கும். விசுவாசத்தை மட்டும் தங்கள் மீது காட்டுமாறு கேட்கிறார்கள். இரகசியம் இரகசியமாகவே காப்பாற்றப் படும் என்கிறார்கள்.

இப்போது இலங்கை ராணுவத்தின் கட்டுப்பாட்டில் தமிழர்களின் கனவுத்தலைநகரம் இல்லை. இந்திய ராணுவத்தின் கையில் இருக்கிறது. தன் பூநூலை மீறி, தன்மீது இந்திய ராணுவமோ புலிகளோ மிக இலகுவாக ஆதிக்கம் செலுத்தமுடியாது என பிள்ளையார் கோவில் ஐயர் நினைத்தார். வெளியே சலசலப்பு அதிகமாகிக்கொண்டிருந்தது. அதிகாலைவேளையிலேயே ஐயர் உடலில் புழுக்கத்தையும் வியர்வையின் கசிவையும் உணர்ந்தார். ஐயர் கண்ணைத் திறந்தார். பிள்ளையார் சிலை வெண்கலத்தின்மீது ஒளிக்கீற்றொன்று பட்டு மறைந்தது. ஐயருக்கு அது பிள்ளையார் தன்னைப் பார்த்துச் சிரிப்பது போல இருந்தது. வேகமாக மஞ்சள்நீர் கரைத்த செம்புடன் வெளியே வந்தார்.

''அரோகரா...''

புலிகளின் தயவில் அரசியலில் கால்பதித்துவிட ஆசைப்பட்ட பிரமுகர் ஒருவர்தான் முதலில் முகமெல்லாம் புன்னகையாகத் தலையை நீட்டினார். ஐயர் மஞ்சள்நீரை அவர் தலையில் வார்த்தார். தளதளப்பான வெள்ளை உடம்பில் வடிந்த மஞ்சள் நீர் வேட்டியை மஞ்சளாக்கி நிலத்தில் வடிந்தது. அவர் வேகமாக நிலத்தில் விழுந்து அங்கப்பிரதட்சணை செய்யத் தொடங்கினார். ஐயர், காத்து நின்ற இளைஞர்களதும் அன்னையர்முன்னணிப் பெண்களது தலையிலும் பெரிய அண்டாவில் கரைத்து வைத்திருந்த மஞ்சள்நீரை வார்க்கத் தொடங்கினார். சங்கிலித்தொடராக நீண்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கப்பிரதட்சணை செய்பவர்களின் எண்ணிக்கை. அவர்களுக்கு முன்னும்பின்னும் பக்கவாட்டிலுமாகப் பெண்கள் அடியழித்துப் போனார்கள்.

தந்தை செல்வாவின் சிலைக்கும் சிவன் கோவில் மதிலுக்கும் இடைப்பட்ட வெளியில், வண்ணான்குளத்தை ஒட்டி, பெரிய பந்தல் போடப்பட்டிருந்தது. பந்தலுக்குக்கீழே உயரமான மேடை அமைக்கப் பட்டிருந்தது. பந்தற்கால்களில் கட்டப்பட்டிருந்த வாழைகள் வாடிவதங்கிக்கிடந்தன. தென்னோலைக்குருத்துக்களில் செய்த தோரணங்கள் வெயிலில் காய்ந்திருந்தும் காற்றுக்கு ஆடிக்கொண்டிருந்தன. மேடையில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அடையாள உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். அவருக்குப் பக்கபலமாகச் சுழற்சிமுறையில் பலர் அவ்வப்போது வந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்கள். ஏழாவது நாளாக உண்ணாவிரதப்போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. புலிகளின் அன்னையர்முன்னணி உறுப்பினர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னின்று நடாத்திக்கொண்டிருந்தார்கள்.

இந்திய ராணுவத்தின் அத்துமீறல்களைக் கண்டித்தும் இலங்கைத் தமிழர்கள் மீதான இந்தியாவின் அசமந்தப்போக்கைக் கண்டித்தும் வடகிழக்கில் உண்ணாவிரதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் திலீபனும் மட்டக்களப்பில் அன்னைபூபதியும் சாகும்வரை உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்கள். உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஆதரவு தெரிவித்தே பிள்ளையார் கோவிலிலிருந்து சிவன் கோவிலடி தந்தை செல்வாவின் சிலைவரை அங்கப்பிரதட்சணையும் அடியழிப்புப் போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

அங்கப்பிரதட்சணை, அடியழிப்புப் போராட்டக்காரர்கள், வித்தியாலயம் வீதி, கஸ்கிசன் வீதி, திருமால் வீதி, ஔவையார் வீதியைத்தாண்டி திருஞானசம்பந்தர் வீதியில் ஏறி, சிவன் கோவிலடி நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.

திருகோணமலைமாவட்ட அரசியல் பொறுப்பாளர் அடையாள உண்ணாவிரதப்போராட்டத்திலிருக்கும் மேடைக்குப் பிள்ளையார் கோவில் ஐயர் வந்து சேர்ந்தார். ஐயருக்கு ஏகப்பட்ட மரியாதையுடன் தடபுடலான வரவேற்பு வழங்கப்பட்டது. உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் பொறுப்பாளரின் மேடைக்குக்கீழே போடப்பட்ட சிம்மாசனம் போன்ற கதிரையில் ஐயர் அமரவைக்கப்பட்டார். ஐயருக்கு முதன்முதலாகக் கிடைக்கும் பெரிய கௌரவம். அவர் கதிரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சை நிமிர்த்தி அமர்ந்திருந்தார். ஐயர் தன் பூநூலை நெஞ்சிலிருக்கும் பழுத்த முடியுடன் உருட்டுவதும் பின் விடுவிப்பதுமாக இருந்தார். அவர் மனது முழுவதும் விரிவடைந்துகொண்டிருக்கும் கணேசா பிரஸ் திட்டமிடல்களில் லயித்துப்போயிருந்தது.

அங்கப் பிரதட்சணை, அடியழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், உண்ணாவிரதப்போராட்டம் நடந்துகொண்டிருக்கும் இடத்துக்கு வந்துசேர்ந்தார்கள். முதலில் வந்துசேர்ந்த பிரமுகரைத் தொண்டர்கள் ஐயர்முன்னே தூக்கி நிறுத்தினார்கள். பிரமுகரைப் பார்த்த ஐயர், வெலவெலத்துப்போனார். சில மணித்தியாலங்களில் ஒரு மனிதன் இவ்வளவு தூரம் கோலம் கெட்டுப்போவான் என ஐயர் நினைத்திருக்கவில்லை. பிரமுகரின் தளதளப்பான உடல் முழுவதும் வீதிக்கற்களில் பட்டு கொவ்வைப்பழமாகச் சிவந்து போயிருந்தது. சிராய்ப்புகளில் இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. அவரது தொப்பை சுருங்கி மடிப்புக்கண்டு கிடந்தது. பிரமுகரின் நெற்றியில் ஐயர் திருநீறு போட்டுப் போராட்டத்தை முடித்துவைத்தார். பிரமுகரை இளைஞர்கள் தாங்கிப்பிடித்தபோதும், அவர் துவண்டுதுவண்டு கீழே விழுந்தார். அவரை மேடை ஓரமாகச் சாத்தி இருத்தி வைத்தார்கள். ஆனாலும் அவர் பேச்சுமூச்சற்று மேடை ஓரமாகச் சுருண்டுவிழுந்து படுத்துக்கொண்டார். போராட்டத்தை முடித்துவைத்த ஐயர் வேகமாக அங்கிருந்து நகர்ந்துபோனார். அந்தப் பிரமுகரின் உடலைப் போல தனது கன்றிச் சிவந்த உடல், வீதி ஓரம் ஒன்றில் சுருண்டுகிடப்பது போன்ற நினைவுகள் மிரட்ட பிள்ளையார் கோவில் ஐயர் வேகமாக நடந்துகொண்டிருந்தார்.

## 5.5

கடல் மூர்க்கமாக இருந்தது. எதிரே எழும் கடலலைகள் சாமியண்ணனின் நெஞ்சில் மோதி உடைந்து, சிதறி விலகும் நீர்த்திவலைகளுடன் கடந்துபோயின. சாமியண்ணன் நீந்திக் கொண்டிருந்தார். தலைக்கு மேலே மதிய வெயில் கொளுத்தி எடுத்துக் கொண்டிருந்தது. உடல் கடல்நீரின் குளிர்ச்சியை அனுபவித்துக் கொண்டிருந்தது. வானம் முகில்களற்றுத் துடைத்துவைத்ததுபோல வெளிர்நீலநிறத்தில் கிடந்தது. வெயில் வெளிர்வெண்மையாக ஒளிர்ந்தது. கோணேசர்மலை தூரத்தே, மரங்களின் அடர்பசியநிறத்துடன் கடலுக்குள் கிடந்தது. மலை சில இடங்களில் சாய்வாகவும் சில இடங்களில் நிலைக்குத்தாகவும் கடலுக்குள் இறங்கி நின்று கொண்டிருந்தது. சாமியண்ணன் திரும்பிச் சல்லிக்கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகப்பைப் பார்த்து நீந்தத்தொடங்கினார். சல்லிக்கோயிலுக்கு முன்பாக நிலத்தை ஒட்டிக் கடலுக்குள் நீண்டு கற்பாறைத் தொடர்கள் கிடந்தன. செந்நிறப் பளிங்குக் கிறவல் கற்பாறைகள் வெயிலில் மினுமினுத்துக்கொண்டிருந்தன. நீந்தி வந்த சாமியண்ணன் தொடர் கற்பாறைமுனையொன்றில் கையை ஊன்றி, நெம்பி மேலே ஏறி, கற்பாறையில் அமர்ந்துகொண்டார். கண்கள் உவர்நீரால் காந்தத் தொடங்கியிருந்தன. அவரது நீண்ட தலைமுடி தோளில் படிந்து கிடந்தது. ஈரலிப்பான தாடி நெஞ்சுடன் ஒட்டிக்கொண்டுகிடந்தது.

தப்பிப்பிழைத்துக்கிடப்பதற்காக ஏதாவது அதிரடியாகச் செய்தாகவேண்டிய கட்டாயத்தில் இருந்தார் சாமியண்ணன். புலிகள் இந்திய ராணுவத்துடன் சண்டையைத் தொடங்கிவிட்டார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குள் விமானத்திலிருந்து பராசூட்மூலம் குதித்த இந்திய ராணுவப் படையணி ஒன்றைப் புலிகள் கட்டடங்களுக்குள் மறைந்திருந்து இலகுவாகக் கொன்றுவிட்டார்கள். வடக்குக்கிழக்கு முழுவதும் இந்திய ராணுவம் புலிகளை வேட்டையாடத் தொடங்கியிருந்தது. சாமியண்ணனது உறவுக்காரர்கள் இந்தியாவில் அகதிமுகாமில்தான் இருந்தார்கள். அவர்கள் இங்கு திரும்பிவருவதற்குள் புலிகள் சண்டையைத் தொடங்கிவிட்டார்கள். இந்திய அமைதிகாக்கும் படை இங்கே இருக்கும்போது இந்தியாவில் அகதி அந்தஸ்து கோரவும்முடியாது. பூசாமுகாமிற்குத் திரும்பிப் போகவும்முடியாது. சாதாரண சாமித்தம்பியாக இருந்தால் எங்காவது தப்பி ஓடிக் கிடந்துவிடமுடியும். புளாட் சாமியண்ணனாக இங்கு நிம்மதியாக இருக்கமுடியாது. நிம்மதியாக இருக்கவும் விடமாட்டார்கள். அதுவும் திருகோணமலை நகரத்திலிருந்து ஒதுங்கி, ஏழுகட்டைக்கு அப்பால் கடலை அண்டிய குடாவுக்குள் உள்ள சல்லிக்கிராமத்தில் வாழ்வது என்பது இயலாத காரியம். இந்திய ராணுவமும் சரி, புலிகளும் சரி சந்தேகக்கண்ணுடனேயே பார்ப்பார்கள். தன் நடமாட்டத்தை ஒட்டி ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிட்டால், மரண தண்டனை தீர்ப்பாகிவிடும்.

சாமியண்ணன் பிறந்து வளர்ந்ததெல்லாம் இந்த சல்லிக் கிராமத்தில்தான். எல்லாவித கடற்தொழிலும் சாமியண்ணனுக்கு அத்துப்படியாகத்தானிருந்தது. இப்போதுகூட உடலிலும் மனதிலும் கடற்தொழில் செய்வதற்கான தெம்பும் திடமும் இருந்தது. பழைய நண்பர்களாக இருந்தாலும் சரி, புதிய இளவட்டப் பயல்களாக இருந்தாலும் சரி, அவரிடமிருந்து தள்ளியே நின்றார்கள். புளாட் சாமியண்ணனால் தமக்கு சிக்கல்கள் வருவதை யாரும் விரும்பவில்லை. பூசா சிறைச்சாலையிலிருந்து திரும்பி வந்தபின்னர், நண்பர்களின் வாடிகளிலும் அங்குமிங்குமாகக் காலம் நகர்ந்துகொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்பிடிக் கிராமமான சல்லிக்கிராமம், பல கெடுபிடிகளைச் சந்தித்துக்கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது. சாம்பல்தீவு ஆதிக்க சமூகமான வெள்ளாள சமூகத்துக்கும் சல்லிக்கிராமத்துக்கும் எப்போதும் ஏதாவது காரணத்தை ஒட்டி சண்டை நடந்துகொண்டே இருக்கும். சிலவேளைகளில் இரண்டு மூன்று வாரங்களுக்குக்கூட சண்டை தொடர்ந்து நடப்பதுமுண்டு. அடிதடி வெட்டுக்குத்து எனத் தொடர்ச்சியாக நடந்துகொண்டே இருக்கும். பொலீஸ், கோட் எனக் கெடுபிடிகளை அந்தச் சமூகம் சந்தித்துக்கொண்டேயிருக்கும். அவர்களது வாடி, வள்ளம், தோணி, வலைகள் அடிக்கடி எரிக்கப் பட்டுவிடும். அவர்கள் சீவிக்கும் குடில்கள்கூட கொளுத்தப்படுவதுண்டு. அர்த்தமில்லாத காரணங்களுக்கெல்லாம் கைதுகளும் கோட் தண்டனைகள் எனவும் அந்தச் சமூகம் சீரழிக்கப்பட்டுக்கொண்டிருந்த காலம் அது. தன் தந்தை செய்யாத குற்றத்துக்காக நீதிமன்றத்திலிருந்து பிடியாணை கொண்டுவந்த இரண்டு பொலீஸ்காரர்களை, இந்த சல்லிக்கிராமத்தின் ஒழுங்கைகளுக்குள் துரத்தித்துரத்தி வெட்டியிருந்தார் சாமியண்ணன். பின்னர் இந்தியாவில் தஞ்சம், இயக்க வாழ்க்கை எனப் போனது. இயக்கத்துக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளைச் சகித்துக்கொள்ள முடியாத சாமியண்ணன், சண்டையிடாமலும் சரணடையாமலும் ஆமியிடம் பிடிபடுவதுபோல் பிடிபட்டுப் பூசா சிறையில் தண்டனை அனுபவித்துத் திரும்பி வந்திருந்தார்.

தன்னால் மற்றவர்களுக்குத் தொல்லை ஏற்பட்டுவிடக்கூடாது என்ற கவலை சாமியண்ணனைத் தொற்றிக்கொண்டது. தன் மிகக்குறைவான தேவையைப் பூர்த்தி செய்வதற்கான வருமானமொன்றைத் தேடிக்கொள்ள வேண்டும், மற்றவர்களுக்குத் தொல்லை இல்லாது தங்குவதற்கான ஒரு இடத்தைக் கண்டுபிடித்தாகவேண்டும். சாமியண்ணனின்முன் தற்போது இருக்கும் பிரச்சினை அது மட்டும்தான்.

புளாட் சாமியண்ணனின் கண்களுக்குமுன்னே ஏதோ ஒரு காட்சி தோன்றி மறைந்ததுபோல இருந்தது. தலையில் சடாமுடியும் கையில் தடி ஒன்றுடனும் தான் கடல்மீது நடந்துபோவதுபோல இருந்தது அந்தக் காட்சி. அவரது தோள்வரை நீண்டு படிந்துகிடந்த முடியிலிருந்தும் நீண்ட தாடியிலிருந்தும் நீர்த்திவலைகள் சிதறிப் பரந்தன. கை விரல்களைத் தலைமுடிக்குள்ளும் தாடி மயிர்களுக்குள்ளும் செலுத்தி, முடிகளுக்குள் படிந்துகிடந்த உவர்நீரைத் தட்டிவிட்டார். தோள்வரை படிந்துகிடந்த முடியைத் தூக்கி உச்சந்தலையில் குடுமியாகக் கட்டிக்கொண்டார். பாறையில் எழுந்துநின்ற சாமியண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரத்தைத் தொடைக்குமேல் தூக்கிக் கட்டிக்கொண்டார். கற்பாறைகள் மீது இயல்புக்கு மீறிய வேகத்துடன் கையை விசிறிக்கொண்டு, கால்களைப் பாறைகள்மீது அகல வைத்து, தாண்டித்தாண்டி நடக்கத்தொடங்கினார்.

கற்பாறையிலிருந்து இறங்கி வந்தார் சாமியண்ணன். மதியநேர வெயிலில் வெதும்பிக்கொண்டிருந்த கடற்கரைச் சுடுமணலில் நடந்துபோனார். கடலைப் பார்த்தபடி இருக்கும் சல்லியம்மன் கோயில் முகப்புக்கதவருகே வந்துநின்றார். பத்தடி அகலமும் பன்னிரண்டடி உயரமும்கொண்ட முகப்பு வாசல் அது. பச்சை நிறத்தில் சதுரம் சதுரமான துளைகளுடன் கூடிய பெரிய இரட்டைக் கதவுகள் முகப்பை மூடிநின்றன. முகப்புக் கதவைத் தள்ளித் திறந்தார் சாமியண்ணன். கடல்காற்றில் கறல்கட்டிப்போன கதவுகளின் திறாந்திகள் சிரமத்துடன் கிரீச்சிட்டபடி திறந்துகொண்டன. கோயிலை நிர்வகித்தவர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக ஓடிவிட்டதால், கோயில் பாழடைந்ததுபோல கிடந்தது. அங்கிருந்து நகர்ந்த சாமியண்ணன் மடைப்பள்ளியை நோக்கி நடந்தார். மடைப்பள்ளிக் கதவுகள் திறந்தே கிடந்தன. ஆடு, மாடுகள் படுத்த தடம் கிடந்தது. சாமியண்ணன் திட்டத்தைத் தன் மனதுக்குள் தீட்டிக்கொண்டார். தன் திட்டத்தை யாரோ முந்திக்கொண்டு செயற்படுத்திவிடுவார்கள் என்ற பயம் துரத்த, அவர் வேகமாகச் செயலில் இறங்கினார்.

மனதில் உருவான திட்டம் தொய்ந்துபோவதற்கிடையில் அவர் திருகோணமலை நகரத்தில் நின்றார். நான்கடி நீளமான இரும்புக்கம்பியாலான சங்கிலியும் பெரிய ஆமைப்பூட்டு ஒன்றும் சிறிய பூட்டுக்களும் தனக்கான சில பொருட்களும் கொண்ட பை எனத் தன் கைக்காசைப் போட்டு வாங்கிக்கொண்டு அதே வேகத்தில் திரும்பவும் கோயிலடிக்கு வந்தார் சாமியண்ணன். வந்தவேகத்தில் மடைப்பள்ளிக்குள்ளிருந்த பெட்டகத்தை உடைத்துத் திறந்தார். பெட்டகத்துக்குள்ளிருந்து குடத்தை எடுத்துக்கொண்டார் சாமியண்ணன். கடல்நீரை அள்ளி கோயிலையும் மடைப்பள்ளியையும் கழுவினார். உப்புக்காற்றில் கறல்கட்டிப்போய்க்கிடந்த கதவுகளின் திறாந்திகள் படிய மறுத்தன. சிங்கர் ஒயிலின் உதவியுடன் அவற்றைப் படியவைத்தார் சாமியண்ணன்.

கதவுகளின் சதுரத்துவாரங்களுக்குள்ளால் இரும்புச்சங்கிலியை நுழைத்து ஆமைப்பூட்டைப் போட்டுக் கதவைப்பூட்டி எடுத்துக் கொண்டார். நண்பனின் வாடியிலிருந்த தனது இருப்பிடத்தை மடைப்பள்ளிக்குள் மாற்றிக்கொண்டார். ஐயர் ஒருவரைத் தேடிப்பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்லியம்மனுக்கு நித்திய பூசை அவசியம் என்றார். ஐயர் கொடுத்த சிட்டையுடன் ஊருக்குள் நுழைந்தார் சாமியண்ணன். ஊரின் சில முக்கியஸ்தர்களைச் சந்தித்தார். ஆலமரத்துக்குக்கீழ் வெள்ளை வேட்டி கட்டிய பிரமுகர்களின் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை. நிர்வாகிகளின் தெரிவின்போது எழும் கூச்சல்களும் சந்தடிகளும் எழவில்லை. சாமியண்ணன் சல்லியம்மன் கோயில் நிர்வாகத்தைக் கைப்பற்றிக்கொண்டார். அவரை எதிர்ப்பதற்கும் அவர் கதைக்கு மறுப்புச் சொல்லும் அளவுக்கும் ஊருக்குள் யாருக்கும் துணிவு இருக்கவில்லை.

சாமியண்ணன் முற்றாக மாறிப்போனார். நிரந்தரமாகத் தலையில் உச்சிக்குடுமி தங்கிக்கொண்டது. நீண்ட தாடியுடன் அதைவிட நீளமாகவும் சின்னதாகவும் உருத்திராக்க மாலை நாலைந்து சுற்றாகக் கழுத்தில் படிந்துவிட்டது. நெற்றியில் சிவப்புநிறக் குங்குமக்கீற்றுப் பிறைவடிவத்தில் தங்கிக்கொண்டது. கறுப்பா, கருநீலமா எனக் கண்டுபிடிக்கமுடியாத நிறத்தில், சருகை போடர் வைத்த சாரம் இடுப்பில் நிரந்தரமாகிப்போனது. அவரைப் போலவே சல்லியம்மனும் பொலிவு காணத்தொடங்கினாள். சல்லியம்மன் கோயிலடி களைகட்டத்தொடங்கியது. புளாட் சாமியண்ணன் வண்ணக்கர் சாமியண்ணன் ஆகிப்போனார்.

## 5.6

கச்சனக்கல்லிலிருந்து அரசரின் றோஸா வேனில் வந்த வதனி, மாதாக்கோயில்சந்தியில் இறங்கிக்கொண்டாள். திருகோணமலை நகரை நோக்கிப்போகும் சனசந்தடிமிக்க சின்னக்கடைத்தெரு வழியாக அரசரின் றோஸா வேன் ஊர்ந்து, நகர்ந்து போனது. ரெயில்வே ஸ்டேஸனை ஒட்டி அமைக்கப்பட்டிருந்தது இந்திய ராணுவத்தின் காப்பரண் ஒன்று. உயரமான காப்பரணிலிருந்த இந்திய ராணுவச்சிப்பாய் தன்னையே பார்ப்பதுபோல இருந்தது வதனிக்கு. மடத்தடிச்சந்தி நோக்கிப்போகும் பெரிய நிழல்வாகைமரங்கள் நிற்கும் வீதியில் வேகமாக நடக்கத்தொடங்கினாள். இனம்புரியாத கவலைகள் ஒன்றன்பின்னொன்றாக அவள் மனதில் தோன்றுவதும் பின் மறைவதுமாக இருந்தன. இறந்தவர்களைப் பற்றி அவள் அதிகம் கவலைப்படுவதில்லை. ஏனென்றால் அவர்கள் இறந்து விட்டார்கள் என அவளுக்குத் தெரியும். நீண்டநாள் காணாமலிருந்த ஒருவரை எதேச்சையாகக் காணநேர்ந்தால் அவள் கவலைப்படத் தொடங்கிவிடுவாள். அதற்குப் பிறகு அவர்கள் இறந்துபோகக்கூடும் எனக் கவலைப்படத் தொடடங்கிவிடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனிக்கு அம்மாவை நினைத்தால்தான் அதிக கவலை தொற்றிக்கொள்ளும். அம்மா கல்யாணியின் தலைமுடி நரைத்து விட்டது. அம்மாவின் மனநிலையும் நல்லநிலையில் இல்லை. தோட்டவேலைகளில் தீவிரமாக ஈடுபடும்போது மட்டுமே அவள் சுயநினைவில் இருப்பதுபோல வதனிக்குத் தோன்றும். மற்ற நேரங்களில் அவள் எங்கே போகிறாள், என்ன செய்கிறாள் என வதனி பயந்தபடியே இருக்கவேண்டும். கல்யாணி சிலவேளைகளில், தாங்கள் இருந்த கண்ணகையம்மன் கோயிலடிக்குப் போய்விடுவதும் உண்டு. சில வேளைகளில் வேகமான நடையில் கோபாலபுரத்தில் அவர்கள் இருந்த தந்தையின் வளவுக்குக்கூட போய்விடுவதும் உண்டு. அம்மாவைத் தேடி அலைவதே வதனிக்குப் பெரும் கவலையாகவும் பிரயாசையாகவும் இருந்தது.

இன்று, கூடவே வேனில் வந்த ஜெயத்தின் அம்மாவைத் தனியே ஆஸ்பத்திரிக்குப் போகவிட்டதுகூட அவளுக்குக் கவலையைத் தந்தது. அம்மாவை வேலும்மயிலும் மாமாவின் கொச்சித்தோட்டத்துக்குள் விட்டுவிட்டு வந்தது மனதுக்கு அறுதலாக இருந்தது. போயிலைத் தோட்டம் வைத்திருந்த ஜெயம் தன் குடும்பத்துடன் கனடாவுக்குப் போய்விட்டார். தனியே இருந்த ஜெயத்தின் வயதான அம்மாதான் அவர்களுக்குத் தனது வீட்டில் அடைக்கலம் கொடுத்திருந்தார்.

புலிகள் இயக்கம், டெலோ இயக்கத்தைத் தடைசெய்தபின், டெலோ இயக்கப் பொடியள்களின் வீடுகளைப் புலிகள் இரவில் ராணுவமுகாமைச் சுற்றிவளைப்பதுபோல வளைத்துக்கிடப்பார்கள். அப்படியான ஒரு இரவில் புலிகள் இயக்கப் பொடியள், வதனியும் அம்மாவும் இருந்த தந்தையின் கோபாலபுரத்து வீட்டைச் சுற்றிவளைத்துக்கிடந்தார்கள். இரவில் ஏதோ அரவத்தைப் பார்த்த புலிகள் கண்மூடித்தனமாகச் சுடத்தொடங்கினார்கள். தங்கள் வீட்டு மண்சுவரைத் துப்பாக்கிக்குண்டுகள் பெயர்த்துப்போட்டதை வதனி கண்டாள். அதன்பிறகு அந்த வீட்டில் இருக்க அவள் துணியவில்லை. அந்த வீட்டிலிருந்து வெளியேறி, தென்னமரவாடிப்பக்கம் கடற்கரையோர வாடி ஒன்றில் காலத்தைத் தள்ளினார்கள்.

இந்திய ராணுவம் இலங்கைக்குள் வந்தபின்னர்தான் தென்னமரவாடியிலிருந்து திரும்பிவரத் தீர்மானித்தாள் வதனி. தென்னமரவாடியில் அவர்களுக்குப் பழக்கப்பட்ட வேலைகள் எதுவும் கிடைக்கவில்லை. தெரிந்தவர்களும் இருக்கவில்லை. கோபாலபுரத்துக்குத் திரும்பி வந்தபோது, அவர்களது வீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகள் இயக்கத்திலிருந்த சங்கரின் குடும்பம் இருந்தது. வதனி அங்கிருக்க விரும்பவில்லை. அவர்களுடன் மல்லுக்கு நிற்கமுடியாது என்பது வதனிக்குத் தெரியும். நிலாவெளி கண்ணகையம்மன் கோயிலடியில் அவர்கள் இருந்த இடத்தில் வெறும் மணல் திட்டு மட்டுமே மிஞ்சியிருந்தது. நிலாவெளிப்பகுதியில் பல குடும்பங்கள் தங்கள் வீடுகளை விட்டுவிட்டு இடம்பெயர்ந்து போயிருந்தார்கள். வீடுகள் ஆளரவமற்று வெறுமையாகத்தான் கிடந்தன. ஆரிடம் கேட்டுக் குடியிருப்பது எனத் தெரியாது அவர்கள் தெருவில் நின்றிருந்தபோதுதான் ஜெயத்தின் அம்மாவைச் சந்தித்தார்கள். ஜெயத்தின் அம்மாதான் அவர்களுக்கு இப்போது தஞ்சம் கொடுத்துக்கொண்டிருந்தார். வதனிக்கு அரியத்தை அவசரமாகச் சந்தித்தாக வேண்டியிருந்தது. வதனி சரஸ்வதி தியட்டரை நோக்கித் தன் நடையை வேகப்படுத்தினாள்.

அரியத்தை, அவளுக்குக் கண்டுபிடித்துக்கொடுத்தது இந்திய ராணுவம் அறிமுகப்படுத்திய குடும்ப விபரஅட்டைதான். புலிகள் இந்திய ராணுவத்துடன் சண்டையைத் தொடங்கியதும் அறிமுகப் படுத்தியதுதான் குடும்ப விபரஅட்டை. வீட்டில் தரித்திருக்கும் குடும்ப உறுப்பினர்கள் மாத்திரமே அந்த அட்டையில் பதியப்படவேண்டும். குடும்பத்தவர் அன்றி வேறு யார் பெயரும் அதில் இடம்பெறக்கூடாது. ரவுண்டப் நடக்கும்போது குடும்ப விபரஅட்டையில் இல்லாத ஒருவர் அந்த வீட்டில் தரித்திருந்தால் அவர் புலியாகக் கருதப்பட்டுக் கைது செய்யப்படுவார் என இந்திய ராணுவம் அறிவித்திருந்தது. வெளியிடத்திலிருந்து யாராவது வந்து தங்குவதானால் பிரஜைகள் குழுத் தலைவருக்கூடாக இந்திய ராணுவத்துக்கு முன் அறிவிப்புச் செய்யவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டிருந்தது.

வதனி தங்கள் குடும்ப விபரஅட்டையில் முதலில் அரியத்தின் பெயரைப் பதியாது விடுவதெனத்தான் நினைத்திருந்தாள். பின்னர் எதற்கும் இருக்கட்டும் என அரியத்தின் பெயரைக் குறிப்பிட்டுக் காணவில்லை எனக் குறிப்பிட்டிருந்தாள். சரஸ்வதி தியட்டரில் வேலை செய்த அரியமும் தனது குடும்ப விபரஅட்டையில் தாயினதும் தமக்கையினதும் பெயரைக் குறிப்பிட்டுக் காணவில்லை எனப் பதிவு செய்திருந்தான். இந்த விபரங்களை ஒப்பிட்டுப் பார்த்த ஒரு இந்திய ராணுவ அதிகாரிதான் அவர்களுக்குள் தொடர்பை ஏற்படுத்திவைத்தார். அரியத்தைச் சந்தித்த பிறகு, வதனி கொஞ்சம் நம்பிக்கை கொண்டவளாகக் காணப்பட்டாள். அவளது கையில் சில ரூபாய் நோட்டுக்கள் இப்போதுதான் புழங்கத்தொடங்கியிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்கும் உலைவைத்துவிடுவார்களோ என்ற பயம் உந்த, மடத்தடி ரவுண்டபோட் தாண்டி சிவன் கோவிலடிக்குப் போகும் வீதியில் நடக்கத்தொடங்கினாள் வதனி.

வதனிக்கு வீதியில் நடக்கமுடியாத அளவுக்கு இடறியது. வதனிக்கு சிவா வடிவத்தில் அரியண்டம் தொடங்கியிருந்தது.

உப்புவெளி பொலிஸ்காரரின் மகன் சிவாவும் அரியமும் ஒன்றாகத் திரிந்தவர்கள்தான். இப்பொழுது சிவாதான் நிலாவெளிப் பகுதிக்குப் புலிகளின் பொறுப்பாளராக இருக்கிறான். அவனுடைய இயக்கப்பெயர் செந்தணல். நாய்கள் தொடர்ச்சியாகக் குரைத்துக் கொண்டிருக்கும் நள்ளிரவில், அவன் துவக்கையும் காவிக்கொண்டு வீட்டுக்கு வருகிறான். அவன் வந்து போகும்வரைக்கும் வதனிக்கு இரவில் ஈரக்குலை நடுங்கியது. தப்பித்தவறி அந்த நேரம் இந்தியனாமி வந்தாலோ யாராவது பார்த்துவிட்டுச் சொன்னாலோ உயிர் உடம்பில் தங்காது. அரியத்தை வந்து தன்னைச் சந்திக்கச்சொல்லிக் கட்டாயப் படுத்திக்கொண்டே இருந்தான். வதனியும் காலம் கடத்த, ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டுதான் இருந்தாள். அவனும் விடுவதாக இல்லை. அரியத்தை ஒன்றும் செய்யமாட்டம், அவனை வைச்சு டவுனுக்க சின்னச்சின்ன வேலை செய்யத்தான் கூப்பிடுறம் என்கிறான். சிவா அடிக்கடி வீட்டுப்பக்கம் வருவது தனக்கு மட்டுமில்லை சுற்றி இருக்கிறவர்களுக்கும் ஆபத்து என்பது வதனிக்குத் தெரியும். என்ன வந்தாலும் வரட்டும். அரியத்திடம் சொல்லிவிடுவது என்ற முடிவுடன் அவள் சரஸ்வதி தியட்டர்பக்கம் வேகமாக நடந்துபோனாள்.

வதனி பெரிய இரும்புக்கதவுகள் கொண்ட சரஸ்வதி தியட்டர் வாசலில் வந்து நின்றாள். வதனி சரஸ்வதி தியட்டருக்குள் போகவிரும்பவில்லை. சாராயக்கடையில் அதிகம் ஆண்கள் சாராயம் குடித்தபடியும் றகளை செய்தபடியும் இருப்பார்கள். அவள் உள்ளே போவதில்லை. அரியம் அவளைக் கண்டால் வெளியே வருவான். இல்லையென்றால் உள்ளே போகும் யாரிடமாவது சொல்லிவிடுவாள். அரியம் வெளியே வந்து அவளைச் சந்தித்துப் போவான். தியட்டர் முகப்பிலிருந்த பெரிய பலகைத் தட்டியில் கமலஹாசனும் சரண்யாவும் நின்றிருந்தார்கள். நாயகன் படம் கதவுகள் பூட்டிய தியட்டருக்குள்ளே ஓடிக்கொண்டிருந்தது. இப்போதெல்லாம் நடிகர்களை ஆட்டிஸ்டுகள் வரைவதில்லை. படக்காட்சிகளே பெரிய போட்டோவாக இந்தியாவிலிருந்து பிறின்ட் போட்டு வந்துவிடுகின்றன. அப்படியான பிறின்ட் படம்தான் முகப்புத்தட்டியில் ஒட்டப்பட்டிருந்தது. அரியம் வதனியை நோக்கி வந்துகொண்டிருந்தான். அரியத்தின்மீது சாராயநெடி வீசியது. வதனியின் மனதில் இனம்புரியாத கவலைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.7

அடிக்கடி தன் சேட் பொக்கேட்டைத் தொட்டுப்பார்த்துக் கொண்டான் அரியம். அடையாள அட்டையும் குடும்ப விபர அட்டையும் தன் பொக்கேட்டுக்குள் இருப்பதை அடிக்கொருதரம் உறுதிப்படுத்திக்கொண்டான். சாம்பல்தீவு மாங்கனாய் அம்மன் கோயில் திருவிழா களைகட்டியிருந்தது. மதியநேர அன்னதான ஏற்பாடுகளின் கட்டளைகளும் இரைச்சல்களும் அன்னதான மடம் முழுவதும் கேட்டுக்கொண்டிருந்தன. வெள்ளை வேட்டி சேட் சகிதம் இருந்த அரியம் நெற்றியில் சந்தனப்பொட்டு வைத்திருந்தான். திருவிழா கூட்டத்துக்குள் ஒருவனாக சங்கமித்திருந்தான் அரியம். அங்குமிங்கும் இலக்கற்று அலைந்துகொண்டிருந்தான். அவனது கறுத்த உடல், அவன் போட்டிருந்த வெள்ளை வேட்டி வேசத்துக்கு ஒவ்வாமலிருந்தது.

மாங்கனாய் கோயிலடியிலிருந்து அடுக்குப்பாருக்குப் போகும் வண்டிப் பாதை, அது நீளும் தூரத்துக்கு வெறிச்சோடிப்போய்க் கிடந்தது. ஆங்காங்கே விடத்தல் முள்பற்றைகளும் நாயுருவிச் செடிகளும் தகரப்பற்றைகளும் பாதையோரங்களில் மண்டிக்கிடந்தன. கறுத்த, கலகலப்பான ஓசை எழுப்பும் வாகங்காய்களைக்கொண்ட வாகைமரக்கெந்துகள் பாதையை ஒட்டி வளைந்து தொங்கிக் கொண்டிருந்தன. பாதை முடங்குமிடத்தில் மென்மையான வெள்ளைநிறமும் பசியநிறமும் கலந்த தண்டுகளைக்கொண்ட கண்ணாமரங்கள் மண்டிக்கிடந்தன. வெயில் அவற்றின் மீது மூர்க்கமாகப் படர்ந்துகிடந்தது.

உப்புவெளி பொலிஸ்காரரின் மகன் சிவா. புலிகளின் நிலாவெளி பொறுப்பாளராக இருக்கும் செந்தணல் என்னும் சிவா. அரியத்தைச் சந்திப்பதற்கு இன்றுதான் வதனியிடம் நாள் குறித்து அனுப்பியிருந்தான். அதுவும் அடுக்குப்பார் பகுதிக்கு வரச்சொல்லியிருந்தான். மதியத்தை அண்டி அரியம் வருவதற்கு நேரம் குறித்து வதனியிடம் சொல்லியிருந்தான். எந்த வகையிலும் இந்தச் சந்திப்பு அபாயமானது தான் என்பது அரியத்துக்குத் தெரிந்த விடயம்தான். அரியம் அடுக்குப்பார் நோக்கிப்போகும் பாதையில் நடக்கத்தொடங்கினான்.

நாய்க்களியின் சாம்பல்நிறப் புழுதிகள் படர்ந்துகிடந்த உவர்ப்பாங்கான ஒற்றையடிப் பாதையில் நடந்துகொண்டிருந்தான் அரியம். கடல் கண்ணில்படவில்லையாயினும் அலையடிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசை கேட்டுக்கொண்டுதான் இருந்தது. அந்த பிரதேசம் முழுவதும் ஆழமான அமைதியில் உறங்கிக்கிடந்தது. பறவைகளின் ஒலிகூட கேட்கவில்லை. நீர்க்காக்கைகளின் கீச்சுக் கரைதல் ஒலிகூட இல்லாதிருந்தது.

இங்கு வருவதற்குமுன் அரியம் டொக்டர் ஞானியைச் சந்திக்க பலதடவை முனைந்திருந்தான். அவரைச் சந்திக்க முடியவில்லை. இந்திய ராணுவமும் அதனுடன் சேர்ந்து இயங்கும் மற்ற இயக்கங்களும் அவரை முடக்கிவைத்திருந்தன. அவர் கடும்கண்காணிப்பில் இருப்பதாகப் பேசிக்கொண்டார்கள். ஆலோசனை கேட்கக்கூடியவர்கள் யாரும் இல்லாததால் அரியம் சிவாவைச் சந்திப்பது எனத் தீர்மானித்திருந்தான். அப்படி என்ன உதவி கேட்கப்போகிறார்கள். ஏதாவது பொருட்களை நகரத்தில் வாங்கி இங்கு நகர்த்தச் சொல்லப்போகிறார்கள். அது அவ்வளவு கஸ்டமான வேலை இல்லை. முடிந்ததைச் செய்துகொடுப்பது, இயலாததைச் செய்வதாகக்கூறிக் காலம்கடத்துவது என்ற தீர்மானத்துடன் தான் அரியம் நடந்துகொண்டிருந்தான்.

வடக்குக்கிழக்கு மாகாணசபை அமைத்துவிட்டார்கள். தேர்தல் நடந்துமுடிந்து முதலமைச்சர் பதவி ஏற்றுவிட்டார். முன்னாள் போராளிகளுக்கு வேலைகொடுக்க இருப்பதாக கதைகள் பரவியிருந்தன. அரியத்துக்கு யாரிடம் கேட்பது எனத் தெரியவில்லை. மாசிலாமணி அண்ணர் சொல்கிறார், படித்தவர்களுக்குத்தான் அரச உத்தியோகம் கிடைக்குமாம். சாரதி அனுமதிப்பத்திரம் இருந்தால் சாரதியாகப் போவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்கிறார். இல்லை என்றால் தமிழ் பொலீஸ், ஆமி எல்லாம் உருவாக்கும்போதுதான் முன்னாள் போராளிகளுக்கு வேலைவாய்ப்புக்கிடைக்கும் என்கிறார். புலிகள் வடக்குக்கிழக்கு மாகாணசபையில் வேலைக்குப் போகிறவர்கள் சுடப்படுவார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனாலும் நிறையபேர் வடக்குக்கிழக்கு மாகாணசபையில் வேலைசெய்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆரையாவது சந்தித்து வேலை கேட்பது, சாரதி அனுமதிப்பத்திரம் எடுப்பது பற்றியெல்லாம் யோசித்துக்கொண்டுதான் இருந்தான் அரியம். சாமியண்ணனிடம் கேட்கமுடியாது. அவர் நிறைய கதைத்துக் குழப்பிவிடுவார். டொக்டர் ஞானியைச் சந்திக்க முடியாதிருப்பது அரியத்துக்கு வேதனையாகத்தான் இருக்கிறது.

அம்மாவையும் வதனியையும் நகரத்துக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டால் சிவாவை, செந்தணலை, பொருட்படுத்தத் தேவை இல்லை தான். ஆனால் அது இப்போது சாத்தியமாக இல்லை. நகரத்தில் வீட்டு வாடகை, அட்வான்ஸ், விறகுதொட்டு எடுத்ததற்கெல்லாம் செலவுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதுதான் வதனியின் கையில் கொஞ்சம் காசு புழங்கத் தொடங்கியிருக்கிறது. அவளது முகத்தில் கவலைகளின் அறிகுறிகள் மறையத் தொடங்கியிருந்தன. அரியம் அடுக்குப்பார் கடலை வந்தடைந்திருந்தான்.

கடலுக்குள், கரையிலிருந்து, வில் ஒன்று வரைந்தது போல பாறைகள் படர்ந்து கிடந்தன. கடலுக்குள்ளிருந்து கற்பாறைத்தகடுகளை அடுக்கி எழுப்பியதுபோல கடலைப் பிரித்துக்கொண்டு கடல்மட்டத்துக்கு மேலே எழும்பி நின்றன பாறைத்தொடர்கள். பெருங்கடல் ஆர்ப்பரித்து அலையடித்துப் பாறைகளில் மோதியது. பாறைகளுக்கு மேல் எழுந்த கடல்நீர் பாறைகளில் வழிந்து தரையைத் தொட்டுக் கொண்டுநின்ற கடலுக்குள் வழிந்தது. பாறைக்குள் அகப்பட்டுத் தரையைத் தொட்டுக்கொண்டுநின்ற கடல், அமைதியாக ஆர்ப்பாட்டமற்று அலைகளை அமைதியாகக் கரையை நோக்கித் தள்ளிக்கொண்டிருந்தது.

அரியம் தன்னைச்சூழ ஒருமுறை பார்த்துக்கொண்டான். அந்தப் பிரதேசம் முழுவதும் ஆள் நடமாட்டமற்று அமைதியாக இருந்தது. பயம் மெல்ல பரவிப் பின் வடிந்துபோனது. ஆறாம்கட்டை மலைஉச்சியிலிருந்து தொடர்ந்து மூன்று நான்கு மைல்களுக்கு நீளமாகவும் சாய்வாகவும் வந்த அந்த கிறவல்மலை, கடலை அண்டிச் சாய்வாகத் தரைதட்டி நின்றுகொண்டிருந்தது. அந்த கிறவல்மலை முழுவதும் அடர்ந்த பெருமரங்களும் பற்றைக்காடுகளும் சூழ்ந்துகிடந்தன. அந்த மலையடிவாரத்தை ஒட்டிக் கடற்கரையிலிருந்து ஆறாம்கட்டை நோக்கிப்போகும் சுண்ணாம்புக்காளவாய் வண்டிப்பாதை நீண்டு சென்றுகொண்டிருந்தது. அரியம் திரும்பவும் கடலைப் பார்க்கத்தொடங்கினான்.

இந்தச் சந்திப்பு நிகழாமல் போனால் மகிழ்ச்சிதான். ஆனால் திரும்பவும் இங்கு வரவேண்டி வந்தால். அரியம் தன் உடல் சற்று வெடவெடப்பதை உணர்ந்தான். கிறவல்மலையை அண்டி இறக்கத்தில் சலசலப்பைக் கேட்டான் அரியம். இரண்டு சிறுவர்கள் மலையிலிருந்து இறங்கி சுண்ணாம்புக்காளவாய் வண்டிப் பாதையில் நடந்து வந்துகொண்டிருந்தார்கள். இரண்டு பேரும் சாரம் இடுப்பில் கட்டி, பெக்கி சேட் போட்டிருந்தார்கள். அவர்கள் நெருங்கிவந்தபோது, அவர்கள் சிறுவர்கள் இல்லை என்பதை அரியம் உணர்ந்தான். அவர்களது மீசை முடிகள் தடித்திருக்கவில்லை. அவர்கள் சிரித்துக் கொண்டு வந்தார்கள்.

''என்னண்ண இந்தப் பக்கம் தனியா நிக்கிறீங்க...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாங்கானாய் திருவிழாவுக்கு வந்தனான்... வயித்தக் கலக்கீற்று... அதுதான் இந்தப் பக்கமா வந்தநான்...''

''இப்பிடி தனியா இங்க எல்லாம் நிக்கக் கூடதண்ண... வாங்க...''

தன் தோள்மீது படிந்துகிடந்த கை பயிற்சியால் உரமேறிப்போன கை என்பதை அரியம் உணர்ந்துகொண்டான். பக்கத்தில் நடந்துவரும் மற்றவனது சேட்கொளர் இடைவெளிக்குள்ளால் கறுத்த கயிறும் குப்பியும் இருப்பதை அரியம் உறுதிப்படுத்திக்கொண்டான். அவர்கள் தாம் வந்த வழியில் அரியத்தை அணைத்தபடி கூட்டிக்கொண்டு மலைக்கெந்தில் ஏறத்தொடங்கினார்கள்.

''செந்தணல் அண்ண சொன்னவர்... நீங்க விபரமான ஆள் எண்டு...''

'சிவா...''

தன்னுடைய முனகல் தனக்கே கேட்கவில்லை என்பதை அரியம் உணர்ந்தான். அவர்கள் மலைக்கெந்தின் சாய்வில், சடைத்து விரிந்து கிளைகள் தாழ்வாக நிலத்தை முட்டுமாப்போலிருந்த கோணல் புளியமரத்தை நோக்கி நடந்தார்கள். காய்ந்த கோணல் புளியங்காய்கள் நிலத்தில் விழுந்து சருகாகிக்கிடந்தன. கோணல் புளியமரத்தின் கெந்தை விலக்கிக்கொண்டு உள்ளே போனார்கள். அடிமரத்தை ஒட்டி அடுப்பு மூட்டப்பட்டிருப்பதை அரியம் கண்டான். இந்த இடத்தில் அமர்ந்துதான் அவர்கள் நடமாட்டங்களை அவதானித்துக்கொண்டிருந்திருக்க வேண்டும் என அரியம் ஊகித்துக் கொண்டான். சிறிய முட்டி ஒன்றிலிருந்து தேத்தண்ணியை ஒருவன் ஜொக்கில் ஊற்றி அரியத்திடம் கொடுத்தான். இன்னொருவன் தன் பொக்கேட்டிலிருந்து டொபி ஒன்றின் நான்காக உடைத்த துண்டு ஒன்றை நீட்டினான். அரியம் அந்த இடத்தில் தேத்தண்ணி அவசியம் என்பதாக உணர்ந்ததால் வாங்கிக்கொண்டான். அரியம் டொபித்துண்டை வாய்க்குள்போட்டு அதக்கிக்கொண்டு பிளேன்ரீயைச் சுவைக்கத் தொடங்கினான். அவர்கள் பாதையையும் மலைக்கெந்தையும் நோட்டம்விட்டுக்கொண்டிருந்தார்கள். அரியம் பிளேன்ரீயைக் குடித்து முடிக்கும்வரை அந்த மலைக்கெந்து மயான அமைதியில் இருப்பதாக உணர்ந்தான். மலைக்கெந்துக்கு மறுபுறமிருந்து மெல்லிய சீழ்க்கை ஒலி கேட்டது. அவர்கள் எழுந்துகொண்டார்கள். அரியமும் எழுந்துகொண்டான்.

''வாங்கண்ணே...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்புறம் மலைக்கெந்தை முட்டியபடியிருந்த கோணல் புளியமரத்தின் கெந்தை விலக்கிக்கொண்டு மலைக்கெந்தில் ஏறத்தொடங்கினார்கள். புதர்களும் மரங்களும் மண்டிய மலைக்கெந்தில் ஏறி, பின் மறுபக்கமாக இறக்கத்தில் இறங்கத்தொடங்கினார்கள். தூரத்தே ஏழாம்கட்டை வயல்வெளிகளும் தாமரைக்குளமும் தெரிந்தன. மஞ்சளும் பச்சையும் கலந்த தாமரை இலைகளுக்கு இடையே வெள்ளைத்தாமரை மொட்டுக்கள் அரியத்தின் கண்ணில்பட்டன. அரியம் சற்றுத் தலையை நிமிர்த்திப் பார்த்தான். தூரத்தே அடம்போடைமலை சிறியதாகத் தோன்றியது. எரிக்கும் வெயிலில் வதனியும் அம்மாவும் சுனைக்கும் கத்தரித்தோட்டம் ஒன்றுக்குள் அசைந்துகொண்டிருக்கக்கூடும். அல்லது முகங்கள் காந்தக் காந்த கொச்சிக்காய்களை ஆய்ந்துகொண்டிருக்கக்கூடும். அரியம் நிதானமாக இறங்க முயற்சி செய்தான்.

கீழே இறங்கஇறங்க மலையிலிருந்த குளிர்ச்சி குறைந்து வெயில் கொளுத்தியெடுப்பதை அரியம் உணர்ந்தான். மரங்களின் அடர்த்தி குறைந்து கிறவல் தோண்டிய குழிகளுக்கிடையே நடந்து அவர்கள் கீழே இறங்கினார்கள். செந்நிறக் கிறவல் கற்களும் கூழாங்கற்களும் நிறைந்து கிடந்தன. அரியம் வியர்த்திருந்தான். அரியம் உடுத்தியிருந்த வெள்ளை சேட்டும் வேட்டியும் வியர்வையில் நனைந்திருந்தன. தன் வேட்டி சேட்டில் செம்பாட்டுநிறம் படிந்து கிடப்பதாக அரியம் உணர்ந்தான்.

அவர்கள் மலையின் அடிவாரத்துக்கு வந்து சேர்ந்திருந்தார்கள். பெரிய இத்திமரத்தின்கீழ் கிடந்த கல் ஒன்றில் கரும்பச்சைநிற காக்கி சேட்டும் சாரமும் கட்டிய ஒருவர் தோளில் ரைபிள் தொங்க குந்திக் கொண்டிருப்பதை அரியம் கண்டான். நாக்கைப் பற்களுக்குள் மடித்துப் பிடித்தபடி சிரிக்கும் அந்த சிரிப்பின் நட்பை மீண்டும் ஒரு தரம் அரியம் கண்டான்.

''பெத்தவா... வா...''

எழுந்து வந்த சிவா (செந்தணல்) அரியத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். எதிரெதிரே இருந்த கற்களில் அவர்கள் அமர்ந்து கொண்டார்கள். மனதில் ஒட்டாத விசாரிப்புகளை சிவா கேட்டுக் கொண்டிருந்தான். அரியத்தால், தான் ஏதோ சொல்லிக்கொண்டிருப்பதை மட்டும் உணரமுடிந்தது. நினைவுகள் தன் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை அரியம் உணர்ந்தே இருந்தான். மலையடிவாரத்துக்கு வந்த நேரம்தொட்டு ஏதோ ஒரு வலியின் முனகல் தனக்கு மிகஅருகில் கேட்டுக்கொண்டிருப்பதாகவே அரியம் உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த முனகல் வெறும் பிரமை இல்லை என்பதை அரியம் உணர்ந்தான். தன்னைச்சூழ அரியம் தடுமாற்றத்துடன் தேடினான். சிவா தன்னையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்ட அரியம் நிமிர்ந்து உட்கார்ந்தான். சிவா திரும்பவும் தன் பற்களுக்குள் நாக்கை மடித்துக் கடித்துக்கொண்டே சிரித்தான்.

சிவா எழும்பி கிறவல் அகழ்ந்த குழி ஒன்றை நோக்கி நடந்தான். கரும்பச்சைநிற அதிக பொக்கேட்டுக்கள் வைத்துத் தைத்த தடித்த காக்கிச்சேட்டை உரசியபடி ரைபிள் தொங்கிக்கொண்டிருந்தது. மற்ற இருவரும் கற்களில் அமர்ந்தபடி இருந்தார்கள். முதலில் தடுமாறிய அரியம் பின் எழுந்து சிவாவுக்குப் பின்னே போனான். சிவாவும் அரியமும் கொளுத்தியெடுக்கும் வெயிலில் கிறவல்குழிக்குப் பக்கத்தில் நின்றிருந்தார்கள். மரநிழலில் இருந்த குளிர்ச்சி இங்கு இல்லை. அருகிலிருந்த கிறவல் குழிக்குள்ளிருந்து வரும் முனகலை அரியம் துல்லியமாகக் கேட்டான்.

கிறவல் அகழும்போது வந்த பெரியதும் சிறியதுமான செந்நிறக்கற்கள் போட்டு வைத்திருந்த அந்தக் குழி வெயிலில் மினுமினுத்துக்கிடந்தது. அந்தக் கற்களின் மீது நிர்வாணமாக ஒரு உடல் கிடப்பதை அரியம் கண்டான். எதிர்பார்த்த ஒன்றுதான். நிர்வாணமாகக் கிடந்த உடல் வெயிலில் வெதும்பிக் கறுத்துக் கிடந்தாலும் அந்த நபர் நல்ல வெள்ளையாக இருந்திருக்க வேண்டும் என அரியம் நினைத்தான். உடல் முழுவதும் பழைய கறுத்த தழும்புகளுடன் புதிய சிவப்புத் தழும்புகளும் கிடந்தன. உடல் முழுவதும் சாம்பல்படிவாக மணலும் வெயிலில் மினுமினுக்கும் கிறவல் துணிக்கைகளும். குள்ளமாக இருந்த அந்த மனிதரை அரியம் இனங்காண முனைந்தான்.

''ஆர் எண்டு தெரியுதா...''

அரியம் இல்லை என்பது போல், அந்த நபரை வெறித்துப் பார்த்தபடி தலையசைத்தான்.

''யப்பான்...''

இந்திய ராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் முன்னாள் டெலோ போராளி. சொந்தப் பெயர் யாருக்கும் தெரியாது. குள்ளமாகவும் சிறுத்துக் கோடுபோன்ற கண்களும் கொண்டவன். யப்பான் என்ற பட்டப்பெயரால் அறியப்பட்டவன். இந்திய ராணுவ ஜீப் வண்டிகளில் கம்பீரமாகத் திரியும் அவன் உருவம், அரியத்தின் கண்கள் முன்னே வந்து நின்றது. திரியாய்ப் பக்கம் நடந்த கிளைமோர் குண்டுத்தாக்குதலில் இந்திய ராணுவத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து கொல்லப்பட்டதாகத்தான் அரியம் அறிந்திருந்தான். அந்தத் தாக்குதல் நடந்து ஒரு மாதத்துக்கு மேல் ஆகியிருக்கும் என்று அரியம் ஊகித்தான். இன்னும் உயிருடன் விட்டுவைத்திருக்கிறார்கள். எதற்காக என்றுதான் அரியத்துக்குப் புரியவில்லை. அரியம் அங்கிருந்து நகர முற்பட்டான்.

''கிளைமோர் வெடியோட இந்தியன் ஆமியே தெருவில பாதுகாப்புத் தேடி தவள்றான்... சிங்கன் துள்ளிப் பாஞ்சு... உருண்டு குறோளிங்கில காட்டுக்க வாறேர்... அதுவும் எங்கட காலடிக்க...''

அரியம் தன் கால்கள் பலமிழந்து நடுங்குவதை உணர்ந்தான். நடை இடர மரத்துக்குக்கீழ் வந்த அரியம், கல்லில் அமர்ந்துகொண்டான். வியர்வையில் தொப்பலாக நனைந்திருந்தான் அரியம். மரநிழலிலும் வெயில் தகித்தெடுப்பதை அரியம் உணர்ந்தான். எதிரே இருந்த கல்லில் சிவா வந்து அமர்ந்துகொண்டான்.

''நான் என்ன செய்ய வேணும்...''

தன் குரல் மிகப்பலவீனமாக இருப்பதை அரியம் உணர்ந்தான்.

''எங்களுக்கு திருகோணமலை நகரத்துக்குள்ளேயும் குண்டு வெடிக்கவேணும்... சும்மா வண்டிலுக்க சிலிண்டரை மறைச்சுவைச்சு அனுப்பிறதும்... இலக்கில்லாம வெடிக்கிறதிலயும் பிரியோசனம் இல்ல... ஏதாவது இலக்க குறிவைச்சுத் தாக்கவேணும்... கையெறிகுண்டு வெடிக்கவேணும்... நகரத்துக்குள்ளேயும் நாங்க இருக்கிறம் எண்டத... இந்திய ராணுவத்துக்குக் காட்டவேணும்... அது உன்னால முடியும்... நீ இருக்கிற இடத்துக்கு... காலடிக்க பொருள் வந்துசேரும்... இலக்கையும் நேரத்தையும் திகதியையும்... நீ தீர்மானிச்சுக் கொள்... நகரத்துக்குள்ள குண்டுவெடிக்கவேணும்... நாங்க யாரையும் நம்பமாட்டம்... காட்டிக்குடுக்க நினைச்சா யாராலேயும் யாரையும் காப்பாத்தமுடியாமப் போகும்... இந்தியனாமிட செல்லப்பிள்ள யப்பானைப் போல...''

அரியம் காலைச்சாப்பாடாவது சாப்பிட்டுவிட்டு வந்திருக்கலாம் என நினைத்தான். அன்னதானத்திலாவது சாப்பிட்டிருக்கலாம். தலைச்சுற்றல் அதிகமாக இருப்பதை அரியம் உணர்ந்தான். தான் குடித்த பிளேன்ரீ, டொபியின் இனிப்புடன் குமட்டலாக வெளியேவரத் துடிப்பதை அரியம் உணர்ந்தான். தன்னைக் கட்டப்படுத்த பிரயாசைப்பட்டான். தன்னைச்சூழ இருந்த மரங்களும் மலையும் மெல்லமெல்ல வேகமெடுத்துச் சுழல்வதை அரியம் கண்டான். இடையறாத சுழற்சியில் வெண்படலம் ஒன்று தன் கண்களை மூடுவதை அரியம் கண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியத்துக்கு நினைவு திரும்ப வந்தபோது வெயில் சற்றுத் தணிந்திருந்தது. தான் மாங்கனாய் நோக்கிப் போகும் வண்டிப்பாதை ஓரத்தில், மரநிழலில் கிடத்தப்பட்டிருப்பதைக் கண்டான். அரியம் எழுந்து உட்கார்ந்தான். தன்னைச்சூழ யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. தான் உயிருடன் இருப்பதை, தான் கிடத்தப்பட்டிருந்த கண்ணாமரத்தின் தண்டை நோண்டிப்பார்த்து உறுதிப்படுத்திக்கொண்டான். தான் தனிமையில் கைவிடப்பட்டிருப்பதை அரியம் ஊகித்துக்கொண்டான். ஆனால் தன்னைத் தூரத்திலிருந்து யாரோ நோட்டம்விட்டுக் கொண்டிருப்பது போலத்தான் அரியத்துக்குப்பட்டது. அரியம் எழுந்து மாங்கனாய் அம்மன் கோயிலை நோக்கி நடக்கத்தொடங்கினான்.

## 5.8

திருகோணமலை ஆதார வைத்தியசாலை ஆழ்ந்த உறக்கத்திலிருப்பது போல அமைதியாக இருந்தது. மாலைக் கருக்கல் வைத்தியசாலையை இன்னும் முற்றாக மூடியிருக்கவில்லை. சில மின்குமிழ்கள் மட்டும் ஆங்காங்கே ஒளிரத்தொடங்கியிருந்தன. தரையில் வந்து விழும் கடலலைகளின் தொம்தொம் என்னும் சத்தம்மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. பற்களின் குறுக்குவெட்டுப் படங்கள். பாகம் குறிக்கப்பட்ட படங்கள். தடித்த அட்டைப்படங்கள். பற்கள் பாதுகாப்புத் தொடர்பான விளம்பரங்கள். டொக்டர் ஞானி தனது அறையின் சுவர்களில் இருந்த படங்களையும் விளம்பரங் களையும் திரும்பத்திரும்ப முதல்தடவையாகப் பார்ப்பதுபோல பார்த்துக்கொண்டிருந்தார். முதல்முதலாக ஆர்வத்துடன் வாசிப்பதுபோல வாசித்துக்கொண்டிருந்தார்.

ஏதோ நினைத்தவராகத் தன் உடலிலிருக்கும் தழும்புகளை அன்றுதான் புதிதாகப் பார்ப்பது போல பார்க்கத்தொடங்கினார் ஞானி. அம்மைப்பால் ஊசி போட்டதால் ஏற்பட்ட தழும்பைத் தன் சேட்டுக்கு மேலால் தடவிப் பார்த்துக்கொண்டார். தந்தையிடம் அடிவாங்கிய தழும்புகள். விளையாடும்போது விழுந்த தழும்புகள். ஆசிரியரிடம் அடிவாங்கிய தழும்புகள். கொய்யா மரத்திலிருந்து விழுந்ததால் தொடையில் ஏற்பட்ட பெரிய தழும்பு. சைக்கிள் ஓடக் கற்றுக்கொண்டபோது கன்றுக்குட்டியில் மோதி விழுந்ததால் ஏற்பட்ட தழும்பு. சண்முகதாசனின் ரகசியக்கூட்டங்களில் கலந்து கொண்டதற்காகப் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது பொலிசாரிடம் அடிவாங்கிய தழும்புகள். ஒரு துப்பாக்கிக்குண்டுக்கு முன்னால் இவை எல்லாம் அர்த்தமற்றதாகிவிடும்போல இருந்தது அவருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்னலுக்கு வெளியே தன் பார்வையைப் போகவிட்டார் ஞானி. ஆலமரத்தின் கிளைகள் சிவப்புநிறப் பழங்களுடன் ஆடிக்கொண்டிருந்தன. மைனாக்களினதும் புனில் குருவிகளினதும் இடைவிடாத இரைச்சல் அதிகமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. ஆலமரத்தின் கரும்பசியநிற இலைகளுக்குள் அவை கண்ணுக்குத் தெரியாது மறைந்துகொண்டு இரைச்சலை எழுப்பிக்கொண்டிருந்தன. கதிரையிலிருந்து எழுந்து யன்னலை நோக்கிப் போனார் டொக்டர் ஞானி.

ஆதார வைத்தியசாலையின் இரண்டாம் மாடியிலிருந்த தனது அறையின் யன்னலில் டொக்டர் ஞானி நிழல் உருவமாக நின்றிருந்தார். ஆல மரத்துக்குக் கீழேயிருந்த சைக்கிள் செட்டில் அவரது ரலி சைக்கிள் மற்ற சைக்கிள்களுடன் நின்றிருந்தது. ஆஸ்பத்திரி வளாகத்திலும் சரி, வெளிவீதியிலும் சரி, சந்தேகத்திற்கிடமானவர்களது நடமாட்டத்தை அவரால் காணமுடியவில்லை. நோயாளிகள், நோயாளிகளைப் பார்க்க வந்தவர்கள், பாதசாரிகள் என இயல்பான நடமாட்டங்களைத்தான் அவரால் காணமுடிந்தது. தான் தீவிரமாக கண்காணிக்கப்படுவதையும் பின்தொடரப்படுவதையும் அவர் உணர்ந்திருந்தார். லேபர் ஒவசியார்தான் அவரிடம் வந்து சொன்னார், வெளியில திரியிற ஆக்கள்ட நடமாட்டம் அவ்வளவு நல்லதாக இல்லை. கவனமாக இருங்கள். நேரம்பிந்தி வழமையாகப் போகும் பாதையைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுப் போனார். திரும்பவும் தனது கதிரையில் வந்து அமர்ந்துகொண்டார் ஞானி.

தன் காக்கிப்பையிலிருந்த சில கோவைகளை வெளியே எடுத்துத் தன் மேசையில் போட்டார். வன்செயலால் பாதிக்கப்பட்ட தம் வீடுகளுக்கு இழப்பீடு கோரும் அரச ஊழியர்களது ஓட்டைக்காட் விண்ணப்பங்கள். காணாமல்போனவர்களைத் தேடும் தாய்மாரின் அவலக்குரல்களைச் சொல்லும் கடிதங்கள். சத்திரச்சிகிச்சைக்காக உதவிகோரும் விண்ணப்பங்கள். இரண்டு மாடுகளாவது வாங்குவதற்கு உதவிசெய்யுமாறு கோரும் சுயதொழில் விண்ணப்பங்கள். கிராமப் புறங்களில் உயிருக்கு உத்தரவாதம் இல்லாதிருக்கும் இளைஞர்கள், யுவதிகளை நகரப்புறங்களுக்குக் கல்விக்காகவோ தொழிலுக்காகவோ நகர்த்துவதற்கு முனையும் பெற்றோர்களின் கதறல்குரல்களைச் சொல்லும் கடதாசிகள். கடைசியாக இப்போது அவருக்குத் தலையிடியையும் உயிர் அச்சுறுத்தலையும் விடுத்துக்கொண்டிருக்கும் ஆவணம். மூதூர் வில்லுக்குளத்தை அண்டி நடந்த புலிகள் இந்திய ராணுவச் சண்டைக்குப்பின், இந்திய ராணுவத்தால் வன்புணர்வுக்கு உள்ளான பெண்களின் துயரங்கள் அடங்கிய ஆவணங்கள். டொக்டர் ஞானி தன் இருக்கையில் தலையைப் பின்னால் சாய்த்து விட்டத்தைப் பார்த்தபடி கண்களை மூடிக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடிய கண்களுக்குள் நிறைய முகங்கள் ஒன்றன்பின்னொன்றாக வந்து போய்க்கொண்டிருந்தன. பல் பேத்தையால் வீங்கிய யுவதியின் முகம் ஒன்று. பல்சூத்தையால் வலி தாங்காது அழும் சிறுவன் ஒருவனின் முகம். பிச்சைச்சம்பளம் அல்லது அரச உதவியை நாடும் பிள்ளைகளால் கைவிடப்பட்ட, துயரங்களைக் கண்ணில் தேக்கிவைத்துக்கொண்டு புன்னகைக்கும் மூதாட்டியின் முகம். தன் வாழ்நாள் முழுவதுமான உழைப்பைக் கொட்டிக் கட்டிய வீடு, வன்செயலில் அழிந்து போக, கொம்பன்சேஸன் கேட்டு விண்ணப்பித்த அரச ஊழியர் ஒருவரின் அப்பாவித்தனமான, பரிதவிக்கும் கண்கள். கல்வியைத் தொடர்வதற்காகக் கிராமப்புறத்திலிருந்து நகரத்துக்குவரத் துடிக்கும் முன்னாள் குழந்தைப்போராளி ஒருவனின் முகம். மலம் கழிக்கக்கூடமுடியாது அவதியுறும் முள்ளந்தண்டில் செல்துண்டு தங்கிவிட சத்திர சிகிச்சைக்கு உதவிகோரும், சதா வேதனையை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கும் முகம். பைலைமூடித் தன் காக்கிப்பைக்குள் வைத்துக்கொண்டார். பையைத் தன் தோள்களில் கொழுவிய டொக்டர் ஞானி அறையைவிட்டு வெளியேறிப் படிக்கட்டுக்களில் இறங்கத்தொடங்கினார்.

வைத்திய சாலையின் சைக்கிள் பார்க்கிலிருந்து சைக்கிளை உருட்டிக்கொண்டு வெளியே வந்த ஞானி, சைக்கிளில் ஏறிப் பெடலை மிதிக்கத்தொடங்கினார். தான் வழமையாகப் போகும் டயஸ் ஸ்ரீட்டுக்குள்ளால் போகும் வேகமே முதலில் அவருக்கு முனைப்பாக இருந்தது. பின் மனதை மாற்றிக்கொண்டு மனையாவெளி சுற்றி, லவண்டர்லேனுக்குள்ளால் தன் வீட்டுக்குப் போவதென ஞானி தீர்மானித்தார். சைக்கிள் மனையாவெளி நோக்கிப் போனது. வீதி மெல்ல இருளத் தொடங்கியிருந்தது.

டொக்டர் ஞானி மனையாவெளி சுற்றி லவண்டர்லேனுக்குள் தன் சைக்கிளை மிதித்துப் போனார். பின்னால் ஒரு வாகனத்தின் அக்சிலேட்டர் மிதித்து உறுமும் ஒலி, பின் அமைதியாகும் ஒலி என மாறிமாறிக் கேட்டுக்கொண்டிருந்தன. கெட்லைட்டின் ஒளி அவரைத் தாண்டிச்சென்று கடலில் பாய்வதும் பின் அணைவதுமாக இருந்தது. சட்டென்று வேகமெடுத்த வாகனம் தன் கெட்லைட்டை அணைத்து விட்டுப் பின்புறமாக டொக்டர் ஞானியின் சைக்கிளைத் தாண்டிப் போய் நின்றது. வெள்ளைவேன். அதன் பக்கக்கதவு திறக்கப்பட்டுத் தாடியுடன் ஒருவர் இறங்கினார்.

''தோழா...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டகாசமான கூவல் அழைப்பு. டொக்டர் ஞானிக்கு மிக நெருக்கமான பரிட்சயமான குரல். டொக்டர் ஞானி இருளில் சைக்கிளைவிட்டு இறங்கிநின்றார். பின் வெள்ளைவேன் வேகமெடுத்து, கெட்லைட்டைப் போட்டுக்கொண்டு டொக்கயாட் றோட்டில் திரும்பிப்போனது. டொக்டர் ஞானியின் சைக்கிள் லவண்டர் லேனில் தனியே விழுந்துகிடந்தது.

## 5.9

அம்மாவின் பழைய முகத்தைத் தன் நினைவுக்குள் கொண்டுவர முனைந்தாள் நித்திலா. மூக்குத்தி குத்தி, கொண்டை போட்டு, கிரீடம் வைத்தது போல காகிதப்பூக்கள் வைத்துக் கம்பிப்பின்னல் கொண்டையில் குத்தி, எடுத்த பிளாக் அன்ட் வைட் போட்டோவிலிருக்கும் தன் அம்மாவின் முகத்தை நினைவுக்குள் கொண்டுவர நித்திலா பிரயத்தனப்பட்டுக்கொண்டு இருந்தாள். அம்மாவின் பழைய முகம் எவ்வளவு பிரயத்தனப்பட்டும் தன் நினைவுக்குள் சிக்கவில்லை எனக் கவலைகொண்டாள். தெளிவாகக் காட்சிகளை ஒளிபரப்பிக் கொண்டிருந்த தொலைக்காட்சி, சட்டெனப் புள்ளியடித்து இரைந்து முற்றாகக் கறுப்பாகிப்போவதுபோல, தன் நினைவுகள் இருளடைவதை நித்திலா உணர்ந்தாள். சட்டென்று மூடியிருந்த கண்களைத் திறந்தாள். கண்களுக்குள் வெளிப்புறக் காட்சிகள் எதுவும் சட்டென்று தோன்றவில்லை. எல்லாம் இருளடைந்து துலக்கமற்ற வெண்புகையாகவே காட்சிகொடுத்தது அவளுக்கு. தன் மனதைப்போல எல்லாம் இருளடைந்துவிட்டதுபோலத்தான் இருந்தது நித்திலாவுக்கு. நீண்டநேரம் தன் கண்களை மூடிக்கொண்டு இருந்திருக்கக்கூடாது என நினைத்தாள். மீண்டும் தன் கண்களைமூடித் தலையைச்சிலுப்பித் தன் நினைவுகளைக் கலைத்துக்கொண்டு கண்களைத் திறந்தாள் நித்திலா. தன் கண்களுக்கு முன்னே காட்சிகள் விரியத்தொடங்குவதை நித்திலா கண்டாள்.

தனக்கு முன்னே சற்றுத்தொலைவில் கெவுளியாமுனை வெளிச்சவீட்டுக் கோபுரம் அடர்ந்த மரங்கள்சூழ நடுவில் உயரமாக எழுந்து நட்டுக்கொண்டிருப்பதை நித்திலா பார்த்துக்கொண்டிருந்தாள். கொட்டியாரக்கடல் அமைதியாக, நீலமாக நீண்டு பரந்துகிடந்தது. பாதாளமலையை ஒட்டிக் கோணேசமலைக்குப் பின்னே பொன்மஞ்சள் நிறத்தில் காலைச் சூரியன் எழுந்துகொண்டிருந்தான். என்றோ ஒரு நாள் இந்தக் காட்சிகளெல்லாம் தனக்கு அன்னியமாகிப்போய்விடும் என்பதை நித்திலா உணர்ந்துதானிருந்தாள். அவள் இதழ்களுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மெல்லிய புன்னகை மலர்ந்து அடங்கியது. சட்டெனத் தன் உதடுகளைச் சுழித்து, முகத்தைக் கோணலாக்கித் தன் புன்னகையை மறைத்துக்கொண்டாள். தன் இதழ்களில் வெடிக்கும் புன்னகை யாரையாவது சலனப்படுத்தித் தன்பக்கம் திருப்பி விட்டுவிடக்கூடாது என்பதில் நித்திலா எப்போதும் கவனமாக இருந்துவந்தாள். அவள் முகம் உக்கிரமாக மாறத்தொடங்கியிருந்தது. மூதூர் ஜெட்டியிலிருந்து திருகோணமலை நகருக்குப் போகும் லோஞ்ச் தயாராக நின்றுகொண்டு தானிருந்தது. இன்னும் பாதுகாப்புக் கெடுபிடிகள் முடிந்தபாடாக இல்லை. இந்திய ராணுவச்சிப்பாய்கள் அங்குமிங்கும் நகர்ந்து கொண்டுதான் இருந்தார்கள். ஆறுமணிக்குப் புறப்படவேண்டிய லோஞ்ச். மணி ஆறரையைத் தாண்டிக்கொண்டிருந்தது. பயணிகளை உள்ளேவிடும் எந்த அறிகுறியும் காணப்படவில்லை. இது வழமையானதுதான் என்பது நித்திலாவுக்குத் தெரியும், அவள் அமைதியாக இருந்தாள்.

நித்திலா தன் பைக்குள்ளிருந்து நாற்பது தாள், ஒற்றை ரூல் கொப்பியை வெளியே எடுத்தாள். கொப்பியை விரித்துப் பக்கங்களைப் புரட்டத்தொடங்கினாள். கோணல்மாணலான புரியாத ஆங்கில வார்த்தைகள் கிறுக்கப்பட்டுக்கிடந்தன. அம்புக்குறிகளும் வட்டங்களும் படங்களும் வரையப்பட்டுக்கிடந்தன கொப்பியின் பக்கங்களில். திருகோணமலை ஆதார வைத்தியசாலை கொடுத்திருக்கும் கிளீனிக் கொப்பி அது. அவளுக்கு மனநிலை சரியில்லை. இப்படித்தான் அந்தக் கொப்பி சொல்கிறது. வாராவாரம் மாத்திரைகளைப் பெறுவதற்காக அவள் நகரத்தை நோக்கிப் போய்க்கொண்டுதான் இருக்கிறாள். அவளுக்கு இந்தப் பயணங்கள் பிடித்திருந்ததால் நேரத்துடனேயே ஜெற்றிக்கு வந்துவிடுவாள் நித்திலா. நகரத்துக்குப் போகும் அவசரத்திலிருந்த பயணிகள் முண்டியடித்து லைனைக் குழப்பிக்கொண்டு நின்றார்கள். தடி வைத்திருந்த இந்திய ராணுவச்சிப்பாய் ஒருவன் போலீன் போலீன் எனக் கத்தியபடி தடியை அங்குமிங்கும் சுழற்றிக்கொண்டு அலைந்துகொண்டிருந்தான். சனம் அவனைப் பொருட்படுத்துவதாக இல்லை.

நித்திலா ஒதுங்கியே நின்றாள். எப்படியும் பயணிகளை ஏற்றிக் கொண்டுதான் லோஞ்ச் போகும். நித்திலா முண்டியடிக்கத் தயாராக இல்லை. நித்திலா தன் சட்டையின் இடப்பக்க கொளர் நுனியைத் தடவிப் பார்த்துக்கொண்டாள். சட்டைக் கொளருக்குள் தடிப்பாக மெல்லிய கண்ணாடி இழையினாலான குப்பி அமைதியாக இருந்தது. தன் கைப்பையிலிருந்த சாப்பாட்டுப் பொதியையும் நித்திலா தொட்டுப்பார்த்துக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெட்டிக்குள் சட்டென உள்நுழைய முடியாதவாறு முட்கம்பிவேலி அடித்து, வாயிலை மறித்து இரும்புக்கம்பி பெரியர் போடப்பட்டிருந்தது. அந்த இரும்புக்கம்பி பெரியரை ஒரு இந்திய ராணுவச்சிப்பாய் காவல்காத்து நின்றிருந்தான். மெல்ல சூரிய ஒளி முகத்தைச் சுடத்தொடங்குவதை நித்திலா உணர்ந்தாள்.

இந்திய ராணுவச்சிப்பாய் கயிற்றை அவிழ்த்து மெல்ல பெரியர்கம்பியை உயர்த்தத் தொடங்கினான். சனம் முண்டியடித்துக் கொண்டு தங்கள் பொதிகளையும் பயணப்பைகளையும் சுமந்தபடி ஜெற்றிக்குள் உள்நுழையத்தொடங்கினர். இந்திய ராணுவச்சிப்பாய்கள் பொதிகளைச் சோதித்துப் பயணிகளை உள்ளே அனுமதிக்கத் தொடங்கினார்கள். நித்திலா அமைதியாகக் கடலைப் பார்த்தபடி இருந்தாள்.

''ஏய்.. லடுக்கி... ஏய்... கொஸ்பிட்டல் லடுக்கி... சலோ... சலோ...''

நித்திலாவுக்குத் தெரியும் அவன் தன்னைத்தான் விளிக்கிறான் என்று. அவள் அவனது குரலைப் பொருட்படுத்தாது பெரியர் வாசல் தாண்டிப் போனாள். நித்திலாவின் தோளில் தொங்கிக்கொண்டிருந்த கைப்பையை அவளது உடலுடன் சேர்த்து அமத்தி பரிசோதித்தான் இந்திய ராணுவச்சிப்பாய். சாப்பாட்டுப்பார்சல் அவள் உடலுடன் அண்டுப்படுவதை நித்திலாவால் உணரமுடிந்தது. நித்திலா ஜெற்றிக்குள் நுழைந்தாள்.

ரெயில்வே தண்டவாள இரும்புக்கேடர்களைக் கடலுக்குள் நட்டு, கடல்பரப்புக்கு மேலே சிலிப்பர்கட்டைகள் பரவியிருந்த நடைபாதை வழியாக நித்திலா நடந்தாள். சில இடங்களில் சிலிப்பர்கட்டைகள் உடைந்து கடலுக்குள் தொங்கிக்கொண்டிருந்தன. கீழே கூச்சம் காட்டுவதுபோல கடல்நீர் இரும்புக்கேடர்களில் முட்டி சலசலத்துக்கொண்டிருந்தது. நித்திலா சிலிப்பர்கட்டைகளில் நிதானமாக நடந்துபோனாள். முண்டியடித்துப்போன சனங்கள் லோஞ்சின் கீழ்த்தளத்தில் தம்மை அடைத்துக்கொண்டார்கள். அது அவர்களைப் பாதுகாக்கும் என நம்பினார்கள். மேல்தளத்தில் சில ஆண்கள் மட்டும் நின்றிருந்தார்கள். நித்திலா தன்னை எதற்குள்ளும் குறுக்கிக்கொள்ளவோ அடைத்துக்கொள்ளவோ விரும்பாதவள். நித்திலா ''வில்லுக்குளத்துப் பறவை''. நித்திலா லோஞ்சின் மேல்தளத்தின் கம்பி ஒன்றை ஒட்டியபடி, கடல்காற்றைச் சுவாசித்தபடி நின்றிருந்தாள். இஞ்சின் முடக்கிவிடப்பட லோஞ்ச் நகரத் தொடங்கியது. இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணுவச்சிப்பாய்களை, சிலிப்பர்கட்டையாலான நடைபாதையை ஒதுக்கிவிட்டுவிட்டு நகர்ந்தது லோஞ்ச். கடல்நீர்சூழ லோஞ்ச் திருகோணமலை நகரை நோக்கி நகர்ந்துபோனது.

கடல்காற்றுத் தழுவ நித்திலாவுக்கு மீண்டும் அம்மாவின் நினைவு வந்தது. அம்மா பழைய சோற்றுக்குள் தண்ணீரைவிட்டுப் பிசைகிற காட்சி கண்களின் முன்னே வந்து நின்றது. அம்மாவின் வேதனை நிறைந்த முகம் அவள் நினைவுகளில் நிரந்தரமாகப் படிந்துவிட்டது. நித்திலாவின் வீடு வில்லுக்குளத்தை ஒட்டிய கிறவல்குழி கிராமத்தில் தான் இருந்தது. பிலாமரங்களும் தென்னைமரங்களும் மாமரங்களும் சூழ இருந்த வீடு. அந்த வீட்டை ஒரு தீவு போல ஆக்கி விட்டிருக்கும் சூழ இருந்த வயல்வெளிகள். அவளது கால்கள் ஓடி ஆடிய தடங்கள் விழுந்து, அவள் உடலுடன் சுவரிப்போன நிலம் அவளுடையது. தந்தையும் தாயும் அவளைச் சிறகுகளுக்குள் பொத்திப்பொத்தித்தான் வளர்த்தார்கள்.

விடுதலைப்புலிகளின் கிளைமோரில் சிக்கியது இந்திய ராணுவ ரக் வண்டி ஒன்று. அது அவர்களது கிராமத்தை ஒட்டிப்போகும் வீதியாக இருந்தது. அந்திக்கருக்கலைக் கிழித்துக்கொண்டு அதிர்ந்தது அந்த வெடிப்போசை. வெடிப்போசையின் அதிர்வு காதுகளுக்குள் அடங்கும் முன்னரே இந்திய ராணுவம் அவர்களது ஊரைச் சுற்றி வளைத்துக்கொண்டது. அவர்களது ஊரை மட்டுமல்ல பக்கத்து ஊர்களையும் சேர்த்து வளைத்துக்கொண்டது இந்திய ராணுவம். அந்தக் கிராமங்கள் நாய்களின் ஊளை ஒலிகளுக்குள் முடங்கிக்கிடந்தன. தொடர்ச்சியான துப்பாக்கி வெடிப்போசைகள் அந்தக் கிராமங்களைச்சூழ கேட்டுக்கொண்டே இருந்தன. குப்பி விளக்கை அணைத்துவிட்டுத் தந்தை விறாந்தையில் விழித்தபடி கிடக்க, உள்ளறைக்குள் அம்மாவும் நித்திலாவும் உறக்கமற்றுக் கிடந்தார்கள். அவர்களது வளவுக்குள் இந்திய ராணுவத்தின் சப்பாத்துக் காலடிகள் கேட்கத் தொடங்கியபோது நேரம் நள்ளிரவை நெருங்கியிருந்தது.

விறாந்தையில் இந்திய ராணுவச்சிப்பாய்களின் சப்பாத்துக்கால் களுக்கிடையில் தந்தை சிக்கிக் கதறியபோதும் அவர்கள் அறையின் இடவு ஒன்றிற்குள் முடங்கிக்கிடந்தார்கள். அந்த ராணுவச்சிப்பாய்கள் அறைக்கதவை உடைத்துத் திறந்துகொண்டு உள்ளே புகுந்தார்கள். ஒருவர் மாறி ஒருவராக அவர்களது உடல்கள் மீது புரண்டு எழும்பிப்போனார்கள். போகும்போது ஒரு மிருகம் திரும்பிப் பார்க்காது, தன் துப்பாக்கியைப் பின்புறமாகத் திருப்பி உணர்வற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்த நித்திலாவினதும் தாயினதும் பக்கமாக வெடிக்கச்செய்து விட்டுப் போனது. சரமாரியாக வெடித்த துப்பாக்கிக்குண்டுகள் தரையிலும் சுவர்களிலும் தெறித்துப் பறந்தன.

இலக்கில்லாது வெடித்துப் பறந்த அந்தக் குண்டுகள் அன்று அவர்களைத் துளைக்காது போனது துரதிஸ்டவசமானது என்றுதான் நித்திலாவுக்குத் தோன்றியது. அன்று வெடித்துச் சிதறிய குண்டுகள் தங்கள் உடல்களைச் சல்லடையாகத் துளைத்துப்போயிருந்தால், அந்த இரவுடனேயே எல்லா வலிகளும் துன்பங்களும் அடங்கிப் போயிருக்கும் என நினைத்தாள் நித்திலா. வெடித்துச் சிதறிய துப்பாக்கிக்குண்டுகளில் ஒன்று எதிலோ பட்டுத் தெறித்துத் தாயின் கண்களில் ஒன்றைத் தாக்கிப்போனது. ஊரே அலறித்துடித்துக்கிடக்கும் போது யாரை உதவிக்குக் கூப்பிடுவது எனத் தெரியாது ஒடுங்கிக் கிடந்தார்கள் அவர்கள். தொடைகளின் வழியே இரத்தப்பெருக்கு ஒருபுறம், உடலின் வலிகளும் வேதனைகளும் மறுபுறமாக அவர்கள் விடியவிடிய கதவிடுக்கொன்றுக்குள் கிடந்தார்கள். நீண்ட நாட்கள் மருத்துவமனையில் கிடந்து மீண்டு வந்தார்கள் நித்திலாவும் அம்மாவும்.

லோஞ்சின் தளம்பல் ஆட்டம் அதிகமாகத் தொடங்கியது. கம்பியை வலுவாகப் பிடித்துக்கொண்டாள். தலைசுற்றி வாந்திவருவதுபோல இருந்தது. தன் தோளில் தொங்கிய பையிலிருந்த தேசிக்காயை எடுத்துக் கசக்கி முகரத்தொடங்கினாள். லோஞ்ச் பாதாளமலையை ஒட்டி நகர்ந்துகொண்டிருந்தது. ஆழமறியாத அந்தக் கடல்பரப்பில் பெரிய கப்பல்கள் போனாலே தளம்பி ஆடித்தான் போகுமாம் எனக் கேள்விப்பட்டிருக்கிறாள் நித்திலா. எத்தனை தடவை இந்தக் கடற்பயணத்தை நித்திலா செய்திருப்பாள், ஆனாலும் பாதாளமலையை அண்டி லோஞ்ச் போகும்போது தலைசுற்றலும் வாந்திக்குணமும் இருக்கத்தான்செய்கிறது என நினைத்தாள். லோஞ்சின் தளம்பல் ஆட்டம் குறைந்திருந்தது. லோஞ்ச் பாதாளமலையைக்கடந்து நகரைநோக்கிப் போகத்தொடங்கியது.

தந்தை அவர்களிடமிருந்து தூரமாகிப் போனார். வயல்காடுகளே தஞ்சமெனக் கிடக்கத் தொடங்கிவிட்டார். அம்மா வீட்டுக்குள் முடங்கிவிட்டாள். அவள் முகம் கோரமாகிவிட்டது. ஒரு கண் நிரந்தரமாகப் பார்வையிழந்து கூலமாகிவிட்டது. மூக்குத்தி கிழிந்து மூக்கு பிய்ந்து வடுவாகிவிட்டது. கன்னங்கள் முழுவதும் வடுக்களாகிப் போயின. தாயின் முகத்தைத் தன் நினைவுகளுக்குள் மீண்டும் கொண்டுவர முனைந்தாள் நித்திலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோஞ்ச் நகர ஜெற்றியை அண்டி நின்றது. நகர ஜெற்றியில் இலங்கை பொலிஸார்தான் காவல் நின்றார்கள். சனம் மீண்டும் முண்டியடித்துக்கொண்டு இறங்கியது. நித்திலா நிதானமாக இறங்கி இன்னகாபர் வீதி வழியாக நடக்கத்தொடங்கினாள். எதிரே ஒன்றன்பின்னொன்றாக வாகனங்கள் தொடராக வந்துகொண்டிருந்தன. எல்லா வாகனங்களும் புதிய வாகனங்களாக இருந்தன. மகேந்திரா ஜீப்புக்களும் டாட்டா பஸ்களும் அவளைக் கடந்துபோயின. வடக்குக்கிழக்கு மாகாணசபைக்காக இந்தியா வழங்கிய வாகனங்கள் அவை. வெலிங்டன்அப்றோஜ் வீதிக்குள்ளால் வந்த நித்திலா, சிவன் கோவிலடிக்குப் போகும் வீதியை நோக்கி நடந்தாள். நித்திலா சரஸ்வதி தியட்டரை இலக்குவைத்து நடந்துகொண்டிருந்தாள். சாப்பாட்டுப்பார்சலுடன் ஆஸ்பத்திரிக்குப் போகமுடியாது. அதைக் கொண்டு அலைந்தும் திரிய முடியாது. சாப்பாட்டுப்பார்சலை அந்த அண்ணாவிடம் சேர்ப்பித்துவிட்டுப் பின் ஆஸ்பத்திரிக்குப் போவது என முடிவெடுத்தாள்.

பொறுப்பாளர் இந்தமுறை அந்த அண்ணாவைக் கடுமையாக எச்சரிக்கும்படிதான் சொல்லி அனுப்பிவைத்தார். முதல் தடவை கொண்டுவந்து கொடுத்த பார்சல் இன்னமும் பிரிக்கப்படவில்லை எனக் கோபப்பட்டார். உயிரின் பெறுமதியை உணர்த்தும்படிதான் சொல்லி அனுப்பியிருந்தார். கோபப்படுவதற்கான முகமாற்றம், உடலில் ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய இறுக்கம் பற்றியெல்லாம் நித்திலா சிந்தித்தபடி நடந்துகொண்டிருந்தாள். சிவன் கோவிலடிக்குப் போகும் வீதியில் நடக்கத்தொடங்கினாள் நித்திலா.

நித்திலா கனகம் மில் மார்க்கட்டை நெருங்கியபோது இந்திய ராணுவச்சிப்பாய்களின் நடமாட்டம் அதிகமாக இருப்பதைக் கண்டாள். முதலில் திரும்பி வேறு வீதியால் போகலாம் எனத்தான் நித்திலா நினைத்தாள். அவர்கள் பார்வையில் பட்டபின் திரும்புவது வீண் சந்தேகத்தை உண்டுபண்ணக்கூடும் என நினைத்தாள். இயல்பாக கனகம் மில் மார்க்கட்டைத் தாண்டிப்போக நித்திலா முனைந்தாள். தனக்குப் பின்னே கேட்கும் நாயின் குரைப்பொலியை நித்திலா பொருட்படுத்தவில்லை. தன் தோளில் தொங்கும் பையை யாரோ பின்னாலிருந்து இழுப்பதுபோல இருந்தது நித்திலாவுக்கு. இந்திய ராணுவச்சிப்பாயின் கட்டுப்பாட்டையும் மீறி மோப்ப நாய் தன் பையை இழுப்பதைக் கண்டாள். நாய் அவள் மீது பாய்ந்து பிறாண்டி பாவாடையை உருவி இழுத்து விழுத்தியது. பையைத் தன் பற்களால் கிழித்துச் சாப்பாட்டுப் பார்சலை உதறி எறிந்தது. கனகம் மில் மார்க்கட் முன் வீதியில் சாப்பாட்டுப் பார்சலுக்குள்ளிருந்த கைக்குண்டு உருண்டு போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றி நின்ற இந்திய ராணுவச்சிப்பாய்கள் உசாரானார்கள். நித்திலா தன் சட்டை கொலரை இழுத்துத் தன் கடைவாய்ப் பற்களுக்குள் வைத்துக் கடித்தாள். பற்களுக்கிடையில் கண்ணாடி இழையாலான குப்பி நொறுங்குவதை மட்டும் அவளால் உணரமுடிந்தது. நித்திலா கண்களை மூடிக்கொண்டாள். மூக்குத்தி குத்தி, கொண்டை போட்டு, கிரீடம் வைத்தது போல காகிதப் பூக்கள் வைத்து, கம்பிப்பின்னல் கொண்டையில் குத்தி, எடுத்த பிளாக் அன்ட் வைட் போட்டோவிலிருக்கும் அம்மாவின் பழைய முகத்தை நித்திலா தன் நினைவுகளுக்குள் கொண்டுவந்திருந்தாள்.

## 5.10

மீண்டும் ஒரு தடவை பொத்திப்பிடித்த கைகளுக்குள் உலோகத்தினால் ஏற்பட்ட வியர்வையின் கசிவை அரியம் உணர்ந்தான். சிவன் கோவில் மதில் சுவரில் முதுகைச் சாத்தி அமர்ந்திருந்தான் அரியம். நேரம் இரவு எட்டுமணியை நெருங்கியிருக்கவேண்டும். டயர் எரியும் கனதியான மணம் அவன் நாசியை அடைத்துக் கொண்டிருந்தது. சிவன் கோவில் மதிலுக்கும் தந்தை செல்வாவின் சிலைக்கும் இடைப்பட்ட வெளியில் நரிக்குறவர் சமூகம் கிழிந்து கந்தலாகிப்போன தங்கள் துணித்துண்டுகளால் கூடாரம் அடித்துத் தங்கியிருந்தார்கள். குழந்தைகள் அங்குமிங்கும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். கூடாரத்துக்கு வெளியே ஆண்கள் பீடிபுகைத்துக் கொண்டு தங்கள் மொழியில் பேசிக்கொண்டிருந்தார்கள். நகரத்தில் அவர்களுக்கு மலிவாகக் கிடைக்கக்கூடிய விறகாக டயர் மட்டும் தான் இருந்தது. கடும் புகைக்கு மத்தியில் நீலச்சுவாலையுடன் டயர்த்துண்டுகள் எரிய அடுப்பில் ஏதோ உணவு அவிந்துகொண்டிருந்தது. சனநடமாட்டம் குறைவதற்குள் அந்தக் குண்டை வெடிக்க வைத்துவிடுவது என்ற முனைப்பில் இருந்தான் அரியம்.

அரியம் குண்டை வெடிக்கவைப்பதற்கான இலக்காக வடக்குக் கிழக்குமாகாண ஆளுநர் செயலகத்திற்கு எதிரே இருந்த சில்ரன் பாக்கைத்தான் தெரிவுசெய்திருந்தான். அதுதான் அவனுக்கு மிக அண்மித்ததாக இருந்தது. குண்டை வெடிக்கவைத்ததும் வேகமாகத் தியட்டருக்குத் திரும்பிவிடமுடியும். வீதிகளில் சனநடமாட்டம் இருக்கும் போது குண்டை எறிந்துவிட்டு இயல்பாக நடந்துவிடலாம். ஓடத் தேவையில்லை. எந்த உயிர்ச்சேதமும் இருக்காது. இரவில் சில்ரன்பாக் பக்கமாக சனநடமாட்டம் இருக்காது. அரியம் எழுந்து கலாச்சார மண்டபத்தின் ஓரமாக சில்ரன்பாக்கை நோக்கி நடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொக்டர் ஞானி கடத்தப்பட்டுக் காலம் நகர்ந்து கடந்துபோய்க் கொண்டிருந்தது. அவர் பற்றிய எந்தத் தகவலும் இதுவரை தெரியவில்லை. அவரைக் கொன்றிருப்பார்கள் என்றுதான் அரியத்துக்குத் தோன்றியது. அவரது அலுவலகமும் எரிக்கப்பட்டுவிட்டது. அவர் மனதில் சுமந்த மக்களின் பிரச்சினைகள் அவருடனும் அலுவலக எரிப்புடன் எழுத்தாவணங்களும் மறைந்துபோயின. மனதிலிருந்த அவரது முகமும் கரைந்துபோவதுபோலத்தான் அரியத்துக்குத் தோன்றியது. அவரைக் கடத்தி, "போட்டது" நாங்கள்தான் என அவரது நண்பர்களே கெக்கட்டம்விட்டுச் சிரித்துத்திரிவதாகக் கதைகள் உலாவுகின்றன. கையிலிருந்த கைக்குண்டின் கனம் அதிகமாவதுபோல அரியம் உணர்ந்தான். அரியம் மதகுக்குள் இறங்கி றோட்டைக் கடந்துபோனான். முதல்தடவை போல இப்போது பதற்றமோ பயமோ அரியத்துக்கு இருக்கவில்லை.

அரியத்தை இடையறாது குற்றவுணர்வு துரத்திக்கொண்டிருந்ததால் தான் இந்தக் குண்டுவெடிப்பை நிகழ்த்திவிடுவதில் தீவிரமாக இருந்தான். அந்தச் சிறுமியின் அரை நிர்வாணமான உடல், அரியத்தின் நினைவுக்குள் வந்து உறுத்திக்கொண்டிருந்தது. அன்று காலையில் சரஸ்வதி தியட்டர் பாரைத் திறப்பதற்கு அரியம் ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த போதுதான் அந்தச் செய்தி அவனை எட்டியது. கனகம் மில் மார்க்கட்டிற்கு முன்பாக விடுதலைப்புலிகளின் பெண்போராளி ஒருவரது பிரேதம் கிடப்பதாக. கைக்குண்டுடன் வந்த பெண்போராளிமீது இந்திய ராணுவத்தின் மோப்ப நாய் பாய்ந்து பிறாண்டியதாகவும் அதனால் அந்தப் பெண்போராளி குப்பியடித்துவிட்டதாகவும் செய்தி பரவியிருந்தது. அவள் கொண்டுவந்த பையிலிருந்த சாப்பாட்டுப் பார்சலுக்குள் கைக்குண்டு ஒன்று இருந்ததாக. அது அவளாக இருக்காது எனத்தான் அரியம் நினைத்தான். அவள் கொண்டுவந்த முதல்குண்டையே இன்னும் வெடிக்கவைக்காததால் இரண்டாவது குண்டுடன் வந்திருக்கமாட்டாள் எனத்தான் அரியம் நினைத்தான்.

அரியம் கனகம் மில் மார்க்கட்டிற்கு வந்தபோது இந்திய ராணுவத்தின் சிப்பாய்களும் அதிகாரிகளும் அந்த இடத்தைச் சுற்றி வளைத்திருந்தார்கள். கனகம் மில் மார்க்கட்டிற்குள் இருந்து சனத்தை இந்திய ராணுவம் விரட்டியடித்துக்கொண்டிருந்தது. சனம் கூட்டம் கூட்டமாக நின்றுகொண்டிருந்தது. மோப்ப நாய் பாய்ந்து உருவியதில் அரை நிர்வாணமாகி அந்தச் சிறுமி மல்லாந்துகிடந்தாள். தலை புற்தரையின் மேட்டில் கிடந்தது. அரியத்தின் உடல் வெடவெடத்து நடுங்கியது. அந்தச் சிறுமியேதான். அவள் யாரையும் காட்டிக்கொடுக்க தயாராக இருக்கவில்லை. குண்டின் கனதியில் தன் தோள்பட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிப்பது போல இருந்தது அரியத்துக்கு. அவன் நினைவுகளுக்குள் முதல்முதல் அந்தச் சிறுமி உணவுப்பார்சலுடன் தன்முன்னே வந்து நின்றது நிழலாடியது. உடல் அன்று போல் இன்றும் உதறி அடங்கியது.

மதகுக்குள்ளால் றோட்டைக் கடந்த அரியம், கான் வழியாகத் தவழ்ந்து முன்னேறி சில்ரன்பாக் விளிம்போரத்தில் நிலையெடுத்துக் கொண்டான். சனநடமாட்டமற்ற சில்ரன்பாக் மைதானத்தை நோக்கிக் கைக்குண்டின் கிளிப்பை உருவிவிட்டு எறிந்தான். பின் கானுக்குள் திரும்பித் தவழத் தொடங்கினான். நிலம் அதிர்ந்து அடங்கியது. வெடிப்போசையில் காது அடைத்துக்கொண்டது. அரியம் மதகுக்குள்ளால் றோட்டைக் கடந்து, பின் சிவன் கோவிலடி நோக்கி நடக்கத் தொடங்கினான். குண்டுவெடிப்போசையைத் தொடர்ந்து எங்கெங்கோ துப்பாக்கி வெடியோசைகள் கேட்கத் தொடங்கின.

## 5.11

தனது தியட்டருக்குள் இப்படி ஒரு ஒடுக்கமான சந்து இருப்பதை சரஸ்வதி தியட்டர் முதலாளி இன்றுதான் முதல்முதலாகக் கண்டார். பல்கனியிலிருக்கும் கென்டீனுக்குப் பின்புறமாக இருந்தது அந்த சந்து. கென்டீனுக்கும் தியட்டரின் வெளிமுகப்புக்கும் இடையில் அது இருந்தது. முக்கால் அடி அகலம்கூட இல்லாத சந்து அது. கண்ணாடியாலான விளம்பரப்பலகை வைப்பதற்காக விடப்பட்ட இடம். பின் சீமெந்துக்கற்கள் கொண்டு அடைக்கப்பட்டிருந்தது அந்த இடவு. தன் தொந்தியை மூச்சைப்பிடித்து எக்கி அந்த இடவுக்குள் பதுங்கிக்கொண்டார் சரஸ்வதித் தியட்டர் முதலாளி. இருள்கவிந்து கிடந்த அந்த இடம், எங்கோ எரியும் நாற்பது வேல்ட் மின்குமிழின் வெளிச்சத்தில் சற்று ஒளிர்வாகக் கிடந்தது. அது தனது மறைவிடத்தைக் காட்டிக்கொடுத்துவிடுமோ எனக் கவலைப்பட்டார்.

மாசிலாமணியின் ஈனமான குரல் கீழே கேட்டுக்கொண்டு தான் இருந்தது. அவரால் அவர்களைத் தடுத்து நிறுத்திவிடமுடியும் எனத் தோன்றவில்லை. அரியம் இயக்கப்பின்னணி உள்ளவன்தான். அவனது குரல் வெளியே கேட்கவில்லை. அவன் ஒதுங்கி நிற்பான் எனத்தான் அவருக்குத் தோன்றியது. வந்திருப்பவர்களின் மிரட்டல்களும் வக்கரிப்புக்களும் அவரது காதுகளில் விழுந்துகொண்டுதானிருந்தன. அவர்கள் கையில் சிக்கினால் கடத்திக்கொண்டுபோய் கப்பம் கேட்பார்கள், இல்லையென்றால் கொன்றுவிடுவார்கள். தியட்டரில் வருமானம் இல்லை. மினித் தியட்டரும் எதிர்பார்த்த வருமானத்தைத் தரவில்லை. நீலப்படம் ஓட்டிச் சம்பாதிக்கிறேன் என்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்களுக்கு அள்ளிக் கொடுத்துக்கொண்டிருக்கமுடியாதுதானே. எல்லாப் பக்கத்தாலும் பிய்த்துத் தின்றுகொண்டிருந்தார்கள் அவரது வருமானத்தை. பார் வருமானம்தான் எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டிருந்தது. இரவுநேர சினிமாக் காட்சியின்போது, திரை அரங்கின் கதவுகளை இப்போதெல்லாம் மூடுவதில்லை. பாருக்கு வருபவர்களுக்காகத்தான் படம் ஓடிக்கொண்டிருந்தது. குடிமக்கள் பாரிலும் தியட்டரிலுமாகக் கிடந்தார்கள்.

கீழே சாராயப் போத்தல்கள் உடைபடும் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. கண்ணாடி யன்னல்கள் நொறுக்கப்படும் ஓசைகள் கேட்டன. மேசையில் அடிக்கும் ஓசையின் அதிர்வு அந்த ஒடுக்கமான சுவர்களுக்குள் இன்னும் உரமாக எதிரொலித்தது. வயிறு எக்கியநிலையில் சுவருடன் இறுக்கமாக அண்டிக்கொண்டிருந்தது. சரஸ்வதி தியட்டர் முதலாளிக்கு மூச்சுத் திணறுவது போலிருந்தது. தும்ம நேர்ந்தால் சுவரில் நெற்றியும் பிடரியும் முட்டி மோதிக்கொள்ளும். மூக்குக்கண்ணாடி சிதறிப்போகலாம். புலிகளை இந்திய ராணுவம் காடுகளுக்குள் முடக்கிவைத்திருக்கிறது. இந்திய ராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் மற்ற எல்லா இயக்கங்களும் பள்ளிக்கூடச் சிறுவர்களையும் இளைஞர் களையும் பிடித்து T.N.A க்கு எனப் பயிற்சிகொடுத்துக்கொண்டிருக்கின்றன. இந்திய ராணுவம் புலிகளை வெகுவாக ஒடுக்கிவிட்டதால், வடக்குக்கிழக்கைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளலாம் என மற்ற இயக்கங்கள் மும்முரமாக இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்துக்கொண்டிருந்தன.

அந்தச் செலவுகளை ஈடுகட்டத்தான் இயக்கங்கள் அகப்பட்டவர் களையெல்லாம் வழித்துத் துடைத்துக்கொண்டிருந்தார்கள். ஆள் கடத்தல், கப்பம் கேட்டல் எல்லாம் நடந்துகொண்டிருந்தது. அவரது தங்கையின் மகனை T.N.A பயிற்சிக்கெனக் கடத்திக்கொண்டு போனார்கள். அவரும் பல இடங்களில் தேடி, அங்குஇங்கு கொடுக்க வேண்டியதைக் கொடுத்தும் அவரால் மருமகனைக் கண்டுபிடிக்க முடியாது போனது. பயிற்சியைத் தாங்கிக் கொள்ளமுடியாது அவரது மருமகன் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இறந்துபோனான். அவனது பிரேதம்தான் கிடைத்தது. அதற்காகவும் அவர் நிறைய செலவு செய்திருந்தார். இனி தாக்குப்பிடிக்கமுடியாது என்ற நிலையில் எங்காவது தப்பிப்போவது என முடிவெடுத்திருந்தார். ஆனால் அவர்கள் முந்திக்கொண்டுவிட்டார்கள். அவர்கள் தியட்டருக்குள் புகுந்து அடாவடித்தனம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். வந்திருப்பது எந்த இயக்கம் எனத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே மயான அமைதி நிலவத்தொடங்கியிருந்தது. என்ன நடந்திருக்கும் என சரஸ்வதி தியட்டர் முதலாளியால் ஊகிக்க முடியாதிருந்தது. பல்கனிப் படிகளில் தட தடப்பான காலடி ஓசைகள் கேட்கத்தொடங்கின. அது மாசிலாமணியின் பதற்றமான காலடிகளால் ஏற்படும் தடதடப்பு என்பதை அவரால் உணரமுடிந்தது. மாசிலாமணி அந்த ஒடுக்கமான இடவின் அந்தத்தில் வந்துநின்றார். அவர் உடலிலிருந்து வியர்வையின் மணமும் இரத்த வெடிலும் அடித்தது. சரஸ்வதி தியட்டர் முதலாளி தடுமாறினார். மெல்லமெல்ல அரக்கிக்கொண்டு வெளியே வந்தார்.

''அவங்கள் பொயிட்டாங்களா...''

''பொயிட்டாங்கள் முதலாளி... இனி நீங்க இங்கின இருக்கிறது அவ்வளவு நல்லதில்ல...''

''என்ன உடம்பெல்லாம் இரத்தக் கறையாக் கிடக்கு...''

''அவனுகள் போறபோக்கில... உடைச்ச போத்திலால அரியத்திண்ட வயித்தில குத்திப் போட்டு பொயிட்டாங்கள்... டெக்சியப் பிடிச்சு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிப்போட்டு வாரன்...''

''அரியம் ஏதும் இடக்குமுடக்கா கதைச்சவனா அவங்களோட...''

''அவங்கள் உங்களத்தான் இலக்கு வச்சு வந்தவன்கள்... நீங்க இங்க இல்ல எண்டு... நான் விடாப்பிடியா நிண்டுட்டன்... அந்த கோபத்தில... போகிற போக்கில... ஒதுங்கி சும்மா நிண்டு கொண்டிருந்த அரியத்தக் குத்திப்போட்டு போயிட்டாங்கள்...''

சரஸ்வதி தியட்டர் முதலாளி அமைதியானார். இனி தாமதிப்பது உயிருக்கு உலைவைத்துவிடும் என்பதை அவர் உணர்ந்தார். அப்பாவித்தனமாகத் தன் பருத்த உதடுகளை விரித்துத் தொங்கப் போட்டபடியிருக்கும் மாசிலாமணியையே பார்த்துக்கொண்டு நின்றார். பின் அமைதியாக பல்கனிப்படிகளில் இறங்கிப்போனார் சரஸ்வதி தியட்டர் முதலாளி.

## 5.12

அடி வயிற்றின் ஓரத்தில் மெல்லப் பரவிய வலி தன் விதைகளில் துல்லியமாக ஊடுருவுவதை அரியம் உணர்ந்தான். அரியம் தான் அமர்ந்திருந்த கல்லிலிருந்து எழும்ப முனைந்தான். எழுந்திருக்க முடியாத அளவிற்கு வலி வதைத்தெடுத்துக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்கால்களை நடைபாதையில் ஊன்றி, தீ அணைப்புப்படை வாகனங்கள் தரித்துநிற்கும் யாட்வேலியின் கம்பிநெற்களைப் பற்றிப்பிடித்தபடி எழுந்து நிற்கமுனைந்தான். உடல் முழுவதும் பரவிய வலி, பின் வடியத் தொடங்கியது. அரியம் பெருமூச்சுவிட்டபடி திரும்பவும் கல்லில் அமர்ந்து, முதுகை யாட் கம்பிநெற்றில் சாத்திக்கொண்டான்.

மடத்தடிச்சந்தி ரவுண்டபோட் காலைநேர பரபரப்பிலிருந்தது. மோட்டார் சைக்கிள்களும் வேன்களும் சைக்கிள்களும் ரவுண்டபோட்டில் வட்டமடித்து வீதிகளில் பிரிந்துபோவதும் வருவதுமாக இருந்தன. ரவுண்டபோட்டின் வட்டத்திடல் புற்தரைமீது, காலைவெயில் படியத் தொடங்கியிருந்தது. நடுக்கம்பத்திலிருந்த மின்குமிழ் இன்னமும் அணைக்கப்படாது எரிந்துகொண்டிருந்தது. மணிஸ் கபே சைவ உணவக சாம்பாரின் மணம் வீதியைத்தாண்டிவந்து நாசிக்குள் ஊர்ந்துகொண்டிருந்தது. கடையில் சனக்கூட்டம் காலைவேளை உணவுக்காக முண்டியடித்துக்கொண்டிருந்தது. அனேகமானோர் வேலைக்குப்போகும் அவசரத்தில் இருப்பவர்கள். அரியம் தன் வயிற்றைத் தடவிக்கொண்டான். சரஸ்வதி தியட்டர் கலவரத்தில் போத்தலால் குத்துவாங்கி, தையல்போட்ட தடம் கட்டியாகத் தட்டுப் பட்டது. தழும்பாக இல்லாவிட்டாலும் தையல்விழுந்த ஒரு இடத்தில் மட்டும் சதை தடிப்பான கட்டியாக இருந்தது.

அரியத்தைப்போல இன்னும் யாரும் வந்து எந்த வேலைக்கும் கூப்பிடாத கூலித் தொழிலாளர்கள் கும்பலாகநின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். பெருத்த அடியைக்கொண்ட நிழல்வாகைமரங்கள் அவர்களை மூடிக்கொண்டு நின்றன. காலையில் இந்த மரத்துக்குக் கீழ்தான் தொழிலாளிகள் கூடுவார்கள். கொந்தராத்துக்காரர்களும் தனிப்பட்ட தேவைக்கான சிலரும் தொழிலாளிகளை இங்குதான் தேடிவருவார்கள். கடுமையான கட்டட வேலைகளுக்கு அரியம் இப்போது போவதில்லை. வயிற்றில் அடிக்கடி வலியிருப்பதால் கஸ்டமான பெரியவேலைகளுக்குப் போவதை அரியம் தவிர்த்துவந்தான். இரண்டு நாட்களாகக் கைவிடப்பட்டுக்கிடந்த வளவொன்றைத் துப்புரவாக்கி வேலி அடைக்கும் வேலைக்குத்தான் போய்க்கொண்டிருந்தான். இன்று புதியவேலை ஏதாவது கிடைத்தால்தான் உண்டு.

சரஸ்வதி தியட்டர் கலவரத்துக்குப்பின் தியட்டர் முதலாளி எங்கு போனார் எனத் தெரியவில்லை. இந்தியாவுக்குத் தப்பிப்போய் விட்டதாகவும் கொழும்பில் லொட்ச் ஒன்றில் தங்கியிருப்பதாகவும் கதைகள் பரவியிருந்தன. சரஸ்வதி தியட்டர் கலவரத்தில் போத்தலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்துவாங்கி அரியம் ஆஸ்பத்திரியிலிருந்தபோது சாமியண்ணன்தான் அவனை வந்து பார்த்துப்போனார். அரியம் இப்போது அவருடன்தான் சல்லிக்கோயில் மடப்பள்ளியில் தங்கியிருக்கிறான். சாமியண்ணனுக்குத் தொல்லையாக அரியம் இருக்க விரும்பவில்லை. காலையில் அவரின் சைக்கிளை வாங்கிக்கொண்டுதான் வேலைக்கு வந்திருந்தான். அங்கு இன்னும் எத்தனை நாளைக்குத் தங்கமுடியும் என அரியத்துக்குத் தெரியவில்லை. சாமியண்ணன் மார்க் ஏஜன்சியில் அரியத்துக்கு வேலைவாங்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார். மார்க் ஏஜன்சி முதலாளி தனக்குப் பழக்கம் என்றும் அது கோல்சேல்கடை என்பதால் வேலை கடுமையாக இருக்காது என்றும் அங்கேயே தங்கி வேலைசெய்யமுடியும் என்றும் சாமியண்ணன் சொல்லிக்கொண்டிருந்தார்.

சல்லிக்கோயில் இருக்கும் பகுதியில் இனி தங்குவது சிரமமாக இருக்கும் என அரியம் நினைத்துக்கொண்டான். இந்திய ராணுவம் வெளியேறிக்கொண்டிருந்தது. கூட இருந்த ஒட்டுக் குழுக்களும் இந்திய ராணுவத்துடன் சேர்ந்து வெளியேறிக்கொண்டிருந்தன. ஒரிசா பகுதியில் அவர்கள் தங்கவைக்கப்படுவதாகக் கதைகள் உலாவிக்கொண்டிருந்தன. இன்றோ நாளையோ இந்திய ராணுவத்தின் கடைசிக் கப்பலும் திருகோணமலை காபரிலிருந்து புறப்பட்டுவிடும் என்றுதான் சொல்லிக்கொள்கிறார்கள். புலிகள் நகருக்குள் ஊடுருவத் தொடங்கிவிட்டார்கள். இன்று காலைகூட புள்ளகுலத்துப் பாலத்தடியிலும் சிந்தாமணிபுர ஆலமரத்துக்குக் கீழும் புலிகள் காப்பரண்கள் அமைத்து வேட்டையைத் தொடங்கிவிட்டார்கள். இந்திய ராணுவத்துடன் இணைந்து செயற்பட்டவர்களைக் களையெடுக்கும் செயற்பாடுகளைப் புலிகள் முன்னெடுக்கத் தொடங்கியிருந்தார்கள். காலையில் சிந்தாமணிபுரச்சந்தியில் அரியத்தையும் இறக்கி விசாரித்தார்கள். மடத்தடிச்சந்திக்குக் கூலிவேலைக்குப் போவதாக அரியம் சொன்னதால் விட்டுவிட்டார்கள். அரியத்தின் தோற்றம் அவர்களுக்குச் சந்தேகத்தை உண்டுபண்ணியிருக்கவில்லை.

இப்படி நீண்டதூர நடமாட்டம் தனக்கு ஆபத்தானது என அரியம் உணர்ந்தான். இலங்கை ராணுவ ரக் வண்டிகளினதும் ஜீப் வண்டிகளினதும் நடமாட்டம் நகருக்குள் அதிகரித்திருந்தது. பூபாலன் தன்னை நோக்கி இன்னொருவருடன் வருவதை அரியம் கண்டான். கடந்த இரண்டு நாட்களும் பூபாலனும் அரியமும்தான் வளவு அடைக்கிற வேலைக்குப் போயிருந்தார்கள்.

''இவர்ர வீட்ட... மரங்கள் கொஞ்சம் தரிச்சு... துப்பரவாக்க வேணுமாம்... வாரியா...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியம் தலையாட்டினான். பூபாலனும் கூடவந்தவரும் காலைச்சாப்பாடு வாங்குவதற்காக மணிஸ் கபே நோக்கிப் போனார்கள். அரியம் வீதியைக் கடந்து மணிஸ் கபே வாசலில் நின்றான். இலங்கை ராணுவத்தின் ஜீப் வண்டி ஒன்று மணிஸ் கபே சந்தியில் வந்து நின்றது. அதிலிருந்து ராணுவச்சீருடையில் வந்த சிப்பாய்கள் இறங்கி நிற்க, இரண்டு ராணுவச்சிப்பாய்கள் மட்டும் கடைக்குள் போனார்கள். அரியம் ஒதுங்கி நின்றான். ஒரு ராணுவச்சிப்பாய் அரியத்தை நெருங்கிவந்தான். அரியம் இன்னும் ஓரமாக விலகி நின்றான். ஆனாலும் ராணுவச் சிப்பாய் அரியத்தை உரசுவது போல நெருங்கி நின்றான். ராணுவச் சிப்பாயின் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்த அரியம் தெருவை மீண்டும் கடந்து நிழல்வாகைமரத்துக்குக் கீழே போக முனைந்தான். அரியத்தை ராணுவச்சிப்பாய் வழிமறித்து நின்றான். அரியம் ராணுவச்சிப்பாய் மீது மோதி நின்று பின்வாங்கினான். நாக்கை மடித்துப் பற்களுக்குள் கடித்தபடி நக்கலான சிரிப்புடன் நின்றிருந்தான் இலங்கை ராணுவச்சீருடையில் சிவா. புலிகளின் நிலாவெளி ஏரியாப் பொறுப்பாளர் செந்தணல்.

✿✿✿

# 6

## 6.1

இரவு முழுவதும் அடைமழை பெய்து ஓய்ந்திருந்தது. காலையிலிருந்து வானம் மேகக் கூட்டத்தால் மூடுண்டுகிடந்தது. நேரம் மதியத்தை நெருங்கியிருந்தது. மெல்லிய சிலுசிலுப்பான காற்று வீசிக்கொண்டிருந்தது. ஆனாலும் முறிவு வைத்தியர் சீனித்தம்பிக்கு உடல் முழுவதும் வியர்த்திருந்தது. பழைய நோயாளிகள் ஆறுபேர். புதிய நோயாளிகள் ஒன்பதுபேர். சிலருக்கு ஒத்து மட்டும். சிலருக்கு முட்டைப்பத்து. சிலருக்கு புக்கைக்கட்டு. புதிதாக டாடா பஸ் புரண்டதால் வந்த நோயாளிகளுக்கு, முறிவின் தன்மை பார்த்து, சுளுக்குப் பார்த்து, ஒத்துப் போட்டுக் களைத்துப்போயிருந்தார் முறிவு வைத்தியர் சீனித்தம்பி. ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொருவிதமான முகவாகு. உடற்கட்டு. உடல் பருமன். சிலர் சாரம்மட்டும் இடுப்பில் கட்டியிருந்தார்கள். சிலர் சேட்டை ஒரு கையில் மட்டும் மாட்டி இழுத்துவிட்டிருந்தார்கள். சிலர் ஜீன்சும் டி-சேட்டுமாக இருந்தார்கள். அவர்களிடம் அவர் போராளிகளுக்கான குணங்களைக் காணவில்லை. வலியால் முனகும் நோயாளிகளைத்தான் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைக்கப்பட்டுப் பாதி திருத்தி ஓடு போட்டுப் பாதிப்பகுதி தகரக்கூரை அடித்த வீட்டில்தான் சீனித்தம்பி முறிவு வைத்தியர் வாசம். அது அவரது சொந்த வீடில்லை. தன் நாரியை நிமிர்த்திக் கடுப்பை ஆசுவாசப்படுத்திக்கொண்டார். பின் சிதைந்துகிடந்த வீட்டின் வெளிக்குந்தொன்றில் வந்து அமர்ந்துகொண்டார். முறிவு வைத்தியர் சீனித்தம்பிக்கு தோள்பட்டை வலிக்கத்தொடங்கியிருந்தது.

அப்படி எதற்குத்தான் இந்த மூர்க்கம் என்பது முறிவு வைத்தியர் சீனித்தம்பிக்குப் புரியாமலிருந்தது. வடக்குக்கிழக்கு மாகாணசபையின் அதிகாரங்களும் சொத்துக்களும் தமக்கே என்பதுபோல புலிகள் நடந்துகொண்டார்கள். அவற்றை அவர்கள் அனுபவிப்பது பற்றி அவருக்கு எந்தக் கவலையும் இல்லைதான். ஏனென்றால் அவர்கள் காட்டில்கிடந்து கஸ்டங்களை அனுபவித்துவிட்டு வந்திருக்கிறார்கள். அவர்களும் நீண்டநாட்களுக்கு இவற்றை அனுபவிக்கப்போவதில்லை என்பதும் அவருக்குத் தெரியும். அவர்கள் அடுத்தகட்ட சண்டைக்குத் தயாராகிக்கொண்டிருந்தார்கள். இயக்கத்துக்கு ஆள்சேர்ப்பதில் தீவிரமாக இருந்தார்கள்.

முன்னர் இந்திய ராணுவத்துடன் சேர்ந்து இயங்கிய இயக்கங்கள் T.N.A க்கு என இளைஞர்களைப் பிடித்துப் பயிற்சிகொடுத்திருந்தன. அவர்களில் பெரும்பாலானவர்கள் புலிகளுடனான சண்டையில் இறந்துபோனார்கள். உயிருடன் தப்பித்தவர்கள் புலிகளிடம் சரணடைந்து புலிகளுடன் இணைந்துவிட்டார்கள். அந்தக் குழுக்களில் ஒன்றுதான் இந்திய அரசு வடக்குக்கிழக்கு மாகாணசபைக்குக் கொடுத்த டாடா பஸ்ஸைக் கொண்டுபோய்க் கட்டுப்பாடில்லாது லைட் போஸ்டில் மோதி கவிழ்த்திருந்தார்கள். அவர்களில் கடும்பாதிப்புக்குள்ளானவர்கள் ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆக, எலும்பு முறிவு, சுளுக்குக்காரர்களை அவரிடம் கொண்டுவந்து சேர்த்திருந்தார்கள்.

முறிவு வைத்தியர் சீனித்தம்பியின் சொந்த இடம் தம்பலகாமத்திலிருக்கும் பட்டித்திடல். பரம்பரைப் பரம்பரையாக அவர்களுக்குத் தொழில் வைத்தியந்தான். ஏக்கர் கணக்கில் வயல் நிலங்களுமிருந்தன. வீடு வாசல் எனச் செழிப்பாக வாழ்ந்தவர்தான் அவர். ஊரிலிருக்கும்போது, மொளி பிறண்டு வந்த இலங்கை ராணுவத்துக்கு வைத்தியம் பார்த்ததற்காக, முன்னர் ஒருமுறை இயக்கமொன்று அவரை ஊர் முச்சந்தித் தொலைபேசிக் கம்பத்தில் கட்டிவைத்து அடித்திருக்கிறது. பின் இயக்கங்களுக்கு வைத்தியம் பார்த்ததாக இலங்கை ராணுவம் அவரைப் பிடித்து வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவைத்தது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் போதுதான் அவர் விடுதலையாகி வந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் விடுதலையாகி வீடு திரும்பியபோது குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கியிருந்தது. அவர் சிறையிலிருந்தபோது இளைய மகனை இனம் தெரியாத நோய் காவுகொண்டு போயிருந்தது. அந்தச் சம்பவத்தைக்கூட அவர் விடுதலையாகி வந்தபின்னர்தான் அறிந்துகொண்டார். மூத்த மகனை எப்படியாவது படிப்பித்து முன்னுக்குக் கொண்டுவந்துவிடவேண்டும் என்ற நோக்கத்தில்தான் ஊரில் மிஞ்சிக்கிடந்ததையும் விற்றுச் சுருட்டியெடுத்துக்கொண்டு நகரத்தை நோக்கி வந்தார்.

நகரம் அவரை மிகச் சுலபமாக உள்வாங்கவில்லை. வாடகைக்கு வீடு கிடைப்பது என்பது சிரமமாகத்தான் இருந்தது. பாதிக்கப் பட்டுக்கிடந்த வீடொன்றைத் தன் சொந்தசெலவில் திருத்திக் குடியிருந்தார். அந்த வீடு ஒரு சிங்களவருடையது என முறிவு வைத்தியர் சீனித்தம்பிக்குத் தெரியும்.

முதலில் அந்த வீட்டுக்கு வந்தபோது சிங்களவர் ஒருவருடைய வீட்டுக்குள் அடாத்தாக வருவதான உணர்வுதான் முறிவு வைத்தியர் சீனித்தம்பிக்கு இருந்தது. இப்போது அந்த வீடு அவருடையது போல மாறிக்கொண்டிருந்தது. இப்போதும் மிச்சம்பிடிக்கும் காசில் வீட்டின் பகுதிகளைத் திருத்திக்கொண்டுதான் இருக்கிறார். அந்த வீட்டின் இடிந்த பாதிச்சுவர்களில் நிறைய தும்பிப்பூச்சிகள் பறப்பது போல வரையப்பட்டிருந்தன. அழகான சின்னச்சின்ன சிங்கள எழுத்துக்களும் கலர் சோக்குகளால் சுவரில் எழுதப்பட்டிருந்தன. அவற்றை அவர் அழிக்கவோ வர்ணம்பூசி மறைக்கவோ நினைக்கவில்லை. அவர்கள் திரும்பிவரும்போது அந்த வீட்டிலிருந்து எந்த ஒரு பொருளையும் தான் எடுத்துக்கொள்ளாது அப்படியே அந்த வீட்டை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டுப்போவதே கௌரவமானது என நினைத்துக்கொண்டார். அவர் முற்றத்தில் வைத்த மாங்கன்று துளிர்விட்டுக் கெந்தடிக்கத் தொடங்கிவிட்டது.

நிலைமை போகிற போக்கு, தொடர்ந்தும் நகரத்தில் சீவித்திருப்பதற்குச் சாதகமாக இல்லை எனத்தான் முறிவு வைத்தியருக்குத் தோன்றியது. புலிகள் ஆள்சேர்ப்பில் அதிக அக்கறையாகவும் ஆர்வத்துடனும் செயற்பட்டார்கள். அதே தீவிரம் நிதிசேர்ப்பிலும் இருப்பதை அவர் உணர்வார். மகனது போக்கும் அவருக்குப் பிடிபடுவதாக இல்லை. வீட்டிலிருக்கும்போது அமைதியாகத்தான் இருந்தான். படித்தான். ஆனால் வீட்டில் தங்கியிருப்பது குறைந்து வருவதுதான் அவருக்குக் கவலையைத் தந்தது. புலிகளின் வாகனத்தில் சுற்றித்திரிவதாகத்தான் கண்டவர்கள் சொல்கிறார்கள். விசாரிக்கவும் முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகள் விரைவாகச் சண்டையைத் தொடங்கிவிடுவார்கள் என்றுதான் அவர் மனம் அடித்துச்சொன்னது. மனதில் பயத்தின் படபடப்பை அவரால் உணரமுடிந்தது. அவர் மனைவிக்கும் இந்த வீட்டிலிருப்பதில் உடன்பாடில்லாமல்தான் இருந்தது. இப்போது புலி இயக்க உறுப்பினர்களுக்குவேறு வைத்தியம் பார்த்துக் கொண்டிருக்கிறார். சிறையிலிருந்து திரும்பிவந்தபின்னும் தான் இன்னமும் தனிமையில், சிறையிலிருப்பதுபோலத்தான் அவர் மனம் உணர்ந்தது. உடலில் வியர்வை அடங்கியிருந்தது. உடல் சோர்வால் துவண்டுபோயிருந்தது. மழை மெல்ல தூறத்தொடங்கி, பின் உரத்துப் பெய்யத்தொடங்கியது. முறிவு வைத்தியர் சீனித்தம்பி வலியால் முனகிக்கொண்டிருந்த, புரண்டுபடுக்கமுடியாத உடல் பெருத்த நோயாளியை நோக்கி எழுந்துபோனார். இடுப்பில் சாரம் நழுவிப்போய்க் கொண்டிருப்பதுகூட தெரியாமல், ஆம்கட் பெனியனைத் தன் பருத்த வயிற்றுக்கு மேலே தூக்கிவிட்டபடி மல்லாந்துகிடந்தான் அவன்.

## 6.2

மார்க் ஏஜன்ஸி பில் கிளாக்கர் கேசவன் தாகத்தால் தவித்துப் போய்க்கிடந்தார். அவரது தொண்டை வறண்டுவிட்டது. உதடுகள் காய்ந்து பசைத்தன்மையுடன் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டுவிட்டன. நாக்குப் புரள மறுத்தது. கேசவனுக்கு மிரட்சியாக இருந்தது. நேரம் மாலை நான்குமணியைக் கடந்துவிட்டது. இன்னும் எவ்வளவு நேரத்துக்கு ரவுண்டப் நீடிக்கும் என அவருக்குத் தெரியவில்லை. அதிகாலை ஐந்துமணியளவில்தான் மார்க் ஏஜன்ஸிக்குள் இலங்கை ராணுவம் புகுந்தது. கேசவனுடன் சேர்த்து அங்கேயே தங்கி வேலை செய்யும் பதினொரு பேரையும் ராணுவம் வெளியே அழைத்துவந்தது. புதிதாக மலையகத்திலிருந்து வந்த கணேசன், அரியம் இரண்டு பேரும்தான் திருமணம் முடிக்காதவர்கள். மற்றவர்கள் எல்லாம் திருமணமான இளவயதினர். அவர்களை எப்படியாவது திரும்பவும் அழைத்துப் போய்விடவேண்டும் என்ற கவலை கேசவனை அரித்துக்கொண்டிருந்தது.

இலங்கை ராணுவம் அவர்களை மெக்கேசர் மைதானத்துக்கு அழைத்துவந்தபோது அந்த மைதானத்துக்குள் மேயும் மாடுகளைப் போல சிலரை மைதானத்துக்குள் ராணுவம் அடைத்து வைத்திருந்தது. இப்போது அந்த மைதானம் பட்டிமாடுகளை அடைத்ததுபோல மனிதர்களால் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. திருகோணமலை நகரத்திலிருந்த வயதானவர்களையும் சிறுவர்களையும் பெண்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்த்துப் பெரும்பாலான ஆண்களை ராணுவம் மெக்கேசர் மைதானத்துக்குள் அடைத்துவைத்திருந்தது. காலையிலிருந்து இப்போதுவரை, நகரின் பல திக்கிலுமிருந்து அவ்வப்போது வேட்டோசைகள் கேட்டபடிதான் இருந்தன.

மார்க் ஏஜன்ஸி முதலாளி செல்வாக்கான ஆள், எப்படியும் தங்களை மீட்க வந்துவிடுவார் எனத்தான் கேசவன் காலையில் நினைத்தார். காலை ஒன்பதுமணியளவில் மார்க் ஏஜன்ஸி முதலாளியை அவர் கட்டியிருந்த சாரத்துடனும் அணிந்திருந்த ஆம்கட் பெனியனுடனும் மைதானத்துக்குள் ராணுவம் கொண்டுவந்து அடைத்தது. அதன் பின்னர்தான் இந்த ரவுண்டப் வழமையாக நடைபெறுவதைப்போல சாதாரணமாக இருக்கப்போவதில்லை என்பதை கேசவன் உணர்ந்து கொண்டார். மார்க் ஏஜன்ஸி முதலாளியைத் தங்கபிறேம் போட்ட மூக்குக் கண்ணாடி, வெள்ளை வேட்டி, வெள்ளை சேட் இல்லாமல் யாரும் தெருவில் பார்த்திருக்க முடியாது. அடைக்கப்பட்டுக் கிடப்பவர்களில் பலர் மேலில் சேட்கூட அணிய சந்தர்ப்பம் வழங்காது ராணுவம் கொண்டுவந்து அடைத்துவைத்திருக்கிறது. அருகில்கூட மரங்களற்ற மைதானவெளி அது. போக்குவெயில் அவர்களை வறுத்தெடுத்துக்கொண்டிருந்தது. அரியம் தான் சஸ்பென்டர்கூட போடவில்லை எனக் காலையில் முறையிட்டது கேசவனுக்கு ஞாபகம் வந்தது.

புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்கள் சாதாரண உடையில் சனத்தோடுசனமாக மெக்கேசர் விளையாட்டு மைதானத்துக்குள் உலாவித் திரிந்துகொண்டிருந்தனர். பெட்டிகளால், சாக்குப் பைகளால் முகத்தை மூடிய தலையாட்டிகள் மெக்கேசர் மைதானத்தின் அகலமான சுற்றுச்சுவரில் நடந்து திரிந்தார்கள். மெக்கேசர் மைதானத்துக்குள் அடைக்கப்பட்டிருந்த சனத்துக்குள்ளிருந்து திடீர்திடீரென ராணுவம் சிலரை இழுத்துக்கொண்டுபோனது. கேசவனுக்கு ஒரே ஒரு நிம்மதி, மாலை ஆகியும் அவரது குழுவிலிருந்து யாரையும் ராணுவம் தூக்கிக்கொண்டுபோகவில்லை.

கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் அதிகாலை நான்குமணியளவில் திருகோணமலை நகரமே அதிரும்படிக்குக் குண்டொன்று வெடித்து அடங்கியது. அதிர்வில் வீடுகளின் ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்குண்டன. சில வீடுகளின் சுவர்கள் அதிர்வில் வெடிப்புக் கண்டன. சில வீடுகளின் அன்டர்சீலிங் உடைந்தது. ஒருவர் தான் கட்டிலிலிருந்து தூக்கி வீசப்பட்டதாகச் சொன்னார். இவ்வளவுக்கும் குண்டுவெடித்தது கடலில். இலங்கை கடற்படைக்குச் சொந்தமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை உட்துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கப்பல் ஒன்று, கடல் கண்ணிவெடியில் சிக்குண்டதாகத் தகவல்கள் வெளிவந்தன. அந்தக் கப்பலில் பெருந்தொகையான ஆயுதங்கள் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டதாகச் செய்திகள் பரவின. திருகோணமலை உட்துறைமுகத்துக்குள் எரிந்தநிலையில் கப்பல் ஒன்று மூழ்கிக்கொண்டிருப்பதான செய்தி. ஆனால் அந்த நகரத்திலிருக்கும் எவருக்கும் உட்துறைமுக வீதிக்குப் போய் நின்று அதைப் பார்க்கும் துணிச்சல் இருக்கவில்லை. திருகோணமலை துறைமுகப்பகுதிப்பக்கம் அன்று காலையிலிருந்து பெரிய புகைப்படலம் ஒன்று தொடர்ச்சியாக அடிவானில் மிதந்துகொண்டிருந்ததை கேசவன் கவனித்துத்தான் இருந்தார். விடுதலைப்புலிகள் பிரேமதாச அவர்களுடனான பேச்சுவார்த்தை முறிவடைந்து தாம் மூன்றாம்கட்ட ஈழப் போரை ஆரம்பித்துவிட்டதாக அறிவித்தார்கள்.

பலவிதமான செய்திகள் பரவத் தொடங்கின. கோட்டை, நேவி கடற்படைமுகாம், பிளான்டன்பொயின்ட் ராணுவமுகாம் என்பவற்றை மறித்துப் புலிகள் காப்பரண்களை அமைத்திருக்கிறார்கள். திருகோணமலை நகருக்குள் ராணுவம் ஊடுருவுவது என்பது சாத்தியமே இல்லை எனச் சிலர் சொன்னார்கள். உலகின் ஒரு வல்லரசுடன் போராடித் தாக்குப்பிடித்த புலிகள் இலங்கை ராணுவத்தைத் தமிழர் நிலங்களிலிருந்து விரட்டியடிக்கும் நாள் மிகஅருகில் நெருங்கிவந்து விட்டது எனப் பல செய்திகள் உலாவின. ஆனால் சனம் எதையும் நம்பத் தயாராக இல்லை. நகரத்தை அதிரவைத்த குண்டுவெடிப்புச் சத்தம் அடங்கிய சில கணப்பொழுதிலேயே தங்களது கையில் கிடைத்தவற்றைப் பொறுக்கிக்கொண்டு நகரத்திலிருந்து கிராமங்களை நோக்கி இடம்பெயரத் தொடங்கினார்கள்.

சனம் எதிர்பார்த்தது போல ராணுவம் கடந்த மூன்று நாட்களாகப் பாரிய தாக்குதல் எதனையும் நடத்தவில்லை. நகரையும் நகரை அண்டிய பகுதிகளையும் நோக்கிக் கடற்படைத் தளத்திலிருந்தும் ராணுவ முகாம்களிலிருந்தும் அவ்வப்போது செல் தாக்குதலை மட்டும் நடத்திவிட்டு, அமைதியாக இருந்தது. ராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளிலிருந்த சனங்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்து விட்டன. மார்க் ஏஜன்ஸி பில்கிளாக்கர் கேசவனும் முதலில் வேலைக்கு நிற்கும் பொடியங்களையும் கூட்டிக்கொண்டு நிலாவெளிப்பக்கம் இடம்பெயர்ந்துவிட்டு, ராணுவம் நகரைக் கைப்பற்றியபின் திரும்பிவரலாம் எனத்தான் நினைத்திருந்தார். ஆனால் மார்க் ஏஜன்ஸி முதலாளிதான் தடுத்துவிட்டார். இன்று மார்க் ஏஜன்ஸி முதலாளியின் செல்வாக்கு மெக்கேசர் மைதானத்துக்குள் முடங்கிக்கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திப்பொழுது மங்கி, எதிரில் இருப்பவர்களின் முகம் மறையும் அளவுக்கு இருள்படியத் தொடங்கிவிட்டது. கேசவனுக்கு மனதில் பதற்றம் கூடிக்கொண்டிருந்தது. இருண்டுவிட்டால் எதுவும் நடக்கலாம். இன்று எத்தனை பேர்களின் எலும்புகள் இந்த மெக்கேசர் மைதானத்தின் அகலமான சுவர்களுக்குள் உரமாகப்போகிறது என்பதும் தெரியாது. கேசவன் திரும்பத்திரும்ப தன் வேலையாட்களை எண்ணிக்கொண்டே இருந்தார்.

மெக்கேசர் மைதானத்தின் வாசலடியில் சலசலப்பு ஏற்படத் தொடங்கியது. மெக்கேசர் மைதானத்தின் வாசலடியை நோக்கி அங்குமிங்கும் நின்றவர்கள் நெருக்கியடிக்கத் தொடங்கிவிட்டார்கள். கேசவன் சுதாகரித்துக்கொண்டார். தன் வேலையாட்களைக் கட்டுப் படுத்திக் குழுவாக்கிக்கொண்டார். வெளியேறுபவர்கள் வெளியேறட்டும். தன் குழு உதிரிகளாகிவிடாது பலப்படுத்திக்கொண்டார். அதேநேரம் வாசலை நோக்கித் தன் குழுவை நகர்த்திக்கொண்டுமிருந்தார். மெக்கேசர் மைதானத்தின் ஒடுக்கமான வாசலடியில் சனம் தள்ளுப்பட்டு, முண்டியடித்து வெளியேற முற்பட்டுக்கொண்டிருந்தது. மார்க் ஏஜென்ஸி முதலாளி மெக்கேசர் மைதானத்தின் ஒடுக்கமான வாயிலில் தள்ளுப்பட்டு இடிபடுவதை கேசவன் கண்டார். கேசவன் தன் கண்பார்வைக்குள்ளிருந்து வேலையாட்கள் விலகிவிடாது, அவர்கள்மீது பார்வை இருக்க, வாசலை நோக்கித் தள்ளுப்பட்டுப் போனார். அந்த ஒடுக்கமான வாயிலிலும் முண்டங்கள் வெளியேறுபவர்களைக் கண்காணித்தபடிதான் இருந்தார்கள். அங்கும் அவ்வப்போது சிலர் வடிகட்டப்பட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். கேசவன் தன் குழாமில் எந்த இழப்பும் இல்லாது மெக்கேசர் மைதானத்தைவிட்டு வெளியேறினார்.

கேசவனும் அவரது குழுவும் மார்க் ஏஜென்ஸி வளாகத்தை வந்தடைந்தபோது பொழுது இருட்டிவிட்டது. வந்த வேகத்தில் பலர் வேகமாகத் தண்ணீரைத் தொண்டைக்குள் ஊற்றிப் புரைக்கேறி, இருமி, கண்கள் சிவக்கும் அளவுக்கு இருமிக்கொண்டிருந்தார்கள். மலையகப் பொடியன் கணேசன் மட்டும் வாய்க்குள் கொஞ்சம்கொஞ்சமாகத் தண்ணீரை விட்டு, உதட்டை நனைத்து, தண்ணீரைத் தொண்டைக்குள் கொஞ்சம்கொஞ்சமாக இறக்கிக்கொண்டிருந்தான். கேசவனும் அவனைப் போலவே செய்ய முனைந்தாலும் தாகத்தினாலும் வறண்டு கிடந்த தொண்டையினாலும் புரைக்கேறி அவதிப்பட்டார். கணேசன் நிதானமாகத் தன் தொண்டையை நனைத்துக்கொண்டிருப்பதை கேசவன் பார்த்துக்கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பிலிருந்தும் வேறு மாவட்டங்களிலிருந்தும் பொருட்களை ஏற்றிக்கொண்டு அதிகாலையிலேயே வந்து சேர்ந்திருக்கவேண்டிய வாகனங்கள், ஒவ்வொன்றாக மார்க் ஏஜென்ஸி வளாகத்துக்குள் வரத்தொடங்கின. நகருக்கு வெளியேயும் நகருக்குள்ளும் தடுத்து வைக்கப்பட்டிருந்த வாகனங்கள், களைத்துச் சோர்ந்த சாரதிகளுடனும் கிளீனர்களுடனும் வந்துசேர்ந்தன. கிளீனர்களும் சாரதிகளும் கொண்டுவந்த செய்திகளினால் மார்க் ஏஜென்ஸி வளாகமே பயத்தினாலும் துயரத்தினாலும் உறைந்துபோய்க்கிடந்தது.

''பாவி மனுசன் றோட்டத் தாண்டி வளவுக்க புகுந்திருப்பான் போல... முட்கம்பியில சிக்கினபடியே சவமாக்கிடக்கான்... ஒரு சவம் கானுக்க பாதி றோட்டில பாதிய தல குப்பறக்கிடக்கு... அங்கங்க சவங்கள் றோட்டில இன்னமும் தூக்காமக் கிடக்குது...''

மடத்தடிசந்தியில் வைத்து, முறிவு வைத்தியர் சீனித்தம்பியை ராணுவம் கோடாரியினால் கால்கள் வேறு, கைகள் வேறெனக் கொத்தியே கொன்றதாக ஒரு சாரதி தன் கண்களால் நேரடியாகப் பார்த்ததாகப் பதற்றப்பட்டுக் கம்மிப்போன குரலில் சொன்னார். மெக்கேசர் மைதானம் தங்களுக்குப் பாதுகாப்பு அரணாக இருந்ததாகத்தான், இப்போது கேசவனுக்குத் தோன்றியது. கேசவன் திரும்பி கணேசன் இருந்த திசையைப் பார்த்தார். அவன் இருந்த சோடாக் கேஸ் பெட்டி வெறுமையாகக்கிடந்தது.

## 6.3

நிலாவெளி கூழாவடிப்பிள்ளையார் கோயிலடிக்கு அரியம் நகரத்திலிருந்து அதிகாலையிலேயே வந்து சேர்ந்துவிட்டான். இப்போது நேரம் ஒன்பதுமணியைத் தாண்டியிருக்கும். நகரத்திலிருந்து சைக்கிள் மிதித்து வந்ததால் ஏற்பட்ட வியர்வை, அவன் அணிந்திருந்த உள் ஆடைகளில் இன்னமும் கசிந்துகொண்டுதானிருந்தது. இன்று அரியத்தின் அக்கா வதனிக்குத் திருமணம். கோயில்வாயிலில் இரண்டு வாழைகள் கட்டியிருந்தன. சில குருத்தோலைத் தோரணங்கள், சில மாவிலைகள், அவ்வளவே சோடனை. வெள்ளை வேட்டி, சேட்டில் சில ஊர் ஆண்கள், கூறைச்சாரியில் சில பெண்கள் எனக் குறைவான சனந்தான் கோயிலடியில் அங்குமிங்குமாக உலாவித் திரிந்தார்கள். மணவறை என்ற பெயரில் இரண்டு மயில்கள் ஒன்றையொன்று பார்ப்பது போன்ற மணவறை. இற்றுப் பழுதடைந்த மரத்தாலும் பளிங்குக்கண்ணாடித் துண்டுகளாலுமான மணவறையைக் கோயில் நடுக்கூடத்தில் நிறுத்திவைத்திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளை, பொம்பிளை இன்னமும் கோவிலடிக்கு வந்து சேர்ந்திருக்கவில்லை. மார்க் ஏஜென்ஸி பில்கிளாக்கர் கேசவன்தான் அரியத்துக்குக் கொஞ்சம் பணம் ஏற்பாடுசெய்து கொடுத்திருந்தார். மிகவேகமாக அந்தக் கடனையும் திருப்பி அடைத்தாகவேண்டியிருந்தது அரியத்துக்கு. காலையிலிருந்தே அரியத்தை இனம்புரியாத மனச்சஞ்சலங்களும் பதற்றங்களும் தின்றுகொண்டிருந்தன. வதனி அக்காதான் அரியத்திடம் சொல்லியிருந்தாள், வீட்டுக்கு வரவேண்டாம் என்று. நீ வந்தால் அம்மா ஏதாவது குறளிக்கூத்துக் காட்டும், கோயிலடிக்கே வந்து சேர்ந்துவிடு என்று.

அரியம் ஏழாங்கட்டை வயல்வெளியைத் தாண்டும்போதுதான் வடக்கு அடிவானில் இருளைக் கிழித்துக்கொண்டு செந்நிற ஒளிர்வு ஒன்று கண்ணில்பட்டது. மின்னல் வெட்டுவதற்கான சாத்தியம் எதுவும் இருக்கவில்லை என அரியம் நினைத்தான். பாரிய சத்தத்துடன் திரியாய்ப்பக்கம் குண்டொன்று வெடித்து அடங்கியது. அரியத்துக்குக் கண்ணில் தீக்கங்குகள் பட்டதாகத்தான் தோன்றியது. விடியும்வரை எந்த ஒரு வெடிச்சத்தமும் காதில் விழவில்லை. விடிந்தபின்தான் கடலிலிருந்து கடற்படை திரியாய்ப்பக்கம் கடுமையான பீரங்கிக்குண்டுத் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தது. கொக்கிளாய்க் கடற்பரப்பில் வைத்துக் கடற்படைக்குச் சொந்தமான டோரா படகொன்றைக் கடற்கரும்புலிகள் தகர்த்துவிட்டார்கள். கடற்படைக்குச் சேதம் அதிகம் என்றுதான் கதைகள் கசிந்து கொண்டிருந்தன. புலிகள் பெரிய தாக்குதல்களை நடத்தும்போது நாள் நட்சத்திரம் எல்லாம் பார்ப்பது வழமைதான். எந்தவித தடங்கலுமின்றித் திருமணம் நடந்துமுடிந்துவிடவேண்டும் என்ற கவலை அரியத்தைப் பிடித்தாட்டத்தொடங்கிவிட்டது. தன்னிடம் நலம் விசாரிக்க வந்த ஊரவர்முன் பதற்றத்தைக் காட்டிக்கொள்ளாது பௌவியமாகத் தள்ளிநின்றான் அரியம்.

பழைய கிராமக்கோட் உள்வீதிக்குள் அரசரின் றோசா வேன் பிரதானவீதியிலிருந்து திரும்புவதை அரியம் பார்த்தபடி நின்றான். கச்சனக்கல்லிலிருந்து மாப்பிள்ளை, பொம்பிளையுடன் சனத்தையும் ஏற்றிய அரசரின் றோசா வேன் கோயிலடியில் வந்து நின்றது. வேனுக்குள்ளிருந்து கூறைச்சாரி உடுத்த பெண்களும் வேட்டி சேட் போட்ட ஆண்களுமாக இறங்கினார்கள். அவர்களது கறுத்து ஒடுங்கிப்போன உடல்வாகுக்கும் வியர்வையில் கசிந்துகிடந்த முகங்களுக்கும் அவர்கள் உடுத்தியிருந்த உடைக்கும் சம்பந்தம் இல்லை என அரியம் நினைத்தான். மாப்பிள்ளையும் பொம்பிளையும் இறங்கியபின், அம்மா கல்யாணி இறங்கி நின்றாள். அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரட்டைத் தலைமுடி. உடம்பில் எந்தவித நேர்த்தியும் இல்லாது, சாரியை உடம்பைச் சுற்றிக் கந்தல் துணியைப் போல போர்த்திக் கொண்டிருந்தாள். வதனியை அடையாளம் காணமுடியாத அளவுக்கு மேக்கப் போட்டிருந்தார்கள்.

மாப்பிள்ளையின் வயிறு எக்கி, முதுகு கூனுண்டு இருந்தது. சொக்குகள் உள்ளொடுங்கி, தாடைகள் வெளியே துருத்திக் கொண்டிருந்தன. தலைமுடி நரைகாணத் தொடங்கிவிட்டது. உலர்ந்துபோன உடலில் பட்டுவேட்டி, பட்டுசேட் பொருத்தமில்லாது தொங்கிக்கொண்டிருப்பதாகத்தான் அரியத்துக்குத் தோன்றியது. அவர் வன்னிப்பக்கமிருந்து அகதியாக வந்தவர் எனத்தான் ஜெயத்தின் அம்மா சொன்னார். அவரை அவர்கள் விசு என அழைத்தார்கள். இந்தச் சம்பந்தத்தை அவர்தான் ஏற்பாடு செய்திருந்தார். கோயிலுக்குள் ஜெயத்தின் அம்மாவின் கட்டளையிடும் குரல் அதிகாரமாக ஒலிக்கத்தொடங்கியது. கடலில் கன்போட்டுகளின் இரைச்சலும் வானில் ஹெலிக்கப்டர்களின் வட்டமிடும் இரைச்சலும் கேட்டபடியிருந்தது. கொக்கிளாய், நாயாற்றுப்பக்கம் வெடிச்சத்தங்கள் கேட்டன. கோயிலுக்குள் மந்திர உச்சாடனங்கள் தீவிரமாகக் கேட்டுக் கொண்டிருந்தன. அரியம் கோயிலினுள்ளே ஓரமாக ஒதுங்கி நின்றுகொண்டிருந்தான்.

ஜெயம் அம்மாவின் வீட்டில்தான் மதியநேர விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வீட்டின் தாழ்வாரத்திலிருந்து பனைமரத்திலும் தென்னையிலும் இழுத்துக்கட்டப்பட்ட படங்கு படபடத்துக் கொண்டிருந்தது. அந்தப் படபடப்புச்சத்தம் கடலிலிருந்து கன்போட்டுகள் கரையைநோக்கி வேட்டுக்களைத் தீர்ப்பது போலத்தானிருந்தது அரியத்துக்கு. அரியம் அந்தப் படங்குவெக்கைக்குள் புழுங்கிப் போயிருந்தான். காலையில் திருமணம் தடையில்லாது நடந்துவிட வேண்டும் என்ற கவலை. இப்போது புதிய கவலை ஒன்று தொற்றிக் கொண்டுவிட்டது. மார்க் ஏஜென்ஸியிலிருந்து எவரும் திருமணத்துக்கு வந்திருக்கவில்லை. பில்கிளாக்கர் கேசவன் அவர்களும் வரவில்லை. அவர் கட்டாயம் வருவதாகத்தான் சொல்லியிருந்தார். திருமணத்தை முடித்துக்கொண்டு உடனடியாக அரியத்தை மார்க் ஏஜென்ஸிக்கு வருமாறு கேசவன் நிலாவெளிக்கடைகளுக்குச் சாமான்களை ஏற்றிக்கொண்டு வந்த லொறிச் சாரதியிடம் தகவல்சொல்லிவிட்டிருந்தார். லொறிச் சாரதிக்குக் காரணம் தெரிந்திருக்கவில்லை. அது அரியத்துக்குப் பயத்தையும் பதற்றத்தையும் கூட்டிவிட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பல்தீவு புள்ளகுளத்துப்பாலத்திலிருந்த ராணுவச் சோதனைச் சாவடியில், ராணுவம் சனத்தோடு கடுமையாக நடந்துகொண்டிருந்தது. சிலரை அடித்து வெயிலில் முட்டுக்காலில் இருத்திவைத்திருந்தது. பணிவாகவும் தணிவாகக் குழைந்து பேசியும் சோதனைச்சாவடியைத் தாண்டிவந்தான் அரியம். சோதனைச்சாவடியைத் தாண்டும்போது கச்சனக்கல், நிலாவெளிப்பக்கம் கடலிலிருந்து கன்போட்டுகள் பீரங்கித்தாக்குதல் நடத்தும் சத்தம் கேட்கத்தொடங்கியது. அரியம் கொளுத்தியெடுக்கும் மதியவெயிலைப் பொருட்படுத்தாது, வேகமாக சைக்கிளை மார்க் ஏஜென்ஸி நோக்கி மிதித்துப்போனான்.

அடிவயிற்றிலிருந்து மெல்ல துளிர்விட்டு எழும் வலி உடல் முழுவதும் ஓடி ஏற, சைக்கிளை வேகமாக மிதித்து மார்க் ஏஜென்ஸிக்கு வந்து சேர்ந்தான் அரியம். மார்க் ஏஜென்ஸிக்குள் வேலை செய்பவர்களின் முகத்தில் இனம்புரியாத பயம் படர்ந்துகிடந்தது. கண்ணில் படுபவர்களை எல்லாம் அவர்கள் சந்தேகத்துடனேயே பார்த்தார்கள். லொறிகளுக்குள் சாமான்களை ஏற்றுவதும் இறக்குவதுமான வேலைகள் நடந்துகொண்டுதானிருந்தன. உள் கிட்டங்கிக்குள்ளிருந்து வெளியே வந்த கேசவன் அரியத்தை இழுத்துக்கொண்டு வேகமாக அவர்கள் தங்கியிருக்கும் அறைக்குள் போனார்.

''கணேசன்ட போட்டோ ஏதும் உண்ணட்ட இருக்கா... அவனோட நிண்டு போட்டோ ஏதும் எடுத்து வைச்சிருக்கியா...''

''அப்பிடி ஒண்டும் இல்ல... எதுக்கு...''

''ஏதாவது வைச்சிருந்தா எரிச்சுப்போடு... கணேசன் கடற்கரும்புலியாம்... கடல்ல வெடிச்ச கரும்புலி அவனாத்தான் இருக்கும் எண்டு ஒரு கதை உலாவுது. குச்சவெளிப்பக்கம் போஸ்டர் போட்டிருக்காம் எண்டு கேள்வி... பேமிலாந்தி மாதிரி ஆரிட்டையும் எதையும் கதைச்சு வைக்காத... கவனமா இரு... C.I.D மார் ரகசியமாவும் நேரடியாவும் வரக்கூடும்... கவனம்...''

கேசவன் தணிந்த குரலில் அரியத்திடம் கடுமையாக எச்சரித்துவிட்டுப்போனார்.

மலையகத்துப் பொடியன் கணேசன் எப்போதும் தனித்தே இருந்தான். அவ்வளவாக யாருடனும் பேசுவதும் இல்லை. எதேச்சையாக அவனுடன் முட்டுப்பட்டபோது அரியத்தை அவன் திரும்பிப் பார்த்த பார்வையில் இருந்த தீவிரம் இன்னமும் அரியத்தின் கண்ணுக்குள் நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.4

நீலப்பணிக்கன்குளம் பரந்துவிரிந்து நீர் தளும்பிக்கிடக்கிறது. காற்று நீரை அலைக்கழித்துக்கொண்டு குளக்கட்டு நோக்கி வருகிறது. குளிர்ந்த காற்று செந்தணல் என்கிற சிவாவைத் தழுவிப்போகிறது. காட்டு வெக்கைக்கு அது இதம்தரவல்லதாக இருக்கவில்லை. மதியவெயில் அனலைக் கக்கிக்கொண்டிருந்தது. திரும்பும் திசையெங்கும் கானல்நீர். குளக்கட்டில் காற்றில் படபடக்கும் பச்சைநிற ஆயிரம் ரூபாய் நோட்டுக்களைப் பார்த்துக்கொண்டிருந்தான் செந்தணல் என்கிற சிவா. ரூபாய் நோட்டுக்கள் காற்றில் பறந்துவிடாது, ரைபிளின் இரும்புமுனை ரூபாய் நோட்டுக்களைக் குளக்கட்டுடன் அழுத்திக் கிடந்தது. ரத்தக்கறை படிந்த பணம் தனக்குத் தேவையில்லை என்று திருப்பி அனுப்பிவிட்டுவிட்டாள் அவன் அம்மா. இவ்வளவு காலமும் இல்லாத அக்கறை இனியும் தமக்குத் தேவையில்லை என அவன் சகோதரிகளும் சொல்லிவிட்டார்கள்.

சிவாவின் தந்தை கடும் சுகயீனமாக இருப்பதான செய்தி. அரியம் வதனிக்குச் சொல்லி வதனி அவள் கணவன் விசுவுக்குச் சொல்லி அங்கு சொல்லி, இங்கு சொல்லிக் காட்டில் நிலையில்லாது, அங்குமிங்கும் அலையும் சிவா என்கின்ற செந்தணல் என்னும் விடுதலைப்புலி போராளிக்குத் தகவல் கிடைக்கும்போது, அவன் தந்தை இறந்து மூன்றாம் நாளில் சாம்பலும் கரைத்துவிட்டார்கள். சிவசுப்பிரமணியம் என்கின்ற முன்னாள் பொலிஸ்காரர் இறந்து விட்டார். பெரியாரின் சுயமரியாதைக்கொள்கையை ஏற்றுக்கொண்ட மனிதர். கடுமையான சொற்களைப் பிரயோகிக்கத் தெரியாத மனிதர். மென்மையான உடல்பாவம் கொண்ட மனிதர். நாட்டு வெடிகுண்டு, நாட்டுத்துப்பாக்கியுடன் குச்சவெளி பொலீஸ் ஸ்டேசனை கடத்தல்காரர்கள் தாக்கியபோது, சிறிய பொலீஸ் படை ஒன்றை வழிநடத்தி, அந்தத் தாக்குதலை முறியடித்த பொலீஸ்காரர். தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்துத் தன் பொலீஸ் உத்தியோகத்தைத் துறந்த மனிதர். தன்னுடைய எட்டுக் குழந்தைகளுக்காக இரவில் காவல் தொழிலாளியாகவும் பகலில் கூலித்தொழிலாளியாகவும் கிடைத்த இடங்களிலெல்லாம் வேலைபார்த்துக் களைத்துப்போன அந்த மனிதர் இறந்துபோனார். தன்மீது அதிகம் பாசம்வைத்த அந்த மனிதருக்காக செந்தணல் என்கிற சிவாவின் மனது படபடத்தது. கண்கள் பனிக்கக்கூட மறுத்தன.

செந்தணல் என்னும் சிவா இயக்கத்தில் சேர்ந்த காலத்திற்குப்பிறகு தன் வீட்டுப்பக்கம் போகாத போராளி. செந்தணலது சகப்போராளிகளும் அவனைப் போலவே கடும் போக்கானவர்களாகவே இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தணலது கடும் போக்குகளுக்கெல்லாம் தாக்குப்பிடிக்கக் கூடியவர்களாகத்தான் அவர்கள் இருந்தார்கள். காடுகளே கதி எனக் கிடந்தவர்கள். ஆக மிஞ்சிப்போனால் காடுகளை அண்டிய கிராமங்களில் ஓய்வெடுத்திருப்பார்கள். தங்கள் உடல், சுகபோகங்களுக்குப் பழக்கப் பட்டுவிட்டால் திரும்பவும் காட்டுவாழ்க்கைக்குத் தயக்கம்காட்டக்கூடும் என நினைத்தவர்கள். அவர்கள் வன்னிப் போராளிகள்போல ஒரு தாக்குதலுக்காகத் தம்மைத் தயார்படுத்தித் தாக்குதலை நடாத்திவிட்டு ஓய்வெடுக்கமுடியாதவர்கள். நிலையான ஒரு வாடி அமைத்துத் தங்கமுடியாதவர்கள். வன்னி நெருக்கடிக்கு ஆளாகும் ஒவ்வொரு தருணங்களிலும் திட்டமிட்ட வலிந்த தாக்குதலை நடத்தி வன்னித்தலைமைக்கு வலுச்சேர்க்கவேண்டியவர்களாக இருந்தவர்கள். மணலாற்றில் தன் சகாக்கள் பலரைப் பலிகொடுத்துவிட்டு நிற்பவன் செந்தணல். வன்னித்தலைமை ஒவ்வொரு வலிந்த தாக்குதலை நிகழ்த்தச்சொல்லும்போதும் நிரப்பமுடியாத ஆளணியை இழந்து நிற்பவர்கள். இப்போதும் குறுகிப்போன ஆளணியுடன் வலிந்த தாக்குதலை நடத்திக்கொண்டிருப்பவர்கள். ஆயுதங்களைக் குவித்துவைத்து மட்டும் தாக்குதலை நிகழ்த்தமுடியாது என்பதை உணர்ந்தவர்கள்.

செந்தணல் வெற்றிலையுடன் சில காய்ந்த கஞ்சா இலைகளையும் சேர்த்து வாய்க்குள் அதக்கிக்கொண்டான். சிலவேளைகளில் காய்ந்த கஞ்சா பருப்புக்களையும் சேர்த்துப் போடுவதுமுண்டு. செந்தணலுக்கு மெல்லிய போதை ஏறுவதுபோல இருந்தது. இதெல்லாம் இயக்கக் கொள்கைக்கு முரணானது என்பது செந்தணலுக்குத் தெரிந்த ஒன்றுதான். செந்தணல் வன்னித்தலைமையின் எந்தக் கட்டளையையும் தன் சுயமுடிவின் பேரில்தான் செயல்படுத்துவான். வன்னித்தலைமையும் இவர்களது கடும்போக்குக் காரணமாகவும் விசுவாசத்தின் மீதான நம்பிக்கையின் பெயரிலும் இவற்றைக் கண்டும்காணாததுமாக இருந்துவிடும்.

அரியம் சிவாவின் தந்தையைப்போய்ப் பார்த்திருக்கிறான். அவர் அரியத்தினது கையைப்பிடித்து வருடியிருக்கிறார். தன்னைப் போலவே அரியத்தையும் அவர் நேசித்தது செந்தணலுக்குத் தெரியும். அரியத்தின் காதுக்குள் செந்தணலின் தந்தை, சிவா என ரகசியமாக உச்சரித்திருக்கிறார். அதன்பின்தான் தகவல் சொல்ல முனைந்திருக்கிறார்கள். தந்தையின் இறுதிக்கிரியையில் அரியம் சவப்பெட்டி தாங்கிய பாடையின் ஒரு முனையைச் சுமந்து சென்றிருக்கிறான். அந்த அரியத்தைத்தான் செந்தணல் துரத்தித்துரத்திச் சுட்டிருக்கிறான். அன்று அது திட்டமிட்ட தாக்குதல் இல்லை. வன்னித்தலைமையின் நெருக்கடியைத் தீர்க்க வலிந்த தாக்குதல் ஒன்றை அவர்கள் நடத்தவேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தணல் தலைமையில் வலிந்த தாக்குதல் ஒன்றுக்காக விடுதலைப்புலிகளின் குழு ஒன்று அலஸ்தோட்டப்பகுதியில் நிலையெடுத்திருந்தது. நீண்டநேரமாக அவர்கள் காத்துக்கிடந்தார்கள். வழமையாக றோந்து போகும் படையணி வரவில்லை. புலிகள் வலிந்த தாக்குதலுக்குத் தயாராக இருக்கிறார்கள் என்ற தகவல் ராணுவத்துக்குக் கிடைத்திருக்கக்கூடும். அந்த வீதியில் வழமையாக இருக்கும் சனசந்தடிகூட குறைந்துவிட்டது. அப்படியென்றால் புலிகள் காத்துக்கிடப்பது கசிந்துவிட்டது. புலிகள் வலிந்த தாக்குதலுக்குத் தயாராயிருப்பது தெரிந்தால் ராணுவம் நேரத்தைக் கடத்தும் அல்லது தாக்குதலைத் தவிர்க்க முயற்சிக்கும்.

அப்படி செந்தணலின் படையணி வலிந்த தாக்குதலுக்குக் காத்துக்கிடக்கும்போதுதான், அரியம் நிலாவெளிப்பக்கமிருந்து நகரை நோக்கி சைக்கிளை வேகமாக மிதித்துக்கொண்டு போனான். முதலில் செந்தணல் அரியத்தை இனம்கண்டிருக்கவில்லை. செந்தணல் நிலையெடுத்திருந்த இடத்துக்குக் கிட்டவாக அரியம் வந்து கடந்துபோனபோதுதான் செந்தணல் அவனை அடையாளம் கண்டுகொண்டான். தான் நிலையெடுத்திருந்த இடத்திலிருந்து வெளிப்பட்ட செந்தணல், அரியத்தைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டான். அரியம் காதில் விழாததுபோல வேகமாக சைக்கிளை மிதித்துக் கொண்டு போனான். அந்தக் கணத்தில்தான் செந்தணல் அவனை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தான். மிரட்டுவதற்காக என்று சொல்லமுடியாது. அரியத்தை இலக்கு வைத்துத்தான் சுட்டான். அரியம் சடுதியாக அருகிலிருந்த ஒழுங்கை ஒன்றுக்குள்ளால் சைக்கிளைவிட்டுத் தப்பிப்போய்விட்டான். அன்று அவர்கள் எந்தவித தாக்குதலும் நிகழ்த்தாது திரும்பிப்போனார்கள்.

அரியத்துடன் செந்தணலுக்கு எந்தப் பகையும் கிடையாதுதான். இந்திய ராணுவக் காலப்பகுதியில் அவன் தன்னுடன் சேர்ந்து ஒத்துழைக்கவில்லை என்ற கோபம் செந்தணலுக்கு இருந்தது என்னவோ உண்மைதான். தந்தை சுகயீனமாக இருந்தபோதும்சரி, மரணத்துக்குப்பின்பும்சரி, அவனுக்கும் அவன் வீட்டுக்கும் இடையில் தூது போய்க்கொண்டிருப்பதும் அவன்தான். திரும்பவும் ஒருமுறை அந்தப் பணத்தைத் தன் சகோதரிகளிடம் கொடுக்க வதனி மூலம் முயற்சிக்கலாம் எனத்தான் செந்தணல் நினைத்தான். வதனி நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்கிறாள். அவளை அலைக்கழிக்க செந்தணல் விரும்பவில்லை. அந்தப் பணம் அவனைச் சூழ இருக்கும் போராளிகளின் சில நாட்களுக்கான அத்தியாவசிய தேவைகளுக்கானது என்பது அவனுக்குத் தெரியும். அவனது போராளிகள் மதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுக்குத் தயாராகி அவனுக்காகக் காத்திருந்தார்கள். செந்தணல் தன் வாய்க்குள்ளிருந்த வெற்றிலையைத் துப்பிவிட்டு வாயைக் கொப்பளித்தான். செந்தணல் மதியஉணவுக்காக எழுந்து போனான்.

## 6.5

அந்தச் சிறுவனை அரியத்துக்கு மிகவும் பிடிக்கும். சுட்டா, அப்படித்தான் அவனை அவனது அம்மா கூப்பிடுவாள். மார்க் ஏஜென்சிக்கு எதிரேதான் அவனது வீடு இருந்தது. எப்போதும் வாகனங்கள்மீது தீராத ஆசை கொண்டிருந்தான். அரியத்திடம் தானாக வந்து கதைத்து சினேகிதமாகிக்கொண்டான். அதுவும் அங்கு வந்துபோகும் வாகனங்கள் பற்றியதாகத்தானிருக்கும். அரியத்துக்கு வதனியின் மகனின் முகம் நினைவுக்கு வந்துபோகும். தனது மருமகனை நகரத்தில் கொண்டுவந்துவைத்திருக்க அரியத்துக்கும் விருப்பம்தான். நிலாவெளி எந்தவிதப் பாதுகாப்புமற்றது என்பது அரியத்துக்குத் தெரியும். வதனிக்கு நகரத்திற்குள் வருவதற்கு விருப்பமில்லை. சீவியத்துக்கு என்ன செய்வது. அதுதான் அவளது கேள்வியாக இருந்தது. அரியத்துக்கும் அதே கேள்விதான்.

சுட்டா துறுதுறு என எப்போதும் எதையாவது செய்து கொண்டிருப்பான். சைக்கிளை மார்க் ஏஜென்ஸி ஒழுங்கைக்குள் ஓட்டிக் கொண்டுவருவான். குறுக்குமறுக்காக சைக்கிளை வேலையாட்களுக்கு இடையேவிட்டு வேலையாட்களிடம் பேச்சும் வாங்குவான். ஆனாலும் அதையெல்லாம் சட்டைசெய்யாது பாடசாலை நேரம் தவிர அந்த வளாகத்துக்குள்தான் சைக்கிளை ஓட்டித் திரிவான். சுட்டாவின் தாய் தகப்பன் அரைகுறையாகக் கட்டிய வீட்டில்தான் இருக்கிறார்கள். ஒரு பகுதியில் இருந்துகொண்டுதான் வீட்டைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். பிரதானவீதியில் சைக்கிளை ஓட்ட முடியாததால் சுட்டா மார்க் ஏஜென்ஸிக்குள் வந்து சைக்கிளை ஓட்டி விளையாடுவான். அதற்காக சுட்டா யாரிடமும் அனுமதி கேட்கவில்லை. சிலவேளைகளில் லொறியிலிருந்து சாமான்களை ஏற்றிஇறக்கும் சாய்தளத்தில்கூட சைக்கிளை ஏற்றி, லொறிக்குள் போய் வட்டமடித்து இறக்கி விளையாடுவான். எப்போதும் கண்களை அங்குமிங்குமாக உருட்டிக்கொண்டு தன்னைச்சூழ நடப்பதை அவதானித்தபடிதான் இருப்பான். நிறைய கேள்விகளைத் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்ற பாகுபாடின்றிக் கேட்டுவைப்பான். சிலர் நிதானித்துப் பதில் சொல்வார்கள். சிலர் கடந்துபோவார்கள். அவன் எதையும் பொருட்படுத்தாது எப்போதும் உற்சாகமாகத்தான் இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கண்களை மரண அறிவித்தல் போஸ்டரில் பார்க்க நேரும் என அரியம் கனவிலும் நினைத்திருக்கவில்லை. வீட்டுக் கட்டுமானப் பணிக்காகக் கொண்டுவந்து கொட்டிய மணலில் கிடந்த மிதிவெடியை என்னவென்று அறியாது எடுத்து இரண்டு மூன்று நாட்களாக விளையாடித் திரிந்திருக்கிறான். நேற்று மாலைப் பொழுதில்தான் கல்லில் வைத்து குத்திப் பார்த்திருக்கிறான். மிகக்கிட்டவாகக் கேட்ட வெடிச்சத்தத்தினால் மார்க் ஏஜென்ஸிக்குள்ளிருந்த அரியம், தயங்கி நிதானித்து என்ன நடக்கிறது என கிரகிக்க முனைந்தான். பின்னர் வீட்டிலிருந்து கதறல் சத்தம் கேட்டபோது தான் வீதியைத் தாண்டி அந்த வளாகத்துக்குள் ஓடினான். கிழிந்த துணிக்குவியலாக இரத்தச்சிதறல்களுடன் கிடந்த சுட்டாவை அரியத்தால் இனம்காணமுடியவில்லை. அவன் வழமையாகப் போடும் அந்த முழங்கால் நீளமான காற்சட்டையும் முதலைமார்க் டி-சேட்டும்தான் சுட்டாவை இனம்காட்டிக்கொண்டிருந்தது. சுட்டாவின் தாய் மயங்கி நிலைப்படியோரம் விழுந்துகிடந்தாள்.

தந்தை குனிந்த தலை நிமிராது ஓரமாக நின்றிருந்தார். மரணச் சடங்குகள் வேகமாக நடந்துகொண்டிருந்தன. தந்தை வங்கி ஒன்றில் பணியாற்றுவதாக அரியம் கேள்விப்பட்டிருந்தான். சுட்டா பலதடவை அரியத்தைத் தன் வீட்டுக்கு இழுத்துக்கொண்டு போயிருக்கிறான். அரியம் முற்றம் தாண்டி அந்த வீட்டுக்குள் போனதில்லை. நேற்று வந்த மாயவன் பல நாள் பழக்கப்பட்டவன்போல வீட்டுக்குள் சகஜமாக உள்நுழைந்து வெளியேறிக்கொண்டிருந்தான்.

அரியத்துக்கு மாயவனைப் பிடிக்கவில்லை. மாயவன் வந்த சில நாட்களிலேயே பெரிய ஆட்களை இனம்கண்டு, அவர்களுக்கு யால்ரா அடித்துக் கூனிக்குறுகிக் கும்பிடு போட்டுக்கொண்டிருந்தான். கூலைத்தனமான வலிந்த சிரிப்பும் சில வேளைகளில் அர்த்தமில்லாது கெக்கட்டம்விட்டுச் சிரிப்பதும் அரியத்துக்கு மாயவன்மீது வெறுப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தது. அவனைத் தவிர்க்கமுடியாது, கேசவன் மாயவனை அவனது அறையிலேயே தங்கவைத்து விட்டார். மாயவன் தன் அக்கா பையன் என்றுதான் கேசவன் சொன்னார். கேசவனுக்கும் மாயவனுக்குமிடையில் எந்தவித உறவுநிலையும் இருப்பதற்கான உரையாடல்கள் எதனையும் அரியம் இதுவரை செவிமடுக்கவில்லை.

கேசவன் அரியத்தை வைத்து ஆள்மாறாட்டம் செய்துதான் மாயவனை வன்னியிலிருந்து வெளியேறுபவர்களுக்கான வவுனியா இடைத்தங்கல்முகாமிலிருந்து வெளியே எடுத்திருந்தார். முதலில் கேசவன் கேட்டபோது அரியம் மறுத்துவிட்டான். வதனியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்துக்கு கேசவன் உதவியதை அரியம் நினைத்துப்பார்க்கும் படியாக கேசவன் நடந்துகொண்டார். பட்ட நன்றிக்கடனுக்காக அதைச் செய்யவேண்டியதாகிப்போனது அரியத்துக்கு. உள்ளுக்குள் பணம்கொடுத்து மாயவனின் இடத்தில், வவுனியா இடைத்தங்கல் முகாமுக்குள் அரியத்தை விட்டுவிட்டு அரியத்தின் அக்காவின் அம்மாவின் திருகோணமலை முகவரியைப் பயன்படுத்தி கேசவன் முதலில் மாயவனை வெளியே எடுத்தார். ஒரு வாரத்தின்பின் அரியத்தின் அடையாள அட்டையையும் முகவரியையும் மீண்டும் பயன்படுத்தி அவனைக் கேசவன் வெளியே கொண்டுவந்தார். ஒரு வாரமாக இடைத்தங்கல்முகாமில் உயிரைக் கையில்பிடித்துக் கொண்டுதான் அரியம் சீவித்தான். அந்த இடைத்தங்கல்முகாமுக்குள் நிறைய பணம் புழங்கிக்கொண்டிருப்பதை மட்டும் அரியத்தால் உணரமுடிந்தது. இவ்வளவு பணம் கேசவனிடம் புழங்குவது அரியத்துக்குப் பயத்தைக்கொடுத்தது. தான் மீண்டும் ஏதோ ஒரு சிக்கலுக்குள் மாட்டுப்பட்டுக்கொண்டிருப்பதாகத்தான் அரியம் உணர்ந்தான். அரியத்துக்கு கேசவன்மீது இருந்த மரியாதையும் நம்பிக்கையும் முற்றாகத் தகர்ந்துபோய்விட்டது. அரியத்துக்கு மாயவனை மட்டுமில்லை, கேசவனைக் காணும்போதும் இனம்புரியாத பயம் மனதைக் கவ்வத்தொடங்கிவிடும்.

சீனவெடிச் சத்தம் தொடர் சரவெடியாகக் கேட்கத் தொடங்கியது. சுட்டாவின் மரண ஊர்வலம் தொடங்கிவிட்டது. வீட்டு வாசலில் சுட்டா! சுட்டா! என்ற தாயின் இறுதிக் கூப்பிடுதலை அரியம் கேட்டான். அந்தத் தாய் மண்ணில் விழுந்து புரண்டு ஓலமிட்டாள். இந்து மயானத்தை நோக்கி சவஊர்வலம் நகரத்தொடங்கியது. வழிநெடுகிலும் நீலநிறப் பின்னணியில், சமாதானப் புறா பறக்க வெண்ணிற உடையில், பளிச்சென சிரித்துக்கொண்டு நின்றார், சமாதானத்தைத் தன் உயிரை விலையாகக் கொடுத்தாகிலும் கொண்டுவந்துவிடுவேன் என்று சூளுரைத்த சமாதான தேவதை சந்திரிகா அம்மையார். அந்தப் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுச் சில ஆண்டுகள் கடந்துவிட்டன. மழையில் நனைந்து கருமேன் பிடித்துவிட்டன. வெயிலில் காய்ந்து வெளிறிப்போய்விட்டன அந்த போஸ்டர்கள்.

## 6.6

உவர்மலை மத்திய வீதியிலிருந்து உவர்மலை லோவறோட்டை நோக்கிக் கீழிறங்கும் வீதியின் அந்தத்தில், கானுக்குள் கால்களைத் தொங்கப் போட்டபடி பைத்தியக்காரியைப்போல குந்தி இருந்தாள் மலர்மதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது இருட்டிவிட்டது. வில்லா உல்லாசப் பயணிகள் விடுதியின் கோட்டைபோன்ற உயரமான மதில்சுவரில் தன் முதுகைச் சாத்தியிருந்தாள் மலர்மதி. உட்துறைமுகக் கடலில் நின்றிருந்த கப்பல்களில் விளக்குகள் பளிச்சென எரியத்தொடங்கிவிட்டன. பிரிமா மா ஆலை மங்கலான புகார் மூட்டத்துக்குள் சிக்கியதுபோல இருளடைந்துகிடந்தது. வீதி மின்விளக்குகளும் எரியத்தொடங்கிவிட்டன. பயிற்சியால் முறுக்கேறிப்போன தன் கைகளைக் கோர்த்துத் தலைக்குமேலே தூக்கிச் சோம்பல் முறித்துக்கொண்டாள். கைகளைக் கீழே இறக்கும்போது, இயல்பாகவே அவளது வலதுகை இடுப்பிலிருக்கும் பிஸ்டலை அழுத்தமாகச் சொருகிக்கொண்டது. மலர்மதி ஆனையிறவு தொடக்கம் பல களங்களில் நின்ற விடுதலைப்புலிகளின் முக்கிய புலனாய்வுப்போராளி.

தான் திருகோணமலை நகருக்குள் களம் இறக்கப்பட்டிருப்பது மாயவன் கோஸ்டிக்கு தெரிந்திருக்கவேண்டும் என்றுதான் மலர்மதிக்குத் தோன்றியது. எப்படியும் வன்னித்தலைமை, களையெடுக்க யாரையாவது அனுப்பும் என்கிற முன்னெச்சரிக்கையில் அவர்கள் தலைமறைவாகியிருக்கவும்கூடும். இவ்வளவு பணமோசடி செய்யும்வரை, தலைமை அவர்கள்மீது கொண்டிருந்த நம்பிக்கை என்ன என மலர்மதியால் ஊகிக்கமுடியாதிருந்தது. திருகோணமலை பொருண்மியப் பொறுப்புக்கள் எப்படி வன்னித்தலைமைக்குத் தெரியாது, மாயவன் போன்ற எடுபிடியினதும் அவன் சகாக்களினதும் கைகளுக்குள் சிக்கியது என்பது அவிழ்க்கமுடியாத புதிராக இருந்தது. வெளிநாட்டு முகவர்கள், வன்னித்தலைமை மீது செலுத்தும் அழுத்தமாகத்தானிருக்கும் என மலர்மதிக்குத் தோன்றியது. மலர்மதிக்கு வன்னித்தலைமைமீது கட்டுக்கடங்காத கோபம் வந்தது. கருணா அம்மான் வன்னித்தலைமையுடன் முரண்பட்டுக் கொண்டு பிரிந்ததை அவர்கள் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொள்ள முனைகிறார்கள் என்பது மலர்மதிக்குத் தெளிவாகத்தெரிந்தது. அவர்கள் நகர்ந்துகொண்டிருக்கும் திசையின் ஒரு முனையைக்கூட அவளால் பிடிக்கமுடியவில்லை. ராணுவத்துடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு முகாம்களுக்குள் தஞ்சம் புகுந்திருக்கக்கூடும். நம்பிக்கையான இடைத்தரகர்கள் இல்லாமல் ராணுவம் புலிகளின் தலைகளை மட்டுமல்ல, வாலைக்கூட நம்பாது என்பது மலர்மதிக்குத் தெரியும். இதுவரை அப்படியான தரகர்களை அவர்கள் அணுகியதற்கான தடம் எதனையும் மலர்மதியால் கண்டுபிடிக்கமுடியவில்லை.

திருகோணமலை நகரம் முற்றாக இருண்டுவிட்டது. மின்விளக்குகளின் ஒளிர்வும் கடந்துபோகும் வாகனங்களின் கெட்லைட்டுக்களின் வெளிச்சமும் அவள்மீது படிந்து கடந்துசென்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்மதி என்னும் பைத்தியக்காரியை யார் கண்டுகொள்ளப் போகிறார்கள். எல்லாவித தனியார் விடுதிகளுக்குள்ளும் நுழைந்து வெளியேறிவிட்டாள். அவர்கள் ஒளிந்திருப்பதற்கான, உல்லாச வாழ்க்கை வாழ்வதற்கான தடம் எதுவும் அவளுக்குக் கிட்டவில்லை. சிலவேளைகளில் நகருக்குள் தனியார்வீடுகளை வாடகைக்கு அமர்த்திக்கொண்டும் அவர்கள் பதுங்கியிருக்கக்கூடும். சமாதானப் பேச்சுவார்த்தைக் காலம் அவர்களுக்கு எல்லாவகையிலும் ஒத்துழைத்துக்கொண்டிருப்பதாகத்தான் அவளுக்குத் தோன்றியது.

மலர்மதி எழுந்து உட்துறைமுக வீதியில் நடந்துபோனாள். கடலிலிருந்து வெடுக்கு நாற்றம் எழுந்துகொண்டிருந்தது. உவர்மலை உச்சியிலிருந்த வீடுகளிலும் தெருக்களிலும் ஒளிர்ந்துகொண்டிருந்த மின்விளக்குகளின் வெளிச்சம், கடலுக்குள் நீளமான கோடுகளாக விழுந்துகிடந்தது. அந்த இருளில்கூட தெரியும்படி கடலைப் பார்த்து நின்றுகொண்டிருந்தது வெண்ணிறவர்ணம் பூசிய மூன்றுமாடிக் கட்டிடம். தூரமாக நின்று தன் பார்வையை அக்கட்டிடத்தின் மீது பதியவிட்டாள் மலர்மதி.

அந்தக் கட்டிடம் புலிகளின் பினாமி ஒருவருடையது. அது தனியார் கணினித் தொழில்நுட்பக் கல்லூரியாக நடாத்தப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடம். மேல்தளங்கள் முற்றாக இருளடைந்துகிடந்தன. கீழ்த்தளத்தில் முன்புறப் பாதுகாப்பு ஊழியரின் அறையில் மட்டும் ஒரு மின்விளக்கு எரிந்துகொண்டிருந்தது. எந்த நடமாட்டமும் அங்கு இல்லை. அந்தக் கட்டிடத்திற்குப் பாதுகாப்பு உத்தியோகத்தராக இருக்கும் அரியம் என்பவனிடம் அவள் முதலில் நல்லவிதமாகப் பேசி விசயங்களைத் தெரிந்துகொள்ள முனைந்தாள். அவனுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. அவனுக்குச் சம்பளம் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என்றான். கையிலிருந்த சிறுசேமிப்பில் தான் நம்பிக்கையின் பொருட்டு, அவர்கள் கொடுத்த கடமையை அவன் செய்துகொண்டிருக்கிறான். இரண்டாந்தரம், தான் யார் என்பதை வெளிப்படுத்தாது, கடுமையான தொனியில் விசாரித்தும் பார்த்தாள். அவன் ஒரேவிதமான பதிலைத்தான் சொல்லிக்கொண்டிருந்தான்.

மூன்றாம்முறை அவனை விசாரிக்கும்போது துவைத்தெடுத்து விட்டாள். அப்போதும், வழமையான புலம்பலைத் தவிர புதிதாக அவளுக்கு, அவனிடமிருந்து எதுவும் கிடைக்கவில்லை. புதிதாக அவர்களின் வழித்தடத்தை ஊகிக்கக்கூடிய எந்தத் தகவலும் மலர்மதிக்கு அவனிடமிருந்து கிட்டவில்லை. தலைமுடி உதிர்ந்து, வயிறு ஒட்டிப்போன நோயாளியை அவள் அதிகம் துன்புறுத்த விரும்பாததால், அந்தளவில் அரியத்தை அவள் விட்டுவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க் ஏஜென்ஸியிலிருந்து கேசவனையும் அவன் வேலைக்குச் சேர்த்த ஆட்களையும் நீக்கிவிட்டார்கள். கேசவன் அவனை வலுக்கட்டாயமாகக் கொண்டுவந்துதான் அந்தக் கட்டடத்திற்குக் காவலாளியாக இருக்கும்படி விட்டுவிட்டுப் போயிருந்தான். அவனுக்குச் சம்பளம் தருவதாகத்தான் பேச்சு. ஒரு மாதம் கடந்த நிலையிலும் அவனை அவர்கள் தொடர்புகொள்ளவும் இல்லை, சம்பளம் கொடுக்கவும் இல்லை. அவர்கள் அவனை அங்கு அமர்த்தி விட்டுப்போன நம்பிக்கைக்காக அந்தக் கட்டிடத்தைக் காவல் காக்கிறான். அவன் பேச்சில் உண்மை இருப்பதாகத்தான் மலர்மதிக்குத் தோன்றியது. அவன் அப்பாவித்தனத்தின்மீது மலர்மதிக்குக் கோபம் வந்தது. அவனது நடமாட்டத்தைத் தவிர வேறு எந்த ஒரு அசைவும் அந்தக் கட்டடத்துக்குள் புலப்படவில்லை. அந்தக் காவலாளி செத்த பாம்பு. அதை எப்போது வேண்டுமானாலும் அடிக்கலாம். மலர்மதி அந்தக் கட்டடத்திற்கு அருகில் இருக்கக்கூடிய வீடுகளை உன்னிப்பாகக் கவனித்தபடியே இருளில் நகர்ந்துகொண்டிருந்தாள்.

## 6.7

கடல் நிலப்பகுதிகளை மூர்க்கமாக ஆக்கிரமித்துவிட்டுத் திரும்பிப்போய்விட்டது. அரியம் தவித்தலைந்துகொண்டிருந்தான். கச்சனக்கல் பகுதி முழுவதும் சதுப்புநிலமாக மாறிக்கிடந்தது. கால்புதையும் இடங்களிலெல்லாம் உவர்க்கசிவுகள். வீதிகள்கூட நொதுநொதுத்துப்போய்க்கிடந்தன. கரியநிற வண்டல் அழுக்குகள், தாங்கமுடியாத நாற்றத்துடன் ஆங்காங்கே நிலங்களில் படிந்துகிடந்தன. தொடர்ச்சியாக வாரக்கணக்கில் அடை மழை பெய்தால்கூட, ஒரு சொட்டுத்தண்ணீரும் தேங்காத கடற்கரையோரத்துக் கிராமம் அது. மின்கம்பங்கள் சாய்ந்து கிடந்தன. வீடுகள் இடிந்தநிலையில் சாய்ந்துகிடந்தன. சில வீடுகளின் ஒரு மூலைப்பகுதியைக் கடல் அத்திவாரத்தோடு தோண்டி அடித்துக்கொண்டு போயிருந்தது. கடற்கரை எங்கும் பெரியபெரிய மரக்கிளைகளும் பெரியபெரிய அடிக்கட்டைகளும் ஆங்காங்கே கிடந்தன. அரியம் தன் வாழ்நாளில் கண்டிராத பல பொருட்களையும் காய்களையும் கடற்கரை நெடுகிலும் கண்டான். அரியம் எந்தவித இலக்குமின்றி அலைந்துகொண்டிருந்தான்.

மணல் அள்ளப்பட்ட பெரிய மடுவொன்றுக்குள் நீளமான தடிகளைவிட்டு, சிலர் துழாவிக் கொண்டிருந்தார்கள். அந்த மடுவுக்குள்ளிருந்து ஒரு சிறுவனையும் வயோதிக மாது ஒருவரையும் சடலமாக மீட்டிருந்தார்கள். அரியத்தின் தாய் கல்யாணியைக் காணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சடலம் தாயினுடையதாக இருக்கவில்லை. நிலாவெளி மகாவித்தியாலயத்தில் வதனி தன் இரண்டு குழந்தைகளுடனும் தஞ்சம் புகுந்திருந்தாள். தாய் கல்யாணி இருமல், தடுமன், காய்ச்சல் எனப் படுத்திருந்திருக்கிறாள். குழந்தைகளைக் கத்தரித்தோட்ட வேலைக்காக நிலாவெளிப்பக்கம் போகும்போது தன்னுடனேயே கொண்டுபோயிருந்தாள் வதனி. விசு அத்தான் வயல்வேலைக்காகப் பெரியகுளம் பகுதிக்குப் போனவர் சம்பவம் அறிந்து திரும்பி வந்திருந்தார். ஜெயம் அம்மாவின் போயிலை சிப்பம் அடுக்கும் குடிசைக்குள் படுத்திருந்த கல்யாணியைக் காணவில்லை. குடிசை இருந்த இடத்தில் சாய்ந்தநிலையில் இரண்டு மரங்கள் மாத்திரமே இருந்தன.

அரியம் குழப்பமான மனநிலையில் அலைந்துகொண்டிருந்தான். அவன் உடல் முழுவதும் உயிர்போகும் அளவுக்கு இப்போதெல்லாம் வலிக்கிறது. கையிலிருந்த சிறு சேமிப்பும் கரைந்துவிட்டது. கேசவனையும் மாயவனையும் சந்தித்துப் பல மாதங்கள் ஆகிவிட்டன. இரவில் தங்குவதற்கு ஒரு இடம் வேண்டும் என்பதற்காகத்தான் அரியம் அந்த மூன்றுமாடிக் கட்டடத்தில் தங்கியிருந்தான். பகலில் கிடைத்த வேலைகளைச் செய்துகொண்டிருந்தான். இரும்புக்கடை ஒன்றிற்கு கொழும்பிலிருந்து வந்த சாமான்களை இறக்கிக்கொண்டிருக்கும் போதுதான் கடல் நகருக்குள் புகுந்த செய்தியை அரியம் கேள்விப்பட்டான். சனம் அல்லோலகல்லோலப்பட்டு அங்குமிங்குமாக ஓடித்திரிவதை அரியம் கண்டான். பின்னர்தான் தமக்கையையும் பிள்ளைகளையும் நினைத்து நகரத்திலிருந்து கச்சனக்கல்லுக்கு ஓடிவந்தான்.

அன்று மாலைநேரத்தில்தான் தாயின் சடலத்தை சிவானியரின் போயிலைத்தோட்ட வேலிக்குள் சிக்கிக்கிடந்தநிலையில் மீட்டார்கள். தாயின் உடலருகில் அமர்ந்து அவள் காயங்களை வருடிக்கொடுத்தான் அரியம். வதனி செய்தியறிந்து ஓடிவந்தாள். தாயின் உடல்மீது புரண்டு அழுதாள். எந்தவித மரணச் சடங்குகளுமின்றி கல்யாணியின் சவ அடக்கம் நிலாவெளி மயானத்தில் நிகழ்ந்துமுடிந்தது.

## 6.8

''ஏனம்மா... வயித்தில சுட்டது வடக்குப்புலியா... கிழக்குப்புலியா...''

ஓங்கா, உங்களுக்கு என்னகா, நீங்க கேப்பீங்கதாங்கா, எல்லாம் என் நேரங்கா. நோய்நொடி எண்டு ஆஸ்பத்திரிப்பக்கம் வந்ததில்லகா. கட்டயில வேகவேண்டிய காலத்தில ஆஸ்பத்திரிக்கட்டில்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்து போட்டுட்டாங்ககா. எப்பவோ போயிருக்கவேண்டிய உசிருகா. உசிரு போயிருக்கனுங்கா. இப்பிடியெல்லாம் கேவலப் படுறதக்காட்டிலும் செத்துப்போயிருக்கனும்கா. என்னய எதுக்குகா பிளைக்கவைச்சீக. சாகவிட்டிருக்கலாங்கா.

நீங்க கேப்பியதாங்கா. காதில குழாய மாட்டுற அளவுக்கு, அப்பன், அம்மை, வாயவயித்தக் கட்டி படிப்பிச்சுவிட்டிருச்சில்லகா. அதால நீங்க, கேப்பியதாங்கா. அப்பன், அம்மை திண்டுதா, குடிச்சுதா எண்டு, ஒரு நா நிண்டு கேட்டிருப்பியலாகா. உடம்பில கசங்காத சட்ட போடுற நீங்க, கேப்பியதாங்கா. றவுண்டப்புக்கையும் குண்டடிக்கேக்கையும் கோழிகுஞ்ச சிறகுக்க பொத்திறமாதிரி பொத்திக்கொண்டு அம்மை, அப்பன் திரிஞ்ச காலம் எல்லாம் எங்ககா உங்களுக்குத் தெரியப்போகுது. அவங்கட்ட போய் கேளுகா, கதைகதையாச் சொல்லுவாக. நானும் திரிஞ்சிருக்கங்கா. மாசக்கணக்கா காட்டில. திரிஞ்சுதான்கா இருக்கம்.

வெலிக்கந்தையில வைச்சுகா. யாழ்ப்பாணத்திலயிருந்து வந்த பஸ்ஸ மறிச்சு, றோட்டில கட்ட போட்டாங்ககா. நடுச்சாமங்கா. பஸ்சுக்க குஞ்சு, குருமானெல்லாம் நித்திரகா. பஸ் இருட்டில, நடுறோட்டில நிக்குதுகா. வெளியில ஆவேசமா கத்துறாங்ககா. என்ன ஏது எண்டு ஒண்டும் புரியமாட்டேங்குதுகா. பஸ்தகரத்தில ஆரோ அடிச்சமாதிரி ஒரு சத்தம்கா. பாத்தா பஸ்ஸில நெருப்புப் பத்துதுகா. பெற்றோல் பொம்ச எறிஞ்சு பஸ்ஸக் கொழுத்தினாங்ககா. எண்பத்திமூண்டுதாங்கா. என்ற ரெண்டு பொடியும் சின்னதுகள்கா. பஸ்சுக்குள்ள ஒரே ஒப்பாரியும்ஓலமும்தான்கா. ஊருப்பட்ட கடவுள எல்லாம் கூப்பிடுதுகா சனம். இவரு டக்கெண்டு எழும்பி யன்னலுக்கால குருவிநுளையிரமாதிரி நுளைஞ்சு வெளியில பாஞ்சாறுகா. நான் யன்னலுக்கால பிள்ளயள அவருட்ட குடுக்கங்கா. நான் கத்திரங்கா பிள்ளயளகொண்டு ஓடுகா, ஓடுகா எண்டு. அவரு என்னய குதி குதி எங்கிறார்கா. எனக்கு பயத்தில ஒண்டும் விளங்கக்கானம்கா. பிறகு என்னைய அவரு யன்னலுக்கால இழுத்து வெளியில போட்டாருகா. என்ற சாரியில நெருப்புப் புடிச்சிற்றுதுகா. சாரிய உறுவி எறிஞ்சுபோட்டு ஓடினதுதாங்கா. அவரு ஒண்டத்தூரக்க நான் ஒண்டத்தூரக்க ஓடினதுதாங்கா.

பஸ் பெரிய தீச்சுவாலையா பத்துதுகா. எங்கள மாதிரி பஸ்சுக்க இருந்து, குதிச்சுத் தப்பின ஒண்டுரெண்டு சனமும் காட்டுக்க இலக்கில்லாம, நாலாப்பக்கமும் சிதறி ஓடுறத பாக்கிறன்கா. துவேசமா தூசனத்தால, சிங்களத்தில கத்திக்கொண்டு துரத்தி வாறாங்ககா. வெலிக்கந்தக் காடுகா. முன்னபின்ன தெரியாத காடுகா. இருட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பின காடுகா. இருட்டில திக்குத்திசை அறியாம ஓடினதுதாங்கா. துரத்தினவக கூச்சல் சத்தம்மட்டுந்தாகா. நாங்க காட்டுக்க தூரமா பொயித்தங்கா. அவங்களுக்குத் தெரியும்கா காட்டுயானைகளிட்ட நாங்க சிக்குவம் எண்டு. அவர்ர பக்கட்டுக்க காசுமட்டும் இருக்குகா. திங்கிறதுக்கு கையில ஒண்டும் இல்லகா. மாத்துத்துணி இல்லகா. காட்டுவாழ்க்க தெரிஞ்ச மனிசன்கா அவரு.

ஒரு நா ரெண்டு நா இல்லகா. பன்னிரெண்டு நா காட்டில அலைஞ்சங்கா. கையில பணமிருந்து என்ன பிரியோசனம்கா. பணத்தால எதுகும் ஆகாதுன்னு அன்னிக்குப் புரிஞ்சுதுகா. கையில ரெண்டு சின்னஞ்சிறுசுகளோடகா. திங்கிறதுக்கு ஒண்டுமில்லகா. புளியங்குருத்தும் கையில கிட்டின இலகளையும்தாங்கா. சிலநேரம் அவரு ஏதாவது காட்டுக்கிழங்க தோண்டி எடுப்பார்கா. பச்சயாத்தான்கா. அங்க, இங்க துறவுக்க தேங்கிநிண்ட தண்ணிய, அவரு போட்டிருந்த சேட்டில வடிச்சுத்தான்கா. படுத்திருப்பம்கா பாம்பு பக்கத்தால ஊருங்கா. எந்த பக்கத்தில யான நிக்குமெண்டு தெரியாதுகா. திரிஞ்சம்கா, என்ட புருசனும் நானும் ரெண்டு புள்ளயளும் திரிஞ்சம்கா. எங்ககூட காட்டுக்க ஓடிவந்தவங்க எந்தத்திக்கில போனாங்க எண்டு தெரியாதுகா. உடம்பு முழுக்க மூத்திர வாடைகா. நம்ம உடம்பு நாத்தத்த நம்மலாலேயே சகிக்கமுடியலகா. நீங்க பேப்பரால துடைச்சுப்போட்டு, வாசத்தண்ணிய உடம்பில தெளிச்சுப்போட்டுத் திரியிர உங்களுக்கு எங்ககா.

குறிப்பா ஒரு திசையப்புடிச்சு நடந்தம்கா. அங்க, இங்க அலைஞ்சு ஒட்டமாவடிப்பக்கம் வந்து கடைசியா கரைதட்டினம்கா. முஸ்லீம் சனந்தாங்க ஆதரிச்சு, பசிக்கள போக்கி, மாத்துடுப்பும் தந்தாங்ககா. நம்ம மூஞ்சிதான இது, நம்மட புருசன்ட மூஞ்சிதான இது, நம்ம புள்ளகதான இதுகள் எண்டு நமக்கே சந்தேகம் வந்துதுகா. அப்பிடி ஒரு கோலத்தில வந்து சேர்ந்தங்கா. இப்ப நினைச்சாலும் உடம்பு பதறுங்கா.

அன்னிக்கு வந்துசேர்ந்த கதிரவெளி வயல் காடுதாங்கா. வாழ்வோ, சாவோ இங்கினதான் எண்டு கிடந்தங்கா. வருசங்கள் ஓடிப்போயிருச்சுகா. கதிரவெளி வயல்களும் பக்கத்துக் காடுகளுந்தாங்கா வாழ்க்கை எண்டு வாழ்ந்தங்கா. மூத்தவன் புலியில சேர்ந்து கொம்மாதுறைச் சண்டையில செத்துப்பொயித்தாங்கா. சின்னவன் ஆனையிறவுச் சண்டையில உடம்புகூட கிடைக்காமப்போனான்கா. மக்கள நினைச்சுநினைச்சு அந்தாளும் போய்ச்சேர்ந்திற்றார்கா. அன்னிக்கிருந்து இன்னவரைக்கும் எந்தப்புள்ள வந்து பசி எண்டு நிண்டாலும் சமைச்சுப்போட்டதுதாங்கா. எத்தின வருசம், எத்தின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளங்க, ஆரெண்டு நாடிபுடிச்சுப் பார்த்தெல்லாம் சமைச்சுப் போட்டதில்லகா. கதிரவெளிக்குள்ளால வார புள்ளைக நம்ம காட்டுவாடி வயல்பக்கமாத்தான்கா வரும். சாப்பாடு போடேக்க பெத்த புள்ள பிறத்தியான் புள்ள எண்டா பாத்திருப்பம். காட்டில அலையிர புள்ளக பசியாறிப்போகட்டும் எண்டுதான்கா. ஓரவஞ்சகம் ஒண்டும் இல்லகா.

நேத்திரவும் அப்பிடித் தாங்கா. நம்ம புள்ளங்கதான் தங்களுக்க சண்ட போட்டுக்கிட்டு இருக்காங்க எண்ட விளப்பம் எல்லாம் எனக்கும் நல்லாத் தெரியும்கா. முதல்ல கொஞ்சப் புள்ளக வந்து சாப்பிட்டுப்போச்சுகா. அப்புறம் வெருகல் பக்கமிருந்தும் கொஞ்சப் புள்ளைக வந்தாங்ககா. அவங்கட்ட கிடந்ததத் தந்து சமைச்சுத் தரச்சொன்னாங்ககா. ஆர் புள்ளக, எவ புள்ளக எண்டாகா நான் பார்த்துப்பார்த்து சமைச்சுப்போட்டிருப்பன். அவங்களுக்கும் சமச்சுப் போட்டதுதாங்கா. அந்தப் புள்ளக முழுசா திண்டு முடிக்கக்கிடையில வெடி எழும்பிட்டுதுகா. என்னய ஓரமா படுக்கச்சொல்லிப்போட்டு, சாப்பிட்ட குறையில எழும்பி அந்தப் புள்ளக சண்டை போட்டுதுகள்கா. வயித்த ஏதோ கிழிச்சுக்கொண்டு போன மாதிரித்தான்கா. அப்புறம் முழிச்சுப்பாத்தா வாகர கொஸ்பிட்ல்ல வைச்சிருக்காங்ககா. இருட்டில புள்ளங்கட முகமே தெரியல்லகா. இதுக்க வடக்கு புலி, கிழக்குப் புலி எண்டாகா கேக்கிற நீ, இண்டைக்காச்சும் வீட்டபோயி கேளுமக்கா, அம்ம, ஆத்தா, பெத்த புள்ளகள மறந்து நிம்மதியா ஒருபிடி சாப்பிட்ட சரித்திரம் இருக்கா. என்ன பிளைக்க வைச்சீக, என்ன மயித்துக்குகா. ஆருக்குகா இனி நான் சோறாக்கிப் போடப்போறன். எல்லாம் முடிஞ்சுபோச்சுகா.

## 6.9

நரைகண்டு பரட்டையடித்துக் கருமை இழந்துபோன தலைமுடியைக் காற்று அசைப்பதை செந்தணல் என்னும் சிவாவால் உணரமுடிந்தது. கை விரல்கள் தலைகோத ஆசைப்பட்டன. செந்தணல் தன் கைகளை உயர்த்த முயற்சிசெய்தான். கைகள் அவன் தோள் மூட்டில் இருப்பதற்கான எந்த உணர்வுமற்றுக்கிடந்தன. கிபீர் குண்டுவீச்சு விமானங்கள் மாவிலாற்று அணைக்கட்டின் அருகே இருந்த காட்டுப்பகுதிகளில் குண்டுமழை பொழிந்துகொண்டிருந்தன. கிபீர் விமானங்கள் தலைகுத்தி வரும்போது கேட்கும் கூவல்சத்தம் செந்தணலுக்குத் தெளிவாகக்கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை நகரத்தை அண்டிய பகுதிகளிலிருக்கும் ராணுவமுகாம்களிலிருந்தும் நேவி கடற்படைமுகாமிலிருந்தும் தொடர்ச்சியாக மல்டிபெரல் தாக்குதல்கள். தொடர்ச்சியாக வந்து விழுந்து வெடிக்கும் குண்டுச்சிதறல்களின் அதிர்வுகளை செந்தணலின் உடல் உணர்ந்தவண்ணமே இருந்தது. கிபீர் குண்டுத்தாக்குதலில் செந்தணலின் வயிறு கிழிந்து குடல்பகுதி வெளியே தள்ளிவிட்டது. சகப்போராளிகள் சிலர், உடல் சிதறிப் பலியாகிப்போய்விட்டார்கள். சிறு காயங்களுடன் உயிர்தப்பிய போராளிகள் அவனைத் தூக்கிப் பன்னீர்மரத்தின் மெல்லிய அடித்தண்டுடன் சாத்தி இருத்தி வைத்திருந்தார்கள். குடல் முற்றாக வெளியெ தள்ளிவிடாது, துவாய்த்துண்டால் வயிற்றை இறுக்கிக்கட்டியிருந்தார்கள். இரத்தக்கசிவில் துவாய்த்துண்டு நனைந்து, உலரத்தொடங்கிவிட்டது. தன் அடிவயிற்றுப் பகுதி முழுவதும் ரத்தக்கசிவை அவனால் உணரமுடிந்தது. இரத்தப் பெருக்கு உடல் சூட்டையும் மூச்செடுப்பதையும் வெகுவாகக் குறைத்து விட்டது. வறண்டுபோன தொண்டை தாகத்தினால் தவித்துக்கிடந்தது.

சிறு காயங்களுடன் தப்பிய போராளிகளை வெருகல்பக்கமாகப் பின்வாங்குமாறு செந்தணல் கட்டளையிட்டுவிட்டான். அவனது மூர்க்கம் தெரிந்து போராளிகள் பின்வாங்கிப் போய்விட்டார்கள். அவனைச்சூழ இறந்த போராளிகள் சிலரது உடல்கள் கிடந்தன. மடித்த காலின்மீது ரைபிளின் முனை இருக்க, வலதுகை ரைபிளை அழுத்தமாகப் பற்றியபடி இருந்தது. ஆள்காட்டி விரல் ட்ரிக்கரில் படிந்துகிடந்தது. கை நடுங்கிக்கொண்டிருந்தது. பயத்தால் இல்லை. இரத்தப்பெருக்கால் ஏற்பட்ட பலவீனத்தால் கை நடுங்கிக்கொண்டிருக்கிறது. தன் கைகளை ரைபிளில் வலுவாகப்பிடித்துத் தன் கையின் நடுக்கத்தைக் குறைக்க முனைந்து தோற்றுக்கொண்டிருந்தான் செந்தணல். பற்களுக்கிடையில் சைனட் குப்பியைப் பற்றி இருந்தான். மயக்கம் அவனை ஆட்கொள்ள முனைந்தது. கண்களை விரித்து விழித்துக்கிடக்கிறான்.

செந்தணலுக்கு நன்றாகத் தெரியும், அந்த மாலைப்பொழுது தான் தன்னுடைய இறுதிப்பொழுது என்பது. சூரியன் மேற்கில் விழுந்துவிட்டான். மென்மையான செம்மஞ்சள் ஒளி, தென்னைமரத்தின் உச்சிக்கீற்றுகளிலும் மரங்களின் உச்சாணிக்கெந்தின் இலைகளிலும் படிந்துகிடந்தது.

ரைபிளிலிருக்கும் தன் கையைக்கூட அவனால் அசைக்க முடியவில்லை. அதன் நடுக்கத்தைக்கூட அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. ரைபிளின் ட்ரிக்கரில் இருக்கும் விரலை வெளியே எடுத்து அசைத்துப்பார்க்கிறான். அது அசைந்தது. அவன் முகத்தில் ஒரு சின்ன புன்முறுவல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தணல் தான் சாத்தி வைக்கப்பட்டிருக்கும் நிலையிலிருந்து பக்கவாட்டில் தன் பார்வையைப் போகவிட்டான். மாவிலாற்று அணைக்கட்டிலிருந்த தூரிசுக்கம்பிமீது கட்டப்பட்டிருந்த புலிக்கொடி, பறந்துகொண்டிருந்தது. இன்னும் சிறிதுநேரத்தில் ராணுவம் அந்த இடத்தை நெருங்கி வந்துவிடும். ராணுவம் புலிக்கொடியைப் பிடுங்கி முறித்தெறிந்துவிட்டு, சிங்கக்கொடியை ஏற்றிவிடும். செந்தணல் வலிந்த இந்தச் சண்டையை விரும்பியிருக்கவில்லை. வன்னியின் அழுத்தம் காரணமாகத்தான் களத்தில் இறங்கியிருந்தான். பயிராகி நிற்கும் வெள்ளாமைகளின் தண்ணீரைத் தடுக்க அவன் விரும்பவில்லை. ஆர் என்றாலும் அவர்கள் அப்பாவி விவசாயிகள். இந்த மாவிலாற்றுச் சண்டையுடன் கிழக்குக்கான யுத்தம் முடிந்துவிடும் என்பது செந்தணலுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது.

கவச வாகனங்களின் இரைச்சல் மிகக்கிட்ட கேட்கிறது. துப்பாக்கிகள் வெடிக்கும் ஓசை. ''ஜெயவேவா'' இரைச்சல். பற்றைகள்மீது ஏறி விழுந்து வரும் கவச வாகனங்கள். கவச வாகனங்களுக்குப் பின்னால் நிலையெடுத்தபடி வரும் ராணுவத்தின் உருமறைப்புச் செய்யப்பட்ட கவசத்தொப்பிகள். இப்போது எதிரியின் முகங்கள்.

ரைபிளைத் தூக்கித் துல்லியமாக இலக்கு வைக்கமுடியாது என்பது செந்தணலுக்கு நன்றாகத் தெரியும். எதிரிக்குத் தன் இருப்பிடத்தைக் காட்டுவது என செந்தணல் முடிவு செய்தான். தன் ஆள்காட்டி விரலை ட்ரிக்கரில் வைத்து அழுத்தினான். ரைபிள் மிச்சமிருந்த ரவைகளையும் துப்பத்தொடங்கியது. கால்கள் மீதிருந்த ரைபிளின் முனை சூடாகித் தசைகளைப் பொசுக்குவதை செந்தணல் உணர்ந்தான். பொசுங்கிய தோலின் மணம். எதிர்த்திசையிலிருந்து எண்ணற்ற துப்பாக்கிகள் ரவைகளைத் துப்பத்தொடங்கின. மரக்கிளைகளையும் அருகில் இருந்த புதர்களையும் சல்லடை போட்டு, நொறுக்கி, தகர்த்து, வெட்டைவெளியாக்கிக்கொண்டு போகின்றன ரவைகள். செந்தணல் தன் உடல்மீது ரவைகள் அடுத்தடுத்து தைப்பதை உணர்ந்தான். தன் உடல் வலிப்புக்கண்டு உதறத்தொடங்குவதை அவன் உணர்ந்தான். பற்கள் வலுவாகக் கெட்டிக்கொள்கின்றன. பற்களுக்கிடையிலிருந்த சைனட் குப்பியின் கண்ணாடி நொறுங்கும் ஓசை செந்தணலுக்குக் கேட்டது. செந்தணல் கண்களை மூடிக்கொண்டான்.

## 6.10

விஸ்வநாதன் என்கின்ற வதனியின் கணவன் விசு, தான் மிகநெருக்கமாக கண்காணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஒருவன் என்பதைக் கனவிலும் நினைத்துப்பார்த்திருக்கவில்லை. விசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலியோ, புலிவாலோ, புலி ஆதரவாளரோகூட கிடையாது. வன்னிக்குள் புலிக்குடும்பங்கள், புலி ஆதரவுக்குடும்பங்கள், மாவீரர் குடும்பங்கள் அல்லாத குடும்பங்கள் மீது புலிகள் காட்டும் பாரபட்சமான நடவடிக்கைகளால் வெறுப்படைந்து வன்னிக்குள்ளிருந்து வெளியேறியவர் அவர். அடையாளஅட்டை அவரை வன்னி-முள்ளியவளையைச் சேர்ந்தவர் எனக் காட்டிக் கொண்டிருக்கிறது. விசு பல தடவைகள் இந்தப் புள்ளகுளத்துப் பாலத்தைத் தாண்டி திருகோணமலை நகருக்குள் போய்வந்தவர்தான். ஆரம்பத்தில் புள்ளகுளத்துப் பாலச் சோதனைச்சாவடியில் ராணுவம் அடையாளஅட்டையைப் பரிசோதித்துவிட்டு "வன்னிக் கட்டியத" என்று அதட்டிக் கேட்டிருக்கிறது. தான் வன்னியிலிருந்து இங்கு வந்து நீண்டகாலமாகிவிட்டதென்றும் நிலாவெளி-கச்சனக்கல்லே தனது வாழ்விடம் என்றும் பணிந்து நின்றார். வயிரெக்கிக் கூனுன்ட முதுகையும் நரைகண்டுவிட்ட தலைமுடியையும் பார்த்த சோதனைச்சாவடி ராணுவம் அவரைத் திருகோணமலை வாசியாக ஏற்றுக்கொண்டது. யுத்தத்தினால் இடம்பெயர்ந்து சனத்தொகை குறுகிப்போன நிலாவெளி சாம்பல்தீவு முகங்களைப்போல, விசுவினது முகமும் அந்த சோதனைச்சாவடி ராணுவச் சிப்பாய்களுக்குப் பரிச்சயமாகிப்போயிருந்தது.

சுட்டெரிக்கும் வெயிலில் திருகோணமலை நகரத்திலிருந்து திரும்பி வந்து, புள்ளகுளத்துப் பாலத்தை அவர் கடக்க முனைந்த போது, மோட்டார்சைக்கிளில் சிவில் உடுப்பில் வந்த இருவர் விசுவைத் தாண்டிப்போய்ச் சோதனைச்சாவடியில் நின்ற ராணுவச் சிப்பாய்களிடம் ஏதோ சொல்லிவிட்டுச் சென்றார்கள். பின்னால் வந்த விசுவை ராணுவம் வழிமறித்தது. அவரது அடையாள அட்டையைக்கூட வாங்கிப் பார்க்காது அவரைப் பிடித்துப் பாலத்தின் இறக்கத்தில் வீதியோரமாக முட்டுக்காலில் இருக்கவைத்தது ராணுவம். மதியவெயிலில் உடல் வியர்வையில் நனைந்துகிடக்க தான் செய்த குற்றத்தின் தன்மை புரியாது பேதலித்துப்போய் முட்டுக்காலில் நின்றிருந்தார் விசு. பின்னர் நகரிலிருந்து ஜீப் வண்டியில் சிவில் உடையில் வந்த புலனாய்வு அதிகாரிதான் ஒடுக்கமான காப்பரணுக்குள் வைத்து அவரை விசாரனை செய்தான். எதற்காக திருகோணமலையின் நகரப்பகுதியில், குறிப்பாக அரசுக்கு எதிராக உண்ணாவிரதம் இருப்பவர்கள் தங்கியிருக்கும் கோயிலடிப் பகுதியில் நடமாடியதும் நீண்ட நேரம் அந்தப் பகுதியில் உலாவித்திரிந்ததும் ஏன் எனக் கேட்டான். விசு வெலவெலத்துப் போனார். விசு தன்னாலேயே ஏற்றுக்கொள்ளமுடியாத காரணங்களை பயத்தில் உளறிக்கொட்டினார். புலனாய்வு அதிகாரி விசுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைத்துப்பார்த்துவிட்டு எழுந்துபோனான். திரும்பவும் ராணுவம் விசுவை புள்ளகுளத்துப் பால இறக்கத்தில் வீதியோரமாகப் போக்கு வெயிலில் முட்டுக்காலில் இருத்தினார்கள். இப்போது போக்குவெயில் விசுவின் முகத்தைச் சுட்டெரிக்கத் தொடங்கியிருந்தது.

விசு ஒன்றும் வன்னிக்குள் ஏகபோக வாழ்க்கை வாழ்ந்தவர் இல்லை. முள்ளியவளையில் புலவுக்குள்ளாலேயே குடிசை போட்டுக் கொண்டு சீவியம் நடத்தியவர். புலவுக்குள் கல்லில் நார் உரிப்பது போல தன் உடல் உழைப்பைக் கொடுத்துக் கால்வயிற்றுச் சீவியம் நடத்தியவர். தந்தையைச் சிறுவயதிலேயே இழந்தவர். பார்வை மங்கிப்போன தாய்க்காகவும் தமக்கையின் குடும்பத்துக்காகவும் புலவே கதியெனச் சீவித்தவர். தமக்கையின் கணவர் ஊதாரியாகத் திரிந்ததால் தமக்கையின் குழந்தைகளுக்காகத் தான் திருமணம் செய்துகொள்ளாமல் வாழத் தீர்மானித்தவர். தமக்கையின் பிள்ளைகளை எப்படியாவது படிப்பித்து முன்னுக்குக் கொண்டுவந்துவிடமுடியும் என நம்பியவர். யுத்தத்தினால் வன்னி நிலைமை நாளுக்குநாள் மோசமடையத் தொடங்கிய ஆரம்பக்காலம் அது. தமக்கையின் மூத்த மகனை வன்னிக்குள் வைத்திருப்பது பாதுகாப்பில்லை என்று விசுவின் குடும்பம், குடியிருப்புக் காணியின் சிறிய வீட்டு முற்றத்தில் கூடிக் கதைத்துத் தீர்மானித்தது. அவர்களது குடும்பம் போராளிக்குடும்பமாகவோ மாவீரர் குடும்பமாகவோ இல்லாததால் வன்னிக்குள்ளிருந்து அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் வெளியேறமுடியாது என்றார்கள் புலிகள். அவர்களது குடியிருப்புக்காணியையும் புலவையும் புலிகளின் உரிமமாக எழுதிக்கொடுத்துவிட்டு, தன்னிடமிருந்த சிறிய சேமிப்புடன் ஊதாரியாகத் திரியும் தமக்கையின் கணவரைப் புலிகளிடம் ஆள்ப்பிணையாகக் கொடுத்துவிட்டு மருமகனுடன் வன்னியை விட்டு வெளியேறி வந்தார் விசு. மருமகனை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டுத் திரும்பிவருவேன் என்றுதான் புலிகளிடம் எழுத்து மூலம் தெரிவித்திருந்தார். படித்துக்கொண்டிருக்கும் மருமகனின் கல்வியை இடைநிறுத்தியது விசுவுக்குக் கவலையாகத்தான் இருந்தது. அப்போதிருந்த நிலைமையில் அவருக்கு வேறுவழி இருக்கவில்லை. மருமகனை எப்படியாவது வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பிவிட்டால் அவனும் உயிர் பிழைத்துக்கிடந்து தமக்கையின் குடும்பத்தைக் கரைஏற்றிவிட்டுவிடுவான் என்ற நம்பிக்கையில்தான் வன்னியைவிட்டு வெளியேறி வந்தார்.

கொழும்பில் நின்று கனடாவில் இருக்கும் தூரத்து உறவினரிடம் தொலைபேசியில் கெஞ்சி மன்றாடினார். கனடாவுக்கு எடுக்கும் செலவு முழுவதையும் மருமகன் கட்டிய பின்னர்தான் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்துக்குப் பணம் அனுப்புவான் என்று வாக்குக்கொடுத்தார். மருமகன் தான் முதலில் மத்தியகிழக்கு நாடுகளில் ஒன்றுக்குப் போகிறேன் என்றுதான் சொன்னான். ஒரேயடியாக கனடாவுக்குப் போய்விட்டால் தங்கள் குடும்பத்தின் தலையில் கவிழ்ந்துகிடக்கும் பீடை ஒழிந்துவிடுமென்று அவனுக்கு நம்பிக்கை கொடுத்தார். கனடாவிலிருந்த உறவினரின் உதவியுடன் மருமகனை ஏஜென்ஸி ஒன்றின்மூலம் கனடாவுக்கு விமானம் ஏற்றியும் விட்டார்.

மருமகன் போன திசையை அவர் இன்றளவும் அறியவில்லை. முதலில் பேங்கொக்கில் சிக்கிச் சிறையில் இருப்பதாகவும், விடுவித்து கனடாவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் ஏஜென்ஸிக்காரர்கள் சொன்னார்கள், கென்டையினருக்குள் கனடா எல்லைப் பகுதி ஒன்றைத் தாண்டிப் போய்க்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். கென்டையினருக்குள் சிக்கி இறந்துபோனவர்களது செய்திகள் விசுவைக் கலவரப்படுத்தின. வெளிநாட்டு எல்லைப் புறம் ஒன்றைக் கடக்கும்போது கடும் பனிப்பொழிவின் குளிரில் சிக்கி இறந்துபோன இலங்கையர்கள் பற்றிய செய்தி அவரை கிலி கொள்ளவைத்தது.

மருமகன் போன வழித்தடம் யாரும் அறிந்திருக்கவில்லை. தன் தாயையும் தமக்கையின் குடும்பத்தையும் புலிகளிடம் அடகு வைத்துவிட்டு வந்ததையும் பொருட்படுத்தாது, மருமகனின் முடிவு தெரியாது வன்னிக்குள் கால் வைப்பதில்லை என்ற முடிவுடன் கொழும்பில் நின்றார். ஏஜென்ஸிக்காரர்கள் சில நாட்கள் நழுவல் போக்கான கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். பின் முற்றாகத் தொடர்பைத் துண்டித்துக்கொண்டார்கள். வெளிநாட்டுத் தூரத்து உறவினர் இனி அவ்வளவுதான் எங்காவது தப்பி உயிர் பிழைத்து வந்துசேர்ந்தால் பார்த்துக்கொள்ளலாம் எனச் சொன்னார். கையிலிருந்த சேமிப்பும் கரைந்துபோனது. கொழும்பில் உழைப்பில்லாது எத்தனை நாளைக்குச் சீவிப்பது என்ற நிலையில்தான் அவர் திருகோணமலைக்கு வந்தார். ஜெயத்தின் அம்மா அவருக்கு உறவுமுறை என்பதால் அவரிடம் வந்து சேர்ந்துகொண்டார். வன்னியின் நினைப்பு வாட்டினாலும் கல்லாக மனதை இறுக்கிக்கொண்டு திருகோணமலை வாசியாகிப்போனார். ஜெயத்தின் அம்மா தான் பிடித்தபிடியில் நின்று கஸ்டப்பட்ட பிள்ளை, நல்ல பிள்ளை வாழ்ந்துவிட்டுப்போகட்டுமே என விசுவுக்கு வதனியைத் திருமணம் செய்துவைத்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவரால் இப்போது மனதைக் கல்லாக்கிக்கொண்டு இருக்கமுடியவில்லை. ராணுவத்தின் முற்றுகைக்குள் வன்னிச்சனம் சிக்கிக்கொண்டுவிட்டது. அவரது தாய் தமக்கை, தமக்கையின் இரண்டு பெண் குழந்தைகளின் நினைவுகள் விசுவை வாட்டத் தொடங்கிவிட்டன. பெண் குழந்தைகள் வளர்ந்து குமராகி இருக்கும் என்று அவருக்குத் தெரியும். இவ்வளவு நாள் நடந்த சண்டையில் அவர்கள் நிலை என்ன, மீண்டும் அவர்களது முகங்கள் காணக்கிடைக்கவேண்டும் என அவர் ஏங்கத் தொடங்கினார். ராணுவம் முற்றுகையை நெருக்கநெருக்க உள்ளே விட்டுப் புலிகள் திருப்பி அடிப்பார்கள், பதுங்கிப்பாய்வார்கள் என்ற கதைகளை எல்லாம் அவர் நம்பியிருக்கவில்லை. சண்டை முள்ளிவாய்க்காலுக்குள் ஒடுங்கிவிட்டது. அவர் புலிகள்மீது வெறுப்புக் கொண்டவர்தான். இருந்தாலும் அவர்கள் தோற்றுப்போவது என்பது அவருக்கு இனம்புரியாத கவலையைத் தருவதாகத்தான் இருந்தது. முற்றுகைக் குள்ளிருந்து ராணுவக் கட்டுப்பாட்டுக்குள் தப்பிக்க முனைந்த சனத்தைப் புலிகளே சுட்டதாகச் செய்திகள் வந்தன. வெள்ளைக் கொடி ஏந்தி ராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வந்த சனத்தை ராணுவம் சுட்டுக்கொன்றதாக செய்திகளும் வந்துகொண்டுதான் இருந்தன. அவர் மனது ஏதாவது ஒரு தகவல் கிட்டாதா என ஏங்கத் தொடங்கி விட்டது. அதனால்தான் அவர் நிலையில்லாது அங்குஇங்கு என அலையத் தொடங்கியிருந்தார். யுத்தம் நடக்கும் பகுதிகளிலிருந்து வெளியேறி வவுனியா நகரத்தின் முட்கம்பிகளால் அறுக்கை செய்யப்பட்ட திறந்தவெளிக்குள் அடைக்கப்படும் வன்னிச்சனம் பற்றிய தகவல்களும் வந்துகொண்டிருந்தன. தன் உறவுகள் பற்றி யாரிடம் விசாரிப்பது எனத் தெரியாது, வன்னிக்குள்ளிருக்கும் தம் உறவுகளைத் தேடும் திருகோணமலைச் சனத்தைப் போலவே அவரும் தவித்தலைந்துகொண்டிருந்தார்.

மனநிலை பேதலித்துப்போன நிலையில்தான் அவர் சில நாட்களாகவே அரியத்தைப் பார்க்க வருவதுபோல திருகோணமலை நகருக்குள் உலாவிக்கொண்டு திரிந்தார். விசு தனது மனதுக்கு ஆறுதலாக ஏதாவது ஒரு செய்தி கிடைக்கும் என நம்பினார். அவர் கண்ணில் பட்டவை அவருக்கு ஆறுதல் தருவதாக இருக்கவில்லை. திருகோணமலை நகருக்குள் ஆங்காங்கே TV சோரூம்களில் வெளியே வீதியோரமாக 100 இன்ச் தொலைக்காட்சியை வைத்து கிரிக்கட் மெச் ஒளிபரப்பிக்கொண்டிருந்தார்கள். பல சிறுவர்களும் இளைஞர்களும் நடுத்தரவயதினர்களும் எனக் கூட்டங்கூட்டமாகப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். TV இல் குட்டைப்பாவாடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்த பெண்கள் நடனமாடிக்கொண்டிருந்தார்கள். அதேசமயத்தில் நகருக்குள் மக்கள் வெள்ளைவேன் பதற்றத்தில் வீடுகளுக்குள் முடங்கிக்கிடந்தார்கள். தங்கள் தேவைகளுக்காக வெளியே வருபவர்கள்கூட பயப்பீதியுடன் வேகமாகத் திரும்பவும் தங்கள் வீடுகளுக்குள் முடங்கிவிடுவதையே விரும்பினார்கள்.

மாவிலாற்று அணைக்கட்டைக் கைப்பற்றிய ராணுவம் கடுமையான தாக்குதலை நடாத்தி மூதூரைத் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தது. மூதூர்ப்பகுதியில் தங்கியிருந்து கடமையாற்றிக்கொண்டிருந்த, பின்தங்கிய மக்களின் வறுமை ஒழிப்புக்கான பிரஞ்ச் அரசின் அக்ஸன் எகய்ன்ஸ் கங்கர் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் ராணுவத்திடம் சிக்கிக்கொண்டார்கள். தாம் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் என்ற காரணத்தால் ராணுவம் தம்மீது கை வைக்காது என்ற நம்பிக்கையில் தான் ராணுவம் முன்னேறி வந்தபோது மூதூரை விட்டு வெளியேறாது இருந்தார்கள். அந்த அமைப்பிலிருந்த பதினேழு உத்தியோகத்தர்களையும் ராணுவம் வீதியின் ஓரத்தில் முட்டுக்காலிலிருத்தி வைத்துச் சுட்டுக் கொன்றது. அந்த உத்தியோகத்தர்களினது மரணம் திருகோணமலை நகரைப் பெரும் கொந்தளிப்புக்குள்ளாக்கி இருந்தது.

அதனைத் தொடர்ந்து திருகோணமலைக் கடற்கரையில் உரையாடிக்கொண்டிருந்த ஐந்து பல்கலைக்கழக மாணவர்களை, அரசுக்கு எதிராகப் பொது இடத்தில் அரசியல் பேசினார்கள் என்ற குற்றச்சாட்டில், அவர்கள் உரையாடிக்கொண்டிருந்த திருகோணமலை நகரக் கடற்கரையோர வீதியில் முட்டுக்காலிலிருத்திச் சுட்டுக் கொன்றது ராணுவம்.

இந்தப் படுகொலைகளைக் கண்டித்துக் கொலைசெய்யப் பட்டவர்களின் குடும்பங்களும் பொதுசனமும் சேர்ந்து, அவர்களது படுகொலைகளுக்கு நீதிவேண்டிப் போராட்டத்தை ஆரம்பித்தனர். கொல்லப்பட்டவர்கள் வெளிநாட்டு நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் என்பதாலும் பாதிக்கப்பட்ட பெற்றோர் எதற்கும் துணிந்தநிலையில் இருந்ததாலும் அவர்கள்மீது ராணுவத்தால் நேரடியாக நடவடிக்கை எடுக்கமுடியாதுபோனது. அந்தப் போராட்டம் நீதிகிடைக்காது நீண்டுகொண்டேபோனது. மறைமுக அச்சுறுத்தல்களை ராணுவம் விடுத்துக்கொண்டுதான் இருந்தது. பயந்த சிலர் ஒதுங்கிக்கொள்ள, எதற்கும் துணிந்த சில பெற்றோர் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்திக்கொண்டுதான் இருந்தார்கள். மிக நீண்டகாலமாக நடந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் போராட்டம் அது. அந்தச் சிறிய வைரவர் கோயிலின் மண்டபத்தில் இருந்தவர்களின் போராட்டத்தில் வன்னியில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதை நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையும் சேர்ந்துகொண்டது. அந்த இடம் விசுவுக்கு ஆறுதல் தருவதாகவும் மன உளைச்சலைப் போக்குவதாகவும் இருந்தது. அதனால்தான் அவர் அந்த இடத்தில் தூரமாக நின்று மனதால் அழுதுகொண்டிருந்தார்.

போக்குவெயில் விசு என்கின்ற விஸ்வநாதனை தகித்தெடுத்துக் கொண்டிருந்தது. நிலாவெளிப்பக்கமிருந்து யாருடையதோ மோட்டர் சைக்கிளில் தொற்றிக்கொண்டு தன் குழந்தைகளுடன் வதனி பதறியடித்து புள்ளகுளத்துப் பாலத்தடிக்கு வந்து சேர்ந்தாள். அந்த வீதியால் போன யாரோ வதனிக்குத் தகவல் கொடுத்திருந்தார்கள். வன்னியிலிருக்கும் தன் உறவுகளை நினைத்து மனநிலை பாதிப்படைந்து தன் கணவர் தெருக்களில் அலைந்து திரிவதாக ராணுவத்தின் கால்களில் விழுந்தாள் வதனி. இனிமேல் அனாவசியமாக திருகோணமலை நகருக்குள் திரியக்கூடாது என்ற கடும் எச்சரிக்கையுடன் ராணுவம் விசுவை விடுதலை செய்தது. வதனியையும் குழந்தைகளையும் தன் சைக்கிளில் சுமந்து தன் உறவுகளை மீண்டும் ஒரு முறை கண்ணில் காட்டிவிடு என்ற பிரார்த்தனையுடன் கச்சனக்கல் நோக்கி சைக்கிளை மிதித்துப்போனார் விசு.

## 6.11

அரியம் தன் கண்கள் திறந்திருப்பதாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தான். ஏனென்றால் அவன் கால், கைகள் விறைத்து அசைவற்றுக்கிடந்தன. அவன் மல்லாந்துகிடந்தான். கண்களுக்குள் பாதிரிமரத்தின் தடித்த கரும்பசிய இலைகளும் வெள்ளைநிறப் பூக்களும் தெரிந்தன. பாதிரிமரத்துக்கு மேலே நீலவானம் பரந்து விரிந்துகிடந்தது. மரக்கெந்துகள் அசையவில்லை. பறவைகள் எதுவும் குறுக்காகப் பறக்கவில்லை. சிலவேளை தான் இறுதியாகப் பார்த்த காட்சிதான் நினைவில் தங்கிவிட்டதோ அந்த நினைவுதான் தன் கண்களுக்குள் தொடர்ச்சியாகத் தெரிவதுபோல இருக்கிறதோ.

தன் உடல் எதன்மீது கிடக்கிறது என்பதை அவனால் உணர முடியவில்லை. காதுகளுக்குள் இருந்த இரைச்சலும் நின்றுபோய் விட்டது. தன் கால், கைகள், தன் உடலுடன் இருப்பதற்கான எந்த ஒரு அறிகுறியையும் அவனால் உணரமுடியவில்லை. தன் கண்பார்வையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்த்தான் இருக்கவேண்டும் என அரியத்துக்குத் தோன்றியது. தன் கண்ணிமைகளை மூட முயற்சித்தான். கண்ணிமைகள் அசைவதற்கான எந்த அறிகுறியும் இல்லை. அவன் கண்களும் மூடித்தான் இருக்கவேண்டும். தான் இறுதியாகப் பார்த்த காட்சிதான், தன் நிடிவுகளில் படிந்துகிடந்து கண்களுக்குள் தெரிவதாக அவன் திடமாக நம்பினான்.

டொக்கயாட் வீதியில் கடற்கரையை அண்டி நடந்துவந்தபோது எல்லாமே இயல்பாகத்தான் இருந்தது அவனுக்கு. திருகோணமலை நகர பீச்சில் கடலையும் கோட்டையையும் பார்த்தபடி பெரிய மேடை அமைக்கப்பட்டுப் பல வர்ணக்கொடிகளும் சிங்கக் கொடிகளும் பறந்துகொண்டிருந்தன. பலவிதமான வர்ணங்களில் விளம்பரப்பதாகைகளும் அரசியல் தலைவர்களின் போஸ்டர்களும் கட்டப்பட்டுக்கிடந்தன. யுத்த வெற்றியின்பின் தமிழர்களின் கனவுத்தலைநகரில், சுதந்திரதின விழாவை, அரசு பெருஞ்செலவில் ஏற்பாடு செய்துகொண்டிருந்தது.

பழமுதிர்ச்சோலை முதியோர் இல்லம் தாண்டியதும் அரியம் வீதியோரத்திலிருந்த வீடுகளில் ஏதாவது வேலை கிடைக்குமா எனப் பார்த்தபடி நடந்துவந்தான். என்ன வேலையாக இருந்தாலும் அவன் செய்யத் தயாராக இருந்தான். காலையில் அவன் சாப்பிடவில்லை தான். ஆனாலும் அவனுக்கு இப்போதெல்லாம் பசிப்பதில்லை. ஒப்புக்குச் சாப்பிடவேண்டும் என்பதற்காக எதையாவது தின்று கொண்டிருந்தான். சிலவேளைகளில் அவை வாந்தியாக வெளியே வந்துவிடுகின்றன. உடல் பல்வேறு உபாதைகளாலும் வலியாலும் அவனை வருத்தியெடுக்கத் தொடங்கிவிட்டது. அந்த மூன்றுமாடிக் கட்டடக் காவல் பணியிலிருந்து அவன் விலகிவிட்டான். பின் வதனியுடன்தான் சிலகாலம் தங்கியிருந்தான். அவளின் உழைப்பில் சாப்பிட்டு அவளை வருத்த அவன் விரும்பவில்லை. அவளுக்குத் தெரியாமல் அங்கிருந்து கிளம்பியும் சிலமாதங்கள் கடந்துவிட்டன. கடுமையான வேலைகளைச் செய்யும் அளவுக்கு உடலில் வலுவில்லாமல் போய்விட்டது. தன்னை மறந்து வேலைசெய்யும் அந்தக் கணத்தில் மாத்திரமாவது தன் வலிகளை மறந்திருக்க விரும்பினான்.

அந்த மூன்றுமாடிக் கட்டடத்திற்குக் காவலாளியாக இருப்பது சுகமான வேலைதான். பிறகு மாயவன் கோஸ்டி அவனுக்குச் சம்பளமும் கொடுத்தார்கள்தான். அடுத்தடுத்து நடந்த நிகழ்வுகளையும் மாயவன் கோஸ்டியின் அடாவடித்தனங்களையும் சகிக்கமுடியாது போனதால் அவன் அங்கிருந்து வெளியேறிவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கட்டடத்துக்கு அவன் காவலாளியாக நின்றபோது அவனுக்கு அவர்கள் சீருடை கொடுத்திருந்தார்கள். சீருடையில் அவன் நின்றதால், அவனிடம் ஒரு முதியவர் மிகநெருக்கமாக வந்து அந்தச் செய்தியைக் காதுக்குள் பக்குவமாகச் சொல்லிவிட்டுப் போனார். அடுத்த ஒழுங்கையிலிருக்கும் நொன்-ஆர்சி சுடலைக்குள் ஒரு பிச்சைக்காரி தூக்குப்போட்டுச் செத்துப்போயிருப்பதாக. அரியம் பக்கத்து வீதியிலிருந்த நொன்-ஆர்சி சுடலையை நோக்கிப் போனான். சனம் கூடிநின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. பதிவான சுடலை மதிலால் உள்ளே எட்டிப் பார்த்தான். உயரமான வேப்பமரத்தின் பதிவான கெந்தில் ஒரு பெண் கழுத்தில் கயிற்றால் சுருக்கிட்டுத் தொங்கிக்கொண்டிருந்தாள்.

தூக்கில் தொங்கிக்கொண்டிருக்கும் பெண்ணின் கால்கள் நிலத்தில் படிந்துகிடக்க, முழங்கால் மடிந்தநிலையில் அந்தப் பெண் தொங்கிக்கொண்டிருந்தாள். அவள் தூக்கில் தொங்கவில்லை. அவளைக் கொன்று தூக்கில் தொங்கவிட்டிருக்கிறார்கள் என்றுதான் அங்கு நின்றவர்கள் பேசிக்கொண்டார்கள். பிச்சைக்காரியைக்கூட விட்டுவைக்கிறார்களில்லை என்றுதான் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். பின் அவள் பிச்சைக்காரி இல்லை, கொஞ்ச நாளாக இந்தப் பகுதியில் சுற்றித்திரிந்த பைத்தியக்காரி என்றார்கள். அவள் இடுப்பில் நவீன ரகக் கைத்துப்பாக்கி ஒன்று இருப்பதாக, மெல்லிய பதற்றத்துடன் அவர்கள் குசுகுசுப்பதை அரியம் கேட்டான்.

அவள் விடுதலைப்புலிகளின் பெண் உளவுத்துறைப் போராளி என உறுதியாக நம்பினார்கள். அரியம் தொங்கிக்கொண்டிருக்கும் அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தான். அவன் முள்ளந்தண்டு கூசியது. அரியத்திடம் மாயவன் கோஸ்டி பற்றி விசாரித்த பெண்தான் அவள் என்பதை அவன் இனம்கண்டுகொண்டான். அரியத்துக்கு அன்றொரு நாள் இரவு, தன்னைத் தாக்கிய, வலுவான பயிற்சியால் முறுக்கேறிப்போன வெண்மையான கைகளும் முகமும் நினைவுக்குள் வந்தன. உடல்வலுவும் மனஉறுதியும்கொண்ட அந்தப் பெண் தற்கொலை செய்துகொண்டிருக்கமாட்டாள் என்பது அரியத்துக்குத் தெரியும். உடலில் மெல்லிய நடுக்கம் பரவ, பயத்தில் அங்கிருந்து நகர்ந்துபோனான்.

அந்தக் கட்டடத்துக்குக் காவலிருப்பது என்பது சொந்தக் காசில் சூனியம்வைத்துக்கொள்வது போன்றது என அரியம் நினைத்துக் கொண்டான். வெளியேற வாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அதிகாலையில் பல்விளக்கிக்கொண்டிருக்கும்போதுதான், அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தகவல் கிடைத்தது. மார்க் ஏஜென்ஸி பில்கிளாக்கரின் சடலம், பத்திரகாளி கோயிலுக்கு முன்னாலிருக்கும் மைதானத்தின் புற்தரையில் கிடக்கிறது என. அரியம் சைக்கிளை எடுத்துக்கொண்டு பத்திரகாளி கோயிலடிக்குப் போனான்.

பத்திரகாளி கோயிலுக்கு முன்னாலிருந்த புற்தரையில், மார்க் ஏஜென்ஸி பில்கிளாக்கர் கேசவனின் உடல் குப்புறக்கிடந்தது. வழமையாக அவர் போடும் கணுக்காலுக்கு மேலே உயர்ந்திருக்கும் காக்கிநிற ஜீன்ஸ், கழுத்தில் துளைகள் விழுந்த தடித்த கழுத்துப்பட்டி, சோடாப்புட்டிக் கண்ணாடி, அவரது அடையாளங்கள் அவர் உடலை இனம்காட்டிக்கொண்டிருந்தன. புற்தரையில் தூரமாக விழுந்துகிடந்தது அவரது சோடாப்புட்டிக் கண்ணாடி. அந்தத் தோற்றம்கூட அவரது நடிப்பாக இருக்கக்கூடும் எனத்தான் அரியத்துக்குத் தோன்றியது. கேசவனின் நடுநெற்றியிலிருந்து இரத்தம் வடிந்து புற்தரையில் காய்ந்துகிடந்தது. ராணுவம் போட்டதா, புலிகளின் புலனாய்வைச் சேர்ந்தவர்கள் போட்டார்களா அல்லது மாயவன் கோஸ்டிதான் போட்டதா என அரியத்தால் ஊகிக்கமுடியவில்லை. கேசவனும் இறந்துபோனார்.

மாயவன் கோஸ்டி அரசியல் கட்சி தொடங்கிவிட்டார்கள். தமிழினத்தின் காவல் தெய்வங்கள் என அவர்கள் படங்களைத் தாங்கிய போஸ்டர்கள் சொல்லிக்கொண்டிருந்தன. புதிய ரக சொகுசு வாகனங்கள் அந்தக் கட்டடத்திற்கு வந்துசேர்ந்தன. மிகவிரைவாக எல்லாவற்றுக்கும் ஒரு தீர்வு வந்துவிடும், தடயங்கள் எல்லாம் முற்றாக அழிக்கப்பட்டுவிடும் என்றார்கள். தங்களின் தலையிலிருந்து ஒரு மயிரைக்கூட யாராலும் பிடுங்கமட்டுமில்லை, அசைக்கக்கூட முடியாது என்றார்கள்.

அன்று, ஒரு நாள் இரவு, அவர்கள் மிகுந்த சந்தோசத்துடன் காணப்பட்டார்கள். இன்று இரவுடன் எல்லாத் தடயங்களும் அழிந்துபோய்விடும் என்று பேசிக்கொண்டார்கள். மதுப்போத்தல்களும் உணவுவகையறாவுமாகப் பெரிய தடபுடல்விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கட்டடத்திற்குள்ளும் வெளியிலுமாகப் புதியபுதிய வித்தியாசமான, அதிகம் வெளிச்சம் தராத மின்விளக்குகள் ஒளிர்ந்துகொண்டிருப்பதை அரியம் பார்த்தபடியிருந்தான். அரசியல் பிரமுகர்கள் பலர் வரவிருப்பதாக அரியத்துக்கு அறிவுறுத்தியிருந்தார்கள் மாயவன் கோஸ்டியினர். நேரம் நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்தது. மாயவன் கோஸ்டி உட்துறைமுகக் கடலை வெறித்துப்பார்த்தபடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கட்டடத்தின் மேல்தளத்தில் நின்றிருந்தார்கள். அரியத்துக்குக் கடலில் நிகழப்போகும் அதிசயம் என்ன என்று புரியாது அவனும் கடலைப் பார்த்தபடிதான் நின்றுகொண்டிருந்தான். உட்துறைமுகக் கடலில், பாதாளமலையை ஒட்டிச் சின்னதாக, ஆனால் கடலுக்குள் அழுத்தமாகச் சில வெடிப்புக்களும் தீக்கங்குகளும் தோன்றி மறைந்ததை அரியம் கண்டான். சிறிது நேரத்தில், அந்த இருளிலும் கடல் கொந்தளித்து அலைகள் கரையில் குமுறியடித்ததை அரியம் கண்டான்.

மாயவன் கோஸ்டி தங்களுக்குள் கைகுலுக்கி, ஒருவரையொருவர் முகம் முழுவதும் புன்னகை ததும்பத் தழுவிக்கொண்டார்கள். எல்லாத் தடயங்களும் கடலில் மூழ்கிப்போய்விட்டதை அவர்கள் கைத்தொலைபேசி மூலம் ரகசியமாக உரையாடி உறுதிப்படுத்திக் கொண்டதை அரியம் கேட்டான்.

அடுத்தநாள் சிவன் கோயிலடியிலிருக்கும் தந்தை செல்வாவின் சிலைக்கு அருகில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு ஏற்பாடுசெய்யுமாறு தொண்டர்களுக்குத் துரித கட்டளைகளை வழங்கினார்கள். பின் விருந்துபசாரத்தில் மூழ்கிப்போனார்கள்.

சிவன் கோயிலடியில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம், அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் அது. அரசு திட்டமிட்டு வடகிழக்குப் பகுதியின் வளங்களைச் சிதைப்பதாக, குறிப்பாக திருகோணமலை பாதாளமலைப் பகுதிக் கடற்பரப்பை, வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்படும் இலத்திரனியல் குப்பைகளைப் புதைக்கும் கிடங்காகப் பாவிப்பதாகப் பதாகைகள் ஏந்தி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இரண்டாம் உலகப்போரில் கைவிடப்பட்ட கப்பல்களுக்குள், இலத்திரனியல் பொருட்கள்கொண்ட கென்டெயினர்களை ஏற்றிக் கடலில் கப்பல்களுக்கு வெடிவைத்துத் தகர்த்து மூழ்கடிப்பதாக, அவர்கள் அரசை விமர்சித்துக் கோசம் எழுப்பினார்கள். அவர்கள் அரசுக்கு எதிராகக் கடுமையான தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

அரியத்துக்குக் கடலில் கப்பலுடன் மூழ்கிப்போனவை, வெளிநாட்டிலிருந்து வந்த இலத்திரனியல் குப்பைகளாகத் தெரியவில்லை. அந்தக் கப்பல்களுடன் கடலில் போன சாட்சிகள் பற்றியே அன்றிரவு முழுவதும் அவன் நினைத்துக்கொண்டிருந்தான். அவை நிச்சயமாக பேப்பர் ஆவணங்களாக இருக்கமுடியாது என்பது அரியத்துக்குத் தெரியும். உயிர் உள்ள சாட்சியங்கள். கண்கள் பிடுங்கப்பட்ட, உடல் உறுப்புக்கள் களவாடப்பட்ட, உயிர் உள்ள சாட்சியங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப்பின் அரியத்தால் அந்த இடத்தில் தாமதித்து நிற்கமுடிய வில்லை. அவன் தனக்கு வழங்கப்பட்டிருந்த சீருடையைக் கழற்றி வைத்துவிட்டு, அங்கிருந்து வெளியேறிப்போனான். நிலாவெளியில் வதனியுடன் தோட்டவேலைக்குப் போனான். சிலவேளைகளில் விசு அத்தானுடன் வயல்வேலைக்குப் போனான். அடிவயிற்றிலிருந்து புறப்பட்டுவரும் வலி இப்போது அவன் உயிரை வதைத்தெடுக்கத் தொடங்கி விட்டது. நோயாளியாகிப்போனதால் தொடர்ந்தும் அவர்களுக்குத் துன்பம் தர விரும்பாமல், அங்கிருந்தும் வெளியேறிப்போனான். திருகோணமலை நகரத்தெருக்களில் அலைந்து திரிந்தான். அகப்பட்ட வேலைகளைச் செய்து தின்று குடித்துத் தெருக்களில் படுத்தெழும்பித் திரிந்தான்.

டொக்கயாட் வீதியும் ஆஸ்பத்திரி நோக்கிப்போகும் வீதியும் சந்திக்கும் முடக்கிலிருந்த வீட்டில்தான், அவன் இன்று காலை வேலை ஒன்றைப் பிடித்துக்கொண்டான். வீதியோரமாகப் பெரிய நிழல்வாகைமரத்துடன் ஒட்டிய வளவு அது. தகரவேலி அடைப்புடன் கூடிய வளவு. மழைநீர் தேங்கித் தொம்பலாகக்கிடந்தது அந்த வளவு. கைக்குழந்தையுடன் நின்ற பெண்தான் அவனிடம் பேரம் பேசினாள். அடி வளவுக்குள்ளிருந்த டொயலட் பிட், வளவுக்குள் நீர் தேங்கிநின்றதால் பதிவான டொயிலட் பிட்டுக்குள் மலமோ நீரோ இறங்க மறுத்தது. இரண்டு நாட்களாக டொயிலட்டுக்குப் போவதற்குப் படாதபாடுபடுவதாக அந்தப் பெண் அழுதாள். அந்தப் பெண்ணுக்கு இரங்கித்தான் அந்த வேலையைக் காலைநேரப் பழையசோற்றுக்கும் முந்நூறுரூபாய் கூலிக்கும் ஒத்துக்கொண்டான்.

டொயிலட் பிட் ஓரமாக அவன் குழி தோண்டும்போது மூச்சிறைப்பும் அடிவயிற்றில் நோவும் இருந்துகொண்டுதான் இருந்தது அரியத்துக்கு. குழி தோண்டிக்கொண்டிருக்கும்போது அந்தப் பெண் மண்ணெண்ணைக் கலனுடன் வந்தாள். பிட்டை உடைத்துத் தண்ணீரை மடுவுக்குள் இறக்கும்போது, மணம் வெளியே எழாது அதன் மீது மண்ணெண்ணையை ஊற்றச் சொன்னாள். அயலவருக்கு மணம் போனால் பிரச்சினை ஆகும் என்றுதான் பயந்தாள். வேலை நடக்கும் போதும், அயலட்டை கவனிக்கிறதா என அடிக்கடி பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். பிட்டின்கீழ் நடுப்பகுதியில் துவாரமிடும் போது அரியம் முற்றாகப் பலமிழந்து மயக்கம் வருவதாக உணர்ந்தான். மல்லுக்கட்டி பிட்டை உடைத்து மலத்தண்ணீரை மடுவுக்குள் இறக்கினான். மண்ணெண்ணைக் கலனைக் கையிலெடுக்கும் போதுதான் அந்த துர்வாடை அவனை நிலைகுலையவைத்தது. பின் நிலைகுத்தி மல்லாந்து விழுந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்துக்கும் பாதிரிமர இலைகளுக்குமிடையில் அந்தப் பெண் வந்து நிற்கிறாள். கையில் குழந்தை. அப்படியானால் தன் கண்கள் திறந்த நிலையில்தான் இருக்கிறது என்பதை அரியம் உறுதிப்படுத்திக்கொள்கிறான். அவள் உதடுகள் அசைகின்றன. அவள் கூப்பிடுகிறாள். அரியத்தின் காதில் எந்த ஒரு இரைச்சலும் இல்லை. குழந்தை அவனை வேடிக்கை பார்க்கிறது. பார்வையைத் தவிர தன்னிடம் வேறு எதுவும் இல்லை என்பதை உணர்ந்தான். தொடர்ச்சியாக வலித்துக்கொண்டிருந்த அடிவயிறும் இப்போது வயிறொன்று இருந்ததற்கான தடமுமற்றுக்கிடந்தது. அப்படியென்றால் தன் உயிர் கண்கள் வழியாகத்தான் பிரியப்போகிறது. அந்தப் பெண்ணின் முகம், தாயின் முகத்தைப் போன்றும் வதனியின் முகத்தைப் போன்றும் அரியத்துக்கு மாறிமாறித் தோன்றிக்கொண்டிருந்தது. இனி எந்த ஒரு இருளும் தன் கண்களை மூடப்போவதில்லை என்பதை அரியம் உணர்ந்தான்.

✿✿✿



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிபாலன் வாழ்க்கைக்குறிப்பு

கௌரிபாலன், திருகோணமலையில் உள்ள உப்புவெளி எனும் ஊரில் க.விஸ்வலிங்கம், மங்களேஸ்வரி தம்பதிகளுக்கு 20.03.1970ல் மகனாகப் பிறந்தார். இவருடன் பிறந்தோர் நான்கு சகோதரிகள், இரண்டு சகோதரர்கள். இவர் 1977-லிருந்து 1983-வரை உப்புவெளியில் உள்ள 'மெதடிஸ்த் மிஷன் தமிழ்க் கலவன்' பாடசாலையில் ஆரம்பக் கல்வி பயின்றார். 1983-ல் யூலை கலவரம் ஏற்பட்டதால், இரண்டு வருடம் இவருடைய கல்வி தடைப்பட்டது. அக்காலகட்டத்தில் இயக்க அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தார். 1986-லிருந்து 1988-வரை திருகோணமலையில் உள்ள 'ஸ்ரீ ராமகிருஷ்ண மிசன் இந்துக் கல்லூரி'யில் இடைநிலைக் கல்வி பயின்றார். அடுத்து, கல்விப் பொது தராதரத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். 1989-ல் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம் பெயர்ந்தார். 1992-வரை யாழ்ப்பாணத்தில் வசித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் 'படவரைஞர் பயிற்சி நெறி' பயின்றார். 1992-ல் மீண்டும் திருகோணமலைக்கு வந்தார். 1992-முதல் 2000- வரை 'நீர்ப்பாசனத் திணைக்களத்தில்' அமையப்படவரைஞராக பணியாற்றினார். 2000-ஆம் ஆண்டில் மட்டக்களப்பு செங்கலடி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கடமையாற்றினார். 2001ஆம் ஆண்டு மட்டக்களப்பில், கீதாதேவி எனும் இசை ஆசிரியருடன் திருமணம் நடந்தது. 2003-ஆம் ஆண்டு மட்டக்களப்பில் (களுதாவளை) உள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையில், முகாமைத்துவ உதவியாளராக நிரந்தரப் பணி நியமனம் செய்யப்பட்டார். இவ்வாண்டில்தான் இவருக்கு நிதர்சனா எனும் மகள் பிறந்தார். தற்போது மட்டக்களப்பில் வசித்து வருகின்றார். இவரது முதல் சிறுகதை ''தாயம்மா'' 1994-ஆம் ஆண்டு தினமுரசு இதழில் வெளியானது. 2003-ல் ''ஒப்பனை நிழல'' எனும் சிறுகதை நூலும், ''வானுறையும் தெய்வத்தினுள்'' எனும் நாடக நூலும் வெளியாயின. 2010-ல் ''நதிப்பாதையின் மேலே'' எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் ஞாபகார்த்த வெளியீடாக ''பறப்பிழந்த வண்ணாத்துப் பூச்சிகள்'' என்னும் நாடகத் தொகுப்பு - 2012 இல் வெளிவந்துள்ளது. (S.M. Felix அவர்களின் அந்நாடகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பான "The Flightless Butterflies" அந்நூலில் உள்ளது.)

French Institute of Pondicherry நிறுவனமும், Penguin India நிறுவனமும் இணைந்து வெளியிட்ட தொகுப்பான "Time will write a Song for you" Contemporary Tamil writing from Srilanka என்னும் புத்தகத்தில் (2014) இவரது மூன்று சிறுகதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விடியல் பதிப்பக வெளியீடாக இவரது சிறுகதைகளின் முழுத் தொகுப்பான ''காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல்'' 2016-இல் வெளிவந்துள்ளது. இவர் தற்போது மட்டக்களப்பில் (வெல்லாவெளி) உள்ள போரதீவுப்பற்று பிரதேச சபையின் பதில் செயலாளராக கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

✿✿✿



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்துக்கும் பாதிரிமர இலைகளுக்குமிடையில் அந்தப் பெண் வந்து நிற்கிறாள். கையில் குழந்தை. அப்படியானால் தன் கண்கள் திறந்த நிலையில்தான் இருக்கிறது என்பதை அரியம் உறுதிப்படுத்திக்கொள்கிறான். அவள் உதடுகள் அசைகின்றன. அவள் கூப்பிடுகிறாள். அரியத்தின் காதில் எந்த ஒரு இரைச்சலும் இல்லை. குழந்தை அவனை வேடிக்கை பார்க்கிறது. பார்வையைத் தவிரதன்னிடம் வேறு எதுவும் இல்லை என்பதை உணர்ந்தான். தொடர்ச்சியாக வலித்துக்கொண்டிருந்த அடிவயிறும் இப்போது வயிறொன்று இருந்ததற்கான தடமுமற்றுக்கிடந்தது. அப்படியென்றால் தன் உயிர் கண்கள் வழியாகத்தான் பிரியப்போகிறது. அந்தப் பெண்ணின் முகம், தாயின் முகத்தைப் போன்றும் வதனியின் முகத்தைப் போன்றும் அரியத்துக்கு மாறிமாறித்தோன்றிக் கொண்டிருந்தது. இனி எந்த ஒரு இருளும் தன் கண்களை மூடப்போவதில்லை என்பதை அரியம் உணர்ந்தான்.

விடியல்

ரூ.300/-

ISBN 81-89867-89-X

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org